இந்திய

குடும்பச் சட்டம் I

Family Law in India I

கு.ஆர்.ஜெயராஜன்

பிரச்சனைகளுக்கான தீர்வுகளுடன்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

இந்திய
குடும்பச்சட்டம் I

Family Law in India - I

தமிழக அரசு

தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூலாசிரியருக்கான பரிசை

மும்முறை வென்றெடுத்த சட்டத்தமிழாய்வு அறிஞர்

பி.ஆர்.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G. Dip. in A.D.R., D.Lit.,

வழக்குரைஞர் மற்றும் சட்டக்கல்வியாளர்

இந்துச்சட்டம்
இசுலாமியர் சட்டம்
சிறப்புத்திருமணச்சட்டம் 1954, இந்திய கிறுத்தவ திருமணச்சட்டம் 1872, மணமுறிவுச்சட்டம் 1869 – திருத்தச்சட்டங்களால் திருத்தப்பட்டவாறு
பிரச்சனைகளும் தீர்வுகளும்
அண்மைக்கால வழக்குகளும் தீர்ப்பு நெறிகளும்
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்கள்
சட்டப்பல்கலைக்கழக பாடத்திட்டம்
தேர்வில் வினாக்கள் அடிக்கடி கேட்கப்படும் பகுதிகள் – ஒரு சிறு விளக்கம்
குடும்பச்சட்டம் I தேர்வை எப்படி எழுத வேண்டும் ? – சில முக்கிய குறிப்புகள்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

தமிழக அரசின் பரிசு பெற்ற சிறந்த சட்ட நூல் வெளியீட்டாளர்கள்,

69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, சேலம் 636007.

இயங்கலையில் (ஆன்லைன்)

நூல்கள் வாங்க : www.shripathirajanpublishers.com

என்னுரை

பேரன்பு கொண்ட நெஞ்சங்களே,

வணக்கம்.

சீராய்வு செய்யப்பட்டு 9–ஆம் வெற்றிப்பதிப்பாக வெளிவந்துள்ள **'இந்தியக் குடும்பச்சட்டம் – I'** என்ற இந்நூலில் பின்வரும் இயற்றுமுறைச் சட்டங்கள் இடம் பெறுகின்றன. அவை,

(1) இந்து திருமணச் சட்டம், 1955 (2) இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப் புச்சட்டம், 1956 (3) இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச்சட்டம், 1955 (4) சிறப்புத்திருமணச் சட்டம் 1954 (5) இந்திய கிறுத்தவ திருமணச்சட்டம் 1872 (6) மணமுறிவுச்சட்டம், 1869 (7) இசுலாம் திருமணக்கலைப்புச்சட்டம், 1939. இந்தச் சட்டங்கள் இயற்றப்படும் காலகட்டத்தில், இவற்றின் அளாவுகையிலிருந்து ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீக்கி வைக்கப்பட்டிருந்தது. அதாவது இச்சட்டங்கள் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்பதாக முன்பு இருந்து வந்தது. இந்நிலையில் அண்மையில் அதாவது 2019–ஆம் ஆண்டில் இயற் றப்பட்ட ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டத்தின் பிரிவுகள் 95, 96 மற்றும் அட்டவணை V–இன்படி, ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக என்ற சொற்கள் அகற்றப்பட்டுவிட்டன. இதனால் தற்போது மேற்சொன்ன சட்டங்கள் யாவும் 31–10–2019 முதல் இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கும் சட்டங்களாக ஆகின. [The words **"except the State of Jammu and Kashmir"** omitted by the Jammu and Kashmir Reorganisation Act, 2019, Ss. 95, 96 and Sch. V (w.e.f. 31-10-2019)]. எனவே இந்நூலில் அச்சட்டங்களை வாசிக்கும் போது, மேற்கண்ட விவரங்களை கருத்தில் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இச்சட்டங்களிலிருந்து எழும் பிரச்சனைகள் பலவற்றுக்கு இந்நூலின் 5–ஆம் பகுதியில் தீர்வளித்துள்ளேன். மேலும் 6–ஆம் பகுதியில் அண்மைக்காலத் தில் எழுந்த முக்கிய வழக்குகள் பலவற்றை, அவற்றில் வழங்கப்பட்ட தீர்ப்பு நெறி களுடன் (Recent Case Laws) விளக்கியுள்ளேன். 7–ஆம் பகுதியில் முந்தைய ஆண்டு வினாத்தாள்களை ஒரு பார்வைக்காக இணைத்துள்ளேன்.

நிறைவாக இப்பாடத்திற்கான தேர்வை எவ்வாறு எழுவது, வினாக்கள் அடிக்கடி கேட்கப்படும் பகுதிகள் என்னென்ன என்பதற்கு குறிப்புகளைத் தந்துள் ளேன். ஏற்கனவே பல்லாண்டுகளாக சட்ட மாணவர்கள் பலருக்கும் பயன் தந்து வந்த நூலின் இப்புதிய பதிப்பு உங்களுக்கும் உரிய பயன் தரும் என்ற நம்பிக்கையில்....

என்றும் அன்புடன்,

பி.ஆர்.ஜெ.

பொருளடக்கம்

பகுதி - I
இந்துச் சட்டம்
[Hindu Law]

1. இந்துச் சட்டத்தின் தோற்றமும் மூலங்களும் [The Origin and Sources of Hindu Law] 3

- பண்டைய கால முலங்கள் 5
- நவீன கால முலங்கள் 12

2. இந்துத் திருமணம் [Hindu Marriage] 27

– அ. 1955-ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பு இருந்த இந்துத் திருமணங்களின் நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்] 27

– ஆ. 1955-ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் இயற்றப் பட்ட பின்பு இந்துத் திருமணங்களின் நிலை [தொகுக்கப்பட்ட (புதிய) சட்டம்] 31

- இந்துத் திருமணத்தில் சட்டத்தால் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் 34
- ஒரு செல்லத்தக்க இந்து திருமணத்திற்கான நிபந்தனைகள் 38
- திருமணத்தின் செல்லாநிலை 47
  - இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணம் 47
- மணவாழ்க்கைப் பிரச்சனைகளுக்குத் தீர்வழிகள் 52

3. தத்தெடுப்பும் பராமரிப்பும் [Adoption and Maintenance] 85

– தத்தெடுப்பு [Adoption] 86

– அ. 1956-ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு இந்துத் தத்தெடுப்புகளின் நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்] 86

- ஆ. 1956-ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு இந்துத் தத்தெடுப்புகளின் நிலை [தொகுக்கப்பட்ட (புதிய) சட்டம் 94

- பராமரிப்பு [Maintenance] 109

- அ. 1956-ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு பராமரிப்பு குறித்து இருந்த நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்] 109

- ஆ. 1956-ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு பராமரிப்பு [தொகுக்கப்பட்ட (புதிய) சட்டம்] 110

  - மனைவியைப் பராமரித்தல் 111
  - விதவை மருமகளைப் பராமரித்தல் 113
  - குழந்தைகளையும், வயதான பெற்றோர்களையும் பராமரித்தல் 114
  - சார்ந்திருப்பவர்கள் - யார்? 115
  - சார்ந்திருப்பவர்களைப் பராமரித்தல் 117
  - பராமரிப்புத் தொகை 119

4. உரிமை வயது அடையாமையும் காப்பும் [Minority and Guardianship] 121

- அ. 1955-ஆம் ஆண்டின் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு இருந்த நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்] 122

- ஆ. 1955-ஆம் ஆண்டின் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு உள்ள நிலை [தொகுக்கப்பட்ட (புதிய) சட்டம்] 124

  - இயற்கைக் காப்பாளர் 130
  - உயில்வழிக் காப்பாளர் 134
  - நீதிமன்றக் காப்பாளர் 137
  - நிகழ்வுநிலைக் காப்பாளர் 138
  - குறிப்பிட்ட பணிக்கான காப்பாளர் (Adhoc guardian) 140

பகுதி-II

இந்தியக் குடும்பச் சட்டம் I மற்றும் II ஆகிய இரண்டிற்கும் பொதுவான பகுதி

1. இந்து கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும் **[Hindu Joint Family and Coparcenary]** **143**
   - இந்துக் கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும் 143
   - கூட்டுக் குடும்பச் சொத்து (அல்லது) பங்குரிமைச் சொத்து மற்றும் தனிச் சொத்து (அல்லது) சுய சம்பாத்தியச் சொத்து 147
   - பரம்பரைச் சொத்து 150
   - தடையற்ற மற்றும் தடையுள்ள மரபுரிமை 151
   - 1930-ஆம் ஆண்டின் இந்து கல்விப் பயன்கள் சட்டம் 153
   - கர்த்தா 155
2. கூட்டுக் குடும்பத்தில் கடனும் மாற்றாக்கமும் **[Debts and Alienation in Joint Family]** **163**
   - மதக் கடமை 163
   - அவ்வியவகாரிகா கடன் 167
   - முன்கடன் 167
3. பாகப்பிரிவினை **[Partition]** **169**
4. சமய மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை **[Religious and Charitable Endowments]** **179**

பகுதி-III

இசுலாமியர் சட்டம் [Muslim Law]

1. இசுலாமிய சட்டத்தின் தோற்றமும் மூலங்களும் **[Origin and Sources of Islamic Law]** **183**
2. திருமணம் (அல்லது) நிக்காஹ் **[Marriage (or) Nikah]** **195**

3. மணக் கொடை (அல்லது) மஹர்
[Dower (or) Mahar] 212

4. திருமண முறிவு (அல்லது) தலாக்
[Divorce (or) Talak] 223

5. பெற்றோராதல்
[Acknowledgment of Paternity] 242

6. காப்பாளர் நிலை
[Guardianship] 247

7. வாழ்க்கைப் பொருளுதவி (அல்லது) பராமரிப்பு
[Maintenance] 255

பகுதி-IV
பிற சட்டங்கள்
[Other Laws]

1. சிறப்புத் திருமணச் சட்டம், 1954
[The Special Marriage Act, 1954] 263

2. இந்தியக் கிறுத்தவ திருமணச் சட்டம், 1872
[The Indian Christian Marriage Act, 1872] 278

3. மணமுறிவுச் சட்டம், 1869
[The Divorce Act, 1869] 289

பகுதி-V
பிரச்சனைகளும் தீர்வுகளும்
[Problems and Solutions]

– இந்துச் சட்டம்
[Hindu Law] 296

- இந்து திருமணச் சட்டம், 1955 296
- இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956 307
  - தத்தெடுப்பு 307

- பராமரிப்பு 314
- இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம், 1956 315

– இசுலாமியர் சட்டம் [Muslim Law] 316
- திருமணம் (அல்லது) நிக்காஹ் 316
- மணமுறிவு (அல்லது) தலாக் 321

– சிறப்புத் திருமணச் சட்டம், 1954 [The Special Marriage Act, 1954] 324

பகுதி - VI
அண்மைக்கால வழக்குகளும் தீர்ப்பு நெறிகளும்
[Recent Case Laws]

327 முதல் 362 வரையிலான பக்கங்களில் சமீபத்தில் தீர்ப்புரைக்கப்பட்ட 30 முக்கிய வழக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி - VII
இணைக்கப்பட்டுள்ள வினாத்தாள்கள்
[Question Papers Enclosed]

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம், சென்னை.

– மூன்றாண்டு சட்டக்கல்வி

363 முதல் 386 வரையிலான பக்கங்களில் மூன்றாண்டு சட்டக்கல்வி படிப்போருக்கான வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

– அய்ந்தாண்டு சட்டக்கல்வி

386 முதல் 408 வரையிலான பக்கங்களில் ஐந்தாண்டு சட்டக்கல்வி படிப்போருக்கான வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறு குறிப்புகள் [Short Notes]

1.	இந்துச் சட்டத்தின் மூலங்கள் [Sources of Hindu Law]	3
2.	தயாபாக குழாம் [Dayabhaga School]	14
3.	செய்துவிட்டதால் செல்லுவதாம் எனும் கொள்கை [Doctrine of Factum Valet]	17
4.	1929–ஆம் ஆண்டு குழந்தைத் திருமண தடைச் சட்டம் [Child Marriage Restraint Act, 1929]	37
5.	குழந்தைத் திருமணம் [Child Marriage]	37
6.	சபிண்டா உறவு முறை [Sapinda relationship]	40
7.	தடுக்கப்பட்ட உறவு முறை [Prohibited degrees of relationship]	43
8.	சப்தபதி [Sapatapadi]	44
9.	இல்லாநிலை திருமணம் [Void Marriage]	48
10.	இசைவின் பேரில் மணமுறிவு [Divorce by Mutual Consent]	80
11.	மறைவான வழக்கு நடவடிக்கைகள் [In camera proceedings]	80
12.	இடைக்கால பராமரிப்பு [Interim Maintenance]	81
13.	வழக்கிடைப் பராமரிப்பு [Maintenance pendente lite]	81
14.	வழக்கிடை வாழ்க்கைப்படி [Alimony pendente lite]	81
15.	நிரந்தர பராமரிப்பு [Permanent Maintenance]	82
16.	நிரந்தரப் பிரிமனைப் பணம் [Permanent Alimony]	82
17.	பிரிமனைப் பணம் [Alimony]	82
18.	1856–ஆம் ஆண்டின் இந்து கைம்பெண் மறுமணச் சட்டம் [Hindu Widow's Remarriage Act, 1856]	83
19.	தத்தெடுப்பின் வகைகள் [Kinds of Adoption]	93
20.	இல்லாத்தம் தத்தெடுப்பு [Illotom Adoption]	93
21.	கிரிதிமா தத்தெடுப்பு [Kritima Adoption]	93
22.	நந்த பண்டிதர் விதி [Nanda Panditha's Rule]	93
23.	தத்தெடுப்பிற்கு முந்திய உடன்பாடுகள் [Ante-Adoption Agreement]	93
24.	முன் மரபை பாதிக்கும் கோட்பாடு [Doctrine of Relation back costs]	103
25.	குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோர்களின் பராமரிப்பு [Maintenance of children and aged parents]	114
26.	சார்ந்திருப்பவர்கள் [Dependants]	116

27.	பராமரிப்புத் தொகையை தீர்மானித்தல் [Determination of amount of maintenance]	119
28.	இயற்கைக் காப்பாளர் [Natural guardian]	130
29.	இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்கள் [Powers of natural guardian]	130
30.	உயில் வழிக் காப்பாளர் [Testamentary guardian]	134
31.	நீதிமன்றக் காப்பாளர் [Court guardian]	137
32.	அட்ஹாக் காப்பாளர் [Adhoc guardian]	140
33.	பரம்பரைச் சொத்து [Ancestral property]	150
34.	தடையற்ற மரபுரிமையும் தடையுள்ள மரபுரிமையும் [Unobstructed and Obstructed heritage]	151
35.	இந்து கல்விப் பயன்கள் சட்டம் [Hindu Gains of Learning Act, 1930]	153
36.	கர்த்தா [Karta]	156
37.	மதக் கடமை [Pious Obligation]	163
38.	அவ்வியவகாரிகா கடன் [Avyavakarika Debt]	167
39.	மீண்டும் ஒன்று சேர்தல் [Reunion]	174
40.	பாகப்பிரிவினையை மீண்டும் கிளருதல் [Reopening the partition]	176
41.	பிரிக்க முடியாத சொத்து [Impartible Estate]	177
42.	ஹனபி பிரிவு [Hanafi School]	183
43.	முகம்மதிய சட்டத்தின் மூலங்கள் [The sources of Mahommedan Law]	186
44.	சுன்னா [Sunna]	186
45.	சரீயத் சட்டம் [Shariat Act]	191
46.	பருவம் அடைந்தோர் விருப்புரிமை [Option of Puberty]	196
47.	பாசித் திருமணம் [Fasid Marriage]	196
48.	பேட்டில் திருமணம் [Batil Marriage]	196
49.	இத்தா [Iddat]	208
50.	முத்தா திருமணம் [Muta Marriage]	209
51.	குறிப்பிடப்பட்ட மணக் கொடை [Specified dower]	213
52.	உடனடி மணக் கொடை [Prompt dower]	213
53.	தலாக் [Talak]	223
54.	தலக் ஹாசன் [Talak hasan]	223
55.	குலா [Khula]	223
56.	சிஹார் [Zihar]	223

57. இஸ்லாமிய சட்டத்தில் மத மாற்றத்தின் விளைவுகள் [Effect of Apostacy under Islamic law] 223
58. தந்தையாக ஒப்புக் கொளல் [Acknowledgement of Paternity] 244
59. இஸ்லாமிய சட்டத்தில் நிகழ்வு நிலைக் காப்பாளர் [De facto guardian under Islamic law] 247
60. நபாகா [Nafaqa] 255
61. கிறுத்தவ திருமணத்தினையொட்டி செய்யப்படுகின்ற சடங்குகள் [Ceremonies incidental to Christian Marriage] 288

வேறுபாடுகள் [Distinctions]

1. The Mitakshara School and The Dayabhaga School 14
2. Void Marriage and Voidable Marriage 52
3. Divorce and Judicial Separation 74
4. Natural Guardian and De facto Guardian 133
5. Testamentary Guardian and De facto Guardian 136
6. Valid Marriage, Void Marriage and Irregular Marriage 207
7. Prompt Dower and Deferred Dower 218
8. Kula and Mubara'at 231

சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழக்குகளின் பட்டியல் [List of cases referred]

"A"

1. A.Hemamalini v. A.Pankajanabhan 62
2. Abdul Kadir v. Salima 198, 221
3. Abdul Kasem v. Jamila Khatun Bibi 249
4. Abdurahim v. Halimabai 19
5. Abraham v. Abraham 24
6. Adhyatma Bhattar Alwar v. Adhayatma Bhattar Sri Devi 69
7. Arjunsingh v. Virendra 20

"B"

8. Badri Prasad v.Urmila Mahobiya 83
9. Balabux v. Rukmabai 175
10. Balasubramanian v. Vijayalakshmi Balasubramanian 65
11. Beharam Khan v. Akhtar Begam 201

12.	Benares Bank v. Hari Narain	161
13.	Bhagavathi Ammal v. Sethu	68
14.	Bhagwan Dayal v. Reoti Devi	175
15.	Bhubathi v. Muralidhar	174
16.	Bipin Chandra v. Prabhavti	67
17.	Biswanth Agarwal v. Dhopu Devi	89
	"C"	
18.	Chand Narayan v. Saroja Devi	55
19.	Chandrika v. M.Vijayakumar	83
20.	Chinuthakuttai v. Subramanian	62
21.	Collector of Madura v. Moottoo Ramalinga Sethupathy (Or) Ramnad Case	8
22.	Commissioner of Income Tax v. Govindan Sugar Mills	158
23.	Commissioner of Income Tax v. Kalu Babu	161
	"D"	
24.	Dasarath Rama v. Narasa	159
25.	Dastane v. Dastane	64
26.	Dty.Commr., H.R. & C.E. Board v. Siddhi Vinayakar	12
27.	Deva Gouda v. Sham Gouda	101
28.	Dhanraj v. Suraj Bai	100
29.	Dhrubajaati v. Dila	67
30.	Digvijay Singh v. Pratap Kumar	49
	"E"	
31.	Elizbeth v. Stanely	49
	"G"	
32.	G.V.N.Kameswara Rao v. G.Jabilli	65
33.	Gokul chand v. Hukum Chand-Nath Mal	155
34.	Gomathi v. Kumaraguruppan	59
35.	Gurunath v. Kamalabai	13
	"H"	
36.	Hanooman Prasad v. Mussumat Babooee	123, 128, 160
37.	Hassan Kutti v. Jainabha	201
38.	Hira v. Radha	91
	"J"	
39.	Jagannath v. Sadhu Ram	297

"K"

40. Kamuwati v. Digbijai Singh 25
41. Kanchangauri v. Chandulal 55
42. Kanthimathi v. S.P. Iyer 55
43. Kenchava v. Girimallppa 13
44. Krishnamurthi v. Dhruwaraj 104
45. Krishnamurthy v. Krishnamurthy 92

"M"

46. Madusudan v. Bhagavan 167
47. Maina Bibi v. Choudri Vakil 222
48. Ma-Mi v. Kallander Ammal 226
49. Martand Rao v. Malhar Rao 178
50. Masit Ullah v. Damodar Prasad 152, 165
51. Mastan Sahib v. Asan Bibi 217, 220
52. Methram v. Rewachand 155
53. Mitra v. Premalatha Devi 68
54. Mohamed Sandhukhan v. Ratnam 193
55. Mohammed Ahmed Khan v. Shahbano Begam (Shahbano's Case) 259
56. Mohandas v. Devaswom Board 24
57. Moonshe Buzloor Raheem v. Shumsoonnissa Begam 226
58. Muhammad Allahabad v. Muhammad Ismail 245
59. Muhammed Hussain Khan v. Babu Kishva Nandhan Sahai 151
60. Myna Boyee v. Ootaram 10, 22

"N"

61. Nur Kadir v. Zuleikha Bibi 251

"P"

62. Petambur v. Hurish Chunder 177

"R"

63. Raghavamma v. Chenchamma 171
64. Raj Kumar v. Barbara 23
65. Rajinder Singh v. Tarawati 63
66. Rama Rao v. Krishna Mani 55
67. Rama Rao v. Raja of Pithapur 109
68. Ramanathan Chettiar v. Muthuraman Naidu and others 158
69. Ramasami v. Ulaganatha 165

70.	Ranganayaki v. Arunagiri	68
71.	Rangasamy Ayyangar v. Sivaprakasam Pillai and others	173
72.	Rooplal v. Kartaro Bai	63

"S"

73.	Sabir Hussain v. Forzand Khan	216
74.	Sarabai v. Rabiabai	226
75.	Sareetha v. Venkata Subbaiah	56
76.	Saroj Rani v. Sudarshan Kumar	58
77.	Sartaj Kuari v. Deorej Kuari	177
78.	Satya v. Suri Ram	63
79.	Savitri Pandey v. Prem Chandra Pandey	65
80.	Savitri Pandey v. Prem Chandra Pandey	73
81.	Shaharat singh v. Jafri Bibi	210, 211
82.	Sivakami Achi v. Somasundaram Chettiar	91
83.	Sivaramakrishnan v. Kaveri Ammal	152
84.	Smt. Harvinder Kaur v. Harmander Singh	57
85.	Sobha Rani v. Madhukar Reddi	66
86.	Sreepadachar v. Vasantha Bai	63

"T"

87.	Thakar Das v. Mst. Putli	159

"U"

88.	Umesh Kumar v. Sashikumari	68

"V"

89.	Venkatchalamma v. Cheekati	92

-o0o-

என்னருகே இல்லாது போனாலும் இறையருகே இருந்து, எனக்கு உற்ற வழிகாட்டியாக விளங்கும் காலஞ்சென்ற **எனதருமைத் தகப்பனார் அமரர் உயர்திரு. P.R. ரங்காச்சாரி, B.Sc., B.L., D.P.P.A., வழக்குரைஞர்,** அவர்களின் நினைவிற்கு இந்நூலை சமர்ப்பணம் செய்கிறேன். - **P. R. ஜெயராஜன், M.L.,** வழக்குரைஞர்.

பகுதி - I

இந்துச் சட்டம்

[Hindu Law]

- இந்துச் சட்டத்தின் தோற்றமும் மூலங்களும்
- இந்துத் திருமணம்
  - ஒரு செல்லத்தக்க இந்துத் திருமணத்திற்கான நிபந்தனைகள்
  - திருமணத்தின் செல்லாநிலை
  - இல்லாநிலை மற்றும் தவிர்த்கு திருமணம்
  - மணவாழ்க்கைப் பிரச்சனைகளுக்குத் தீர்வழிகள்
  - தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் கோரல்
  - நீதிமுறைப் பிரிவு
  - மணமுறிவு
- தத்தெடுப்பும் பராமரிப்பும்
  - தத்தெடுப்பு
  - பராமரிப்பு
    - மனைவியைப் பராமரித்தல்
    - விதவை மருமகளைப் பராமரித்தல்
    - குழந்தைகளையும், வயதான பெற்றோர்களையும் பராமரித்தல்
    - சார்ந்திருப்பவர்கள் – யார்?
      - சார்ந்திருப்பர்களைப் பராமரித்தல்
- உரிமை வயது அடையாமையும் காப்பும்

1 இந்துச் சட்டத்தின் தோற்றமும் மூலங்களும் [The Origin and Sources of Hindu Law]

1.Explain the various sources of Hindu Law. (இந்துச் சட்டத்தின் பல்வேறு மூலங்களைப் பற்றி விளக்குக.)

(அல்லது)

Enumerate and briefly explain the relative importance of the traditional sources of Hindu Law. (இந்துச் சட்டத்தின் மரபு வழி மூலங்களை எடுத்துரைத்து, அவற்றின் தொடர்பான முக்கியத்துவத்தை சுருக்கமாக எடுத்துரைக்க.)

(அல்லது)

Briefly explain the different sources of Hindu Law and mention the essentials of a valid custom and its relative importance as a source of Hindu Law. (இந்துச் சட்டத்தின் பல்வேறு மூலங்களை சுருக்கமாக விளக்குக. முறையான வழக்காறு ஒன்றின் முக்கிய கூறுகளையும் இந்துச் சட்டத்தின் மூலங்களில் ஒன்றாக அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்க.)

(அல்லது)

"Under the Hindu System of Law, custom outweighs the written text of the law" - Elucidate. ("இந்துச் சட்ட அமைப்பில் எழுதப்பட்ட சட்ட விளக்க மூலத்தைவிட வழக்கமே மேலோங்கி நிற்கிறது"– விளக்கியுரைக்க.)

(அல்லது)

State the essentials of a valid custom and its relative importance as a source of Hindu Law. (முறையான வழக்காறு ஒன்றின் முக்கியக் கூறுகளைக் குறிப்பிட்டு, இந்துச் சட்டத்தின் மூலமாக அதனுடைய சார்பியல் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.)

(அல்லது)

Sources of Hindu Law - Write short notes. (இந்துச் சட்டத்தின் மூலங்கள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Collector of Madura v. Mootoo Ramalingam - Write short notes.

(மதுரை மாவட்ட ஆட்சியர் எதிர் முத்து ராமலிங்கம் – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை

பண்டைய கால மூலங்கள் - 4 வகை

1. ஸ்ருதி
2. ஸ்மிருதிகள்
   - (i) மனுஸ்மிருதி
   - (ii) யாஞ்ஞவல்கிய ஸ்மிருதி
   - (iii) நாரத ஸ்மிருதி
     - (a) ஆச்சாரா
     - (b) வைவாஹாரா
     - (c) பிராயச்சித்தா
3. ஸ்மிருதிகளின் உரைகள் (அல்லது) விமர்சனங்கள்
4. வழக்கம்

   Collector of Madras v. Mooto Ramalinga Sethupathy (or) Ramnad Case

   Mayna Bai v. Uttaram

   வழக்கத்தின் பிரிவுகள்
   - (i) வட்டார வழக்கம்
   - (ii) சாதி வழக்கம்
   - (iii) குடும்ப வழக்கம்

   வழக்கத்தை யார் நிருபிக்க வேண்டும்?

   ஒரு செல்லத்தக்க வழக்கத்திற்கு தேவையான அடிப்படைக் கூறுகள்

   வழக்கத்தின் இன்றைய முக்கியத்துவம்

   வழக்கமும் வழக்காறும்

   Deputy Commissioner, H.R. & C.E. Board v. Siddhi Vinayakar

நவீன கால மூலங்கள் - 3 வகை

1. சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள்
2. தீர்ப்பு வழிச் சட்டங்கள்
3. தகைமை நெறி மற்றும் இயற்கை நீதிக் கோட்பாடுகள்

   Kenchava v. Girmallppa

   Gurunath v. Kamalabai

முடிவுரை

முன்னுரை:

பண்டைய காலத்தில் மனிதனின் அன்றாட வாழ்க்கை முறை, மத நூல்களால் நெறிப்படுத்தப்பட்டிருந்தன. ஆட்சி முறையிலும், சமுதாய அமைப்பிலும் மதத்தின் செல்வாக்கு மிக ஆழமாக வேர் விட்டிருந்தது. நாளடைவில் அந்த மத நெறிகளே சட்டமாக உருவெடுத்தன. பழம் பெரும் பெருமை வாய்ந்த இந்துச் சட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல.

இங்கு **'இந்து'** என்பவன் யார் என்பதை முதலில் அறிந்து கொள்வது அவசியம். பழங்கால தர்ம சாத்திரங்களிலோ, இலக்கிய நூல்களிலோ இந்து என்பவன் யார் என்று தெள்ளத் தெளிவாக, தீர்மானமாக விளக்கப்படவில்லை. **'இந்து'** என்ற சொல் **'சிந்து'** எனும் சொல்லின் திரிபாக வந்திருக்கக் கூடும் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்கள் முதலில் சிந்து நதிச் சமவெளியில் குடியேறினார்கள் என்பது வரலாறு. சிந்து நதி பாயும் பகுதிகளையும் அதற்கு அப்பால் உள்ள நாடுகளையும் 'சிந்துஸ்தான்' என்று பெயரிட்டு அழைத்தார்கள். பாரசீகத்தைச் சேர்ந்தவர்கள் 'சி' யை 'ஹி' என்று உச்சரிப்பது வழக்கம். எனவே அவர்கள் 'சிந்துஸ்தான்' என்பதை 'ஹிந்துஸ்தான்' என்று அழைத்தார்கள். ஹிந்துஸ்தானில் வசிப்பவர்கள் ஹிந்துக்கள் என்று பெயரிடப்பட்டார்கள். இவ்வாறு **'இந்துக்கள்'** தோன்றினார்கள்.

'இந்துக்களை' அவர்கள் சார்ந்த மதக் கோட்பாடுகளும், நெறி முறைகளும் வழி நடத்திச் சென்றன. முன் கூறியபடி மதக் கோட்பாடுகளுக்கே பண்டைய காலத்தில் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் இந்து மதச் கோட்பாடுகள் நாளடைவில் **இந்துச் சட்டமாக** வடிவெடுத்தது. கருங்கக்கூறின் இந்துச் சட்டம் எங்கிருந்து பிறந்தது, அதன் **மூலம் (Source)** என்னவென்று கேட்டால், பண்டைய இந்து மத நெறிகளும், தரும சாத்திரங்களும் எனலாம்.

எனினும், இவ்வாறு பிறந்து வளர்ந்த இந்துச் சட்டமானது, தற்பொழுதைய சமுதாய மாற்றங்களுக்கேற்ப சட்டமன்றத்தால் நவீனமாக மாற்றி வடிவமைக்கப்பட்டன.

எனவே, இந்துச் சட்டத்தின் மூலங்களை மேற்கண்டவற்றின் அடிப்படையில் இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்தறிதல் அவசியம். அவை **(1) பண்டைய கால மூலங்கள் (Traditional Sources); (2) நவீன கால மூலங்கள் (Modern Sources).**

பண்டைய கால மூலங்கள் (Traditional Sources) - 4 வகை:

1. ஸ்ருதி (Sruti);

2. ஸ்மிருதிகள் (Smritis);

3. ஸ்மிருதிகளின் உரைகள் (அல்லது) விமர்சனங்கள் (Commentaries);

4. வழக்கம் (Custom).

நவின கால மூலங்கள் (Modern Sources):

1. சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் (Legislation);

2. தீர்ப்பு வழிச் சட்டங்கள் (Case laws);

3. தகைமை நெறி மற்றும் இயற்கை நீதிக் கோட்பாடுகள் (Equity and Principles of Natural Justice or Justice,equity and good conscience).

இந்துச் சட்டத்தின் பண்டைய கால மூலங்கள்:

1. ஸ்ருதி (Sruti):

முனிவர்களும், மெய்யடியார்களும் கடவுள் கூறியவை 'இவை' என்று மனித சமுதாயத்திற்கு அளித்த தெய்வ மொழிகளே ஸ்ருதிகளாகும். தெய்வத்திடமிருந்து நேரடியாக வந்த தெய்வ மொழி என்பதால், தரும நூல்களில் இதற்கு உயர்ந்த இடம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் சட்ட சம்பந்தமான செய்திகளை விடச் சமய சம்பந்தமான செய்திகளே அதிகம். என்றாலும் இதில் காணப்படும் சட்டக் கூறுகளே பின்னர் வளர்ந்த இந்துச் சட்டத்திற்கு அடிப்படையாக விளங்கியது. மனிதனுக்கு இவ்வுலகில் மட்டுமல்லாது மறு உலகிலும் சிறந்த பேறு அடைய உதவும் நூல்கள் என்று கூறப்படும் ரிக், யஜுர், சாம, அதர்வனம் ஆகிய நான்கு வேதங்களும், உபநிஷத்துக்களும் இதில் அடங்கும்.

2. ஸ்மிருதிகள் (Smrities) :

முனிவர்கள் தங்கள் நினைவிலிருந்து உலகிற்கு அளித்த செய்திகளே ஸ்மிருதிகள் ஆகும். இந்துச் சட்டத்தின் மூலக்கூறுகள் ஸ்ருதிகளில் விட ஸ்மிருதிகளிலேயே அதிகம் காணப்படுகின்றது. இவைகளும் முற்றிலும் சட்டம் சம்பந்தமானவையல்ல; சமயம் சார்ந்ததே. ஸ்மிருதிகளில் சூத்திரங்கள், தர்ம சாத்திரங்கள் என இருவகை உண்டு. கவுதமர், போதாயனர், ஆபஸ்தம்பர், வசிஷ்டர், விஷ்ணு ஆகியோர் முக்கிய சூத்திரங்களை எழுதியவர்கள். மனு, யாஞ்ஞவல்கியர், நாரதர் ஆகியோர் முக்கிய தர்ம சாத்திரங்களை எழுதியவர்கள். இவை அவர்களின் பெயரிலேயே முறையே (i) மனுஸ்மிருதி (ii) யாஞ்ஞவல்கிய ஸ்மிருதி (iii) நாரதஸ்மிருதி என அழைக்கப்படுகின்றது. விரிவாக வருமாறு.

(i) மனுஸ்மிருதி: மேக்ஸ் முல்லர் (Max Muollar) எனும் அறிஞர் "மனுஸ்மிருதியின் காலம் கி.மு. 200" எனக் கூறியுள்ளார். எனவே இதனை, காலத்தால் மிகவும் முற்பட்டது எனக் கூறலாம். இது 2694 சுலோகங்களைக் கொண்டது. 18 தலைப்புகளாக (18 titles) பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் கடன், கூட்டாண்மை, கொடை, கூலி, ஒப்பந்தம், கணவன்–மனைவி, பாகப்பிரிவினை மற்றும் மரபுமுறை இறங்குரிமை, தாக்குதல், அவதூறு கூறல், திருட்டு, பிறன்மனை புணர்தல் ஆகிய தலைப்புகள் முக்கியமானவைகளாகும்.

(ii) யாஞ்ஞவல்கிய ஸ்மிருதி: இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. இதற்கு உரை (Commentary) எழுதியவர் விஞ்ஞானேஸ்வரர் (Viganeswara) ஆவர். இது 1010 சுலோகங்களை உள்ளடக்கியது. இவை பின்வரும் மூன்று காண்டங்களாக (Kandas) பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

(a) ஆச்சாரா (Achara - Ritual): இதன் பொருள் **"மதச் சடங்கு"** என்பதாகும். இக்காண்டத்தில் திருமணத்தின் பொழுது செய்யப்படும் சடங்குகள் கூறப்பட்டுள்ளன. (உ–ம்) திருமணத்தின் பொழுது மணமக்கள் புனிதத் (ஹோமத்) தீயை சுற்றி 7 அடி எடுத்து வைத்து வலம் வருதல்.

(b) வைவாஹாரா (Vyvahara - Secular): இதன் பொருள் **"மதச் சார்பற்ற நிகழ்வுகள்"** என்பதாகும். இக்காண்டத்தில் நீதிமன்றங்கள், நடைமுறைகள், பாகப்பிரிவினை, திருட்டு, கொள்ளை போன்றவை கூறப் பட்டுள்ளன.

(c) பிராயச்சித்தா (Prayaschitta - Expiation): இது "பிரயச்சித்தம்" எனப்படுகிறது. இக்காண்டத்தில் பிராயச் சித்தம் செய்தல் – அதாவது கைம்மாறு செய்தல் பற்றி கூறப்பட்டுள்ளது.

(iii) நாரத ஸ்மிருதி : இது கி.பி. நான்காம் நூற்றாண்டில் தோன்றியது. இதில்தான் முதன்முதலில் ஒரு சட்டத் தொகுப்பை காண முடிகிறது. இது இன்றைய உரிமையில் நடைமுறைச் சட்டம் போல் (The Code of Civil Procedure) உள்ளது.

3. ஸ்மிருதிகளின் உரைகள் (அல்லது) விமர்சனங்கள் (Commentaries) :

ஸ்மிருதிகளில் அதிக குழப்பங்கள் காணப்பட்டன. எனவே ஆழ்ந்த அறிவு பெற்ற பல சமயப் பெரியோர்கள் ஸ்மிருதிகளில் காணப்படும் குழப்பங்களை நீக்கும் பொருட்டும், அவற்றை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் பொருட்டும்.

ஸ்மிருதிகளுக்கு உரைகள் (அல்லது) விளக்கவுரைகள் (Commentaries) எழுத முற்பட்டனர். அவ்வாறு எழுதப்பட்ட உரைகளில் மிதாக்ஷரமும், தாயபாகமும் முக்கியமான உரைகளாகும்.

மிதாக்ஷரம் என்பது, யாஞ்ஞவல்கியத்திற்கு எழுதப்பட்ட உரையாகும். அதை எழுதியவர் 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த விஞ்ஞானேஸ்வரர் என்பவர் ஆவார். இம்முறை வங்காளம், அஸ்ஸாம் நீங்கலாக இந்தியாவின் ஏனைய எல்லாப் பகுதிகளிலும் நடைமுறையில் உள்ளது.

தாயபாகத்திற்கு உரை எழுதியவர் ஜீமுதவாகனர் ஆவார். இவ்வுரை எந்த ஒரு தனிப்பட்ட ஸ்மிருதிக்கும் எழுதப்படாமல், பல்வேறு ஸ்மிருதிகளுக்கு எழுதப்பட்டவையாக விளங்குகிறது.

மிதாக்ஷரம் சில விஷயங்களைக் கூறாமல் விடுத்து அதைத் தாயபாகம் கூறும் பொழுது, மிதாக்ஷரத்தைப் பின்பற்றுபவர்கள் தாயபாகம் கூறுவதை ஏற்றுக் கொள்வதுண்டு. அதுபோல் தாயபாகம் கூறாத செய்திகளை மிதாக்ஷரம் கூறும் பொழுது, தாயபாகத்தைப் பின்பற்றுபவர்கள் மிதாக்ஷரம் கூறுவதைப் பின்பற்றுவதுண்டு.

4. வழக்கம் (Custom) :

பழக்கம், வழக்கம் ஆகிறது. பலர் பல நாள் நடந்து சென்ற தடம் பாதை ஆவது போல், பல நாள் செய்யப்பட்ட பழக்கம், வழக்கம் ஆகிறது. அதாவது ஒரு குடும்பத்திலோ, ஊரிலோ, ஜாதியிலோ இனத்திலோ குறிப்பிட்ட நிலப்பரப்பிலோ பன்னெடுங்காலமாக இடைவெளியின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றப்படும் விதிகளே வழக்கமாகும். ஒவ்வொரு நாட்டின் இனமுறைச் சட்டத்தின் (Personal law) முன்னோடி, வழக்கம்தான். இது ஒரு எழுதப்படாத சட்டமாகும். இந்துச் சட்டத்தில் வழக்கம் ஒரு சிறப்பான இடத்தை வகிக்கிறது. ஒரு மனிதனின் பிறப்பு முதல் அவனது இறப்பு வரை வழக்கம் அவனை நிழல் போல் தொடர்கிறது. மனுஸ்மிருதி, வழக்கம் தான் உயர்ந்த தருமம் எனக் கூறுகிறது. ஆதாரப்பூர்வமாக நீதிமன்றத்தில் வழக்கம் நிரூபிக்கப்படும் பொழுது பழைய சாத்திரங்கள் கைவிடப்பட்டு, வழக்கமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதைப் பின்வரும் முக்கிய வழக்கு விளக்கும்.

Collector of Madura v. Moottoo Ramalinga Sethupathy (Or) Ramnad Case[1]

'இராமநாதபுர வழக்கு' என சிறப்பாக அழைக்கப்படும் மேற்படி வழக்கில்,

1. (1868) 12 M.I.A 397, 436

"இந்துச் சட்ட அமைப்பில் எழுதப்பட்ட சட்ட விளக்க மூலத்தைவிட வழக்கமே மேலோங்கி நிற்கிறது"[1] என பிரிவி கவுன்சில் நீதிப்பெருமகனார் **சர் ஜேம்ஸ் கோல்வில்லி** அவர்கள் தீர்ப்பு கூறினார். மேற்படி வழக்கின் பொருண்மைகள் வருமாறு.

வழக்கின் பொருண்மைகள் (Facts of the case) :

இவ்வழக்கில் இராமநாதபுர ஜமீன்தாரர் தனது ஜமீன் சொத்தை விட்டு இறந்து விடுகிறார். அவருக்கு வாரிசாக மகன்கள் யாரும் கிடையாது. மேலும் அவருடைய மனைவி ராணி பர்வதவர்த்தினிக்குத் தத்தெடுப்பதற்கு உயில்வழி அதிகாரம் ஏதும் வழங்கப்படவில்லை. ஆனால், ராணி, ஜமீன்தாருடைய சபிண்டா (ஒரே இரத்த) உறவினர்கர்களின் சம்மதத்துடன் ஓர் ஆண் குழந்தையைத் தத்தெடுத்தார். ஆனால், ராணி இறந்தபின், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த தத்தெடுப்பை ஏற்றுக் கொள்ளாமல், அந்த ஜமீனை வாரிசில்லாச் சொத்து (Escheat) என அறிவித்து, அரசுக்கு அச்சொத்தை சொந்தமாக்கி விட்டார். இதை எதிர்த்து ராணியால் தத்தெடுக்கப்பட்ட மகன், தனது தத்தெடுப்பு செல்லத்தக்கதே என அறிவிக்கக்கோரி வழக்குத் தொடர்ந்தார்.

பிரிவி கவுன்சில் இவ்வழக்கை ஆய்கையில் பின்வரும் கருத்துக்கள் சுட்டிக் காட்டப்பட்டன. அதாவது, ஒரு பெண் தனது கணவனின் அனுமதியில்லாமல் யாரையும் தத்தெடுத்துக் கொள்ளக்கூடாது என வஸிஸ்டர் (Vasishta) எழுதிய விளக்க உரை கூறுகிறது. ஆனால் அதே சமயத்தில் திராவிட முறைப்படி, ஒரு விதவை தனது இறந்து போன கணவனின் சபிண்டா உறவினர்களின் அனுமதியுடன் யாரையாவது தத்தெடுத்துக் கொண்டால், அது நடைமுறை வழக்கத்தின்படி (customary practice) செல்லக் கூடியதாகும். இவ்வாறு வழக்க மாக செய்து கொள்ளப்பட்ட தத்தெடுப்புகள் பலவும் மேற்படி வழக்கில் ஆதாரமாக எடுத்துக் கூறப்பட்டன. இவ்வழக்கை ஆய்ந்த நீதிப்பெருமகனார் **சர் ஜேம்ஸ் கோல்வில்லி** அவர்கள், இந்து தரும சாத்திரம் என்ன கூறுகின்றது என்று பார்ப்பதை விட, நடைமுறை வழக்கத்தில் என்ன பின்பற்றப்பட்டு வருகிறது என்று பார்த்து, அதற்குத் தகுந்த வகையிலேயே, கொடுக்கப்படும் தீர்ப்பும் அமைய வேண்டும் என்று கூறினார். மேலும், திராவிட வழக்கத்தின்படி மேற்படி தத்தெடுப்பு செல்லத்தக்கதே என்றும் தீர்ப்பு கூறினார்.

எனவே "இந்துச் சட்ட அமைப்பில் எழுதப்பட்ட சட்ட விளக்க மூலத்தை விட வழக்கமே மேலோங்கி நிற்கிறது" என்று மேற்படி நீதிப்பெருமகனார் கூறியது முற்றிலும் சரியே.

---

1. "Under the Hindu System of law clear proof of usage will outweighs the written text of the law" - **Lord Sir James Colville.**

Myna Boyee v. Ootaram[1]

இவ்வழக்கில் ஒரு கைவிடப்பட்ட இந்துப் பெண்ணுடன் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒருவர் குடும்பம் நடத்தியதில், இரு ஆண்மக்கள் பிறந்து, அவர்கள் இந்து முறைப்படியே வளர்க்கப்பட்டனர். அப்பொழுது இரு குழந்தைகளில் ஒன்று இறந்து விடுகிறது. அச்சமயத்தில் அக்குழந்தைகளுக்கு எம்மதச் சட்டம் பொருந்தும், உயிருள்ள குழந்தை இறந்த குழந்தையின் சொத்தை எஞ்சுநர் உரிமைப்படி அடைய முடியுமா என்ற கேள்விகள் எழுந்தன. இவ்வழக்கின் தீர்ப்பில் பிரிவி கவுன்சில், "இந்துச் சட்டமே அவர்களுக்குப் பொருந்தும்" என்றும், "எழுதப்பட்ட சட்டங்களை விட, வழக்கில் உள்ள பழக்க வழக்கங்களே முதலிடம் பெறும்" என்றும், தீர்ப்பு கூறியது.

ஒரு வழக்கம் ஒழுங்கீனமானதாகவோ, பொது நலனுக்கு விரோதமான தாகவோ, இயற்றப்பட்ட சட்டங்களுக்கு (statutory laws) முரணாகவோ இருந்தால் அது செல்லுபடியாகாது.

வழக்கத்தின் பிரிவுகள் (Different Kinds of Custom):

(i) வட்டார வழக்கம் (Local Custom): இது ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் நிலவி வரும் வழக்கமாகும். ராமநாதபுர வழக்கை இதற்கு உதாரணமாக கூறலாம்.

(ii) சாதி வழக்கம் (Caste Customs): இது ஒரு சில குறிப்பிட்ட சாதியினரால் பின்பற்றப்பட்டு வருவதாகும். உதாரணமாக பிராமண சாதியில், தத்தெடுக்கும் பொழுது ஹோமம் செய்வது வழக்கமாகும். ஆனால் சூத்திரர் களிடையே, தத்தெடுப்பு செய்து கொள்ளும் சடங்கிற்கு சிறுவனை "தத்துக் கொடுத்தல் – எடுத்துக் கொள்ளல்" நிகழ்ச்சியே போதும்.

(iii) குடும்ப வழக்கம் (Family Custom): இது ஒரு குடும்பத்தினரால் வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வருவதாகும். உதாரணமாக, சில ஜமீன்தாரிப் பரம்பரையில், சில சொத்துக்களைப் பிரிவினை செய்யாமல் வழக்கமாக வழி வழியாக வைத்திருப்பார்கள்.

வழக்கத்தை யார் நிரூபிக்க வேண்டும் ?

வழக்கத்தை யார் தங்களுக்குச் சார்பாக பயன்படுத்த முனைகிறார்களோ அவர்கள்தான் அவ்வழக்கம் இருந்து வருகிறது என்பதை நிரூபிக்க வேண்டும். வழக்கம் என்பதை நீதிமன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ளாது. மாறாக, பின்வரும்

1. (1861) 8 M.I.A. 400 : Mayana Bai v. Uttaram (1864) 2 Mad. H.C. 196

அடிப்படைப் பண்புகள் அவ்வழக்கத்திற்கு இருந்தால்தான் நீதிமன்றம் அதனை அங்கீகரிக்கும்.

ஒரு செல்லத்தக்க வழக்கத்திற்கு தேவையான அடிப்படைக் கூறுகள் (Essential elements of a valid custom):

1. வழக்கம் தொன்மையானதாக இருக்க வேண்டும். (Antiquity);
2. தொடர்ந்து நடைமுறையில் அவ்வழக்கம் பின்பற்றப்பட வேண்டும். (Continuous);
3. வழக்கம் நியாயமானதாக இருக்க வேண்டும். (Reasonableness);
4. அது தெளிவாக இருக்க வேண்டும். (Unambiguous);
5. நிச்சயமானதாக இருக்க வேண்டும். (Certainty);
6. ஒழுக்கக் குறைவானதாகவோ பொது நலத்திற்கு விரோதமானதாகவோ இருக்கக் கூடாது. (Not opposed to morality or public policy);
7. அரசு இயற்றியுள்ள சட்டங்களால் தடை செய்யப்படாததாக இருக்க வேண்டும். (Not forbidden by any express enactment of legislature);
8. வழக்கம் தனிப்பட்ட மனிதனின் கருத்தாக இருக்கக் கூடாது.
9. இவ்வழக்கத்தை மக்கள் தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் கடைப் பிடிக்க வேண்டும்.
10. அதனால் தங்களுக்கு நன்மை பயக்கும் என்று மக்கள் கருத வேண்டும்.

ஒரு வழக்கம் எவ்வளவு தொன்மையானது எனத் தீர்மானிப்பது எளிதன்று. இத்தனை ஆண்டுகள் பின்பற்றப்பட்ட ஒரு பழக்கமே வழக்கமாகும் என அதன் கால வரையறையைத் திட்டமாகக் கூற இயலாது. அது நீண்ட நெடுங்காலமாகப் பொது மக்களின் ஒப்புதலுடன் நடைமுறையில் உள்ளதா என்பதுதான் முக்கியமாகும். ஒரு சாதியின் முக்கியப் பிரமுகர்கள் பலரிடமிருந்து ஆணையுறுதிப் பத்திரம் (Affidavit) பெற்று இதைத்தான் வழக்கமாகக் கருத வேண்டும் என்றோ அல்லது இதுதான் வழக்கமாக உள்ளது என்றோ கூறினால் அது வழக்கத்தை நிரூபிப்பதாக கருத இயலாது. அச்சாதியில் உள்ள அனைவரின் ஏகோபித்த ஒப்புதல்களாலும் நிகழ்ச்சி களாலும், அவை மாறாமல் தொடர்ந்து வந்திருப்பதாக நிரூபிக்க வேண்டும்.

வழக்கத்தின் இன்றைய முக்கியத்துவம் :

வழக்கத்தின் முக்கியத்துவத்தை இன்றும் நாம் நடைமுறையில் கையாண்டு வருகிறோம். எடுத்துக்காட்டாக, 1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம்

(Hindu Marriage Act, 1955) பிரிவு 5 (d)-ன்படி தடுக்கப்பட்ட உறவுமுறை யாகத் தந்தை வழியில் இருந்து 5 தலைமுறையில் உள்ளவர்களையும், தாய் வழியில் 3 தலைமுறையில் உள்ளவர்களையும் திருமணம் செய்யக்கூடாது எனக் கூறப் பட்டுள்ளது. ஆனால் அச்சட்டத்திலேயே அப்பகுதியில் நிலவுகின்ற வழக்கங்களின் அடிப்படையில் மேற்கண்ட சட்டப்பிரிவிற்கு எதிராகச் செய்யப்படும் திருமணத் திற்கு அச்சட்டம் அங்கீகாரம் அளிக்கிறது (எ.கா.) மேற்படி பிரிவு 5 (d)-ன்படி ஒருவன் தனது அத்தை மகளைத் திருமணம் செய்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில் அவர்கள் தடை செய்யப்பட்ட உறவுமுறை கொண்டவர்கள். ஆனால் தமிழ்நாட்டில் அத்தை மகள் அல்லது மாமன் மகளை மணப்பது தொன்று தொட்டு பன்னெடுங் காலமாக வழக்கத்தில் உள்ளதால், அதனை மேற்படி சட்டம் அங்கீகரிக்கிறது.

வழக்கமும் வழக்காறும் (Custom and Usage):

வழக்கம் வேறு, வழக்காறு வேறு. இரண்டும் கிட்டத்தட்ட ஒரே பொருளில் பேசப்பட்டு வந்தாலும் இரண்டிற்கும் சற்று வேறுபாடு உண்டு என்பதைச் சட்டங்கள் தெளிவாக்கி இருக்கின்றன. வழக்காறு எங்கே முடிகிறதோ அங்கே வழக்கம் ஆரம்பமாவதாகக் கொள்ளலாம். ஒரே மாதிரியாக இருத்தல், நெடுங் காலமாக இருத்தல் முதலிய 10 கூறுகள் வழக்கத்திற்கு அவசியமாகும். ஆனால் வழக்காறுக்கு அவை தேவை இல்லை. வழக்காறு வளர்ந்து கொண்டே இருக் கலாம். வழக்காடுவோர் அதனை ஒத்துக் கொண்டும், புரிந்து கொண்டும் இருந் தாலே அதற்குப் போதுமானதாகும் என **Deputy Commissioner, H.R. & C.E. Board v. Siddhi Vinayakar**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

நவீன கால மூலங்கள் (Modern Sources):

1. சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் (Legislation):

நாளுக்கு நாள் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம் ஆகியவை வளர்ந்து கொண்டே போகின்றன. சமுதாய மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றம் இந்துச் சட்டத்தையும் பாதித்தது. பழைய தர்ம சாஸ்திரங்களின் கோட்பாடுகளின்படி வாழ்க்கை முறையை கொண்டு செல்வது கடினம் என சட்ட அறிஞர்கள் உணர்ந்தனர். இதனால் பலவிதமான சட்டத் திருத்தங்களும், சட்டங்களும் இயற்றப்பட்டன. இதனால் இந்துச் சட்டத்தின் நிலை மேலும் உயர்ந்தது. உதாரணமாக, பெண்ணுக்கு சொத்தில் பங்கு, விதவை மறுமணம் போன்று எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டன. 1955–ஆம் ஆண்டில் இந்து திருமணச் சட்டம், 1956–ல் இந்து வாரிசுரிமை சட்டம், அதே ஆண்டிலேயே இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டம் என்று இந்துச் சட்டங்கள் தொகுக்கப்பட்டு (Codified), அனுதினமும் வளர்ந்து கொண்டே உள்ளது.

1. 1971 (1) M.L.J. 422.

2. தீர்ப்புவழிச் சட்டங்கள் (Case Laws) :

நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளும் சட்டங்களாகவே கருதப்படுகின்றன. இத்தீர்ப்புகள், சட்ட அறிக்கைகளாக (law reports) நூல் வடிவில் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. இந்து சட்டத்தின் அனைத்து பகுதிகளையும் இன்றைய நீதிமன்றங்கள் அலசி ஆராய்ந்துள்ளன. ஆகவே அவை வழங்கும் தீர்ப்புகளும் சட்டமாகவே கருதப்படுகின்றன. பிரிவி கவுன்சில் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும். உயர் நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் அந்த மாநிலத்தில் உள்ள கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும். ஆகவே தீர்ப்புகளும் இந்துச் சட்டத்தின் ஒரு மூலமாக கருதப் படுகின்றன.

3. தகைமை நெறி மற்றும் இயற்கை நீதிக் கோட்பாடுகள் :

தகைமை நெறியின் அடிப்படையிலும், இயற்கை நீதிக் கோட்பாடுகளின் அடிப்படையிலும், வழக்கமும் வழக்காறுகளும் மாற்றம் பெற வழியுண்டு என **Kenchava v. Girimallppa**[1] வழக்கில் கூறப்பட்டது.

தரும சாத்திரங்கள் இல்லாதபொழுது, தலைமை நெறி மற்றும் இயற்கை நீதியின் அடிப்படையில் வழக்குகளை தீர்க்க நீதிமன்றங்களுக்கு அதிகாரம் உண்டு என **Gurunath v. Kamalabai**[2] வழக்கில் கூறப்பட்டது.

முடிவுரை:

இன்று இந்து சட்டம் தோன்றுவதற்கு அடிப்படை காரணமாக இருந்த பண்டைய கால மூலங்களில், வழக்கத்தைத் தவிர மற்ற மூலங்களின் முக்கியத் துவம் படிப்படியாக மறைந்துவிட்டன என்றே கூறலாம். நவீன கால மூலங்களான இயற்றுமுறைச் சட்டங்கள், தீர்ப்புவழிச் சட்டங்கள் ஆகியவற்றின் வழியாக இந்துச் சட்டம் இன்று செம்மையாக, மாறி வரும் சமுதாய சூழலுக்கேற்ப வளர்ந்த வண்ணம் உள்ளது எனில் அது மிகையன்று.

2. What are the two main schools of Hindu Law? State the difference between the two. (இந்துச் சட்டத்தின் இரண்டு முக்கிய முறைகள் யாவை ? இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடுகளை குறிப்பிடவும்.)

(அல்லது)

Give a brief account of the classical schools of Hindu Traditional Law. (இந்து பாரம்பரிய பழமை சிறப்புடைய குழுமங்கள் குறித்து சுருக்கி வரைக.)

1. (1924) 51 I.A. 368
2. (1951) 1 S.C.R. 1135

(அல்லது)

Point out the difference between the Mitakshara and Dayabagha Schools of Hindu Law. (மிதாக்ஷர முறைக்கும் தாயபாக முறைக்கும் உள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Dayabhaga School - Write short notes. (தயாபாக குழாம் – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
மிதாக்ஷர முறை, தாயபாக முறை - வேறுபாடுகள்
முடிவுரை

முன்னுரை:

ஸ்ருதி, ஸ்மிருதி ஆகியவை இந்துச் சட்டத்தின் பண்டைய கால மூலங்களாக (Traditional Sources) விளங்கியது என நாம் சென்ற வினாவில் கண்டோம். ஆனால் அவற்றை சாமான்ய மக்கள் எளிதில் புரிந்து கொள்ள இயல வில்லை. எனவே ஸ்மிருதிகளுக்கு எளிய முறையில் பல விளக்கவுரைகள் (Commentaries) எழுதப்பட்டன. அவையும் பின்னர் இந்துச் சட்டத்தின் மூலங்களாக கருதப்பட்டன.

மேற்கண்டவாறு ஸ்மிருதிகளுக்கு எழுதப்பட்ட விளக்க உரைகளுள் விஞ்ஞானேஸ்வரர் என்பவர் யாஞ்ஞவல்கிய ஸ்மிருதிக்கு எழுதிய விளக்க உரை மிகவும் சிறப்பாக கருதப்பட்டது. அவ்வுரையே மிதாக்ஷர முறை என்று அழைக்கப் பட்டது. அதுபோல் ஜீமுதவாகனர் என்பவர் பல ஸ்மிருதிகளுக்கு உரை எழுதினார். இது தாயபாக முறை என்றும் அழைக்கப்பட்டது.

மேற்படி மிதாக்ஷரா மற்றும் தாயபாக முறைக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளன. அவற்றை பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

மிதாக்ஷரா முறை (The Mitakshara School)	தாயபாக முறை (The Dayabhaga School)
1. இது யாஞ்ஞவல்கிய ஸ்மிருதிக்கு எழுதப்பட்ட உரையாகும்.	இது பல ஸ்மிருதிகளுக்கு (மனு, நாரதா ஸ்மிருதி போன்று) எழுதப்பட்ட உரை யாகும். அதாவது பல்வேறு கோட்

	பாடுகளின் தொகுப்பாக இது கருதப் படுகின்றது.
2. இது காலத்தால் முற்பட்டது.	இது காலத்தால் பிற்பட்டது.
3. வங்காளம் அஸ்ஸாம் நீங்கலாக இந்தியா முழுவதிலும் இம்முறை நடைமுறையில் உள்ளது.	இது வங்காளம், அஸ்ஸாமில் மட்டும் நடைமுறையில் உள்ளது.
4. இதில் சீர்திருத்தக் கருத்துகள் அதிகம்.	இது பழமையான கருத்துக்களைக் கொண்டது.
5. இதில் பின்வரும் உட்பிரிவுகள் உள்ளன.	
(i) காசிமுறை – மத்திய, வடக்கு, வட மேற்கு இந்தியா ஆகிய பகுதிகளில் நிலவியது.	
(ii) மிதிலை முறை – பீஹாரில் நிலவியது.	
(iii) மராட்டிய முறை – மகாராஷ்டிரம், குஜராத், வட கொங்கனியில் நிலவியது.	
(iv) திராவிட முறை தென்னிந்தியாவில் நிலவியது.	
6. இம்முறையின்படி, ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தில் ஒரு மகனுக்கு அவனது பிறப்பு ஒன்றினாலேயே சொத்தில் உரிமை ஏற்பட்டு விடு கிறது.தந்தை உயிருடன் இருக்கும் போதே பாகப்பிரிவினைகோர அவனுக்கு உரிமை உண்டு.	இம்முறையில் பிறப்பினால் எவ் வுரிமையும் மகனுக்குத் தரப்படவில்லை. தந்தை உயிரோடு இருக்கும் வரை மகன் பாகப்பிரிவினை கோர முடியாது.
7. பிறப்பு ஒன்றினாலேயே மகனுக்கு சொத்துரிமை இங்கு வந்து விடுவ தால், அவனது தந்தையானவர் கூட்டுக் குடும்பச் (பரம்பரைச்) சொத்தை தனது மகன்களின்	இங்கு தந்தைதான் சொத்துக்கு முழுச் சொந்தக்காரர். ஆகவே அவர் தமது விருப்பப்படி, சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

அனுமதியில்லாமல் மற்றொரு வருக்கு விற்கவோ அல்லது ஏதேனும் ஒரு விதத்தில் உரிமை மாற்றம் செய்யவோ முடியாது. அதாவது மகனின் சம்மதமில்லாமல், தந்தையானவர் கூட்டுக் குடும்பச் சொத்தை யாருக்கும் விற்க இயலாது.	
8. ஒரு கூட்டுக் குடும்பத்தில் சக உறுப்பினராக உள்ள சகோதரன் தன்னுடைய பாகத்தை மட்டும் விற்கவோ அல்லது மற்றொரு வருக்குக் கொடுக்கவோ முழு உரிமை கிடையாது. ஆண் குழந்தை இல்லாமல் அவன் இறந்து போனால் அவனுடைய உரிமைகள் எஞ்சியுள்ள பிற சகோதரர்களை அடையும்.	ஒவ்வொரு சகோதரனும் தனக்கு உரிமையுள்ள பாகத்தைத் தன் விருப்பம் போல் விற்கலாம். மற்றொருவருக்குக் கொடுக்கலாம். அவனுடைய மரணத்திற்குப் பின், ஆண் குழந்தை யாரும் இல்லாவிட்டால் அவனுடைய உரிமைகள் அவனது மனைவிக்கே போகும்.
9. கூட்டுக் குடும்பத்தில் ஒரு பங்குரிமையரின் (Coparcener) மரணத்திற்குப் பின் அவனுடைய மனைவி பாகப்பிரிவினை கோர முடியாது.	இங்கு கணவனின் மரணத்திற்குப் பின் பிற சகோதரர்களுடன் மனைவி ஒரு பங்குரிமையர் ஆகிறாள். எனவே அவள் தன் பாகத்தை பிரித்துத் தருமாறு கேட்கலாம்.
10. யார் இறந்தவரிடம் நெருங்கிய இரத்த உறவு (Propinquity) கொண்டுள்ளார்களோ அவர்களே இறந்தவரின் சொத்தில் உரிமை இறக்கம் பெற முடியும் என்பது இங்கு விதி.	இங்கு இறந்தவருக்கு மதச் சடங்கு (பிண்டம் அளித்தல்) செய்யும் (Religious efficacy) உரிமை பெற்றவரே, சொத்துரிமை இறக்கம் பெற முடியும் என்பது விதி.

முடிவுரை :

மிதாக்ஷரா மற்றும் தாயபாக முறைகளுக்கு இடையே இருந்த மேற்கண்ட வேறுபாடுகள், 1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமை சட்டத்தால் (Hindu Succession Act of 1956) நீக்கப்பட்டு, எல்லாப் பிரிவு இந்துக்களுக்கும் பொருந்துமாறு ஒரே சட்டம் உருவாக்கப்பட்டது. (பிற்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது).

3. Doctrine of Factum Valet. - Write short notes. (செய்து விட்டதால் செல்லுவதாம் எனும் கொள்கை – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Discuss the Doctrine of "Factum Valet" in its application to Hindu Marriage. ("செய்துவிட்டால் செல்லுமாம்" என்கிற கோட்பாடு இந்து திருமணங்களுக்கு பொருந்துகின்ற தன்மையை விவாதிக்கவும்.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

"செய்துவிட்டதால் செல்லுவதாம்" - விளக்கம்
இக்கொள்கை எம்முறையினருக்குப் பொருந்தும்?
இக்கோட்பாட்டை விளக்கும் சில வழக்குகள்
Umadevi v. Gokulanand
Venkatacharyulu v. Rangacharyulu

"செய்துவிட்டதால் செல்லுவதாம்" - விளக்கம்:

செய்யக்கூடாத ஒரு செயலைச் செய்துவிட்டால், சரி என்று ஏற்றுக் கொள்வதே "செய்து விட்டதால் சொல்லுவதாம்" எனும் கொள்கை. இக்கொள்கை **"Factum valet quod fieri non debuit"** எனும் இலத்தின் மூதுரை யிலிருந்து பிறந்ததாகும். இதன் ஆங்கிலப் பொருள் **"What ought not to be done is valid when done"** என்பதாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நீதி, நேர்மை நெறி, மனச்சாட்சி ஆகியவற்றின் அடிப்படையில் இக்கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு நீதி பரிபாலனத்தில் அமல் செய்யப்பட்டது. செய்து விட்டால் செல்லுவதாம் என்பதைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. செல்லாத காரியங்கள் எல்லாம் செய்துவிட்டால், அவை செல்லுபடியாகிவிடும் என்று பாமரத் தனமாகப் பொருள் கொள்ளதலும் ஆகாது. இந்து தரும சாத்திரங்கள் ஒரு செயல், "இன்னமுறையில் செய்யப்பட வேண்டும்" என்று செயலுறுத்துக் கட்டளை யாக (Mandatory) கூறியிருக்கும் விதிகளுக்கு இக்கொள்கை பொருந்தி வராது. மாறாக "இன்ன முறையில் செய்யப்படலாம்" என்று அறிவுறுத்தும் வகையில் கூறியிருக்கும் அறிவுரைக் கட்டளைகளுக்கே (Directory) பொருந்தி வரும்.

இக்கொள்கை எம்முறைக்குப் பொருந்தும்?

இக்கொள்கை ஒரு காலகட்டத்தில் தாயபாக முறைக்குத்தான் உரியது என்று கருதப்பட்டு வந்தது. பின்னர் அது தவறு என்று அறியப்பட்டு எல்லா முறையினருக்கும் பொருந்தி வருவது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக்கோட்பாட்டை விளக்கும் சில வழக்குகள்:

"நடந்த செயலை நூறு சாத்திர விதிகளாலும் மாற்ற முடியாது" ("A fact cannot be altered by a hundred texts"- Colebrooke) எனும் கருத்தில்தான் இக்கொள்கை அமைந்திருக்கிறது. இதற்குச் சான்றாக பின்வரும் இரு வழக்குகளை எடுத்துரைக்கலாம்.

Umadevi v. Gokulanand[1]

வசிஷ்டருடைய உரை, நெருங்கிய உறவினனைத்தான் தத்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது. ஓர் இந்து, நெருங்கிய உறவினர் இருக்கையில் அவனை விட்டுவிட்டு முற்றிலும் அந்நியமான ஒருவனைத் தத்து எடுத்துக் கொண்டால் அது குற்றமன்று. ஆங்கிலேயேர் ஆட்சிக் காலத்தில் உச்ச நீதிமன்றமாக விளங்கிய பிரிவி கவுன்சில் (Privy Council) அத்தகைய தத்து எடுத்துக்கொள்ளலைச் சரி என்று அங்கீகரித்து மேற்படி வழக்கில் தீர்ப்பளித்தது.

Venkatacharyulu v. Rangatharyulu[2]

யாஞ்ஞவல்கிய உரை, மகளைத் திருமணம் செய்து கொடுப்பதில் தந்தைக்கே முதல் உரிமை இருப்பதாகக் கூறுகிறது. இதற்கு மாறாக ஒரு வழக்கில் தாய் அந்த உரிமையை எடுத்துக் கொண்டு மகளுக்கு திருமணம் செய்வித்த போது அதனை சரியென மேற்படி வழக்கில் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

4. "Hindu Law is lex fori, and not lex loci" - Comment. Discuss the effect of Migration. ("இந்துச் சட்டம் நபர் சார்ந்ததேயொழிய தலம் சார்ந்ததல்ல"– விமர்சிக்க. குடியேற்றத்தின் விளைவுகளை விவாதிக்க.)

(அல்லது)

Hindu Law is made applicable as personal law only. Discuss. (இந்துச் சட்டம் இனமுறைச் சட்டமாக மட்டும் அமுல்படுத்தப்படுகிறது. விமர்சிக்க.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

இந்துச் சட்டம் ஒரு இனமுறைச் சட்டமே
குடியேற்றத்தின் விளைவுகள்
முக்கிய வழக்குகள்
Aburahim v. Halimabai
Arjunsingh v. Virendra

1. Cal. 587 (P.C.)
2. (1891) 14 Mad. 316.

இந்துச் சட்டம், ஒரு இனமுறைச் சட்டமே:

இந்துச் சட்டம் ஓர் இனமுறைச் சட்டமாகும் (Personal Law); தலச் சட்டமன்று (**lex loci** - law of locality). அதாவது இந்து நபர் ஒருவர், நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குக் குடியேறினால், அவர் எங்கிருந்து வந்தாரோ அந்தப் பகுதியின் சட்டமும் பழக்க வழக்கமும்தான் அவருக்கு உரியதே தவிர, குடியேறும் பகுதியில் நிலவும் சட்டமோ பழக்க வழக்கமோ அல்ல. அவர் எங்கிருந்து வருகிறாரோ அல்லது எந்தப் பழக்க வழக்கத்தைப் பின்பற்றுகிறாரோ, அந்தப் பழக்க வழக்கமே எங்கு சென்றாலும் அவரை நிழல் போலத் தொடரும்.

உதாரணமாக, சென்னையில் உள்ள ஒரு இந்து நபர், பம்பாய்க்கு குடியேறினால். இந்து மதத்தில் திராவிட முறைக் கோட்பாடுகளே அவனுக்கு உரியதாகும்.

குடியேற்றத்தின் விளைவுகள்:

"இந்துச் சட்டம் ஒரு இனமுறைச் சட்டமே; அது தலம் சார்ந்ததல்ல" என்பதனால், ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்குக் குடியேறுபவர்களுக்குக் (Migration) குடியேறிய பகுதியின் மரபையும், நெறிகளையும் தழுவிக் கொள்ள உரிமை கிடையாது என்பது பொருள் அல்ல. விரும்புகிறவர்கள் தாராளமாக அவற்றைப் பின்பற்றலாம். ஆனால் பழைய முறையை முற்றிலும் விட்டுப் விட்டுப் புதிய முறையைத் தழுவிக் கொள்வதை நடைமுறையில் செய்து காட்டவேண்டும். அப்பகுதி மக்களும் அவர்கள் செய்யும் சடங்குகளைக் கொண்டு, அவர்கள் புதிய முறையை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்பதை அங்கீகரிக்க வேண்டும். தக்க ஆதாரத்தோடு புதிய முறை மேற்கொள்ளப்பட்டது குறித்து நிரூபிக்கப்பட்டால் தான், நீதிமன்றமும் அதனை ஏற்கும்.

முக்கிய வழக்குகள்:

Abdurahim v. Halimabai[1]

இவ்வழக்கில், ஒரு இந்து குடும்பம் இந்தியாவின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு குடியேறிச் செல்லுமிடத்து, அக்குடும்பம் தங்களது இன முறைச் சட்டத்தையும் (இந்துச் சட்டம்) அங்கு கொண்டு செல்கிறனர் என்றும், அவர்கள் அவ்வாறு குடியேறிச் செல்லும் இடத்தின் புதிய வட்டார வழக்கங்களுக்கு உட்பட்டவர்களாக மாறிவிட்டோம் என்று கூற வேண்டுமெனில், அப்புதிய வழக்கத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதைத் தெளிவாக மெய்ப்பிக்க வேண்டும் என்றும் பிரிவி கவுன்சில் நீதிமன்றம் கருத்துரைத்தது.

1. (1916) 43 I.A. 35, 41, 18 Bom. L.R. 635.

Arjunsingh v. Virendra[1]

இவ்வழக்கில், ஓர் இந்து, தான் எங்கு சென்றாலும் அவன் இந்துச் சட்டத்தையும், அதாவது அவன் எங்கிருந்து வருகிறானோ அந்த மாநிலத்தில் நிலவும் இறங்குரிமை மற்றும் குடும்ப உறவுகள் குறித்த சட்டங்களையும் வழக்கங்களையும் உடன் கொண்டு செல்கிறான் என அலகாபாத் உயர் நீதிமன்றம் மேலும் ஒரு படி உயர்த்திக் கூறியது.

5. Who is a Hindu? State the categories of persons to whom Hindu Law applies? (யார் இந்து? இந்துச் சட்டம் பொருந்தக்கூடிய நபர்களின் பிரிவுகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Explain the term 'Hindu' and to whom Hindu law is applied. ('இந்து' என்ற சொற்றொடரையும் இந்துச் சட்டம் யாருக்குப் பொருந்தும் என்பதையும் விளக்குக.)

(அல்லது)

Abraham v. Abraham 9 M.I.A. 105 - Write short notes.

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
இந்துக்களின் தோற்றம்
யார் இந்து?
- (1) பிறப்பால் இந்துக்கள்
  - Myna Boyee v. Ootaram
- (2) இந்து மதத்தின் கிளைப் பிரிவினர்கள்
- (3) இஸ்லாமியர்கள், கிறுத்தவர்கள், பார்சிக்கள் அல்லது ஜுக்கள் அல்லாத நபர்கள்
  - Raj Kumar v. Barbara
- (4) இந்து மதத்திற்கு மாறியவர்கள்
  - இந்து மதத்திற்கு மாறியவர்களும், இந்துக்களே - விளக்கம்
    - Mohandas v. Devaswom Board
  - இந்து மதத்திற்கே மீண்டும் மாறியவர்கள்
  - மத மாற்றத்தின் விளைவு
    - Abraham v. Abraham
    - Kamuwati v. Digbijai Singh

இந்துச் சட்டம் பொருந்தக் கூடிய பிரிவினர் - ஒரு தொகுப்புரை

1. A.I.R. 1971 All. 29

முன்னுரை:

இந்துச் சட்டம் யார் யாரைக் கட்டுப்படுத்தும், என்பதை நிர்ணயிக்க இந்துக்களின் தோற்றம் மற்றும் இந்து என்பவன் யார் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். சற்று விரிவாக வருமாறு.

இந்துக்களின் தோற்றம்:

பழங்கால தரும சாத்திரங்களிலோ, இலக்கிய நூல்களிலோ 'இந்து' என்பவன் யார் என்று தெள்ளத் தெளிவாக, தீர்மானமாக விளக்கப்படவில்லை. 'இந்து' என்ற சொல் 'சிந்து' எனும் சொல்லின் திரிபாக வந்திருக்கக் கூடும் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்கள் முதலில் சிந்து நதிச் சமவெளியில் குடியேறினார்கள் என்பது வரலாறு. சிந்து நதி பாயும் பகுதிகளையும் அதற்கு அப்பால் உள்ள நாடுகளையும் 'சிந்துஸ்தான்' என்று பெயரிட்டு அழைத்தார்கள். பாரசீகத்தைச் சேர்ந்தவர்கள் 'சி' யை 'ஹி' என்று உச்சரிப்பது வழக்கம். எனவே அவர்கள் 'சிந்துஸ்தான்' என்பதை 'ஹிந்துஸ்தான்' என்று அழைத்தார்கள். ஹிந்துஸ்தானில் வசிப்பவர்கள் ஹிந்துக்கள் என்று பெயரிடப்பட்டார்கள். இவ்வாறு **'இந்துக்கள்'** தோன்றினார்கள்.

யார் இந்து ?

இந்துக்கள் என்றழைக்கப்படுபவர்கள் பல்வேறு கடவுள்களை, வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வருகிறார்கள். இந்தியாவின் ஒரு பகுதியில் கொண்டாடப் படும் பண்டிகைகளும், விழாக்களும் அதன் மற்றொரு பகுதியில் அவ்வாறே கொண்டாடப்படுவதில்லை. எனவே, எல்லா இந்துக்களுக்கும் பொருந்தக் கூடிய பொதுவான அம்சங்கள் என்று சொல்லப்படுபவைகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. மேலும் இந்து மதத்தில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வருணங்கள் உண்டு. இந்த வருணங்கள் பல உட்பிரிவுகளைத் தோற்றுவித்துள்ளன. இந்த உட்பிரிவுகள் பல சாதிகளை உண்டாக்கியுள்ளன. இவை அத்தனைக்கும் இந்துச் சட்டம் உரியது. சுருங்கக் கூறின், ஆரியர்களின் வழித்தோன்றல்கள், இந்து தருமத்தைப் பின்பற்றும் ஆரியரல்லாதவர்கள், வைதிக வழியில் செல்லாதவர்கள், இந்து தருமத்தை ஏற்க மறுப்பவர்கள், இந்துவாக மாறியவர்கள் அனைவருக்கும் இந்துச் சட்டம் பொருந்தும். எனவே, மதத்தால் இந்துவாக இருப்பவன் மட்டுமல்லாது, மேற்கண்டவர்களும் இந்துக்களே. மேற்கண்ட நிலைப்பாட்டை சற்று விளக்கமாக பின்வருமாறு வகைப்படுத்திக் காண்போமா?

(1) பிறப்பால் இந்துக்கள் (Hindus by Birth):

தாய்–தந்தை இருவரும் இந்துக்களாக இருக்கும்பட்சத்தில், அவர்களுக்கு

பிறக்கும் குழந்தைகள் – அவர்கள் முறை மணப்பிறப்புக் குழந்தைகளாக இருந்தாலும் சரி (Legitimate children) அல்லது முறையற்ற மணப்பிறப்பு குழந்தைகளாக இருந்தாலும் சரி (Illegitimate children), இந்துக்களேயாவர். அவர்களுக்கு இந்துச் சட்டமே பொருந்தும். ஆனால் பெற்றோர்களில் ஒருவர் இந்துவாக இருந்து, மற்றொருவர் வேறொரு மதத்தினராக இருக்கும் பொழுது, அவர்களுக்கு பிறக்கும் குழந்தை இந்து மதத்தின்படி வளர்க்கப்பட்டால், அக்குழந்தையும் ஒரு இந்துவே. அதற்கும் இந்துச் சட்டமே பொருந்தும். இதை பின்வரும் முக்கிய வழக்கு விளக்குகிறது.

Myna Boyee v. Ootaram[1]

இவ்வழக்கில் ஒரு கைவிடப்பட்ட இந்துப் பெண்ணுடன் இங்கிலாந்தைச் சேர்ந்த கிறுத்தவர் ஒருவர் குடும்பம் நடத்தியதில், இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. அவர்கள் இந்து முறைப்படியே வளர்க்கப்பட்டனர். ஆனால் அவ்விரு குழந்தைகளில் ஒன்று இறந்து விடுகிறது. அச்சமயத்தில் பின்வரும் இரு கேள்விகள் எழுந்தன. அவை (1) அக்குழந்தைகளுக்கு எம்மதச் சட்டம் பொருந்தும்? (2) உயிருள்ள குழந்தை இறந்த குழந்தையின் சொத்தை எஞ்சுநர் உரிமைப்படி அடைய முடியுமா? வழக்கை ஆராய்ந்த பிரிவி கவுன்சில், பின்வருமாறு தீர்ப்புரைத்தது. முதற்கண், மேற்கண்ட இரு குழந்தைகளும் முறையற்ற மணப்பிறப்பு குழந்தைகளாகும். ஏனெனில் அவற்றின் தாய் ஒரு இந்து; தந்தை ஒரு கிறுத்தவர். எனினும் அவ்விரு குழந்தைகளும் இந்து மதப்படி வளர்க்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களுக்கு இந்துச் சட்டம்தான் பொருந்தும் என்று முதல் கேள்விக்கு பதிலிறுத்தியது. எனினும் இரண்டாவது கேள்விக்கு பதிலேதும் அளிக்காமல், அது குறித்து ஆய்ந்து முடிவெடுக்க, மேற்படி வழக்கை மீண்டும் கீழமை நீதிமன்றத்திற்கே திருப்பி அனுப்பிவிட்டது (remanded).

(2) இந்து மதத்தின் கிளைப் பிரிவினர்கள் (Offshots of Hinduism):

பௌத்த மதம், ஜைன மதம், சீக்கிய மதம் ஆகியவை இந்து மதத்தின் கிளைப் பிரிவுகளே ஆகும். இம்மதங்களெல்லாம், ஆரம்பத்தில் இந்துக்களாக தோன்றிய சமயப் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டவையாகும். எனவே, மேற்கண்ட மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் இந்துச் சட்டமே பொருந்தும். இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கும் இந்துச் சட்டமே பொருந்தும்.

அதுபோல் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், பிரார்த்தன சமாஜம் ஆகிய பிரிவினரைச் சார்ந்தவர்களுக்கும் இந்துச் சட்டமே பொருந்தும். மேலும் லிங்காயத்தினர், வீரசைவர்கள் ஆகியோருக்கும் இந்துச் சட்டமே பொருந்தக் கூடியதாகும்.

1. (1861) 8 M.I.A. 400 : Mayana Bai v. Uttaram (1864) 2 Mad. H.C. 196

(3) இஸ்லாமியர்கள், கிறுத்தவர்கள், பார்சிக்கள் அல்லது ஜுக்கள் அல்லாத நபர்கள் (Persons who are not Muslims, Christians, Parsis or Jews):

இஸ்லாமியர்கள், கிறுத்தவர்கள், பார்சிக்கள், ஜீக்கள் அல்லாத நபர் களுக்கும் இந்துச் சட்டம் பொருந்தக் கூடியதேயாகும். எனினும் மேற்படியார்கள் தங்களுக்கு இந்துச் சட்டம் பொருந்தாது என்று வாதிடுவார்களேயானால், அதை மெய்ப்பிக்க வேண்டிய கடமை அவர்களுடையதே.

Raj Kumar v. Barbara[1]

இந்து தந்தைக்கும், கிறுத்தவ தாய்க்கும் குழந்தையொன்று பிறந்தது. இங்கு அக்குழந்தை இந்து மதப்படி வளர்க்கப்பட்டது என்பதை காண்பிக்கக் கூடிய ஆதாரங்கள் ஏதுமில்லை. ஆனால் அதே சமயத்தில் அக்குழந்தை ஒரு கிறுத்தவ, பார்சி, இஸ்லாம் அல்லது ஜு மதத்தினராக வளர்க்கப்பட்டது என்பதைக் காண்பிப்பதற்கும் ஆதாரம் ஏதுமில்லை. எனவே கல்கத்தா (கொல்கொத்தா) உயர் நீதிமன்றம் அக்குழந்தை ஒரு இந்துவே ஆகும் என்று சரியாகத் தீர்ப்புரைத்தது.

(4) இந்து மதத்திற்கு மாறியவர்கள் (Converts to Hinduism):

இந்து மதத்திற்கு மாறியவர்களும், இந்துக்களே – விளக்கம்:

இந்துவாகப் பிறந்தவன் மட்டுமே இந்து எனப்படுவான்; அவ்வாறு பிறக்காதவன் இந்துவல்ல என்று முன்பு கருதப்பட்டது. அதாவது **'இந்து பிறக்கிறான்; உருவாவதில்லை' (A Hindu is born and not made)** எனப்பட்டது. ஆனால் இன்று மேற்படி கருத்திற்கு எவ்வித வலுவும் இல்லாது போய்விட்டது. ஏனெனில், பிறப்பால் இந்துவாக இல்லாத ஒருவன், பின்னிட்டு இந்து மதத்திற்கு மாறினால் அவனும் ஒரு இந்துவே. அவனுக்கு இந்துச் சட்டமே பொருந்தும் எனும் நிலை உருவாகியது.

அதாவது இன்று இந்து என்பவன் பிறப்பால்தான் இந்துவாக இருக்க வேண்டுமென்பதில்லை. மதத்தால் இந்துவாக இருக்க வேண்டும். சுருங்கக் கூறின், பிறப்பால் வேறுமதத்தைச் சார்ந்தவனாக உள்ள ஒருவன், பின்னர் இந்து மதத்தை தழுவிக் கொண்டால், அவனும் ஒரு இந்துவாகவே கருதப்படுவான். ஒருவன் தான் சார்ந்திருந்த மதத்திலிருந்து, இந்து மதத்தைத் தழுவிக் கொள்ள இன்னின்ன முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று ஸ்ருதிகளோ, ஸ்மிருதிகளோ எதுவும் கூறவில்லை. இந்தியாவில் நிலையாக இருத்தல், முந்தய மதத்தை வெளிப்படை யாகத் துறந்து இந்து மதத்தைத் தழுவுதல், இந்துப் பெயர் வைத்துக் கொள்ளல், இந்து சம்பிரதாயப்படி ஒரு இந்துவை திருமணம் செய்து கொள்ளல் ஆகியவற்றை பிற மதத்தினன் ஒருவன், இந்துவானதற்கான ஆதாரங்களாகக் கொள்ளலாம்.

1. AIR 1989 Cal. 165.

Mohandas v. Devaswom Board[1] – ஜேசுதாஸ் என்பவர் புகழ்பெற்ற திரைப்பட பின்னணிப் பாடகர். அவர் பிறப்பால் ஒரு கத்தோலிக்க கிறுத்தவர். ஆனால் அவர் சபரிமலை அய்யப்பன் கோவிலில் பக்திப் பாடல் பாடுவதை வழக்கமாகக் கொண்டவர். மேலும் அங்குள்ள இந்துக் கடவுள் விக்கரகத்தை (சபரிமலை அய்யப்பனை) வணங்குவதையும் வழக்கமாகக் கொண்டவர். மேலும், இந்து மதத்தின் மீது தனக்குள்ள பற்றையும், நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் வண்ணம் அவர் சட்டப்படி விளம்புகை ஒன்றையும் தாக்கல் செய்தார். இந்த விளம்புகை ஒன்றை அவர் இந்து மத நம்பிக்கையை ஏற்றுக் கொண்டார் என்பதைச் சுட்டிக் காட்டுவதாகவும், அவர், தான் பிறந்த கிறுத்தவ மதத்திலிருந்து ஒரு இந்துவாக மாறிவிட்டார் என்றும் கேரளா உயர் நீதிமன்றம் மேற்படி வழக்கில் தீர்ப்புரைத்தது.

இந்து மதத்திற்கே மீண்டும் மாறியவர்கள் (Reconverts to Hinduism):

இந்து மதத்தினராக இருந்து, பின்னிட்டு வேறு மதத்திற்கு மாறி, மீண்டும் இந்து மதத்தை தழுவியவர்களும் இந்துக்களே. அவர்களுக்கும் இந்துச் சட்டமே பொருந்தும்.

மத மாற்றத்தின் விளைவு (Effects of Conversion):

ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறியவர்களுக்கு எச்சட்டம் பொருந்தும் என்பது குறித்து பின்வரும் முக்கியமான வழக்கொன்றில் பிரிவி கவுன்சில் நீதிமன்றத்தால் விரிவாக விவாதிக்கப்பட்டது.

Abraham v. Abraham[2] – எம்.ஆப்ரஹாம் (M.Abraham) என்பாரின் மூதாதையர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பின்னிட்டு கிறுத்தவ மதத்திற்கு மாறிவிட்டனர். மேற்படி எம்.ஆப்ரஹாம் இறந்த பின்னர், அவரது மனைவி தனது கணவனுக்குச் சேர வேண்டிய சொத்துக்களைப் பெற வேண்டி, தனது கணவனின் சகோதரர் எஃப்.ஆப்ரஹாம் (F.Abraham) என்பவர் மீது வழக்கிட்டார். ஆனால் மேற்படி எஃப்.ஆப்ரஹாம், தங்களது மூதாதையர்கள் கிறுத்தவ மதத்திற்கு மாறிவிட்ட போதிலும், அவர்களுக்கு இந்துச் சட்டமே தொடர்ந்து பொருந்தும் என்றும், ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்திற்கு பொருந்தும் எஞ்சுநர் உரிமை குறித்த இந்துச் சட்டப்படி எஞ்சுநர் எனும் முறையில் தனக்கே முழுச் சொத்தும் உரியதாகும் (entitled to the entire property according to the Hindu Law of survivorship applicable to a joint Hindu family) என்றும் எதிர்வாதம் புரிந்தார்.

மேற்படி வழக்கை ஆய்ந்த பிரிவி கவுன்சில் நீதிமன்றம், பின்வரும் விதிகளை வகுத்தது. அவை (1) ஒரு இந்து, கிறுத்தவ மதத்திற்கு மாறியதன் விளைவாக,

1. 1975 K.L.T. 55
2. 1863 (9) M.I.A. 195

அவருக்கு இந்துக் குடும்பத்தில் உள்ள பந்தம் அறுந்து விடுகிறது. (2) அத்தகு ஒரு நபர், இந்துச் சட்டத்தை துறந்து விடலாம். ஆனால் அவ்வாறு துறக்க வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் கிடையாது. அவர் அவ்வாறு தனது பழைய மதத்தை துறந்துவிட்ட போதிலும், பழைய சட்டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அதற்குக் கட்டுப்பட்டு நடக்கலாம். (he may elect 'abide by the old law, notwithstanding that he has renounced the old religion'). (3) அவர் மதம் மாறிய பிறகு, அவர் எச்சட்டம் தம்மை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்பதை தேர்ந்தெடுத்துக் கொண்டதை சுட்டிக்காட்டுமாறு அவரது நடத்தை அமைய வேண்டும்.

மேற்கண்ட (3)–வது விதியின்படி ஆராய்கையில், மேற்படி எம்.ஆப்ரஹாம் என்பார், ஆங்கிலேயத் தந்தை ஒருவருக்கும், போர்ச்சுகீசிய நாட்டைச் சார்ந்த தாய் ஒருவருக்கும் பிறந்த ஒரு பெண்ணை மணந்து கொண்டுள்ளார். மேலும் அவர் ஆங்கிலேயப் பழக்க வழக்கங்களையும், உடைகளையும் ஏற்றுக் கொண்டுள்ளார். எனவே இதிலிருந்து அவர் இந்து மதத்தைத் தேர்ந்தெடுக்க வில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என்று கூறி, எஞ்சுநர் உரிமை குறித்த இந்துச் சட்டத்தின்படி தனக்கே சொத்து சேர வேண்டும் என்று எஃப்.ஆப்ரஹாம் செய்த வாதத்தை பிரிவி கவுன்சில் நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

ஆனால் கிறுத்தவர்கள் இறங்குரிமையின் அடிப்படையில் சொத்துக்களை அடைவதற்காக 1865–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய இறங்குரிமைச் சட்டமானது (Indian Succession Act, 1865), மேற்படி ஆப்ரஹாம் வழக்கில் பிரிவி கவுன்சில் கூறிய விதிகளைத் தேவையற்றனவாக ஆக்கிவிட்டது. இந் நிலைப்பாட்டை பின்வரும் மற்றொரு முக்கிய வழக்கொன்று எடுத்துக் காட்டுகிறது.

Kamuwati v. Digbijai Singh[1] – ஒருவர் இந்து மதத்திலிருந்து கிறுத்தவ மதத்திற்கு மாறினார். பின்னிட்டு அவர் இறந்துவிட்டார். அவருடைய சகோதரி, அவரது சொத்துக்களில் இறங்குரிமையின் அடிப்படையில் தனக்கும் பாகம் பெற உரிமையுள்ளது என்று மேற்படி 1865–ஆம் ஆண்டின் இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் தனது மற்றொரு சகோதரருக்கு எதிராக வழக்கிட்டார். ஆனால் அவர் தனக்குத்தான் முழுச் சொத்தும் உரிமையுடைய தாகும் என்று எதிர்வாதம் புரிந்தார். ஆனால் அவரது வாதத்தை நிராகரித்து விட்டு, அச்சகோதரிக்கு 1865–ஆம் ஆண்டின் இந்திய இறங்குரிமைச் சட்டத்தின்படி இறந்து போன சகோதரனின் சொத்துக்களில் 1/12 பாகம் பெற உரிமையுள்ளது என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

எனவே ஒரு மதத்திலிருந்து இந்து மதத்திற்கு மாறியவர்களும், மாறிச் சென்ற மற்றொரு மதத்திலிருந்து மீண்டும் இந்து மதத்திற்கே மாறியவர்களும் இந்துக்களே. அவர்களுக்கு இந்துச் சட்டமே பொருந்தும்.

1. 43 All. 525 (PC)

மேற்கண்டவற்றின் அடிப்படையில் இந்துச் சட்டம் பொருந்தக் கூடிய பிரிவினரை பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

இந்துச் சட்டம் பொருந்தக் கூடிய பிரிவினர் - ஒரு தொகுப்புரை:

(i) பிறப்பால் இந்துக்களானவர்;

(ii) இந்து பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தை (முறையற்ற மணப் பிறப்பாயினும் சரி);

(iii) இந்து தாயாருக்குப் பிறந்த முறையற்ற மணப்பிறப்பு குழந்தை (இந்துவாக வளர்க்கப்பட்டிருப்பின்);

(iv) பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், பிரார்த்தன சமாஜம் ஆகியவற்றை பின்பற்றுபவர்கள்;

(v) வீரசைவர்கள், லிங்காயத்து பிரினர்கள்;

(vi) பௌத்தர்கள், ஜைனர்கள், சீக்கியர்கள்;

(vii) இஸ்லாமிய, கிறுத்தவ, பார்சி, ஜு மதத்தைச் சாராத எவரும்;

(viii) இந்து மதத்திற்கு மாறியவர்கள்;

(ix) இந்து மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறிச் சென்று மீண்டும் இந்து மதத்திற்கே மாறியவர்கள்.

-o0o-

2 இந்துத் திருமணம் [Hindu Marriage]

அ. 1955-ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு இந்துத் திருமணங்களின் நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்]
A. The position of Hindu Marriages before the enactment of the Hindu Marriages Act, 1955 [Uncodified Law]

இந்துத் திருமணங்கள் குறித்து தொகுக்கப்படாத (பழைய) சட்டம் என்ன கூறுகிறது?– பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விபரங்கள்

முன்னுரை:

கிறுத்தவ மதமும் சரி, இஸ்லாமிய மதமும் சரி, திருமணத்தை ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகவே (contract) கருதுகின்றன. ஆனால் இந்து மதமானது, திருமணத்தை ஒரு புனிதமான சமயச் சடங்காக (sacramental nature) கருதுகிறது. இந்து மதம் திருமணத்தை, **'சமஸ்காரம்' (Samaskara)** என்று சொல்லப்படும் சமயச் சடங்குகளில் ஒன்றாகவே வைத்திருக்கிறது. உடலுறவிற்கு சமூக அங்கீகாரம் அளிக்கும் ஒரு சடங்கு என்பதை விடச் சமயச் சடங்கு என்பதற்கே தரும சாத்திரங்களில் அழுத்தம் தரப்பட்டிருக்கிறது.

பிறவியிலேயே மனிதனிடம் அமைந்துவிட்ட கறையைப் போக்கிக் தூய்மை யாக்கிக் கொள்ள மதம் காட்டும் ஒரு பாதையே திருமணம். இன்பம் அனுபவிப்பதும், குழந்தைகள் பெறுவதும் மட்டுமல்ல; அறநெறி ஒழுகுவதே திருமணத்தின் தலையாய நோக்கம். பிரம்மச்சரியத்தையோ அல்லது துறவறத்தையோ மேற் கொள்ளாத ஓர் ஆண், பெண்ணை மணந்து கொண்டு குழந்தைகளை ஈன்றெடுப்பது, அவன் விமோசனம் பெறுவதற்குச் செய்ய வேண்டிய மதக் கடமை யாகும் (Pious obligation). எனவே கணவன் – மனைவி உறவு ஒரு புனித இணைப்பாக கருதப்பட்டது.

இப்பிறவியில் ஏற்பட்ட கணவன் – மனைவி உறவு இனி வரும் ஏழேழு

பிறவிகளிலும் தொடரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான், இந்துப் பெண்கள் தங்கள் கணவனை இழந்தாலும், மறுமணம் (Remarriage) செய்து கொள்ளக் கூடாது என்று கட்டுப்பாடு வகுத்து வாழ்ந்தனர். இந்துத் திருமணம் ஒரு மதச் சடங்காக (உடலுறவிற்கு அப்பாற்பட்ட) கருதப்பட்டதால், பால்ய விவாகமும் (Child Marriage) அப்பொழுது நடைமுறையில் இருந்து வந்தது.

திருமண வகைகள் (Kinds of Marriage) :

முந்தைய இந்துச் சமூகத்தில் எட்டு வகைத் திருமணங்கள் வழக்கில் இருந்தன. ஆனால் அவற்றுள் 4 வகைத் திருமணங்கள் மட்டுமே அங்கீகரிக்கப் பட்டிருந்தன. விரிவாக வருமாறு:

அங்கீகரிக்கப்பட்ட திருமணங்கள் (Approved Marriages) :

(i) **பிரம்மா வகைத் திருமணம் (Brahma):** பெண்ணின் தகப்பன் மணமகனிடமிருந்து எதையுமே பெற்றுக் கொள்ளாமல் தானமாக அவனுக்குப் பெண்ணைக் கொடுத்தல்.

(ii) **தெய்வா வகைத் திருமணம் (Daiva):** பெண்ணின் தகப்பன் முதலில் மதச் சடங்கு செய்யும் புரோகிதருக்குப் பெண்ணைத் தானமாகக் கொடுத்து, பின் புரோகிதர் அப்பெண்ணை மணமகனுக்குத் தானமாகக் கொடுப்பது தெய்வ வகைத் திருமணமாகும்.

(iii) **அர்ஷா வகைத் திருமணம் (Arsha):** பெண்ணின் தகப்பனுக்கு இரண்டு மோதிரத்தை மணமகன் கொடுத்து அப்பெண்ணை மணமுடிப்பது.

(iv) **பிரஜாபத்ய வகைத் திருமணம் (Prajapatya):** இது பிரம்மா வகைத் திருமணத்தைப் போன்றதுதான். எனினும் பெண்ணின் தகப்பன் "மணமக்கள் இருவரும் மதக் கடமைகளையும் சமூகக் கடமைகளையும் (திருமணத்திற்கு பின்) செய்து வாழ்க்கை நடத்த வேண்டும்" என திருமணத்தின் போது ஆசி கூறுவார்.

அங்கீகரிக்கப்படாத திருமணங்கள் (Unapproved Marriages) :

(v) **அசுரா வகைத் திருமணம் (Asura):** பெண்ணின் தந்தை, மணமகனிடமிருந்து ஏதேனும் ஒரு தொகையை பரிசுப் பணமாகப் பெற்றுக் கொண்டு, தனது மகளை மணமுடித்துத் தருதல்.

(vi) **காந்தர்வத் திருமணம் (Gandharva):** தற்காலத்தில் "காதல் திருமணம்" என்பதே அப்பொழுது காந்தர்வத் திருமணமாக விளங்கியது.

(vii) ராட்சச வகைத் திருமணம் (Rakshasa): பலாத்காரமாக பெண்ணை கடத்திச் சென்று மணம் முடித்தல்.

(viii) பைசாச வகைத் திருமணம் (Pisasa): ஒரு பெண்ணை நினைவிழக்கச் செய்து உறக்கத்தில் இருக்கும் பொழுது அல்லது போதைக்குட்படுத்தி, அவளுடன் பலாத்காரமாக உடலுறவு எவரேனும் கொண்டால், அவன் அப்பெண்ணை கட்டாயம் மணமுடித்துக் கொள்ள வேண்டும் என பண்டைய இந்துச் சட்டத்தின் நெறிகள் கூறுகின்றன. இவ்வகைத் திருமணமே பைசாச வகைத் திருமணம் எனப்படுகிறது.

இந்துத் திருமணத்திற்கான முக்கியச் சடங்குகள்:

திருமணம் செய்வதில் சில சடங்குகள் உண்டு. அந்தச் சடங்குகள் பூர்த்தியானால்தான் திருமணம் நடந்ததாகப் பொருள் கொள்ளப்படும். அவை வருமாறு:

(i) திருமணத்திற்கு முன் செய்யப்படும் நிச்சயதார்த்தம்.

(ii) ஹோமம் முன்னால் மந்திரம் ஒதுதல்.

(iii) மணமக்கள் ஹோமத் தீயை சுற்றி ஏழு அடி எடுத்து வைத்து வலம் வருதல்.

மேற்கண்டவற்றில் நிச்சயதார்த்தம் என்பது திருமணம் செய்வதாக இரு தரப்பினரும் வாக்களித்துக் கொள்வதாகும். இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இரண்டாவது சடங்கான ஹோமம் முன்னால் மந்திரம் ஒதுதல், கன்னிகாதானம் செய்வதும் கூட உண்மையில் திருமணத்தை முழுமையாக்கி விட்டதாகச் சொல்ல முடியாது. மூன்றாவது சடங்கான, மணமக்கள் ஹோமத்தீயை (புனிதத்தீயை) சுற்றி ஏழு அடி எடுத்து வைத்து வலம் வருதல்தான் ஒரு திருமணத்தை முழுமையாக்கும். இது மிகவும் முக்கியமானதொரு சடங்காகும். இதைச் 'சப்தபதி' [Saptapati (or) Saptapadi] என்பர்.

திருமணத் தகுதிகள்:

1. உரிமை வயது அடையாமை (Minority) : இந்து சாத்திரப்படி திருமணம் ஓர் ஒப்பந்தம் அன்று. அது ஒரு மதக் கடமையாகும். எனவே திருமணத்திற்கு முன்பு ஒருவன் உரிமை வயது அடைந்திருக்கிறானா இல்லையா என்பது முக்கியமல்ல. அவன் எந்தச் சிறு வயதிலும் மணந்து கொள்ளலாம். எனவே பால்ய விவாகம் (Child Marriage) நடைமுறையில் இருந்து வந்தது. (ஆனால் 1929-ல் இயற்றப்பட்ட பால்ய விவாகத் தடுப்புச் சட்டம் இந்நிலையை

நீக்கி விட்டது. எனினும் அதற்கு முன்பு நடைபெற்ற திருமணங்களை இச்சட்டம் எவ்விதத்திலும் பாதிக்காது. அது செல்லத்தக்கதாகவே கருதப்படும்.)

2. பித்துநிலை (Lunacy) : மணமக்களில் எவரொருவரும் புத்தி சுவாதீனம் அற்றவராக இருத்தல் கூடாது.

3. ஆண்மையற்ற நிலை (Impotency) : திருமணத்தின் பொழுது மணமகன் கரு உண்டாக்கக்கூடிய சக்தி உடையவனாக, ஆண்மையுடையவனாக இருத்தல் வேண்டும். ஏனெனில் திருமணம் உடலுறவுக்காக மட்டுமல்ல; குழந்தைகளை ஈன்றெடுக்க வேண்டியதும் அதன் தலையாய நோக்கமாகும்.

4. மத வழித் தகுதியின்மைக்கான காரணங்கள் (Religious Disabilities): அதாவது மணமக்கள் திருமணம் செய்து கொள்வதற்கு மத வழிப்படி தகுதி பெற்றிருக்க வேண்டும். அவை விரிவாக பின்வருமாறு.

மதவழித் தகுதியின்மை (Religious Disabilities) :

(i) ஒரே சாதியில்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். சாதி மாறி திருமணம் செய்யக்கூடாது. எனினும் கலப்புத் திருமணங்கள் நடை பெற்றே வந்திருக்கின்றன. கலப்புத் திருமணத்தில் அனுலோமம் (Anuloma), பிரதிலோமம் (Pratiloma) என்று இருவகை உண்டு. அனுலோமம் என்பது உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவன் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த பெண்ணை மணந்து கொள்வது; பிரதிலோமம் என்பது உயர் சாதிப் பெண்ணுக்கும் கீழ் சாதி ஆணுக்கும் நடக்கும் திருமணமாகும். (ஆனால் சிறப்புத் திருமண திருத்தச் சட்டம், 1923 இந்த வேறுபாடுகளை அகற்றி விட்டது. இந்தச் சட்டப்படி ஜாதி பாகுபாடு இல்லாமல் மணந்து கொள்ளலாம்.)

(ii) ஒரே கோத்திரத்தை அல்லது பிரவரத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. பிராம்மணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வருணத்தினர் தங்கள் குடும்பத்தை நிறுவியவர் என்று ஒரு முனிவரைக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முனிவர்கள் எட்டு பேர். அவர்கள் ஒவ்வொருவர் பெயராலும் ஒரு கோத்திரம் தோன்றியது. கோத்திரங்களை நிறுவிய எட்டு முனிவர்களின் மூன்று நேர்வழி ஆண் மூதாதையர்கள் பிரவரா (Pravara) என்று அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. அப்படி நடக்கும் திருமணம் செல்லாது. இந்த விதிகள் எல்லாம் முதல் மூன்று வருணத்தவருக்குத்தான்; நான்காவது வருணத்தவரான சூத்திரர்களுக்குக் கிடையாது. (ஆனால் பின்னால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் இந்த விதிகளை எல்லாம் பயனற்றதாக்கி விட்டன. ஒரே கோத்திரத்திலும் ஒரே சாதியின்

உட்பிரிவிலும் நடந்த திருமணங்கள் செல்லும் என்று இந்துத் திருமணச் தகவின்மை நீக்கச் சட்டம் (Hindu Marriage Disabilities Removal Act, 28 of 1946) அறிவித்தது. இச்சட்டம் 1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் 30--வது பிரிவினால் நீக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக, மேற்படி 1955–ஆம் ஆண்டின் சட்டத்திலேயே பிரிவு 5–ன் வாயிலாக, மேற்படி திருமணங்கள் வழக்கத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.)

(iii) சபிண்டா உறவு முறையில் உள்ளவர்கள் (Sapinda Relationship) திருமணம் செய்து கொள்ளக் கூடாது. தாய் வழியில் ஐந்து தலைமுறை வரையிலும், தந்தை வழியில் ஏழு தலைமுறை வரையிலும் உள்ள உறவே சபிண்டா உறவாக கருதப்படும். அதாவது ஒருத்தி தாய் வழியில் அய்ந்து தலைமுறையும் தந்தை வழியில் ஏழு தலைமுறையும் வராதவளாக இருந்தால் அவளை மணந்து கொள்ளலாம். அப்படி வந்துவிட்டால் மணமக்களின் மூதாதையர் ஒருவராக, ஒரே பிண்டத்தைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும். ஆகவேதான் இத்தடை. (ஆனால் வழக்கம் அனுமதித்தால் அவ்வாறு திருமணம் செய்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, சகோதரியின் மகளையும், தந்தையின் சகோதரி மகளையும், தாயின் சகோதரனின் மகளையும் மணம் புரியும் வழக்கம் தென்னிந்தியாவில் உண்டு.)

ஆ. 1955-ஆம் ஆண்டின் இந்துத் திருமணச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு இந்துத் திருமணங்களின் நிலை [தொகுக்கப்பட்ட (புதிய) சட்டம்]

B. The position of Hindu Marriages after the enactment of the Hindu Marriage Act ,1955 [Codified Law]

1955–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டத்தின் வகைமுறைகள்– பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டியவை

முன்னுரை:

1955–ஆம் ஆண்டு மே திங்கள் 18–ஆம் நாளில் இந்துத் திருமணச் சட்டம் அமலுக்கு வந்தது. இந்தச் சட்டம் இந்துத் திருமணம் பற்றி வழக்கில் இருந்து வந்த பல சட்டங்களின் திருத்தத்துடன் கூடிய தொகுப்பாகும். இச்சட்டம்

திருமணம் குறித்து இந்துக்கள் கொண்டிருந்த மதக் கண்ணோட்டத்தில் மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தின. அதாவது மதத்தின் பிடிப்பு வெகுவாகத் தளர்த்தப்பட்டது.

இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு இந்துத் திருமணங்கள் கலைக்கப்பட முடியாத ஒரு புனித இணைப்பாக இந்து தரும சாத்திரங்கள் கூறின. ஆனால், இப்புதிய சட்டம் நீதிமுறைப் பிரிவிற்கும் (Judicial Separation), மண முறிவிற்கும் (விவாகரத்திற்கும்) (Divorce) அனுமதி கொடுத்தது. இதனால் மனமொத்து வாழ முடியாத தம்பதிகள் பிரிந்து, வேறு மண வாழ்வில் ஈடுபடலாம். மேலும் ஜாதியோ, கோத்திரமோ, பிரவரமோ திருமணத்திற்கு ஒரு தடையாக இல்லாதவாறு வழி செய்யப்பட்டது. எனவே இந்துத் திருமண பந்தம் ஒரு புனித இணைப்பு என்ற பழைய நிலை மாறி விட்டது. அதில் புனிதத்துவம் குறைந்து விட்டது. விரும்புவோர் புனிதத்துவத்தையும், மதச் சடங்குகளையும் பின்பற்றலாம்.

சட்ட வகைமுறைகள் - 30 பிரிவுகள்:

பிரிவு 1 : 1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் என்றழைக்கப்படும், இச்சட்டம் ஜம்மு – காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் பொருந்தும். இந்தியாவை வாழ்வகமாகக் (domiclied) கொண்ட, ஆனால் வெளிநாட்டில் வாழும் இந்துக்களுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

பிரிவு 2 : மதத்தால் இந்துவாக இருப்பவர் அனைவருக்கும், அது எந்த வடிவில் அல்லது வளர்ச்சி நிலையில் இருந்தாலும், அவர்களுக்கு இச்சட்டம் பொருந்தும். வீரசைவர், லிங்காயத்து பிரிவைச் சார்ந்தவர்கள் மற்றும் பிரம்ம சமாஜம், பிரார்த்தன சமாஜம், அல்லது ஆரிய சமாஜ பிரிவை பின்பற்றுபவர் களுக்கும் பொருந்தும். புத்த, ஜைன அல்லது சீக்கிய மதத்தினருக்கும் பொருந்தும். இஸ்லாமிய, கிறுத்தவ, பார்சி அல்லது ஜு மதத்தை சாராத எவருக்கும் இச்சட்டம் பொருந்தும். மதத்தால் இந்துக்களாவும், பௌத்தர்களாகவும், ஜைனர்களாகவும், சீக்கியர்களாகவும் உள்ள பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கும் – அவர்கள் முறைமணப் பிறப்பு குழந்தைகளாக இருந்தாலும் சரி அல்லது முறையற்ற மணப்பிறப்பு குழந்தைகளாக இருந்தாலும் சரி, இச்சட்டம் பொருந்தும்.

பிரிவு 3 : சில சொற்களுக்கு வரையறை தருகிறது.

பிரிவு 4 : இச்சட்டம் மேலோங்கு செல்திறம் (overriding) வாய்ந்தது.

பிரிவு 5 : திருமணத்திற்கான நிபந்தனைகளைப் பற்றி கூறுகிறது.

பிரிவு 6 : திருமணத்தில் காப்பாளர் நிலை (நீக்கப்பட்டு விட்டது.)

பிரிவு 7 : ஒரு இந்துத் திருமணம் நடத்துவதற்கான சடங்குகளைப் பற்றி இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 7A : சுயமரியாதை மற்றும் சீர்திருத்த திருமணங்களுக்குண்டான சிறப்பு வகைமுறையை இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 8 : இந்துத் திருமணங்களைப் பதிவு செய்தல்.

பிரிவு 9 : தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கக் கோரல்.

பிரிவு 10 : நீதிமுறைப் பிரிவு.

பிரிவு 11 : இல்லாநிலை திருமணம்.

பிரிவு 12 : தவிர்தகு திருமணம்.

பிரிவு 13 : மணமுறிவு மற்றும் அதற்கான அடிப்படைகளைப் பற்றி இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 13A: மணமுறிவு நடவடிக்கைகளில் மாற்றுத் தீர்வழி.

பிரிவு 13B: பரஸ்பர இசைவின் பேரில் மணமுறிவு.

பிரிவு 14 : திருமணம் நடந்து ஓராண்டிற்குள் மணமுறிவிற்காக மனு ஏதும் கொடுக்கப்படுதல் ஆகாது என்று இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 15 : மணமுறிவிற்குப் பின் எப்பொழுது மறுமணம் செய்து கொள்ளலாம் என்று இப்பிரிவு விளக்கமளிக்கிறது.

பிரிவு 16 : இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணங்களின் வாயிலாக பிறந்த குழந்தைகளின் சட்டநிலை குறித்து இப்பிரிவு விளக்குகிறது.

பிரிவு 17 : இருதார மணத்திற்குண்டான தண்டனை.

பிரிவு 18 : ஒரு இந்து திருமணத்திற்குண்டான வேறு சில நிபந்தனைகள் மீறப்படும் பொழுது, அதற்குண்டான தண்டனையைப் பற்றி இப்பிரிவு விளக்குகிறது.

பிரிவு 19 : மனுச் செய்ய வேண்டிய நீதிமன்றத்தைப் பற்றி விவரிக்கிறது.

பிரிவு 20 : மனுக்களின் உள்ளடக்கங்கள் மற்றும் சரிபார்த்தல்.

பிரிவு 21 : 1908–ஆம் ஆண்டின் உரிமையியல் நடைமுறைச் சட்டமானது, இச்சட்டத்தின் எல்லா நடவடிக்கைகளையும் முறைப்படுத்தக் கூடியது என்று இப்பிரிவு விளக்குகிறது. (எனினும் இது சில வகைமுறைகளுக்குட்பட்டது.)

பிரிவு 21A: சில நேர்வுகளில் மனுக்களை மாற்றுவதற்குள்ள அதிகாரம்.

பிரிவு 21B : இச்சட்டத்தின் கீழ் மனுக்களை விசாரித்தல் மற்றும் முடித்தல் தொடர்பான சிறப்பு வகைமுறைகளை இப்பிரிவு விளக்குகிறது.

பிரிவு 21C : ஆவண சாட்சியம் பற்றி இப்பிரிவு குறிப்பிடுகிறது.

பிரிவு 22 : மண வழக்கு நடைமுறைகள் தனியறையில் மறைவாக (Incamera) நடத்தப்பட வேண்டும் என்றும், அவை பிரசுரிக்கப்பட அல்லது வெளியிடப்படக் கூடாது என்று இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 23 : வழக்கு நடவடிக்கைகளில் தீர்ப்பாணை.

பிரிவு 24 : வழக்கிடைப் பராமரிப்பு மற்றும் வழக்கு நடவடிக்கைகளுக்குண்டான செலவுகள். (Maintenance pendente lite and expenses of proceedings).

பிரிவு 25 : நிரந்தரப் பராமரிப்பு (Permanent alimony)

பிரிவு 26 : குழந்தைகளைக் காக்கும் பொறுப்பு (Custodian of Children) பற்றி இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 27 : சொத்திற்கு வகை செய்தல் பற்றி இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 28 : தீர்ப்பாணைகள் மற்றும் உத்தரவுகளிலிருந்து மேல் முறையீடுகள் செய்வது பற்றி இப்பிரிவு விளக்குகிறது.

பிரிவு 28A: தீர்ப்பாணைகள் மற்றும் உத்தரவுகளை செயற்படுத்தல்.

பிரிவு 29 : விலக்குகள்

பிரிவு 30 : இது இச்சட்டத்தின் இறுதிப் பிரிவு ஆகும். இது இச்சட்டம் அமலானதால் எந்தெந்த சட்டங்கள் நீக்கம் செய்யப்பட்டன என்பதைக் கூறுகிறது.

இந்துத் திருமணத்தில் சட்டத்தால் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள்

1. "The sacramental nature of a Hindu marriage has been completely changed by modern legislation" - Comment. ("இந்து திருமணத்தின் புனிதத் தன்மை நவீன சட்டங்களால் முழுமையாக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது" – உரையெழுதுக.)

(அல்லது)

Discuss the changes introduced by the Hindu Marriage Act of 1955. (1955–ஆம் ஆண்டின் இந்துத் திருமணச் சட்டத்தால் கொண்டு வரப்பட்ட மாற்றங்களை விவாதிக்க.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
இந்துத் திருமணத்தில் மாற்றங்கள்
முடிவுரை

முன்னுரை :

பண்டைய இந்து தரும சாத்திரப்படி, ஒரு இந்துத் திருமணம் புனிதத்துவம் நிறைந்ததாகவும், மதக் கடமையாகவும் கருதப்பட்டது. ஒரு இந்து, திருமணம் செய்த பின்தான் முழு மனிதன் ஆகிறான் என்று கூறப்பட்டது. மேலும் இந்துத் திருமணம் ஒரு மதச்சடங்காக இருந்தது. நடைபெற்று விட்ட ஒரு இந்துத் திருமணத்தை கலைக்க முடியாதென்றும், அத்திருமண பந்தம் அடுத்த பிறவியிலும் தொடரும் என்ற நம்பிக்கையும் இருந்தது. இதனால் மறுமணம் செய்து கொள்வது தடுக்கப்பட்டிருந்தது. மேலும் ஒரே சாதியில்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஆனால் ஒரே கோத்திரத்தையோ அல்லது பிரவரத்தையோ சார்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. மணமக்கள் தடுக்கப்பட்ட உறவு முறையில் வருபவர்களாக இருக்கக்கூடாது. சபிண்டா உறவினர்களாக இருக்கக்கூடாது. சப்தபதி போன்ற திருமணச் சடங்குகள் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். இவ்வாறு பழைய இந்துத் திருமணமானது ஒரு மதச் சடங்காகவே இருந்தது.

ஆனால் 1955–ல் இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டமும் மற்றும் பிற நவீன சட்டங்களும் இந்துத் திருமணத்தின் புனிதத் தன்மையை குறைத்து விட்டது என்றே கூறலாம். ஏனென்றால், இப்புதிய சட்டத்தில் மணமொத்து வாழ முடியாத தம்பதியினர் பிரிந்து சென்று மறுமணம் செய்து கொள்ள வகை செய்யப் பட்டுள்ளது. நீதிவழிப் பிரிவு, மணமுறிவு ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் எந்தெந்த வகையில் இப்புதிய சட்டம் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது என்பதை பின்வருமாறு காண்போம்.

இந்துத் திருமணத்தில் மாற்றங்கள் (Changes):

(1) முன்பிருந்த 8 வகைத் திருமணங்கள் நீக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறையில் மங்கல நாண் அணிவித்து செய்து கொள்ளப்படும் ஒரே வகைத் திருமணம்தான் நடைமுறையில் உள்ளது.

(2) இந்து சாத்திரப்படி திருமணம் ஓர் ஒப்பந்தம் அன்று. அது ஒரு மதச் சடங்காகும். ஆகவே மணமக்கள் எந்தச் சிறு வயதிலும் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. இதனால் பால்ய விவாகங்கள் நடைபெற்றன.

ஆனால் 1929-ல் இயற்றப்பட்ட பால்ய விவாகத் தடுப்புச் சட்டமும் (Child Marriage Restraint Act), 1955-ல் இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டமும் பால்ய விவாகத்தை தடை செய்தது. இதனால் ஆணின் திருமண வயது 21 ஆகவும் பெண்ணின் திருமண வயது 18 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

(3) பழைய சட்டத்தில் சாதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருந்தது. ஒரே சாதியில் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால் 1923-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் (திருத்தச்) சட்டம், இந்நிலையை நீக்கியது. மேலும் 1955-ன் புதிய சட்டமும், இந்துக்கள் என்போருக்கிடையே சாதி வித்தியாசமில்லாமல் திருமணத்தை அங்கீகரித்தது. (பிரிவு 29)

(4) திருமணத்தில் கோத்ர மற்றும் பிரவர முறைக்கும், சபிண்டா உறவு முறைக்கும் (தடுக்கப்பட்ட உறவு முறையினர்) கொடுக்கப்பட்டிருந்த முக்கியத்துவம் குறைக்கப்பட்டு, வழக்கம் எவ்வாறு திருமணத்தை அங்கீகரிக்கிறது என்பதற்கு அதிக முக்கியத்துவம் புதிய சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

(5) 1955-ன் புதிய சட்டத்தின் 5-வது பிரிவில் திருமணத்திற்கு தேவையான அடிப்படை நிபந்தனைகள் விளக்கப்பட்டுள்ளன. இவற்றை மீறி செய்து கொள்ளப்படும் திருமணம் இல்லாநிலை (void) திருமணமாகவும், தவிர்தகு (voidable) திருமணமாகவும் அறிவிக்கப்படும்.

(6) முன்னர், திருமணம் மதச் சடங்கின்றி நடைபெற்றால் அது செல்லு படியாகாது என்ற நிலை இருந்தது. ஆனால் இப்பொழுது மணமக்கள் விரும்பி னால் மத ஒழுங்குப்படியோ அல்லது சீர்திருத்த முறைப்படியோ திருமணம் செய்து கொள்ளலாம். (சுயமரியாதைத் திருமணம் – 1955-ன் புதிய சட்டத்தின் பிரிவு 7A).

(7) முன்பு ஒரு ஆண் பல பெண்களை முதல் மனைவி உயிருடன் இருக்கும்பொழுதே திருமணம் செய்து கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் இப்பொழுது ஒரு ஆண், தன் மனைவி உயிருடன் உள்ள பொழுது, நீதிமன்றத்தில் விவாகரத்துப் பெறாமல் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(8) முன்பு திருமணத்தை கலைக்க முடியாது என்றும், தம்பதியரை பிரிக்க முடியாது என்றும் கருதப்பட்டது. ஆனால் இப்பொழுது, 1955-ன் புதிய சட்டமானது, சேர்ந்து வாழ விருப்பமில்லாத தம்பதியினரை நீதிமன்ற அனுமதியுடன் பிரிந்து வாழ வழி வகுத்துக் கொடுத்துள்ளது. இதற்காக நீதிமுறைப் பிரிவு (Judicial Separation), விவாகரத்து (Divorce) போன்ற தீர்வழிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மேலும் இவ்வாறு பிரிந்த மனைவி கணவனிடமிருந்து பராமரிப்புத் தொகை (Maintenance) கோரவும் வகை செய்யப்பட்டுள்ளது.

(9) முன்பு திருமணங்களை பதிவு செய்தல் நடைமுறையில் கிடையாது. தற்பொழுது விரும்பினால் பதிவு செய்து கொள்ளலாம்.

(10) திருமணங்கள் குறித்து நீதிமன்றம் கொடுக்கும் தீர்ப்பே முடிவான தாகும்.

முடிவுரை :

மேற்கண்ட மாற்றங்களைக் காண்கையில், இந்துத் திருமணத்தின் புனிதத் தன்மை முழுமையாக மாற்றப்பட்டுள்ளது கண்கூடாகப் புலனாகும். இந்துத் திருமணத்தின் புனித்தன்மை மறைந்து, அது இன்றைய நவீன சட்டங்களால் ஒரு ஒப்பந்தமாக ஆக்கப்பட்டுள்ளது என்று கூறினால் அது மிகையன்று.

2. Child Marriage Restraint Act, 1929 - Write short notes. (1929–ஆம் ஆண்டு குழந்தைத் திருமண தடைச் சட்டம் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Child Marriage - Write short notes. (குழந்தைத் திருமணம் – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின் நோக்கம்
எவ்வயதிற்குள் செய்யப்படும் திருமணம், குழந்தைத் திருமண மாகும்?
திருமண வயது குறித்து இந்து திருமணச் சட்டம், 1955
முடிவுரை

குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின் நோக்கம்:

இந்து சாத்திரப்படி திருமணம் ஓர் ஒப்பந்தமன்று. அது ஒரு மதச் சடங்காகும். ஆகவே மணமக்கள் எந்தச் சிறு வயதிலும் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற நிலை முன்பு இருந்தது. இதனால் பால்ய விவாகங்கள் அதாவது குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றன. ஆனால் இந்தகு திருமணங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்காக 1929–ஆம் ஆண்டில் பால்ய விவாகத் தடைச் சட்டம் (அதாவது குழந்தைத் திருமண தடைச் சட்டம்) இயற்றப்பட்டது. (The Child Marriage Restraint Act, 1929). பின்னர் இச்சட்டம் 1978–ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது [The Child Marriage Restraint (Amendment) Act, 1929]. இது இந்து திருமணச் சட்டத்திலும் சில முக்கியத் திருத்தங்களை கொண்டு வந்தது.

எவ்வயதிற்குள் செய்யப்படும் திருமணம், குழந்தைத் திருமணமாகும்?

ஆரம்பத்தில் இச்சட்டத்தின்படி திருமணம் செய்து கொள்வதற்கு மணமகனுக்கு குறைந்தபட்சம் 18 வயதும், மணமகளுக்கு 15 வயதும் இருக்க வேண்டும். ஆனால் பின்னிட்டு 1978–ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்தின்படி மேற்படி வயது முறையே மணமகனுக்கு 21 என்றும், மணமகளுக்கு 18 என்றும் உயர்த்தப்பட்டது. எனவே மேற்படி சட்டத்தின்படி 21 வயதிற்கு குறைந்த ஒரு ஆணும், 18 வயதிற்கு குறைந்த ஒரு பெண்ணும் குழந்தைகளே. இவர்கள் செய்து கொள்ளும் திருமணம் தடை செய்யப்பட்டதாகும். மேலும் ஒரு வயதடைந்த ஆண் (male adult) மேற்படி வயதிற்குள் உள்ள ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டால், அவருக்கு மேற்படி சட்டம் தண்டனை விதிக்கிறது. **(பிரிவுகள் 3 மற்றும் 4).** அதுபோல் குழந்தை திருமணத்திற்கு அனுமதிக்கும் சம்பந்தப்பட்ட குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரையும் மேற்படி சட்டம் தண்டிக்கிறது. **(பிரிவு 6).**

திருமண வயது குறித்து இந்து திருமணச் சட்டம், 1955:

மேலும் 1955–ல் இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டத்தின் பிரிவு 5(iii)–ஆனது, ஒரு இந்து திருமணத்திற்குரிய நிபந்தனைகளில் ஒன்றாக மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் நிரம்பியிருக்க வேண்டும் என்று கூறுகிறது. [இது குழந்தைத் திருமணத் தடை (திருத்தச்) சட்டம், 1978 செய்த திருத்தம்].

முடிவுரை :

வாழ்க்கையின் போக்கை உணர அதற்குரிய வயது வர வேண்டும். அறியாப் பருவத்தில் செய்யப்படும் திருமணத்தால் மனமும், உடலும் பாதிக்கப் படுகிறது. எனவே உரிய திருமண வயதை அடைந்த பிறகே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று மேற்படி குழந்தைத் திருமணச் சட்டம் மறைமுகமாகவும் இந்து திருமணச் சட்டம் மேற்கண்டவாறு நேர்முகமாகவும் வலியுறுத்துகிறது.

ஒரு செல்லத்தக்க இந்துத் திருமணத்திற்கான நிபந்தனைகள்

3. State the conditions of a valid Hindu Marriage. Explain the consequences of violation of these conditions. (செல்லத் தக்க இந்து திருமணத்திற்கான நிபந்தனைகளைக் கூறுக. இத்தகைய நிபந்தனைகளை மீறினால் ஏற்படும் விளைவுகளை விளக்குக.)

(அல்லது)

What are the requisites for a valid Hindu marriage under the Hindu Marriages Act, 1955 ? What is the effect of their violation of each one of such requisites? (1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் கீழ் செல்லத்தக்க திருமணத்திற்கு தேவையான கூறுகள் யாவை? அக்கூறுகளுள் ஒவ்வொன்றையும் மீறினால் உண்டாகும் விளைவு யாது?)

நினைவுக் குறிப்புகள் [Hints]

செல்லத்தக்க இந்துத் திருமணத்திற்கான நிபந்தனைகள்
நிபந்தனைகளை மீறினால் ஏற்படும் விளைவுகள்

செல்லத்தக்க இந்துத் திருமணத்திற்கான நிபந்தனைகள் (The conditions of a valid Hindu Marriage) :

1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் **5–வது பிரிவானது,** பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், இந்துக்கள் இருவரிடைக்கிடையிலான திருமணத்தை நடத்தி வைக்கலாம், என்று கூறுகிறது. அப்பொழுதுதான் அத்திருமணமும் ஒரு செல்லத்தக்க திருமணமாகும். அந்நிபந்தனைகளாவன:–

பிரிவு 5 (i)-ன்படி, திருமணம் செய்து கொள்ளும் நபருக்கு திருமணம் நடைபெறும் காலத்தில் வேறு மனைவியோ அல்லது கணவனோ உயிருடன் இருக்கக் கூடாது.

பிரிவு 5 (ii)-ன்படி, திருமணமாகும் சமயத்தில் மணமக்களில் எவரேனும் ஒருவர்,

(a) அத்திருமணத்திற்கு செல்லத்தக்க ஒப்புதல் (valid consent) கொடுக்க முடியாத அளவிற்கு பித்து நிலையராக (unsound of mind) இருக்கக் கூடாது; அல்லது

(b) அத்திருமணத்திற்கு செல்லத்தக்க ஒப்புதல் கொடுக்க. முடிந்த போதிலும், மூளைக் கோளாறு (mental disorder) காரணமாக அவர் திருமணம் செய்து கொள்ளத் தகுதியற்றவராகவும், குழந்தை பெற்றெடுக்கத் தகுதியற்றவராகவும் இருத்தல் கூடாது; அல்லது

(c) விட்டு விட்டு தாக்கக்கூடிய புத்தி பேதலிப்பு (insanity) நோய்க்குட்பட்டவராக[1] இருத்தல் கூடாது.

---

1. முன்னதாக மேற்படி பிரிவு 5 (ii) (c)-யில் மணமக்களில் ஒருவர் 'கைகால் வலிப்பு' **(epilepsy)** நோய்குட்பட்டவராக இருத்தல் கூடாது என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால் இந்நிபந்தனை 1999-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட திருத்தச் சட்டத்தினால் நீக்கப்பட்டுவிட்டது. இந்த நீக்கம் 29-12-1999-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

பிரிவு 5 (iii)-ன்படி, திருமணம் ஆகும்போது, மணமகனுக்கு 21 வயதும் மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியாகியிருக்க வேண்டும். (1978–ன் திருத்தச் சட்டத்தின்படி).

பிரிவு 5 (iv)-ன்படி, மணமக்கள் தடுக்கப்பட்ட உறவுமுறையில் இருக்கக் கூடாது (Degrees of Prohibited relationship). ஆனால் அத்தகைய உறவு முறையில் மணந்து கொள்ள அனுமதிக்கும் வழக்கமோ, வழக்காறோ அப்பகுதியில் இருந்தால், திருமணம் செய்து கொள்ளலாம்.

பிரிவு 5(v)-ன்படி, மணமக்கள் ஒருவருக்கொருவர் சபிண்டா உறவினராக (Sapinda relationship) இருக்கக்கூடாது. (தகப்பனிடமிருந்து 5 தலைமுறை, தாயிடமிருந்து 3 தலைமுறை). ஆனால், அத்தகைய உறவில் மணந்து கொள்ள அனுமதிக்கும் வழக்கமோ, வழக்காறோ அப்பகுதியில் இருந்தால், திருமணம் செய்து கொள்ளலாம்.[1]

மேற்கண்ட நிபந்தனைகளை மீறினால் ஏற்படும் விளைவுகள்:

மேற்கண்ட **பிரிவு 5 (i), 5 (iv) & 5 (v)** ஆகியவற்றில் கண்டுள்ள நிபந்தனைகளை மீறி, ஒரு திருமணம் நடைபெற்றிருந்தால், அத்திருமணத் தரப்பினர்களில் ஒருவர் (கணவன் அல்லது மனைவி) மற்றொருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுச் செய்து நடைபெற்ற திருமணத்தை **இல்லாநிலை திருமணமென (void marriage)** அறிவித்து தீர்ப்பாணை வழங்கும்படி கோரலாம். **(பிரிவு 11).**

பிரிவு 5 (ii) (a), (b), (c) மற்றும் **5 (iii)** ஆகியவற்றில் கண்டுள்ள நிபந்தனைகளை மீறி ஒரு திருமணம் நடைபெற்றிருந்தால், அத்திருமணத் தரப்பினர்கள் செய்யும் மனுவின் பேரில், நீதிமன்றம் அதை ஒரு **தவிர்தகு திருமணமாக (voidable marriage)** அறிவித்து தீர்ப்பாணை பிறப்பிக்கலாம். **(பிரிவு 12).**

4. Sapinda relationship - Write short notes. (சபிண்டா உறவு முறை– சிறு குறிப்பு வரைக.)

நாம் சென்ற வினாவின் விடையில் திருமணம் செய்து கொள்ள விழையும்

1. மேற்படி பிரிவு 5 (v) -க்கு அடுத்து வரும் பிரிவு 5 (vi)-ல் ஒரு செல்லத்தக்க இந்து திருமணத்திற்குண்டான மற்றொரு நிபந்தனை கூறப்பட்டிருந்தது.அந் நிபந்தனையின்படி, மணப்பெண் 18 வயதை அடையாவிடில், அவளின் காப்பாளரிடமிருந்து அத்திருமணத்திற்கு ஒப்புதல் பெறப்பட வேண்டும். ஆனால் இந்நிபந்தனை 1978-ஆம் ஆண்டின் குழந்தைத் திருமண (திருத்தச்) சட்டத்தால் நீக்கப்பட்டது. எனவே ஒரு திருமணத்திற்கு காப்பாளரின் ஒப்புதல் தேவையில்லை. மணமக்களின் ஒப்புதலே முக்கியம்.

மணமக்கள் ஒருவருக்கொருவர் **சபிண்டா உறவினராக (Sapinda relationship)** இருக்கக் கூடாது என்று **பிரிவு 5(v)** விதிக்கும் நிபந்தனையைக் கண்டோம். இங்கு 'சபிண்டா உறவு' என்பதின் வரையறையை நாம் காணுதல் அவசியமாகும்.

'சபிண்டா உறவு' எனும் பதத்திற்கு, 1955–ன் இந்து திருமணச் சட்டத்தின் **பிரிவு 3 (f)** –ஆனது பின்வருமாறு வரையறை தருகிறது. அதன்படி எந்த ஒரு நபர் தொடர்பாகவும் 'சபிண்டா உறவு' என்பது, தாய் வழி முன்னோர் வரிசையில் மூன்றாவது (அந்தத் தலைமுறை உட்பட) தலைமுறை வரையிலும், தந்தை வழி முன்னோர் வரிசையில் அய்ந்தாவது (அந்தத் தலைமுறை உட்பட) தலைமுறை வரையிலும் குறிக்கும். ஒவ்வொரு விஷயத்திலும் பரம்பரையை, தொடர்புடைய நபரிலிருந்து ஆரம்பித்து மேல்நோக்கி கணக்கிட வேண்டும். அந்த நபரை முதலாவது தலைமுறையாகக் கருத வேண்டும். **[பிரிவு 3(f) (i)]**. இதனை பின்வரும் வரைபடம் விளக்கும்.



மேற்படி வரைபடத்தில் X என்பவர் தொடர்புடைய நபர். M என்பவர் X-ன் தாய். F என்பவர் X-ன் தந்தை. தலைமுறையைக் கணக்கிடுகையில் தாய் வழியில் X –யும் சேர்த்து MF வரை மூன்று தலைமுறை; அது போல் தந்தை வழியில் X-யும் சேர்த்து FFFF வரையில் அய்ந்து தலைமுறை. இது தலைமுறையைக் கணக்கிடும் விதமாகும். இனி யார் சபிண்ட உறவுகள் வருகின்றனர் என்பதை பின்வருமாறு காண்போம்.

அதாவது, இரு நபர்களில் ஒருவர் மற்றொருவருக்கு சபிண்டா உறவு

முறைக்குள் வரவேண்டுமெனில், ஒருவர் மற்றொருவரின் பரம்பரை மூதாதையராக (lineal ascendant) சபிண்டா உறவுமுறையின் எல்லைக்குள் (limit) இருந்தாலோ அல்லது அவர்கள் இருவரும் ஒரு பொதுவான பரம்பரை மூதாதையரை (common lineal ascendant) சபிண்டா உறவுமுறை எல்லைக்குள் கொண்டிருந்தாலோ அவர்கள் இருவரும் சபிண்டா உறவு முறையினர் ஆவர். [பிரிவு 3(f) (ii)]. இதை பின்வரும் வரைபடம் தெளிவாக விளக்கும்.



இவ்வரைபடத்தில் A என்பவர் பொது மூதாதையர். அவருக்கு F3 என்றொரு மகனும் M என்றொரு மகளும் உள்ளனர். F3-க்கு F2 என்றொரு மகன் உள்ளார். அதுபோல் F2-க்கு F1 என்றொரு மகனும், F1 க்கு S1 என்றொரு மகனும் D1 என்றொரு மகளும் இருக்கிறார்கள். அவ்வாறே M–க்கு, S2 என்றொரு மகனும், D2 என்றொரு மகளும் இருக்கிறார்கள்.

இந்நிலையில், S1 மற்றும் D1-லிருந்து (அவர்களையும் சேர்த்து) தலைமுறையைக் கணக்கிட்டால் A என்ற பொது மூதாதையர் சரியாக அய்ந்தாவது தலைமுறையில் உள்ளார். F3, F2 மற்றும் F1 ஆகியோர் அய்ந்து தலை முறைக்குள் பரம்பரை மூதாதையராக வருகின்றனர். எனவே A, F3, F2, F1, S1 மற்றும் D1 ஆகியோர் சபிண்டா உறவு முறையினர் ஆவர்.

அதுபோல் S2 மற்றும் D2-லிருந்து (அவர்களையும் சேர்த்து) தலைமுறையைக் கணக்கிட்டால் A என்ற பொது மூதாதையர் சரியாக மூன்றாவது தலைமுறையில் உள்ளார். எனவே, A, M, S2 மற்றும் D2 ஆகியோர் ஒருவருக் கொருவர் சபிண்டா உறவு முறையினர் ஆவர்.

இப்பொழுது S1, D1, F1, F2 மற்றும் F3 ஒருபுறமும், S2, D2 மற்றும் M மறுபுறமும் A என்ற பரம்பரை மூதாதையரை பொதுவாக (common lineal ascendant) கொண்டு விளங்குகின்றனர். எனவே அனைவரும் ஒருவருக் கொருவர் சபிண்டா உறவு முறையினராக உள்ளனர்.

சுருங்கக்கூறின், தந்தை வழியில் அய்ந்து தலைமுறை வரையில் வரும் உறவுகள் அனைவரும் அல்லது தாய் வழியில் மூன்று தலைமுறை வரையில் வரும் உறவுகள் அனைவரும் சபிண்டர்கள். மேற்கண்ட சபிண்டா உறவுமுறையின் எல்லைக்குள் எவரேனும் இருவருக்கு பொது பரம்பரை மூதாதையர் இருப்பின், அவ்விருவரும் சபிண்டர்கள்.

5. Prohibited degrees of relationship - Write short notes. (தடுக்கப்பட்ட உறவுமுறை – சிறு குறிப்பு வரைக.)

இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 5 (iv)-ன்படி, திருமணம் செய்து கொள்ள விழையும் மணமக்கள் 'தடுக்கப்பட்ட உறவுமுறையில்' இருக்கக் கூடாது (Degrees of Prohibited relationship).

'தடுக்கப்பட்ட உறவுமுறை' எனும் பதத்திற்குண்டான வரையறை குறித்து பிரிவு 3 (g) கூறுகிறது. அதன்படி 'தடுக்கப்பட்ட உறவுமுறை' என்பது, இரு நபர்களில்,

(i) ஒருவர் மற்றொருவருக்குப் பரம்பரை மூதாதையராக (lineal ascendant) இருந்தாலும்; அல்லது

(ii) ஒருவர் மற்றொருவரின் பரம்பரை மூதாதையரின் (ascendant) அல்லது சந்ததியின் (descendant) மனைவியாகவோ அல்லது கணவராகவோ இருந்தாலும்; அல்லது

(iii) ஒருவர் மற்றொருவரின் சகோதரரின் அல்லது தகப்பனாரின் அல்லது தாயாரின் சகோதரரின் அல்லது பாட்டனாரின் அல்லது பாட்டியாரின் சகோதரரின் மனைவியாக இருந்தாலும்; அல்லது

(iv) இருவரும் சகோதர – சகோதரியாகவோ, மாமனும் மற்றும் அவர் உடன்பிறந்தாரின் மகளுமாகவோ (uncle and niece), அத்தையும் மற்றும் அவர் உடன்பிறந்தாரின் மகனுமாகவோ (aunt and nephew) அல்லது சகோதரன் சகோதரியின் அல்லது இரு சகோதரர்களின் அல்லது இரு சகோதரிகளின்

குழந்தைகளாகவோ இருந்தால், அவர்கள் அனைவரும் 'தடுக்கப்பட்ட உறவு முறைக்கு' உட்பட்டவர்கள் எனக் கூறப்படுவார்கள்.

6. Examine the relevancy of ceremonies for a Hindu Marriage.
(இந்து திருமணத்திற்குச் சடங்குகளின் தீர்வினையை ஆராய்க.)

(அல்லது)

"A Hindu marriage without ceremony is void". Discuss the exceptions if any. ("சடங்குகள் இல்லாத ஒரு இந்து திருமணம் இல்லாநிலை ஆகுகிறது". இக்கூற்றிற்கு விதிவிலக்குகள் உண்டெனில் விளக்குக.)

(அல்லது)

Sapatapadi - Write short notes. (சப்தபதி – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

பழைய சட்டப்படி திருமணச் சடங்குகள்
சப்தபதியின் விளக்கமும் முக்கியத்துவமும்
புதிய சட்டப்படி திருமணச் சடங்குகள்
சடங்கில்லாத இந்துத் திருமணம் இல்லாநிலையதாகுமா?
விதிவிலக்கு

பழைய சட்டப்படி திருமணச் சடங்குகள் :

இந்து தரும சாத்திரங்கள், ஒரு இந்துத் திருமணம் செல்லுத்தன்மை அடைவதற்கு பின்வரும் மூன்று சடங்குகள் செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறது. அவை,

(i) திருமணத்திற்கு முன்பு செய்யப்படும் நிச்சயதார்த்தம்.

(ii) ஹோமம் முன்னால் மந்திரம் ஓதுதல்.

(iii) ஹோமத் தீயை சுற்றி ஏழு அடி எடுத்து வைத்து வலம் வருதல்.

இம்மூன்று சடங்குகள் செய்யப்பட்டுவிட்டால், திருமணம் பூர்த்தியடைந்து விட்டதாகப் பொருளாகும்.

சப்தபதியின் விளக்கமும் முக்கியத்துவமும்:

மேற்கண்டவற்றில் நிச்சயதார்த்தம் என்பது திருமணம் செய்வதாக இரு தரப்பினரும் வாக்களித்துக் கொள்வதாகும். இதைத் திரும்பப் பெற்றுக்

கொள்ளலாம். இரண்டாவது சடங்கான ஹோமம் முன்னால் மந்திரம் ஓதுதல். கன்னிகாதானம் செய்வதும் கூட உண்மையில் திருமணத்தை முழுமையாக்கி விட்டதாகச் சொல்ல முடியாது. மூன்றாவது சடங்கான, மணமக்கள் ஹோமத்தீயை (புனிதத்தீயை) சுற்றி ஏழு அடி எடுத்து வைத்து வலம் வருதல்தான் ஒரு திருமணத்தை முழுமையாக்கும். இது மிகவும் முக்கியமானதொரு சடங்காகும். இதைச் 'சப்தபதி' [Saptapadi (or) Saptapati] என்பர்.

புதிய சட்டப்படி திருமணச் சடங்குகள்:

1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் **7–வது பிரிவும்** திருமணச் சடங்குகளை வலியுறுத்துகிறது. ஆனால் இன்ன வகையில்தான் சடங்குகள் இருக்க வேண்டும் என குறிப்பிட்டுக் கூறவில்லை. மாறாக பின்வருமாறு பொதுவாகக் கூறுகிறது.

பிரிவு 7(1)-ன்படி, மணமக்களில் எவரேனும் ஒருவரின் வழக்கப்படியும் சடங்குகளின்படியும், ஒரு இந்துத் திருமணமானது நடைபெறலாம்.

(2) அப்படிப்பட்ட வழக்கங்களிலும், சமயச் சடங்குகளிலும் மணமக்கள் ஹோமத்தீயை ஏழு அடி எடுத்து வைத்து வலம் வரும் **சப்தபதி (Saptapathi)** என்ற சடங்கும் அடங்கும். இச்சடங்கில் ஏழாவது அடி எடுத்து வைத்ததும் அந்தத் திருமணம் நிறைவு பெற்றதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் ஆகிறது.

சடங்கில்லாத இந்துத் திருமணம் இல்லா நிலையதாகுமா ?

மேற்படி பிரிவு 7–ஆனது குறிப்பிட்ட முறையில் எந்த ஒரு சடங்கையும் கட்டாயமாக பின்பற்றியே தீர வேண்டும் (obligatory) என்று கூறவில்லை. பொது வாக மணமக்களில் எவரேனும் ஒருவரின் வழக்கப்படியும் சடங்குகளின்படியும் ஒரு இந்துத் திருமணமானது நடைபெறலாம் எனக் கூறுகிறது. பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் ஒரே வழக்கத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்றால் அவ்வழக்கப்படி திருமணம் நடக்க வேண்டும். இருவரும் வேறு வேறு வழக்கங்களை உடையவர்கள் என்றால், பெண் வீட்டார் வழக்கப்படியோ அல்லது மாப்பிள்ளை வீட்டார் வழக்கப்படியோ திருமணம் நடக்கலாம். எப்போது திருமணம் முடிவடைகிறது, எந்தச் சடங்கு கடைசிச் சடங்கு என்பவை அந்தந்தச் சமூகத்தாரிடையே நடைமுறையில் இருக்கும் வழக்கத்தைப் பொறுத்ததாகும்.

மேலும் **சப்தபதி** எனும் ஹோமத்தீயைச் சுற்றி மணமக்கள் ஏழு அடி எடுத்து வைத்து வலம் வரும் சடங்கு முடிந்தால்தான், திருமணம் முடிந்ததாகச் சட்டம் கருதும். ஆனால் இவ்வழக்கம் இல்லாதவர்கள் தங்கள் வகுப்புக்குரிய வழக்கப்படி மணம் முடித்துக் கொள்ளலாம். அவர்கள் வகுப்பில் திருமணம் பூர்த்தியாவதற்கு அடையாளமாக எந்தச் சடங்கு கருதப்படுகிறதோ, அந்தச் சடங்கு நடந்ததும் திருமணம் நிறைவேறி விட்டதாக எடுத்துக் கொள்ளப்படும்.

பிரிவு 8(3)–ன்படி, இவ்வாறு மாநில அரசு இயற்றும் விதிகள் அனைத்தும், அது இயற்றப்பட்ட பிறகு கூடிய விரைவில் மாநில சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.

பிரிவு 8(4)–ன்படி, இந்தத் திருமணப் பதிவேட்டை எல்லா நியாயமான நேரத்திலும் ஆய்ந்து பார்க்க உரிமை உண்டு. அதில் உள்ளடங்கியுள்ள விபரங்கள், நீதிமன்றத்தில் சாட்சியமாக அனுமதிக்கப்படுதல் வேண்டும். உரிய கட்டணம் செலுத்தி மனுச் செய்து கொள்வோருக்கு, அவற்றின் சான்றளிக்கப்பட்ட நகல் (எடுகுறிப்புகள்) (certified extracts) தரப்பட வேண்டும்.

பிரிவு 8(5)–ன்படி, இப்பிரிவில் யாது கூறப்பட்டிருப்பினும், இந்துத் திருமணம் எதனின் செல்லுதன்மையும், அத்திருமணத்தை மேற்கண்டவாறு பதிவு செய்து கொள்ளாமல் விட்டதினால், எவ்வழியிலும் பாதிக்கப்படாது. அதாவது, மேற்படி பிரிவின்படி ஒரு இந்து திருமணம் பதிவு செய்யப்படவில்லையானால், அது நடைபெற்று முடிந்த அத்திருமணத்தை செல்லாததாக்கிவிடாது.

திருமணத்தின் செல்லாநிலை
[Nullity of Marriage]

இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணம்
[Void and Voidable Marriage]

6. State when a Hindu marriage is void or voidable under the Hindu Marriage Act. (இந்து திருமணச் சட்டத்தின் கீழ் ஒரு இந்து திருமணம் எப்பொழுது செல்லாத அல்லது தவிர்தகு திருமணமாக ஆகிறது என்பதைக் கூறுக.)

(அல்லது)

Bring out the differences between a void and voidable marriage. Examine the rule of Hindu Law relating to void and voidable marriages. (இல்லாநிலை, தவிர்தகு திருமணங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைக் கூறுக. இந்துத் திருமணங்கள் சம்பந்தமான இந்து சட்ட விதிகளை ஆராய்க.)

(அல்லது)

(a) Distinguish between void and voidable Marriage under the Hindu Marriage Act, 1955.

(b) Briefly explain the circumstances when a Hindu marriage is voidable.

(அ) 1955–ன் இந்து திருமணச் சட்டத்தின் கீழ் இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணத்தை வேறுபடுத்துக.

(ஆ) எப்பொழுது ஒரு இந்துத் திருமணம் தவிர்தகு திருமணமாகிறது என்பதை சுருக்கமாக விளக்குக.

(அல்லது)

Void Marriage - Write short notes. (இல்லாநிலை திருமணம் – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
இல்லாநிலைத் திருமணங்கள் (Void Marriages) - பிரிவு 11
தவிர்தகு திருமணங்கள் (Voidable Marriages) - பிரிவு 12
இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணம் - வேறுபாடுகள்

முன்னுரை:

இல்லாநிலை (void) என்பது திருமணம், நடந்த தேதி முதலே அத்திருமணம் இல்லாது அதாவது செல்லாது போதல் (void ab initio); தவிர்தகு நிலை (voidable) என்பது திருமணம் நடந்த பின்னர், தரப்பினர்கள் விரும்பினால் திருமணத்தை தவிர்த்துக் கொள்வது. அதுவரையில் அத்திருமணம் செல்லத் தக்கதே. இனி, எப்போது ஒரு திருமணம் இல்லாநிலை மற்றும் தவிர்தகு நிலை அடைகிறது என்பதை பின்வருமாறு காண்போம்.

இல்லாநிலை திருமணங்கள் (Void Marriages) - பிரிவு 11:

ஒரு இந்துத் திருமணம் செல்லத்தக்கதாக ஆவதற்கு இந்து திருமணச் சட்டத்தின் 5–வது பிரிவானது சில நிபந்தனைகளை வகுத்துள்ளது. அவற்றில் பிரிவு 5(i), (iv) மற்றும் (v)-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி செய்யப்படும் திருமணம் இல்லாநிலைத் திருமணமாகும், என்று **பிரிவு 11** கூறுகிறது. அந்நிபந்தனைகள் வருமாறு :–

பிரிவு 5(i)-ன்படி, திருமணம் செய்து கொள்ளும் நபருக்கு திருமணம் நடைபெறும் காலத்தில் வேறு மனைவியோ அல்லது கணவனோ உயிருடன் இருக்கக் கூடாது.

பிரிவு 5(iv)-ன்படி, மணமக்கள் தடுக்கப்பட்ட உறவுமுறையில் இருக்கக் கூடாது. ஆனால், அத்தகைய உறவுமுறையில் மணந்து கொள்ள அனுமதிக்கும் வழக்கமோ, வழக்காறோ அப்பகுதியில் இருந்தால் திருமணம் செய்து கொள்ளலாம்.

பிரிவு 5(v)-ன்படி, மணமக்கள் ஒருவருக்கொருவர் சபிண்டா உறவினராக இருக்கக்கூடாது. ஆனால் அத்தகைய உறவில் மணந்து கொள்ள அனுமதிக்கும் வழக்கமோ, வழக்காறோ அப்பகுதியில் இருந்தால், திருமணம் செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட இம்மூன்று நிபந்தனைகளில் எந்த ஒன்றையாவது மீறி ஒரு திருமணம் நடந்திருந்தால் (இச்சட்டம் அமலுக்கு வந்தபின்) கணவனோ அல்லது மனைவியோ நீதிமன்றத்தில் மனுக் கொடுத்து நடந்த திருமணத்தை இல்லாநிலைத் திருமணமாக அறிவித்து தீர்ப்பாணை வழங்கும்படி கோரலாம்.

தவிர்தகு திருமணங்கள் (Voidable Marriages) - பிரிவு 12 :

பிரிவு 12(1) கூறுவதாவது:

திருமணத்தைத் தவிர்த்துக் கொள்ள விரும்பும் நபர், பின்வரும் காரணங்களில் எந்த ஒன்றைக் காட்டியும், அத்திருமணத்தை தவிர்தகு திருமணமாக அறிவித்து, செல்லாது என தீர்ப்பாணை வழங்கும்படி கோரலாம். அவை,

(a) எதிர்மனுதாரரின் ஆண்மையற்ற தன்மையால் திருமண பந்தம் முழுமையடையவில்லை. (Marriage has not been consummated owing to the impotence of the respondent)

திருமணம் என்பது உடலுறவு கொண்டு குழந்தைகளை ஈன்றெடுத்து இனிது வாழ்வது. அப்பொழுதுதான் அத்திருமணமும் முழுமையடைகிறது. ஆண்மையற்ற தன்மை என்பது உடலுறவு கொள்ள முடியாமலும், குழந்தைகளை ஈன்றெடுக்க முடியாமலும் போவதாகும். ஒரு நபர் தனது திருமணத்தை முழுமையாக்க முடியாத அளவிற்கு அவனது உடல் அல்லது மனநிலை இருப்பின், அந்நபர் ஆண்மையற்று விளங்குகிறார் என **Digvijay Singh v. Pratap Kumar**[1] – எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

Elizbeth v. Stanely[2] - இவ்வழக்கில், திருமணம் முடிந்து தம்பதியினர் 4 இரவுகள் ஒன்றாக உறங்கினர். அதற்கு மேல் நான்கு மாதங்கள் ஒன்றாக வாழ்ந்தனர். ஆனால் கணவன், தன்னுடைய மனைவியுடன் உடலுறவு எதுவும் கொள்ளவில்லை. இது அக்கணவனின் ஆண்மையற்ற தன்மையை காட்டுவதாகக் கூறி, மனைவி தொடுத்த வழக்கில், அவளுக்கு ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் விவாகரத்து வழங்கியது.

(b) அத்திருமணமானது பிரிவு 5(ii)-ல் கண்டுள்ள நிபந்தனைகளை மீறியிருப்பின், அதாவது

1. 1970 A.S.C. 137.
2. A.I.R. 1985 A.P. 238.

பிரிவு 5(ii)-ன்படி, திருமணம் ஆகும்போது மணமக்களில் எவரேனும் ஒருவர் (a) அத்திருமணத்திற்கு செல்லத்தக்க ஒப்புதல் (valid consent) கொடுக்க முடியாத அளவிற்கு பித்து நிலையராக (unsoundness of mind) இருக்கக்கூடாது; அல்லது (b) அத்திருமணத்திற்கு செல்லத்தக்க ஒப்புதல் கொடுக்க முடிந்த போதிலும், மூளைக் கோளாறு (mental disorder) காரணமாக அவர் திருமணம் செய்து கொள்ளத் தகுதியற்றவராகவோ, குழந்தை பெற்றெடுக்க தகுதியற்றவராகவோ இருத்தல் கூடாது; அல்லது (c) விட்டுவிட்டு தாக்கக்கூடிய புத்தி பேதலிப்பு (recurrent attacks of insanity) நோய்க்குட்பட்டவராக இருத்தல் கூடாது.

(c) அத்திருமணத்திற்கு மனுதாரரின் ஒப்புதல் அல்லது 1978–ஆம் ஆண்டிற்கு முன்பு திருமணம் நடைபெற்றிருப்பின், அந்த ஆண்டில் குழந்தைத் திருமணத் தடை (திருத்தச்) சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் இருந்த நிலைப்படி பிரிவு 5(vi)-ன்படி மனுதாரரின் காப்பாளரின் ஒப்புதல் வலுக் கட்டாயமாகவோ (force) அல்லது மோசடியாகவோ (fraud) பெறப்பட்டிருப்பின், அவ்வொப்புதல் திருமணச் சடங்குகளையோ அல்லது ஒரு முக்கியமான விஷயத்தையோ அல்லது எதிர்மனுதாரர் தொடர்புடைய ஒரு சூழ்நிலையையோ மறைப்பதற்காக பெறப்பட்டிருப்பின்.

(d) திருமணக் காலத்தில் எதிர்மனுதாரர், மனுதாரர் அல்லாத வேறொரு நபரால் கர்ப்பமாகியிருந்தால்.

பிரிவு 12(2) கூறுவதாவது :

(a) மேற்படி பிரிவு 12(1) (c)–யில் கூறப்பட்டுள்ள அடிப்படையின் பேரில் ஒரு திருமணத்தை செல்லாததென விளம்பக் கோரும் மனுவை, பின்வரும் சூழ்நிலைகள் நிலவினால், நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாகாது என்று **பிரிவு 12 (2) (a)** கூறுகிறது. அச்சூழ்நிலைகள்,–

(i) அத்திருமணத்திற்கான மனுதாரரின் ஒப்புதல் அல்லது அவரது காப்பாளரின் ஒப்புதல் வலுக்கட்டாயமாக பெறப்பட்டிருந்து அவ்வலுக்கட்டாயம் முடிவடைந்து ஓராண்டு ஆகிய பின் அல்லது அந்த ஒப்புதல் மோசடியாகப் பெறப்பட்டிருந்து அம்மோசடி கண்டுபிடிக்கப்பட்டு ஓராண்டு ஆகிய பின் அத்திருமணத்தை செல்லாததென விளம்பக் கோரி தாக்கல் செய்யப்படும் மனுவை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாகாது. **[பிரிவு 12(2)(a)(i)].**

(ii) அவ்வலுக்கட்டாயம் முடிவடைந்த பின்னர் அல்லது அம்மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் மனுதாரர் தன் முழு ஒப்புதலுடன் மற்றொரு தரப்பினருடன் கணவனாக அல்லது மனைவியாக வாழ்ந்திருப்பின், அவர் அத்திருமணத்தை செல்லாததென விளம்பக் கோரி தாக்கல் செய்யும் மனுவை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாகாது. **[பிரிவு 12(2)(a)(ii)].**

(b) மேற்படி பிரிவு 12(1) (d)–யில் கூறப்பட்டுள்ள அடிப்படையின் பேரில் ஒரு திருமணத்தை செல்லாததென விளம்பக் கோரும் மனுவை, பின்வரும் சூழ்நிலைகள் நிலவுவதாக நீதிமன்றம் திருப்தியுற்றால், ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் **பிரிவு 12 (2) (b)** கூறுகிறது. அச்சூழ்நிலைகள்,–

(i) திருமணக் காலத்தில் எதிர்மனுதாரர், மனுதாரர் அல்லாத வேறொரு நபரால் கர்ப்பமாகியிருந்தார் எனும் பொருண்மையை அம்மனுதாரர் திருமணக் காலத்தில் அறியாமல் இருந்தார் (the petitioner was at the time marriage ignorant of the fact that the respondent was at the time of marriage pregnant by some person other than the petitioner). **[பிரிவு 12(2)(b)(i)].**

(ii) இச்சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு நடந்த ஒரு திருமணமெனில், அவ்வாறு அமலுக்கு வந்ததிலிருந்து ஓராண்டிற்குள் மற்றும் இச்சட்டம் அமலுக்கு வந்த பிறகு நடந்த திருமணமெனில், அத்திருமணம் நடைபெற்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் அத்திருமணத்தை செல்லாததென விளம்பக் கோரும் வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன. **[பிரிவு 12(2)(b)(ii)].**

(iii) திருமணக் காலத்தில் எதிர்மனுதாரர், மனுதாரர் அல்லாத வேறொரு நபரால் கர்ப்பமாகியிருந்தார் எனும் பொருண்மையை கண்டறிந்த பின்னர், அம் மனுதாரர், அவ்வெதிர்மனுதாரருடன் விரும்பி உடலுறவு ஏதும் கொள்ளவில்லை. **[பிரிவு 12(2)(b)(iii)].**

மேற்கண்ட மூன்று சூழ்நிலைகளும் நிலவுவதாக நீதிமன்றம் திருப்தியுற்றால் தான், அது பிரிவு 12(1) (d)–யில் கூறப்பட்டுள்ள அடிப்படையின் கீழ் அத் திருமணத்தை செல்லாததென விளம்பும் தீர்ப்பாணையை பிறப்பிக்கும். இந்த சூழ்நிலைகளை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு, அத்திருமணத்தை செல்லாததென விளம்பக் கோரும் மனுதாரரையே சார்ந்ததாகும்.

மேற்படி பிரிவு 12(1)–ல் கூறப்பட்டுள்ள அடிப்படைகளின் கீழ் ஒரு திருமணத்தை மனுதாரர் தவிர்த்துக் கொள்ள மனுச் செய்யலாம். இதனால் அத்திருமணத்தை நீதிமன்றம் செல்லாததென விளம்பி தீர்ப்பாணை வழங்குகிறது. இவ்வாறு தவிர்த்துக் கொள்வது, மனுதாரரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். அவருக்கு அந்த விருப்பம் உண்டா, இல்லையா என்பதை சோதித்தறிந்து கொள்வதற்கு வகை செய்யும் பொருட்டுதான் மேற்படி பிரிவு 12 (2)–ன் (a) மற்றும் (b) எனும் உட்கூறுகளின் கீழ் அய்ந்து விதமான சூழ்நிலைகள் கொடுக்கப் பட்டுள்ளன. அந்த அய்ந்தில் ஏதேனும் ஒன்று அந்தந்த நேர்விற்கேற்ப அமைய விட்டாலும் அல்லது அச்சூழ்நிலைகள் குறித்து நீதிமன்றம் திருப்தியடையா விட்டாலும், அது அத்திருமணத்தை செல்லாததென விளம்பி தீர்ப்பாணை பிறப்பிக்காது. இதிலிருந்து விளங்குவது யாதெனில், தவிர்தகு திருமணமென்பது, மனுதாரரின் விருப்பத்தின் பேரில் தவிர்த்துக் கொள்ளும் திருமணமாகும்.

இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணம் - வேறுபாடுகள்:

இல்லாநிலைத் திருமணம் [Void Marriage]	தவிர்தகு திருமணம் [Voidable Marriage]
1. இது குறித்து பிரிவு 11 விளக்குகிறது.	இது குறித்து பிரிவு 12 விளக்குகிறது.
2. இது ஆரம்பமுதலே செல்லுத்தன்மை அற்றது (void ab initio).	இங்கு பாதிக்கப்பட்டவர் விரும்பினால், திருமணத்தை செல்லாது என்று விளம்ப மனுச் செய்யலாம்; விரும்பாவிடில் அத்திருமணம் அப்படியே செல்லும் தன்மையுடன் விளங்கும்.
3. ஒரு திருமணம் இல்லாநிலைத் திருமணமாக இருக்கும் பொழுது, அதனை ஒரு பொருட்டாக நினையாது வேறொரு மணம் செய்து கொண்டால் அது குற்றமன்று. ஏனெனில், இங்கு திருமணத் தேதி முதலே, அத் திருமணம் செல்லாததாகி விடுகிறது. எனவே முதல் திருமணம் ஒரு திருமணமே அல்ல.	இங்கு, முதலில் நடந்த திருமணத்தை தவிர்தகு நிலையாக செல்லாது என அறிவித்து நீதிமன்றம் தீர்ப்பாணை கொடுப்பதற்கு முன்னால், மறுமுறை மணம் செய்து கொண்டால், அது குற்றம். ஏனெனில், தரப்பினர் நீதிமன்றத்தில் மனு செய்ததிலிருந்து அதில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும் வரை அத்திருமணம் செல்லத்தக்கதாகவே விளங்குகிறது.
4. இப்பிரிவின் அளாவுகை குறுகியது (Narrower).	இதன் அளாவுகை பரந்தது (Wider).
5. 1955-க்கு பின் நடந்த திருமணங் களுக்குத்தான் இப்பிரிவு பொருந்தும்.	இப்பிரிவானது, 1955-க்கு முன்னும் பின்னும் நடைபெற்ற திருமணங் களுக்குப் பொருந்தும்.

மணவாழ்க்கைப் பிரச்சனைகளுக்குத் தீர்வழிகள் [Matrimonial Reliefs]

7. State briefly the matrimonial reliefs provided under the Hindu Marriage Act. (இந்து திருமணச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள திருமண வாழ்க்கையில் ஏற்படும் சிக்கலுக்கான பரிகாரங்களை ஆராய்க.)

(அல்லது)

Explain the various matrimonial reliefs which are provided

under the Hindu Marriage Act 1955. (1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள பல்வேறு திருமணத் தீர்வழிகளை விளக்குக.)

(அல்லது)

Explain the changes made by the Marriages Laws (Amendment) Act, 1976, in the Hindu Law of Divorce and Judicial Separation. (1976–ம் ஆண்டு திருமணச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் மணமுறிவு மற்றும் நீதிமுறைப் பிரிவு ஆகியவை குறித்து இந்து சட்டத்தில் செய்த மாற்றங்களை விளக்குக.)

(அல்லது)

State the conditions for a valid Hindu Marriage under the Hindu Marriage Act, 1955. Bring out the changes brought by the Marriage Laws (Amendment) Act, 1976. (1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின்படி செல்லத்தக்க ஒரு இந்து திருமணத் திற்குரிய நிபந்தனைகள் யாவை? 1976–ஆம் ஆண்டு இந்து திருமணங்கள் (திருத்தம்) சட்டம் கொண்டு வந்த மாறுதல்களை எடுத்துக்காட்டுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை

திருமணச் பிரச்சனைகளுக்கு தீர்வழிகள் (அல்லது) பரிகாரங்கள்

I. தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் கோரல் [பிரிவு 9]

II. நீதிமுறைப் பிரிவு [பிரிவு 10]

III. இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணம் [பிரிவு 11 மற்றும் 12]

IV. மணமுறிவு [பிரிவு 13]

மணமுறிவு கோருவதற்கான அடிப்படைகள் (Grounds)

பிரிவு 13(1)-ன் கீழான உட்கூறுகள் கூறுவதாவது

மணமுறிவிற்கான கூடுதல் அடிப்படைகள் (Additional Grounds)

மணமுறிவு கோர ஒரு மனைவிக்கு உள்ள அடிப்படைகள்

மணமுறிவு நடவடிக்கைகளில் மாற்றுத் தீர்வழி

பரஸ்பரமான ஒப்புதலின் பேரில் மணமுறிவு

மணமுறிவு கோரி மனுச் செய்வதற்கான கால வரையறை (பிரிவு 14)

மணமுறிவிற்குப்பின் மறுமணம் (பிரிவு 15)

மணமுறிவு மற்றும் நீதிமுறைப் பிரிவு - வேறுபாடுகள்.

1976-ஆம் ஆண்டின் திருமண சட்டங்கள் (திருத்தச்) சட்டத்தால் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள்

முன்னுரை:

இந்து தரும சாத்திரப்படி, ஒரு இந்துத் திருமணம் புனிதமானதாகவும், மதக் கடமையாகவும், சடங்காகவும் விளங்கியது. அது கலைக்கப்பட முடியாத ஒன்றாக இருந்தது. மறுமணம் தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் 1955–ல் இயற்றப் பட்ட இந்து திருமணச் சட்டமானது, ஒரு இந்துத் திருமணத்தில் இருந்த புனிதத் தன்மையை குறைத்துவிட்டது. சேர்ந்து வாழ முடியாத தம்பதிகள், நீதிமன்றத்தை அணுகி, அதன் அனுமதியுடன் பிரிந்து மறுமணம் செய்து கொள்ள வழி வகுத்துக் கொடுத்துள்ளது. மேலும் 1976–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட திருமணச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமானது, 1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தில் மணமுறிவு மற்றும் நீதிமுறைப் பிரிவு குறித்த வகைமுறைகளில் பல்வேறு மாறுதல்களைச் செய்தது. அவ்வகைமுறைகளைத்தாம் நாம் பின்வருமாறு காண உள்ளோம்.

திருமணச் பிரச்சனைகளுக்கு தீர்வழிகள் (அல்லது) பரிகாரங்கள் (Matrimonial Reliefs) :

திருமண வாழ்வென்பதே பிரச்சனை மிகுந்ததுதான். அவற்றை ஓரளவு சமாளித்து குடும்பம் நடத்துகிறவனே(ளே), சீரும் சிறப்புமாக வாழ்வதாக சமுதாயம் பாராட்டுகிறது. ஆனால் பிரச்சனைகள், சமாளிக்க முடியாத அளவிற்கு பெரிதாக உருவெடுக்கும் பொழுது, அவற்றிலிருந்து விடுபட என்ன வழி உள்ளது? இதற்கு வகை செய்யும் முகமாக 1955–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டமானது சில தீர்வழிகளை (Matirmonial reliefs) வழங்கியுள்ளது. அவை வருமாறு.

I. தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் கோரல் (பிரிவு 9).

II. நீதிமுறைப் பிரிவு (பிரிவு 10).

III. இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணம் (பிரிவுகள் 11 & 12).

IV. மணமுறிவு (பிரிவு 13).

I. தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் கோரல் (அல்லது) தாம்பத்திய உரிமைகளை மீட்டளித்தல் (Restitution of Conjugal Rights)[பிரிவு 9]:

கணவனோ அல்லது மனைவியோ எவ்விதமான நியாயமான காரணமும் இல்லாமல், சேர்ந்து தாம்பத்திய உறவு வாழ்க்கையை நடத்த மறுத்து விலகி வாழும் பொழுது, அதனால் பாதிக்கப்பட்டவர், தான் இழந்த தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் பெற்றுத் தரும்படி நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். இம்மனு மாவட்ட நீதிமன்றத்தில் செய்யப்பட வேண்டும். [குடும்ப நீதிமன்றம் (Family Court)

அமைக்கப்பட்டுள்ள மாவட்டத்தில், அத்தகு நீதிமன்றத்தில் செய்யலாம்.] மனுவில் கண்ட சங்கதிகளின் உண்மை நிலை குறித்து நன்கு ஆய்ந்த பிறகு, அம்மனுவை ஏன் அனுமதிக்கக்கூடாது என்பதற்கு சட்டமுறையான காரணம் எதுவுமில்லை யென்பதை சந்தேகமற தெரிந்து திருப்தியுற்ற பிறகு, அந்நீதிமன்றம் தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் பெற்றுத் தரும் பொருட்டு தீர்ப்பாணை ஒன்றை பிறப்பிக்கலாம். **(பிரிவு 9)**

ஆனால் அவ்வாறு விலகி வாழ்வதற்கு நியாயமான காரணம் இருக்கிறது என்று எதிர் தரப்பில் வாதிடப்பட்டால், அக்காரணம் நியாயமானதுதான் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு விலகிச் சென்று வாழ்பவர் மீது சுமத்தப்படும். தான் இன்னனின்ன நியாயமான காரணங்களின் அடிப்படையில் பிரிந்து வாழ்கிறேன் என்பதை அவர்தான் நிரூபிக்க வேண்டும். **(பிரிவு 9–ன் கீழான விளக்கம்).**

முக்கிய வழக்குகள்:

Kanchangauri v. Chandulal[1] – இவ்வழக்கில் மனைவி, கணவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்தாள். காரணம் யாதெனில், கணவனின் பெற்றோர்களும் அவருடனே வசிப்பதால், தான் பிரிந்து வாழ்வதாக கூறினார். ஆனால் இதை ஒரு நியாயமான காரணமாக நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

Rama Rao v. Krishna Mani[2] – இவ்வழக்கில் மனைவியை சரி வர நடத்தாமல் அடிக்கடி அவமானங்களுக்களுக்குள்ளாக்கியதால், அவள் கணவனை விட்டு பிரிந்து வாழ்வது சரியே எனக் கூறப்பட்டது.

Kanthimathi v. S.P. Iyer[3] – இவ்வழக்கில், ஒரு மனைவி தனது கணவன், இறந்து போன அவரது தகப்பனாருடைய நிலங்களை கவனித்துக் கொள்ளும் பொருட்டு வேறு இடத்தில் வாழ்வதால், தானும் பிரிந்து வாழ்வதாக கூறியது ஒரு நியாயமான காரணமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை.

Chand Narayan v. Saroja Devi[4] - இவ்வழக்கில் மனைவியின் விருப்பத்திற்கு மாறாக அவளை அசைவ உணவு சாப்பிடும்படியும், மது அருந்தும் படியும் கணவன் கட்டாயப்படுத்தியது, அவள் பிரிந்து வாழ்வதற்கு ஒரு சரியான காரணமேயாகும் என நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

மேற்படி 9-வது பிரிவு, அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத் தக்கதா? (Section 9 - Whether constitutionally valid?):

1. A.I.R. 1973 Guj. 275.
2. P.R. 1973 A.M. 279.
3. A.I.R. 1974 Ker. 124.
4. A.I.R. 1975 Raj. 88.

தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளித்து தருவதற்கு வகை செய்யும் இந்து திருமணச் சட்டத்தின் 9–வது பிரிவு, இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதா என்பது குறித்து 1983 மற்றும் 1984–ஆம் ஆண்டுகளில் எழுந்த பின்வரும் முக்கிய வழக்குகளில் பெரும் சர்ச்சைக்கு உள்ளானது. அச்சர்ச்சை இறுதியாக உச்ச நீதிமன்றத்தால் தீர்த்து வைக்கப்பட்டது. அவ்வழக்குகளும், அவற்றில் கூறப்பட்ட கருத்துரைகளும் வருமாறு.

Sareetha v. Venkata Subbaiah[1] - இது ஒரு மிகப் பிரபலமான வழக்காகும். ஒரு காலகட்டத்தில் திரையுலகின் முன்னணி நடிகையாக திகழ்ந்தவர் நடிகை சரிதா ஆவார். அவர் திரையுலகில் நுழைவதற்கு முன்னரே, வெங்கட சுப்பைய்யா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அவர் தமிழ்த் திரையுலகில் மெல்ல மெல்ல பிரபலமடையத் தொடங்கியவுடன், நெல்லூரில் வசிக்கும் தனது கணவரையும், அவருடனான தாம்பத்திய உறவையும், அதன் விளைவான குழந்தைப் பிறப்பையும் புறக்கணிக்க ஆரம்பித்தார். இதனால் மன மொடிந்து போன வெங்கட சுப்பைய்யா, சரிதாவுடனான தனது தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கக் கோரி நெல்லூர் மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்தார். வழக்கை விசாரித்த அந்நீதிமன்றமும், அவர் கோரியபடி சரிதாவுடனான தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கான தீர்ப்பாணையை பிறப்பித்தது. இத்தீர்ப்பாணையை எதிர்த்து சரிதா ஹைதராபாத்தில் உள்ள உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

அம்மேல்முறையீட்டில் தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கு வகை செய்யும் இந்து திருமணச் சட்டத்தின் 9–வது பிரிவு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 21–வது ஷரத்தின் கீழான சுதந்திரத்தையும் (அந்தரங்க உரிமையை உள்ளிடக்கிய தனிநபர் சுதந்திர உரிமை) (Right to libery which includes right to privacy) மற்றும் 14–வது ஷரத்தின் கீழான சமத்துவ உரிமையையும் (Right to equlity) மீறுவதாக உள்ளது என்றும், எனவே மேற்படி 9–வது பிரிவு அரசியலமைப்பற்றது என்றும் வாதம் புரிந்தார். இதற்கு அடிப்படையாக பின்வரும் காரணங்களை எடுத்தியம்பினார்.

(1) "குழந்தைப் பிறப்பிற்காக தனது உடல் எங்கே, எவ்வாறு பயன் படுத்தப்பட வேண்டும் அல்லது பயன்படுத்தப்படக் கூடாது என்பதை சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையும், தனது உடலின் பல்வேறு பகுதிகள் எப்பொழுது, யாரால் உணர்வூட்டப்பட வேண்டும் (தொடப்பட வேண்டும்) என்பதை தேர்ந்தெடுக்கும் உரிமையும்" அந்தரங்க உரிமையின்பாற்பட்டது. (Right to privacy confers on a woman, "a right of free choice as to whether, where and how her body is to be used for the procreation of children and also the choice of when and by whom the various

1. A.I.R. 1983 A.P. 356.

parts of her body are to be sensed."). இந்த அந்தரங்க உரிமை, 21–வது ஷரத்தின் கீழான சுதந்திர உரிமையின் ஒரு பகுதியாக உள்ளது. தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கும் தீர்வழியை, இந்து திருமணச் சட்டத்தின் 9–வது பிரிவின் வாயிலாக அங்கீகரிப்பதன் வாயிலாக, அரசு இந்திய அரசியலமைப்பின் 21–வது ஷரத்தின் வாயிலாக ஒரு பெண்ணிற்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை சுதந்திர உரிமையை மீறுகிறது.

(2) 14–வது ஷரத்து, சமத்துவ உரிமையைக் கூறுகிறது. அதாவது சமநிலையில் உள்ளவர்கள் சமமாக பாவிக்கப்பட வேண்டும் என்பது சமத்துவ உரிமையின் அடிப்படை தத்துவமாகும். ஆனால் மேற்படி 9–வது பிரிவின் கீழ் வழங்கப்படும் தீர்வழி, திருமணமான ஆண் மற்றும் திருமணமான பெண் ஆகிய இருபாலருக்கும் பொதுவாக உள்ளது. இது சமநிலையில் இல்லாத இருபாலரை சமமாக பாவிப்பதாக உள்ளது. எனவே மேற்படி 9–வது பிரிவு, 14–வது ஷரத்தை மீறுவதாக உள்ளது.

இவ்வாறாக மேற்கண்ட இரண்டு காரணங்களின் அடிப்படையில், 9–வது பிரிவு அரசியலமைப்பற்றது (Sec. 9 of Hindu Marriages Act is unconstitutional) என்று சரிதாவின் தரப்பில் வாதம் புரியப்பட்டது. மேல்முறையீட்டில் மேற்படி வழக்கை ஆராய்ந்த நீதியரசர் திரு.பி.ஏ.சௌத்ரி அவர்கள் சரிதாவின் மேற்கண்ட வாதங்களை ஏற்றுக் கொண்டு, குழந்தைப் பேற்றிற்காக ஒரு மனைவியை அவளுடைய விருப்பத்திற்கு விரோதமாக கணவனுடன் உடலுறவு வைத்துக் கொள்ள வற்புறுத்துவதன் வாயிலாக, பிரிவு 9–ஆனது அம்மனைவியின் அந்தரங்க உரிமையை மீறுவதாக உள்ளது என்று கூறி, அப்பிரிவை நீக்கறவு (struck down) செய்தார். இதன் விளைவாக, தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கக் கோரி வெங்கட சுப்பையா தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்புரைத்தார்.

Smt. Harvinder Kaur v. Harmander Singh[1] - இவ் வழக்கிலும் தனது தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கக் கோரி இந்து திருமணச் சட்டம் 9–வது பிரிவின் கீழ் மனுச் செய்பவர், கணவரே ஆவார். மேற்படி சரிதா வழக்கில் மேற்கண்ட 9–வது பிரிவானது அரசியலமைப்பற்றது; செல்லாதது என்று ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் கூறிய தீர்ப்பைச் சுட்டிக்காட்டி மேற்படி மனுவை, அவரது மனைவி எதிர்க்கிறார்.

ஆனால் சரிதா வழக்கில் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் கூறிய கருத்தை, இவ்வழக்கில் டெல்லி உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்க வகை செய்யும், இந்து திருமணச் சட்டத்தின் 9–வது பிரிவு, ஷரத்து 21 மற்றும் 14–ன் கீழான சுதந்திரங்களை

1. A.I.R. 1984 Del. 66.

எவ்வகையிலும் மீறவில்லையென்றும், எனவே அப்பிரிவு அரசியலமைப்பிற்குட் பட்டதே என்றும் டெல்லி உயர் நீதிமன்றம் நிலைநிறுத்தியது.

இதற்கு அடிப்படையாக அவ்வுயர் நீதிமன்றத்தின் **நீதியரசர் திரு. அவத் பிஹாரி ரோஹாட்கி (Mr. Justice Avadh Behari Rohatgi)** கூறிய கருத்துரைகள் வருமாறு. திருமணம் எனும் கருத்துருவில் பாலின உடலுறவு (sexual intercourse) என்பது ஒரு கூறு மட்டுமே. தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளித்து தீர்வழி வழங்குவதன் நோக்கமே, தம்பதிகள் உடனுறைந்து ஒன்றாக வாழ வேண்டும் என்பதும், திருமண உறவு பந்தத்துடன் வாழ்வைத் தொடர வேண்டும் என்பதும், திருமணம் எனும் அமைப்பை நிலைநிறுத்த வேண்டும் என்பதுமே ஆகும். மேற்கண்ட தீர்வழி வழங்கப்பட்ட பிறகும், தம்பதியினர் ஓராண்டு காலம் வரை சேர்ந்து வாழ முயற்சிக்கவில்லையானால் அல்லது இயலவில்லை யானால், இந்து திருமணச் சட்டத்தின் 13 (1–A)(ii)–ன் கீழ் மணமுறிவு பெற விண்ணப்பிக்கலாம். எனவே மேற்படி பிரிவு 13 (1–A) (ii)–ன் கீழ் இவ்வாறு வகை செய்யப்பட்டிருக்கும் பொழுது, அதைக் கருத்தில் கொள்ளாமல், பிரிவு 9–ஐ அரசியலமைப்பற்றது என விளம்பக் கோருவது, ஒரு குறுகிய கண்ணோட்டத் தின்பாற்பட்டதாகும் என்று கூறி, பிரிவு 9 அரசியலமைப்பிற்குட்பட்டதே என்று கருத்துரைத்தார். இதனடிப்படையில், கணவனின் தாம்பத்திய உறவு உரிமையிலிருந்து விலகி இருப்பதற்கு வலுவான காரணங்கள் எதையும் மனைவி காட்டத் தவறும் பொழுது, அக்கணவனுக்கு அவ்வுரிமைகள் வழங்கப்படும் என்று இறுதியாக தீர்ப்புரைத்தார்.

Saroj Rani v. Sudarshan Kumar[1] - இந்து திருமணச் சட்டத்தின் 9–வது பிரிவு அரசியலமைப்பிற்குட்பட்டதா இல்லையா என்பது குறித்து மேற்கண்டவாறு உயர் நீதிமன்றங்களுக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமையை மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் நீக்கி, அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம், 9–வது பிரிவானது அரசியலமைப்பிற்குட்பட்டதே என்று தீர்ப்புரைத்தது. அதாவது டெல்லி உயர் நீதிமன்றம் கூறிய கருத்தை ஏற்றுக் கொண்டு, முன்னதாக சரிதா வழக்கில் ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் கூறிய கருத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டது.

II. நீதிமுறைப் பிரிவு (Judicial Separation) [பிரிவு 10]:

நீதிமுறைப் பிரிவு என்பது தற்காலிகமாகத் தாம்பத்திய உறவும், வாழ்வும் நிறுத்தி வைக்கப்படுவதாகும். சம்பந்தப்பட்டவர்கள் விரும்பினால், அவர்கள் முன்போல் சேர்ந்து வாழ எந்தத் தடையும் கிடையாது. நீதிமுறைப் பிரிவு ஏற்பட்டு விட்டதால் திருமணம் செல்லாததாகிவிடாது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் வேறு மணம் புரிந்து கொள்ள முடியாது.

1. A.I.R. 1984 S.C. 1562.

1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் வருவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ, திருமணம் புரிந்து கொண்ட கணவனோ அல்லது மனைவியோ நீதிமுறைப் பிரிவு கோரி மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். அதற்கு பிரிவு 13(1)–ல் கூறப்பட்டுள்ள காரணங்களில் ஏதேனும் ஒன்று காட்டப்பட வேண்டும். ஒரு மனைவி அத்தகைய மனுவை தாக்கல் செய்யும் போது, பிரிவு 13(2)–ல் கூறப்பட்டுள்ள காரணங்களில் ஏதேனும் ஒன்றைக் காட்டலாம். அதாவது மணமுறிவு (விவாகரத்து) கோருவதற்குரிய காரணங்களில் ஏதேனும் ஒன்றினைக் காட்டினால் போதும். **[பிரிவு 10(1)]**. [பிரிவு 13(1) மற்றும் பிரிவு 13(2)–ல் கூறப் பட்டுள்ள அக்காரணங்களை பின்வரும் 'மணமுறிவு' எனுத் தலைப்பில் காண்க.]

நீதிமுறைப் பிரிவிற்குத் தீர்ப்பாணை வழங்கப்பட்டுவிட்டால் மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவனும் மனைவியும் போல வாழ வேண்டிய அவசியமில்லை. ஆனால் கணவனோ அல்லது மனைவியோ மனுச் செய்து கொண்டால், மனுவில் கூறப்பட்டிருப்பவை உண்மை என்று நீதிமன்றம் திருப்தியடைந்தால், தீர்ப் பாணையை இரத்து செய்வது நியாயம் என்று நீதிமன்றம் கருதினால், அப்படிச் செய்யலாம். **[பிரிவு 10(2)]**. அதாவது, நீதிமுறைப் பிரிவின் பொழுது ஒருவேளை கணவனும் மனைவியும் மனம் மாறி சேர்ந்து வாழ விரும்பி அவர்களில் எவரேனும் மனுச் செய்தால், நீதிமன்றம், தான் நீதிமுறை பிரிவிற்கு வழங்கிய தீர்ப்பாணையை இரத்து செய்யலாம்.

நீதிமுறையில் பிரிந்தவர்கள், தங்களுக்குள் மீண்டும் எவ்விதத்திலும் ஓராண்டு வரை தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவில்லையெனில், அத்தம்பதியினர் அதற்குப்பின் மணமுறிவிற்கான தீர்ப்பாணையைப் பெறலாம். **[பிரிவு 13(1-A) (i)]**.

Gomathi v. Kumaraguruppan[1] - நீதிமுறையில் பிரிந்து போவதற்கு தீர்ப்பாணை வழங்கப்பட்டிருந்து, அத்தீர்ப்பாணைக்குப் பின்னர் ஓராண்டு அல்லது அதற்கும் மேலான காலகட்டத்திற்கு தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழத் தொடங்கவில்லையானால், மணமுறிவு கோரி நீதிமன்றத்திடம் விண்ணப் பிக்கலாம், என்று இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13 (1–A) (i) கூறுகிறது. மேற்படி வழக்கில் நீதிமுறையில் பிரிந்து போவதற்கு வழங்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் மேற்கண்ட ஓராண்டு காலத்தை எதிலிருந்து கணக்கிடுவது எனும் வினா எழுந்தது. அப்பொழுது சென்னை உயர் நீதிமன்றம், விசாரணை நீதிமன்றத்தால் (கீழமை நீதிமன்றத்தால் – Trial Court) எந்த தேதியில் நீதிமுறையில் பிரிந்து போவதற்கு தீர்ப்பாணை வழங்கப்பட்டதோ, அந்த தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் சேர்ந்து வாழ இயலாத தம்பதியினர் மணமுறிவிற்கு விண்ணப்பிக்கலாம் என்றும், மேல்முறையீடு செய்யப்பட்டுவிட்டதால் அதில் வழங்கப்படும் தீர்ப்பிலிருந்து ஓராண்டு காலம் என்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதில்லை என்றும், அதுபோல் மேல்முறையீடு

1. AIR 1987 Mad. 259

செய்யப்பட்டதனால் விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் நடந்த நடவடிக்கைகள் அனைத்தும் நீக்கப்பட்டு விட்டன என்று பொருளல்ல என்றும் கூறியது.

III. இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணம் (Void and Voidable Marriage) (Nullity of Marriages)[பிரிவு 11 & 12]:

(இது குறித்து வினா எண். 6–ல் கண்டுள்ளோம்.
எனவே அங்கு காண்க.)

IV. மணமுறிவு (Divorce) [பிரிவு 13]:

மணமுறிவு குறித்த மூன்று கோட்பாடுகள் (Three Theories of Divorce):

மணமுறிவு என்பது, தம்பதியருக்கிடையிலான மணவாழ்க்கை உறவுகளை துண்டிப்பதன் மூலம் திருமண பந்தத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதாகும். இங்கு திருமணத்தால் விளைந்த கணவன்– மனைவி எனும் உறவு அற்றுப் போகிறது. மணமுறிவு பெற இந்து திருமணச் சட்டத்தில் பல்வேறு அடிப்படைகள் (grounds) கொடுக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படைகளை, நாம் முன்னதாக மூன்று கோட்பாடுகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவை வருமாறு.

(1) குற்றமிழைப்பு அல்லது தவறிழைப்புக் கோட்பாடு (Offence, guilt or fault theory of divorce): திருமணத் தரப்பினர்களில் எவரேனும் பிறருடன் உடலுறவு கொண்டு வாழ்தல், கொடுமைப்படுத்துதல், கைவிட்டுச் செல்லுதல் போன்ற திருமணக் குற்றங்களைச் செய்யும் பொழுது, பாதிக்கப்பட்டவர் மேற்படி கோட்பாட்டின் அடிப்படையில் மணமுறிவு எனும் தீர்வழியைக் கோரலாம். மேலும் திருமணத் தரப்பினர்களில் ஒருவர் எவ்வித திருமணக் குற்றத்தையும் இழைக்காத ஒரு அப்பாவியாக இருக்கலாம். ஆனால், அவருக்கு தீர்க்க முடியாத தொழுநோய் ஏற்படுதல், பித்துப் பிடித்தல் போன்ற தவறுகையினால் மற்றொரு தரப்பினர் மணமுறிவு கோரலாம். இத்தகு அடிப்படைகள் இந்து திருமணச் சட்டத்தின் **13 (1) மற்றும் 13 (2) ஆகிய பிரிவுகளில்** விளக்கப்பட்டுள்ளது.

(2) ஒப்புதல் கோட்பாடு (Consent theory of divorce): ஒரு திருமணம், சம்பந்தப்பட்ட மணமக்களின் ஒப்புதல் இல்லாமலும், அவர்களது விருப்பத்திற்கு விரோதமாகவும் நடந்திருக்கலாம். அல்லது அவர்களால் தொடர்ந்து பரஸ்பரம் கருத்தொருமித்து வாழ இயலாமல் போகலாம். இந்நிலையில், அவர்கள் இருவரும் பரஸ்பரமாக அளிக்கும் ஒப்புதலின் பேரில், அவர்களது திருமணம் முறிக்கப்படும். இந்து திருமணச் சட்டத்தின் **பிரிவு 13–B** இவ்வகையிலான மணமுறிவு குறித்து விளக்குகிறது.

(3) ஒன்று சேர இயலாமல் நின்று போதல் கோட்பாடு (Breakdown

theory): திருமணம் என்பது நெடுந்தூர வாழ்க்கைப் பயணம். அப்பயணத்தில் தம்பதிகள் மகிழ்வுடன் தொடர்ந்து நடை போட்டால்தான், அங்கு திருமணம் நடைபெற்றதின் உண்மையான பயன் வெளிப்படுகிறது. ஆனால் திருமண பந்தம் வெறும் ஏட்டளவிலும் பேச்சளவிலும் மட்டுமே இருந்து, அங்கு தம்பதிகள் உண்மையில் சேர்ந்து வாழாமல் இருப்பின், அத்திருமணம் தடைப்பட்ட, நின்று போன பயணமாகும். இதுவே, ஒன்று சேர இயலாமல் நின்று போதல் கோட்பாடு எனப்படுகிறது. இவ்வாறு ஒன்று சேர இயலாத அத்தம்பதிகள் தங்கள் மணவாழ்க்கைப் பயணத்திற்கு, மணமுறிவு எனும் ஒரு முற்றுப்புள்ளியை வைத்துக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, இந்து திருமணச் சட்டத்தின் **பிரிவு 13 (1–A) (i)**–ன்படி தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளித்து நீதிமன்றம் தீர்ப்பாணை (Decree of restitution of conjugal rights) வழங்கிய பிறகு அல்லது **பிரிவு 13 (1–A) (ii)**–ன்படி நீதிமுறைப் பிரிவிற்கு நீதிமன்றம் தீர்ப்பாணை (Decree of judicial separation) அளித்த பிறகு, ஓராண்டிற்கு அல்லது அதற்கும் மேலாக சம்பந்தப்பட்ட தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழ்தலை தொடங்கவில்லையானால், அவர்கள் மணமுறிவு கோரி நீதிமன்றத்திடம் மனுச் செய்யலாம்.

மணமுறிவு கோருவதற்கான அடிப்படைகள் (The Grounds for Divorce):

சேர்ந்து வாழ வழியே இல்லை எனும் பொழுது தம்பதியினருக்கு கிடைக்கும் அதிகபட்சமான தீர்வழி மணமுறிவு கேட்பதுதான். 1955–ன் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)–ன்படி, இச்சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்னும், பின்னும் நடைபெற்ற திருமணங்களினால் இணைந்த கணவன் அல்லது மனைவி தரும் மனுவின் பேரில் மணமுறிவு செய்யப்படலாம். அவ்வாறு மணமுறிவுத் தீர்ப்பாணை வழங்கப்படுவதற்கு பின்வரும் அடிப்படைகளில் (Gronds) எதேனும் ஒன்றை மனுதாரர் தனது மனுவில் காட்ட வேண்டும்.

பிரிவு 13(1)–ன் கீழான உட்கூறுகள் கூறுவதாவது (1976–ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின்படி) :

(i) திருமணத்திற்குப் பிறகு அவரது வாழ்க்கைத் துணை (spouse) அல்லாத வேறொருவருடன் தானே விரும்பி உடலுறவு கொண்டிருக்கிறார் (had voluntary sexual intercourse); அல்லது

திருமணத்திற்குப் பிறகு, எப்போதேனும் ஒரு முறை விரும்பி உடலுறவு கொண்டிருந்தாலும், அந்த ஒரு சம்பவத்தைக் காட்டியே மணமுறிவு கோரலாம். இது 1976–ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின் விளைவாகும். ஆனால் இதற்கு முன்பு, திருமணத்திற்குப் பிறகு மணமுறிவு மனு தாக்கல் செய்யப்படும் தேதி வரை வாழ்க்கைத் துணையல்லாத மற்றொருவருடன் தொடர்ந்து பன்முறை உடலுறவு கொண்டிருந்தால்தான், மணமுறிவு கோர வழி உண்டு. அதாவது, பிறன்மனை

புணர்ந்து வாழ்ந்து கொண்டிருந்திருக்க வேண்டும் (living in adultery). ஆனால் தற்பொழுது 1976–ஆம் ஆண்டின் திருத்தச் சட்டமானது இதை மேற் கண்டவாறு எளிதாக்கிவிட்டது. இது மணமுறிவு பெறுதலை சுலபமாக்கிவிட்டது.

Chinuthakuttai v. Subramanian[1] - இவ்வழக்கில் எழுந்த பிரச்சனை சற்று மாறுபட்டது. அதாவது ஒரு கணவன், அவரது மனைவி மற்றொருவருடன் உடலுறவு கொண்டு வாழ்ந்து வருகிறாள், எனும் அடிப்படையில் மணமுறிவு கோரி மனுச் செய்கிறார். இதற்குக் காரணமாக அவர் கூறும் வாதங்கள் பின்வருமாறு. (1) தனக்கு 8–1–1976–ஆம் தேதியில் விதை நாளம் நீக்கும் அறுவை (கரு உற்பத்தி செய்யும் திறனை இழக்கச் செய்யும் அறுவை - Vasactomy operation) செய்யப்பட்டது. (2) ஆனால் தனது மனைவி 30–8–1978–ஆம் தேதியில் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். (3) கருவைக் கொடுப்பதற்குண்டான ஆண்மை திறனே தனக்கு அறுவை மூலம் நீக்கப்பட்ட பிறகு, தனது மனைவிக்கு எப்படி குழந்தை பிறக்கும்? (4) எனவே அவள் மற்றொரு நபருடன் கொண்ட உடலுறவினால்தான், தற்பொழுது குழந்தை பிறந்துள்ளது.

ஆனால் மேற்படி வாதங்களை கேரளா உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாமல், மேற்படி வழக்கை வேறொரு கோணத்தில் ஆய்ந்தது. அதன்படி ஆடவருக்கு ஆண்மைத் திறனை நீக்குவதற்காக செய்யப்படும் அறுவைகள் அனைத்தும் நூறு சதவீதம் வெற்றியடைவதில்லை என்றும், அத்தகு அறுவைகள் சில தோல்வியுற்றுள்ளன என்றும், இதனால் மேற்படி அறுவைக்கு பிறகும் சம்பந்தப் பட்டவரின் மனைவி கருத்தரிக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது என்றும் கேரளா உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது. இவற்றின் அடிப்படையில், அக்கணவர், அவரது மனைவி மற்றொருவருடன் உடலுறவு கொண்டுள்ளாள்; அதனால்தான் குழந்தை பிறந்தது என்பதை மெய்ப்பிக்கவில்லை என்று கூறி, மணமுறிவு கோரும் அவரது மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்புரைத்தது.

A.Hemamalini v. A.Pankajanabhan[2] - திருமணத் தரப்பினர் களில் ஒருவர் பிறன்மனை புணர்ந்து வாழ்ந்து வருகிறார் என்று மற்றொருவர் குற்றஞ்சாட்டி, மணமுறிவு கோரும் பொழுது, அந்த மற்றொருவர்தான் அக்குற்றச் சாட்டை மெய்ப்பிக்க வேண்டும் என்று மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

(i-a) திருமணத்திற்குப் பிறகு மனுதாரரை கொடுமைப்படுத்தியிருக் கிறாரென்றால் (treated the petitioner with cruelty); அல்லது

'கொடுமை' (cruelty) என்பதின் பொருள் பரந்து விரிந்தது. பொதுவாக ஒருவரின் வாழ்க்கைக்கோ அல்லது உடல் நடத்திற்கோ பிறரால் (கணவன் அல்லது மனைவி) தீங்கு நேரும் அபாயம் இருந்தால் அல்லது தீங்கு நேர்ந்தால், அது 'கொடுமைப்படுத்துதல்' எனப்படும்.

1. A.I.R. 1987 Ker. 5
2. (1995) 1 D.M.C. 258

கொடுமை - இரண்டு வகைகள் :

'கொடுமை' என்பது, **(அ) உடலுக்கு விளைவிக்கப்படும் கொடுமை (Physical cruelty); (ஆ) உள்ளத்திற்கு விளைவிக்கப்படும் கொடுமை (Mental cruelty)** என இரு வகைப்படும். இதில் உடலுக்கு விளைவிக்கப்படும் கொடுமை என்பதை யாவரும் அறிவோம். கணவன் மனைவியை கன்னத்தில் அறைந்தால், அது உடல் கொடுமை ஆகும். ஆனால் மனைவி மனம் நோகும்படி கணவன் ஏதேனும் செய்தால், அது உள்ளக் கொடுமை ஆகும். **இது 'சட்டக் கொடுமை' (legal cruelty)** எனவும் கூறப்படுகிறது. இவை தொடர்பாக பின்வரும் சில முக்கிய வழக்குகளைக் கவனிப்போம்.

முக்கிய வழக்குகள்:

Sreepadachar v. Vasantha Bai[1] – இவ்வழக்கில் மனைவி, கணவனை ஒரு பொது இடத்தில் இழிவாகப் பேசி அவமானப்படுத்தினாள். தானே தீக்குளித்துக் கொண்டு அவளது கணவனை காவல்துறையினரிடம் சிக்குமாறு செய்யப்போவதாக அச்சுறுத்தினாள். இதுவும் கணவனின் உள்ளத்திற்கு செய்யப்பட்ட கொடுமையாக (mental curelty) கருதப்பட்டது.

Rooplal v. Kartaro Bai[2] – இவ்வழக்கில் மனைவிக்கு ஒரு நோய் இருந்ததன் காரணமாக, அவளது மூக்கிலிருந்து ஒரு கெட்ட வாசனை வீசிக் கொண்டிருந்தது. இது கணவனின் உள்ளத்திற்கு செய்யப்பட்ட கொடுமையாக (mental curelty) கருதப்பட்டது.

Rajinder Singh v. Tarawati[3] – இவ்வழக்கில் கணவன் ஒரு விபத்தில் சிக்கி பல மாதங்கள் மருத்துவமனையில் படுத்த படுக்கையாக சிகிச்சை பெற்று வரும் காலத்தில், ஒரு முறையேனும் அவனது மனைவி, மருத்துவமனை வந்து அவனைப் பார்க்காதது, ஒரு உள்ளக் கொடுமையாக கருதப்பட்டது.

Satya v. Suri Ram[4] – கணவனின் மற்றும் அவனது உறவினர்களின் விருப்பத்திற்கு மாறாக மனைவி தானே விரும்பி கருக்கலைப்பு செய்து கொண்டது. அம்மனைவி கணவனுக்கு செய்த உள்ளக் கொடுமையாக கருதப்பட்டது.

ஆனால் ஒரு மனைவி புகை பிடித்தாலோ (சிகரெட், பீடி பிடித்தல்) அல்லது கல்வியறிவற்று இருந்தாலோ, அது கணவனுக்கு இழைக்கப்பட்ட ஒரு கொடுமையாக கருதப்படாது என ஒரு வழக்கில் பாட்னா உயர் நீதிமன்றம் கூறியது.

1. A.I.R. 1970 Mys. 232.
2. A.I.R. 1979 J & K 158.
3. A.I.R. 1980 Del. 76.
4. A.I.R. 1983 P & H 252.

Dastane v. Dastane[1] – இது ஒரு மிக முக்கியமான வழக்காகும். இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, 1956–ஆம் ஆண்டில் திருமணம் நடந்தது. மனைவி தன்னைக் கொடுமைப்படுத்துகிறாள் எனும் அடிப்படையில், கணவன் நீதிமுறைப் பிரிவிற்கு மனுச் செய்கிறார். இக்கொடுமைக்கு அடிப்படையாக அவர் மனைவி மீது கூறும் குற்றச்சாட்டு என்னவென்றால், அவள் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும், வீட்டிற்கு தீ வைத்துவிடுவதாகவும் அச்சுறுத்துகிறாள்; தன்னையும் தனது பெற்றோர்களையும் தரக்குறைவாக நடத்துகிறாள் என்பதேயாகும். மேல்முறையீட்டில் பம்பாய் உயர் நீதிமன்றம்[2], மேற்கண்ட செயல்கள் கணவனுக்கு மனைவியால் இழைக்கப்படும் சட்டக் கொடுமைகளாகும் (legal cruelty) எனும் அடிப்படையில், அக்கணவனுக்கு நீதிமுறைப் பிரிவிற்கான தீர்ப்பாணையை வழங்கிவிடுகிறது. அப்பொழுது ஒரு செயல் சட்டக் கொடுமையா என்பதைத் தீர்மானிப்பதற்கு பின்வரும் அய்ந்து சோதனைகளை (five tests to determine whether a given conduct amounts to legal cruelty) வகுத்துரைத்தது. அவை,–

(1) கொடுமையென சாட்டுரைக்கப்படும் செயல்கள், சாட்சியச் சட்டத்தின்படி மெய்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) அத்தகு செயல்களிலிருந்து தனக்கு உண்மையிலேயே தீங்கு அல்லது கேடு விளையும் எனும் அச்சம் மனுதாரரின் மனதில் (apprehension) இருக்க வேண்டும்.

(3) அந்த அச்சம், தரப்பினர்களின் சமூக–பொருளாதார மற்றும் உடலியல் – உளவியல் நிலைகளின் அடிப்படையில் நியாயமான அச்சமாக (reasonable apprehension) இருக்க வேண்டும்.

(4) மனுதாரர் தனது நிலையையே தனக்கு அனுகூலமாக எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது.

(5) கொடுமைச் செயல்களை தனது அல்லது அவளது நடத்தையின் காரணமாக மனுதாரர் மன்னித்திருக்கக் கூடாது.

ஆனால் பம்பாய் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, அம்மனைவி உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தாள். அப்பொழுது உச்ச நீதிமன்றம், கொடுமை குறித்த சட்ட நிலைப்பாட்டை முழுமையாக ஆராய்ந்தது. மேற்கண்ட வழக்கில் மனைவி செய்த செயல்கள் கொடுமையென்று பம்பாய் உயர் நீதிமன்றம் கூறியபடி வைத்துக் கொண்டாலும், அச்செயல்களை அக்கணவன் மன்னித்துள்ளான். அதாவது, மேற்படி கணவனும் மனைவியும் தொடர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள்; மூன்று குழந்தைகளை பெற்றிருக்கிறார்கள். இந்நடத்தை ஒன்றே மனைவியின்

1. A.I.R. 1975 S.C. 1534.
2. AIR 1970 Bom. 312.

கொடுமையை மன்னித்து, அவளுடன் அக்கணவன் வாழ்ந்து வந்திருப்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. எனவே ஒரு தரப்பினரால் செய்யப்படும் கொடுமை எப்பொழுது மன்னிக்கப்பட்டு, மறந்துவிடப்படுகிறதோ அங்கு திருமணக் குற்றம் எதுவும் புரியப்படவில்லை என்றுதான் கொள்ள வேண்டுமென உச்ச நீதிமன்றம் கருத்துரைத்து, கணவனின் மனுவைத் தள்ளுபடி செய்தது.

Balasubramanian v. Vijayalakshmi Balasubramanian [1] - தனது மனைவி, தன்னுடன் அல்லாமல் மற்றொரு ஆடவனுடன் உடலுறவு வைத்துக் கொண்டிருக்கிறாள் என்று கணவன் கூறுவது மிகக் கடுமையான குற்றச்சாட்டாகும். இது அக்கணவனின் கொடுமையான நடத்தையைச் (cruel conduct) சுட்டிக்காட்டுகிறது. எனவே மேற்படி குற்றச்சாட்டை கணவன் மெய்ப்பிக்காதபட்சத்தில், 'கொடுமை' எனும் அடிப்படையில் அம்மனைவி இந்து திருமணச் சட்டத்தின் கீழான பரிகாரங்களை (நீதிமுறைப் பிரிவு, மணமுறிவு போன்ற பரிகாரங்கள்) நீதிமன்றத்தில் கோரிப் பெறலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

G.V.N.Kameswara Rao v. G.Jabilli[2] - திருமணத் தரப்பினர்களில் ஒருவரால் மற்றொருவருக்கு இழைக்கப்படும் உள்ளக் கொடுமை என்பதை, அக்கொடுமைக்குள்ளாகும் தரப்பினரின் அந்தஸ்து, கல்விப் பின்னணி, அவர் வாழ்ந்து வரும் சூழல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் கூறியது. திருமணத் தரப்பினர்களில் ஒருவர் மற்றொருவருக்கு எதிராகக் காவல் நிலையத்தில் பொய்யான புகார் கொடுத்து அம்மற்றொருவரின் நற்பெயருக்கும், சமுதாய நன்மதிப்புக்கும் களங்கம் ஏற்படுத்துவது, உள்ளக் கொடுமையாகும் என்று மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் மேலும் கருத்துரைத்தது.

Savitri Pandey v. Prem Chandra Pandey[3] - 'கொடுமை' என்பது அன்றாட குடும்ப வாழ்வில் தம்பதியரிடையே ஏற்படும் சாதாரண ஊடல்கள் மற்றும் கருத்து வேற்றுமைகளிலிருந்து மாறுபட்டதாகும். ஊடல் இல்லாமல் கூடல் ஏது? சண்டை இல்லாமல் சமாதானம்தான் ஏது? அனுசரித்துச் செல்வதுதான் இல்வாழ்க்கை என்பதை உணர்ந்த குடும்பத்தில், ஊடல்களும், சண்டைகளும் மறைந்து போகும். ஆனால், குடும்ப வாழ்வில் 'கொடுமை' எனும் பதம் எப்பொழுது வேர் விடுகிறது என்றால், தம்பதியர்களில் ஒருவர் மற்றொருவருடன் வாழ்வது அபாயகரமானது (be dangerous for a spouse to live with the other) என்று தோன்றுமளவிற்கு அம்மற்றொருவரின் நடத்தை அமையும் பொழுதுதான் என்று மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் விளக்கமளித்தது.

1. (1999) 7 SCC 311: A.I.R. 1999 S.C. 3070.
2. (2002) 2 SCC 296: A.I.R. 2002 S.C. 576.
3. (2002) 2 SCC 73: A.I.R. 2002 S.C. 591.

Sobha Rani v. Madhukar Reddi[1] - மேற்படி வழக்கில் அடிக்கடி வரதட்சணை கோருவதும் 'கொடுமை'–யே எனப்பட்டது. இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, மனைவி (உயிரியல் விஞ்ஞானத்தில் பட்ட மேற்படிப்பு படித்தவர்) **கொடுமையின்** அடிப்படையில் மணமுறிவு கோரி கணவன் (மருத்துவர்) மீது வழக்கிட்டார். அவர் தனது கணவரும், மாமனார்–மாமியரும் அடிக்கடி வரதட்சணை கோரினார்கள் என்பதை நீதிமன்றத்தில் மெய்ப்பித்தார். ஆனால் கீழமை விசாரணை நீதிமன்றமும் (Trial Court), ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றமும் வரதட்சணை கோருவது தொல்லை கொடுப்பதாகாது (demand for the dowry was not such as to constitute **harassment**) என்று கூறி, மணமுறிவு கோரும் அம்மனைவியின் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டது.

இதை எதிர்த்து அம்மனைவி உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தார். அங்கு 'கொடுமை' எனும் பதத்திற்கு, இந்து திருமணச் சட்டத்தில் வரையறை கொடுக்கப்படவில்லை என்றும், அது இந்திய தண்டனைச் சட்டத்தில் 1984–ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தால் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 498–A பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது என்றும், அப்பிரிவின்படி சொத்து அல்லது பணமதிப்பு கொண்ட பத்திரம் எதற்காகவும் செய்யப்படும் சட்டமுரணான கோரிக்கையை நிறைவேற்றித் தர வற்புறுத்தும் நோக்குடன் ஒரு பெண்ணிற்கோ அல்லது அவர் சார்ந்த மற்றவர்களுக்கோ தொல்லை கொடுப்பதே 'கொடுமை'–யாகும் என்றும், இந்த வரையறை குற்றவியல் சட்டத்திற்கு மட்டுமே பொருந்தும்; உரிமையியல் சட்டத்திற்கு பொருந்தாது என்றும், சட்டமுரணாக வரதட்சணை கோருவது, தொல்லையையும் விளைவிக்க வேண்டும் என்று ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் கருதிவிட்டது என்றும், அக்கருத்து தவறானது என்றும் (The High Court thought that the unlawful demand for dowry should also cause harassment; this is wrong), திருமணச் சட்டங்களைப் பொருத்தவரை வரதட்சணைக்காக கோரிக்கை செய்வதே 'கொடுமை' என்று கூறப் போதுமானது என்றும் உச்ச நீதிமன்றம் கூறி, அம்மனைவிக்கு அவர் கோரியபடி மணமுறிவு வழங்க தீர்ப்புரைத்தது.

மேலும் 'கொடுமை' குறித்து உச்ச நீதிமன்றம் கூறுகையில் "கொடுமையின் வகைகள் ஒன்றுக்கொன்று நெருங்கியவையல்ல. அது ஒவ்வொரு நேர்விற்கேற்பவும் மாறுபட்டது. நாங்கள் பொதுவாக ஒத்த மாதிரி இல்லாத மனித நடவடிக்கைகளை ஆராய்கிறோம். மனிதனின் இன்ன நடத்தைதான் 'கொடுமை' என்று எல்லையிட்டுக் கூற முடியாது. மனித நடத்தை, திறன் அல்லது கொடுமையென கூறப்படும் நடத்தையை பொறுத்துக் கொள்ள இயலாமை ஆகியவற்றைச் சார்ந்து, புதிய வகையான கொடுமை ஒவ்வொரு நேர்விலும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது," என்றுரைத்தது.

1. A.I.R. 1998 S.C. 121

(i-b) மனுச் செய்வதற்கு உடனடி முன்னதான தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகளுக்கு குறைவில்லாத ஒரு காலகட்டத்திற்கு மனுதாரரை, எதிர்மனுதாரர் கைவிட்டுவிட்டுச் (has deserted the petitioner for a continuous period of not less than two years immediately preceding the presentation of the petition) சென்றுவிட்டார் என்றால்; அல்லது

அதாவது, மணமுறிவு கோரி மனுச் செய்வதற்கு முன்பாக குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு கணவன், மனைவி இருவரில் ஒருவர் மற்றொருவரை விட்டு எவ்வித நியாயமான காரணமுமின்றிப் பிரிந்து போயிருந்தால், அதனால் பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் மணமுறிவிற்கான தீர்வழி பெறலாம்.

கைவிட்டுச் செல்லுதலுக்கு தேவையான இரு அடிப்படைக் கூறுகள்: 'கைவிட்டுச் செல்லுதலுக்கு' இரண்டு கூறுகள் மிகவும் முக்கியமானதாகும். (1) உண்மையான பிரிவு இருக்க வேண்டும். (factum of separation). (2) கைவிட்டுச் செல்லுதல் நிலையாக பிரிந்து வாழ வேண்டுமென்ற எண்ணத்துடன் கூடியதாக இருக்க வேண்டும் (animus deserendi - intention to desert). இந்த இரு கூறுகளும் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் வரையோ அல்லது அதற்கு மேலோ நீடித்திருக்க வேண்டும். இது தொடர்பான முக்கிய வழக்குகள் வருமாறு.

முக்கிய வழக்குகள்:

Bipin Chandra v. Prabhavti[1] – இவ்வழக்கில், மனைவி கணவனின் நண்பருடன் வீட்டை விட்டு வெளியேறி விட்டாள். பின்பு ஒரு நாள் தன் கணவனுக்கு கடிதம் ஒன்றை எழுதித் தான் அக்கணவனுடன் மீண்டும் சேர்ந்து வாழ விரும்புவதாகக் கூறினாள். ஆனால், கணவன், அவளைத் தன் வீட்டிற்கு வர வேண்டாம் எனத் தந்தி கொடுத்துவிட்டு, நீதிமன்றத்தில் மனைவி தன்னைக் கைவிட்டு சென்று விட்டதாக மனுச் செய்தான். ஆனால் நீதிமன்றம் மனைவியின் செயல் உண்மையிலேயே கைவிட்டுச் செல்லுதல் ஆகாது. ஏனெனில் இங்கு மனைவிக்குப் நிலையாகப் பிரிந்து வாழ வேண்டும் என்ற எண்ணமில்லை என்று தீர்ப்பு வழங்கியது.

Dhrubajaati v. Dila[2] – திருமணமான இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில் மனைவி, கணவனின் வீட்டை விட்டு தனது தாய் வீட்டிற்கு சென்றுவிட்டாள். பின்னர் நான்கு ஆண்டுகள் கழித்து, அவளது கணவன் இல்லாத சமயத்தில், கணவனின் வீட்டிற்கு வந்தாள்; மேலும் கணவன் வீடு திரும்புவதற்கு முன்னரே, தனது தாய் வீட்டிற்கும் திரும்பிவிட்டாள். மனைவி தன்னை விட்டு சென்றுவிட்டாள் (desertion) எனும் அடிப்படையில், அக்கணவன் மணமுறிவு கோரி மனு செய்தான். இவ்வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்றம்,

1. A.I.R. 1957 S.C. 176.
2. A.I.R. 1979 Ori. 93.

கணவன் இல்லாத சமயத்தில் கணவனின் வீட்டிற்கு மனைவி வந்து சென்றதால், அவள் தனது கணவனை கைவிட்டு செல்லும் எண்ணத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள் எனும் அடிப்படையில் மணமுறிவு வழங்க மறுத்துவிட்டது. இதனால் கணவன் ஒரிஸ்ஸா உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தான். அங்கு, மனைவி அவளது கணவனை கைவிட்டு சென்று விட்ட பிறகு, நான்கு ஆண்டுகள் கழித்து திடீரென ஒருநாள் கணவனின் வீட்டிற்கு வந்ததும், பின்னர் கணவன் வரும் முன்பாகவே தாய் வீட்டிற்கு திரும்பியதும், அம்மனைவி அக்கணவனுடன் சேர்ந்து வாழ வேண்டும் எனும் எந்த எண்ணத்தையும் பிரதிபலிக்கவில்லை என்றும், இது அக்கணவனை தொடர்ந்து கைவிட்டு வாழ்தலே ஆகும் என்றும், எனவே அக்கணவன் கோரியபடி மணமுறிவு வழங்கப்படுகிறது என்றும் மேற்படி வழக்கில் ஒரிஸ்ஸா உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Umesh Kumar v. Sashikumari[1] - கணவனுடன் சேர்ந்து வாழ்தலை முடிவிற்கு கொண்டு வரும் எண்ணம் ஏதும் இல்லாமல், ஒரு மனைவி தனது பணியை தொடர்வதற்காக வேறொரு ஊருக்கு மாற்றலாகி செல்வது, அக்கணவனை கைவிட்டுச் செல்லுதல் ஆகாது என்று மேற்படி வழக்கில் டெல்லி உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Bhagavathi Ammal v. Sethu[2] - மனைவியை கணவன் கைவிட்டு வாழ்ந்தாலும் அல்லது மனைவி தன்னை விட்டு செல்லும்படி அக் கணவன் செய்தாலும், அது கணவனின் கைவிடுகையே ஆகும் என்றும், இது **கொள்நிலையான கைவிடுகை (constructive desertion)** என்றும் சென்னை உயர் நீதிமன்றம் மேற்படி வழக்கில் நிலைநிறுத்தியது.

Mitra v. Premalatha Devi[3] - தம்பதிகளில் ஒருவர் மற்றொருவரை கைவிட்டு சென்றுவிட்டார் எனும் பொருண்மையை, இயலும் வரை நீதிமன்றத்தில் மெய்ப்பித்தால் போதுமானது. மாறாக அனைத்து விதமான நியாயமான அய்யப்பாடுகளுக்கும் அப்பால் மெய்ப்பிக்க வேண்டியதில்லை (Desertion may be proved by preponderance of probabilities. It is not necessary to establish it beyond all reasonable doubt), என்று மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

Ranganayaki v. Arunagiri[4] - தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்காக பிறப்பிக்கப்பட்ட ஒரு தீர்ப்பாணையின்படி மனைவி, தனது கணவனுடன் சேர்ந்து வாழ வந்தாள். ஆனால் நடந்ததோ வேறு. அதாவது அக்கணவன் அவளை அடித்துத் துன்புறுத்தியதோடு மட்டுமல்லாமல், ஒரு

1. A.I.R. 1987 Del. 235.
2. A.I.R. 1987 Mad. 224.
3. A.I.R. 1986 Pat. 308.
4. A.I.R. 1993 Mad. 174.

வேலைக்காரியை கூட்டிக் கொண்டு வந்து, அவளுடன் சேர்ந்து வாழவும் செய்தான். இதனால் மனம் வெறுத்துப் போன அம்மனைவி, கணவனின் வீட்டை விட்டு சென்று விட்டாள். இது கணவனை, மனைவி கைவிட்டுச் செல்லுகை என்பதாகாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Adhyatma Bhattar Alwar v. Adhayatma Bhattar Sri Devi[1] - இவ்வழக்கில் 'கைவிட்டுச் செல்லுதல்' (desertion) எனும் அடிப்படையில் மணமுறிவு கோருவதற்கு தேவையான கூறுகள் யாவை என்பது குறித்து உச்ச நீதிமன்றம் விளக்கமளித்தது. அக்கூறுகள் வருமாறு: (1) தம்பதியர் பிரிந்து வாழ்தல் (factum of separation); (2) சேர்ந்து வாழ்தலை நிரந்தரமாக முடிவிற்கு கொண்டு வர வேண்டும் எனும் எண்ணம் (the intention to bring cohabitation permanently to an end - animus deserendi); (3) மேற்கண்ட இரண்டு கூறுகளும், 'கைவிட்டுச் செல்லுதலின்' அடிப்படையில் மணமுறிவு கோருவதற்கு இந்து திருமணச் சட்டம் குறிப்பிடும் காலகட்டம் முழுமைக்கும் (அதாவது முழுமையான இரண்டு ஆண்டுகளுக்கும்) நிலையாகத் தொடர்ந்திருக்க வேண்டும் (the element of permanence which is a prime condition requires that both these essential ingredients should continue during the entire statutory period).

(ii) தம்பதிகளில் ஒருவர் வேறொரு மத்திற்கு மாறிவிட்டதால் இந்துவாகயில்லை என்ற காரணத்தினால் மற்றொருவர் மணமுறிவு கோரலாம் (has ceased to be Hindu by conversion to another religion); அல்லது

(iii) தம்பதிகளில் ஒருவர் தீர்க்க முடியாத புத்தி சுவாதீமனற்றவராக (has been incurably of unsound mind) அல்லது தொடர்ந்து அல்லது விட்டுவிட்டு புத்தி பேதலிப்பு (has been suffering continuously or intermittenly from mental disorder) நோய்குட்பட்டவராக இருப்பதால் அவருடன் சேர்ந்து மனுதாரர் (மற்றொருவர்) குடும்ப வாழ்க்கை நடத்த முடியாத நிலை இருப்பின், அதன் காரணமாக அவர் மணமுறிவு கோரலாம்; அல்லது

(iv) தம்பதிகளில் ஒருவர் தீராத மிகக் கொடிய தொழுநோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறாரென்றால், மற்றொருவர் மணமுறிவு கோரலாம் (has been suffering from a virulent and incurable form of leprosy); அல்லது

(v) தம்பதிகளில் ஒருவர் மிக எளிதில் தொற்றிக் கொள்ளத் தக்க பால்வினை நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறாரென்றால், மற்றொருவர் மணமுறிவு கோரலாம் (has been suffereing from veneral disease in a communicable form); அல்லது

1. (2002) 1 SCC 308: A.I.R. 2002 S.C. 88

(vi) மதம் எதனின் மார்க்கத்தை மேற்கொண்டு இந்த உலகப்பற்றை துறந்து விட்டிருந்தால் (has renounced the world by entering any religious order); அல்லது

(vii) தம்பதிகளில் ஒருவர் தொடர்ந்து ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் உயிருடன் உள்ளாரா இல்லையா என்ற செய்தி, அவர் உயிருடன் இருந்தால் நியாயமாக யார் யாருக்கு அவர் உயிருடன் இருப்பது தெரிய வேண்டுமோ அவர்களுக்கு தெரியாமல் இருக்கும் நிலையில் மற்றொருவர் மணமுறிவு கோரலாம்.

மணமுறிவிற்கான கூடுதல் அடிப்படைகள் (Additional Grounds for Divorce):

பிரிவு 13 (1–A)-ன்படி, இந்தச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்போ, பின்போ திருமணம் செய்து கொண்டவர்களில், யார் வேண்டுமென்றாலும், பின்வரும் அடிப்படைகளின் (grounds) கீழ் மணமுறிவுத் தீர்ப்பாணை ஒன்றின் மூலம் அத்திருமணத்தைக் கலைத்துக் (dissolution of marriage by a decree of divorce) கொள்ள மனு சமர்ப்பிக்கலாம். அவ்வடிப்படைகள்,–

(i) நீதிமுறையில் பிரிந்து போவதற்கு தீர்ப்பாணை வழங்கப்பட்டிருந்து (Decree for judicial separation), அத்தீர்ப்பாணைக்குப் பின்னர் ஓராண்டு அல்லது அதற்கும் மேலான காலகட்டத்திற்கு அத்திருமணத் தரப்பினர்கள் (தம்பதிகள்) மீண்டும் சேர்ந்து வாழத் தொடங்கவில்லையானால், மணமுறிவு கோரலாம்.

(ii) தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கான தீர்ப்பாணை வழங்கப்பட்டிருந்து (Decree for restitution of conjugal rights), அத்தீர்ப் பாணைக்கு பின்னர் ஓராண்டு அல்லது அதற்கும் மேலான காலகட்டத்திற்கு அத்திருமணத் தரப்பினர்களுக்கிடையே (தம்பதிகள்) தாம்பத்திய உறவு உரிமைகள் மீண்டும் ஏற்படவில்லையானால், மணமுறிவு கோரலாம்.

மணமுறிவு கோர ஒரு மனைவிக்கு உள்ள அடிப்படைகள் (Grounds available to a wife for divorce):

இந்து திருமணச் சட்டம், மணமுறிவு கோர பலவிதமான அடிப்படைகளை பிரிவு 13(1)–ன் வாயிலாக வழங்கியுள்ளதை நாம் மேற்கண்டவாறு கண்டோம். அந்த அடிப்படைகள் யாவும் கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் பொதுவான தாகும். இவற்றுடன் மனைவிக்கென தனியாக வேறு சில கூடுதல் அடிப்படை களையும் இந்து திருமணச் சட்டம், தனது பிரிவு 13(2)–ன் வாயிலாக வழங்கியுள்ளது. வேறு விதத்தில் சொல்வதானால், பிரிவு 13(2)–ன் கீழான அடிப்படைகள்

மனைவிக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகும். அவற்றின்படி ஒரு மனைவி மணமுறிவு கோரி மனுச் செய்யலாம். அவ்வடிப்படைகள் வருமாறு.

(i) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்பு நடைபெற்ற ஒரு திருமண விஷயத்தில் கணவன், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்பே மீண்டும் ஒரு திருமணம் செய்து கொண்டிருந்தாலோ அல்லது இச்சட்டம் தொடங்குவதற்கு முன்பு மணம் செய்து கொள்ளப்பட்ட மனைவி எவரும், மனுதாரரின் திருமணத்தின் பொழுது உயிரோடு இருந்தார் என்றாலோ, அம்மனுதாரர் (மனைவி) மணமுறிவு கோரலாம்:

மேற்கூறப்பட்ட இரு நிலைமைகளிலும், மனுதாரர் மனுச் செய்யும் காலத்தில், அந்த வேற்று மனைவி உயிரோடிருக்க வேண்டும்; அல்லது

(ii) திருமணம் நடைபெற்ற பின்னர், கணவர் வன்புணர்ச்சி (Rape) அல்லது ஓரினப் புணர்ச்சி (Sodomy) அல்லது விலங்குப் புணர்ச்சி (bestiality) ஆகிய குற்றத்தைச் செய்கிறார் என்றால்; அல்லது

(iii) இந்துத் தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் 18–வது பிரிவின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125–வது பிரிவின் கீழ் தொடரப்பட்ட நடவடிக்கையொன்றில், மனைவிக்கு வாழ்க்கைப்படித் தொகையினை வழங்க வேண்டுமென்று அவளுடைய கணவனுக்கு எதிராக அந்தந்த நேர்விற்கேற்ப தீர்ப்பாணை அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்து, அவள் கணவனைப் பிரிந்து தனித்து வாழ்ந்து வந்திருந்தாலும் மற்றும் அதற்குப் பின் ஓராண்டும் அதற்கு மேலும் தரப்பினர்கள் சேர்ந்து வாழத் தொடங்கிவில்லையென்றாலும்; அல்லது

(iv) தனக்கு 15 வயது பூர்த்தியாகும் முன்னரே திருமணம் நடைபெற்றது என்றும், தான் அத்திருமணத்தை தனக்கு 15 வயது பூர்த்தியான பின்னரும் ஆனால் 18 வயது பூர்த்தியாவதற்கு முன்னரும் மறுதலித்துள்ளாள் (ஏற்றுக் கொள்ளவில்லை) எனில், மனைவி மணமுறிவு கோரலாம்.

மேற்படி உட்கூறு, 1976–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்துத் திருமண (திருத்தச்) சட்டத்திற்கு முன்பு அல்லது பின்பு நடைபெற்ற திருமணங்களுக்கும் பொருந்தும்.

மணமுறிவு நடவடிக்கைகளில் மாற்றுத் தீர்வழி (Alternative relief in divorce proceedings):

இது குறித்து பிரிவு 13–A பின்வருமாறு கூறுகிறது. அதாவது, இச்சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கை எதிலும், திருமணத்தைக் கலைப்பதற்கான மணமுறிவுத் தீர்ப்பாணையைக் கோரும் மனுவின் பேரில், பிரிவு 13(1)

(ii), (vi), (vii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைகளைப் பொறுத்து அம்மனு அமைந்திருக்கும் நிலை தவிர, பிற அடிப்படைகளில் அம்மனு அமைந் திருப்பின், அங்கு வழக்கின் சூழ்நிலைகளை சீர்தூக்கிப் பார்த்து, அவ்வாறு செய்வது நியாயமானது என்று நீதிமன்றம் கருதினால், அது மணமுறிவிற்குப் பதிலாக நீதிமுறைப் பிரிவிற்கான தீர்ப்பாணையொன்றை (Decree for judicial separation) பிறப்பிக்கலாம்.

பரஸ்பரமான ஒப்புதலின் பேரில் மணமுறிவு (Divorce by Mutual Consent):

இது குறித்து பிரிவு 13–B கூறுகிறது. அதன்படி, இச்சட்டத்தில் கூறப் பட்டுள்ளவற்றுக்குட்பட்டு, ஒரு திருமணத்தை இரத்து செய்ய வேண்டும் என்ற ஒரு மனுவினை கணவன், மனைவி ஆகிய இருவரும் பரஸ்பரம் ஒப்புக் கொண்டு ஒன்றாகச் சேர்ந்து மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். தாங்கள் இருவரும் ஓராண்டு அல்லது அதற்கும் மேலான காலகட்டத்திற்கு பிரிந்து தனித்தனியே வாழ்ந்து வருவதாகவும், தங்களால் ஒன்று சேர்ந்து வாழ இயல வில்லை என்றும், தங்களது திருமணம் கலைக்கப்பட வேண்டும் என்பதற்கு பரஸ்பரம் உடன்பட்டுள்ளதாகவும் காரணம் காட்டி, மணமுறிவு கோரலாம். [பிரிவு 13–B(1)].

மேற்கண்டவாறு மனுவைத் தாக்கல் செய்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஆனால் 18 மாதங்களுக்கு முன்னர் அந்த மனுவினை இருவரும் திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லையெனில், நீதிமன்றம் அவர்களது வாதங்களைக் கேட்ட பிறகும், அது பொருத்தமெனக் கருதும் அத்தகு விசாரணையை நடத்திய பிறகும், அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றதும் மற்றும் மனுவில் கண்டுள்ள கூற்றுகள் உண்மையென்றும் அறிந்து திருப்தியுற்றால், அந்நீதிமன்றம், அத்திருமணத்தை அந்த நாளிலிருந்து அமலுக்கு வரத்தக்க வகையில் கலைத்துவிட்டதாக விளம்பி தீர்ப்பாணையொன்றைப் பிறப்பித்தல் வேண்டும். [பிரிவு 13–B(2)].

மணமுறிவு கோரி மனுச் செய்வதற்கான கால வரையறை (பிரிவு 14) :

திருமணம் நடைபெற்ற ஓராண்டுக்குள் மணமுறிவு கோரி மனுச் செய்யக் கூடாது என பிரிவு 14 கூறுகிறது. மணமுறிவு என்பது குடும்பத்தையும், சமூகத்தையும் பெரிதும் பாதிக்கின்ற ஒரு விஷயம். எனவே மணமுறிவு செய்து கொள்ள மிகவும் சுலபமான பாதையை காட்டக் கூடாது என்பதற்காக, திருமணமான தேதியிலிருந்து மனு கொடுக்கப்படும் தேதி வரை ஓராண்டுக் காலம் கடந்திருந் தால்தான் மணமுறிவு கேட்கும் மனுவை நீதிமன்றம் பரிசீலிக்க முடியும் என்று பிரிவு 14 கூறுகிறது.

ஆனால் இப்பிரிவு மிகவும் கடுமையானதல்ல. ஏனெனில் ஒன்று சேர்ந்து வாழ சற்றும் வாய்ப்பில்லாத சில பேருடைய வாழ்க்கையில் **"ஓராண்டு காலம் வரை பொறுத்திரு"** என்று கூறுவது பொருத்தமல்ல. ஆகவே அவர்களைப் பொறுத்து மட்டும் சட்டம் சில சலுகைகளை தந்துள்ளது. அதன்படி மனுதாரர் விதிவிலக்கான கடுந்தொல்லையில் (exceptional hardship) இருக்கின்றார் எனும் அடிப்படையில் அல்லது எதிர்மனுதாரர் ஒழுக்கக்குறைவான கொடுஞ்செயல் செய்கிறார் (exceptional depravity on the part of the respondent) எனும் அடிப்படையில், ஒருவர் மேற்படி ஓராண்டுக் காலம் கடக்கும் முன்னரே உயர் நீதிமன்றம் ஏற்படுத்தும் விதிகளுக்கு ஏற்ப மனு கொடுக்கலாம்.

'விதிவிலக்கான கடுந்தொல்லை' என்பதற்கோ, **'ஒழுக்கக் குறைவான கொடுஞ் செயல்'** என்பதற்கோ இந்து திருமணச் சட்டத்தில் வரையறை ஏதும் தரப்படவில்லை. எனவே அதை நீதிமன்றமே வழக்கின் சூழ்நிலைகளிலிருந்து ஆய்ந்து தீர்மானிக்கும். இதற்கு சில எடுத்துக்காட்டுகள் வருமாறு : (1) கணவன் தனது மனைவியை வேறொருவனுடன் உடலுறவு கொள்ளுமாறு அவளுடைய விருப்பமின்றி வலுக்கட்டாயம் செய்தால் அதை விதிவிலக்கான கடுந்தொல்லை என்று கூறலாம். அப்போது மனைவி ஓராண்டு முடிவதற்கு முன்னரே கூட மணமுறிவு கேட்கலாம். (2) மனைவியின் கண்ணெதிரே அவளைச் சற்றும் மதியாது வேலைக்காரியுடன் உடலுறவு கொண்டு வாழ்ந்தால் அதை ஒழுக்கக் குறைவான கொடுஞ்செயல் என்று கூறலாம். இங்கும் ஓராண்டு முடிவதற்கு முன்னரே கூட மணமுறிவு கேட்கலாம்.

மணமுறிவிற்குப்பின் மறுமணம் (பிரிவு 15) :

மணமுறிவுத் தீர்ப்பாணையால், ஒரு திருமணம் கலைக்கப்படும் பொழுது, அத்தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்து கொள்ளும் உரிமை இல்லாமலிருப்பின் அல்லது மேல்முறையீடு செய்வதற்கு உரிமையிருந்து, மேல்முறையீடு செய்யாமல் அதற்கான காலவரம்பு கடந்துவிட்டிருப்பின் அல்லது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்து ஆனால் அது தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின், கலைக்கப்பட்ட அத்திருமணத்தின் தரப்பினர்களில் எவரும் வேறு மணம் புரிந்து கொள்ளலாம். இது சட்டப்பூர்வமானதாகும்.

Savitri Pandey v. Prem Chandra Pandey[1] - மணமுறிவுத் தீர்ப்பாணைக்கெதிராக மேல்முறையீடு செய்யப்பட்டு, அது நிலுவையில் இருக்கும் பொழுது, மேல்முறையீட்டாளர் மறுமணம் செய்து கொள்ள விழைவாரானால், அவர் அம்மேல்முறையீட்டில் வழங்கப்படும் தீர்ப்பிலிருந்து எழும் இறுதி விளைவுகளுக்குக் கட்டுப்பட தனது சொந்த பொறுப்பில் துணிவதாகக் கருதுதல் வேண்டும் என்று மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

1. (2002) 2 SCC 73: A.I.R. 2002 S.C. 591

மணமுறிவு மற்றும் நீதிமுறைப் பிரிவு - வேறுபாடுகள்:

மணமுறிவு (Divorce)	நீதிமுறைப் பிரிவு (Judicial Separation)
1. மணமுறிவு என்பது, திருமண பந்தத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறது.	நீதிமுறைப் பிரிவு என்பது, திருமண பந்தத்தால் எழக்கூடிய உரிமைகளையும் கடமைகளையும் சில காலத்திற்கு நிறுத்தி வைக்கிறது.
2. தீர்க்க முடியாத சிக்கலைக் கொண்ட மணவாழ்க்கைக்கு இறுதித் தீர்வாக, மணமுறிவு எனும் தீர்வழி நீதிமன்றத் தால் வழங்கப்படுகிறது. இதுவே மணமுறிவு வழங்குவதற்கான நோக்க மாகும்.	தம்பதிகள் மனம் மாறி மீண்டும் மனமொத்தவர்களாக வாழவும், தங்கள் கருத்து வேற்றுமைகளை விட்டுக் கொடுத்து ஒற்றுமையுடன் இல்லறத்தை நடத்தவும் வழிகோலுவதற்காக நீதி முறைப் பிரிவு எனும் தீர்ப்பாணை நீதிமன்றத்தால் வழங்கப்படுகிறது. இதுவே இதன் நோக்கமாகும்.
3. மணமுறிவு எனும் தீர்வழி, நீதிமுறைப் பிரிவு எனும் தீர்வழியைக் காட்டிலும் வலிமை வாய்ந்ததும் கடுமையானதும் ஆகும். தம்பதிகள் பிரிந்து போவதற் காகவே இது வழங்கப்படுகிறது.	நீதிமுறைப் பிரிவு எனும் தீர்வழி, மண முறிவு எனும் தீர்வழியைக் காட்டிலும் வலிமை குறைந்ததாகும். தம்பதிகள் மீண்டும் சேர வழி ஏற்பட வேண்டும் என்பதற்காக இது வழங்கப்படுகிறது.
4. நீதிமன்றத்தால் மணமுறிவிற்கான தீர்ப்பாணை பெற்ற தரப்பினர்கள், மீண்டும் தாங்கள் விரும்பிய துணையுடன் மறுமணம் செய்து கொள்ள உரிமை படைத்தவர்கள்.	நீதிமுறைப் பிரிவிற்கான தீர்ப்பாணை பெற்ற தரப்பினர்கள், மற்றொரு துணையை மறுமணம் செய்து கொள்ள முடியாது.
5. மணமுறிவு கோருவதற்குண்டான அடிப்படைகளை இந்து திருமணச் சட்டத்தின் 13–வது பிரிவு விளக்குகிறது.	நீதிமுறைப் பிரிவு கோருவதற்குண்டான வழிமுறையை இந்து திருமணச் சட்டத்தின் 10–வது பிரிவு விளக்குகிறது.

1976-ஆம் ஆண்டின் திருமணச் சட்டங்கள் (திருத்தச்) சட்டத்தால் கொண்டு வரப்பட்ட முக்கிய மாற்றங்கள் [The important changes introduced by the Marriage Laws (Amendement) Act, 1976]:

1955–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து திருமணச் சட்டத்தில் சமுதாய மாற்றத்திற் கேற்ப மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனும் நோக்கில், 1976–ஆம் ஆண்டில் திருமணச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் மேற்படி இந்து திருமணச் சட்டத்தில் பல மாறுதல்களை கொண்டு வந்தது. அவ்வாறு கொண்டு வரப்பட்ட மாற்றங்களை உள்ளடக்கிய இந்து திருமணச் சட்டத்தின் வகைமுறைகளைத்தாம் நாம் இதுகாறும் கண்டோம். எனினும், அம்மாற்றங்களை 1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் வகைமுறைகளுடன் தொடர்பு படுத்தி தனியாக அறிந்து கொள்ளும் பொருட்டு, அவை பின்வருமாறு கொடுக்கப் பட்டுள்ளன.

(1) திருமணம் செய்து கொள்வதற்கு தகுதியின்மையாக பித்து நிலையும், (unsoundness of mind), விட்டுவிட்டு தாக்கக்கூடிய புத்தி பேதலிப்பும் (recurrent attacks of insanity) பிரிவு 5(ii)–ல் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. இப்பிரிவை மீறுதல், சம்பந்தப்பட்ட திருமணத்தை தகுதிக்குறை திருமணமாக்கும் (voidable marriage). (பிரிவு 12).

(2) திருமணத்திற்கு காப்பாளர் ஒப்புதல் அளிக்க வேண்டும் எனும் வகைமுறை [பிரிவு 5(vi)] மேற்படி திருத்தச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிட்டது.

(3) பிரிவு 6–ன் கீழ் முன்பு இருந்த காப்பாளர்களின் பட்டியல் (table of guardians) நீக்கப்பட்டுவிட்டது.

(4) தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கு வகை செய்யும் 9–வது பிரிவின் கீழ் விளக்கமொன்று மேற்படி திருத்தச் சட்டத்தால் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி, திருமணத் தரப்பினர்களில் ஒருவர் மற்றொருவரை விட்டு விலகி வாழ்வதற்கு 'நியாயமான காரணம்' (reasonable excuse) இருக்கிறது என்று வாதிடப்பட்டால், அக்காரணம் நியாயமானதுதான் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு விலகிச் சென்று வாழ்பவர் மீது சுமத்தப்படும். தான் இன்னின்ன நியாயமான காரணங்களின் அடிப்படையில் பிரிந்து வாழ்கிறேன் என்பதை அவர்தான் நிரூபிக்க வேண்டும்.

(5) பிரிவு 11–ன் கீழ் ஒரு திருமணத்தை செல்லாததாக்கும் தீர்ப்பாணையை (decree of nullity), அத்திருமணத் தரப்பினர்களில் எவரேனும் ஒருவர் இறந்து போய்விட்டிருந்தால், கோரிப் பெற முடியாது. இது மேற்படி திருத்தச் சட்டத்தால் புதிதாக சேர்க்கப்பட்ட வகைமுறையாகும்.

(6) முன்பு நீதிமுறைப் பிரிவு பெறுவதற்கென சில குறிப்பிட்ட அடிப்படைகள் மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்பொழுது மேற்படி திருத்தச் சட்டத்தால் அவ்வடிப்படைகள் அனைத்தும் நீக்கப்பட்டு, பிரிவு 13(1)–ன் கீழ் மணமுறிவுத் தீர்ப்பாணை பெறுவதற்கென கொடுக்கப்பட்டுள்ள அடிப்படைகள் அனைத்தும், நீதிமுறைப் பிரிவிற்கும் பொருந்துமாறு வகை செய்யப்பட்டுள்ளது.

ஒரு மனைவி நீதிமுறைப் பிரிவு கோரினால், அவளுக்கு பிரிவு 13(2)–ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படைகள், அந்நீதிமுறைப் பிரிவிற்கும் பொருந்தும்படி செய்யப்பட்டுள்ளது.

(7) எதிர்மனுதாரர் ஆண்மையற்றவர் எனும் அடிப்படையில் சம்பந்தப்பட்ட திருமணத்தை மனுதாரர் தவிர்தகு திருமணமாக விளம்பக் கோரலாம். இதன் அடிப்படையில் அத்திருமணம் இரத்து செய்யப்படும். இது புதிதாகச் சேர்க்கப்பட்ட வகைமுறையாகும் [பிரிவு 12(1) (a)].

(8) ஒரு திருமணத்தை செல்லாதென தவிர்த்துக் கொள்வதற்கு வகை செய்யும் பொருட்டு, 'வலுக்கட்டாயம் அல்லது மோசடியால் பெறப்பட்ட ஒப்புதலும்' ஒரு அடிப்படையாக பிரிவு 12 (1) (c)–யின் கீழ் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

(9) மணமுறிவு பெறுவதை வகை செய்யும் 13–வது பிரிவில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மணமுறிவு பெறுவதற்குண்டான சில அடிப்படைகள் நீடித்திருக்க வேண்டிய காலமானது நீக்கப்பட்டுவிட்டது. எனவே மேற்படி திருத்தச் சட்டத்தின்படி தற்பொழுது மணமுறிவு பெறுவது மிக எளிதாகிவிட்டது. அம்மாற்றங்கள் வருமாறு.

(i) 'முன்பு மணமுறிவு கோர எதிர்மனுதாரர் தனது துணை அல்லாத மற்றொருவருடன் தொடர்ந்து பிறன்மனை புணர்ந்து வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் (living in adultery). ஆனால் தற்பொழுது 1976–ஆம் ஆண்டின் திருத்தச் சட்டமானது, திருமணத்திற்குப் பிறகு, தனது வாழ்க்கைத் துணையல்லாத மற்றொருவருடன் தானே விரும்பி உடலுறவு கொண்டிருந்தால் (had vountary sexual intercourse), மணமுறிவு கோரலாம், என்று திருத்திவிட்டது. அதாவது எப்போதேனும் ஒரு முறை விரும்பி உடலுறவு கொண்டிருந்தாலும், அந்த ஒரு சம்பவத்தைக் காட்டியே மணமுறிவு கோரலாம் என்று மாற்றிவிட்டது.

(ii) மணமுறிவு பெறுவதற்கான அடிப்படைகளில் கொடுமையும் (cruelty), கைவிட்டுச் செல்லுகையும் (desertion) புதிய அடிப்படைகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

(iii) பிரிவு 13 (1) (iii)–ன்படி மணமுறிவு கோர முன்பு மற்றொருவரின் புத்தி சுவாதீமின்மை (unsound mind) மட்டும் ஒரு அடிப்படையாக இருந்தது. தற்பொழுது, அத்துடன் புத்தி பேதலிப்பு (mental disorder) எனும் அடிப்படையும் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு பதங்களுக்குண்டான விளக்கங்களும் அப்பிரிவின் கீழ் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், மேற்கண்ட புத்தி சுவாதீனமின்மை, மணமுறிவிற்கான மனு கொடுக்கப்படுவதற்கு முன்பு குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்கு நீடித்திருக்க வேண்டும் எனும் வகைமுறை தற்பொழுது நீக்கப்பட்டுவிட்டது.

(iv) தொழுநோயின் அடிப்படையில் மணமுறிவு கோருவது

தற்பொழுது மேற்கண்ட திருத்தச் சட்டத்தால் எளிதாகியுள்ளது. ஏனெனில் முன்பு தொழுநோயால் பிடிக்கப்பட்ட திருமணத் தரப்பினர், அத்தொழுநோயால் மூன்றாண்டுகளுக்கு பீடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று காலம் குறிப்பிடப் பட்டிருந்தது. தற்பொது அக்காலவரம்பு தற்பொழுது நீக்கப்பட்டுவிட்டது.

(v) அதுபோல் முன்பு பால்வினை நோயின் அடிப்படையில் மணமுறிவு கோருவதற்கு, சம்பந்தப்பட்ட திருமணத் தரப்பினருக்கு அந்நோய் குறைந்தபட்சம் மூன்றாண்டுகள் அவருக்கு இருக்க வேண்டும் என்றிருந்தது. ஆனால் இக்காலவரம்பு தற்பொழுது மேற்படி திருத்தச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிட்டது.

(10) முன்பு பிரிவு 13(1–A)(i) மற்றும் (ii)–ன்படி முறையே தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு அல்லது நீதிமுறைப் பிரிவிற்கான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு **இரண்டு ஆண்டுகள்** அல்லது அதற்கும் மேற்பட்ட காலகட்டத்திற்கு அத்திருமணத் தரப்பினர்கள் ஒன்று சேர்ந்து வாழத் தொடங்கவில்லையென்றால், மணமுறிவு பெற மனுச் செய்யலாம் என்ற நிலை இருந்தது. இதில் உள்ள மேற்படி இரண்டு ஆண்டு காலகட்டம், தற்பொழுது மேற்படி திருத்தச் சட்டத்தால் **ஓராண்டு** எனக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்டதின்படி தீர்ப்பாணை பெற்ற தரப்பினர் மட்டுமே, மணமுறிவிற்கு மனுச் செய்ய முடியும் எனும் நிலை முன்பு இருந்தது. தற்பொழுது, அத்தீர்ப்பாணையின் தரப்பினர்கள் எவரும் (அதாவது கணவன் அல்லது மனைவி) மேற்கண்ட அடிப்படையில் மணமுறிவு கோரி நீதிமன்றத்திடம் மனுச் செய்யலாம்.

(11) மனைவிக்கு கணவன் பராமரிப்புத் தொகை வழங்க வேண்டுமென தீர்ப்பாணை அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்து, அத்தீர்ப்பாணை அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து அவள் கணவனைப் பிரிந்து தனித்து வாழ்ந்து வந்திருந்தாலும் மற்றும் அதற்குப் பின் ஓராண்டும் அதற்கு மேலும் தரப்பினர்கள் சேர்ந்து வாழத் தொடங்கிவில்லையென்றாலும், அம்மனைவி மணமுறிவு கோரலாம் என்று ஒரு புதிய வகைமுறை [பிரிவு 13(2)(iii)] சேர்க்கப்பட்டுள்ளது. இது மனைவி மணமுறிவு பெற அனுகூலமான அடிப்படையாகும்.

(12) ஒரு மனைவி, தனக்கு 15 வயது பூர்த்தியாகும் முன்னரே திருமணம் நடைபெற்றது என்றும், தான் அத்திருமணத்தை தனக்கு 15 வயது பூர்த்தியான பின்னரும் ஆனால் 18 வயது பூர்த்தியாவதற்கு முன்னரும் மறுதலித்துள்ளேன் (ஏற்றுக் கொள்ளவில்லை) என்றும் கூறி, அதனடிப்படையில் மணமுறிவு கோரலாம். இதற்கு வகை செய்யும் பிரிவு 13(2)(iv) –ஆனது மேற்படி திருத்தச் சட்டத்தால் புதிதாகச் சேர்க்கப்பட்டதாகும்.

(13) மணமுறிவு கோரும் மனுவில் மணமுறிவு வழங்குவதற்குப் பதிலாக நீதிமன்றம் அவ்வழக்கின் சூழ்நிலைகளை ஆராய்ந்து மாற்றுத் தீர்வழியாக நீதி முறைப் பிரிவிற்கு தீர்ப்பாணை வழங்கலாம். இதற்கு வகை செய்யும் பிரிவு 13–A ஆனது, மேற்படி திருத்தச் சட்டத்தால் புதிதாகச் சேர்க்கப்பட்டதாகும்.

(14) அதுபோல் பரஸ்பர ஒப்புதலின் பேரில் மணமுறிவு கோருவதற்கு வகை செய்யும் பிரிவு 13–B ஆனது, புதிதாகச் சேர்க்கப்பட்டதாகும்.

(15) முன்பு மணமுறிவு கோரி மனுச் செய்வதற்கு திருமணமான தேதியிலிருந்து மூன்றாண்டுகள் காத்திருக்க வேண்டும். இது தற்பொழுது ஓராண்டாக குறைக்கப்பட்டுள்ளது. இது பிரிவு 14–ல் செய்யப்பட்ட திருத்தமாகும்.

(16) மணமுறிவுத் தீர்ப்பாணை பெற்ற மனுதாரர் (அதாவது கணவன் அல்லது மனைவி), அத்தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யும் காலவரையறை முடிவடைந்தவுடன் அல்லது மேல்முறையீடு செய்யப்பட்டு அது தள்ளுபடியானவுடன், மறுமணம் செய்து கொள்ளலாம் (பிரிவு 15). ஆனால் முன்பு இவ்வாறு மறுமணம் செய்து கொள்ள மணமுறிவு தீர்ப்பாணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலம் வரை காத்திருக்க வேண்டும்.

(17) இச்சட்டத்தின் கீழ் தீர்வழி பெறுவதற்காக எந்த இடத்தின் மீது அதிகாரவரம்பு கொண்ட மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பது குறித்த நிலவரை எல்லை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு பிரிவு 19 திருத்தப்பட்டுள்ளது.

(18) இச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்களை நீதிமன்றம் இயன்ற வரை விரைவாக விசாரித்து முடிக்க வேண்டும். குறிப்பாக எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் வழக்கு விசாரணையை முடித்தல் வேண்டும் என்று புதிதாக சேர்க்கப்பட்ட பிரிவு 21B கூறுகிறது.

(19) இந்தச் சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்கு நடவடிக்கையில், ஒரு ஆவணத்தில் உரிய முத்திரை வில்லை ஒட்டப்படவில்லை அல்லது அந்த ஆவணம் பதிவு செய்யப்படவில்லை எனும் காரணத்திற்காக அதை ஒரு சாட்சியமாக ஏற்றுக் கொள்ள மறுத்தல் கூடாது எனும் ஒரு புதிய வகைமுறை சேர்க்கப்பட்டுள்ளது. (பிரிவு 21B).

(20) இச்சட்டத்தின் கீழ் நடக்கும் வழக்கு நடவடிக்கை ஒவ்வொன்றும் திறந்த நீதிமன்றத்தில் நடத்தப்படக் கூடாது என்றும், அதை நீதிமன்ற அறைக்குள் மறைவாக நடத்தி (proceedings to be in camera), தரப்பினர்களின் வாழ்க்கை அந்தரங்கத்தை காப்பாற்ற வேண்டும் என்றும், புதிதாக சேர்க்கப்பட்ட பிரிவு 21C கூறுகிறது.

(21) பிரிவு 25–ன் கீழ் நிரந்தரப் பராமரிப்புத் தொகை கோரி செய்யப்படும் மனுவில், 'மனுதாரர் மறுமணம் செய்து கொள்ளாமல் இருக்கும் பொழுது' எனும் சொற்றொடர் மேற்படி திருத்தச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிட்டது. இதனால் மேற்படி பிரிவை, மணமுறிவு குறித்த வழக்கு நடவடிக்கைகளைத் தவிர உள்ள ஏனைய நடவடிக்கைகளிலும் பயன்படுத்த வகை ஏற்பட்டுள்ளது.

(22) தீர்ப்பாணை மற்றும் உத்தரவுகளிலிருந்து மேல்முறையீடு செய்வதற்கான வகைமுறைகள், பிரிவு 28–ல் மேலும் தெளிவாக்கப்பட்டுள்ளன.

(23) தீர்ப்பாணை மற்றும் உத்தரவுகளை எதிர்மனுதாரர் மீது செயற்படுத்த பிரிவு 28A எனும் புதிய வகைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக, 1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் எந்தவொரு பிரிவையும் விட்டுவைக்காமல், ஏறத்தாழ அனைத்து பிரிவுகளிலும் மாற்றங்களை 1976–ஆம் ஆண்டின் திருமணச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் செய்துள்ளது என்று சொன்னால் அது மிகையன்று.

8. Enumerate the various grounds of divorce available under the Hindu Marriage Act. (இந்து திருமண சட்டத்தின் கீழ் உள்ள திருமண முறிவுக்கான பல்வேறு காரணங்களை விவரிக்க.)

(அல்லது)

Discuss fully the various grounds for divorce available under the Hindu Marriage Act, 1955. When can the divorced person marry again? (1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் கீழ் திருமண முறிவிற்கான பல்வேறு காரணங்களை முழுமையாக ஆராய்க. மணமுறிவு செய்து கொண்ட நபர் எப்போது மீண்டும் திருமணம் செய்ய முடியும்?)

(அல்லது)

Distinquish between Divorce and Judicial separation. Dicuss fully the various grounds for divorce available under the Hindu Marriage Act, 1955.(மணமுறிவு மற்றும் நீதிமுறைப் பிரிவு ஆகியவற்றை வேறுபடுத்துக. 1955–ம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் கீழ் உள்ள திருமண முறிவுக்கான பல்வேறு காரணங்களை விவரிக்க.)

(அல்லது)

Sareetha Vs. Venkata Subbiah - Write short notes. (சரீதா எதிர் வெங்கட சுப்பைய்யா – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Dastane v. Dastane A.I.R. 1975 S.C. 1534. - Write short notes. (தஸ்தானே எதிர் தஸ்தானே ஏ.ஐ.ஆர். 1975 எஸ்.சி. 1534 – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Divorce by Mutual Consent - Write short notes. (இசைவின் பேரில் மணமுறிவு – சிறு குறிப்பு வரைக.)

(முந்தைய வினாவின் விடையில் பொருத்தமான பகுதிகளில் காண்க.)

9. In camera proceedings - Write short notes. (மறைவான வழக்கு நடவடிக்கைகள் – சிறு குறிப்பு வரைக.)

இந்து திருமணச் சட்டத்தின் கீழான வகைமுறைகள் அனைத்தும், கணவன், மனைவி எனும் இரு நபர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை குறித்தாகும். கணவன், மனைவியின் தாம்பத்திய வாழ்க்கை என்பது நாற்சுவருக்குள் வைத்து அக்கணவனும் மனைவியும் துய்ப்பதாகும். இந்த நாற்சுவருக்குள் வாழ்க்கை நடத்தும் பொழுது, பிரச்சனைகள் ஏதும் ஏற்பட்டால், அப்பிரச்சனையையும் நாற்சுவருக்குள் வைத்து தீர்ப்பதுதான் முறை. அதாவது நீதிமன்றத்தின் மூடிய அறைக்குள் சம்பந்தப்பட்ட கணவன், மனைவி, நீதிபதி, தேவைப்பட்டால் அவர்களின் வழக்குரைஞர்கள் ஆகியோர்களை மட்டும் வைத்துக் கொண்டு, அவர்களது வழக்கின் விசாரணையை நடத்துதல் வேண்டும். அவர்களது அந்தரங்க உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

இதை விடுத்து, மணமுறிவு கோரும் வழக்கொன்று திறந்த நீதிமன்றத்தில் அனைவருக்கும் தெரியும் வண்ணம் வெட்ட வெளிச்சமாக நடத்தப்பட்டால், அது சம்பந்தப்பட்ட திருமணத் தரப்பினர்களின் (அதாவது கணவன், மனைவி), அவர்தம் குழந்தைகளின், அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் தற்கால மற்றும் பிற்கால வாழ்க்கையை பாதிக்கலாம். எனவே, இந்து திருமணச் சட்டப்படியிலான வழக்கு நடவடிக்கைகள் அனைத்தும், கதவுகள் மூடப்பட்ட நீதிமன்ற அறைக்குள் இரகசியமாக (proceedings in camera) நடத்தப்பட வேண்டும் என்றும், மேலும் அது பிரசுரிக்கப்படவோ அல்லது அச்சடிக்கப்படவோ கூடாது என்றும் பிரிவு 22(1) கூறுகிறது.

மேற்கண்ட வகைமுறையை மீறி எவரேனும் திருமண வழக்கு நடவடிக்கைகளை பிரசுரித்தாலோ அல்லது அச்சடித்தாலோ, அவருக்கு ரூ.1000/– வரையிலான அபராதம், தண்டனையாக விதிக்கப்படும், என்று பிரிவு பிரிவு 22(2) எச்சரிக்கிறது.

1976–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்துத் திருமண (திருத்தச்) சட்டம் வருவதற்கு முன்பு, வழக்கின் தரப்பினர்கள் எவரேனும் விரும்பி மனுக் கொடுத்தால்தான், அவ்வழக்கின் நடவடிக்கைகள் மறைவாக நடத்தப்பட்டன. ஆனால் மேற்படி திருத்தச் சட்டமானது தற்பொழுது இந்து திருமணச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்படும் வழக்கு நடவடிக்கை ஒவ்வொன்றும் நீதிமன்றத்தின் மூடிய அறைக்குள் மறைவாக நடத்தப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது.

10. Interim Maintenance -Write short notes. (இடைக்கால பராமரிப்பு– சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Maintenance pendente lite - Write short notes.(வழக்கிடைப் பராமரிப்பு– சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Alimony pendente lite - Write short notes. (வழக்கிடை வாழ்க்கைப்படி – சிறு குறிப்பு வரைக)

1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் **24–வது பிரிவு,** வழக்கிடைப் பராமரிப்புத் தொகை வழங்குதலைப் பற்றி கூறுகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் வழக்கு நடவடிக்கைகள் ஏதேனும் தொடரப்பட்டிருந்து, அதில் வழக்குத் தரப்பினராக உள்ள கணவன் அல்லது மனைவிக்கு அந்த வழக்கு நடவடிக்கைக்குத் தேவையான செலவுகளைச் செய்யவும், தன்னைத் தானே பராமரித்துக் கொள்ளவும் போதிய சொந்த வருமானம் ஏதுமில்லை என நீதிமன்றத்திற்கு தோன்றினால், அவ்வாறு வருமானம் இல்லாத தரப்பினர் (கணவன் அல்லது மனைவி) செய்யும் மனுவின் பேரில், அவருக்கு வழக்கு நடவடிக்கைக்குண்டான செலவுகளையும், அந்த வழக்கு நடவடிக்கைக்கு இடைப்பட்ட காலத்தில் மாதாமாதம் பராமரிப்புத் தொகையையும் வழங்க வேண்டுமென வருமானமுள்ள எதிர்மனுதாரருக்கு நீதிமன்றம் உத்தரவிடலாம்.

ஆனால் அவ்வாறு உத்தரவிடும் பொழுது, போதிய வருமானமில்லை என்று கூறி மனுச் செய்யும் மனுதாரரின் சொந்த வருமானத்தையும், எதிர்மனுதாரரின் வருமானத்தையும் நீதிமன்றம் கருத்தில் கொண்டு, அது தனக்கு நியாயமெனத் தோன்றும் அத்தகு தொகையை எதிர்மனுதாரர் வழங்க உத்தரவிடுதல் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, மேற்படி வழக்குச் செலவுத் தொகையும், பராமரிப்புத் தொகையும் வழங்கப்படுவதால், இது **'வழக்கிடைப் பராமரிப்புத் தொகை' (Maintenance pendente lite)** என்றும், **'இடைக்கால பராமரிப்புத் தொகை' (Interim maintenance)** என்றும் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட 24–வது பிரிவிற்கு **வரம்புரையாக (நிபந்தனையாக – Provisio),** அப்பிரிவின் கீழ் ஒரு பத்தி **2001–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட திருத்தச் சட்டத்தின்** (Act 49 of 2001) வாயிலாகச் சேர்க்கப்பட்டது. அதன்படி, மேற்கண்ட வழக்கிடைப் பராமரிப்புத் தொகை கோரும் மனுவை, நடைமுறைக்கு இயன்ற வரை, அதில் எதிர்மனுதாரருக்கு (கணவன் அல்லது மனைவி) நீதிமன்றத்

ஏற்பட்டுள்ளதாக நீதிமன்றம் திருப்தியுறுமானால், தாம் மேற்கண்டவாறு பிறப்பித்த உத்தரவை, தாம் நியாயமெனக் கருதிய முறையில், மாறுபடுத்தலாம் (vary), மாற்றலாம் (modify) அல்லது இரத்து (rescind) செய்யலாம். இதன் பொருட்டு அத்தரப்பினர்களில் எவராவது நீதிமன்றத்தை அணுகி முறையிட வேண்டும். இவ்வாறு **பிரிவு 25(2)** குறிப்பிடுகிறது.

யாருக்குச் சாதகமாக மேற்கண்டவாறு உத்தரவு வழங்கப்பட்டதோ அந்நபர் மீண்டும் மறுமணம் செய்து கொண்டதாக, அல்லது அந்நபர் மனைவியாக இருந்து அவள் ஒழுக்கத்துடன் இல்லாமல் இருப்பதாக அல்லது அந்நபர் கணவனாக இருந்து அவன் மணவாழ்க்கைப் பந்தத்திற்கு புறம்பாக வேறொரு பெண்ணிடம் உடலுறவு கொண்டதாக நீதிமன்றம் திருப்தியுற்றால், அது, தான் நியாயமெனக் கருதிய முறையில் மேற்படி உத்தரவை மாறுபடுத்தலாம் (vary), மாற்றலாம் (modify) அல்லது இரத்து (rescind) செய்யலாம். இதன் பொருட்டு பாதிக்கப்பட்ட மற்றொரு தரப்பினர் நீதிமன்றத்தை அணுகி முறையிட வேண்டும். இவ்வாறு **பிரிவு 25(3)** குறிப்பிடுகிறது.

இச்சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகளின் வாயிலாக, **மனை** (குடும்பம்) ஒன்று பிரிந்து போனதால், மேற்படி பணம் (பராமரிப்புத் தொகை) வழங்கப்படுவதால், இதற்கு **'பிரிமனைப் பணம்'** (alimony) எனும் பெயர் வழங்கப்படலாயிற்று.

Badri Prasad v. Urmila Mahobiya[1] - மணமுறிவு, நீதிமுறைப் பிரிவு போன்ற தீர்வழிகளுக்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டாலோ அல்லது மனுதாரரால் திரும்பப் பெறப்பட்டு விட்டாலோ, அங்கு நிரந்தர பராமரிப்புத் தொகை வழங்கப்படாது என்று மேற்படி வழக்கில் தீர்ப்புரைக்கப்பட்டது.

Chandrika v. M.Vijayakumar[2] - நிரந்தரப் பராமரிப்புத் தொகை பெறுவதற்கென தனியாக ஒரு மனு செய்யப்படாவிட்டாலும், மணமுறிவு, நீதிமுறைப் பிரிவு ஆகியவற்றிற்கான பிரதான மனுவின் (main petition) மீது நீதிமன்றம் தீர்ப்பளிக்கையில், அது நிரந்தரப் பராமரிப்புத் தொகையை வழங்கவும் மறு தரப்பினருக்கு உத்தரவிடலாம்.

11. Hindu Widow's Remarriage Act, 1856 - Write short notes. (1856–ஆம் ஆண்டின் இந்து கைம்பெண் மறுமணச் சட்டம் – சிறு குறிப்பு வரைக.)

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நடந்த காலத்தில், கிழக்கிந்திய நிறுவனத்தால் அமைக்கப்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களால் கடைப்பிடிக்கப்

1. A.I.R. 2001 M.P. 106.
2. (1996-1) 117 Mad. L.W. 695 (D.B.)

பட்ட சட்டங்களின்படி, இந்துப் விதவைகள் (கைம்பெண்டிர்) மறுமணம் செய்து கொள்ளத் தகுதியற்றவர்கள். மேலும், அவ்வாறு மறுமணம் செய்து கொண்டால் அது சட்டமுறையற்றதாகவும், இறங்குரிமையில் சொத்தைப் பெற அவர்களை தகுதியற்றவர்களாகவும் ஆக்கியிருந்தது. ஆனால் இந்நிலைப்பாட்டை அப்பொழுதைய இந்துக்களில் சில பிரிவினர் எதிர்த்தனர். ஏனெனில் அப்பிரிவினர்கள் பின்பற்றும் வழக்கத்தின்படி ஒரு இந்து விதவை, மறுமணம் செய்து கொள்ளலாம். எனவே இந்து விதவை ஒருத்தி மறுமணம் செய்து கொள்வதை சட்டங்கள் எதுவும் தடுத்தலாகாது என அப்பிரிவினர் ஆட்சேபித்தனர். இவற்றைக் கருத்தில் கொண்டு அப்பொழுதைய ஆங்கிலேய அரசு, 1856–ஆம் ஆண்டில் இந்து விதவை மறுமணச் சட்டத்தை இயற்றியது. இதனால் இந்து விதவைகள் திரு(மறு)மணம் செய்து கொள்வதில் இருந்து அனைத்து சட்டத் தடைகளும் நீக்கப்பட்டது (An Act to remove all legal obstacles to the marriage of Hindu widows).

இச்சட்டத்தில் மொத்தம் ஏழு சட்டப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் முக்கியமான மூன்று பிரிவுகளைப் பின்வருமாறு காண்போம். **பிரிவு 1–ன்படி,** கணவன் இறந்து போனதால், அவனது மனைவி மறுமணம் செய்து கொள்ளலாம். அம்மறுமணம் செல்லத்தக்கதே. **பிரிவு 2–ன்படி,** மறுமணம் செய்து கொண்ட விதவை, தனது முந்தய இறந்து போன கணவனின் சொத்துக்களில் உரிமை கொண்டாட முடியாது. **பிரிவு 3–ன்படி,** அவ்விதவைக்கு இறந்து போன கணவனின் வாயிலாக குழந்தைகள் ஏதும் பிறந்திருப்பின், அக்குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு (guardianship of children) அவ்விதவையையே சாரும்.

மேற்படி சட்டம் இயற்றப்பட்ட பிறகு, சுமார் நூறாண்டுகள் கழித்து, 1955–ஆம் ஆண்டில் இந்து திருமணச் சட்டமும், 1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டமும், 1956–ஆம் ஆண்டில் இந்து இளவர்நிலை மற்றும் பாதுகாவலர்நிலைச் சட்டமும், 1956–ஆம் ஆண்டில் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டமும் இயற்றப்பட்டது. இவையெல்லாம் இந்துக்களின் சட்ட முறையில் மிக விரிவான மாறுதல்களைச் செய்தன. இச்சட்டங்களிலேயே இந்து விதவை குறித்த நிலைப்பாட்டில் ஏற்படும் விளைவுகளும், அவளது உரிமைகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. எனவே **1983–ஆம் ஆண்டில் இந்து விதவை மறுமண (நீக்கச்) சட்டம்** இயற்றப்பட்டு **[The Hindu Widow's Re-marriage (Repeal) Act, 1983]**, 1856–ஆம் ஆண்டின் இந்து விதவை மறுமணச் சட்டம் நீக்கப்பட்டது.

-oOo-

3 தத்தெடுப்பும் பராமரிப்பும் [Adoption and Maintenance]

அறிமுகம்

1956–ஆம் ஆண்டில் தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்பு குறித்த சட்டமானது தொகுக்கப்பட்டு, **இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டமானது (The Hindu Adoptions and Maintenance Act, 1956)** இயற்றப்பட்டது.

இச்சட்டம் 1956–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21–ஆம் நாளில் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று, அதற்கடுத்த நாளிலிருந்து அமலுக்கு வந்தது.

இச்சட்டத்தில் மொத்தம் 30 சட்டப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் 1 முதல் 4 வரையிலான சட்டப் பிரிவுகள் முதனிலையான சில விபரங்களையும் (Preliminary), 5 முதல் 17 வரையுள்ள சட்டப் பிரிவுகள் தத்தெடுப்பு (Adoption) குறித்தும், 18 முதல் 28 வரையுள்ள சட்டப் பிரிவுகள் பராமரிப்பு (Maintenance) குறித்தும், 29 மற்றும் 30–வது சட்டப் பிரிவுகள் நீக்கம் மற்றும் விலக்கு (Repeal and Savings) குறித்தும் கூறுகின்றன.

ஆனால் அச்சட்டப் பிரிவுகளை அறிந்து கொள்வதற்கு முன்னர், தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு குறித்து முன்பிருந்த தொகுக்கப்படாத (பழைய) சட்டத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வது அவசியமாகும். அதை அடுத்து வரும் பக்கங்களில் காண்போமா?

தத்தெடுப்பு [Adoption]

அ. 1956-ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு இந்து தத்தெடுப்புகளின் நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்]

A. The position of Adoptions before the enactment of the Hindu Adoptions and Maintenance Act, 1956 [Uncodified Law]

இந்து தத்தெடுப்புகள் குறித்து தொகுக்கப்படாத (பழைய) சட்டம் என்ன கூறுகிறது?- பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விபரங்கள்

முன்னுரை:

தத்து எடுக்கும் வழக்கம் பன்நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஒவ்வொரு இந்துவுக்கும் அவன் இறந்தபின், அவனுக்குரிய அந்திமக்கிரியைகள், மதச் சடங்குகள் ஆகியவற்றை செய்ய மகன் என்பவன் அவசியம் வேண்டுமென மனுஸ்மிருதி வலியுறுத்திக் கூறுகிறது. அப்பொழுதுதான் இறந்த தந்தையின் ஆன்மாவும் சாந்தியடையும் என்று மேலும் கூறுகிறது. அதனால் சொந்த மகன் இல்லாதவர்கள் தத்து எடுக்க ஆரம்பித்தார்கள். சொந்த மகனுக்கு கிடைக்கக் கூடிய சகல உரிமைகளும் தத்தெடுக்கப்பட்ட மகனுக்கும் கிடைக்கத் தக்கதாக இருந்தது. தத்தெடுக்கப்பட்ட தினத்திலிருந்து அந்தக் குடும்பத்தில் பிறந்த ஒருவனாகவே அவன் கருதப்படுவான்.

தத்தெடுப்புச் சடங்குகள்:

தத்துக் கொடுப்பவர் தத்து எடுக்கப்படுபவனைத் தத்து எடுப்பவருக்கு அவனுடைய உடலோடு கொடுக்கும் செயல்தான் தத்தெடுப்பில் முக்கிய சடங்காகும். தத்தெடுப்பவர், தான், இன்னாரை தத்தெடுத்துக் கொண்டேன் என்று அறிவித்தால் மட்டும் போதாது. ஒருவர் கொடுக்க மற்றொருவர் வாங்கும் சடங்கு நடைபெறுதல் வேண்டும். எனினும் தத்தடுப்பில் பின்வரும் 4 வகைகள் உண்டு.

தத்தெடுப்பின் வகைகள் (Kinds of Adoption):

1. தத்தஹோமம் (Datta Homam): தத்தெடுக்கப்படுவதால், தத்தெடுக்கப்படுபவரின் கோத்திரமானது மாறுகிறது. இதை அறிவிக்கும் பொருட்டு தூய்மையான வெண்ணெயைத் தீயில் இட்டு ஹோமம் செய்யப்படும். ஆனால் தத்தெடுக்கப்படுபவனும், தத்து எடுப்பவரும் ஒரே கோத்திரத்தில் இருப்பின், மேற்படி தத்த ஹோமம் வலியுறுத்தப்படுவதில்லை. உதாரணமாக, அண்ணன் மகனை, தம்பி தத்தெடுத்துக் கொள்ளும் பொழுது மேற்படி சடங்கு தேவையில்லை. மேலும் பொதுவாக சூத்திரர்களிடையே தத்தஹோமம் வற்புறுத்தப் படுவதில்லை. இவ்வகை ஏறக்குறைய இந்தியா முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இம்முறையில் ஒரு விதவை தத்தெடுக்க முடியாது.

2. கிரித்திம தத்தெடுப்பு (Kritima Adoption): இந்தத் தத்தெடுப்பு காலத்தால் சற்றுப் பிற்பட்டது. தத்தஹோம வகையில் ஒரு விதவை தத்து எடுக்க இருந்த தடையைத் நீக்குவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வழியே இம்முறையாகும். இதில் மதத்தின் சாயல் கிடையாது. தத்தெடுக்கப்படுபவரின் சம்மதமே முக்கியத்துவம் பெறுகிறது. மேலும் தத்து எடுக்கப்பட்டவனுடைய பிறந்த வீட்டில் இருக்கும் உரிமைகள் தத்தெடுப்பால் பாதிக்கப்படமாட்டாது. ஆனால் தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தில் தத்தெடுத்தவரின் சொத்துக்கு மட்டுமே உரிமை கொண்டாட முடியும். மேலும், தத்தெடுக்கப்பட்டவனுடைய குழந்தைகளுக்கு அச் சொத்தில் எந்தப் பாத்தியதையும் கிடையாது. ஏனெனில், இங்கு தத்தெடுப் பவருக்கும், தத்தெடுக்கப்பட்டவனுக்கும் இடையே மட்டுமே உறவு நீடிக்கிறது.

3. துயமுஷ்யாயனம் (Duyamushyayana) : துய முஷ்யாயனம் என்று சொன்னால் இரண்டு தந்தைகளின் மகன் என்று பொருள். இந்தத் தத்தெடுப்பால் தத்து எடுப்பவரும், கொடுப்பவரும் ஓர் உடன்பாடு செய்து கொள்வார்கள். அதன்படி, தத்தெடுக்கப்பட்டவன் இரண்டு பேருக்கு மகனாவான். எனவே அவன் இரு தந்தைக்கும் ஈமச் சடங்குகள் செய்யலாம். இருவரது சொத்தையும் அடையலாம்.

4. இலாட்டம் தத்தெடுப்பு (Illatom Adoption) : மாமனார் மருமகனைத் தத்தெடுத்துக் கொள்ளும் வழக்கம் சென்னையிலும் அதிகமாக ஆந்திராவிலும், குறிப்பாக ரெட்டியார்கள் மத்தியிலும் உண்டு. இதற்கு இலாட்டம் தத்தெடுப்பு என்று பெயர். சில சமயங்களில் திருமணம் ஆவதற்கு முன்னரே திருமணம் செய்து வைக்கும் நோக்கத்தோடு, ஒருவனைத் தத்தெடுத்துக் கொள்வதுண்டு. இந்த முறையிலும் மதத்தின் சாயல் கிடையாது. சொத்தையும், குடும்பத்தையும் நிருவகிப்பதற்காகவே இம்முறையில் ஒருவனைத் தத்தெடுத்துக் கொள்வர். இம்முறையில் தத்தெடுக்கப்பட்டவனின் உரிமைகள் எல்லாம் அங்கங்கு நிலவும் வழக்கத்தைப் பொறுத்ததாகும்.

யார் தத்தெடுக்கலாம்?

1. மகனோ, பேரனோ, கொள்ளுப் பேரனோ அல்லது வேறு தத்தெடுக்கப்பட்ட மகனோ இல்லாத எந்த ஒரு இந்துவும் தத்தெடுத்துக் கொள்ளலாம். எனினும், சொந்த மகனிருந்தும், அவன் தன் தந்தைக்குரிய அந்திமக் கிரியைகளை, மதச் சடங்குகளை செய்ய முடியாதவனாக இருந்தால், வேறொருவனைத் தத்தெடுத்துக் கொள்ளத் தடையில்லை.

2. மகன் உலகப்பற்றை துறந்து சாமியாராகி, தந்தைக்கு செய்ய வேண்டிய சமயச் சடங்கை ஆற்ற முடியாத அளவுக்கு ஒரு நிலையை எய்தி விட்டால், அம்மகன் உயிருடன் இருந்தாலும், தந்தையானவர் வேறொருவனை தத்தெடுத்துக் கொள்ளலாம்.

3. சொந்த மகன் இல்லாவிட்டாலும், ஒருவனுக்கு முறையில்லா மணத்தில் (Illegitimate) பிறந்த மகன் இருக்கலாம். ஆனால், அந்த மகன் தந்தைக்கு செய்ய வேண்டிய சமயச் (ஈமச்) சடங்குகளைச் செய்ய முடியாது. எனவே தந்தை வேறொருவனை தத்தெடுத்துக் கொள்ளலாம்.

4. ஒருவனுடைய மனைவியோ அல்லது இறந்துவிட்ட மகனுடைய மனைவியோ கர்ப்பமாக இருப்பது, ஒருவன் தத்தெடுப்பதற்கு தடையாகாது. ஏனென்றால் குழந்தை பிறக்கும் வரை அது ஆணா அல்லது பெண்ணா என்பதைக் கூடத் தெரிந்து கொள்ள முடியாது. எனவே ஒருவனின் தத்தெடுக்கும் உரிமையை அவனது மனைவி கருவுற்றிருப்பதைக் காரணம் காட்டி, தடை செய்ய முடியாது.

5. திருமணம் செய்து கொண்டு குழந்தை இல்லாமல் போனால்தான் தத்தெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. எனவே திருமணம் செய்து கொள்ளாத பிரம்மச்சாரியும் தத்தெடுத்துக் கொள்ளலாம். அவ்வாறே மனைவியை இழந்தவனும் தத்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால் உலகப் பற்றை துறந்து சன்னியாசியாகிவிட்ட ஒருவன் தத்தெடுத்துக் கொள்ள முடியாது.

6. தத்தெடுப்பு முக்கியமான ஒன்றாகும். எனவே அதன் முக்கியத் துவத்தையும், விளைவையும் உணர முடியாத ஒரு பித்தனோ அல்லது பிறவி மந்தனோ தத்தெடுக்க முடியாது. அப்படி தத்தெடுத்திருந்தால், தத்தெடுப்பு நடைபெற்ற காலத்தில் அவன் புத்தித் தெளிவுடன் இருந்தான் என்பதை நிரூபிக்க வேண்டும். புத்தித் தெளிவோடு இருந்த காலத்தில் நடந்த தத்தெடுப்பு பின்னர் அவன் பித்து நிலையை அடைந்துவிட்டாலும் செல்லுபடியாகும்.

7. கணவன் பித்தனாக இருந்தாலும் அவன் உயிரோடு இருக்கையில் மனைவி தத்தெடுக்க முடியாது. ஏனெனில் கணவன் ஒருவேளை புத்தி தெளிவடைந்து அவனே தத்தெடுக்கக்கூடும். அந்த வாய்ப்பு பறிபோகக் கூடாது என்பதற்காக மனைவிக்கு உரிமை தரப்படவில்லை.

8. ஒருவன் தொழு நோயாளியாக இருந்தாலும் தத்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால் அந்நோய் உக்கிரமானதாக இருக்கக் கூடாது.

9. கணவன் தன் மனைவியை கலந்தாலோசிக்காமல் தத்தெடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் இங்கு தத்தெடுத்தல் என்பது அக்கணவன், தன் நலனுக்காகச் செய்து கொள்ளும் ஒரு வழிவகையாகும்.

10. ஒருவன் ஒரே சமயத்தில் இரண்டு பேர்களை மகன்களாகத் தத்தெடுத்துக் கொள்ள முடியாது. ஆனால் ஒருவன் பலமுறை தத்தெடுத்துக் கொள்ளலாம். ஒருவனைத் தத்தெடுத்து அவன் இறந்து விட்டால், மீண்டும் மற்றொருவனைத் தத்தெடுத்துக் கொள்ளலாம்.

தத்தெடுப்பதில் பெண்களின் நிலை :

ஒரு இந்துப் பெண் தானாகத் தத்தெடுத்துக் கொள்ள முடியாது. ஆனால் அவளுடைய கணவன் தனக்காகத் தத்தெடுக்கும்படி மனைவிக்கு அந்த உரிமையை வழங்கலாம். கணவனுடைய சம்மதமில்லாமல் ஒருத்தி தத்தெடுக்க முடியாது என்று வசிஷ்டருடைய நூல் கூறுகிறது. இந்த கூற்றுக்குப் பல்வேறு விளக்கங்கள் ஏற்பட்டுத் தத்தெடுப்புச் சம்பந்தமாகப் பல்வேறு பகுதிகளில் பல்வேறு முறைகள் அனுசரிக்கப்பட்டன. அவை,

1. மிதிலை முறையில் கணவன் இறந்தபின் மனைவியானவள் தத்தெடுக்கவே இயலாது.

2. வங்கம், காசி முறையில் கணவனின் சம்மதத்தின் பேரில் மனைவி தத்தெடுக்கலாம்.

3. கணவன் உயில் மூலம் தடை ஏதேனும் சொல்லாமலிருந்தால், ஒருத்தி விதவையான பிறகு (அதாவது அவன் இறந்த பிறகு) தத்தெடுத்துக் கொள்ளலாம் என்பது மராத்திய முறை.

4. கணவனின் சம்மதத்துடனோ அல்லது கணவன் இறந்து விட்டால் அவனுடைய சபிண்டா உறவினரின் சம்மதத்துடனோ ஒரு விதவை தத்தெடுக்கலாம், என்பது தென்னிந்திய முறை.

5. கணவனுடைய சம்மதம் இல்லாமல், தத்தெடுக்கும் வழக்கம் (custom) இருந்தால், ஒரு விதவை தத்தெடுத்துக் கொள்ளலாம். இது ஒரு பொதுக் கோட்பாடாகும்.

Biswanth Agarwal v. Dhopu Devi[1] – இவ்வழக்கில் கணவன் மனைவிக்குத் தத்தெடுக்கும் உரிமையை வாய்மொழியாக (oral) வழங்கினாளா

1. 1966 A.C. 13

என்பதை, கணவன் அவ்வுரிமையை மனைவிக்குக் கொடுத்த காலத்தில் இருந்த சூழ்நிலைகள் அனைத்தையும் ஆய்ந்து பார்த்து நீதிமன்றம் முடிவெடுத்தல் வேண்டும் என்று கூறப்பட்டது.

யார் தத்து கொடுக்கலாம் ?

ஓர் இந்துத் தந்தை தத்துக் கொடுக்கலாம். அவன் இறந்து விட்டால் அவன் மனைவி தத்துக் கொடுக்கலாம். இவர்களைத் தவிர வேறு யாருக்கும் அவ்வுரிமை கிடையாது. வசிஷ்டருடைய கூற்றுப்படி, கணவனின் சம்மதமின்றி மனைவி தத்தெடுக்கவோ, கொடுக்கவோ கூடாது. கணவன் மதம் மாறினாலும், தொழுநோய்க்குட்பட்டாலும், பாலியல் நோயிற்குள்ளானாலும், ஆண்மையை இழந்தாலும் அவன் தத்து கொடுக்கும் உரிமையை இழக்கமாட்டான்.

யாரைத் தத்தெடுப்பது? (அல்லது) தத்தெடுக்கப்படத் தகுதிகள்:

ஒருவன் ஒரு ஆண்மகனைத்தான் தத்தெடுக்க முடியுமே தவிர பெண்ணைத் தத்தெடுக்க முடியாது. ஆனால், அவன் அதே சாதியைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும். ஒரு சாதியின் இன்னொரு உட்பிரிவைச் சேர்ந்தவன் தத்தெடுத்துக் கொள்ளலாம். தத்தெடுப்பவரின் கோத்திரத்தில்தான் தத்து எடுக்கப்பட்டவன் இருக்க வேண்டும் என்பது அவசியமன்று. தத்து எடுப்பவர் தத்து எடுக்கப்படுபவனின் தாயை அவளுடைய கன்னிப்பருவத்தில் மணந்து கொள்ளக் கூடாத உறவு முறையில் இருந்தால், அவளுடைய மகனைத் தத்தெடுக்கக் கூடாது என்பது ஒரு விதி. இதை 'நந்த பண்டிதர் விதி' (Nanda Panditha's Rule) என்பார்கள். இதன்படி, மகளுடைய மகன், சகோதரியின் மகன், சின்னம்மா மகன் ஆகியோரை ஒருவன் தத்தெடுத்துக் கொள்ள முடியாது. ஆனால் இந்திய நீதிமன்றங்கள் இந்த விதிக்கு முரணாக வழக்கம் அமலில் இருந்தால், அதை அங்கீகரித்தன.

ஒரு அனாதையை தத்தெடுக்க இயலாது. வீட்டிற்கு ஒரே மகனை தத்தெடுக்கலாம். அதேபோல் வீட்டின் மூத்த மகனை தத்தெடுக்கலாம். ஏனென்றால், மூத்த மகன் தத்தெடுக்கப்பட்டுவிட்டாலும், அவருக்குப் பின் உள்ள சகோதரர்கள் தந்தைக்கு ஆற்ற வேண்டிய ஈமச் சடங்குகளை செய்யலாம். ஒரு முறை தத்தெடுக்கப்பட்டவனை மறுமுறை தத்தெடுக்க முடியாது. ஆனால், ஒருவன் இரண்டு தந்தையருக்கு மகனாக இருக்க முடியும் (தூயமுஷ்யாயன முறை). உக்கிரமான தொழுநோய், பித்து நிலை, பிறவிக் குருடு அல்லது ஊமை இவற்றால் பாதிக்கப்பட்டவர்களை தத்தெடுத்தால் அது செல்லாது. முறையிலாமணப் பிறப்பில் பிறந்தவனை தத்தெடுக்கக்கூடாது.

ஒருவனை, அவனுக்கு உபநயனம் (பூணூல் விழா) ஆகும் வரை, தத்தெடுத்துக் கொள்ளலாம். இது பிராமண, ஷத்திரிய வைசிய வருணத்தைப்

பொறுத்தவரை ஆகும். ஆனால் சூத்திர வருணத்தைப் பொறுத்தவரை, அவனுக்கு திருமணம் ஆகும் வரை தத்தெடுத்துக் கொள்ளலாம்.

தத்தெடுப்பின் விளைவுகள் :

ஒருவன் தத்தெடுக்கப்பட்ட பின், அவனுக்கு, அவன் பிறந்த குடும்பத்தில் உள்ள சகல பந்தங்களும் அற்று விடும். அவன் தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தில் புதிதாகப் பிறந்த மகன் போல் பாவிக்கப்படுவான். தத்தெடுத்த தந்தையின் வம்சத்தை அவன் தொடர்வதாகவும் கருதப்படும். தத்தெடுத்த மகனைப் பிறகு, தத்து எடுத்தவர் தன் மகன் அல்லன் என விலக்க முடியாது. தத்தெடுக்கப்பட்டவன் தனது பிறந்த குடும்பத்திற்குச் சம்பந்தமில்லாதவனாகப் போனால் கூடத் திருமணப் பிரச்சனையில் அவன் அந்நியனாகக் கருதப்பட மாட்டான். தத்தெடுத்தவரின் சொத்தில் தத்தெடுக்கப்பட்டவன் ஒரு பங்குரிமையாளராகிறான். ஆனால் தத்தெடுத்தவருக்குத் தத்தெடுப்புக்குப் பின் ஒரு மகன் பிறந்தால், தத்தெடுக்கப் பட்டவனுடைய பாகம், நான்கில் ஒரு பாகமாகக் (1/4) குறைந்துவிடும். தத்தெடுப்பிற்குப் பின் ஒருவனுக்கு வந்து சேர்ந்த சொத்துக்கள் தத்தெடுப்பால் பாதிக்கப்படாது.

Sivakami Achi v. Somasundaram Chettiar[1] – தத்தெடுக்கப் பட்டவன், தத்தெடுத்தவர் மற்றும் அவருடைய நேர்வழி முன்னோர்கள் சொத்துக்கு வாரிசாக இருக்க முடியும். அது மட்டுமல்லாது, ஒன்று விட்டு ஒன்று வந்த வழியிலும் அவன் வாரிசுரிமை கொண்டாட முடியும். ஆனால் மேற்படி வழக்கில், மனைவியை இழந்தவர், ஒருவனைத் தத்தெடுத்துக் கொண்டால், அவன் தத்தெடுத்த தந்தையின் இறந்து போன மனைவியின் உறவினர் சொத்துக்கு உரிமை கொண்டாட முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஒரு விதவை தன்னுடைய கணவனுக்காகத் தத்தெடுத்துக் கொண்டால், கணவனுடைய சொத்துக்கு அவள் தொடர்ந்து வாரிசுரிமை கொண்டாட முடியாது. தத்தெடுக்கப்பட்ட மகனே உரிமை உடையவனாவான். அதைப் போலவே ஒரு பங்குரிமையருக்கு அவளுடைய கணவன் சொத்து போய்ச் சேர்ந்தால், தத்தெடுக் கப்பட்டபின், தத்தெடுக்கப்பட்ட மகனை மீண்டும் அச்சொத்து வந்தடையும்.

பெண்ணைத் தத்தெடுத்தல் :

பண்டைய இந்து சாத்திரங்களில், பெண்ணைத் தத்தெடுத்துக் கொள்வது பற்றிச் சொல்லப்படவில்லை. ஆனால், தேவதாசிகள் மத்தியில் பெண்ணைத் தத்தெடுத்துக் கொள்ளும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இந்த வழக்கத்தை பம்பாய் உயர் நீதிமன்றம் **Hira v. Radha**[2] – என்ற

1. I.L.R. 1956 Madras 459.
2. (1913) I.L.R. 37 Bombay 116

வழக்கில் அங்கீகரிக்கவில்லை. தாசி ஒரு பெண்ணைத் தத்தெடுப்பது ஒழுக்கக் குறைவானது என்ற அடிப்படையில் அவ்வழக்கம் செல்லாது என்று பம்பாய் உயர் நீதிமன்றம் கூறுகிறது. ஆனால் சென்னை உயர் நீதிமன்றம் பின்வரும் வழக்கில் கொடுத்த தீர்ப்பானது சற்று மாறுபட்டு விளங்குகிறது.

Venkatchalamma v. Cheekati[1]– இவ்வழக்கில் விபச்சாரத்திற்கு பெண்ணை பயன்படுத்துகிற நோக்கம் இல்லாமல் அல்லது விபச்சார வாழ்க்கையை மேற்கொள்வதற்குப் பயிற்சி கொடுக்கும் எண்ணம் இல்லாமல் ஒரு தாசி தத்தெடுத்துக் கொண்டால் அது செல்லும், என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தேவதாசிகள் குலத்தில் ஒருத்தி, இரண்டு பெண்களைக் கூடத் தத்தெடுத்துக் கொள்ளலாம். தத்தெடுப்பைச் செல்லக் கூடியதாக்கச் சடங்குகள் எதுவும் அவசியமில்லை. இவ்வாறு தத்தெடுக்கப்பட்ட பெண்கள், தத்தெடுத்த தாயின் சொத்தை அடைவார்கள்.

தத்தெடுப்பிற்கு முந்திய உடன்பாடுகள் (Ante-Adoption Agreements):

தத்தெடுப்பிற்கு முன் தத்தெடுப்பவரும் தத்துக் கொடுப்பவரும் செய்து கொள்ளும் ஒப்பந்தம் செல்லுமா என்பது ஒரு முக்கிய பிரச்சனை. ஆரம்ப காலத்தில் நீதிமன்றங்கள் அத்தகைய ஒப்பந்தங்கள் செல்லத்தக்கது என்றே தீர்ப்பு வழங்கின. தத்தெடுப்பவரும் தத்துக் கொடுப்பவரும் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தால் தத்தெடுக்கப்படுபவனின் சில உரிமைகள் குறைக்கப்பட்டன. ஆனால் பின்வரும் புகழ்பெற்ற வழக்கில் இப்பிரச்சனையை நன்கு அலசி ஆராய்ந்து பிரிவி கவுன்சில் தீர்ப்பு வழங்கியது.

Krishnamurthy v. Krishnamurthy[2]– இவ்வழக்கில் தத்தெடுத்தவர் தன்னுடைய உயிலில் தத்தெடுக்கப்பட்டவனுக்குச் சொத்தில் ஒரு பகுதியையும், பிறவற்றை மனைவி, பிற உறவினர்கள், தர்ம காரியங்கள் ஆகியவற்றிற்கும் ஒதுக்குவதாக எழுத, அதைத் தத்துக் கொடுப்பவர் ஒப்புக் கொண்டார். ஆனால் பிரிவி கவுன்சில் இந்த ஒப்பந்தம் தத்தெடுக்கப்பட்ட மகனைக் கட்டுப்படுத்தாது என்று தீர்ப்பளித்தது.

இந்து தர்ம சாத்திரங்கள் தத்தெடுக்கப்பட்ட மகனுக்கு என்னென்ன உரிமைகள் வழங்கியுள்ளனவோ, அவற்றை உடன்பாடுகள் (Agreements) மூலம் குறைப்பது நியாயமாகாது; தத்தெடுக்கப்பட்டவன் தன் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு முரண்தடையாகச் (Estoppel) செய்யப்படும் உடன்பாட்டிற்கு அவன் பொறுப்பல்லன். தத்துக் கொடுப்பவர் தத்தெடுப்பிற்குப் பின் தத்து

1. I.L.R. 1953 Madras 741: A.I.R. 1953 Madras 571.
2. I.L.R. 50 Madras 508.

எடுப்பவனுக்குக் காப்பாளர் போல இருக்க முடியாது. அவருடைய செயல்கள் தத்தெடுக்கப்பட்டவனை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது; என்றாலும் தனக்குப் பிறகு தன்னுடைய மனைவிக்குச் சொத்தில் ஆயுள் பாத்தியதை உண்டு என்றும், அவளுக்குப் பிறகே தத்தெடுக்கப்பட்ட மகனுக்குச் சொத்து சேரும் என்றும் செய்து கொள்ளும் தத்தெடுப்பிற்கு முந்திய உடன்பாடு, அப்படி ஒரு வழக்கம் இருந்தால், செல்லும், என்று மேற்படி வழக்கில் பிரிவி கவுன்சில் மேலும் கூறியது.

தத்தெடுப்புகள் குறித்த மேற்படி பழைய சட்டத்திலிருந்து தோன்றுக்கு கேட்கப்படக் கூடிய வினாக்கள் வருமாறு:

1. **Kinds of Adoption - Write short notes.** (தத்தெடுப்பின் வகைகள் – சிறு குறிப்பு வரைக.)

2. **Illotom Adoption - Write short notes.** (இல்லாத்தம் தத்தெடுப்பு – சிறு குறிப்பு வரைக.)

3. **Kritima Adoption - Write short notes.** (கிரிதிமா தத்தெடுப்பு – சிறு குறிப்பு வரைக.)

3. **Discuss the capacity of the person giving in adoption and the person taking in adoption prior to the Hindu Adoptions and Maintenance Act, 1956** (1956–ஆம் ஆண்டு இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்திற்கு முன்பு தத்தெடுப்பதற்கும், கொடுப்பதற்கும் உள்ள தகுதிகளை விவாதிக்க.)

4. **Explain the position of women in adoption.** (தத்தெடுப்பில் பெண்களின் நிலையை விளக்குக.)

5. **Nanda Panditha's Rule - Write short notes.** (நந்த பண்டிதர் விதி – சிறு குறிப்பு எழுதுக.)

6. **Ante-Adoption Agreement - Write short notes.** (தத்தெடுப்பிற்கு முந்திய உடன்பாடுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(இவ்வினாக்களுக்குண்டான விடைகளை மேற்கண்ட பகுதியிலிருந்து கண்டு, அவற்றில் பொருத்தமானவற்றை எழுதவும்.)

அ. 1956-ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு இந்து தத்தெடுப்புகளின் நிலை [தொகுக்கப்பட்ட (புதிய) சட்டம்]

A. The position of Adoptions after the enactment of the Hindu Adoptions and Maintenance Act, 1956 [Codified Law]

1.Discuss the changes brought about by Legislation in the Law of Adoption. (தத்தெடுப்புகள் குறித்த சட்டத்தில், சட்டமன்றம் கொண்டுவந்த மாற்றங்களை விவாதிக்க.)

(அல்லது)

"The Hindu Adoptions and Maintenance Act, 1956 has secularised the Law of Adoption." - Discuss. ("1956–ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டமானது, தத்தெடுப்பை மதச் சார்பற்றதாக ஆக்கியுள்ளது" – விவாதிக்க.)

(அல்லது)

"The objects of adoptions are two fold, the first is religious and the second is secular" - Comment. ("தத்தெடுப்பின் நோக்கங்கள் இரண்டு, முதலாவது சமய சார்புடையது, இரண்டாவது சமய சார்பற்றது" – விமர்சிக்க.)

(அல்லது)

"The Hindu Adoptions and Maintenance Act has liberalised the Law of Adoption" - Discuss. ("இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டமானது தத்தெடுப்பை கட்டுப்பாடுகளற்றதாக ஆக்கியுள்ளது" – விவாதிக்க.)

(அல்லது)

"The present Hindu Law of Adoption is a piece of progressive legislation" - Comment giving reasons. ("தற்போதைய இந்து மகவேற்றுச் சட்டம் ஒரு முன்னேற்ற நோக்குடைய சட்டம்" – இக்கூற்றை தக்க காரணங்களோடு விமர்சிக்கவும்.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
புதிய சட்டம் கொண்டு வந்த மாற்றங்கள்
முடிவுரை

முன்னுரை :

1956–ஆம் ஆண்டு அமலுக்கு வந்த இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டமானது, ஏற்கனவே இந்துக்கள் மத்தியில் நிலவி வந்த பழைய தத்தெடுப்பு சட்டத்தில் பல மாற்றங்களைச் செய்தது. அவை வருமாறு :

புதிய சட்டம் கொண்டு வந்த மாற்றங்கள்:

1. இச்சட்டம் வருவதற்கு முன்னால் இருந்த விதிகள், விளக்கங்கள், நூல்கள், வழக்கம், வழக்காறு யாவும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள விஷயங்களைப் பொறுத்தவரையில் செயலற்றுவிடும். அவ்வாறே இதற்கு முன்னால் இருந்த சட்டம் இச்சட்டத்தின் விதிகளுக்கு முரண்படும் விஷயங்களில் செயலற்றுவிடும். இது இச்சட்டத்தின் மேலோங்கு செல்திறம் எனப்படுகிறது. **(பிரிவு 4 – Overriding effect of the Act)**

2. மேற்படி சட்டம் அமலுக்கு வந்ததற்குப் பின்னர் நடைபெறும் தத்தெடுப்புகள் அதில் கூறப்பட்டுள்ள வண்ணமே நிகழ வேண்டும். இச்சட்டத்தில் கண்டுள்ள விதிகளுக்கு முரணாக நடந்தால் அவை இல்லாநிலையதாக கருதப்படும். ஆனால் மேற்படி சட்டம் வருவதற்கு முன்னால் பழைய சட்டப்படி நடந்த தத்தெடுப்புகள், பழைய சட்டத்திற்கே கட்டுப்பட்டவை. இப்புதிய சட்டம் எவ்வகையிலும் அவற்றைப் பாதிக்காது. **(பிரிவு 5)**

3. பழைய சட்டத்தின்படி, ஆண்கள் மட்டுமே அதுவும் ஒரு ஆண்மகனை மட்டுமே தத்தெடுக்க முடியும். ஆனால் மேற்படி புதிய சட்டத்தின்படி ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் தத்தெடுக்கலாம். தத்தெடுக்கப்படுபவர் ஆண் மகனாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம். **(பிரிவு 7)**

4. பழைய சட்டத்தின்படி ஒரு மனைவி தனது கணவனின் அனுமதியுடன்தான் தத்தெடுக்க முடியும். ஆனால் புதிய சட்டத்தின்படி ஒரு மனைவி தனது கணவன் உயிருடன் இருக்கும் பொழுதே தனக்காக ஒரு மகனையோ அல்லது மகளையோ தத்தெடுத்துக் கொள்ளலாம். கணவனின் சம்மதம் தேவையில்லை. **(பிரிவு 8)**

5. பழைய சட்டத்தின்படி ஒரு கணவன் தத்தெடுத்துக் கொண்டால்

அதற்கு மனைவியின் ஒப்புதல் தேவையில்லை. ஆனால் புதிய சட்டத்தின்படி மனைவியின் ஒப்புதல் அவசியம்.

6. பழைய சட்டத்தின்படி குழந்தையின் தந்தையும் தாயும் தத்துக் கொடுக்கலாம். புதிய சட்டமும் இவ்வாறே கூறுகிறது. ஆனால், தந்தையும் தாயும் இறந்துவிட்டிருப்பின் அல்லது உலகப் பற்றை துறந்துவிட்டிருப்பின், அக்குழந்தை பெற்றோர் பெயர் தெரியாத அனாதையாக இருப்பின், அதன் காப்பாளர் (guardian) நீதிமன்றத்தின் அனுமதி பெற்று தத்து கொடுக்கலாம் அல்லது தானே கூட தத்தெடுத்துக் கொள்ளலாம். பழைய சட்டத்தில் ஒரு அனாதையை தத்தெடுத் துக் கொள்ள முடியாது. ஆனால் புதிய சட்டத்தின்படி, முடியும். **(பிரிவு 9)**

7. பழைய சட்டத்தில் தத்தெடுக்கப்படும் நபர் ஆணாகவும், ஒரே சாதியைச் சார்ந்தவராகவும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. மேலும் தத்தெடுக்கப்படுபவரின் வயது மற்றும் திருமண நிலை குறித்து பல்வேறு முரண்பட்ட கருத்துகள் நிலவின. ஆனால் புதிய சட்டத்தின் 10–வது பிரிவானது, தத்தெடுக்கப்படுபவர் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம் என்றும், தத்தெடுக்கப்படுபவன் 15 வயதிற்கு மேல் இருக்கக்கூடாது என்றும், அவன் திருமணமாகாதவனாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறது. **(பிரிவு 10)**

8. பழைய சட்டத்தின்படி, ஒரு செல்லத்தக்க தத்தெடுப்பிற்கு 'தத்த ஹோமச் சடங்கு' (Datta Homam) தேவை. ஆனால் அது தற்பொழுது தேவையில்லை. **(பிரிவு 11)**

9. புதிய சட்டத்தின்படி, தத்தெடுப்பவர் ஒரு ஆணாக இருந்து, தத்தெடுக்கப்படுபவர் ஒரு பெண்ணாக இருக்கும்பட்சத்தில், அந்த ஆண் (அதாவது தத்துத் தந்தை) தத்தெடுக்கப்படும் பெண்ணை விட குறைந்தபட்சம் 21 ஆண்டுகள் மூத்தவராக இருக்க வேண்டும். அதுபோல் தத்தெடுப்பவர் ஒரு பெண்ணாக இருந்து, தத்தெடுக்கப்படுபவர் ஒரு ஆணாக இருக்கும்பட்சத்தில், அந்தப் பெண் (அதாவது தத்துத் தாய்) தத்தெடுக்கப்படும் ஆணை விட குறைந்தபட்சம் 21 ஆண்டுகள் மூத்தவராக இருக்க வேண்டும். பழைய சட்டத்தில் இவ்வாறு இல்லை. **(பிரிவு 11)**

10. பழைய சட்டத்தில் தத்தெடுக்கப்பட்ட மகன் சில விதிவிலக்கு களுக்குட்பட்டே தந்தையின் சொத்தில் வாரிசுரிமை பெற முடிந்தது. ஆனால் புதிய சட்டத்தின்படி, தத்தெடுப்பிற்கு முன் தத்தெடுக்கப்பட்ட மகன் அல்லது மகளுக்கு வந்தடைந்த அனைத்து சொத்துரிமையையும், தத்தெடுப்பிற்குப் பின்னும், தொடர்ந்து அனுபவிக்கவும், அடையவும் முடியும். அதாவது தனது பெற்றோர் சொத்தில் வாரிசுரிமை கொண்டாட முடியும். **(பிரிவு 12)**

முடிவுரை :

தந்தை இறந்த பின் அவருக்கு ஈமக் கிரியைகள் போன்ற மதச்

சடங்குகளை முறைப்படி செய்விப்பதன் மூலம் அவருடைய ஆன்மா விமோசனம் பெறுவதாக இந்து தரும சாத்திரங்கள் கூறுகின்றன. அச்சடங்குகளை அவரது மகன் மட்டுமே செய்ய வேண்டும். மகனில்லாதோர், பிறர் பெற்ற ஆண் குழந்தையை தனது மகனாக தத்தெடுத்துக் கொண்டனர். அதாவது மதக் கடமை செய்ய மட்டுமே மகன் தேவைப்பட்டான். இது பழைய சட்டத்தின் நிலை ஆகும். ஆனால் புதிய சட்டமானது தத்தெடுப்பை மதச் சார்பற்றதாக ஆக்கிவிட்டது. ஆணோ பெண்ணோ யாரும் தத்தெடுக்கலாம். தத்தெடுக்கப்படுபவர் மகனாகவோ அல்லது மகளாகவோ இருக்கலாம். மேலும் இச்சட்டத்தினால் சமயச் சாயலுடைய பல கண்மூடித்தனமான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு விட்டன. அவற்றை மேற்கண்ட மாறுதல்களை காணும் பொழுதே புலனாகியிருக்கும். எனவே 1956–ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டமானது, தத்தெடுப்புகளை மதச் சார்பற்றதாகவும், கட்டுப்பாடுகளற்றதாகவும் ஆக்கி விட்டது எனில் அது மிகையன்று.

2. Explain the requisites of a valid Adoption under the Hindu Adoptions and Maintenance Act. (இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் ஒரு செல்லத்தக்க தத்தெடுப்பிற்கு தேவையான கூறுகளை விளக்குக.)

(அல்லது)

State and fully comment upon the requisite of a valid Adoption under the provisions of Hindu Statutory Law. (இந்து இயற்று முறைச் சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் ஒரு செல்லத்தக்க தத்தெடுப்பிற்கு தேவையான கூறுகளை விளக்குக.)

(அல்லது)

What are the requisites of a valid Adoption by a male and a female under the Hindu Law ? Is there any development in the Hindu Adoption Law ? (இந்து சட்டத்தின் கீழ் ஆணும் பெண்ணும் செல்லத்தக்க மகவேற்பு செய்வதற்கான தேவைகள் யாவை ? இந்து மகவேற்றச் சட்டத்தில் ஏதும் முன்னேற்றம் உள்ளதா ?)

(அல்லது)

Discuss the capacity of the person giving in adoption and the person taking in adopting under the Hindu Adoptions and Maintenance Act, 1956. (1956–ம் ஆண்டு இந்து மகவேற்புகள் மற்றும் வாழ்க்கைப் பொருளுதவி சட்டத்தின் கீழ் ஒருவனைத் தத்தெடுப்பிற்குக் கொடுப்பதற்கும், தத்தெடுப்பிற்கு எடுத்துக்கொள்வதற்கும் உள்ள தகுதியினை விவாதிக்க. இது குறித்து அச்சட்டத்திற்கு முன்பிருந்த சட்ட நிலையை எடுத்துரைக்க.)

(அல்லது)

Write a short note on adoption by a Hindu female. (ஒரு இந்துப் பெண் தத்தெடுத்தல் குறித்து சிறு குறிப்பு ஒன்றை வரைக.)

(அல்லது)

Discuss the requisites of a valid Adoption by a female under Hindu Law. (இந்து சட்டத்தின்படி ஒரு பெண் செல்லத்தக்க மகவேற்பு செய்வதற்கு தேவையானவைகளை விவாதி.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை

ஒரு செல்லத்தக்க தத்தெடுப்பிற்கு தேவையான நிபந்தனைகள்

தத்தெடுக்கத் தகுதிகள்

(a) ஒரு இந்து ஆண் தத்தெடுத்துக் கொள்ளத் தகுதி (பிரிவு 7)

(b) ஒரு இந்துப் பெண் தத்தெடுத்துக் கொள்ளத் தகுதி (பிரிவு 8)

தத்து கொடுக்கத் தகுதிகள்

Dhanraj v. Suraj Bai

தத்தெடுக்கப்படத் தகுதிகள்

Deva Gouda v. Sham Gouda

தத்தெடுப்பிற்குண்டான பிற நிபந்தனைகள்

முடிவுரை

முன்னுரை :

ஒரு செல்லத்தக்க தத்தெடுப்பிற்கு தேவையான கூறுகளை **6 முதல் 11** வரையிலான பிரிவுகள் கூறுகின்றன. **பிரிவு 6,** பொதுவான சில நிபந்தனைகளைக் கூறுகிறது. அதற்கடுத்து வரும் பிரிவுகள் அந்நிபந்தனைகளை விளக்கிக் கூறுகின்றன.

ஒரு செல்லத்தக்க தத்தெடுப்பிற்கு தேவையான நிபந்தனைகள் (பிரிவு 6) :

1. தத்து எடுக்கும் நபருக்குத் தத்து எடுக்கத் தகுதியும் உரிமையும் இருக்க வேண்டும்;
2. தத்து கொடுப்பவனுக்கு அவ்வாறு கொடுப்பதற்குரிய தகுதிகள் இருக்க வேண்டும்;

3. தத்து எடுக்கப்படுபவனுக்கு, அவ்வாறு தத்தெடுத்துக் கொள்ளப் படுவதற்குரிய தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்;

4. இச்சட்டத்தில் காணப்படும் பிற நிபந்தனைகளுக்கு ஏற்பத் தத்தெடுக்கப்பட வேண்டும்.

மேலே கண்ட நான்கில் எது குறைந்தாலும் தத்தெடுப்பு செல்லாததாகி விடும். தத்து எடுக்க, கொடுக்க, எடுக்கப்பட என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பதும், பிற நிபந்தனைகள் யாவை என்பதும் அடுத்துவரும் பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

தத்தெடுக்கத் தகுதிகள் :

பிரிவுகள் 7 மற்றும் 8–ஆனது முறையே ஓர் (a) இந்து ஆணுக்கும் (b) பெண்ணுக்கும் உள்ள தத்தெடுக்கும் தகுதிகள் பற்றிக் கூறுகின்றன. அவை வருமாறு:

(a) ஒரு இந்து ஆண் தத்தெடுத்துக் கொள்ளத் தகுதி (பிரிவு 7) :

புத்தித் தெளிவோடு இருக்கின்ற, உரிமை வயது (Major) வந்த எந்த ஒரு இந்து ஆணும், ஒரு மகனையோ அல்லது மகளையோ தத்தெடுத்துக் கொள்ளலாம். மனைவி உயிரோடு இருந்தால், அவளுடைய ஒப்புதல் இல்லாமல் தத்தெடுக்க முடியாது. (i) மனைவி முழுமையாகவும், இறுதியாகவும் உலகப்பற்றை துறந்து விட்டாலோ (renounced the world) அல்லது (ii) இந்துவாக இல்லாமல் போய்விட்டாலோ (ceased to be a Hindu) அல்லது (iii) தக்க அதிகார வரம்புடைய நீதிமன்றத்தால் 'பித்து நிலையினள்' என்று அறிவிக்கப்பட்டு விட்டாலோ அவளுடைய ஒப்புதல் இல்லாமல் தத்தெடுக்கலாம்.

தத்தெடுக்கும் காலத்தில் ஒருவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால் எல்லா மனைவியரின் ஒப்புதலையும் பெற வேண்டியது அவசியம். எந்த ஒரு மனைவியினுடைய ஒப்புதலாவது அவசியமில்லை என்றால், மேற்கண்ட மூன்று காரணங்களில் ஏதேனும் ஒன்றை அம்மனைவியைப் பொறுத்தவரை காட்ட வேண்டும்.

(b) ஒரு இந்துப் பெண் தத்தெடுத்துக் கொள்ளத் தகுதி (பிரிவு 8) :

புத்தித் தெளிவோடு இருக்கின்ற, உரிமை வயது அடைந்து விட்ட, திருமணமாகாத, திருமணம் ஆனாலும், (i) அத்திருமணம் கலைக்கப்பட்டு விட்டாலோ, அல்லது (ii) கணவன் இறந்து விட்டாலோ, அல்லது (iii) கணவன் முழுமையாக மற்றும் இறுதியாக உலகப்பற்றை துறந்து விட்டாலோ அல்லது (iv) இந்துவாக இல்லாமல் போய் விட்டாலோ அல்லது (v) தக்க அதிகாரவரம்புடைய நீதிமன்றத்தால் கணவன் 'பித்து நிலையினன்' என்று அறிவிக்கப்பட்டு விட்டாலோ, ஒரு பெண் தத்தெடுத்துக் கொள்ளலாம்.

பழைய சட்டத்தில் ஒரு பெண் கிருத்திம முறையை தவிர மற்றவற்றில் தனக்காகத் தத்து எடுத்துக் கொள்ள முடியாது. கணவனுக்காக மட்டுமே தத்தெடுத்துக் கொள்ள முடியும். புதிய சட்டப்படி ஒரு பெண் தனக்காகத் தத்தெடுத்துக் கொள்ள முடியும். இது பெண்ணுக்குத் தரப்பட்டிருக்கும் புதிய உரிமையாகும்.

தத்துக் கொடுக்கத் தகுதிகள் (பிரிவு 9) :

1. தந்தை அல்லது தாய் அல்லது காப்பாளர் தவிர வேறு எந்த நபருக்கும் ஒரு குழந்தையைத் தத்துக் கொடுக்கும் தகுதி கிடையாது. (பழைய சட்டப்படி காப்பாளர் தத்து கொடுக்க முடியாது.)

2. தந்தை உயிரோடு இருந்தால் அத்தகுதி அவருக்கு மட்டுமே உண்டு. ஆனால் அந்த உரிமையை மனைவியின் ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தக்கூடாது. மனைவி முழுமையாக மற்றும் இறுதியாக உலகப்பற்றை துறந்து விட்டாலோ அல்லது இந்துவாக இல்லாமல் போய்விட்டாலோ அல்லது தக்க அதிகார வரம்புடைய நீதிமன்றம் அவளை **'பித்து நிலையினள்'** என்று அறிவித்து விட்டாலோ அக்கணவன் தனது மனைவியின் ஒப்புதல் பெற வேண்டிய அவசியமில்லை. (பழைய சட்டத்தின்படி தாயின் ஒப்புதல் தேவையில்லை.)

3. தந்தை இறந்து விட்டாலோ அல்லது முழுமையாக மற்றும் இறுதியாக உலகப்பற்றை துறந்து விட்டாலோ அல்லது தக்க அதிகார வரம்புடைய நீதிமன்றம் அவரை **'பித்து நிலையினர்'** என்று அறிவித்து விட்டாலோ தாய், குழந்தையைத் தத்துக் கொடுக்கலாம்.

Dhanraj v. Suraj Bai[1] - ஒரு குழந்தையை ஏற்கனவே தத்தெடுத்துக் கொண்டுள்ள மாற்றாந் தாய் ஒருத்தி (step-mother), அக்குழந்தையை மீண்டும் மற்றொருவருக்குத் தத்துக் கொடுக்க முடியாது. இயற்கை நிலை தாய் (natural mother) மட்டுமே, அதுவும் அவளது கணவன் இறந்து விட்டிருந்தாலோ, உலகப் பற்றை துறந்துவிட்டிருந்தாலோ, அல்லது பித்து நிலை அடைந்துவிட்டிருந்தாலோ தான் தனது குழந்தையை தத்துக் கொடுக்க முடியும் என்று மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

4. ஒரு குழந்தையின் தாய், தந்தை இருவரும் இறந்து விட்டாலோ அல்லது இருவரும் உலகப் பற்றை துறந்து விட்டாலோ அல்லது இருவரும் குழந்தையைக் கைவிட்டு விட்டாலோ (abandoned the child) அல்லது தக்க அதிகாரவரம்புடைய நீதிமன்றம் இருவரையும் பித்து நிலையினர் என்று அறிவித்து விட்டாலோ அல்லது குழந்தையின் தாய் தந்தை யார் என்று தெரியாமல் இருந்தாலோ (parantage of the child is not known) குழந்தையைப்

1. AIR 1975 S.C. 1105

பராமரிக்கும் காப்பாளர் நீதிமன்றத்தின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொண்டு எந்த நபருக்கும் தத்துக் கொடுக்கலாம் அல்லது தானே வேண்டு மானாலும் தத்தெடுத்துக் கொள்ளலாம்.

5. காப்பாளருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்குவதற்கு முன்னர், அத்தத்தெடுப்பு அக்குழந்தைக்கு நலம் பயக்குமா, குழந்தையின் வயது, புரிந்து கொள்ளும் ஆற்றல் இவற்றைக் கணக்கில் கொண்டு பார்க்குமிடத்து, குழந்தையின் விருப்பத்திற்கு உரிய இடம் தரப்படுகிறதா என்பதைக் கவனிக்கும். மேலும் அனுமதி கோரும் காப்பாளர் நீதிமன்றம் அனுமதிக்கக்கூடிய ஒரு தொகை அல்லது பரிசு (reward) அல்லாமல் வேறு தொகை அல்லது பரிசை குழந்தையை தத்தெடுத்துக் கொள்பவரிடமிருந்து பெற்றிருக்கிறாரா என்பதை ஆய்ந்து, அவ்வாறு இல்லை என்று திருப்தி கொண்ட பிறகே காப்பாளர் தத்து கொடுப்பதற்கு நீதிமன்றம் உத்திரவிடும்.

தத்தெடுக்கப்படத் தகுதிகள் (பிரிவு 10) :

ஒரு நபர் (ஆணோ அல்லது பெண்ணோ) தத்தெடுக்கப்பட முக்கிய தகுதிகள் நான்கு என்று 10–வது பிரிவு கூறுகிறது. அவை,

1. தத்தெடுக்கப்படும் நபர் இந்துவாக இருக்க வேண்டும்.

2. ஏற்கனவே தத்தெடுக்கப்பட்டிருக்கக் கூடாது.

3. திருமணம் ஆகியிருக்கக்கூடாது. திருமணமானவர்களைத் தத்தெடுக்கும் வழக்கம் அல்லது வழக்காறு, சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே உண்டு என்றால் அவ்வாறு தத்தெடுத்துக் கொள்ளலாம்.

4. 15 வயது பூர்த்தியாகி இருக்கக்கூடாது. 15 வயதுக்கு மேற்பட்டவர் களை தத்தெடுக்க அனுமதிக்கும் வழக்கம் அல்லது வழக்காறு இருந்தால் அவ்வாறு தத்தெடுத்துக் கொள்ளலாம்.

பழைய சட்டத்தில் ஆண்மகன் மட்டுமே தத்தெடுக்கப்பட்டான். இப்புதிய சட்டத்தின் வாயிலாக ஒரு ஆணையோ அல்லது ஒரு பெண்ணையோ தத்தெடுக்கலாம்.

Deva Gouda v. Sham Gouda[1] - ஒரு குழந்தையின் பித்து நிலைமை, அக்குழந்தையை தத்துதெடுத்துக் கொள்வதற்கு ஒரு தடையாக அமையாது (Lunacy of the child is no bar taking that child in adoption) என்று மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

தத்தெடுப்பிற்குண்டான பிற நிபந்தனைகள் (பிரிவு 11):

தத்தெடுக்க, கொடுக்க, எடுக்கப்பட ஒரு நபருக்கு தேவையான தகுதிகள்

1. AIR 1992 Bom. 189

யாவை என்பது இதற்கு முன்னால் கூறப்பட்டது. இந்தப் 11–வது பிரிவில், ஒரு செல்லத்தக்க தத்தெடுப்பிற்குத் தேவையான பிற நிபந்தனைகள் யாவை என்பது கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு தத்தெடுப்பிலும் அந்நிபந்தனைகள் பூர்த்தி செய்யப் பட வேண்டும். அவை வருமாறு :

1. ஒரு மகனைத் தத்தெடுப்பதென்றால், தத்து எடுக்கும் தந்தைக்கோ அல்லது தாய்க்கோ வேறு இந்து மகனோ அல்லது பேரனோ அல்லது கொள்ளுப் பேரனோ தத்தெடுக்கப்படும் காலத்தில் இருக்கக் கூடாது.

2. ஒரு மகளைத் தத்தெடுப்பதென்னறால், தத்தெடுக்கும் தந்தைக்கோ அல்லது தாய்க்கோ வேறு இந்து மகளோ அல்லது மகனின் மகளோ தத்தெடுக்கப்படும் காலத்தில் இருக்கக்கூடாது.

3. தத்தெடுப்பவர் ஆணாகவும் தத்து எடுக்கப்பட வேண்டியவர் பெண்ணாகவும் இருந்தால், தத்து எடுக்கும் தந்தை, தத்து எடுக்கப்பட வேண்டிய பெண்ணை விட 21 வயது மூத்தவராக இருக்க வேண்டும்.

4. தத்து எடுப்பவர் பெண்ணாகவும் தத்து எடுக்கப்பட வேண்டிய நபர் ஆணாகவும் இருந்தால், தத்து எடுக்கும் தாய், தத்து எடுக்கப்பட வேண்டிய மகனை விட 21 வயது மூத்தவராக இருக்க வேண்டும்.

5. ஒரே குழந்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் ஒரே சமயத்தில் தத்தெடுக்கப்பட முடியாது.

6. தத்து எடுக்கப்படும் குழந்தை உண்மையாகவே தத்துக் கொடுக்கப்பட்டு வாங்கப்பட வேண்டும். பெற்றோர்களோ அல்லது காப்பாளரோ இதைச் செய்யலாம். அல்லது பிறந்த குடும்பத்திலிருந்து தத்தெடுக்கப்பட்ட குடும்பத்திற்கு அவர்களுடைய அதிகாரத்தின் கீழ்க் கொடுக்கப்படலாம். கைவிடப்பட்ட குழந்தையாகவோ அல்லது தாய் தந்தையர் யார் என்பது தெரியாத குழந்தையாகவோ இருந்தால் அக்குழந்தை வளர்க்கப்பட்ட இடம் அல்லது குடும்பத்திலிருந்து தத்தெடுக்கப்படும் குடும்பத்திற்கு தரப்பட வேண்டும்.

தத்தெடுப்பு செல்லத்தக்கதாக ஆவதற்கு 'தத்த ஹோமம்' செய்வது முக்கியமானதன்று.

பழைய சட்டத்தில் இல்லாத சில விஷயங்கள் மேற்படி 11–வது பிரிவில் கூறப்பட்டுள்ளன. ஒரு ஆண் பெண்ணொருத்தியையும், அதுபோல் ஒரு பெண் ஆணொருவனையும் தத்தெடுக்க வேண்டும் என்றால் தத்தெடுக்கும் அந்த ஆண் மற்றும் பெண், தத்தெடுக்கப்படும் ஆண் மற்றும் பெண்ணை விட 21 வயது மூத்தவராக இருக்க வேண்டும் என்று இப்பிரிவு கூறுகிறது. பழைய சட்டத்திலோ, தரும சாத்திரங்களிலோ இந்நிபந்தனை கிடையாது. தத்தெடுக்கும் சடங்கு முன்பு சிக்கலானது. இப்போது சற்று எளிதாகி விட்டது. குழந்தை என்ற நபரை உண்மையாக கொடுத்து வாங்கி விட்டாலே தத்தெடுப்பு சடங்கு முடிந்து

விட்டதாகப் பொருள். தத்த ஹோமம் போன்ற சடங்குகளை செய்ய வேண்டியது அவசியமில்லை.

முடிவுரை :

குழந்தைப் பேறு இல்லையே என்று வருத்தப்பட்டு, மழலைக்காக ஏங்கித் தவிப்பதை விட ஆதரவற்ற அனாதைக் குழந்தை யாரையேனும் தத்தெடுத்துக் கொண்டால், அந்த ஒரு செயல் மட்டுமே தத்தெடுத்துக் கொள்பவரின் ஆன்ம விமோசனத்திற்கு வழி வகுக்கும். (இப்புதிய சட்டத்தில் தத்தெடுப்பில் முன்பு இருந்த மதத்தின் சாயல் நீக்கப்பட்டுவிட்டாலும் கூட). பெற்றெடுத்தால் மட்டும் பிள்ளையன்று தத்தெடுத்தாலும் பிள்ளையே.

3. What are the effects of adoption under the Hindu Adoptions and Maintenance Act, 1956. (1956–ன் இந்து மகவேற்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் தத்தெடுப்பின் விளைவுகள் யாவை?)

(அல்லது)

Doctrine of relation back - Write short notes. (முன் மரபை பாதிக்கும் கோட்பாடு – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Explain the doctrine of 'Relation back' and state how it is affected by Hindu Adoptions and Maintenance Act. ('முன்மேவு' கோட்பாட்டை விளக்கி, இந்து மகவேற்பு மற்றும் பராமரிப்பு சட்டத்தால் அது எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் கூறுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை

பழைய சட்டத்தின் நிலை (அல்லது)முன்மரபை பாதிக்கும் கோட்பாடு (Doctrine of Relation back)

Krishnamurthi v. Dhruwaraj

புதிய சட்டத்தின்படி ஏற்பட்ட விளைவு

முன்னுரை :

தத்தெடுப்பின் விளைவுகளைக் குறித்து பிரிவு 12 விளக்குகிறது. அதன்படி தத்து எடுக்கப்பட்ட குழந்தை தத்து எடுத்த தந்தை அல்லது தாயின் குழந்தையாகவே தத்து எடுக்கப்பட்ட நாளிலிருந்து எல்லாச் செயல்களுக்கும் கருதப்படும். தத்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து பிறந்த வீட்டிலுள்ள சகல பந்தங்களும் அறுந்து, அந்தப் பந்தங்கள் யாவும் தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தில் வந்து சேர்ந்து விட்டதாகக் கருதப்படும்.

பழைய சட்டத்தின் நிலை (அல்லது) முன் மரபை பாதிக்கும் கோட்பாடு (Doctrine of Relation back):

மேற்கண்ட நிலைப்பாடு குறித்து, பழைய சட்டத்தில் இருந்த நிலை முரண்பட்டதாகும். அதாவது, ஒரு விதவை, தன் கணவன் இறந்தபின் எத்தனை ஆண்டுகள் கழித்து ஒரு குழந்தையை தத்தெடுத்திருந்தாலும் அத்தத்தானது, அவளது கணவன் என்று இறந்தானோ அந்த நாளிலிருந்து தத்தெடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும். எனவே அக்குழந்தை தத்தெடுக்கப்பட்ட தந்தையின் சொத்தில் உரிமை கொண்டாட முடியும். இக்கருத்தானது **'முன்மரபை பாதிக்கும் கோட்பாடு' அல்லது 'தொடர் உறவுக் கொள்கை' (Doctrine of Relation Back)** என்றழைக்கப்படுகிறது. நடைபெற்ற ஒரு தத்தெடுப்பானது, முந்தைய மரபை பாதிக்கும் அளவிற்கு உள்ளதால், இது முன்மரபை பாதிக்கும் கோட்பாடாகிறது. முக்கிய வழக்கு வருமாறு.

Krishnamurthi v. Dhruwaraj[1]

இவ்வழக்கில் B என்பவர் இந்து கூட்டுக் குடும்பச் சொத்தின் ஒரு பங்குரிமையாளர் ஆவார் (coparcener). அவர் மேற்படி கூட்டுக் குடும்பச் சொத்திற்கு எஞ்சியுள்ள ஒரே பங்குரிமையரான தனது தந்தையை விட்டுவிட்டு இறக்கிறார். பின்னர், அத்தந்தையும் இறந்து போகவே, அச்சொத்து C–யின் கையில் முழு உரிமையுடன் வருகிறது. C இறந்த பிறகு V என்பவர் அச்சொத்திற்கு முழு உரிமையாளராகிறார். V என்பவரும் இறந்த பிறகு **கிருஷ்ணமூர்த்தி** என்பவர் அச்சொத்திற்கு முழு உரிமையாளராகிறார். இந்நிலையில் மேற்படி இறந்துபோன B–யின் விதவை **துருவராஜ்** என்பவனை தத்தெடுத்துக் கொண்டாள். அவன் மேற்படி கிருஷ்ணமூர்த்தியை எதிர்த்து, மேற்படி கூட்டுக் குடும்பச் சொத்தை தன்னிடம் திரும்ப ஒப்படைக்கும்படியும், அதற்கு தானே உரிமையாளர் என்றும், தன்னுடைய தத்தெடுப்பானது மேற்படி B (தத்தெடுப்புத் தந்தை) இறந்த தேதியிலிருந்தே தொடங்குவதாகவும் கூறி வழக்குத் தொடர்ந்தான். ஆனால் அச்சொத்தானது பல பேருக்கு அடுத்தடுத்து முழு உரிமையாளர் என்ற முறையில் மாறிவிட்டதால், தத்தெடுப்பானது B இறந்த தேதியிலிருந்தே தொடங்குவதாக கூறுவது செல்லத்தக்கதல்ல என கிருஷ்ண மூர்த்தி எதிர்வாதம் புரிந்தார். ஆனால் இவ்வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது. B இறந்த பிறகு, பல காலம் கழித்து அவனது விதவை மனைவி துருவராஜை தத்தெடுத்துக் கொண்டிருப் பினும், அத்தத்தெடுப்பானது B இறந்த தேதியில் நடந்ததாகவே கருதப்படும் என்று கூறி, ஏற்கனவே நடந்த சொத்து மாற்றங்களை இரத்து செய்து, அக்கூட்டுக் குடும்பச் சொத்தை துருவராஜ்–க்கு திரும்ப ஒப்படைக்கும்படி நீதிமன்றம் உத்திரவிட்டது. இவ்வழக்கு **'முன்மரபை பாதிக்கும் கோட்பாட்டிற்கு'** எடுத்துக்காட்டாக விளங்கும் முக்கிய வழக்காகும்.

1. 1962 S.C.R. 813.

புதிய சட்டத்தின்படி ஏற்பட்ட விளைவு :

நாம் ஏற்கனவே மேலே கண்ட பிரிவு 12–ன்படி, தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்கு, அத்தத்தெடுப்பிற்கு பின், தன்னை தத்தெடுத்த குடும்பத்தின் உறவுகளும் உரிமைகளும் தொடங்குகிறது. தத்தெடுப்பினால் முன் மரபு எதுவும் பாதிக்கப்படவில்லை. தத்தெடுக்கப்படும் தேதிக்கு முன்னர் தத்தெடுக்கப்படும் குடும்பத்தில், அக்குழந்தைக்கு எவ்வித உரிமையும் உண்டாவதில்லை. எனவே, மேற்படி பிரிவானது 'முன்மரபுக் கோட்பாட்டை' முற்றிலும் ஒழித்துவிட்டது. (abolished).

தத்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து, தத்தெடுக்கப்பட்ட குழந்தையின் பிறந்த வீட்டிலிருக்கும் அனைத்து பந்தங்களும் அறுந்து விடுவதாக நாம் மேலே கண்டோம். ஆனால் பின்வரும் சில பந்தங்கள் விட்டுப்போவதில்லை என பிரிவு 12 மேலும் கூறுகிறது. அதாவது,–

(a) தத்து எடுக்கப்பட்ட நபர் தான் பிறந்த வீட்டிலேயே இருந்திருந்தால் யார் யாரை மணந்து கொள்ள முடியாதோ, அவர்களைத் தத்தெடுப்பிற்குப் பின்னரும் மணந்து கொள்ள முடியாது.

(b) தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்குத் தத்தெடுப்பிற்கு முன் வந்தடைந்த சொத்துகள் தத்தெடுப்பிற்குப் பின்னரும் அந்த நபரிடத்திலேயே இருக்கும். அந்தச் சொத்தை அனுபவிப்பதோடு சில நிபந்தனைகளும் அதற்கிருந்தால் அவற்றைத் தத்து எடுக்கப்பட்ட குழந்தை நிறைவேற்றிய தீர வேண்டும். அந்தச் சொத்தை அனுபவிப்பவர் தன்னுடைய பிறந்த குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களைப் பராமரிக்க வேண்டிய கடமை உட்பட, சொத்துக்குச் சொந்தக்காரராக இருப்பதால் உள்ள பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும்.

(c) தத்தெடுக்கப்பட்ட குழந்தை, தான் தத்தெடுக்கப்படுவதற்கு முன்பு தனக்கு உரியதாக இருந்த எந்த ஒரு சொத்திலிருந்தும், எந்த ஒரு நபரையும் விலக்கிவிடக் கூடாது (divest).

4. What is ante-adoption agreement ? How far it is valid when the adoptee is a minor ? (முன் தத்தெடுப்பு ஒப்பந்தம் என்றால் என்ன? தத்தெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படுபவர் இளவராக இருந்தால் அது எந்த அளவிற்குச் செல்லுபடியாகும்?)

(அல்லது)

What is the effect of an adoption on the right of the adoptive parents to dispose off their properties ? (தத்து பெற்றோர்கள் தங்களது சொத்துக்களை பராதீனம் செய்யும் உரிமையில் ஒரு தத்தெடுப்பு ஏற்படுத்தும் விளைவு யாது ?)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
தத்தெடுப்பிற்கு முந்தைய உடன்பாடுகள் (Ante-Adoption Agreement)
பிரிவு 13 கூறுவதாவது
முடிவுரை

முன்னுரை :

'முன் தத்தெடுப்பு ஒப்பந்தம்' அல்லது 'தத்தெடுப்பிற்கு முந்தைய உடன்பாடுகள்' குறித்து நாம் பழைய சட்டத்திலேயே கண்டுள்ளோம். எனவே இங்கு புதிய சட்டம் என்ன சொல்கிறது என்பதை பின்வருமாறு காண்போம்.

தத்தெடுப்பிற்கு முந்தைய உடன்பாடுகள் :

'தத்தெடுப்பிற்கு முந்தைய உடன்பாடு' என்பது, ஒரு இளவரை (Minor) தத்து கொடுப்பவரும், அவரை தத்து எடுத்துக் கொள்பவரும், தத்து கொடுப்பதற்கு முன்பு, இளவருக்கு தத்துத் தந்தையின் சொத்தில் இருக்கும் உரிமை குறித்து செய்து கொள்ளப்படும் உடன்பாடு ஆகும்.

ஒருவன் தத்தெடுக்கப்பட்டவுடன் அவனுக்கு, தான் பிறந்த குடும்பத்தில் உள்ள பந்தங்கள் அறுபட்டு, தன்னைத் தத்தெடுத்த குடும்பத்தின் பந்தங்களும் உரிமைகளும் வந்தடைகின்றன என்றும், தத்தெடுக்கப்பட்ட தேதி முதல் அவன் அக்குடும்பத்தில் பிறந்த குழந்தையாகவே அனைத்து செயல்களுக்கும் கருதப் படுவான் என்றும் பிரிவு 12 கூறுகிறது. உதாரணமாக X என்ற மிதாக்ஷரா இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர் Y என்பவரைத் தத்தெடுத்துக் கொண்டால், அத்தேதி முதல் தத்தெடுக்கப்பட்டவர் (அதாவது Y) அக்குடும்பச் சொத்தின் பங்குரிமையாளர் ஆகிறார். எனவே அவர் பாகப்பிரிவினை கோரலாம்.

பின்வரும் மற்றொரு உதாரணத்தையும் கவனிப்போம். இங்கு ஒரு குடும்பத்தில் A எனும் ஒருவர் மட்டுமே, எஞ்சியுள்ள ஒரே பங்குரிமையாளர் ஆவார். அவர் உயில் மூலம் பங்குரிமைச் சொத்தை மற்றொருவருக்கு எழுதி வைத்து விடுகிறார். பின்னர் B என்பவரை தத்தெடுத்துக் கொள்கிறார். மேற்படி B, தனது தத்துத் தந்தை தத்தெடுப்பிற்கு முன் எழுதி வைத்த உயிலைப் பற்றியோ அல்லது பராதீனத்தைப் பற்றியோ கேள்வி கேட்க இயலாது. ஏனெனில் முன் சொன்னது போல் ஒருவன் தன்னை தத்தெடுத்த தேதி முதல்தான், அவனுக்கு தத்தெடுத்த குடும்பத்தில் உரிமை ஏற்படுகிறது. மேற்படி உயில் மூலமான சொத்து மாற்றம் தத்தெடுப்பிற்கு முன்பு நிகழ்ந்துள்ளதால், அதைப் பற்றி B வினா எதையும் எழுப்ப

முடியாது. ஆனால் இதே சொத்து மாற்றம் B-யின் தத்தெடுப்பிற்கு பிறகு A செய்திருந்தால், அதை B கேள்வி கேட்கலாம். வழக்கு தொடரலாம். நடைபெற்ற சொத்துரிமை மாற்றத்தை செல்லாதென அறிவிக்கக்கோரி தீர்ப்பாணை கூடப் பெறலாம்.

எனவே தத்தெடுப்புத் தந்தை தனது சொத்தில் தனக்கிருக்கும் உரிமையைக் காப்பாற்றிக் கொள்ள தத்தெடுப்பிற்கு முன், இளவரைத் தத்து கொடுப்பவர் உள்ளிட்ட வேறு எவருடனும் உடன்பாடு செய்து கொள்ளலாம்.

அவ்வாறே, ஒரு தத்தெடுப்புத் தந்தைக்கு சுய சம்பாத்தியச் சொத்து (Self acquired property) இருப்பின், அதை அவர் தனது விருப்பம் போல் யாருக்கு வேண்டுமானாலும் மாற்றம் செய்யலாம், விற்கலாம், உயில் எழுதி வைக்கலாம். ஒரு இளவரைத் தத்தெடுத்துக் கொண்ட பின்னரும் அவ்வாறே செய்யலாம். யாரும் அவரைக் கேள்வி கேட்க முடியாது. இதனால் தத்தெடுக்கப்பட்டவருக்கு சொத்துரிமை இல்லாமல் போகிறது. இந்நிலையைத் தடுக்கும் பொருட்டு தத்து கொடுக்கும் பெற்றோர், தத்தெடுக்கப்படும் இளவரின் நலனை பாதுகாப்பதற்காக, தத்தெடுத்துக் கொள்பவருடன் ஓர் உடன்பாடு செய்து கொள்வதன் மூலமாக, அவரது மேற்படி பராதீன உரிமைக்கு வரம்பிடலாம். உதாரணமாக தத்தெடுப்புத் தந்தையின் சுய சம்பாத்திய சொத்தில் ஒரு குறிப்பிட்ட பாகம் (பாதி பாகம் எனக் கொள்வோம்) தத்தெடுக்கப்படும் இளவருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இதை மீறி அவர் ஏதேனும் சொத்து மாற்றம் செய்தால் அது சொத்துரிமையை எவ்விதத்திலும் பாதிக்காது என்றும் தத்துக் கொடுப்பவர் உடன்பாடு செய்து கொள்ளலாம். எனவே இத்தகு உடன்பாடுகளின் மூலம் தத்தெடுக்கும் தந்தையின் உரிமையும், தத்தெடுக்கப்படும் இளவரின் உரிமையும் பாதுகாக்கப்படுகின்றன என்று கூறலாம். இப்பொழுது இங்கு எழும் ஒரே பிரச்சனை என்னவென்றால் மேற்படி உடன்பாடுகள் செல்லுமா என்பதுதான். செல்லும் என்று புதிய சட்டத்தின் 13–வது பிரிவு மறைமுகமாக சுட்டிக்காட்டுகிறது.

பிரிவு 13 கூறுவதாவது:

"தத்து எடுத்த தந்தையோ அல்லது தாயோ தங்கள் சொத்தை தத்து உடன்படிக்கையை மீறாமல் உரிமை மாற்றம் செய்யவோ (dispose) உயில் மூலம் பிறருக்குக் கொடுக்கவோ உள்ள உரிமையைத் தத்தெடுப்பினால் இழந்துவிட மாட்டார்கள்" என்று பிரிவு 13 கூறுகிறது.

மேற்படி பிரிவில் **'தத்து உடன்படிக்கையை மீறாமல்' (an agreement to the contrary)** என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே தத்தெடுப்பிற்கு முன்பு செய்து கொள்ளப்படும் உடன்படிக்கை செல்லத்தக்கதே. அதே போல் அவ்வாறான தத்து உடன்படிக்கையில் சொத்து மாற்றம் குறித்த கட்டுப்பாடு ஏதும் இல்லையென்றால் தத்துத் தந்தையோ அல்லது தாயோ தங்களது சொத்தை

விருப்பம்போல் யாருக்கு வேண்டுமானாலும் உரிமை மாற்றம் செய்யலாம். அத்தத்தெடுப்பு அதற்கு ஒரு தடையாக நிற்காது. ஆனால் உடன்பாட்டில் சொத்து மாற்றம் குறித்து கட்டுப்பாடு ஏதும் இருப்பின், அதற்குட்பட்டுதான் தத்துத் தந்தை அல்லது தாய் நடக்க வேண்டும். மீறி நடந்தால் அச்சொத்து மாற்றம் செல்லாததாகிவிடும்.

முடிவுரை :

தத்தெடுத்துக் கொண்ட ஒன்றினாலேயே தத்துப் பெற்றோர்கள் தங்களது சொத்துக்களை உரிமை மாற்றம் செய்யவோ அல்லது உயில் மூலம் கொடுக்கவோ உள்ள உரிமையை இழந்துவிட மாட்டார்கள். ஆனால் தத்தெடுப்பிற்கு முந்தைய உடன்படிக்கை ஏதேனும் இருப்பின், அதற்கு உட்பட்டுதான் அவர்கள் தங்களது சொத்துக்களை உரிமை மாற்றம் செய்ய வேண்டும்; மீறுதல் கூடாது.

-oOo-

பராமரிப்பு [Maintenance]

அ. 1956-ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு பராமரிப்பு குறித்து இருந்த நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்]

A. The position of Maintenance before the enactment of the Hindu Adoptions and Maintenance Act, 1956 [Uncodified Law]

பராமரிப்பு குறித்து தொகுக்கப்படாத (பழைய) சட்டம் என்ன கூறுகிறது?– பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விபரங்கள்

முன்னுரை:

இந்து ஒருவன், தனக்குச் சொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும், தன்னுடைய வயதான பெற்றோர்கள், ஒழுக்கம் தவறாத மனைவி, பச்சிளம் குழந்தை ஆகியோரைப் பராமரிக்க வேண்டும் என்று மனுஸ்மிருதி கூறுகிறது. அவர்களைக் காப்பாற்றுவதை முன்னிட்டு தவறான செயல்கள் செய்தாலும் பாதகமில்லை என்கிறது. ("The aged parents, a virtuous wife and an infant child must be maintained even by doing a hundred misdeeds"). பின்வரும் வழக்கில் பராமரிப்புக்கும் பொறுப்பு எதன் அடிப்படையில் ஏற்படுகிறது என்பது விளக்கப்பட்டுள்ளது.

Rama Rao v. Raja of Pithapur[1]

ஒருவனுக்கு தன்னைச் சார்ந்தவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு அவர்களோடு தனக்கிருக்கும் சொந்த உறவினாலும், சொத்துக்கு உரிமையாள ராக இருப்பதாலும் ஏற்படுகிறது. வயதான பெற்றோர்கள், மனைவி, குழந்தைகள் முதலியோர் சொந்த உறவு என்ற வரம்பிற்குள் வருகிறார்கள். கூட்டுக் குடும்பம் இருக்கும்போது கூட்டுக் குடும்பச் சொத்திற்கு பங்குரிமையர் (கர்த்தா) என்ற முறையில் கூட்டுக் குடும்பத்தினரைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

1. 1941 Mad. 778 (P.C.)

பராமரிக்கப்பட வேண்டிய நபர்கள்:

மனைவி (Wife): திருமணமான பிறகு மனைவி கணவனோடு அவன் இருப்பிடத்தில் வாழக் கடமைப்பட்டவள். அவ்வாறே அவளைக் கைப்பிடித்த கணவனும், அவளைப் பராமரிக்க கடமைப்பட்டவன். ஆனால் மனைவி ஒழுக்கம் தவறி வாழ்ந்தால், அவளை கணவன் பராமரிக்க வேண்டியதில்லை.

வைப்பாட்டி (Concubine): வைப்பாட்டி ஒருத்தியை, ஒருவன் பராமரிக்க வேண்டியதில்லை.

விதவை (Widow): ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தில் ஒரு பங்குரிமையர் இறந்துவிட்டால், அவனுடைய விதவையை அக்குடும்பத்தின் கர்த்தா பராமரிக்க வேண்டும். அவள் ஒழுக்கக் குறைவாக நடந்தாலோ அல்லது மறுமணம் புரிந்தாலோ அப்பராமரிப்பு நிறுத்தப்படும்.

பெற்றோர் (Parents): பரம்பரைச் சொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருவன் தன் பெற்றோர்களைப் பராமரிக்க வேண்டும். ஆனால் பாட்டன், பாட்டிய பரம்பரைச் சொத்து இல்லாவிட்டால் பராமரிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. மாற்றாந் தாயைக் கூடப் பராமரிக்க வேண்டிய அவசியமில்லை.

முறை மணப் பிறப்பு குழந்தைகள் (Legitimate Children): முறையான மணத்தில் பிறந்த மகனைப் பராமரிக்க வேண்டியது தந்தையின் கடமை. மகன் உரிமை வயது பெறும் வரைதான் இக்கடமை அவருக்கு உண்டு. தத்தெடுத்த மகனையும் தந்தை பராமரிக்க வேண்டும். அவ்வாறே முறைமணப் பிறப்பு மகளை, அவள் மணம் செய்து கொள்ளும் வரை தந்தை பராமரிக்க வேண்டும்.

முறையிலா மணப் பிறப்பு குழந்தைகள் (Illegitimate Children): முறையிலா மணத்தில் பிறந்த ஆண் குழந்தைகளை அக்குழந்தைகளின் தந்தை பராமரிக்க கடமைப்பட்டவர். ஆனால், குழந்தைகளின் தாய் இந்துவாக இருக்க வேண்டியது அவசியம். தந்தை இறந்ததற்குப் பின், அக்குழந்தைகள் தந்தையின் சொத்திலிருந்து பராமரிக்கப்பட வேண்டும். ஆனால் முறையிலா மணப்பிறப்பில் பிறந்த மகளைத் தந்தை பராமரிக்க வேண்டிய அவசியமில்லை.

ஆ. 1956-ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்பட்டதற்கு பின்பு பராமரிப்பு [தொகுக்கப்பட்ட (புதிய) சட்டம்]

B. The position of Maintenance after the enactment of the Hindu Adoptions and Maintenance Act, 1956 [Codified Law]

பராமரிப்பு குறித்து பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விபரங்கள்

பழைய மற்றும் புதிய சட்டம் - ஒரு கண்ணோட்டம் :

1956–ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தில் 1 முதல் 17 பிரிவுகள் தத்தெடுப்பு பற்றி கூறுகின்றது. அவற்றை நாம் முன்னரே கண்டோம். அவற்றிற்கு அடுத்து வரும் **18 முதல் 28 வரையிலான பிரிவுகள் பராமரிப்பு பற்றி பின்வருமாறு கூறுகின்றன.**

மேற்கண்ட புதிய சட்டம், பராமரிப்பில் சில மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. பழைய சட்டப்படி தன்னுடைய குழந்தைகளையோ அல்லது பெற்றோர்களையோ பராமரிக்க வேண்டிய கடமை ஒரு பெண்ணுக்குக் கிடையாது. இப்புதிய சட்டப்படி சில நெருங்கிய உறவினர்களைப் பராமரிக்க வேண்டிய கடமை ஆண்–பெண் இருபாலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. பழைய சட்டத்தின்படி பராமரிப்பு தர வேண்டியவருக்கு சொத்து இருக்கிறதா என்பது கருத்தில் கொள்ளப்பட்டது. ஆனால் புதிய சட்டப்படி சொத்து முக்கியமல்ல, உறவுதான் முக்கியம். பழைய சட்டத்தில் முறையிலா மணப்பிறப்பில் பிறந்த மகள், தந்தையாகக் கருதப் படுபவனிடமிருந்து பராமரிப்பு கேட்க முடியாது. புதிய சட்டத்தில் அவ்வாறு பராமரிப்புக் கேட்கும் உரிமையை அவள் பெற்றிருக்கிறாள்.

பராமரிப்பு - விளக்கம்:

பராமரிப்பு என்பது உணவு, உடை, இருக்கை, கல்வி, மருத்துவ வசதி, சிகிச்சை முதலியவற்றை உள்ளிட்டதாகும் என்று இச்சட்டத்தின் **3–வது பிரிவின்** வரையறையில் (Definition) கூறப்பட்டுள்ளது. மேலும் திருமணமாகாத பெண்கள் விஷயத்தில் திருமணத்தாலும், திருமணம் சம்பந்தமாக அத்திருமணத்திற்கு முன்னும் பின்னும் ஏற்படுகிற நியாயமான செலவுகளும் பராமரிப்பில் அடங்கும். பராமரிப்புத் தொகை எவ்வளவு தேவை என்பது சம்பந்தப்பட்டவர்களின் அந்தஸ்து, வசதி முதலிய பல அம்சங்களைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும்.

மனைவியைப் பராமரித்தல் (பிரிவு 18) [Maintenance of Wife]

1. Explain the law relating to the maintenance of wife under the Hindu Adoptions and Maintenance Act. (இந்து மகவேற்பு மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டத்தின் கீழ், மனைவியின் வாழ்க்கைப் பொருளுதவி குறித்த சட்டத்தினை விளக்குக.)

(அல்லது)

Explain the conditions under which a Hindu wife is entitled to maintenance and separate residence. (ஒரு இந்து மனைவி எந்நிபந்தனைகளின் கீழ் தனித்து வாழவும் பராமரிப்பு கோரவும் உரிமை படைத்தவள் என்பதை விளக்குக.)

(அல்லது)

State when a Hindu wife is entitled to live separately from her husband without forfeiting her claim to maintenance. (ஒரு இந்து மனைவி பராமரிப்பு கோர தனக்குள்ள உரிமையை இழந்துவிடாமல், எப்பொழுது கணவனை விட்டு பிரிந்து வாழ உரிமை படைத்தவள் என்பதைக் குறிப்பிடுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
பிரிவு 18(1) கூறுவதாவது
பிரிவு 18(2) கூறுவதாவது
பிரிவு 18(3) கூறுவதாவது

முன்னுரை :

ஒரு மனைவியை பராமரிக்க வேண்டியது அவளது கணவனின் சட்டக் கடமை ஆகும். இது குறித்து பிரிவு 18 பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 18(1) கூறுவதாவது :

இப்புதிய சட்டம் வருவதற்கு முன்போ அல்லது பிறகோ மணம் புரிந்து கொண்ட ஒரு இந்து மனைவி தன் வாழ்நாள் முழுவதும் கணவனால் பராமரிக்கப்பட உரிமை பெற்றுள்ளாள்.

பிரிவு 18(2) கூறுவதாவது :

ஒரு இந்து மனைவி பின்வரும் சூழ்நிலைகளில் தன்னுடைய கணவனை விட்டு பிரிந்து வாழலாம். அதே சமயத்தில் பராமரிப்பும் கோரலாம். அதாவது பராமரிப்பு கோரும் உரிமையை இழந்து விடாமல் ஒரு மனைவி கணவனை விட்டு தனியாக வாழ்வது, சட்டப்படி நியாயம் எனக் கருதக் கூடிய சூழ்நிலைகள் (living separately without forfeiting her claim to maintenance) வருமாறு :

(a) கணவன் அவளைக் கைவிட்ட குற்றத்தைச் (guilty of desertion) செய்திருக்க வேண்டும். அதாவது நியாயமான காரணம் இல்லாமல், அவளுடைய

ஒப்புதல் இல்லாமல் அல்லது அவளுடைய விருப்பத்திற்கு விரோதமாக அல்லது வேண்டுமென்றே புறக்கணித்து கைவிட்டிருக்க வேண்டும்;

(b) கணவன் அவளைக் கொடுமையாக (cruelty) நடத்த வேண்டும். மேலும் அக்கொடுமையினால், கணவனுடன் சேர்ந்து வாழ்வது தீங்கானது, கேடு விளைவிக்கக் கூடியது எனும் நியாயமான அச்சம் அவள் மனதில் எழுந்திருக்க வேண்டும்;

(c) கணவன் உக்கிரமான தொழுநோயால் (suffering from virulant form of leprosy) பீடித்திருக்கப்பட வேண்டும்;

(d) கணவனுக்கு உயிரோடு வேறு மனைவி இருக்க வேண்டும் (has any other wife living);

(e) மனைவி இருக்கும் வீட்டிலேயே வைப்பாட்டியையும் வைத்திருக்க வேண்டும் (keeps a concubine) அல்லது வைப்பாட்டி இருக்கும் வீட்டிலேயே போய்த் தங்குவதை வழக்கமாகக் கணவன் கொண்டிருக்க வேண்டும்;

(f) வேறுமதத்தைத் தழுவி இந்துவாக இல்லாமல் போயிருக்க வேண்டும் (ceased to be a Hindu by conversion to another religion);

(g) தனியாக இருப்பதை நியாயப்படுத்துமளவிற்கு வேறு காரணம் ஏதும் இருக்க வேண்டும் (any other cause justifying her living separately);

மேலே கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும் மனைவி கணவனை விட்டு விலகித் தனியே சென்று வாழலாம். அப்போது கணவன் அவளைப் பராமரித்தே ஆக வேண்டும்.

பிரிவு 18(3) கூறுவதாவது :

ஆனால் ஓர் இந்து மனைவி கற்பு நெறி தவறினால் அல்லது வேற்று மதத்திற்கு மாறியதால் இந்துவாக இல்லாமல் போய்விட்டால், தனியாக வாழவும் கணவனிடமிருந்து பராமரிப்பு கோரவும் உரிமையற்றவளாகி விடுவாள்.

விதவை மருமகளைப் பராமரித்தல் (பிரிவு 19) [Maintenance of widowed daughter-in-law]

2. State the extent of the right of a widowed daughter-in-law to be maintained by her father-in-law. (மாமனாரால் பராமரிக்கப்பட வேண்டிய விதவை மருமகளின் உரிமையின் அளாவுகையை குறிப்பிடுக.)

விதவை மருமகளைப் பராமரித்தல் பற்றி பிரிவு 19 கூறுகிறது. இப்புதிய சட்டம் வருவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ மணம் புரிந்து கொண்ட ஒரு

இந்து மனைவி, அவளுடைய கணவன் இறந்ததற்குப் பின்னர் மாமனாரால் பராமரிக்கப்பட வேண்டிய உரிமை உடையவளாவாள். தன்னுடைய சம்பாத்தியத்திலிருந்தோ அல்லது பிற சொத்திலிருந்தோ, அவள் தன்னை எந்த அளவுக்குப் பராமரித்துக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்குப் பராமரித்துக் கொள்ள வேண்டும். அது போதவில்லையென்றால், மாமனார் அவளைப் பராமரிக்க வேண்டும். அவளுக்குச் சொத்தே கிடையாதென்றால், கணவனுடைய அல்லது தன்னுடைய தந்தையினுடைய அல்லது தாயினுடைய நிலச் சொத்திலிருந்தும் பராமரிப்புப் பெற்றுக் கொள்ள முடியாதென்றால், மாமனார் பராமரிக்க வேண்டும்.

கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமைச் சொத்தில் மருமகளுக்குப் பங்கு கிடைக்காமலிருந்து, மாமனாருக்கு மருமகளைப் பராமரிக்கும் வகையில் பங்குரிமைச் சொத்து இருந்தால்தான் அவளைப் பராமரிக்க முடியும். அவரிடமே வசதியில்லை என்றால், அந்தக் கடமையைச் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்த முடியாது. மேலும் மருமகள் மீண்டும் மறுமணம் புரிந்து கொண்டால், இந்தப் பொறுப்பும் போய்விடும்.

மேற்படி 19–வது பிரிவு மாமனாருக்கு மருமகளைச் சில கட்டங்களில் பராமரிக்க வேண்டிய பொறுப்பைத் தந்திருக்கிறது. மருமகளுக்கு அனைத்து வாசல் கதவுகளும் மூடப்டுமானால் குறைந்தது மாமனார் வாசலாவது திறந்திருக்கட்டுமே என்ற அடிப்படையில் மேற்படி 19–வது பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது எனில் அது மிகையன்று. ஆனால் அப்போது கூட மருமகளைப் பராமரிக்கும் சக்தி மாமனாருக்கு இருக்க வேண்டும். இல்லையென்றால் அவரைக் கட்டாயப்படுத்த முடியாது.

குழந்தைகளையும், வயதான பெற்றோர்களையும் பராமரித்தல் (பிரிவு 20)
[Maintenance of Children and Aged Parents]

3. Maintenance of children and aged parents - Write short notes. (குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோர்களின் பராமரிப்பு – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Examine the right to maintenance of illegitimate children. (முறையிலா மணப் பிறப்பு குழந்தைகளின் பராமரிப்பு கோரும் உரிமையை ஆராய்க.)

ஓர் இந்து ஆணோ அல்லது பெண்ணோ, தன் வாழ்நாள் முழுவதும், இப்புதிய சட்டத்தில் உள்ள விதிகளுக்கு உட்பட்டுத் தன்னுடைய முறையான

அல்லது முறையிலா மணத்தில் பிறந்த குழந்தைகளையும், தன்னுடைய வயதான அல்லது ஊனமான பெற்றோரையும் பராமரிக்க வேண்டும், என **பிரிவு 20(1)** கூறுகிறது.

முறையான அல்லது முறையிலா மணத்தில் பிறந்த குழந்தைகள் உரிமை வயது அடையாத பருவம் வரை தங்களுடைய தந்தை அல்லது தாயிடம் பராமரிப்புக் கேட்கலாம். **(பிரிவு 20(2)).**

வயதான அல்லது ஊனமான பெற்றோர்கள் அல்லது திருமணமாகாத மகள் ஆகியோர் தங்களைத் தங்கள் வருமானத்திலிருந்தோ சொத்திலிருந்தோ பராமரித்துக் கொள்ள முடியாதபோதுதான், பராமரிப்புக் கேட்க முடியும். பராமரித்துக் கொள்ள முடியுமெனில், பராமரிப்புக் கேட்க முடியாது. **(பிரிவு 20(3)).**

இதில் 'பெற்றோர்' என்ற சொல் குழந்தை இல்லாத மாற்றாந் தாயையும் (Step Mother) குறிக்கும்.

மேற்படி 20–வது பிரிவு ஏறக்குறைய இந்து தரும சாத்திரத்தில் என்ன சொல்லப்பட்டிருந்ததோ அதை அப்படியே மீண்டும் கூறுவதாக உள்ளது. இதில் முக்கிய மாறுதல் யாதெனில், மகனோடு மகளுக்கும், வயதான பெற்றோரையும், குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்புத் தரப்பட்டிருப்பதுதான். அடுத்த மாறுதல் மாற்றாந் தாயையும் பெற்றோர் என்ற சொல்லில் அடக்குவதாகும். அதனால் அவளும் பராமரிக்கப்படும் உரிமை பெறுகிறாள்.

சார்ந்திருப்பவர்கள் – யார்? (பிரிவு 21) [Who are the Dependents?]

4. Who are the dependents of a deceased Hindu for purposes of maintenance? Explain the nature and extent of their right to maintenance under the Act of 1956. (இறந்து விட்ட ஒரு இந்துவைச் சார்ந்திருப்பவர்கள் என்பவர் எவர்? 1956–ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் அவர்களின் பராமரிப்பு கோரும் உரிமையின் தன்மை மற்றும் அளாவுகையை விளக்குக.)

(அல்லது)

Who are 'dependents'? Explain their right to get maintenance under the Hindu Adoption and Maintenance Act 1956. ('சார்ந்திருப்பவர்கள்' யார்? 1956ம் ஆண்டு இந்து மகவேற்பு மற்றும் பாரமரிப்புச் சட்டத்தில் அவர்களுடைய பராமரிப்பு உரிமை பற்றி விளக்குக.)

(அல்லது)

"A Hindu is under a legal obligation to maintain his wife, his minor sons, his unmarried daughters and aged parents whether he possessess any property or not." State how the Hindu Adoptions and Maintenance Act, 1956 extends and makes the rule more comprehensive. ("ஒரு இந்து தன்னுடைய மனைவி, தன்னுடைய உரிமை உயது அடையா மகன்கள், தன்னுடைய திருமணமாகாத மகள்கள் மற்றும் வயதான பெற்றோர்களை, தன்னிடம் சொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும் பராமரிக்க வேண்டிய சட்டக் கடமையின் கீழ் உள்ளான்." 1956–ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டமானது எவ்வாறு மேற்படி விதியை மேலும் விரிவாக்கியுள்ளது என்பதை குறிப்பிடுக.)

(அல்லது)

Dependants - Write short notes. (சார்ந்திருப்பவர்கள் – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
சார்ந்திருப்பவர்கள் - யார்? - பிரிவு 21 கூறுவதாவது
முடிவுரை

முன்னுரை :

"ஒரு இந்து தன்னுடைய மனைவி, தன்னுடைய உரிமை வயது அடையா மகன்கள், திருமணமாகாத மகள்கள் மற்றும் வயதான பெற்றோர்களை, தன்னிடம் சொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும் பராமரிக்க வேண்டிய அறக் கடப்பாட்டின் கீழ் உள்ளான்" என்று மனுஸ்மிருதி கூறுகிறது. மேற்படியார்கள் அனைவரும் அவரைச் சார்ந்திருப்பவர்கள் (dependants) ஆவர். மேலும் அவர் விதவை மகள், விதவை மருமகள், முறையிலா மணப் பிறப்பு மகன் ஆகியோரையும் பராமரிக்க வேண்டும். இது அவரது சட்டக் கடப்பாடாகும்.

ஆனால் 1956–ன் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டமானது மேற்கண்ட பல்வேறுபட்ட உறவு முறையினரை **'சார்ந்திருப்பவர்கள்' (Dependants)** என்ற தலைப்பின் கீழ் ஒன்றாக்கி உள்ளது. பொதுவாக ஒரு இந்துவின் உறவினருள் யார் யார் அவரை சார்ந்து வாழ்கின்றனரோ அவர்கள் யாவரும் 'சார்ந்திருப்பவர்கள்' ஆவர். இவர்கள் மேற்படி இந்து, காலமானாலும் அவருடைய சொத்திலிருந்து பராமரிப்பு கோர உரிமை படைத்தவர்கள். மேலும் இறந்துவிட்ட மேற்படி இந்துவின் வாரிசுகளும் அவர்களைப் பராமரிக்க வேண்டிய

கடமை கொண்டுள்ளனர். இனி யார் யார் ஒரு இறந்துவிட்ட இந்து ஒருவரைச் சார்ந்திருப்பவர்கள் என்பதை பிரிவு 21 குறிப்பாக பின்வருமாறு கூறுகிறது.

சார்ந்திருப்பவர்கள் - யார்? - பிரிவு 21 கூறுவதாவது :

ஒரு இறந்துவிட்ட இந்து ஒருவரின் (இங்கு 'இந்து' எனும் பதத்தில் ஆண், பெண் இருபாலரும் அடங்குவர்) உறவினருள் பின்வருவோர் அவரைச் சார்ந்திருப்பவர்கள் ஆவர் :

1. அவனுடைய அல்லது அவளுடைய தந்தை ;
2. அவனுடைய அல்லது அவளுடைய தாய்;
3. அவனுடைய விதவை (அவள் மறுமணம் புரிந்து கொள்ளாதவரை);
4. அவனுடைய அல்லது அவளுடைய மகன் (உரிமை வயது அடையாத வரை);
5. அவனுடைய அல்லது அவளுடைய மகள் (திருமணமாகாத வரை);
6. அவனுடைய விதவையாகிவிட்ட மகள்;
7. விதவையாகி விட்ட மருமகள்;
8. அவனுடைய அல்லது அவளுடைய முறையிலா மணத்தில் பிறந்த மகன் (உரிமை வயது அடையாத வரை);
9. அவனுடைய அல்லது அவளுடைய முறையிலா மணத்தில் பிறந்த மகள் (திருமணமாகும் வரை).

முடிவுரை :

இதற்கடுத்து வரும் பிரிவு 22 –ஆனது சார்ந்திருப்பவர்களை இறந்து போன இந்துவின் வாரிசுதாரர்கள் பராமரிக்க வேண்டிய பொறுப்பு நிலை (liability) பற்றி கூறுகிறது. (அடுத்த வினாவில் விரிவாகக் காண்போம்).

சார்ந்திருப்பவர்களை பராமரித்தல் (பிரிவு 22) [Maintenance Dependents]

5. Discuss the nature of the liability of the heirs of the deceased to maintain the dependants. (இறந்துபோன இந்துவின் வாரிசுதாரர்களுக்கு, சார்ந்திருப்பவர்களை பராமரிக்க வேண்டியுள்ள பொறுப்பு நிலையின் தன்மை பற்றி விவாதிக்க.)

முன்னுரை :

ஒரு இந்து உயிருடன் இருக்கையில் தன்னைச் சார்ந்த உறவினர்களை பராமரிக்க வேண்டிய அறக் கடப்பாட்டில் (moral obligation) உள்ளார். இந்த அறக் கடப்பாடு, அவர் இறந்த பிறகு, அவரது வாரிசுதாரர்களுக்குரிய சட்டக் கடப்பாடாக (legal obligation) மாறுகிறது. அதாவது இறந்து போனவரின் வாரிசுதாரர்கள், இறந்து போனவரைச் சார்ந்திருப்பவர்களை பராமரிக்க வேண்டிய சட்டப்படியான கடப்பாட்டில் உள்ளனர். இறந்து போன ஓர் இந்துவை சார்ந்திருப்பவர்கள் எவர் என்று பிரிவு 21 கூறியதை நாம் முன்னரே கண்டோம். இனி இறந்துபோனவரின் சொத்தை அடைந்த வாரிசுதாரர்களுக்கு சார்ந்திருப்பவர்களை பராமரிக்க வேண்டிய பொறுப்பு நிலை குறித்து பிரிவு 22 கூறுவதை பின்வருமாறு காண்போம்.

சார்ந்திருப்பவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு - பிரிவு 22 கூறுவதாவது :

சார்ந்திருப்பவர்களை பராமரிக்கும் பொறுப்பு சில நிபந்தனைகளுக்குட் பட்டது. சார்ந்திருப்பவர் உயில் மூலமாகவோ அல்லது உயில் இல்லாமலோ, இப்புதிய சட்டம் வந்ததற்குப் பின்னர், இறந்துவிட்டவனின் நிலச் சொத்தில் எந்தப் பங்கும் பெறவில்லையென்றால், சொத்துரிமை பெற்ற வாரிசுதாரர்கள் அவரைப் பராமரிக்க வேண்டும். சொத்துரிமை பெற்றவர்களின் பொறுப்பு நிலை என்பது அவர்கள் பெற்ற சொத்தின் மதிப்பு அல்லது அடைந்த நிலச் சொத்தின் விகிதத்தைப் பொறுத்ததாகும். சார்ந்திருக்கும் நபரே சொத்தில் ஒரு பங்கைப் பெற்றிருந்தால், அந்தப் பங்கின் மதிப்பு, பராமரிப்புக் கேட்டிருந்தால் என்ன கிடைக்குமோ அதைவிடக் குறைவாக இருந்தால், அவர் மற்றச் சார்ந்திருப்பவர் களைப் பராமரிப்பதற்காக எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக, இறந்துவிட்டவன் தன்னுடைய உயிலின் மூலம் தன்னுடைய மனைவிக்கு ஆண்டுக்கு ஆறாயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடிய சொத்தைக் கொடுத்து விட்டு போவதாக வைத்துக் கொள்வோம். ஆண்டுக்கு ஆறாயிரம் ரூபாய் என்றால் மாதமொன்றுக்கு 500 ரூபாய். இது அவள் தன்னைப் பராமரித்துக் கொள்ளப் போதுமானதொரு நியாயமான தொகையாகும். ஒரு வேளை அவளுக்கு இச்சொத்து கிடைக்காது, சார்ந்திருப்பவர் என்ற முறையில் நீதிமன்றத்தை அணுகியிருந்தாலும் அந்தத் தொகையே அவளுக்கு கிடைத்திருக்கும். இந்த நிலையில் வேறு ஒரு சார்ந்திருப்பவருக்குப் பராமரிப்புச் செய்ய நீயும் பணம் கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் அவளைக் கேட்காது. ஆனால் அவளுடைய பராமரிப்பிற்கு 300 ரூபாய் மட்டுமே போதுமென்றால், அவள் மற்றச் சார்ந்திருப்பவரைப் பராமரிக்க வேண்டும் என்பதற்காக நீதிமன்றம் அதிகமாக இருக்கும் தொகையைக் (200 ரூபாயை) கேட்கும்.

பராமரிப்புத் தொகை (பிரிவு 23) [Amount of Maintenance]

6. Determination of amount of maintenance - Write short notes. (பராமரிப்புத் தொகையைத் தீர்மானித்தல் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What are the factors to be taken into account in determining the amount of maintenance to be awarded to a dependant under the Hindu Adoptions and Maintenance Act, 1956? (சார்ந்திருப்பவர் ஒருவருக்கு 1956–ன் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட வேண்டிய பராமரிப்புத் தொகையை தீர்மானிக்கும் பொழுது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய கூறுகள் யாவை ?)

(அல்லது)

What are the factors to be taken into consideration by the court in determining the amount of maintenance to be awarded to the dependants under the Hindu Adoptions and Maintenance Act? (இந்து தத்தெடுப்பு மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டத்தின் கீழ் சார்ந்திருப்போருக்கு பொருளுதவியை தீர்மானிக்க நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டிய பொருண்மைகள் யாவை?)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
மனைவி, குழந்தை, வயதான பெற்றோர்களைப் பொறுத்தவரை
சார்ந்திருப்பவரைப் பொறுத்தவரை
முடிவுரை

முன்னுரை :

பராமரிப்புத் தொகை குறித்து பிரிவு 23 கூறுகிறது. பராமரிப்பு தொகை எவ்வளவு வழங்கப்பட வேண்டும் என்பது நீதிமன்றத்தின் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது. பராமரிப்புத் தொகையை தீர்மானிக்கும் பொழுது நீதிமன்றம் பின்வரும் கூறுகளை கவனத்தில் கொள்ள வேண்டும். [பிரிவு 23(1)]

மனைவி, குழந்தை, வயதான பெற்றோர்களைப் பொறுத்த வரை:

மனைவி, குழந்தை, வயதான அல்லது ஊனமடைந்துவிட்ட பெற்றோர்கள் ஆகியோர்கள் விஷயத்தில் பராமரிப்புத் தொகையை தீர்மானிக்கும் பொழுது,

1. அத்தரப்பினரின் நிலையும் அந்தஸ்தும்;
2. கேட்பவர்களின் நியாயமான தேவைகள்;
3. பராமரிப்புக் கேட்பவர் தனியே வாழ்ந்தால், அப்படி வாழ்வதில் நியாயம் இருக்கிறதா;
4. கேட்பவரின் சொத்தின் மதிப்பு, அச்சொத்திலிருந்து வரும் வருமானம் அல்லது கேட்பவரின் சொந்த சம்பாத்தியம் அல்லது வேறு வழி எதிலிருந்தும் வரும் வருமானம்;
5. இச்சட்டப்படி பராமரிப்புப் பெற உரிமை வாய்ந்தவர்களின் எண்ணிக்கை;

ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். **[பிரிவு 23(2)]**

சார்ந்திருப்பவரைப் பொறுத்தவரை:

சார்ந்திருப்பவர் ஒருவருடைய பராமரிப்புத் தொகையை தீர்மானிக்கும் பொழுது,

1. கடன் அடைக்கப்பட்டது போக இறந்தவனின் நிகரச் சொத்தின் மதிப்பு;
2. சார்ந்திருப்பவர் சம்பந்தமாக உயிலில் வகை ஏதேனும் செய்யப் பட்டிருப்பின், அது
3. இறந்தவருக்கும் சார்ந்திருப்பவருக்கும் உள்ள உறவின் அளவு;
4. சார்ந்திருப்பவரின் நியாயமான தேவைகள்;
5. இறந்தவருக்கும் சார்ந்திருப்பவருக்கும் இடையே கடந்த காலத்தில் இருந்த உறவின் நெருக்கம்;
6. சார்ந்திருப்பவருடைய சொத்தின் மதிப்பு, அதிலிருந்து கிடைக்கும் வருமானம் அல்லது அவருடைய சொந்தச் சம்பாத்தியம் அல்லது வேறு வழி எதிலிருந்தும் வரும் வருமானம்;
7. இச்சட்டப்படி பராமரிப்புப் பெற உரிமை வாய்ந்த சார்ந்திருப்பவர்களின் எண்ணிக்கை;

ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். **[பிரிவு 23(3)]**

முடிவுரை :

பராமரிப்புத் தொகை கோருபவர் இந்து மதத்தை விட்டு வேறு மதத்திற்கு மாறிவிட்டால், அவருக்கு அத்தொகை கிடைக்காது என **பிரிவு 24** கூறுகிறது.

-oOo-

4 உரிமை வயது அடையாமையும் காப்பும் [Minority and Guardianship]

அறிமுகம்

1956–ஆம் ஆண்டில் உரிமை வயது அடையாமையும் காப்பும் குறித்த சட்டமானது தொகுக்கப்பட்டு, **இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டமானது (The Hindu Minority and Guardianship Act, 1956)** இயற்றப்பட்டது.

இச்சட்டம் 24–8–1956–ஆம் தேதியில் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று, 27–8–1956–ஆம் தேதியில் அரசிதழில் வெளியிடப் பட்டு, அன்றிலிருந்து அமலுக்கு வந்தது.

இச்சட்டத்தில் மொத்தம் **13 சட்டப் பிரிவுகள்** உள்ளன. அவற்றில் 1 முதல் 5 வரையிலான சட்டப் பிரிவுகள் முதனிலையான சில விபரங்களையும் (Preliminary), 6–வது பிரிவு இந்து இளவர் ஒருவரின் இயற்கைக் காப்பாளர் குறித்தும், 7–வது பிரிவு தத்தெடுக்கப்பட்ட மகனின் இயற்கைக் காப்பாளர் நிலை குறித்தும், 8–வது பிரிவு இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்கள் குறித்தும், 9–வது பிரிவு உயில்வழிக் காப்பாளர்கள் மற்றும் அவர்களது அதிகாரங்கள் குறித்தும், 10–வது பிரிவு சொத்தொன்றிற்கு காப்பாளராக செயல்பட இளவரின் திறனின்மை குறித்தும், 11–வது பிரிவு இளவரின் சொத்தை நிகழ்வுநிலைக் காப்பாளர் கையாளக் கூடாது என்றும், 12–வது பிரிவு கூட்டுக் குடும்பச் சொத்தில் இளவரின் பிரிக்கப்படாத பாகத்திற்கு காப்பாளர் நியமனம் செய்யப்படக் கூடாது என்றும், 13–வது பிரிவு இளவரின் நலனிற்கே அதிமுக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் கூறுகின்றன. **இளவர் மற்றும் காப்பாளர் நிலையில், இச்சட்டப் பிரிவுகள் பல புதிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன.**

ஆனால் அச்சட்டப் பிரிவுகளை அறிந்து கொள்வதற்கு முன்னர், இளவர் மற்றும் காப்பாளர் நிலை குறித்து முன்பிருந்த தொகுக்கப்படாத (பழைய) சட்டத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வது அவசியமாகும். அதை அடுத்து வரும் பக்கங்களில் காண்போமா?

அ. 1956-ஆம் ஆண்டின் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு இருந்த நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்]

A. The position before the enactment of the Hindu Minority and Guardianship Act, 1956 [Uncodified Law]

இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்பு நிலை குறித்து தொகுக்கப்படாத (பழைய) சட்டம் என்ன கூறுகிறது?– பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விபரங்கள்

முன்னுரை:

தரும சாத்திரங்களின்படி ஒருவன்(ள்) வளர்ந்து தன் வாழ்க்கையைத் தீர்மானிக்கிற சக்தி (திறன்) உண்டாகும் வரை உள்ள காலமானது, உரிமை வயது அடையாத காலம் (Minority) என்று கூறப்படும். அக்காலகட்டத்தில் அவர்களைப் பேணி வளர்க்க காப்பாளர் (Guardian) தேவை. பிறந்த குழந்தைக்குக் காப்பாள ராகத் தந்தையும் தாயும் இருப்பதை வழக்கம் (custom) அங்கீகரித்துள்ளது. பெற்றோரைத் தவிர மற்றோருக்கு அவ்வுரிமை இருப்பதை வழக்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. சில நிகழ்வுகளில் நீதிமன்றம் காப்பாளரை நியமிக்கும்.

உரிமை வயது (Majority):

பழைய இந்துச் சட்டத்தில் உரிமை வயது எது என்று நிர்ணயிப்பதில் வேறு பாடுகள் காணப்பட்டன. வங்கத்தில், ஒரு நபருக்கு 15 வயதும், மற்ற மாநிலங்களில், ஒரு நபருக்கு 16 வயதும் பூர்த்தியாகிவிட்டால், அந்நபர் உரிமை வயது அடைந்து விட்டதாக கருதப்பட்டது. ஆனால் இந்த வேறுபாட்டை 1875–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட **'இந்திய உரிமை வயதுச் சட்டம்' (Indian Majority Act)** போக்கிவிட்டது. அதன்படி உரிமை வயது, 18 ஆகும். ஆனால் உரிமை வயது அடையாத நபருக்கும் அல்லது அவனுடைய சொத்துக்கும் அல்லது இரண்டிற்கும் நீதிமன்றத்தால் காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால், 21 வயது பூர்த்தியானால்தான் அவன் உரிமை வயது அடைந்தவனாகக் கருதப்படுவான். இது எல்லா இந்துக்களுக்கும் திருமணம், விவாகரத்து, தத்தெடுப்பு நீங்கலாக பொருந்தும்.

காப்பாளரின் வகைகள் - 4 வகையினர் :

காப்பாளர் என்பார், 1. இயற்கைக் காப்பாளர் (Natural Guardian) 2. உயில் வழிக் காப்பாளர் (Testamentary Guardian) 3. நீதிமன்றக் காப்பாளர் (Court Guardian) 4. நிகழ்வு நிலைக் காப்பாளர் (De Facto Guardian) என நான்கு வகைப்படுபவர் என 1890–ஆம் ஆண்டின் காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டம் (Guardians and Wards Act, 1890) கூறுகிறது. இவர்களைப் பற்றி விரிவாகப் பின்வருமாறு காண்போம்.

1. இயற்கைக் காப்பாளர் (Natural Guardian) :

உரிமை வயதை அடையாத குழந்தையின் மீது அதன் தந்தைக்குத்தான் அதிக உரிமை உண்டு. உரிமை வயதை அடையாத குழந்தைக்கு அதன் தந்தைதான் முதல் இயற்கைக் காப்பாளர் அல்லது உண்மையான பாதுகாவலர் ஆவார். நீதிமன்றம் அவ்வுரிமையை வகிக்கத் தகுதியற்றவர் எனக் கூறும் வரை தந்தையே அக்குழந்தைக்கு காப்பாளர் ஆவார். தாய் என்பவள், அப்பொறுப்பை பின்தான் ஏற்கிறாள். உரிமை வயதை அடையாத நபரையும், அவரின் சொத்தையும் காக்கும் உரிமை தந்தை, தாயிற்குத் தவிர வேறு நபருக்கு இல்லை. உரிமை வயது அடைந்தாலும், ஒரு பெண் திருமணம் முடிந்தபின் அவள் கணவனுக்கு அப்பொறுப்புச் சென்றுவிடுகிறது. காப்பாளராக உள்ள உரிமை தந்தைக்குப் பிறகு தாயிற்கு இருந்தாலும், தந்தையைப் போல் உயில் மூலம் காப்பாளரை நியமிக்கத் தாயால் இயலாது. ஒரு தாய் மறுமணம் செய்தாலும் தொடர்ந்து அவளே காப்பாளராக இருப்பாள்; ஆனால் ஒரு இந்து விதவை வேறொரு மத ஆடவனை மணந்து கொண்டால், அவள் காப்பாளராக நீடிக்கத் தகுதியற்றவள் ஆவாள். உரிமை வயது அடையாத நிலையில் ஒரு பெண்ணிற்குத் திருமணம் நடந்து விட்டால், அவளின் கணவனே அவளுக்குக் காப்பாளர் ஆகிறான்.

இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்கள்: உரிமை உயது அடையாதவனின் அசையாச் சொத்தை ஒரு இயற்கைக் காப்பாளர் ஒத்தி வைக்கவும், விற்கவும், அதனை ஒரு வகை செய்யவும் (disposal) இயலாது. ஆனால் அந்த இளவரின் நலனை பாதுகாக்க மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயற்கைக் காப்பாளர் அதிகாரம் படைத்துள்ளார்.

Hanooman Prasad v. Mussumat Babooee[1] – இவ்வழக்கில் விதவை ஒருத்தி, இளவருக்கு இயற்கைக் காப்பாளரானதால் கணவனின் கடன்களைத் தீர்க்க, இளவரின் சொத்துக்களை அடைமானம் வைத்ததை கீழ்நிலை நீதிமன்றம் செல்லாது எனத் தீர்ப்பளித்தது. ஆனால் பிரிவி கவுன்சில் இளவரின் நன்மைக்காகவும், கணவனின் கடன்களைத் தீர்ப்பதற்காகவும் இந்த அடைமானம் வைக்கப்பட்டதால் மேற்படி அடைமானம் செல்லும் எனக் கூறியது.

1. 6 M.I.A. 393.

2. உயில் வழிக் காப்பாளர் (Testamentary Guardian) :

உயிலின் மூலம் காப்பாளரை நியமிக்கும் அதிகாரம் தந்தைக்கு மட்டுமே உண்டு. இவ்வழக்கம் பழங்காலத்தில் இல்லை. ஆனால் உரிமை வயதை அடையாத குழந்தைக்கு அதன் தந்தையே முழுப்பொறுப்பும் வகித்ததால், உயில் எழுதும் பழக்கம் ஏற்பட்டபின், தந்தைக்கு உயில் மூலம் காப்பாளரை நியமிக்கும் அதிகாரம் இருப்பதைச் சமூகம் அங்கீகரித்தது.

உயில் வழிக் காப்பாளரின் அதிகாரங்கள் : இச்சட்டத்திற்கு உட்பட்டும் உயிலில் கண்டுள்ளபடியும் உயில் வழிக் காப்பாளர் இளவரின் சொத்தை ஒத்தி வைக்கவும், விற்கவும், அதனை ஒரு வகை செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளார். அதாவது இயற்கைக் காப்பாளருக்குள்ள அனைத்து அதிகாரங்களும் உண்டு. ஆனால் அவை உயிலில் கூறப்பட்டுள்ள நிபந்தனைக்கு உட்பட்டது.

3. நீதிமன்றக் காப்பாளர் (Court Guardian) :

உரிமை வயதை அடையாதவரின் தனிப்பட்ட சொத்துக்குத்தான் நீதிமன்றம் காப்பாளரை நியமிக்க முடியும். பிரிவினையாகாத கூட்டுக் குடும்பச் சொத்திற்குக் காப்பாளரை நியமிக்க முடியாது. நீதிமன்றம் காப்பாளரை நியமிக்கும் பொழுது உரிமை வயதை அடையாதவரின் நலன்கள், அவரின் வயது, காப்பாளராக நியமிக்கப்பட இருப்பவரின் வயது, குணாதிசயம், சக்தி, இவர்கள் இருவருக்கு மிடையே உள்ள உறவின் நெருக்கம், இறந்துபோன பெற்றோரின் விருப்பம் ஆகிய அனைத்தையும் நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொள்ளும்.

4. நிகழ்வு நிலைக் காப்பாளர் (De facto Guardian) :

அந்நியரான ஒருவர் உரிமை வயதை அடையாதவரின் நலன்களைப் பாதுகாத்து வந்தால் அவர் நிகழ்வு நிலைக் காப்பாளராவார். அதாவது இளவரின் சொத்துக்கு மேலாளராக (Manager of minor's estate) செயல்படுபவர். சட்டப்படி இவர் நியமிக்கப்படாவிட்டாலும், சட்டம் இவரது செயலைத் தடுக்க வில்லை. ஆகையால் ஒரு இயற்கை காப்பாளருக்குள்ள அனைத்து அதிகாரங்களும், பொறுப்புகளும் இருவருக்கும் உண்டு.

ஆ. 1956-ஆம் ஆண்டின் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு உள்ள நிலை [தொகுக்கப்பட்ட (புதிய) சட்டம்]

B. The position after the enactment of the Hindu Minority and Guardianship Act, 1956 [Codified Law]

1956–ஆம் ஆண்டின் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம் குறித்து பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விபரங்கள்

1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தின் நோக்கம் யாது என்பதை அதன் முகப்புரை (Preamble) தெளிவாகக் கூறுகிறது. அம்முகப்புரை, "இந்துக்கள் மத்தியில் உரிமை வயது அடையாமை மற்றும் காப்பு தொடர்பாக நிலவி வரும் சட்டத்தின் சில பகுதிகளைத் திருத்துவதற்காகவும், தொகுப்பதற்காகவும் இயற்றப்பட்ட ஒரு சட்டம்" (An Act to amend and cooify certain parts of the law relating to minority and guardianship among Hindus), என்று கூறுகிறது.

இச்சட்டத்தில் மொத்தம் 13 சட்டப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் முதல் பிரிவில் சட்டத்தின் தலைப்பும், அது அளாவுகை புரியும் நிலப்பரப்பும் (short title and extent) குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் பிரிவானது, இச்சட்டத்தின் வகைமுறைகள், 1890–ஆம் ஆண்டின் காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டத்திற்கு இயைந்த வகையில் இயங்க வேண்டுமே தவிர, முரணாக இயங்குதல் ஆகாது (in addition to and not in derogation of the Guardians and Wards Act, 1890) என்று குறிப்பிடுகிறது. ஏனெனில் இச்சட்டம், 1890–ஆம் ஆண்டின் காப்பாளர்கள் மற்றும் காப்பிலுள்ளோர்கள் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அதில் கூறப்படாத சில விபரங்கள் இச்சட்டத்தில் கூடுதலாகக் கூறப்பட்டுள்ளன. எனவே, இச்சட்டத்தில் கூறப்படாத விபரங்கள் குறித்து, மேற்படி 1890–ஆம் ஆண்டின் காப்பாளர்கள் மற்றும் காப்பிலுள்ளோர்கள் சட்டமே பொருந்தக் கூடியதாகும். மூன்றாவது பிரிவில், இச்சட்டம் இந்துக்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று கூறுகிறது. (இந்து என்பவன் யார் என்பது குறித்து நாம் ஏற்கனவே இந்நூலின் முதல் அத்தியாயத்தில் விரிவாகக் கண்டுள்ளோம்.)

இச்சட்டத்தில் பயனாகும் சில பதங்களுக்குண்டான வரையறையை **4–வது பிரிவு** கூறுகிறது. அதன்படி,

(a) **'உரிமை வயது அடையாதவர்' (minor)** என்பவர், 18 வயதைப் பூர்த்தி செய்யாத ஒரு நபர் என்று பொருளாகும்.

(b) **'காப்பாளர்' (guardian)** என்பவர், உரிமை வயது அடையாத ஒரு நபரை அல்லது அவரது சொத்தை அல்லது இரண்டையும் பாதுகாத்து வரும் ஒரு நபர் என்று பொருளாகும். மேலும் இப்பதத்தில் பின்வருவோரும் உள்ளடங்குவர். அவர்கள்,–

(i) இயற்கைக் காப்பாளர் (natural guardian).

(ii) உரிமை வாயது அடையாதவரின் தந்தை அல்லது தாய் எழுதி வைக்கும் உயிலின் மூலமாக நியமிக்கப்படும் ஒரு காப்பாளர். (guardian appointed by the will of the minor's father and mother).

(iii) நீதிமன்றம் ஒன்றால் நியமிக்கப்பட்ட அல்லது விளம்புகை செய்யப்பட்ட ஒரு காப்பாளர் (guardian appointed or declared by a court).

(iv) காப்பிலுள்ளோர் நீதிமன்றம் எதன் தொடர்பாகவும் இயற்றப் பட்ட சட்டம் எதன் கீழும் அல்லது அச்சட்டத்தினால் ஒரு காப்பாளராக செயல்பட அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபர் (person empowered to act as such by or under any enactment relating to any Court of Wards).

(c) 'இயற்கைக் காப்பாளர்' (natural guardian) என்பவர், இச்சட்டத்தின் 6-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பாளர்களில் எவரும், என்று பொருள்படும்.

இச்சட்டத்தின் 5-வது பிரிவில் இச்சட்டம் இயற்றப்பட்டதால் ஏற்பட்ட விளைவு யாது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி இச்சட்டம் வருவதற்கு முன்னால் இந்துச் சட்டம் குறித்து இருந்த நூல்கள், விதிகள், பொருள் விளக்கங்கள். வழக்கம், வழக்காறு யாவும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள விஷயங்களைப் பொறுத்த வரையில் செயலற்றுவிடும்.

அதைப்போலவே, இதற்கு முன்னால் இருந்த சட்டம் எதுவும், இச்சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரண்படும் விஷயங்களில் செயலற்றுவிடும். சுருங்கக் கூறின் இச்சட்டம் மேலோங்கு செல்திறம் (overriding effect) வாய்ந்த சட்டமாகும்.

இனி அதற்கடுத்து வரும் 6 முதல் 13 வரையிலான சட்டப் பிரிவுகளை பின்வரும் வினாக்களின் அடிப்படையில் சற்று விளக்கமாகக் காண்போமா?

1. Explain the changes introduced with respect to the Law of Minority and Guardianship by the Hindu Minority and Guardianship, 1956. (1956-ம் ஆண்டு இந்து இளவர் நிலை மற்றும் காப்புரிமை சட்டத்தினால் இளவர் நிலை மற்றும் காப்புரிமை சட்டம் குறித்து ஏற்படுத்தப்பட்ட மாறுதல்களை விளக்குக.)

(அல்லது)

Examine the changes made in the law of Guardianship by the Hindu Minority and Guardianship Act, 1956. (1956-ம் ஆண்டு இந்து இளவர் மற்றும் காப்பு நிலைச் சட்டம், காப்பு நிலைச் சட்டத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை ஆராய்க.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை

1956-ன் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தால் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள்

(1) இயற்கைக் காப்பாளரைப் பொறுத்தவரை

(2) உயில்வழிக் காப்பாளரைப் பொறுத்தவரை

(3) நிகழ்வு நிலைக் காப்பாளரைப் பொறுத்தவரை

முன்னுரை:

இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்பு குறித்து பழைய இந்துச் சட்டத்தில் இருந்த நிலைப்பாட்டை மாற்றி, சமுதாய மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்களுக்கேற்ப அதில் பல முற்போக்கான மாற்றங்களை 1956–ஆம் ஆண்டின் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம் கொண்டு வந்தது என்று சொன்னால் அது மிகையல்ல. இச்சட்டம் ஏற்படுத்திய மாற்றங்களை பின்வரும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்திக் காண்போமா?

1956-ன் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தால் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள்:

(1) இயற்கைக் காப்பாளரைப் பொறுத்தவரை (Natural Guardian) :

1. ஒரு இளவருக்கோ அல்லது ஒரு திருமணமாகாத உரிமை வயது அடையாத பெண்ணுக்கோ தந்தைதான் இயற்கைக் காப்பாளர் ஆவார். தந்தையின் இறப்பிற்குப் பின், தாய் இயற்கைக் காப்பாளர் ஆவாள். பழைய சட்டத்தின்படி, ஒரு இயற்கைக் காப்பாளர் இந்து மதத்தை விடுத்து வேறு மதத்திற்கு மாறிவிட்டாலும், அவர் இயற்கைக் காப்பாளராக இருப்பார். அதாவது அவ்வுரிமை பறிபோய்விடாது. ஆனால் மேற்படி 1956–ஆம் ஆண்டு புதிய சட்டத்தின் **6–வது பிரிவின்படி** மதம் மாறினால், அவர் ஒரு இயற்கைக் காப்பாளராக செயலாற்ற முடியாது. மேலும் அவர் உலகப் பற்றை துறந்து வனாந்திரம் சென்று விட்டாலோ அல்லது சந்நியாசி ஆகிவிட்டாலோ, அவர் ஒரு இயற்கைக் காப்பாளராக இருக்க முடியாது.

2. பழைய சட்டத்தின்படி, குழந்தை தன்னிடமே இருக்க வேண்டும் என்று இயற்கைக் காப்பாளராகிய தந்தை கோரலாம். அங்கு குழந்தையின் வயது கருத்தில் கொள்ளப்படவில்லை. ஆனால் புதிய சட்டப்படி, குழந்தைக்கு 5 வயது ஆகும் வரை, அது தாயின் காப்பில்தான் இருக்க வேண்டும்.

3. பழைய சட்டத்தின்படி தன்னுடைய உரிமை வயது அடையாத

மனைவிக்கு, கணவனே காப்பாளர் ஆவார். கணவனே ஒரு இளவராக இருப்பினும், திருமணமான பின் மனைவிக்கு அவன்தான் காப்பாளர். ஆனால் புதிய சட்டத்தின் 10–வது பிரிவின்படி, ஒரு இளவர், மற்றொரு இளவரின் சொத்துக்கு காப்பாளராகச் செயல்பட முடியாது. (A minor cannot act as guardian of the property of any minor). எனவே உரிமை வயதடையாத மனைவியின் சொத்துக்கு காப்பாளராக, அவளது இளவர் கணவன் செயல்பட முடியாது. (இந்து திருமணச் சட்டத்தின் 5 (iii)–வது பிரிவின்படி, திருமணத் தரப்பினர்கள் உரிமை வயதடைந்தோராக இருக்க வேண்டும்.)

4. இளவரின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டும், சட்டப்படியான தேவையின் பொழுதும் இயற்கைக் காப்பாளர்கள் இளவரின் சொத்துக்களை விற்கலாம்; அடைமானம் வைக்கலாம். இது நாம் ஏற்கனவே கண்ட **Hanooman Prasad v. Mussumat Babooee**[1] எனும் வழக்கின் முடிவை ஒட்டியதாகும். ஆனால் மேற்கண்ட விற்கும் மற்றும் அடைமானம் வைக்கும் அதிகாரங்கள் தற்பொழுது இப்புதிய சட்டத்தினால் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. புதிய சட்டத்தின் 8–வது பிரிவின்படி, இளவரின் சொத்துக்கள் எதையேனும் பராதீனம் செய்வதற்கு (விற்க, அடைமானம் வைப்பதற்கு) முன், இயற்கை காப்பாளர் நீதிமன்றத்தின் முன்னனுமதி பெற வேண்டும். இதற்கு உள்ள ஒரே ஒரு விதிவிலக்கு யாதெனில், இளவரின் சொத்தை 5 வருடங்களுக்கு குறைவான தொரு காலத்திற்கு, இயற்கைக் காப்பாளர் நீதிமன்றத்தின் அனுமதி பெறாமல் குத்தகைக்கு (lease) விடலாம். ஆனால் அதற்கு மேற்பட்ட காலத்திற்கு நீதிமன்றத்தின் அனுமதி வேண்டும்.

(2) உயில்வழிக் காப்பாளரைப் பொறுத்தவரை (Testamentary Guardians):

1. பழைய சட்டத்தின்படி, தந்தை மட்டுமே தன்னுடைய உயில் மூலம் காப்பாளரை நியமிக்கும் அதிகாரம் படைத்தவர். ஆனால் புதிய சட்டத்தின்படி தாயும் தனது உயில் மூலம் காப்பாளரை நியமிக்கலாம்.

2. பழைய சட்டத்தின்படி, தந்தையால் நியமிக்கப்பட்ட உயில் வழிக் காப்பாளர், அவர் இறந்தவுடன், தாய் உயிருடன் அப்பொழுது இருந்தாலும் கூட, இளவருக்கு காப்பாளராக செயல்பட ஆரம்பித்து விடுவார். ஆனால் புதிய சட்டப்படி, தந்தை இறந்த பிறகு, தாய் உயிருடன் இருப்பின், உயில் வழி நியமிக்கப்பட்டவர் காப்பாளராக செயல்பட முடியாது. மாறாக தாய் அடுத்த காப்பாளராக செயல்படும் அதிகாரம் பெற்றவர். மேலும், அத்தாய் தன்னுடைய விருப்பம் போல மற்றொரு நபரை காப்பாளராக தன்னுடைய உயில் மூலம் நியமிக்கலாம். முன்னதாக தந்தை உயில் மூலம் செய்த காப்பாளர் நியமனம் இரத்தாகி விடும். ஆனால் அதே சமயத்தில் தாயானவள் உயில் மூலம் யாரையும்

1. 6 M.I.A. 393.

காப்பாளராக நியமிக்காமல் இறந்து விட்டால், அவளுக்கு முன் தந்தை நியமித்த உயில் வழிக் காப்பபாளருக்கு அதிகாரம் வந்து விடும். மேலும் முறையற்ற மணப்பிறப்பு குழந்தைகளுக்கு தாயானவள் மட்டுமே உயில் வழிக் காப்பாளரை நியமிக்க முடியும். ஆனால் பழைய சட்டத்தின்படி, அவ்வாறான குழந்தைகளுக்கு உயில் வழிக் காப்பாளர் யாரும் நியமிக்கப்படவியலாது.

3. உயில் வழிக் காப்பாளரின் அதிகாரங்களும் இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்களை ஒத்ததேயாகும். ஆனால் உயில்வழிக் காப்பாளரின் அதிகாரங்கள், உயிலில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாகும். பழைய சட்டத்திலும் இவ்வாறே இருந்தது. ஆனால் புதிய சட்டத்தில் இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்கள் எவ்வாறு சட்டப்படியாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதோ அவ்வாறே உயில் வழிக் காப்பாளரின் அதிகாரங்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது இளவரின் சொத்துக்களை பராதீனம் செய்ய எவ்வாறு ஒரு இயற்கைக் காப்பாளர் நீதிமன்றத்தின் முன்னனுமதி பெற வேண்டியுள்ளதோ, அவ்வாறே உயில் வழிக் காப்பாளரும் பெற வேண்டும்.

(3) நிகழ்வு நிலைக் காப்பாளரைப் பொறுத்தவரை (De facto Guardians):

நிகழ்வு நிலைக் காப்பாளர்களை பழைய சட்டம் அங்கீகரித்திருந்தது. ஆனால் 1956–ஆம் ஆண்டின் புதிய சட்டமானது, நிகழ்வு நிலைக் காப்பாளர்களை அங்கீகரிக்கவில்லை.

2. Explain who can be called as natural guardian under the Hindu Minority and Guardianship Act, 1956 and state their powers. (யார் இயற்கைக் காப்பாளர் என அழைக்கப்படுவர் என்பதை 1956–ன் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தின் கீழ் விளக்கி அவர்தம் அதிகாரங்களைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Discuss the powers of natural guardian under the Hindu Minority and Guardianship Act, 1956. (1956–ஆம் ஆண்டு இளவர் நிலை மற்றும் காப்பாளர் நிலைச் சட்டத்தின் கீழ் இயற்கைக் காப்பாளர் ஒருவரின் அதிகாரங்களையும் அவ்வதிகாரங்களுக்குள்ள கட்டுப்பாடுகளையும் விவாதிக்கவும்.)

(அல்லது)

Discuss the powers of natural guardian under the Hindu Minority and Guardianship Act, 1956 and the limitations on such powers. (1956–ன் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தின் கீழ் இயற்கைக் காப்பாளர் ஒருவரின் அதிகாரங்களையும் அவை மீது உள்ள கட்டுப்பாடுகளையும் விவாதிக்க.)

(அல்லது)

Who is a Natural guardian of a minor under the Hindu Minority and Guardianship Act, 1956? What are his powers? How do they differ from de facto guardian? (1956–ம் ஆண்டு இந்து இளவர் நிலை மற்றும் காப்புரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு இளவரின் இயற்கைக் காப்பாளர் யார்? அவரது அதிகாரங்கள் யாவை? அவர் நிகழ்வு நிலை காப்பாளரிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறார்?)

(அல்லது)

Distinquish between de facto guardian and natural guardian. Bring out the differences between their powers and functions. (நிகழ்வு நிலைக் காப்பாளரையும் இயற்கைக் காப்பாளரையும் வேறுபடுத்துக. அவர்களின் அதிகாரங்களையும், பணிகளையும் வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

Natural guardian - Write short notes. (இயற்கைக் காப்பாளர் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Powers of natural guardian - Write short notes. (இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

இயற்கைக் காப்பாளர் - யார்? (பிரிவு 6)
இயற்கைக் காப்பாளர் - தத்தெடுப்பு குழந்தைகளுக்கு (பிரிவு 7)
இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்களும், அதற்குள்ள கட்டுப்பாடுகளும் (பிரிவு 8)
இயற்கைக் காப்பாளர் மற்றும் நிகழ்வு நிலைக் காப்பாளர் - வேறுபாடுகள்

இயற்கைக் காப்பாளர் – யார் ? (பிரிவு 6) :

புதிய சட்டத்தின் 6–வது பிரிவில் உரிமை வயது அடையாத ஓர் இந்துவுக்கு இயற்கைக் காப்பாளர் யார் என்பது கூறப்பட்டுள்ளது. உரிமை வயது அடையாத அந்த நபர், அவருடைய சொத்து (பிரிவினையாகாத கூட்டுக் குடும்ப சொத்து தவிர) ஆகியவற்றிற்குக் கீழ்க்கண்டவர்கள் இயற்கைக் காப்பாளர் ஆவர்.

(a) பையனுக்கும், திருமணமாகாத கன்னிப் பெண்ணுக்கும் தந்தை காப்பாளர். அவருக்குப் பிறகு தாய். இருப்பினும் மேற்படி இளவருக்கு 5 வயது

ஆகவில்லை என்று சொன்னால் அது சாதாரணமாகத் தாயின் பாதுகாப்பிலேயே இருத்தல் வேண்டும்;

(b) முறையிலா மணத்தில் பிறந்த இளவருக்கும், முறையிலா மணத்தில் பிறந்த திருமணமாகாத பெண்ணுக்கும் தாய்தான் முதலில் காப்பாளர். அவளுக்கு பின்னரே தந்தை;

(c) திருமணமான ஒரு பெண்ணுக்குக் கணவனே காப்பாளர்.

ஆனால், காப்பாளராக இருக்கும் நபர் (a) இந்துவாக இல்லாமல் போய்விட்டாலோ, அல்லது (b) முழுமையாக மற்றும் இறுதியாக உலகைத் துறந்துவிட்டு வனாந்திரம் சென்று விட்டாலோ அல்லது சந்நியாசியாகப் போய்விட்டாலோ, அவர் இயற்கைக் காப்பாளராகப் செயலாற்ற இயலாதவராகி விடுவார்.

விளக்கம்: இந்த 6–வது பிரிவில் 'தந்தை' மற்றும் 'தாய்' எனும் பதங்களில் ஒரு மாற்றாந் தந்தையோ (step-father) அல்லது ஒரு மாற்றாந் தாயோ (step-mother) உள்ளடங்காது.

இதிலிருந்து தந்தை உயிரோடு இருக்கும் வரையில் அவரே இயற்கைக் காப்பாளர் என்பது தெளிவாகும். உரிமை வயது அடையாதவனின் முழுச் சொத்துக்கு அல்லது தனிச் சொத்துக்குத்தான் தந்தையோ அல்லது தாயோ காப்பாளராக இருக்கும் உரிமை பெற்றவர். கூட்டுக் குடும்பச் சொத்துக்கு அவர்கள் காப்பாளராக இருக்க முடியாது. இயற்கைக் காப்பாளராக இருக்கும் தாய் பின்னர் மறுமணம் புரிந்து கொண்டாலும் தொடர்ந்து குழந்தைகளுக்குக் காப்பாளராக இருக்கலாம். அவளது மறுமணம் ஒரு தகுதியின்மையாகாது.

இயற்கைக் காப்பாளர் - தத்தெடுப்பு குழந்தைகளுக்கு (பிரிவு 7) :

7–வது பிரிவின்படி, உரிமை வயதடையாத மகன் ஒருவரை தத்தெடுத்துக் கொண்ட பின், அவனது இயற்கைக் காப்பாளராக, அவனுடைய தத்துத் தந்தையும் (adoptive-father), அவருக்கு பின் அவனுடைய தத்துத் தாயும் (adoptive-mother) இருப்பர்.

இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்களும் அதற்குள்ள கட்டுப்பாடுகளும் (பிரிவு 8) (Powers and Limitations) :

1. உரிமை வயது அடையாத நபருடைய நன்மைக்காக அவசியமான, நியாயமான, முறையான செயல்கள் எல்லாவற்றையும் செய்ய இயற்கைக் காப்பாளருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், அந்த அதிகாரம் இந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், உரிமை வயது

அடையாத நபரின் நிலச் சொத்தின் (Estate) இலாபத்திற்காக, பாதுகாப்பிற்காக, நன்மைக்காக எல்லாச் செயல்களும் செய்யலாம். ஆனால், உரிமை வயது அடையாதவரை ஒரு தனிப்பட்ட உடன்பாட்டில் பிணைக்க அதிகாரம் கிடையாது (but tne guardian in no case bind the minor by a personal covenent).

2. நீதிமன்றத்தின் முன்னனுமதி பெறாமல் இயற்கைக் காப்பாளர் ஒருவர் பின்வரும் செயல்களைச் செய்தல் கூடாது. அவை

(a) உரிமை வயது அடையாதவரின் அசையாச் சொத்தின் (immovable property) எந்தப் பாகத்தையும் நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறாமல் ஒரு காப்பாளர் அடைமானம் வைக்கவோ (mortgate) அல்லது பிணையாக்கவோ (charge) கூடாது. மேலும் அதனை விற்பனை (sale), கொடை (gift), பரிமாற்றம் (exchange) அல்லது வேறுவிதத்தில் மாற்றுதல் கூடாது.

(b) மேலும் சொத்தின் எந்தப் பாகத்தையும் அய்ந்தாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட குத்தகைக்கோ அல்லது உரிமை வயது அடையாதவன் உரிமை வயது அடைந்து ஓராண்டுக்கு மேல் செல்லும் குத்தகைக்கோ நீதிமன்றத்தின் முன் அனுமதி இல்லாமல் கொடுக்கக்கூடாது.

3. இயற்கைக் காப்பாளர், உரிமை வயது அடையாதவனின் சொத்தை மேலே சொல்லப்பட்டிருக்கும் விதிகளுக்கு முரணாக மாற்றிக் கொடுத்தால் உரிமை வயது அடையாதவனோ அல்லது அவன் வழியாக உரிமை கோருகிறவர்களோ அந்தச் செயலைத் தவிர்த்துக் கொள்ளலாம் (voidable at the instance of the minor or any person claiming under him). அதாவது, இயற்கைக் காப்பாளர் உரிமை வயது அடையாதவனின் சொத்து குறித்து மேற்கண்டவாறு செய்த ஒப்பந்தம், தவிர்தகு ஒப்பந்தமாகும்.

4. மேற்கண்ட இரண்டாவது உட்பிரிவில் கூறப்பட்டிருப்பவைகளைச் செய்ய இயற்கைக் காப்பாளருக்கு நீதிமன்றம், அச்செயல் அவசியமென்றும் (in case of necessity) அல்லது ஒரு கண்கூடான நன்மை (an evident advantage) அந்த உரிமை வயது அடையாதவனுக்கு கிடைக்க இருக்கிறது என்றும் கருதினாலொழிய, அனுமதி கொடுத்தலாகாது.

5. நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறுவதற்கு விண்ணப்பம் செய்து கொள்வது தொடர்பாக 1890–ன் காப்பாளர்கள் மற்றும் காப்பிலுள்ளவர்கள் சட்டம்தான் (Guardians and Wards Act, 1890) பொருந்தும்.

இயற்கைக் காப்பாளர் மற்றும் நிகழ்வு நிலைக் காப்பாளர் - வேறுபாடுகள்:

மேற்கண்ட இரண்டு காப்பாளர்களுக்கிடையிலான வேறுபாடுகளை அடுத்த பக்கத்தில் வரும் அட்டவணை தெளிவாக்குகிறது.

இயற்கைக் காப்பாளர் (Natural Guardian)	நிகழ்வு நிலைக் காப்பாளர் (De facto Guardian)
1. குழந்தையைப் பெற்றெடுக்கும் தந்தையும், தாயுமே அக்குழந்தை உரிமை வயது அடையும் வரையிலான இயற்கைக் காப்பாளர்கள் ஆவர். அதாவது இக்காப்பாளர் நிலை இயற்கையாக ஏற்படுகிறது.	அந்நியரான ஒருவர் உரிமை வயது அடையாதவரின் நலன்களைப் பாதுகாத்து வந்தால், அவர் நிகழ்வு நிலைக் காப்பாளராவார். அதாவது இவர் இளவரின் சொத்துக்கு மேலாளராகச் செயல்பட்டார்.
2. இயற்கைக் காப்பாளர் என்பவர், சட்ட நிலைக் காப்பாளர் (De jure Guardian) ஆவர். அதாவது இவரது நிலை சட்டத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.	நிகழ்வு நிலைக் காப்பாளரின் நிலை சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை.
3. 1956–ஆம் ஆண்டின் உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தின் 6 முதல் 8 வரையுள்ள பிரிவுகள் இயற்கைக் காப்பாளர்களின் வரையரை, நியமனம் மற்றும் அதிகாரங்களைக் குறிப்பிடுகின்றன.	இச்சட்டத்தின் 11–வது பிரிவு, நிகழ்வு நிலைக் காப்பாளர் முறையையே ஒழித்து விட்டது.
4. இயற்கைக் காப்பாளர் நிலை குறித்து ஏற்கனவே கடந்த காலத்தில் இருந்த மற்றும் தற்பொழுது இருக்கும் அனைத்து சட்டவியல் முறையாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	நிகழ்வு நிலைக் காப்பாளர் முறையானது பண்டைய இந்துச் சட்டத்திற்கே உரித்தாகும். இந்தச் சட்டத்தைத் தவிர, வேறு எந்த சட்டவியல் முறையிலும், நிகழ்வு நிலைக் காப்பாளர் முறை காணப்படவில்லை. அதுவும் தற்பொழுது மேற்படி பிரிவு 11–ன் வாயிலாக இந்துச் சட்ட முறையிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டது.
5. உரிமை வயது அடையாதவர்களின் சொத்தை நீதிமன்றத்தின் முன்னனுமதியுடன் இயற்கைக் காப்பாளர்கள் விற்பனை, கொடை, பரிமாற்றம் உள்ளிட்ட பிற பாரதீனங்களைச் செய்யலாம். இளவரின் நலனுக்காக ஒப்பந்தங்களில் ஈடுபடலாம்.	நிகழ்வு நிலைக் காப்பாளருக்கு, உரிமை வயது அடையாதவரின் சொத்துக்களை இயற்கைக் காப்பாளர்கள் போல் பாரதீனம் செய்ய உரிமையில்லை. அதுபோல் நிகழ்வு நிலைக் காப்பாளர் இளவருக்காக ஒப்பந்தங்களில் ஈடுபட முடியாது.

3. State the provisions of the Hindu Minority and Guardianship Act, 1956, regarding testamentary guardians and their powers. (உயில் வழிக் காப்பாளர்கள் மற்றும் அவர்களது அதிகாரங்கள் தொடர்பாக 1956–ஆம் ஆண்டின் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தின் வகைமுறைகளை குறிப்பிடுக.)

(அல்லது)

Who can appoint a testamentary guardian? What are the powers of such a guardian? (யார் உயில் வழிக் காப்பாளரை நியமிக்கலாம்? அத்தகு காப்பாளரின் அதிகாரங்கள் யாவை ?)

(அல்லது)

Who is a testamentary guardian? What are his powers? (உயில் வழிக் காப்பாளர் யார் அவரது அதிகாரங்கள் யாவை ?)

(அல்லது)

Testamentary guardian - Write short notes.(உயில் வழிக் காப்பாளர் - சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
உயில்வழிக் காப்பாளர்களும் அவர்களது அதிகாரங்களும் (பிரிவு 9)
உயில்வழி மற்றும் நிகழ்வு நிலைக் காப்பாளர் - வேறுபாடுகள்

முன்னுரை:

பொதுவாக பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளின் மீது அன்பும், பாசமும் கொள்வது இயற்கை. இதனால்தான் பெற்றோர்களான தாய், தந்தையரை அவர்களது உரிமை வயதடையா குழந்தைகளின் இயற்கைக் காப்பாளர்கள் என்று சட்டம் கூறுகிறது. பெற்றோர்களின் நோக்கமெல்லாம், தங்கள் குழந்தைகளின் நல்வாழ்வேயாகும். எனவே பெற்றோர்கள் தாங்களது இறப்பிற்குப் பிறகும் தங்கள் குழந்தைகளை பாதுகாத்து பேணி வளர்க்க தகுதியான மற்றும் நம்பிக்கையான ஒரு நபர் காப்பாளராக இருக்க வேண்டும் என்று கருதுவதுண்டு. இதன் பொருட்டு, இயற்கைக் காப்பாளரான தந்தையும், அல்லது அவரது இறப்பிற்குப் பின் தாயும் எழுதி வைக்கும் உயிலின் வழியாக நியமிக்கப்படும் காப்பாளரே, **'உரிமை வயது அடையாதவனின் உயில்வழிக் காப்பாளர்'** எனப்படுவர். இவர் குறித்த சட்ட வகைமுறைகளை 1956–ஆம் ஆண்டின் உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தின் **9–வது** பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

உயில் வழிக் காப்பாளர்களும் அவர்களது அதிகாரங்களும் (பிரிவு 9) :

(1) முறையான மணத்தின் மூலம் பிறந்த தன்னுடைய உரிமை வயது அடையாத இளவர் குழந்தைகளுக்கு இயற்கைக் காப்பாளராக இருக்க உரிமையுள்ள ஒரு இந்துத் தந்தை, அவ்விளவர் சம்பந்தமாகவும் அல்லது அவரது சொத்துக்கும் அல்லது இரண்டுக்கும் உயில் மூலம் ஒரு காப்பாளரை நியமிக்கலாம். ஆனால் கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினையாகாத சொத்துக்கு காப்பாளர் நியமிக்க முடியாது. **[பிரிவு 9(1)].**

உயில் வழிக் காப்பாளரை நியமிக்கும் அதிகாரம் தந்தைக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆனால் தனக்குப்பின் தாய் உயிருடன் இருந்தால் அவள் இயற்கைக் காப்பாளராக வர அருகதையற்றவள் என அத்தந்தை உயிலில் எழுத, சட்டம் அவரை அனுமதிப்பதில்லை. ஏனெனில் தந்தை இறந்தபின், உரிமை வயது அடையாதவருக்கு இயற்கைக் காப்பாளராக விளங்குபவர் தாயாவார். மேலும் அவரும் உயில் மூலம் காப்பாளரை நியமிக்கலாம். எனவே இவ்வுரிமையை உயில் வழிக் காப்பாளர் நியமனம் மூலம், தந்தை பறிக்கவியலாது. இதைத்தான் **பிரிவு 9(2)** மற்றும் **9(3)** மறைமுகமாக சுட்டிக்காட்டுகிறது.

(2) அதாவது உயில் வழிக் காப்பாளரை நியமித்த தந்தையானவர் தாய்க்கு முன்னரே இறந்துவிட்டால் (father predeceses mother), அவர் உயில் வழி செய்த காப்பாளர் நியமனம் செல்லாது. ஆனால் தந்தைக்கு முன்னர், தாய் காப்பாளர் நியமனம் குறித்து உயில் ஏதும் எழுதாமல் இறந்து விட்டால், தந்தை உயில் வழி நியமித்த காப்பாளர் நியமனத்திற்கு உயிர் வந்து விடும். **[பிரிவு 9(2)].**

(3) முறையான மணத்தின் மூலம் பிறந்த தன்னுடைய உரிமை வயது அடையா குழந்தைகளுக்கு இயற்கைக் காப்பாளராக இருக்க அதிகாரம் பெற்ற ஒரு இந்து விதவையும், காப்பாளராக இருக்கும் தகுதியை தந்தை இழந்துவிட்டார் என்ற காரணத்தினால் முறை மணத்தின் மூலம் பிறந்த தன்னுடைய உரிமை வயது அடையா குழந்தைகளுக்கு இயற்கைக் காப்பாளராக இருக்க அதிகாரம் பெறும் ஒரு இந்துத் தாயும், உரிமை வயது அடையாத குழந்தைகள் எவர் சம்பந்தமாகவும் அல்லது அவர்களின் சொத்து தொடர்பாகவும் உயில் மூலம் காப்பாளர் ஒருவரை நியமிக்கலாம். **[பிரிவு 9(3)].**

(4) முறையிலா மணத்தின் (illegitimate) மூலம் பிறந்த தன்னுடைய குழந்தைகளுக்கு இயற்கைக் காப்பாளராக இருக்க அதிகாரமுள்ள ஒரு இந்துத் தாய், உரிமை வயது அடையாத அக்குழந்தைகளுக்கு அல்லது சொத்துக்கு அல்லது இரண்டுக்கும் உயில் மூலம் காப்பாளர் ஒருவரை நியமிக்கலாம். **[பிரிவு 9(4)].**

(5) இவ்வாறு உயில் வழி நியமிக்கப்படுகின்ற காப்பாளர், உரிமை வயது

அடையாத இளவரின் தந்தை அல்லது தாயின் (சூழ்நிலையை அனுசரித்து) மரணத்திற்குப் பிறகு, இச்சட்டத்தில், குறிப்பாக கூறப்பட்டிருக்கும் விதிகளுக்கும் மற்றும் உயிலில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு இயற்கைக் காப்பாளருக்குரிய (Natural guardian) அனைத்து அதிகாரங்களையும் கொண்டு செயல்படலாம் **[பிரிவு 9(5)]**. (இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்களை இதற்கு முந்தய வினாவில் காண்க.)

(6) இவ்வாறு உயில் வழி நியமிக்கப்படும் காப்பாளரின் அதிகாரம், அந்த உரிமை வயது அடையாத இளவர் பெண்ணாக இருந்தால், அவருடைய திருமணத்தோடு இரத்தாகிவிடும்.**[பிரிவு 9(6)]**.

உயில்வழிக் காப்பாளர் மற்றும் நிகழ்வு நிலைக் காப்பாளர் - வேறுபாடுகள்:

உயில்வழிக் காப்பாளர் [Testamentary Guardian]	நிகழ்வு நிலைக் காப்பாளர் [De facto Guardian]
1. உயில்வழிக் காப்பாளர் என்பவர் தந்தையால் அல்லது அவர் இல்லாத பொழுது தாயால் எழுதி வைக்கப் படும் உயிலால் நியமனம் செய்யப் படுபவர் ஆவார்.	அந்நியரான ஒருவர் உரிமை வயது அடையாதவரின் நலன்களைப் பாது காத்து வந்தால், அவர் நிகழ்வு நிலைக் காப்பாளராவார். இவரை யாரும் நியமனம் செய்வதில்லை.
2. உயில்வழிக் காப்பாளர் என்பவர், சட்ட நிலைக் காப்பாளர் (De jure Guardian) ஆவர். அதாவது இவரது நிலை சட்டத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.	நிகழ்வு நிலைக் காப்பாளரின் நிலை சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை.
3. 1956–ஆம் ஆண்டின் உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தின் 9–வது பிரிவு உயில்வழிக் காப்பாளரின் நியமனம் மற்றும் அதிகாரங்களைக் குறிப்பிடுகின்றன.	இச்சட்டத்தின் 11–வது பிரிவு, நிகழ்வு நிலைக் காப்பாளர் முறையையே ஒழித்து விட்டது.
4. உயிலால் நியமனம் செய்யப்பட்ட காப்பாளர், அதை எழுதிய தந்தை அல்லது தாய் இறந்துவிட்ட பிறகு இயற்கைக் காப்பாளருக்கு உரிய அதிகாரங்களைப் பெற்றவராகிறார்.	இவருக்கு இயற்கைக் காப்பாளருக்கு உரிய அதிகாரங்கள் ஏதும் கிடையாது.

5. உயில்வழிக் காப்பாளர் நிலை குறித்து ஏற்கனவே கடந்த காலத்தில் இருந்த மற்றும் தற்பொழுது இருக்கும் அனைத்து சட்டவியல் முறையாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	நிகழ்வு நிலைக் காப்பாளர் முறையானது பண்டைய இந்துச் சட்டத்திற்கே உரித்தாகும். இந்தச் சட்டத்தைத் தவிர, வேறு எந்த சட்டவியல் முறையிலும், நிகழ்வு நிலைக் காப்பாளர் முறை காணப்படவில்லை. அதுவும் தற்பொழுது மேற்படி 11–வது பிரிவின் வாயிலாக இந்துச் சட்ட முறையிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டது.
6. உரிமை வயது அடையாதவர்களின் சொத்தை அவர்களது நலனுக்காக நீதிமன்றத்தின் முன்னனுமதியுடன் உயில்வழிக் காப்பாளர்கள் விற்பனை கொடை, பரிமாற்றம் உள்ளிட்ட பிற பாரதீனங்களைச் செய்யலாம். அதாவது இச்சட்டம் இயற்கைக் காப்பாளர்களுக்கு வழங்கியுள்ள அதிகாரங்களின்படி இவர்கள் செயல்படலாம். எனினும் இவர்கள் உயிலில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டவர்கள்.	நிகழ்வு நிலைக் காப்பாளருக்கு அத்தகு அதிகாரங்கள் ஏதும் கிடையாது.
7. இளவரின் நலனுக்காக உயில்வழிக் காப்பாளர்கள் ஒப்பந்தங்களில் ஈடுபடலாம்.	நிகழ்வு நிலைக் காப்பாளர்கள் இளவருக்காக ஒப்பந்தங்களில் ஈடுபட முடியாது.

4. Court Guardian - Write short notes. (நீதிமன்றக் காப்பாளர்– சிறு குறிப்பு வரைக.)

1890–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டத்தின் (The Guardians and Wards Act, 1890) அடிச்சுவற்றைப் பின்பற்றித்தான், 1956 – ஆம் ஆண்டில் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம் இயற்றப்பட்டது எனில் அது மிகையன்று. எனவே நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளரின் அதிகாரம் மேற்படி 1890 – ஆம் ஆண்டு சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் காப்பாளரை நியமிக்கும் பொழுது உரிமை வயது அடையாதவரின் வயது, பால், விருப்பம், நலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டுதான் செயல்பட வேண்டும்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட காப்பாளர் உரிமை வயதை அடையாதவரின் நலன்களையும், சொத்தையும் காப்பவராக இருக்க வேண்டும்.

உரிமை வயதடையாதவர் உரிமை வயதை அடைந்து விட்டாலோ அல்லது பெண்ணாக இருந்தால் அவளுக்கு திருமணம் ஆகிவிட்டாலோ நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப்பாளரின் பணி முடிந்து விடுகின்றது.

மேற்படி 1956–ன் புதிய சட்டத்தில் பிரிவு 12 மற்றும் 13–ல் நீதிமன்றக் காப்பாளர் பற்றிய விபரங்கள் கூறப்பட்டுள்ளன. (அப்பிரிவுகளை வினா எண். 6–ன் விடையில் காண்போம்.)

5. Who is a de facto guardian? What is his position under the Hindu Minority and Guardianship Act, 1956? (நிகழ்வு நிலைக் காப்பாளர் யார் ? 1956–ஆம் ஆண்டின் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புரிமைச் சட்டத்தின் கீழ் அவரது நிலை என்ன ?)

நிகழ்வு நிலைக் காப்பாளர் – யார் ?

1956–ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்ட பிறகு அவரது நிலை (பிரிவு 11):

அந்நியரான ஒருவர் உரிமை வயது அடையாதவரின் நலன்களைப் பாதுகாத்து வந்தால், அவர் நிகழ்வு நிலைக் காப்பாளராவார். அதாவது இளவரின் சொத்துக்கு மேலாளராகச் செயல்படுவர்.

மேற்படி சட்டம் வந்ததற்குப் பிறகு உரிமை வயது அடையாதவனின் நிகழ்வு நிலைக் காப்பாளர் என்ற அடிப்படையில் எந்த ஒரு நபரும் உரிமை வயது அடையாத நபரின் சொத்தில் புழங்கவோ அல்லது சொத்தை வேறு முறையில் கொடுப்பதற்கோ முடியாது என்று பிரிவு 11 கூறுகின்றது. பழைய சட்டம் அங்கீகரித்திருந்த நிகழ்வு நிலைக் காப்பாளரை, இப்புதிய சட்டம் அங்கீகரிக்க வில்லை. ஆனால், இச்சட்டம் வருவதற்கு முன்னால் நிகழ்வு நிலைக் காப்பாளர் செய்த செயல்களை இச்சட்டம் கட்டுப்படுத்தாது. அது சரியா தவறா என்பது அப்போதிருந்த பழைய சட்டவிதிகளின் துணை கொண்டே தீர்மானிக்கப்படும்.

ஆரம்ப காலத்தில் நேர்மை நெறியின் அடிப்படையில் நிகழ்வு நிலைக் காப்பாளர்களைச் சட்டம் அங்கீகரித்திருந்தாலும், காலப்போக்கில் சில சுய நலமிகளின் பேராசையால், அத்தகைய காப்பாளர் பிரிவே தங்களைத் தாங்களே சீரழித்துக் கொண்டனர். அவர்கள் இளவரின் சொத்தை அபகரிக்கும் எண்ணத்துடன் உறவாடி, தங்களின் நலனைப் பேணிக் காத்துக் கொண்டனர். சில சமயங்களில் உரிமை வயதடையா நபருக்கு "நான்தான் நிகழ்வு நிலைக் காப்பாளர்" எனப் பலர் போட்டியிட்டனர். இதனால் குழப்பங்களும் வழக்குகளும் ஏற்பட்டன. எனவே இப்புதிய சட்டம் நிகழ்வு நிலைக் காப்பாளர் எனும் பிரிவையே ஒழித்து விட்டது.

6 . Explain whether a guardian can be appointed in respect of the undivided interest of a minor Coparcener in a Hindu Joint Family property. (ஒரு இந்து கூட்டுக் குடும்பச் சொத்தில் உரிமை வயது அடையாத பங்குரிமையருக்குள்ள பாகப்பிரிவினையாகாத சொத்தைப் பொறுத்தவரை ஒரு காப்பாளர் நியமனம் செய்யப்படலாமா என்பதை விளக்குக.)

ஒரு இந்துக் கூட்டுக் குடும்பம் என்பது, ஒரு சட்டப்படியான அமைப்பாகும் (legal entity). இது 'கர்த்தா' எனும் கூட்டுக் குடும்ப நிருவாகியின் கீழ் செயல் படுகின்றது. கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமையாளர்களுக்கு சொத்துரிமை உண்டு. இதில் அய்யமில்லை. ஆனால் இச்சொத்துரிமையின் அளவு மாறக் கூடியது. பங்குரிமையாளர்களின் பிறப்பினாலும் இறப்பினாலும் கூட்டுக் குடும்பச் சொத்தின் பாகத்தின் அளவும் மாறுபடும். மேலும் கர்த்தா செய்யும் குடும்ப மேலாண்மையிலும் யாரும் தலையிட முடியாது. எனவே ஒரு பங்குரிமையாளர் இளவராக இருக்கையில், பங்குரிமைச் சொத்தில் அவரது பாகப்பிரிவினையாகாத சொத்தை காக்கும் பொருட்டு நீதிமன்றம் காப்பாளர் யாரையும் நியமிக்க முடியாது.

மேற்படி கூற்று, 1956–ஆம் ஆண்டின் இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தின் **12–வது பிரிவின்** வாயிலாக சட்ட அங்கீகாரம் பெற்றுள்ளது. அதன்படி ஒரு இந்து கூட்டுக் குடும்பச் சொத்தில் பாகப்பிரிவினை யாகாத சொத்துரிமை ஒரு இளவருக்கு இருப்பின், அந்தச் சொத்து கூட்டுக் குடும்பத்தின் கர்த்தாவின் நிருவாகத்தின் கீழ் இருந்தால், அந்தச் சொத்தை பொறுத்த வரையில் யாரும் காப்பாளராக நியமிக்கப்பட முடியாது.

உரிமை வயது அடையாத ஒருவனுக்குக் கூட்டுக் குடும்பத்தில் பாகப் பிரிவினையாகாத சொத்து அல்லாமல் தனிச் சொத்தும் இருக்கலாம். அவனுக்குத் தந்தையோ, தாயோ, உயில் வழிக் காப்பாளரோ தனிச் சொத்தைப் பாதுகாப்பதற்கு இல்லை என்றால், நீதிமன்றம் அத்தனிச் சொத்துக்கு காப்பாளரை நியமிக்கும். அவ்வாறு நியமிக்கையில், அந்நபரின் நல்வாழ்வையே நீதிமன்றம் பிரதானமாகக் கவனித்தல் வேண்டும் என **பிரிவு 13** கூறுகின்றது.

7. Explain the various kinds of guardians under the Hindu Minority and Guardianship Act, 1956 and state the powers of any one of such guardians. (இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம் 1956–ன் கீழ் உள்ள காப்பாளர்களின் பலவகைகளை விளக்கவும். மேலும் அந்த வகையான ஏதாவது ஒரு காப்பாளரின் அதிகாரங்களைக் கூறுக.)

(அல்லது)

Explain the powers of a testamentary guardian and natural

guardian under the Hindu Minority and Guardianship Act, 1956 (1956–ம் ஆண்டு இந்து இளவர் நிலை மற்றும் காப்பாளர் நிலைச் சட்டத்தின் கீழ் உயில் வழிக் காப்பாளர், இயற்கைக் காப்பாளர் ஆகியோரின் அதிகாரங்களை விளக்குக.)

(வினா எண்கள். 2, 3 மற்றும் 5–ற்கு உண்டான விடையை, மேற்கண்ட வினாக்களின் தன்மைக்கேற்ப தொகுத்து எழுதுக.)

8. Adhoc guardian- Write short notes. (குறிப்பிட்ட பணிக்கான காப்பாளர் – சிறு குறிப்பு வரைக)

குறிப்பிட்ட ஒரே ஒரு பணிக்காக மட்டும் இளவர் ஒருவரின் காப்பாளராகச் செயல்படுபவர், 'Adhoc guardian' எனப்படுகிறார். 'இவர் ஒரு இயற்கைக் காப்பாளரும் அல்லர். அதுபோல் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவரும் அல்லர்' என்று, **நீதியரசர் திரு. முகர்ஜீ** அவர்கள் **Sriramulu** வழக்கில் குறிப்பிடுகிறார். இவர் ஒரு அந்நியர். எனவே இவர் சட்டத்தின் பார்வையில் ஒரு காப்பாளர் அல்ல என்றே கூறலாம். மேலும் இவர் காப்பாளர் ஒருவருக்குரிய அதிகாரங்களைக் கொண்டவர் அல்லர்.

அந்நியர் ஒருவர் இளவரின் சொத்துக்கு பாதுகாப்பாக இருந்தால், அவர் நிகழ்வு நிலைக் காப்பாளர் எனப்பட்டார். ஆனால் மேற்படி 'அட்ஹாக் காப்பாளர்' என்பவர், இளவர் சார்ந்த ஒரே ஒரு குறிப்பிட்ட பணிக்காக மட்டும் காப்பாளராக உள்ளார். இவர் இளவரின் சொத்திற்கு மேலாளராக செயல்படார். எனவே முன்பிருந்த இந்துச் சட்டப்படி, 'அட்ஹாக் காப்பாளரின்' நிலையைவிட நிகழ்வு நிலைக் காப்பாளரின் நிலை சற்று உயர்ந்தே காணப்பட்டது. ஆனால் தற்பொழுது, 1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தினால் நிகழ்வு நிலை காப்பாளர் முறை ஒழிக்கப்பட்டுவிட்டது. 'அட்ஹாக் காப்பாளர்' முறையும் தற்பொழுது இல்லை.

-o0o-

பகுதி - II
இந்திய குடும்பச் சட்டம் I
இந்திய குடும்பச் சட்டம் II
ஆகிய இரண்டிற்கும்
பொதுவான பகுதி

- இந்துக் கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும்
  - இந்துக் கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும்
  - கூட்டுக் குடும்பச் சொத்து (அல்லது) பங்குரிமைச் சொத்து மற்றும் தனிச் சொத்து (அல்லது) சுய சம்பாத்தியச் சொத்து
  - பாரம்பரைச் சொத்து
  - தடையற்ற மற்றும் தடையுள்ள மரபுரிமை
  - 1930–ஆம் ஆண்டின் கல்விப் பயன்கள் சட்டம்
  - கர்த்தா
- கூட்டுக் குடும்பத்தில் கடனும் மாற்றக்கமும்
  - மதக் கடமை
  - அவ்வியவகாரிகா கடன்
  - முன்கடன்
- பாகப்பிரிவினை
- சமயம் மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை

1 இந்து கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும் [Hindu Joint Family and Coparcenary]

[i] இந்து கூட்டுக் குடும்பமும், பங்குரிமை அமைப்பும் [Hindu Joint Family and Coparcenary]

1.Examine the historical evolution of the Hindu Joint family. (இந்துக் கூட்டுக் குடும்பத்தின் தோற்ற வரலாற்றை ஆராய்க.)[1]

(அல்லது)

" The joint and undivided family is the normal condition of Hindu society". Mullah. Discuss. ("ஒரு கூட்டு மற்றும் பிரிக்கப் படாத குடும்பம் இந்து சமுதாயத்தில் இயல்பான நிலையது" – முல்லா. விவாதி)

(அல்லது)

" A joint family consists of all persons lineally descended from a common ancestor and includes their wives and un married daughters". Explain the statement with illustrations. ("பொது மூதாதையர் ஒருவரின் நேர்மரபு வழி வந்தவர்கள் அனைவரும் அவர்களின் மனைவிமார்களும், மணமாகாத மகள்களும் உடனமைந்ததே ஒரு கூட்டுக் குடும்பம் ஆகிறது". இக்கூற்றினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Explain the conception and constitution of a joint Hindu family with reference to the law of inheritance.

(அல்லது)

State the essential features of the Hindu joint family and of the Mitakshara Coparcenary and distinguish between them. (இந்து கூட்டுக் குடும்பம், மிதாக்ஷரப் பங்குரிமை ஆகியவற்றின் முக்கிய அம்சங்களைத் தெரிவித்து அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளையும் கூறுக.)

1. இந்த வினா, மூன்றாண்டு சட்டப் படிப்பில் இந்தியக் குடும்பச் சட்டம்-I தேர்வின் டிசம்பர், 2001-ஆம் வினாத்தாளில் முதல் வினாவாக கேட்கப் பட்டுள்ளது என்பதை அறியவும் - ஆசிரியர்.

நினைவுக் குறிப்புகள் [Hints]

இந்து கூட்டுக் குடும்பம்
இந்து கூட்டுக் குடும்பமும், கூட்டுக் குடும்பச் சொத்தும்
இந்து கூட்டுக் குடும்பமும், இந்து பங்குரிமை அமைப்பும்
மிதாக்ஷரா சட்டம் கூறும் பங்குரிமை
பங்குரிமையர்களைக் காட்டும் வரைபடம்
பங்குரிமைக்குள் பங்குரிமை - வரைபட விளக்கம்

இந்து கூட்டுக் குடும்பம் – தோற்றம் :

இந்து ஒருவரின் ஆரம்பமே கூட்டுக் குடும்பத்திலிருந்துதான் என்று சொன்னால் அது மிகையல்ல. இந்துக்களைப் பொறுத்தவரை ஒரு குடும்பந்தான் சமுதாயத்தின் அலகே (Unit of society) தவிர, தனிமனிதன் அல்ல. இரத்த பந்தத்தினாலும், பாசத்தினாலும் பிணைக்கப்பட்டு இயற்கையாக எழுவதே கூட்டுக் குடும்பமாகும். இன்னும் நுணுகிக் கூறுவதானால், பொது மூதாதையர் ஒருவரின் நேர்மரபு வழி வந்தவர்கள் அனைவரும், அவர்களின் மனைவிமார்களும், மணமாகாத மகள்களும் உடனமைந்ததே ஒரு கூட்டுக் குடும்பம் ஆகிறது. மேற்படியார்கள் வாழ்தல் (live), தொழுதல் (worship) மற்றும் சமைத்தலை (mess) ஒரே இடத்தில் ஒற்றுமையாக செய்து கொண்டு ஒரு குடும்பமாக இருத்த லாகும். ஒரு கூட்டுக் குடும்பத்தில் உள்ள மணமாகாத மகள், திருமணமானவுடன் தனது கணவனது குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினராகிறாள்.

இந்து கூட்டுக் குடும்பமும், கூட்டுக் குடும்பச் சொத்தும்:

கூட்டுக் குடும்பம் எனில், அதற்கு கூட்டுக் குடும்பச் சொத்தொன்று (joint family property) இருக்க வேண்டிய அவசியமில்லை. கூட்டுக் குடும்பம் இரத்தத் தொடர்பால் உண்டாவதே தவிர, கூட்டுச் சொத்தால் அல்ல. இந்து ஒருவன், கூட்டுக் குடும்ப உறுப்பினர் எனும் அந்தஸ்த்தை பிறப்பினாலேயே அடைந்து விடுகிறான். ஆகவே ஒரு கூட்டுக் குடும்பத்திற்கு சொத்தொன்று இருந்தால், அது ஒரு அதிகப்படியான விஷயமே தவிர, வேறொன்றுமில்லை.

இந்து கூட்டுக் குடும்பமும், இந்து பங்குரிமை அமைப்பும் (Hindu Joint family and Hindu Coparcenary):

ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தின் எல்லை பரந்தது. ஆனால் பங்குரிமை அமைப்பு (corparcenary) ஒன்றின் எல்லை, அதனைக் காட்டிலும் குறுகியது. ஒரு இந்து கூட்டுக் குடும்பத்திற்கு சொத்தென்று ஒன்று இருந்து, அது பிரிவினையாகாமல் இருக்கும்பொழுது, அதில் பிறப்பினடிப்படையில் பிரிவினை

கோரும் உரிமைக்கே, 'பங்குரிமை' (coparcenary) என்று பெயர். மேற்படி கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமை பெறுபவர் 'பங்குரிமையர்' (coparcenar) ஆகிறார். பங்குரிமையராக ஆண் மக்களே வருவர். ஆனால் ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்த வரையில், அக்குடும்பத்தின் அனைத்து ஆண்-பெண் மக்களும், அதன் உறுப்பினர்களாக கருதப்படுவர்.

மிதாக்ஷரா சட்டம் கூறும் பங்குரிமை (Coparcenary under the Mitakshara Law) :

ஒரு பொது மூதாதையரிடமிருந்து மூன்று தலைமுறை வரை உள்ளவர்கள் (மொத்தம் 4 தலைமுறையினர்) பங்குரிமையர் ஆவார்கள். தந்தை, மகன், பேரன், கொள்ளுப் பேரன் மட்டுமே கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமை பெற முடியும். மதச் சடங்குகளை இம்மூன்று தலைமுறையினர் மட்டுமே செய்ய முடியுமாதலால், இந்த வரையறை பங்குரிமைக்கும் உரியதாயிற்று. இப் பங்குரிமையில் பெண்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஆண்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. இருப்பினும் பாகப் பிரிவினையின்போது இந்து கூட்டுக் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும் சொத்து தர தடை இல்லை.

பங்குரிமையர்களைக் காட்டும் வரைபடம்:

ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தை நிருவகிக்கும் மூத்த ஆண் மகன், அக் குடும்பத்தின் 'கர்த்தாவாகிறார்' (Karta). அக்குடும்பத்தின் கூட்டுச் சொத்தில் பங்கு கோர உரிமையுள்ள ஏனைய ஆண் மக்கள் அனைவரும் 'பங்குரிமையர்கள்' (Coparcenars) ஆவார்கள். இப்பங்குரிமை அமைப்பானது கூட்டுக் குடும்பத்தின் முதல் தலைமுறையையும் சேர்த்து 4 தலைமுறை உள்ள ஆண் மக்களைத்தாம் குறிக்கும். இதனை பின்வரும் ஒரு எளிய வரைபடம் விளக்குகிறது.



எனினும், மேற்படி வரைபடத்தில் முதல் தலைமுறை இடத்தைப் பெற்றுள்ள கொள்ளுப் பாட்டன் (A) இறந்துவிட்டால், அதற்கெடுத்து, இரண்டாவது தலைமுறையில் உள்ள 'பாட்டன்' (B) முதல் தலைமுறை ஸ்தானத்தில் வந்து விடுவார். ஆகவே, 5வது தலைமுறையாகவுள்ள 'மகனின் மகன்' (E), 4–வது தலைமுறை இடத்தைப் பெற்று அவரும் ஒரு பங்குரிமையர் ஆகிவிடுவார். சுருங்கக் கூறின், உயிரோடு இருப்பவர்களில் அடுத்தடுத்து உள்ள நான்கு தலைமுறையினர் பங்குரிமையர்கள் ஆகின்றனர்.

பங்குரிமைக்குள் பங்குரிமை - வரைபட விளக்கம் (Coparcenary within a Coparcenary):

கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமையுடையவர்கள், அச்சொத்தை தங்களுக்குள் அடைய உரிமை பெற்றவர்கள். ஆனால் அப்பங்குரிமையர்கள் எவரேனும் ஒருவருக்கு தனிப்பட்ட சொத்து (Self-acquired propery) ஏதேனும் இருக்குமானால், அது கூட்டுக் குடும்பத்தின் பொதுச் சொத்துடன் சேராது. அத்தனிச் சொத்தானது, அதற்கு உரிமையுடையவரின் வாரிசுகளுக்கே போய்ச் சேரும். இவ்வாரிசானவர் தனது மூதாதையரின் (கொள்ளுப் பாட்டன்) சொத்தில் பங்கு பெறுவதோடு மட்டுமல்லாமல் தனது பாட்டனின் தனிப்பட்ட சொத்திலும் பங்கு பெறுவார். இவ்விதமாக ஒரு பங்குரிமையர் இரண்டு விதங்களில் சொத்தை அடைதலே "பங்குரிமைக்குள் பங்குரிமை" எனப்படுகின்றது. இதனை பின்வரும் வரைபடம் எளிதாக விளக்கும்.



மேற்படி வரைபடத்தில் உள்ள A-வின் (கொள்ளுப் பாட்டன்) சொத்தை 4–வது தலைமுறையில் உள்ள G எனும் பங்குரிமையர் (மகன்), கூட்டுக் குடும்பச்

சொத்தின் பங்குரிமையர்களில் ஒருவர் என்ற முறையில், தனக்குரிய பங்கைப் பெறுவார். அதே சமயத்தில் D எனும் பங்குரிமையர் (பாட்டன்) தேடிய தனிச் சொத்திலும், G எனும் பங்குரிமையர் பங்கு பெறுவார். இவ்விதமாக, A-வின் சொத்திலும் D-யின் தனிச் சொத்திலும் G பங்கு பெறுகிறார். இது ஒரு சிறிய பங்குரிமையாக, அதாவது பங்குரிமைக்குள் பங்குரிமையாக கருதப்படுகின்றது.

[ii] கூட்டுக் குடும்பச் சொத்து (அல்லது) பங்குரிமைச் சொத்து மற்றும் தனிச் சொத்து (அல்லது) சுய சம்பாத்தியச் சொத்து [Joint Family Property (or) Coparcenary Property and Separate Property (or) Self-acquired Property]

2. What do you understand by the terms 'Corparcenary property' and 'Separate property'? What are their incidents? (பங்குரிமைச் சொத்து மற்றும் 'தனிச் சொத்து' என்ற சொற்களால் நீர் அறிவது என்ன? அவற்றின் சிறப்புப் பண்புகள் யாவை?)

நினைவுக் குறிப்புகள் [Hints]

சொத்துக்கள் - இரண்டு வகை
கூட்டுக் குடும்பச் சொத்து அல்லது பங்குரிமைச் சொத்து
பங்குரிமைச் (கூட்டுக் குடும்பச்) சொத்தின் சிறப்புப் பண்புகள்
தனிச் சொத்து (அல்லது) சுய சம்பாத்தியச் சொத்தின் சிறப்புப் பண்புகள்

சொத்துக்கள் - இரண்டு வகை :

இந்துச் சட்டப்படி சொத்தானது இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை (1) கூட்டுக் குடும்பச் சொத்து (Joint family property) அல்லது பங்குரிமைச் சொத்து (Coparcenary property); (2) தனிச் சொத்து (Separate property) அல்லது சுய சம்பாத்தியச் சொத்து (Self acquired property).

கூட்டுக் குடும்பச் சொத்து அல்லது பங்குரிமைச் சொத்து (Coparcenary Property) :

மேற்படி பங்குரிமைச் சொத்தானது அவை எவ்வகையில் பெறப் படுகின்றது என்பதைப் பொறுத்து மேலும் இரண்டு வகையாகப் பிரிகின்றது. அவை (a) பரம்பரைச் சொத்து (Ancestral property); (b) பரம்பரை வழி வராத பங்குரிமையரின் தனிச் சொத்து (Separate property of coparceners).

பரம்பரைச் சொத்தின் வருமானத்திலிருந்து, அல்லது அதை விற்ற இலாபத்திலிருந்து, அல்லது அதன் வழியாக வரும் சொத்து யாவும் கூட்டுக் குடும்பத்தையே சாரும். அதாவது கூட்டுக் குடும்ப உறுப்பினர்களால் பரம்பரைச் சொத்தின் உதவியைக் கொண்டு சேர்க்கப்படும் சொத்து, கூட்டுக் குடும்பச் சொத்து அல்லது பங்குரிமைச் சொத்து எனப்படும்.

கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது கூட்டு முயற்சியால், பரம்பரைச் சொத்தின் உதவியின்றி சேர்க்கும் சொத்தும் கூட்டுக் குடும்பச் சொத்தாகவே கருதப்படும். ஆனால் அந்த கூட்டு முயற்சியில் சிலர் மட்டுமே சேர்ந்து சிலர் சேராது இருந்தால் அவ்வாறு கருத முடியாது. மேலும், கூட்டுக் குடும்பச் சொத்தாகக் கருதும் நோக்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு இருக்க வேண்டும்.

பங்குரிமைச் (கூட்டுக் குடும்பச்) சொத்தின் சிறப்புப் பண்புகள் (Incidents of Coparcenary Property):

(i) பங்குரிமைச் சொத்தில் ஒவ்வொரு பங்குரிமையருக்கும் கூட்டு அனுபவ பாத்தியதையும் (Joint possession), அக்கறையும் (Interest) உண்டு; (ii) இச்சொத்து எஞ்சுநர் உரிமையின் (Survivorship) அடிப்படையில் மற்றவர்களை சென்றடைகிறது. அதாவது ஒரு பங்குரிமையர் இறந்துவிட்டால்; அவரது பங்குச் சொத்தானது மற்ற எஞ்சியிருக்கும் பங்குரிமையர்களுக்கு பிரித்தளிக்கப்படும். மாறாக, இறந்தவரின் வாரிசுகளுக்கு பிரித்தளிக்கப்பட மாட்டாது (not by succession). (ஆனால் இது பின்னர் 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டப்படி மாற்றப்பட்டுவிட்டது); (iii) பங்குரிமைச் சொத்தில், ஒரு ஆண் மகன் பிறப்பினாலேயே பங்குக்குரியவனாகின்றான்; (iv) ஒவ்வொரு பங்குரிமையரும் சொத்தில் பாகப்பிரிவினை கோர உரிமை பெற்றுள்ளார்; (v) கூட்டுக் குடும்ப சொத்தை நிருவகிப்பவர் 'கர்த்தா' எனப்படுவார்.

தனிச் தொத்து அல்லது சுய சம்பாத்திய சொத்தின் சிறப்பு பண்புகள் (Incidents of Separate or Self-acquired property):

(i) இந்து ஒருவன் தானே சுயமாக சம்பாதித்த சொத்து (பரம்பரை சொத்தாக அல்லது கூட்டு முயற்சியால் சம்பாதித்த சொத்தாக இல்லாதது), தனிச் சொத்து எனப்படுகின்றது; (ii) இது முற்றிலும் அவனுக்கே உரித்ததாகும். இதில் மகனோ அல்லது பேரனோ அல்லது கொள்ளுப் பேரனோ தமக்கு பிறப்பினால் சொத்தில் பங்குண்டு எனக் கோரிட முடியாது; (iii) இச்சொத்தை அவன், தாம் விரும்பும் யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம் அல்லது உயில் மூலம் கொடுக்கலாம்; (iv) இச்சொத்தில் பாகப்பிரிவினை கோர முடியாது; (v) தனிச் சொத்தின் உரிமையாளர் உயில் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டால்,

அச்சொத்தானது வாரிசுரிமையின் அடிப்படையில் இறந்தவரின் வாரிசுதாரர்களை சென்றடையும்; எஞ்சுநர் உரிமையின் அடிப்படையில் சொத்து சென்றடைதல் எனும் பேச்சுக்கே இங்கு இடமில்லை.

3. Distinguish between joint family and coparcenary. What are the rights of a coparcenar in the coparcenary property? (கூட்டுக் குடும்பம், பங்குரிமை இவற்றில் ஒன்றுக்கொன்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளைக் கூறுக. பங்குரிமைச் சொத்தில் பங்குரிமையர் ஒருவருக்குள்ள உரிமைகள் யாவை?)

கூட்டுக் குடும்பம், பங்குரிமை - வேறுபாடுகள் :

ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தின் எல்லை பரந்தது. ஆனால் பங்குரிமை அமைப்பு (Coparcenary) ஒன்றின் எல்லை, அதனைக் காட்டிலும் குறுகியது. ஒரு இந்து கூட்டுக் குடும்பத்திற்கு சொத்தொன்று ஒன்று இருந்து, அது பிரிவினையாகாமல் இருக்கும்பொழுது, அதில் பிறப்பினடிப்படையில் பிரிவினை கோரும் உரிமைக்கே பங்குரிமை (Coparcenary) என்று பெயர். மேற்படி கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமை பெறுபவர் 'பங்குரிமையர்' (Coparcenar) ஆகிறார். பங்குரிமையராக ஆண் மக்களே வருவர். ஆனால் ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்தவரையில் அக்குடும்பத்தின் அனைத்து ஆண், பெண் மக்களும் அதன் உறுப்பினர்களாக கருதப்படுவர். (மேலும் விளக்கமாக அறிந்து கொள்ள வேண்டுமெனில் வினா எண். 1–அய்க் காண்க.)

பங்குரிமைச் சொத்தில் பங்குரிமையர் ஒருவருக்குள்ள உரிமைகள் (Rights of a Coparcenar):

1. கூட்டுக் குடும்பத்தில் பிறக்கும் பிறப்பு ஒன்றினால் மட்டுமே ஓர் ஆண் மகனுக்குப் பங்குரிமைச் சொத்தில் உரிமை ஏற்பட்டுவிடும். தந்தைக்குப் பின்னால்தான் மகன் என்ற நியதி இதில் கிடையாது. ஆனால் ஒருவன் தனது உயிருடன் உள்ள மூதாதையரிடமிருந்து மூன்று தலைமுறை தள்ளிப் போயிருந்தால் (அதாவது மொத்தம் நான்கு தலைமுறைக்குள் இருக்க வேண்டும்), அப்போது பங்குரிமையில் உரிமை கொண்டாட முடியாது.

2. ஒரு பங்குரிமையர் ஆண் குழந்தை இல்லாமல் இறந்துவிட்டால், சொத்தில் அவனுக்கு இருக்கும் உரிமை அவனுடைய வாரிசுகளுக்குச் செல்லாது. மாறாக எஞ்சுநர் உரிமைப்படி (Survivorship) மற்ற பங்குரிமையர்கள் அடைவார்கள். (இந்நிலை 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிட்டது)

3. ஒவ்வொரு பங்குரிமையருக்கும் பாகப்பிரிவினை கோரும் உரிமை உண்டு.

4. கூட்டுக் குடும்பத்தில் எல்லாப் பங்குரிமையரும் எல்லாச் சொத்தையும் கூட்டாக அனுபவிக்கலாம் (Joint enjoyment). ஒவ்வொரு பங்குரிமையரின் மனைவியும், குழந்தைகளும் கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்து பராமரிக்கப்பட வேண்டும். இன்னாருக்கு இவ்வளவு பங்கு என்ற பாகுபாடு இல்லாததால் அத்தனை பேரும் சமமாகவே பராமரிக்கப்படுவர்.

5. ஒரு பங்குரிமையர் சட்டத்திற்குப் புறம்பான, முறையற்ற, சொத்துக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய செயலைச் செய்வாரானால், மற்றப் பங்குரிமையர்கள் நீதிமன்றத்தை அணுகி அதைத் தடுக்கலாம். ஆனால் பல பங்குரிமையர்கள் இருக்கும் குடும்பத்தில் ஒருவர் செய்யும் அதிகாரபூர்வமற்ற செயலைத் தடுக்க இன்னொருவர் தன் அளவில் மட்டும் வழக்குப் போட முடியாது. மற்றவர்களுக் காகவும் சேர்ந்துதான் வழக்குப் போட முடியும்.

6. கூட்டுக் குடும்பத்தின் கர்த்தாவோ (நிருவாகியோ), தந்தையோ, வேறு பங்குரிமையரோ அதிகாரபூர்வமற்ற சொத்து மாற்றாக்கம் (Transfer of Property) செய்தால், பிற பங்குரிமையர் நீதிமன்றத்தை அணுகலாம். எனினும் எல்லோரும் இசைந்து மாற்றாக்கம் செய்யலாம்.

7. ஒவ்வொரு பங்குரிமையரும் தன் முயற்சியால் சொத்து சேர்த்துக் தனியாக வைத்துக் கொள்ளலாம். கிளை வழி உரிமை இறக்கத்தின் (Collateral Succession) மூலம் ஒருவனுக்குக் கிடைக்கும் சொத்து அவனுடைய தனிச் சொத்தாகும். தனிச் சொத்தில் அவனுக்கு இருக்கும் உரிமை முழு உரிமையாகும்.

[iii] பரம்பரைச் சொத்து [Ancestral Property]

4. Ancestral property – Write short notes. (பரம்பரைச் சொத்து – சிறு குறிப்பு வரைக.)

பரம்பரைச் சொத்து எனப்படுவது தந்தைவழி கொள்ளுப்பாட்டன், பாட்டன், தந்தை ஆகியவர்களிடமிருந்து முறையே மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆகிய வழித்தோன்றல்கள் பெறுவதாகும். இது தவிர, வேறு உறவு முறைகளின் வாயிலாக பெறப்படும் சொத்துக்கள் பரம்பரைச் சொத்துக்களாகாது. மாறாக பெறுபவரின் தனிச் சொத்தாகிவிடும்.

இந்துச் சட்டத்தில் **மிதாக்ஷரா முறைப்படி (Mitakshara School)** பிறப்பினாலேயே மகன்கள், பேரன்கள், கொள்ளுப் பேரன்கள் ஆகியோர் பரம்பரைச் சொத்தில் உரிமையுடையவர்களாகிவிடுகின்றார். அதாவது பிறப்பினாலேயே உரிமை உண்டாகி விடுகிறது. **உதாரணமாக,** A என்பவர், தனது பாட்டனிடமிருந்து, தந்தையிடமிருந்தோ சொத்தைப் பெற்றால், அது தனக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளைப் பொறுத்தமட்டில் பரம்பரைச் சொத்தாகும். ஒருவேளை A-க்கு ஆண் குழந்தைகள் ஏதும் பிறக்கவில்லையென்றால், A-யின்

மற்ற உறவினர்களுக்கு அச்சொத்தில் A-யின் வாழ்நாளில் எவ்வித உரிமையும் கிடையாது. (ஆண் குழந்தைகள் இருந்திருப்பின், அவர்கள் A-யின் வாழ் நாளிலேயே, மேற்படி சொத்தில் பாகப்பிரிவினை கோர உரிமையுண்டு). ஆனால் தாயபாக முறையில் (Dayabhaga School) மேற்கண்டவாறு கிடையாது.

தாய்வழிப் பாட்டனின் சொத்து:

இச்சொத்து குறித்து நீதிமன்றங்களிடையே பல்வேறு குழப்பமான முடிவுகள் நிலவி வந்தன. ஆனால், **Muhammed Hussain Khan v. Babu Kishva Nandhan Sahai**[1] என்ற வழக்கில் தாய்வழிப் பாட்டன் மூலம் கிடைக்கும் சொத்து, ஒருவனின் தனிச் சொத்தாகும். அது பரம்பரைச் சொத்தாகாது. அச்சொத்தில் மகனுக்கோ, பேரனுக்கோ, கொள்ளுப் பேரனுக்கோ உரிமை இல்லையெனப் பிரிவி கவுன்சில் தீர்ப்புக் கூறியது.

தந்தைவழிப் பாட்டனின் சொத்து:

மூன்று தலைமுறைக்கு அப்பால் உள்ள தந்தைவழிப் பாட்டன் மூலம் வரும் சொத்து ஒருவனின் தனிச் சொத்தேயாகும்.

5. Discuss the incidents of self-acquired property and ancestral property and bring out the distinction between the two. (தானே முயன்று பெற்ற சொத்து, மூதாதையர் வழி வந்த சொத்து இவைகளின் தனிச் சிறப்பு பண்புகளைக் கூர்ந்து ஆராய்ந்து அவைகளிடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாக்குக.)

(வினா எண்கள். 2 மற்றும் 4–ன் விடைகளைத் தொடர்படுத்தி எழுதுக)

[iv] தடையற்ற மற்றும் தடையுள்ள மரபுரிமை [Unobstructed and Obstructed Heritage]

6. Write short notes on :

a) Unobstructed heritage

b) Obstructed heritage

சிறு குறிப்பு வரைக

அ) தடையற்ற மரபுரிமை

ஆ) தடையுள்ள மரபுரிமை

(a) தடையற்ற மரபுரிமை (Unobstructed heritage):

மிதாக்ஷர முறையில் கூட்டுக் குடும்பத்தில் பிறப்பு ஒன்றினாலேயே

1. (1937) 64 I.A. 250 : (1937) All. 655

ஒருவன் சொத்தில் பங்கு பெறும் உரிமைக்கு **தடையற்ற மரபு வழி இறங்குரிமை** என்று பெயர். ஏனெனில் இதில் சொத்துரிமையைப் பெற கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையருக்கு எத்தடையும் கிடையாது. பரம்பரைச் சொத்தை (ancestral property) இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதில் பங்குரிமையைர் ஒருவர் உரிமை பெற அவருக்கு எவ்விதத் தடையுமில்லை. பின்வரும் வழக்கிலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது.

Masit Ullah v. Damodar Prasad[1] – இவ்வழக்கில் ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஒரு பங்காளி தந்தையிடமிருந்தோ, தந்தையின் தந்தையிடமிருந்தோ அல்லது தந்தையின் தந்தையின் தந்தையிடமிருந்தோ சொத்தை அடைந்தால், அச்சொத்து மூதாதையர் சொத்து எனப்படும்; இதுவே தடையற்ற மரபு வழி இறக்குரிமையில் பெறும் சொத்தாகும் என்று கூறப்பட்டது.

கூட்டுக் குடும்பத்தில் பிறந்த ஒருவருக்கு அவருடைய தந்தை உயிரோடிருந்தாலும் கூட்டுக் குடும்பச் சொத்தில் பாகப்பிரிவினை கோரும் உரிமை பெற்றுள்ளார். பரம்பரைச் சொத்தின் உதவியால் அடைந்த சொத்து ஆகியவை தடையற்ற மரபு வழி இறங்குரிமையில் அடங்கும். தடையற்ற மரபு வழிச் சொத்து எஞ்சுநர் உரிமைப்படி செல்லும். தந்தையினுடைய தனிப்பட்ட சொத்து அல்லது அவரது சுய சும்பாத்தியச் சொத்து அவருடைய மகனுக்கு எஞ்சுநர் உரிமைப்படி செல்லுமா அல்லது மரபு முறை இறங்குரிமைப்படி செல்லுமா என்ற வினாவிற்கு நீதிமன்றங்கள் மாறுபட்ட தீர்ப்பை வழங்கி உள்ளன.

(b) தடையுள்ள மரபுரிமை (Obstructed heritage):

மரபுரிமை ஏற்படுவதற்கு ஏதேனும் தடைகள் இருந்தால், அது தடையுள்ள மரபுரிமை எனப்படும். பிறப்பினால் அல்லாமல் சொத்துக்கு உரியவரான நபர் இறந்த பின் மற்றொரு நபர் அடையும் சொத்து, தடையுள்ள மரபு வழிச் சொத்து எனப்படும். இதில் ஒரு நபர் உயிரோடு இருப்பது, மற்றொரு நபர் சொத்தை அடையத் தடையாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக ஒரு நபர் குழந்தை இல்லாமல் இருந்தால், அவர் இறந்த பிறகே அவருடைய சொத்து பிற வாரிசுகளுக்குச் செல்வது தடையுள்ள மரபு வழிச் சொத்தாகும். தனிப்பட்ட சொத்தையும் (separate property) தடையுள்ள மரபுரிமைச் சொத்து எனக் கூறலாம்.

Sivaramakrishnan v. Kaveri Ammal[2] – இவ்வழக்கில் தனிப் பட்ட சொத்து தடையுள்ள மரபுரிமைச் சொத்தாகும் என்றும், தனிப்பட்ட சொத்தின் மீதான உரிமை குறித்து பின்வரும் விளக்கங்களும் கூறப்பட்டது.

1. தனிப்பட்ட சொத்தின் மீதான உரிமை, அந்தச் சொத்தின் உரிமை யாளருக்கு மட்டுமே உண்டு. அவர் மகனுக்கு கூட அச்சொத்தில் உரிமை இல்லை.

1. (1926) 53 I.A. 204
2. I.L.R. (1956) Mad. 649

2. கூட்டுக்குட்டு சொத்தின் உரிமையாளர் தன் விருப்பப்படி அச்சொத்தை பயன் படுத்தலாம். 3. கூட்டுக்குட்டு சொத்தில் வாரிசுரிமையாளர் எற்படுமேயன்றி, எஞ்சுநர் உரிமை எற்படாது.

[V] 1930-ன் இந்து கல்வியில் பயன்கள் சட்டம் [Hindu Gains of Learning Act, 1930]

7. In what different ways can a Hindu acquire seprate property? What are the main feature of the Hindu Gains of Learing Act, 1930? (ஒரு இந்து தனிச் சொத்தை எந்தெந்த வழிகளில் அடையலாம்? 1930-ஆம் ஆண்டின் இந்து கல்விப் பயன்கள் சட்டத்தின் முக்கிய கூறுகள் யாவை?)

(அல்லது)

Hindu Gains of Learning Act, 1930 - Write short notes. (இந்து கல்விப் பயன்கள் சட்டம், 1930 – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

தனிச் சொத்து குறித்து யாஞ்ஞவல்கியம் கூறுவதாவது
ஒரு இந்துவுக்கு தனிச் சொத்து கிடைக்கும் பல்வேறு வழிகள்
இந்து கல்விப் பயன்கள் சட்டம், 1930

தனிச் சொத்து குறித்து யாஞ்ஞவல்கியம் கூறுவதாவது:

கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமையராக இருக்கும் ஒருவன் தனியாகவும் சொத்து வைத்துக் கொள்ள முடியும். "தந்தையின் நிலச் சொத்துக்குக் குந்தகம் ஏற்படாத வகையில், நண்பனிடமிருந்தோ, திருமணத்தின்போது கொடையாகவோ ஒருவன் பெறும் சொத்து மற்ற வாரிசுரிமை உடையவர்களுக்கு உரியதன்று; அது அவனின் தனிச் சொத்து", என்று யாஞ்ஞவல்கியம் கூறுகிறது. தனிச் சொத்தை ஒருவன் தன் விருப்பம் போல மற்றவர்களுக்கு கொடுக்கலாம்; பயன்படுத்தலாம் அதில் பிற பங்குரிமையருக்கு உரிமை கிடையாது.

ஒரு இந்துவுக்கு தனிச் சொத்து கிடைக்கும் பல்வேறு வழிகள்:

1. பிறப்பால் கிடைக்கும் சொத்து: தந்தை வழியில் 3 தலைமுறைக்கு அப்பாற்பட்டவரிடமிருந்து ஒருவருக்குக் கிடைக்கும் சொத்து, தனிச் சொத்தாகும்.

2. தடையுள்ள மரபுரிமையால் கிடைக்கும் சொத்து: ஒருவருக்குச் அவரது பிறப்பினால் சொத்து கிடைக்காமல்; ஆண் வாரிசின்றி இறந்து போகும்

உறவினர்களின் சொத்து அல்லது தாய் வழியில் வரும் சொத்து, அவரது தனிச் சொத்தாகும்.

3. கொடை வழி பெறும் சொத்து : ஒருவருக்குக் தனது தந்தையிட மிருந்து அல்லது அவர் வழி உறவினரிடமிருந்து அல்லது பிற உறவினர்களிடமிருந்து கொடையாகக் கிடைக்கும் சொத்தும், தனிச் சொத்தாகும். திருமணத்தின் பொழுது பெண் வீட்டாரிடமிருந்தும், ஏனைய நண்பர்களிடமிருந்தும் கிடைக்கும் அன்பளிப்பும் தனிச் சொத்தேயாகும்.

4. இழந்த சொத்தை மீட்டல் : கூட்டுக் குடும்பத்திற்குச் சொந்தமான சொத்து, சில சமயங்களில் ஏதேனும் ஒரு வழியில், அக்கூட்டுக் குடும்பத்தின் உடைமையிலிருந்து மற்றொருவருக்கு மாறிச் சென்றிருக்கலாம்.அப்படிப்பட்ட சூழலில் பங்குரிமையுடைய ஒருவன் மற்ற பங்குரிமையரின் துணையின்றி இழந்த சொத்தை மீட்டால், தனது இச்செயலுக்காக அச்சொத்தில் கால் 1/4 பகுதியை எடுத்துக் கொள்ளலாம். இவ்விதம் கிடைத்த சொத்தும், அவரின் தனிச் சொத்தேயாகும்.

5. கூட்டுக் குடும்பச் சொத்துக்குப் பாதகம் இன்றிச் சொத்துக் சேர்த்தல்: கூட்டுக் குடும்பச் சொத்திற்கு எந்த வகையிலும் பாதகம் ஏற்படாமலும், கூட்டுக் குடும்பச் சொத்தின் உதவி இல்லாமலும் ஒருவர் சேர்க்கும் சொத்தும், அவரது தனிச் சொத்தாகும். பிறரிடம் கடன் பெற்று வாங்கும் சொத்து, விபத்தில் இறந்ததினால் கிடைக்கும் இழப்பீட்டுத் தொகை, ஈட்டுறுதிப் பணம், வருங்காலச் சேமநல நிதி ஆகியவை இதில் அடங்கும்.

6. தனிச் சொத்தின் வருமானம் : ஒருவன் தனது வருமானத்தில் இருந்து வாங்கிய தனிப்பட்ட சொத்தில் இருந்து கிடைக்கும் வருமானமும் (வீட்டு வாடகை போன்று), அவரின் தனிச் சொத்தே ஆகும்.

7. அரசு அளிக்கும் கொடை : கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அரசு ஏதேனும் சொத்தை கொடையாக அளித்தால், அது அவரின் தனிச் சொத்தாகும்.

8. பாகப்பிரிவினை மூலம் : பாகப்பிரிவினையால் கிடைக்கும் சொத்தும் தனிப்பட்ட சொத்தாகும்.

9. அறிவால் பெரும் சொத்து (Hindu Gains of Learning): ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையரில் ஒருவர், கூட்டுக் குடும்பச் சொத்தில் இருந்து செலவழிக்கப்பட்டு, அதன் பயனால் அவர் ஏதேனும் தனி வேலை பெற்று, அதன் மூலம் பெறும் வருமானமோ அல்லது வேறு வகையில் அவருக்கு வரும் வருமானமோ, கூட்டுக் குடும்பத்தையே சாரும் என்பது மிதாக்ஷரா முறையாகும். இது குறித்து அடுத்து வரும் இரு வழக்குகளைக் கவனிப்போமா?

Methram v. Rewachand[1] - இவ்வழக்கில் ஒருவர் தனது கூட்டுக் குடும்பத்தின் மூலம் சாதாரணக் கல்வியே பெற்றார். பின் அவர் வியாபாரியாகி, தரகராகிப் பெரும் பொருள் சேர்த்தார். அது அவருக்கு கூட்டுக் குடும்பம் தந்த கல்வியின் பயனால் கிடைத்த சொத்து அல்ல; அவர் பெற்ற கல்வியும் அவ்வளவு சிறப்பானது அன்று; தனது மனத்திட்பத்தாலும், திறமையாலும், தனி முயற்சியாலும் அச்சொத்தினைச் சேர்த்தார். எனவே இது அவரின் தனிப்பட்ட சொத்தேயாகும். என பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது. அடுத்த வழக்கில் இதற்கு முரணாக தீர்ப்பளிக்கப்பட்டது.

Gokul chand v. Hukum Chand-Nath Mal[2] - இவ்வழக்கில் ஒருவர் I.C.S. அதிகாரி. அவர் கூட்டுக் குடும்பச் சொத்தில் இருந்து செலவழிக்கப் பட்டு இலண்டன் சென்று படித்தவர். அப்படிப்பினால் அவர் பெற்ற வருமானம் தனிச் சொத்தா அல்லது கூட்டுக் குடும்பச் சொத்தா என்ற பிரச்சனை எழுந்த போது, அவ்வருமானம் கூட்டுக் குடும்பதையே சாரும் எனப் பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது.

இந்து கல்விப் பயன்கள் சட்டம், 1930 :

மேற்கண்ட முரண்பட்ட நிலைகளைக் களைய, **1930–ஆம் ஆண்டில் இந்து கல்விப் பயன்கள் சட்டம் (Hindu Gains of Learning Act, 1930)** எனும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின்படி ஒருவன் (a) குடும்பத்தின் முழுச் செலவிலிருந்தோ அல்லது அதன் ஒரு பகுதிச் செலவிலிருந்தோ கல்வி பெற்றான் என்பதற்காகவோ; அல்லது (b) அவனும் அவனுடைய குடும்பமும், கூட்டுக் குடும்பத்தால் அவன் படிக்கும் காலத்தில் பராமரிக்கப்பட்டனர் என்பதற்காகவோ, அவனுடைய சொத்து கூட்டுக் குடும்பச் சொத்தாக இருக்க வேண்டியதில்லை, என்று மேற்படி சட்டம் குழப்பங்களை களைந்தது.

கல்வியினால், அது ஆரம்ப நிலையாகவோ, தொழில் நுட்பம் சார்ந்த தாகவோ அல்லது அறிவியல் தொடர்பானதாகவோ இருந்தாலும் அல்லது அக்கல்வி சிறப்பானதொன்றாகவோ அல்லது பொதுவானதாகவோ இருந்தாலும் (education wheather elementary, technical or scientific, special or general), அதன் பயனால் பெறப்படும் சொத்துக்கள் அனைத்தும் கல்வியால் பெற்ற பயனாகவே **(Gains of leanring)** கருதப்படும்.

[vi] கர்த்தா [Karta]

8. Examine the powers and functions of a Karta in a Hindu

1. (1918) 45 I.A. 41, 45.
2. (1921) 48 I.A. 162.

Family. Can a female be its Karta? (ஓர் இந்து கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா ஒருவரின் அதிகாரங்களையும் பணிகளையும் ஆராய்க. அதன் கர்த்தாவாக ஒரு பெண்மணி இருக்க இயலுமா?)

(அல்லது)

What are the reasons for which a Karta can alienate the joint family property? When father is the Karta, what are his Special Powers? (எந்தெந்த காரணங்களுக்காக கூட்டு குடும்பச் சொத்தினை கர்த்தாவானவர் உரிமை மாற்றம் செய்யலாம்? தந்தை கர்த்தாவாக இருக்கும் போது, அவருடைய தனிப்பட்ட அதிகாரங்கள் யாவை?)

(அல்லது)

Explain the postion and powers of a manager of joint Hindu family to construct debts and to alienate joint family propety. (கடன் செய்வதற்கும் மற்றும் கூட்டுக் குடும்பச் சொத்தை விற்பதற்கும் இந்து கூட்டுக் குடும்பத்தின் மேலாளரின் நிலையையும் மற்றும் உரிமைமையும் விளக்குக.)

(அல்லது)

State the duties and the powers of Karta. (கர்த்தாவின் கடமை களையும் அதிகாரங்களையும் கூறுக.)

(அல்லது)

Karta - Write short notes. (கர்த்தா– சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

இந்து கூட்டுக் குடும்பம்
கர்த்தா அல்லது நிருவாகி - விளக்கம்
யார் கர்த்தாவாக இருக்க முடியும்?
கர்த்தாவின் பணிகள்
கர்த்தாவிற்கு வருமானத்தில் உள்ள உரிமை
பணம் பெறுவதில் கர்த்தாவின் பங்கு
கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்து கடன் பெறுவதில் கர்த்தாவின் உரிமை
கர்த்தாவின் அதிகாரங்கள்

இந்து கூட்டுக் குடும்பம் (Hindu Joint Family):

ஒரு இந்துக் கூட்டுக் குடும்பம் என்றால் அதில் கூட்டு வாழ்க்கை

இருப்பது நிச்சயம். இக்கூட்டு வாழ்க்கையானது எவ்வித ஒப்பந்தத்தின் அடிப் படையிலும் ஏற்படாமல், இயற்கையாக, இரத்த பந்தத்தினாலும், பாசத்தினாலும் பிணைக்கப்பட்டு ஏற்படுவதாகும். சொல்லப்போனால், பொது மூதாதையர் ஒருவரின் நேர் மரபு வழி வந்தவர்கள் அனைவரும் அவர்களின் மனைவிமார்களும், மணமாகாத மகள்களும் உடனமைந்ததே ஒரு கூட்டுக் குடும்பம் ஆகிறது. இக்கூட்டுக் குடும்பத்தின் தலைவரே 'கர்த்தா' (Karta) ஆவார். இவர் 'நிருவாகி' (Manager) என்றும் அழைக்கப்படுகிறார்.

கர்த்தா அல்லது நிருவாகி (Karta):

கர்த்தா (தந்தை அல்லது குடும்பத்தின் மூத்த ஆண் மகன்), இந்துக் கூட்டுக் குடும்பத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்களுக்கு உணவளித்தல், பராமரிப்புச் செய்தல், மதச் சடங்குகளை நிறைவேற்றுதல், குடும்பத்திற்காக வெளிக் காரியங்களில் ஈடுபடுதல் ஆகிய செயல்களைச் செய்யக் கூடியவர். கர்த்தா ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தில் பங்குதாரரும் அல்லர்; முகவரும் (Agent) அல்லர்; அவர் ஒரு பாதுகாவலரே (Trustee). கர்த்தா பொறுப்பு களற்ற ஓர் முடிசூடா மன்னராவார் (Uncrowned King without liability). இந்துக் கூட்டுக் குடும்பத்தின் மூத்த தலைமகனே கர்த்தா ஆவார். கூட்டுக் குடும்பச் சொத்தை நிருவகிப்பவர் கர்த்தா ஆவார். கர்த்தாவிற்குப் பின் அக்குடும்பத்தின் மூத்த ஆண் மகன் கர்த்தா ஆவார். மூத்த தலைமகன் கர்த்தா வாக ஆக இயலாத நிலைமையில் இருந்தால், அதற்கு அடுத்த ஆண்மகன் கர்த்தா ஆவார்.

யார் கர்த்தாவாக இருக்க முடியும் ?

1. தந்தைதான் ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா ஆவார்.

2. தந்தைக்கு அடுத்து மூத்த தலைமகன் கர்த்தா ஆவார்.

3. அப்படிப்பட்ட மூத்த தலைமகன், மன உடல்நலக் கோளாரால் பாதிக்கப்பட்டிருந்தால், இளையவர் மற்ற சக பங்குரிமையர்களின் அனுமதியுடன் கர்த்தாவாகப் பொறுப்பேற்கலாம்.

4. மகன் இளவராக (Minor) இருந்தால் தனது பாதுகாவலர் வழியாகக் கர்த்தாவாகச் செயல்படுவார்.

5. இளவருக்குப் பாதுகாவலராக உள்ளவர் உண்மையான கர்த்தாவுக்கு உள்ள அதிகாரங்களைச் செலுத்த இயலாது.

6. ஒரு தாய் கர்த்தாவாகச் செயல்படமுடியாது. ஏனெனில் அவர் கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையர் அல்ல.

Commissioner of Income Tax v. Govindan Sugar Mills[1] - இவ்வழக்கில் இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தாவாகப் பங்குரிமையர்களில் ஒருவர்தான் செயல்பட முடியும். பெண் இந்துக் கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையரல்ல. எனவே விதவையோ அல்லது தாயோ கர்த்தாவாகச் செயல்பட முடியாது எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

கர்த்தாவின் பணிகள் :

ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா, அக்குடும்பத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்களுக்கு உணவளித்தல் பராமரிப்புச் செய்தல், மதச் சடங்குகளை நிறைவேற்றுதல், குடும்பத்திற்காக வெளிக்காரியங்களில் தலையிட்டுச் செயல்படுதல் ஆகிய பணிகளைச் செய்ய வேண்டியவர்.

கர்த்தாவிற்கு வருமானத்தில் உள்ள உரிமை :

வருமானத்தைப் பெறவும், அதனைச் செலவழிக்கவும் கர்த்தாவுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் கர்த்தாவால் செலவழிக்கப்படும் அத்தொகை, கூட்டுக் குடும்பத்தின் நலனுக்காவும் கூட்டுக் குடும்பத்தின் தேவைக்காவும் இருக்க வேண்டும்.

கர்த்தாதான், கூட்டுக் குடும்பச் சொத்தின் பொறுப்பாளர் ஆவார். அவர் வருமானத்தை மீறி அனாவசியமாகச் செலவு செய்து, அது பங்குரிமையர்களின் அனுமதியின்றிச் செய்யப்பட்ட செலவாக இருந்தால், அதற்கு கர்த்தாதான் பொறுப்பாவார். அந்நிலையில் பங்குரிமையர்கள் பாகப்பிரிவினை கோரலாம் அல்லது அதிகப்படியான அச்செலவிற்குக் கர்த்தாவே பொறுப்பேற்று அதைத் திரும்ப செலுத்த வேண்டும். பங்குரிமையர்களிடமிருந்து பாகப்பிரிவினை கோரி செய்யப் படும் அறிவிப்பு கிடைக்கப் பெற்ற பின் கர்த்தா எச்செலவும் செய்தல் கூடாது.

பணம் பெறுவதில் கர்த்தாவின் பங்கு:

கர்த்தா தனது கடமைகளான கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்கு உணவளித்தல், பராமரிப்புச் செய்தல், மதச் சடங்குகளை நிறைவேற்றுதல், குடும்பத்திற்காக வெளிக் காரியங்களில் தலையிட்டுச் செயல்படுதல் ஆகிய பணிகளுக்காக பிறரிடமிருந்து கடன் பெறலாம். அவ்வாறாக அவர் (கர்த்தா) பெற்ற பணத்திற்கு ஏனைய பங்குரிமையர் பொறுப்பாவார்கள். பாகப்பிரிவினைக்கு முன் வாங்கிய எல்லாக் கடனுமே பங்குரிமையர் அனைவரையும் கட்டுப்படுத்தும்.

Ramanathan Chettiar v. Muthuraman Naidu and others[2] - இவ்வழக்கில் கர்த்தா ஒருவர் மட்டுமே இருந்து, அவரு பிற ஆண்

1. (1966) A. SC. 24
2. (1941) 2 M.L.J. 816

பங்குரிமையர் இல்லாமல் இருந்தாலும், கர்த்தா வாங்கிய கடன் கூட்டுக் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும் எனப்பட்டது.

கடனுறுதிச் சீட்டு (Promissory Note) எழுதிக் கொடுத்துக் கடன் பெறுவதில் கர்த்தாவின் உரிமை :

கூட்டுக் குடும்ப நலனுக்காகவும், தேவைகளுக்காகவும் கர்த்தா கடனுறுதிச் சீட்டில் கையெழுத்திட்டுப் பணம் வாங்கியிருந்தால் அது ஏனைய பங்குரிமையர் களையும் கட்டுப்படுத்தும். பங்குரிமையர்களுக்கு அவரின் மூதாதையர்களின் சொத்தில் இருந்து எவ்வளவு பங்குத் தொகை கிடைக்கிறதோ, அந்த அளவே கர்த்தா வாங்கிய கடனில் பங்குரிமையர்களுக்குப் பொறுப்புண்டு. பங்குரிமையர் களின் தனிப்பட்ட சொத்தில் (separate share) இருந்து, கர்த்தா வாங்கிய கடனை வசூலிக்க முடியாது.

கர்த்தாவின் அதிகாரங்கள்:

(a) கர்த்தா பிறருக்குக் கொடுத்த கடனைத் திரும்பக் பெற்ற பின் கடன் பெற்றவருக்கு அக்கடனிலிருந்து விடுவிப்பு (Discharge) அளிக்க உரிமை உண்டு.

(b) கடனுக்கு வட்டி கொடுக்கவும் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவும் அதிகாரம் உண்டு.

(c) காலாவதியான கடனை (Time barred debt) மீண்டும் புதுப்பிக்க கர்த்தா கையெழுத்திடக் கூடாது. அப்படிச் செய்தால் கர்த்தாதான் அதற்குப் பொறுப்பு என **Thakar Das v. Mst. Putli**[1] என்ற வழக்கில் தீர்ப்புரைக்கப்பட்டது.

(d) கூட்டுக் குடும்பத்திற்கு வரவேண்டிய கடனை கர்த்தா தன் விருப்பப்படி வஜா (தள்ளுபடி) செய்யக்கூடாது என **Dasarath Rama v. Narasa**[2] என்ற வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது.

(e) கர்த்தாவிற்குச் சொத்தை விற்பனை செய்யும் (Alienation) அதிகாரம் : பொதுவாக இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா ஏனைய பங்குரிமையர்களின் அனுமதியின்றி அசையாச் சொத்துக்களை விற்பனை செய்ய இயலாது. ஆனால் **கூட்டுக் குடும்பத்தின் நலனுக்காகவும், சட்டப்படியான தேவைக்காகவும்** ஏனைய பங்குரிமையர்களின் அனுமதியின்றிக் கூட்டுக் குடும்பச் சொத்தை விற்கலாம். மிதாக்ஷர முறையில் **மத சம்பந்தப்பட்ட கடமைகளை (Plous Obligation)** நிறைவேற்றுவதாக பங்குரிமையர்களோ அல்லது குடும்பத்தில் உள்ள ஏதாவதொரு உறுப்பினரோ அசையாச் சொத்தைத் தானமாக வழங்கலாம். அடைமானம் வைக்கலாம் அல்லது விற்கலாம். இதற்கு யாருடைய முன் அனுமதியும் தேவையில்லை.

1. (1924) 5 Lah. 317.
2. (1928) 51 Mad. 484.

கர்த்தா வாங்கிய கடன் குடும்ப நலனுக்காவும் குடும்பத் தேவைக்காவும் வாங்கியிருந்தால், அது இளவராக இருந்தாலும் வயது வந்தோராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் அக்கடன் கட்டுப்படுத்தும்.

Hanooman Prasad v. Mussumat Babooee[1] - இவ்வழக்கில் ஒரு இந்துக் கணவன் தன் மனைவியையும், மகன் ஒருவனையும் விட்டு விட்டு இறந்து விடுகிறான். அவனுடைய விதவை அந்த மகனுக்கும், அவனது சொத்திற்கும் பாது காவலராகிறாள். தன் கணவரின் கடனைத் தீர்ப்பதற்காக அவ்விதவைத் தாய் மகனுடைய பாதுகாவலர் என்ற நிலையில், மகனின் சொத்துக்களை அடைமானம் வைக்கிறாள். எவ்விதக் கெட்ட எண்ணமுமின்றி (dishonest intention) அடைமானப் பத்திரத்தில் கணவனின் சொத்தைத் தன்னுடையது எனக் குறிப்பிடுகின்றாள். கீழ் நீதிமன்றத்தில் மிதாக்ஷர முறைப்படி விதவைக்கு வரையறுக்கப்பட் உரிமைதான் (limited estate) உண்டு; அவளுக்குச் சொத்தை மாற்றாக்கம் (alienation) செய்ய உரிமை இல்லை. எனவே விதவை வைத்த அடைமானம் இளவராகிய மகனைக் கட்டுப்படுத்தாது எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. ஆனால் பிரிவி கவுன்சில் இந்துச் சட்டப்படி விதவைக்குத் தனது கணவனின் சொத்தை மாற்றாக்கம் செய்ய உரிமை இல்லையென்றாலும், விதவைத் தாய் இளவரின் மேலாளர் (Manager) என்ற முறையில் இளவரின் தேவைக்காக, அவள் தனது கணவனின் சொத்தை மாற்றாக்கம் செய்யலாம் எனத் தீர்ப்புக் கூறியது.

மேலும் இத்தகைய மாற்றாக்கத்தில் சொத்தை யார் வாங்குகிறார்களோ அவர், அச்சொத்து அக்குடும்ப நன்மைக்காவும் இளவரின் தேவைக்காகவும்தான் மாற்றாக்கம் செய்யப்பட்டது என்பதை, தான் விசாரித்து நம்பியபின்தான் வாங்கினார் என்பதை அவர் (வாங்குபவர்) நிரூபிக்க வேண்டுமெனக் கூறப்பட்டது.

குடும்ப நலனுக்காகவும் மற்றும் சட்டப்படியான தேவைக்குமான (Family Benefits and Legal Necessity) செலவினங்கள் எவை? (அல்லது) எந்தெந்த காரணங்களுக்காக கூட்டுக் குடும்பச் சொத்தினை கர்த்தாவானவர் உரிமை மாற்றம் செய்யலாம்?

குடும்ப நலனுக்காகவும் சட்டப்படியான தேவைக்காகவும் செலவிடப்படும் செலவினங்கள் பின்வருபவையாக அமைகின்றது. இதற்காக கர்த்தா கூட்டுக் குடும்பச் சொத்தை விற்பனை செய்யலாம்.

1. அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகள்.

2. பங்குரிமையர்களையும், ஏனைய குடும்ப அங்கத்தினர்களையும் பராமரித்தலுக்கு ஆகும் செலவு.

3. பங்குரிமையர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் ஆகியோரின் திருமணச் செலவிற்காக வாங்கும் பணம்.

1. 6 M.I.A. 393.

4. இறந்தவரின் ஈமக்கிரியைகளை நிறைவேற்றவும், குடும்பத்தின் மத சம்பந்தமான சடங்குகளை நிறைவேற்றவும் பெறப்படும் தொகை.

5. வழக்கு சம்பந்தமாக எழும் செலவினங்கள்

6. கர்த்தா அல்லது கூட்டுக் குடும்ப உறுப்பினர் எவரேனும் குற்றவியல் நடவடிக்கைக்கு ஆளானால், அதிலிருந்து அவரைக் காப்பாற்ற ஆகும் செலவு.

7. குடும்பத்திற்காக வாங்கிய கடன்.

8. மேலும் ஏனைய பங்குரிமையர்களினால் ஒத்துக் கொள்ளப்பட்டு, அது நியாயமான செலவாக இல்லாமல் இருந்தாலும் அது மற்றைய பங்குரிமையர் களையும் கட்டுப்படுத்தும்.

9. அளவுக்கு அதிகமாகச் செலவு செய்ய, அது பங்குரிமையர்களின் அனுமதிக்கு உட்பட்டோ, அனுமதி இல்லாமலோ செய்யப்பட்டிருந்தாலும் அது தவிர்தகு (Voidable) கடனாகும்.

(f) தானம் அளிப்பதில் கர்த்தாவின் அதிகாரம் : பொதுவாக அசையா சொத்தை கர்த்தா தானம் கொடுக்கக் கூடாது. ஆனால் குடும்ப நலனுக்காகவும், சட்டத் தேவைகளுக்காகவும், மதக் கடமைகளுக்காகவும் அசையாச் சொத்தைக் தானம் கொடுக்கலாம். கர்த்தா முழுச் சொத்தையும் தானம் கொடுக்கக் கூடாது அல்லது ஒரு மகனுக்கு மட்டுமே கொடுக்கவும் கூடாது.

(g) கர்த்தா புதிய தொழிலில் ஈடுபடுதல் கூடாது (No new business): ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா புதிய தொழில் எதையும் தொடங்கக் கூடாது. ஆனால் குடும்ப நலனுக்காகவும் குடும்பத்தின் சட்டப்படியான தேவைக்காவும் புதிய தொழிலைத் தொடங்கலாம். அப்படிப் புதிய தொழில் தொடங்கும் பொழுது குடும்பத்தின் ஏனைய வயது வந்த பங்குரிமையர்களிடமும் அனுமதி பெற வேண்டும் என **Benares Bank v. Hari Narain**[1] – எனும் வழக்கில் பிரிவி கவுன்சில் தீர்ப்புரைத்தது.

(h) கர்த்தா கூட்டாளியாகச் செயல்படல் (Partnership) : ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தர் பிற வெளி ஆட்களுடன் கூட்டாளியாகச் சேர்ந்து ஒரு புதிய தொழிலை தொடங்கக் கூடாது. இத்தொழிலால் இலாபம் வந்தால், அதில் அக்குடும்பத்தின் ஏனைய பங்குரிமையர்களுக்கும் பங்குண்டு. ஆனால் நட்டம் வந்தால் அது கர்த்தாவை மட்டுமே சாரும் என்று **Commissioner of Income Tax v. Kalu Babu**[2] என்ற வழக்கில் கூறப்பட்டது.

(i) கர்த்தாவிற்கு இசைவுத் தீர்ப்பு (Arbitration) அளிக்கும் அதிகாரம் : கர்த்தா ஒரு இந்துக் குடும்பத்தில் வரும் சிக்கல்களைத் தீர்த்து

1. (1932) 54 All. 564
2. (1959) A.S.C. 1289

வைக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். அவரது முடிவே இறுதியானது. அவரது குடும்பத்திற்கும் மற்றொரு குடும்பத்திற்கும் இடையே எழும் பிரச்சனைகளில் கர்த்தா எடுக்கும் முடிவே அவரது குடும்பத்தில் ஏனைய உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும்.

(j) கர்த்தாவிற்கு உள்ள வழக்குத் தொடரும் அதிகாரம் : ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா தனது குடும்பத்தின் சார்பாக வழக்குத் தொடரலாம். அப்படித் தொடரப்படும் வழக்கு, தனது குடும்பத்தில் உள்ள வயது வந்த பிற உறுப்பினர்களின் அனுமதியுடன்தான் தொடர்ந்துள்ளார் என்றும், இளவர்களைப் பொறுத்தவரை அவர்களது நலனுக்காவும் கர்த்தா வழக்குத் தொடர்ந்துள்ளார் என்றும் பொருள் கொள்ளப்படும். தனிப்பட்ட முறையில் (personally) கர்த்தா விற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டு, அத்தீர்ப்பு செயல் படுத்தப்படும் பொழுது அது கர்த்தாவிற்குச் சேர வேண்டிய சொத்தின் பங்கை மட்டுமே கட்டுப்படுத்துமே தவிர, ஏனைய பங்குரிமையர்களின் சொத்தை அத்தீர்ப்பாணை (Decree) கட்டுப்படுத்தாது.

(k) சமாதானம் செய்வதில் கர்த்தாவின் நிலை (Compromise): இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா செய்து கொள்ளும் சமாதானம், குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும். ஆனால் நீதிமன்றத்தில் உள்ள வழக்கில், தானாகச் (கர்த்தா) செய்து கொள்ளும் சமாதானத்தை நீதிமன்றம் நிராகரிக்கலாம் அல்லது ஏற்றுக் கொள்ளவும் செய்யலாம்.

கூட்டுக் குடும்பக் கணக்கு வழக்கில் கர்த்தாவின் கடமை:

(a) கர்த்தா கூட்டுக் குடும்பத்தில் ஆகும் செலவுகளுக்கு வரவு – செலவு கணக்கு வைத்திருக்க தேவையில்லை.

(b) வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள குடும்பமாக இருந்தால், அங்கு கர்த்தா வரவு – செலவு கணக்கு வைத்திருக்க வேண்டும்.

(c) பங்குரிமையர்களில் ஒருவர் பாகப்பிரிவினை கோரி அறிவிப்புக் கொடுத்தால் அன்றைய தேதியிலிருந்து கர்த்தா வரவு செலவுக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் தயாபாக முறையில் பாகப்பிரிவினை கேட்காவிட்டாலும் கர்த்தா வரவு – செலவுக் கணக்கை வைத்திருக்க வேண்டும், எனக் கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையர்கள் கோராலாம். அவ்வாறு செய்ய கர்த்தா மறுத்தால் நீதிமன்றம் வழியாக கணக்கு வழக்குகளை வைத்து வரும்படிக் கோரலாம். இவ்வாறாக இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தாவானவர் ஒரு முடிசூடா மன்னராகச் செயல்பட்டாலும், அவருக்குப் பொறுப்புகளும் இருக்கவே செய்கின்றன எனத் தெரிகிறது.

2 கூட்டுக் குடும்பத்தில் கடனும் மாற்றாக்கமும் [Debts and Alienation in Joint Family]

[i] மதக் கடமை [Pious Obligation]

1. Pious obligation – Write short notes. (மதக் கடமை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Write an essay about the pious obligation of the son to discharge the liablities of the father. (தந்தை பட்ட கடனை அடைக்க வேண்டிய மகனின் அறக் கடப்பாடு பற்றி ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

Explain the nature and extent of son's pious obligation to pay the debts of the father. Is the son liable to pay the post - partition debts of his father? (தந்தையின் கடன்களைத் தீர்க்க மகனுக்குள்ள மதக் கடமையின் தன்மையினையும், அளவினையும் விளக்குக. பாகப்பிரிவினைக்குப் பின் தந்தை பட்ட கடன்களைத் தீர்க்க மகன் கடப்பாடு உடையவரா?)

(அல்லது)

Examine the scope and extent of the doctrine of pious obligation in Hindu law. What are the debts left outside the scope of pious obligation? (இந்துச் சட்டத்தில் மதக்கடமை கோட்பாட்டின் எல்லையையும் அளவினையும் ஆராய்க. மதக் கடமை கோட்பாடு எல்லைக்கு அப்பாற்பட்ட கடன்கள் யாவை?)

(அல்லது)

"Under the Hindu Law the liablity of the son to pay the debts of his father depends upon the nature of the debt and not upon the nature of the estate". (இந்து சட்டத்தின் கீழ் தந்தை பட்ட கடனை மகன் திருப்பி செலுத்த வேண்டிய பொறுப்பு நிலை அந்தக் கடனின் இயல்பைப் பொறுத்து உள்ளதே தவிர, அவன் பெறும் சொத்தின் இயல்பைப் பொறுத்தது அல்ல" தெளிவாக்குக)

முன்னுரை :

ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா வாங்கும் கடன்கள் இரு வகைப் படும். அவை 1. கூட்டுக் குடும்ப நலனுக்காவும் சட்டப்பூர்வமான தேவைக்காகவும் வாங்கப்பட்ட கடன். 2. கர்த்தா தனது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வாங்கப்பட்ட கடன். இவற்றை பின்வருமாறு சற்று விரிவாகக் காண்போமா?

1. கூட்டுக் குடும்ப நலன் மற்றும் சட்டப்பூர்வமான தேவைக்காக வாங்கப்பட்ட கடன் (Debts for Legal Necessity and Family Benefits):

(a) அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகள்; (b) பங்குரிமையர்களையும், ஏனைய குடும்ப அங்கத்தினர்களையும் பராமரித்தலுக்கு ஆகும் செலவு; (c) பங்குரிமையாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் ஆகியோரின் திருமணச் செலவிற்காக வாங்கப்பட்ட கடன்; (d) இறந்தவரின் ஈமக்கிரியைகளை நிறைவேற்றவும், குடும்பத்தில் மத சம்பந்தமான சடங்குகளை நிறைவேற்றவும் பெறப்படும் தொகை; (e) வழக்கு சம்பந்தமான செலவினங்கள்; (f) கர்த்தாவோ அல்லது கூட்டுக் குடும்பத்தின் எந்த ஒரு நபரோ கிரிமினல் நடவடிகைக்கு உள்ளானால் அதிலிருந்து அவரைக் காப்பாற்ற ஆகும் செலவு; (g) குடும்பித்திற் காக வாங்கிய கடன்.

2. கர்த்தா தனது தனிப்பட்ட தேவைக்காக வாங்கும் கடன்:

கர்த்தா தனது தனிப்பட்ட சொந்தச் செலவிற்காக வாங்கிய கடனை (குதிரைப் பந்தயத்திற்கு, மது அருந்துவதற்கு, கற்பு நெறி தவறிய பெண்களின் சகவாசத்திற்கு), கர்த்தாவின் தனிப்பட்ட சொத்து இருந்தால் (Separate Propety) அதன் மூலம் அக்கடனைத் தீர்க்கலாம். கர்த்தா தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனுக்குக் கர்த்தாவே பொறுப்பு. ஆனால், அக்கடனைக் கட்டும் முன்பே கர்த்தா இறந்துவிட்டால் அவரது மகனுக்கு தனது தகப்பனாரான கர்த்தாவின் தனிச் சொத்து போய்ச் சேர்ந்திருந்தால், அந்த மகனுக்கு எவ்வளவு சொத்து தந்தையிடமிருந்து வருகிறதோ, அந்த அளவிற்குத்தான் தகப்பனாரின் கடனைத் தீர்க்க மகன் கடமைப்பட்டவராவார். தகப்பனார் பட்ட தனிப்பட்ட கடனைத் தீர்க்க மகன் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க இயலாது.

மதக் கடமையின்படி கட்டும் கடன் அல்லது அறக் கட்டுப்பாடு (Pious obligation):

தந்தை, பாட்டன், பாட்டனின் தந்தை ஆகியோர் வாங்கிய கடனை அடைக்க வேண்டியது, மகன், பேரன்; கொள்ளுப் பேரன் ஆகியோரின் கடமை.

இந்தக் கடமை **மதக் கடமை** எனப்படுகிறது. ஆனால் வாங்கப்பட்ட கடனானது நற்காரியத்திற்காக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அதனை அடைக்க வேண்டிய கடமை ஏற்படுகின்றது. மாறாக, அறக்கோட்பாடுகளுக்கு முரணாக பெற்ற கடனை மகன் கட்டத் தேவையில்லை (அவ்வியவகாரிகா கடன்)

பெற்றோர் அல்லது பாட்டன்கள் பெற்ற கடனை அடைக்க வேண்டும் என்று சாத்திரங்கள் கூறுவதில் மதரீதியாக அர்த்தம் உண்டு. கடன் என்பது பெரிய பாவம். ஆகவே, மகனோ, பேரனோ, கொள்ளுப் பேரனோ அதை அடைக்க வேண்டும்; இல்லையென்றால், கடன்பட்டவருக்கு விமோசனம் கிடைக்காது. இறந்து போன தந்தைக்கு, பாட்டனுக்கு, கொள்ளுப் பாட்டனுக்கு விமோசனம் கிடைப்பதில் உதவ வேண்டியது மகனின், பேரனின், கொள்ளுப் பேரனின் கடமையாகும். மகனாகப் பிறந்தவன், தந்தை நரகத்திற்குச் செல்லாமல் இருக்க உதவுவது அவருடைய தலையாய கடமையாகும்.

"தந்தையின் கடன்களை யார் அடைக்கவில்லையோ அவன் கடன் காரனின் (creditor) வீட்டில் அடிமையாக, வேலைக்காரனாக அல்லது பெண்ணாக அல்லது நான்கு கால் பிராணியாக மறுபடியும் பிறப்பான்" என்று **பிரகஸ்பதி** கூறுகிறார்.

Ramasami v. Ulaganatha[1] – இவ்வழக்கில் இந்து தருமப்படி தகப்பன்பட்ட கடனுக்கு தார்மீகப் பொறுப்பேற்றுத் திரும்பக் கொடுக்காவிட்டால், அத்தகப்பனின் ஆவி, மேல் உலகில் வேதனை அடையும்; அவரது ஆன்மா நிம்மதி இல்லாமல் இந்த உலகத்தையே சுற்றிக் கொண்டிருக்கும்; மறு உலகிற்குப் போகாது. ஆகவே தகப்பன்பட்ட கடனை மகன் தார்மீகப் பொறுப்பேற்றுக் கட்ட வேண்டும் என கருத்துரைக்கப்பட்டது.

மகனின் பொறுப்பு நிலை (Liability) :

Masit Ullah v. Damodar Prasad[2] - இவ்வழக்கில் மகனின் பொறுப்பு நிலை பற்றி **நீதிபதி வாடியா** பின்வருமாறு கூறுகிறார். "எப்படி இருந்தாலும் மகனின் பொறுப்பு நிலை என்பது, தனிப்பட்ட பொறுப்பு நிலை அன்று. அது தந்தையோடு கூட்டாக இருக்கும் மகன்களுக்கும், அவர்களுடைய பங்குரிமைச் சொத்திலுள்ள பாத்தியதைக்கும் பொறுப்பு நிலை உரியது. தந்தையின் பொறுப்பு நிலை இருக்கும் வரை, மகனின் பொறுப்பு நிலை இருக்கும். கடனானது தந்தையைப் பொறுத்த அளவில் காலாவதியாகி விட்டால், மகனின் பொறுப்பு நிலையும் தீர்ந்துவிடும். ஆங்கிலச் சட்டத்தினைப் போன்று, இது கூட்டு அல்லது தனித்தனியான பொறுப்பு (Joint and Several Liablity) அல்ல"

1. (1899) 22 Mad. 49-63
2. (1926) 53 I.A. 204.

பாகப்பிரிவினைக்குப் பின் தந்தை பட்ட கடன் (Post Partition debt):

பாகப்பிரிவினைக்குப் பின்னால் தந்தை வாங்கிய கடனுக்கு மகன் பொறுப்பாளியல்ல. ஆனால், தந்தை பாகப்பிரிவினைக்கு முன்னால் கடன் வாங்கியிருந்தால், பாகப்பிரிவினைக்குப் பின் மகன் எவ்வளவு சொத்தை அடைந்தானோ அவ்வளவுக்கும் பொறுப்பாளி. பாகப்பிரிவினைக்குப் பின் தந்தை மீது மட்டுமே வழக்கு தொடர்ந்து தீர்ப்பாணை பெற்றிருந்தால், அதை மகனுக்கு எதிராக நிறைவேற்ற முடியாது.

மதக் கடமையின்படி கட்டும் கடனால் ஏற்படும் விளைவுகள்:

1. மதக் கடமையின்படி கட்டும் கடன் என்ற கோட்பாடு இருப்பதால் தான், தந்தை தன் மகனுக்கு சொத்தை விட்டுச் செல்கிறார். 2. இ ம் மு றை நடைமுறையில் உள்ளதால்தான் கடன் கொடுப்பவரும் கடன் கொடுக்கிறார். 3. மகன் உயிருடன் உள்ளவரை தன் தகப்பன் (நற்காரியங்களுக்காக) பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளான். 4. தகப்பன் உயிருடன் இருந்தாலோ அல்லது இறந்துவிட்டாலோ அவர் பட்ட கடனை மகன் கட்டவேண்டும். 5. பாகப் பிரிவினைக்குப் பின்னும் தந்தை ஒரு கடனுக்குப் பொறுப்புறுதி (Surety) கொடுத்திருந்தாலும் அக்கடனையும் மகனே கட்டவேண்டும். 6. காலம் கடந்த கடனுக்கு (Time barred Debt) மகன் பொறுப்பேற்கத் தேவையில்லை.

அவ்வியவகாரிகா கடன் (Avyavakarika Debt):

நற்காரியங்களுக்காக மூதாதையரால் வாங்கப்படும் கடனைக் கட்டவே மகனுக்கு மதக் கடமை உண்டு. ஆனால் "நல்லொழுக்கத்திற்கு எதிரான காரியங்களுக்காக வாங்கப்படும் கடன்களுக்கு" மதக் கடமை கிடையாது. அத்தகைய கடனை மகனோ, பேரனோ, கொள்ளுப் பேரனோ அடைக்க வேண்டிய அவசியமில்லை. அத்தகு நல்லொழுக்கத்திற்கு எதிரான காரியங்கள் வருமாறு:

1. போதை தரக்கூடிய மதுபானத்திற்காக வாங்கப்பட்ட கடன்; 2. சூதாட் டத்திற்காக வாங்கப்பட்ட கடன். 3. பணமே வாங்காமல் ஏற்பட்ட கடன் (Debt without consideration). 4.பிறருக்குப் பொறுப்பேற்று அந்த ஈட்டுறுதியால் (surety) ஏற்பட்ட கடன்; 5. பெண்ணின் மோகத்தால் அந்த மதிமயக்கத்தில் பெறப்பட்ட கையெழுத்தை வைத்து ஏற்பட்ட கடன்; 6. அபராதங்கள்; 7. வரிகள்; 8.வணிகக் கடன் (Commercial Debt)

பழைய மற்றும் புதிய கோட்பாடுகளின் வேற்றுமைகள் (Difference betwen Old and New Theory):

1. தகப்பன் சொத்தை மகனுக்காக விட்டுச் சென்றாலும், செல்லா

விட்டாலும் தகப்பன் பட்ட கடனை மகன் கட்டவேண்டும், என்பது பழைய கோட்பாடு. ஆனால் புதிய கோட்பாட்டில் தகப்பன் மகனுக்குச் சொத்தை விட்டுச் சென்றிருந்தால்தான் தகப்பன் பட்ட கடனை மகன் கட்டவேண்டும்.

2. பழைய கோட்பாட்டின்படி தகப்பனார் இறந்தபின்தான் அவர்பட்ட கடனை மகன் அடைக்கவேண்டும். ஆனால் புதிய கோட்பாட்டில் தகப்பனார் உயிருடன் உள்ள போதே தகப்பன், மகன் இருவரின் சொத்துமே தகப்பன் பட்ட கடனுக்கு கட்டுப்பட்டதாகும்.

3. பழைய கோட்பாட்டில் இளவருக்கு கடப்பாடு இல்லை. ஆனால் புதியதில் இளவருக்கு தந்தையின் சொத்தில் எந்த அளவுக்கு உரிமை உள்ளதோ அதே அளவுக்கு பொறுப்புடு உண்டு.

[ii] அவ்வியவகாரிகா கடன் [Avyavakarika Debt]

2. Avyavakarika debt – Write short notes. (அவ்வியவகாரிகா கடன் – சிறு குறிப்பு வரைக.)

(முந்தய வினாவின் விடையில் இறுதியில் காண்க)

[iii] முன்கடன் [Antecedent Debt]

3. Explain the nature of 'antecedent debt'. Mention the essential conditions for making such a debt binding on a son in respect of an alienation made by the father. (முன்கடனின் இயல்பினை விளக்குக. தந்தையால் ஏற்படுத்தப்பட்ட உடைமை மாற்றம் குறித்த கடன் மகனைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கிய நிபந்தனைகளை எடுத்துரைக்க.)

முன்கடன் – விளக்கம் :

'முன்கடன்' என்றால் முன்னதாகப் பெற்ற கடனாகும். அதாவது காலத்திலும் விஷயத்திலும் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சனைக்கு முன்னதாக அக்கடன் இருக்க வேண்டும். வழக்கிலுள்ள பிரச்சனையின் ஒரு பகுதியாக அக்கடன் இராமல், அதற்கு முந்தியதாக, தனியானதாக இருக்க வேண்டும்.

Madusudan v. Bhagavan[1]–எனும் வழக்கில் ஒரு கூட்டுக் குடும்பத்தின் தந்தை, A என்பவரிடமிருந்து ரூ. 2,000/– கடன் வாங்குகிறார். இத்தொகையை அவர் தனது சொந்த பயன்பாட்டிற்காக வாங்குகிறார். பின்னர் கூட்டுக் குடும்பச் சொத்தை அக்கடனுக்கு பிணையாக (security) அவர் A–

1. (1929) 53 Bom. 444

மிடம் அடைமானம் வைக்கிறார். கடன் வாங்கிய தொகையை தகாத காரியங்களுக்காக அல்லாமல் (not used to immoral purpose) நற்பணிக்கே, அத் தந்தை செலவு செய்கிறார். இங்கு அந்த அடைமானம், தந்தையை மட்டுமல்லாது, அவரது மகன்கள் இருவரையும் கட்டுப்படுத்தக் கூடியதே. இங்கு அந்தக் கடன் முன்கடனாகும். காலத்தாலும் விஷயத்தாலும் அது அடைமானத்திற்கு முந்தியது. கருங்கக்கூறின் ஏற்கனவே உள்ள ஒரு கடனைத் தீர்க்கும் பொருட்டு கூட்டுக் குடும்பச் சொத்தை அடைமானம் வைப்பது அல்லது விற்பது முன் கடனாகும்.

தந்தையால் செய்யப்படும் சொத்து மாற்றம் குறித்த கடன் மகனைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கிய நிபந்தனைகள்:

ஒரு கூட்டுக் குடும்பத்தின் தந்தையானவர் தன்னால் தன் சொந்த நலனுக்காக வாங்கப்பட்ட கடனை தீர்க்கும் பொருட்டு, கூட்டு குடும்பச் சொத்தை, அதில் தனது மகனுக்கு இருக்கும் உரிமையுடன் விற்கலாம் அல்லது அடைமானம் வைக்கலாம். ஆனால் அது தனது மகனை கட்டுப்படுத்த வேண்டுமெனில் பின்வரும் இரண்டு முக்கிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவேண்டும்.

(a) வாங்கப்பட்ட கடனானது சொத்து மாற்றத்திற்கு முந்தியதாக இருக்க வேண்டும் (the debt was antecedent to the alienation).

(b) வாங்கப்பட்ட கடனானது தகாத காரியங்களுக்காக அல்லாமல் நற்பணிக்கே செலவு செய்யப்பட்டிருக்க வேண்டும். (the debt was not incurred for an immoral purpose)

நிரூபிக்கும் பொறுப்பு (Burden of Proof):

மகனை பொறுப்புக்குள்ளாக்க வேண்டுமெனில் முன் கடன் இருந்தது என்பதை சொத்து மாற்றம் பெறுபவரே (Alienee) நிரூபிக்கவேண்டும். அதுபோல், தந்தை (ஒழுங்கான) நற்காரியங்களுக்காக கடன் வாங்கவில்லை என்பதை மகன்தான் நிரூபிக்கவேண்டும். தந்தை ஒழுக்கக்குறைவான வாழ்வு வாழ்ந்தார் என்று மட்டும் மகன் நிரூபித்தால் போதாது. அந்த ஒழுக்கக் குறைவான வாழ்விற்கும், வாங்கிய கடனுக்கும் நேரடியான தொடர்பு உண்டு என்பதையும் நிரூபிக்க வேண்டும்.

-o0o-

3 பாகப்பிரிவினை [Partition]

1. Explain what is meant by 'Partition' and state the different modes of effecting Partition amongst the Coparceners. (பாகப் பிரிவினை என்பதன் பொருளை விளக்கி பங்குரிமையர்களுக்கிடையே பாகப் பிரிவினையை ஏற்படுத்தும் பல்வேறு முறைகளை குறிப்பிடுக.)

(அல்லது)

What is meant by Partiton? How is a partiton effected? What are the effects of a Partition? (பாகப்பிரிவினை என்பதன் பொருள் யாது? எவ்வாறு ஒரு பாகப்பிரிவினை செயல்படுத்தப்படுகிறது? பாகப் பிரிவினை ஒன்றின் விளைவுகள் யாவை?)

(அல்லது)

Explain Partition, its kinds and consequences.(பாகப் பிரிவினையும், அதன் வகைகளையும் மற்றும் விளைவுகளையும் விளக்குக.)

(அல்லது)

Explain the different modes of effecting Partition and examine the effects of Partition. (பாகப்பிரிவினையை ஏற்படுத்தும் வெவ்வேறு விதிமுறைகளை விவரித்தும் பாகப்பிரிவினையின் விளைவுகளையும் ஆராய்க)

நினைவுக் குறிப்புகள் [Hints]

பாகப்பிரிவினை என்பதன் பொருள்
பாகப்பிரிவினை எப்பொழுது ஏற்படுகிறது?
பாகப்பிரிவினை ஏற்படுத்தும் பல்வேறு முறைகள்
தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தையும் பாகப்பிரிவினையும்
பாகப்பிரிவினையின் விளைவுகள்

பாகப்பிரிவினை என்பதன் பொருள் :

மனிதன் ஆதிகாலத்தில் சிறு சிறு கூட்டங்களாக வசித்து வந்தான். அப்பொழுது அவர்களிடையே குடும்பம் என்ற உணர்வு இருந்ததில்லை. ஆனால் நாளடைவில் அச்சிறு கூட்டம் வளர்ந்து பெரியதாகிய பின்னர், மனிதர்களுக் கிடையில் பகை மனப்பான்மை தோன்றியது. 'எனது' என்ற எண்ணம் வளர்ந்தது இதனால் 'குடும்ப உணர்வு' அவர்களிடையே தலை தூக்கியது. 'கூட்டம்' போய் 'குடும்பம்' என்ற நிலை தோன்ற ஆரம்பித்தது. மேலும் மனிதர்கள் சற்று நாகரிகம்

அடைந்து சமுதாய வாழ்விலும் சில ஒழுங்கு முறைகளை மேற்கொண்டதும், குடும்ப அமைப்பு சமுதாயத்தின் முக்கிய அங்கமாகி ஆல் போல் தழைத்து அருகு போல் வேரூன்றியது. இதனால், ஒருவன் மற்றவனை விடக் கெட்டிக்காரனாகவும், திறமை உள்ளவனாகவும், பல்வேறு வகையில் உழைத்துச் சொத்துச் சேர்க்கத் தெரிந்தவனாகவும் இருக்கவே, தான் சம்பாதித்ததைத், தானும் தன்னுடைய குடும்பம் மட்டிலும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் எழுந்தது. மற்ற பங்குரிமையர்களிடமிருந்து தனது பங்கு சொத்தை பிரித்துக் கொள்ள வேண்டும் எனும் எண்ணம் தோன்றியது. இவ்வாறு தனிமனிதத்துவம் கூட்டுக் குடும்பத்தில் ஏற்படவே படிப்படியாக பங்குரிமைச் சொத்தில் பாகம் பிரித்துக் கொள்ளும் நிலையும் ஏற்பட்டது. சுருங்கக்கூறின் பங்குரிமைச் சொத்தில் ஒரு பங்குரிமையர் தனது பாகத்தை பிரித்துக் கொள்ளும் முறைக்கு அல்லது தனது பாகத்தை கோரும் முறைக்கு 'பாகப்பிரிவினை ' எனப்பொருள் கொள்ளலாம்.

பாகப்பிரிவினை எப்பொழுது ஏற்படுகிறது?

இந்தியாவில் பெரும் பகுதியில் பின்பற்றப்படும் மிதாக்ஷர சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் பங்குரிமையில் ஒவ்வொரு பங்குரிமையருக்கும் இவ்வளவு பங்கு என்ற வரையறை கிடையாது. பங்குரிமை இருக்கும் வரை அவர்கள் சொத்தைக் கூட்டாகவே அனுபவிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சொத்து உரியது என்ற பங்கோ அல்லது பாகுபாடோ கிடையாது. ஆனால் பாகப்பிரிவினை ஒவ்வொருவருக்கும் உரிய பங்கு என்ன என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானிக் கிறது. ஒவ்வொன்றையும் அளந்து பங்கு போட வேண்டும் என்ற அவசியம் கிடையாது. பங்குரிமையருக்கு உள்ள பங்கு என்ன என்பதைத் தீர்மானித்து விட்டாலோ, சொத்து, கூட்டானது என்ற கண்ணோட்டம் மறைந்து விடும். வேறு விதத்தில் கூறுவதானால் பாகப்பிரிவினை 'கூட்டு' என்ற அந்தஸ்தை அறுத்து விடும். பாகப்பிரிவினை கோருவது பங்குரிமையரின் மறுக்க முடியாத உரிமை. மற்றப் பங்குரிமையர்கள் விரும்புகிறார்களா இல்லையா என்பது முக்கியமில்லை. ஒருவன் பாகப்பிரிவினை வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டால் அதை நடத்தியே தீரவேண்டும். பாகப்பிரிவினை கேட்பதற்குரிய காரணங்கள் என்னவாக இருந்தாலும், உரிமை வயது அடையாதவர் குடும்பத்தில் இருந்தாலும் பாகப்பிரிவினை நடந்தாக வேண்டும்.

பாகப்பிரிவினையை ஏற்படுத்தும் பல்வேறு முறைகள் (The different modes of effecting Partition) :

1. தந்தை செய்யும் பாகப்பிரிவினை: தந்தையே தான் உயிரோடு இருக்கும்போது குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்யலாம்; அது அத்தனை மகன்களையும் கட்டுப்படுத்தும்; எனினும் இது மகன்கள் பாகப்பிரிவினைக்கு ஒப்புதல் அளிக்கிறார்கள் என்பதால் அன்று. தனக்குள்ள தந்தை என்ற தகுதியின்

அடிப்படையில் தந்தை பாகப்பிரிவினை செய்யலாம். தனக்கும் மற்றவர்களுக்கும் தந்தை சொத்தை சமமாக பிரிப்பதென்றால், அவர் யாருடைய சம்மதத்தையும் பெற வேண்டியதில்லை. ஆனால் அன்னியன் ஒருவனுக்கு சொத்து சம்பந்தமான தகராறை தீர்த்து கொள்வதற்கு ஏதாவது கொடுக்கவேண்டுமென்றால் அல்லது ஒரு மகனுக்குக் கூட கொடுக்க வேண்டுமென்றால் மற்ற மகன்களின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியம். இந்த பாகப்பிரிவினை செய்யும் உரிமை தந்தைக்கே உள்ள தனி உரிமை. தன்னுடைய தனிச் சொத்தைத் தந்தை எப்படி வேண்டு மானலும் கொடுக்கலாம். ஒரு மகனுக்கு கொடுத்து விட்டு இன்னொரு மகனுக்கு கொடுக்காமலும் இருக்கலாம். அது அவரது விருப்பம்

2. தானே கோரும் பாகப்பிரிவினை: பங்குரிமையில் (Coparcenary) ஒரு பங்குரிமையருக்குப் பாகப்பிரிவினை கோரும் உரிமை எப்போதும் உண்டு. மற்றப் பங்குரிமையர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், விரும்பும் பங்குரிமையர் பாகப்பிரிவினை கேட்கலாம். அப்படி ஒருவன் திட்டவட்டமாக கேட்டு அவன் பங்கு எவ்வளவு என்பதை நிர்ணயம் செய்து விட்டாலே, பாகப்பிரிவினை ஆகிவிட்ட தாகத்தான் பொருள். சொத்தை அளந்து வரையறை செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை. அதற்குப் பின்னர் ஒன்றாக ஒரே வீட்டிலே இருந்தாலும் கூட்டுக் குடும்பம் என்ற அந்தஸ்து இருக்காது.

Raghavamma v. Chenchamma[1] – ஒரு பங்குரிமையர் பாகப் பிரிவினையை விரும்புகிறார் என்பதையோ அல்லது வேண்டும் என்பதையோ தெரிந்து கொள்வதில் சிற்சில சமயங்களில் சிரமம் ஏற்படுவதுண்டு. இது சம்பந்த மாகப் பல வழக்குகள் ஏற்பட்டதுண்டு. மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் இப் பிரச்சினையை ஆய்ந்து, சில கோட்பாடுகளை வகுத்துக் கொடுத்தது. அதன்படி,

(1) கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினை வேண்டும் என்று விரும்புகிறவர், பாகப்பிரிவினை வேண்டும் என்பதை குடும்பத்தில் யார் யாருக்கு சொல்ல வேண்டுமோ அவரவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். (2) இவ்வாறு தனது பாகப்பிரிவினை கோரும் விருப்பத்தை ஒருவன் தெரியப்படுத்தும் முறை சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடலாம். ஆனால் மற்றவர்கள், அவன் பாகப் பிரிவினையை விரும்புகிறான் என்பதை தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். (3) பாகப்பிரிவினையை ஒருவன் விரும்புகிறான் என்பது சம்பந்தப்பட்ட மற்றவர்களின் கவனத்திற்கு வந்த பின்னர், பாகப்பிரிவினை அவன் வேண்டும் என்று விரும்பிய நாளிலிருந்தே தொடங்கிவிட்டதாகப் பொருள். (4) பாகப் பிரிவினை ஏற்பட்டுவிட்டதாக பொருள் கொண்டாலும், பாகப்பிரிவினை வேண்டும் எனும் எண்ணம் தோன்றிய காலத்திற்கும், மற்றவர்கள் அதைப்பற்றி தெரிந்து கொண்ட காலத்திற்கும் இடையே உள்ள காலத்தில் கூட்டுச் சொத்தில் சேர்ந்த மற்றவர்களின் உரிமை பாதிக்கப்படமாட்டாது.

1. A.I.R. 1964 S.C. 136.

3. இசைவுத் தீர்ப்பு முறையில் பாகப்பிரிவினை: கூட்டுக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் இசைவு தீர்ப்பு முறைக்கு (Arbitration) உட்பட்டு பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். இசைவுத் தீர்ப்பு முறைக்கு உட்படுவதே அனைவரும் பாகப்பிரிவினையை விரும்புகிறார்கள் என்பதற்கு ஆதாரம். இசைவுத் தீர்ப்பாளர் முடிவு சொல்லவேண்டும் என்ற அவசியமில்லை. இசைவுத் தீர்ப்பிற்கு உட்பட்டதுமே கூட்டு குடும்ப அந்தஸ்து அற்றுப் போய்விடும்.

4. வழக்கு மூலம் பாகப்பிரிவினை: ஒரு பங்குரிமையர் பாகப்பிரிவினை கேட்டு வழக்குப் தொடர்ந்து விட்டாலே, அது மற்றவர்களுக்குத் தன் எண்ணத்தைத் தெரிவித்து விட்டதாகப் பொருள். அது மட்டுமல்ல, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்து விட்டதாகவும் கொள்ளப்படும். இதனால் மற்றப் பங்குரிமையர் பிரிந்து விட்டதாக எண்ண வேண்டியதில்லை அவர்கள் தம்முடன் இணைந்து இருக்கிறார்களா என்பதை அவர்களுடைய நடத்தையிலிருந்தே தீர்மானிக்க வேண்டும். ஒரு வயது வந்த பங்குரிமையர் பாகப் பிரிவினை கோரி வழக்கு தொடர்ந்தால், நீதிமன்றம் அதை நிராகரிக்க முடியாது. அவர் தீங்கு செய்யும் எண்ணம் உடையவர்களின் தூண்டுதல் பேரில் வழக்காடலாம். அது நீதிமன்றத்திற்கு சம்பந்தமில்லாத விஷயமாகப் போய்விடும். ஆனால் உரிமை வயது அடையாதவன் ஒருவன் பாகப்பிரிவினை கோரி வழக்கு தொடர்ந்தால், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து கூட்டு குடும்பத் திலிருந்து பிரிந்துவிட்டதாக எண்ணக்கூடாது. இவ்வாறு உரிமை வயது அடைந்தவர் விஷயத்தில்தான் கொள்ளப்படும். உரிமை வயது அடையாதவன் பிரிவினை கேட்கும் போது, அதனால் அவனுக்கு நன்மை உண்டா என்பதை நீதிமன்றம் ஆய்ந்து பார்க்கும். நன்மை உண்டு என்றால் கேட்டவாறு தீர்ப்பாணை வழங்கும்; நன்மை இருக்காது என்றால் தீர்ப்பாணை வழங்காது.

5. மத மாற்றத்தால் பாகப்பிரிவினை : பங்குரிமையர் ஒருவன் இந்து மதத்தைவிட்டு வேற்று மதத்திற்கு மாறிவிட்டால், கூட்டு குடும்பத்தில் அவனுடைய உறவு அறுந்து விடும். மத மாற்றம் நிகழ்ந்த தேதியிலிருந்து பாகப்பிரிவினை தொடங்கியதாக கொள்ளப்படும். எனினும் இவ்வாறு மதம் மாறியவனை விட்டுவிட்டு, மற்றவர்கள் தொடர்ந்து கூட்டுக் குடும்பம் நடத்தலாம்.

வேறுமுறைகள் : மேலே கண்ட முறைகள் அல்லாமல் வேறு முறையிலும் பாகப்பிரிவினை ஏற்படலாம். பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு அடிப்படையான தேவை, பங்குரிமையர் பாகப்பிரிவினை வேண்டும் என்பதை திட்டவட்டமாக அறிவிப்பதுதான்.

தாயின் வயிற்றில் இருக்கும் மகனும் பாகப்பிரிவினையும்:

பாகப்பிரிவினை நடக்கும்போது தாயின் வயிற்றில் இருக்கும் மகன், பிறந்துவிட்ட மகனுக்குச் சமம். எனவே அவன் பாகப்பிரிவினைக்குப் பிறகு

பிறந்தாலும், தந்தைக்கும் மற்றவர்களுக்குடையே நடந்த பாகப்பிரிவினையை மீண்டும் கிளறி எதிர்க்கலாம். பாகப்பிரிவினை நடக்கும் போது தாயின் வயிற்றில் இல்லாமல் அதற்கு பிறகு கருத்தரித்து பிறந்த மகன், தன்னுடைய தந்தைக்கு சொத்தில் ஒரு பங்கு இருக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்தே பழைய பாகப்பிரிவினையை எதிர்த்து வழக்காட முடியும். தந்தை தனக்கொரு பங்கு வைத்திருந்தால் நடந்து முடிந்த பாகப்பிரிவினையை மீண்டும் கிளற முடியாது. ஆனால், தந்தை தனக்கொரு பங்கும் வைத்துக் கொள்ளவில்லை என்றால் அவன் நீதிமன்றத்தை அணுகலாம்.

பாகப்பிரிவினையின் விளைவுகள் (Effects of Partition):

பாகப்பிரிவினை ஏற்பட்டதும் பங்குரிமை கலைக்கப்பட்டு விடுகிறது. ஒவ்வொருவரும் தத்தம் பங்கை தனித்தனியே பிரித்துக் கொள்வர். ஒருவரின் மரணத்திற்குப் பின், அவருக்கு பாகப்பிரிவினை மூலம் வந்தடைந்த சொத்து, அவரது வாரிசுதாரர்களுக்குச் செல்லும். ஒரு பங்குரிமையர் பங்குரிமையை விட்டுவிட்ட பின், தன் ஆண்வழித் தோன்றல்களுடன் சொத்தை வைத்துக் கொள்வாரேயானால், அவருக்கும் அவர் ஆண் வழித் தோன்றல்களுக்குமிடையே பங்குரிமை இருப்பதாகக் கொள்ளலாம். பாகப்பிரிவினை ஏற்பட்டதும் கூட்டுக் குடும்பத்தின் வணிகமும் முடிந்து விட்டதாகக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு கூட்டாண்மைச் சட்டத்தின் விதிகளே (Partnership Act) பொருந்தி வரும். ஒரு தந்தை பாகப்பிரிவினைக்குப் பின்னர் தன் மகன்களை தான் செய்யும் ஒப்பந்தங்களில் பிணைக்க முடியாது. பாகப்பிரிவினைக்கு முன் வாங்கிய கடனுக்காக பாகப்பிரிவினைக்குப் பின், ஒரு கடன்காரர் பாகப்பிரிவினை நடந்ததைத் தெரிந்து கொண்டே கடனுறுதிச் சீட்டு (promissory note) எழுதி வாங்கிக் கொண்டு கடன் தருவாரேயானால், அது மகன்களைக் கட்டுப்படுத்தாது. அதைப்போலவே கூட்டுக் குடும்ப நிருவாகி, பாகப்பிரிவினைக்குப் பின் காலாவதியாக வேண்டிய கடனின் காலத்தை எவ்வகையிலும் நீட்டிக்க முடியாது என்று **Rangasamy Ayyangar v. Sivaprakasam Pillai and others**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

2. Raghavamma v. Chenchamma A.I.R 1964 S.C. 136 - Write short notes.

(முந்தைய வினாவின் விடையில் காண்க)

3. a) What are the modes of partition under the Hindu Law?

b) Is there any provision for the reunion of separated members after partition?

அ) இந்துச் சட்டப்படி பாகப்பிரிவினை முறைகளைக் கூறுக

1. (1942) Mad. 251

ஆ) பாகப்பிரிவினைக்குப் பின்னர், பிரிந்த அங்கத்தினர்கள் ஒன்று சேர வழி உண்டா?

(அல்லது)

Reunion - Write short notes. (மீண்டும் ஒன்று சேர்தல் – குறிப்பு எழுதுக)

(அல்லது)

Explain the meaning of 'reunion' Who are the persons entitled to reunion under Hindu Law? (மீண்டும் ஒருங்கிணைதலின் பொருளை விளக்கு. இந்துச் சட்டத்தின் கீழ் யார் யார் மீண்டும் ஒருங்கிணையத் தகுதி பெற்றவர்கள்?)

(அ) பாகப்பிரிவினைக்கான பல்வேறு முறைகள்:

(வினா எண். 1–ன் விடையில் விரிவாகக் கண்டுள்ளோம்.)

(ஆ) மீண்டும் சேருதல் (Reunion):

பாகப்பிரிவினைக்குப் பின்னர், பிரிந்த அங்கத்தினர்கள் மீண்டும் ஒன்று சேரலாம் என்று பிரகஸ்பதி கூறுகிறார். பொதுவாக பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்னர், பாகம் பிரிந்த பங்குரிமையர், கூட்டுக் குடும்ப சொத்து மற்றும் அந்தஸ்திலிருந்து பிரிந்து விடுவதாக பொருளாகும். எனினும் அவ்வாறு பிரிந்தவர் மீண்டும் சேரலாம் என பிரகஸ்பதியின் நூலில் கூறப்பட்டுள்ளது.

தந்தை, சகோதரன், தந்தையின் சகோதரர்கள் ஆகியோரிடமிருந்து பிரிந்து சென்றவன், அன்பால் மீண்டும் ஒன்றுபட்டால் அதை **'மீண்டும் சேருதல்'** (Reunion) என்று சொல்ல வேண்டும், என்பது பிரகஸ்பதியின் மொழியாகும். ஆகவே, பாகம் பிரித்துக் கொண்டு தனியே சென்றவர்கள் மீண்டும் பொங்கிவரும் பாச உணர்ச்சியால் ஒன்று சேர்ந்து பழையபடி வாழலாம்.

மீண்டும் சேருதலுக்கு எழுத்து மூலமாக ஏற்பாடு செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. வாய்ச் சொற்களே போதுமானது. ஆனால் சம்பந்தப் பட்ட தரப்பினரிடையே மீண்டும் சேரும் விருப்பம் இருக்கவேண்டும். ஒன்றாக இருந்து, ஒன்றாக வியாபாரம் செய்வது மீண்டும் சேருதலுக்கு ஒப்பாகாது என **Bhubathi v. Muralidhar**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது.

பொதுவான நிபந்தனைகள் :

கூட்டுக் குடும்பத்திலிருந்து பாகப்பிரிவினை செய்து கொண்டு பிரிந்து சென்றவர் மீண்டும் சேர பின்வரும் பொதுவான நிபந்தனைகள் உள்ளன. அவை

1. இந்துக் கூட்டுக் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்ற மகனின் மனநிலை உண்மையாகவே மாறி, மீண்டும் உண்மையாகவே தன் குடும்பத்துடன்

1. 1943 ALJ 328 PC.

சேர வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் வரவேண்டும். அப்படிச் சேரும் பொழுது, அவனது தனித்துவம் மறைந்துவிடுகிறது. எனவே, அவன் கூட்டுக் குடும்பத்தின் ஒரு அங்கத்தினராக மீண்டும் ஆகிவிடுகிறான்.

2. கூட்டுக் குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்ற மகன் பிரிந்து செல்லும் போது கூட்டுக் குடும்பத்தில் இருந்து பாகப்பிரிவினையின் போது பெற்றுச் சென்ற சொத்துடன் திரும்பி வர வேண்டும் எனும் கட்டாயம் ஏதுமில்லை.

3. அம்மகன் பிற பங்குரிமையர்களைப் போல் அனைத்து உரிமை களையும், கூட்டுக் குடும்பத்துடன் இணைவதால் மீண்டும் பெறுகிறான்.

4. அவ்வாறு பிரிந்து சென்ற நாட்களில் அவன் தனிப்பட்ட முறையில் சம்பாதித்த சொத்தை செலவழிக்காமல் வைத்திருந்தால் அதையும் கூட்டுக் குடும்பச் சொத்துடன் சேர்க்க வேண்டும்.

5. பிரிவினைக்குப் பின் பேரன், தன் பாட்டனோடு சேர முடியாது. பிரகஸ்பதியின் கூற்றுப்படி பிரிந்தவன் மீண்டும் தகப்பன் சகோதரர், தந்தையின் சகோதரர்கள் ஆகியோர்களுடன் மட்டும்தான் சேர முடியும்.

Balabux v. Rukmabai[1] - இவ்வழக்கில் பிரியும்போது ஒருவன் யாருடன் இருக்கும் பொழுது பிரிந்தானோ, அவர்களிடம்தான் மீண்டும் போய்ச் சேர வேண்டும் எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

Bhagwan Dayal v. Reoti Devi[2] – இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம், பிரிந்த ஒருவன் மீண்டும் சேரும் போது பின்வரும் நிபந்தனைகள் இருக்க வேண்டும் எனக் கூறியது. அவை:–

1. உண்மையிலேயே மனம் மாறி மீண்டும் கூட்டுக் குடும்பத்தில் இணைய வேண்டும் என்ற எண்ணம் பிரிந்து சென்றவருக்கு இருக்கவேண்டும்.

2. அந்த இணைவு ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைய வேண்டும்.

3. அவ்வொப்பந்தத்தின் ஷரத்துகள் உட்கிடையாகவோ அல்லது வெளிப்படையாகவோ இருக்கலாம்.

4. கூட்டுக் குடும்பத்தில் மீண்டும் சேருபவர்தான், அவ்வாறு சேருவதை நிரூபிக்க வேண்டும்.

5. பாகப்பிரிவினை செய்தபின் ஒரே இடத்தில் தங்கி வாழ்வதோ அல்லது ஒரே தொழிலைச் செய்வதோ திரும்பச் சேர்வதாகப் பொருளாகாது.

6. பிரிந்து போகும்போது கொண்டு போன சொத்தை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்ற கண்டிப்பு இல்லை.

1. (1903) 30 I.A. 130-137
2. (1962) S.C.J. 348

4. Enumerate and discuss the grounds in which a partition may be reopened. (பாகப்பிரிவினை மறுபடியும் செயல்படுவதற்கான காரணங்களைக் கூறி விவாதிக்க.)

(அல்லது)

"Once only a partition is made" - Elucidate ("ஒரு தரம்தான் பாகப்பிரிவினை செய்யப்படுகிறது" – தெளிவுபடுத்துக.)

(அல்லது)

Reopening the partition - Write short notes. (பாகப்பிரிவினையை மீண்டும் கிளறுதல் - சிறு குறிப்பு வரைக.)

ஒரு முறை செய்யப்பட்ட பாகப்பிரிவினையை மீண்டும் கிளற முடியாது அல்லது ஒருமுறைதான் பாகப்பிரிவினை செய்யப்படுகிறது **(Once is the partition)** என மனு **(Manu)** கூறுகிறது. ஆனால் இந்துச் சட்டம் சில சூழல்களில் நடந்து முடிந்த பாகப்பிரிவினையை மீண்டும் கிளறலாம் என்று கூறுகிறது.

நடந்து முடிந்துவிட்ட பாகப்பிரிவினையை மீண்டும் கிளற வேண்டிய அவசியம் சிற்சில சமயங்களில் ஏற்படலாம். ஒரு பங்குரிமையருக்கு கொடுக்கப் பட்ட சொத்தில் ஓர் அன்னியருக்குப் **பிணை (Charge)** இருப்பது தெரியவந்தால், அல்லது அந்தச் சொத்தே வேறொருவருக்குச் சொந்தமானது என்று கண்டு பிடிக்கப்பட்டு, சொத்தை இழக்க நேர்ந்தால், பாதிக்கப்பட்டவன் பாகப் பிரிவினையை கிளறலாம்.

ஒரு பங்குரிமையர் இன்னொரு பங்குரிமையரை **மோசடி (fraud)** செய்து தனக்கு இலாபம் தேடிக் கொண்டிருந்தாலும், பாதிக்கப்பட்ட பங்குரிமையர் நீதிமன்றத்தை அணுகலாம். தனக்கு நேர்ந்து விட்ட இழப்பிற்கு மற்றவர் சொத்திலிருந்து நட்டஈடு பெறவும் உரிமை அவனுக்கு உண்டு.

ஒரு பிரச்சனையில் பாகப்பிரிவினையை கிளற வேண்டுமா அல்லது நட்டஈடு போதுமானதா என்பது அப்பிரச்சனையின் விஷயத்தை பொறுத்தாகும். பாகப்பிரிவினையின்போது ஏதேனுமொரு சொத்து தவறுதலாக அல்லது மோசடியாக விடப்பட்டிருந்தால், அதை மட்டும் மீண்டும் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். **பாகப்பிரிவினை ஆவணத்திலோ அல்லது தீர்ப்பாணையிலோ ஏதேனும் தவறுதல்** நேர்ந்திருந்தால் அதை திருத்திக் கொள்ள உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் **(Civil Procedure Code)** வகை செய்யப்பட்டுள்ளது.

பாகப்பிரிவினைக்கு பிறகு பிறந்த மகன், தந்தை அவருக்காக ஒரு பங்கை வைத்துக் கொள்ளாதிருந்தால் பாகப்பிரிவினையை மீண்டும் கிளறலாம். அதைப்போலவே தாய் வயிற்றில் இருக்கும் பொழுது செய்யப்பட்ட பாகப் பிரிவினையில் அவன் நலன்களுக்கு ஏதேனும் விரோதமாயிருந்தால் பாகப்பிரிவினையை மீண்டும் பரிசீலனைக்கு உள்ளாக்கலாம்.

கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படும் பொழுது, பங்குரிமையர் களுக்கு உரிமை வயது வராத மகன்கள் இருந்தால், அவர்களின் தந்தையர் அவர்களின் பிரதிநிதியாக இருந்து பாகப்பிரிவினை செய்து கொண்ட பின்னர், மோசடி நடந்திருப்பதாக ஆதாரம் இருந்தாலொழிய வேறு காரணங்களுக்காக, உரிமை வயது வராத மகன்கள் நடந்து முடிந்து விட்ட பாகப்பிரிவினையை மீண்டும் கிளற முடியாது.

3. Impartible Estate - Write short notes. (பிரிக்க முடியாத சொத்து– சிறு குறிப்பு எழுதுக.)

பிரிக்க முடியாத சொத்து - விளக்கம் :

சொத்து பெரும்பாலும் பிரிக்கக் கூடியதேயாகும். ஆனால் சில வகைச் சொத்து பிரிக்க இயலாத தன்மையைப் பெற்றிருக்கும். பாகப்பிரிவினைக்கு உட்படாத சொத்துரிமை, பிரிக்க முடியாத சொத்துரிமை ஆகும். இது ஒரு கூட்டுக் குடும்பத்தின் வழக்கப்படியோ, அரசு மானியத்தாலோ ஏற்படலாம். இது மூதாதையரின் சொத்தாக இல்லாமல் சுயசம்பாத்திய சொத்தாகக் கூட இருக்கலாம். மானியத்தின் வழியாய்ப் பிரிக்க முடியாத சொத்துரிமையை உருவாக்கும் தனி உரிமை அரசுக்கின்றி வேறு யாருக்கும் இல்லை. பிரிக்க முடியாத சொத்து, கூட்டுக் குடும்பச் சொத்தாக இருந்தாலும் அதை பங்காளிகளுக்குள் பங்கிட முடியாது. சில சொத்துக்களை பிரிக்கக் கூடாதென ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் உடன்பாடு செய்து கொள்வதுண்டு. குடும்பத்தில் ஏற்பட்ட அவ்வுடன்பாடு தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக வந்திருக்க வேண்டும். குடும்பத்தில் ஒருவரே, அதிலும் பெரும்பாலும் மூத்தவரே, அச்சொத்துக்களை தம் வசத்திலும் பராமரிப்பிலும் வைத்திருப்பார்.

பிரிக்க முடியாத சொத்தில் உரிமை இறக்கம் :

பிரிக்க முடியாத சொத்து, கூட்டுக் குடும்பச் சொத்தாக இருந்தாலும் அது பங்குரிமைச் சொத்தாக கருதப்பட மாட்டாது. ஏனெனில் அதில் பிரிவினை கோரவோ, கூட்டாக அதை அனுபவிக்கவோ வழியில்லை. ஆகவே பிரிக்க முடியாத சொத்துரிமையை வைத்திருப்பவர் அப்போதைக்கு மாற்றாக்கம் (Alienation) செய்வதைப் பங்குரிமையர் யாரும் தடுக்கவோ அவரிடம் பராமரிப்புக் கோரவோ இயலாது என **Petambur v. Hurish Chunder**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

Sartaj Kuari v. Deorej Kuari[2] - இவ்வழக்கில் தந்தை தனது சொத்தை வேறொருவருக்கு நன்கொடையாக வழங்கினார். அதற்கு மகன் எதிர்ப்பு தெரிவித்து வழக்கிட்டார். ஆனால் வழக்கை விசாரித்த பிரிவி கவுன்சில், மகனுக்கு பிரிக்கமுடியாத சொத்தில் உரிமை கொண்டாட தகுதியில்லை எனக் கூறியது.

1. (1871) 15 W.R. 200
2. (1888) 10 All 272, 287.

அப்பிரிக்க முடியாத சொத்தை வைத்திருப்பவர்களுக்குப் பின்னர், அதை யார் அடைவது என்ற பிரச்சனை எழும் போது அது பங்குரிமை சொத்தாக கருதப்பட்டு எஞ்சுநர் உரிமைப்படி செல்லும்.

பிரிக்க முடியாத சொத்து மூத்த மகன் பொறுப்பிலேயே இருக்கும். அச்சொத்து பரம்பரைச் சொத்தாக இருந்து, ஆனால் அதன் உரிமையாளர் அக்குடும்பத்தில் சேர்ந்து வாழாமல், வெளியே தனியாக வாழ்ந்து வந்தால், அங்கு பிரிக்கக்கூடிய சொத்துக்குள்ள முறை, நடைமுறைப்படுத்தப்படும். பிரிக்க முடியாத சொத்து ஒருவரின் தனிச் சொத்தாக இருந்தால், அச்சொத்து தனிச் சொத்தில் உரிமை இறக்கம் எவ்வாறு செல்லுமோ அவ்வாறே செல்லும். ஆனால் இந்தப் பிரிக்க முடியாத சொத்துரிமை என்பது 1956–ம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தால் ஒழிக்கப்பட்டுவிட்டது.

பிரிக்க முடியாத சொத்துரிமையை நிரூபிக்கும் பொறுப்பு:

Martand Rao v. Malhar Rao[1] எனும் முக்கிய முந்தய வழக்கில் பிரிவி கவுன்சில் பிரிக்க முடியாத சொத்துரிமையை நிரூபிக்கும் பொறுப்பு பற்றிச் சில கோட்பாடுகளைத் தெளிவாக விளக்கியுள்ளது. ஒரு குறிப்பிட்ட சொத்து பிரிக்கக் கூடியதா அல்லது பிரிக்க முடியாததா என்று வினா எழும்போது, பிரிக்க முடியாதது என்று சொல்பவரே, அவ்வாறு அச்சொத்தை வைத்துக் கொள்ள அனுமதிக்கும் வழக்கம் இருக்கிறது என்பதையும், அதன்படி அச்சொத்துரிமை தனியொருவரின் கையிலேயே இருக்கும் என்பதையும், அது பாகப்பிரிவினைக்கு உட்படாதது என்பதையும் நிரூபிக்கவேண்டும்.

வீட்டில் உள்ள நடைபாதை, புனித விக்ரகங்கள் முதலியவை பாகப்பிரிவினை செய்ய முடியாதவையாகும். ஆனால் பிரிக்கப்படக் கூடிய சொத்து பிரிக்கப்படாமல் நீண்ட நாள் இருப்பது சாத்தியம் என்றாலும், ஒரு ஜமீன் முழுவதும் நீண்ட காலம் அப்படியே பிரிக்கப்படாமல் இருப்பது உரிமை இறக்கம் பற்றிய சாதாரண நடைமுறைச் சட்டம் அங்கு செயல்படவில்லை என்பதையே காட்டுவதாகும்.

-oOo-

1. (1928) 55 I.A. 45, 55

4 சமய மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை [Religious and Charitable Endowments]

Explain the conditions for the valid dedication of property for Hindu religious and charitable purpose. (இந்து மதம் மற்றும் அறப்பயனுக்காக செய்யப்படும் செல்லத்தக்க சொத்து அர்ப்பணத்தின் நிபந்தனைகளை விளக்குக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
சமய மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை
மேற்கண்ட அறக்கட்டளையை யார் அமைக்கலாம்?
செல்லத்தக்க சொத்து அர்ப்பனத்தின் நிபந்தனைகள்

முன்னுரை :

சொத்துக்கள் சமய நோக்கிற்காகவும் அறப்பயனுக்காகவும் அர்ப்பணிக் கப்படுவதுண்டு. சமய நோக்கு எனும் பொழுது அது இந்து சமயம் சார்ந்த, இந்துக் கடவுளுக்கு செய்யப்படும் அர்ப்பணமாக இருக்கலாம். ஒரு சொத்து முழுமையாக ஒரு கடவுளுக்கு அர்ப்பணிக்கப்படும் பொழுது, அச்சொத்தின் நிருவாகம் மற்றும் உடைமை, அக்கடவுள் உள்ள கோவிலைச் சார்ந்தது. இவ்வாறு அர்ப்பணிக்கப் படும் சொத்துக்களை எவ்வித பாராதீனமும் செய்ய முடியாது. அதாவது விற்றல், அடைமானம் வைத்தல் ஆகியவைகளைச் செய்ய முடியாது. விரிவாக வருமாறு.

சமய மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை (Religious and Chartibale Endowments) :

சமய மற்றும் அறப்பயனுக்காக அறக்கட்டளை என்பது ஒரு இந்து தனது சொத்தை சமய மற்றும் அறப்பயன் நோக்கங்களுக்காக அர்ப்பணிப்பதாகும்.

மேற்கண்ட அறக்கட்டளையை யார் அமைக்கலாம்?

இளவர் அல்லாத திட சித்தமுடைய (sound mind) ஒரு இந்து, கொடை யளிப்பதன் மூலமாகவோ அல்லது உயில் மூலமாகவோ தனது சொத்தை சமய

மற்றும் அறநோக்கங்களுக்காக எழுதி வைக்கலாம். அத்தகு நோக்கங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

1. கோயிலை உருவாக்கி கடவுளை வணங்குதல்
2. ஏழை எளியோர்களுக்கும் பிராமணர்களுக்கும் உணவளித்தல்
3. சமயச்சடங்குகளை நிறைவேற்றல்.
4. இலவச மருத்துவமனை அல்லது கல்லூரி கட்டுதல்

செல்லத்தக்க சொத்து அர்ப்பணத்தின் நிபந்தனைகள்:

1. சொத்து அர்ப்பணம் ஒரு இந்துவால் செய்யப்பட வேண்டும்.
2. அவர் இளவராக இருக்கக் கூடாது.
3. திட சித்தமுடையவராக இருக்க வேண்டும்.
4. அர்ப்பணம், கொடை மூலம் செய்யப்படலாம் அல்லது உயில் மூலமும் எழுதி வைக்கப்படலாம்.
5. சமய மற்றும் அறப்பயன் குறித்த நோக்கம் தெளிவாக வரையறுக் கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. சொத்தின் அர்ப்பணம் முழுமையாக (absolute) இருத்தல் வேண்டும்.
7. ஒரு முறை செய்யப்பட்ட அர்ப்பணத்தை இரத்து செய்யவியலாது.

-o0o-

பகுதி - III

இசுலாமியர் சட்டம்

[Muslim Law]

- இசுலாமிய சட்டத்தின் தோற்றமும் முலங்களும்
- திருமணம் (அல்லது) நிக்காஹ்
- மணக் கொடை (அல்லது) மஹர்
- திருமண முறிவு (அல்லது) தலாக்
- பெற்றோரதல்
- காப்பாளர் நிலை
- வாழ்க்கைப் பொருளுதவி (அல்லது) பராமரிப்பு

1 இசுலாமிய சட்டத்தின் தோற்றமும் மூலங்களும் [Origin and Sources of Islamic Law]

1.Explain the origin of Islam religion and its divisions. (இசுலாம் மதத்தின் தோற்றத்தையும் அதன் பிரிவுகளையும் விளக்குக.)

(அல்லது)

Hanafi School - Write short notes. (ஹனபி பிரிவு – சிறு குறிப்பு எழுதுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

இசுலாம் மதத்தின் மூலக் கொள்கை
முகம்மது நபி (சல்) அவர்களின் வரலாறு
கலீபாக்கள்
இசுலாம் மதத்தில் இரு பெரும் பிரிவினர்
சுன்னிப் பிரிவினர்
ஷீயாப் பிரிவினர்

இசுலாம் மதத்தின் மூலக் கொள்கை :

'அல்லாஹ ஒருவனே – அவன் உருவமற்றவன்; அவனுடைய திருத்தூதர் முகம்மது நபி (சல்)அவர்களே', என்பது இசுலாம் மதத்தின் மூலக் கொள்கையாகும் (சல் என்பது சல்லலாஹீ அலைஹி வஸல்லம் என்பதின் சுருக்கம். இதன் பொருள் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக என்பதாகும். நபி பெருமான் பெயருடன் இதைச் சேர்த்து சொல்வது வழக்கம்.)

முகம்மது நபி (சல்) அவர்களின் வரலாறு :

இசுலாம் தொன்றுதொட்டே உள்ள ஒரு மதம் என்றாலும், அதைப் பூர்த்தி செய்து, முழுமையாக்கித் தந்தவர் முஹம்மது நபி (சல்) (Prophet Muhammad) அவர்களே ஆவர். முஹம்மது நபி(சல்) அவர்கள், அரேபியாவில், உள்ள மெக்கா (Mecca) நகரில் கி.பி. 570–ல் பிறந்தார். அவர் தமது 40–ஆம் வயதில், மேற் குறிப்பிடப்பட்ட மூலக் கொள்கையையும், சில புதிய கொள்களையும், மெக்கா மக்களுக்கு போதித்தார். மேற்கண்ட மூலக் கொள்கையைத் தவிர **'ஐந்து வேளை தொழுகை செய்ய வேண்டும்', 'ஏழை வரி (ஜகாத்) கொடுக்க வேண்டும்',**

'ரமலானில் நோன்பு நோற்க வேண்டும்', 'இயன்றவர்கள் புனிதப் பயணம் (ஹஜ்ஜு) மேற்கொள்ள வேண்டும்,' 'வட்டி வாங்குவதோ, மது அருந்துவதோ, பெண்களைப் பிறப்பால் பேதப்படுத்துவதோ கூடாது', 'பெண்களுக்கு சம உரிமையும், சொத்தில் வாரிசுரிமையும் பங்கும் கொடுக்க தவறக் கூடாது', 'அவர்கள் விதவையானால் மறுமணம் செய்து கொள்ளுவதில் தடையில்லை' போன்ற புதிய கொள்கைகளையும் பரணையில் மூழ்கிக் கிடந்த மெக்கா நகர மக்கள் முன்னிலையில் வைத்தார். இதனை அவர்கள் ஏற்க மறுத்து முகம்மது நபிக்கு துன்பங்களை கொடுத்தனர். இன்னல்களை ஏற்படுத்தினர். இதனால் முகம்மது நபி அவர்கள் மெக்கா நகரை விட்டு தூரத்திலுள்ள மெதீனாவிற்கு இரவோடு இரவாய் புறப்பட்டார்கள். அன்று முதல்தான் (கி.பி. 622) இசுலாமியப் புத்தாண்டான 'ஹிஜிரி' தொடங்குகிறது. முகம்மது நபியின் போதனையை ஏற்றுக் கொண்டவர்களே, 'இசுலாமியர்கள்' என்றும், 'முஸ்லீம்கள்' என்றும் அழைக்கப்பட்டனர்.

கலீபாக்கள் (Caliph):

முகம்மது நபி அவர்கள் கி.பி. 632-ல் காலமானார். அவருக்கு பின் அவரது நண்பர் அபூபக்கர் (கி.பி. 632-634), தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கலிபாவானார். 'கலீபா' என்பவர்கள் முகமது நபியின் கொள்கைகளை பின்பற்றி வழி நடந்தவர்களாவார்கள். அபூபக்கரை அடுத்து உமர் (கி.பி. 635 - 644) இரண்டாவது கலிபாவானார், பின் உதுமான் (கி.பி. 645 - 656) என்பவர் மூன்றாவதாகவும், அலி (கி.பி. 657 - 661) நான்காவதாகவும் கலிபாவானார்கள்.

இசுலாம் மதத்தில் இரு பெரும் பிரிவினர்:

முகம்மது நபியின் போதனையை பின்பற்றுபவர்கள் இரு பெரும் பிரிவுகளாக உள்ளனர். அவர்கள் சுன்னி (Sunni) பிரிவினர், ஷியா (Shia) பிரிவினர் எனப்படுவர்.

(1) சுன்னி பிரிவினர் (Sunny School):

தேர்தல் மூலம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி செய்த கலிபாக்களை ஆதரித்து, மேலும் இம்முறையே தொடரவேண்டும் என்ற கொள்கையை உடையவர்களே சுன்னி முஸ்லிம்கள் எனப்பட்டனர். இவர்கள் சுன்னத் ஜமா அத் (Sunnite) எனவும் அழைக்கப்பட்டனர். இந்தியாவில் உள்ள இசுலாமியர்கள் இப்பிரிவினை சார்ந்தவர்கள்.

சுன்னிப் பிரிவில், 1. இமாம் அபூஹனிபா (Imam Abu Hanifa); 2. இமாம் மாலிக் (Imam Malik); 3. இமாம் ஷாபி (Imam Shafei); 4. இமாம் ஹன்பல் (Imam Hanbal); எனும் நான்கு மகான்கள் தோன்றினர். இவர்கள் கூறிய கொள்கையை பின்பற்றியவர்கள் முறையே ஹனபி, மாலிகி, ஷாபி, ஹன்பலி பிரிவினர் எனப்பட்டனர். சற்று விரிவாக வருமாறு.

(1) ஹனபி பிரிவினர் (Hanafi School): இமாம் அபூஹனிபா எனும் மகானின் (கி.பி. 699–767) கொள்கைகளை பின்பற்றுபவர்கள், ஹனபி பிரிவினர் ஆவர்.

ஹனபி பிரிவின் கோட்பாடுகள், 'ஹிதாயா' (Hedaya) எனும் நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் முதலில் அராபிய மொழியில் எழுதப்பட்டது. பின்னர் பெர்சிய மொழியிலும், பின்னிட்டு அதிலிருந்து ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது. ஆங்கில மொழி பெயர்ப்பை ஹாமில்டன் (Hamilton) எனும் அறிஞர் செய்தார்.

ஹனபி கோட்பாடுகளுக்கு மேலும் புகழ் சேர்த்தவர்களில் முக்கியமான வர்கள் ஹனபி பிரிவை ஏற்படுத்திய இமாம் அபூஹனிபா–வின் இரண்டு சீடர்கள் ஆவர். அவர்கள், (1) பாக்தாத் நகரின் தலைமைக் காஜியார் அபு யூசுப், (2) இமாம் முகம்மது. ஹனபி பிரிவில் எழும் அய்யப்பாடுகளுக்கு இவர்கள் பொருள் விளக்கம் அளித்தனர். அதற்காக இவர்கள் பின்பற்றிய விதமே அலாதியானது என்று கூறலாம். அதாவது ஹனபி பிரிவில் தோன்றும் ஒரு பிரச்சனைக்கு தீர்வளிக்கையில் இவர்கள் இருவரும் ஒருமித்துப் போனால், அப்பிரச்சனைக்கு அவரது ஆசான் கூறும் தீர்வே இறுதியானதாகக் கொள்வார்கள். அவ்வாறு அவர்கள் ஒத்துப் போகவில்லையானால், அவ்விருவர்களில் எவரது தீர்வு, அவர்களது ஆசானின் தீர்வுடன் ஒத்துப் போகிறதோ, அதை இறுதியாகக் கொள்வார்கள். ஒருவேளை மேற்கண்ட மூவருமே ஆளுக்கொரு முடிவெடுத்தால், அபு யூசுப்–பின் முடிவே இறுதியானதாகும்.

(2) மாலிகி பிரிவினர் (Maliki School): இமாம் மாலிக் (கி.பி. 713–795) எனும் மகான் இப்பிரிவை நிறுமாணித்தவர் ஆவார். இசுலாம் சட்டத்தின் முக்கிய மூலங்களுள் ஒன்று, 'இஜ்மா' ஆகும். இவர், இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இவர் தனது கோட்பாடுகளை 'கிதாப்–அட்–மௌவாட்டா' (Kitab-at-Muwatta) எனும் நூலில் விளக்கினார்.

(3) ஷாபி பிரிவினர் (Shafei School): மேற்கண்ட இமாம் மாலிக் எனும் மகானின் மாணவரே, இமாம் ஷாபி என்பவர் (கி.பி. 767 – 820) ஆவார். இவர் மேற்படி ஷாபி பிரிவை எகிப்தில் நிறுமாணித்தார். மேற்கண்ட 'இஜ்மா'–விற்கு மாலிக் கொடுத்த முக்கியத்துவத்தை விட மேலும் அதிகமான முக்கியத்துவத்தை, ஷாபி கொடுத்தார். இவரது கோட்பாடுகளிலிருந்து தோன்றியவைதாம் 'கியாஸ்' என்பதாகும். இதுவும் இசுலாம் சட்டத்தின் ஒரு மூலமாகக் கருதப்படுகிறது.

(4) ஹன்பலி பிரிவு (Hanbali School): மேற்கண்ட ஷாபி–யின் மாணவரே, ஹன்பலி எனும் மகான் ஆவார். இவர் பாக்தாத் நகரில் பிறந்தவர். இவரது கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள், ஹன்பலி பிரிவினர் என்றழைக்கப் பட்டனர். இப்பிரிவினர் சிரியா, பாலஸ்தீனம் ஆகிய தேசங்களில் உள்ளனர்.

(2) ஷியாப் பிரிவினர் (Shia School):

அலி அவர்களைத் தவிர ஏனைய மூன்று கலீபாக்களை ஷியாப் பிரிவினர் ஏற்றுக் கொள்ளவில்லை. அலி அவர்கள் நபிகள் நாயகத்தின் (முகம்மது நபி) மகள் பாத்திமாவை மணந்தவர். அவர்தான் உண்மையான முதல் கலீபா ஆவார் என்று கூறுபவர்கள் ஷியாப் பிரிவினர் ஆவர். இக்கொள்கையை பின்பற்றும் முஸ்லீம்கள் பெரும்பாலும் ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற தேசங்களில் உள்ளவர்.

ஷியாப் பெரும் பிரிவில் மூன்று சிறு பிரிவுகள் உள்ளன. அவை 1. ஜைதி (Zaidis) 2. இஸ்மாயில் (Ismail) 3. இதுன – அஷரி (Ithna-Ashari) எனப்படும் ஷியாக்கள், அலியை முதல் கலிபாவாக ஏற்றுக் கொள்கின்றனர். அய்ந்தாவது கலிபாவாக இமயஜைதை ஏற்றுக் கொள்ளும் ஷியாப் பிரிவினர் 'ஜைதி' எனப் படுவர். ஏழாவது கலிபாவாக இமாம் இஸ்மாயிலை ஏற்றுக் கொள்பவர்கள் 'இஸ்மாயிலி' எனப்பட்டனர். பன்னிரெண்டாவது கலீபாவாக இமாம் முகமது அபுல் காசிமை ஏற்பவர்கள், 'இதுன – அஷரி' கூட்டத்தினர் அல்லது 'பன்னிரு கூட்டத்தினர்' என அழைக்கப்பட்டனர்.

முடிவுரை:

முடிவாக, இந்தியாவில் உள்ள சுன்னி பிரிவைச் சார்ந்தவர்களில் ஹனபி அல்லது ஷாபி உட்பிரிவினர் அதிகம் வாழ்கின்றனர். ஷியாப் பிரிவினர், இதுன–அஷரி பிரிவைப் பின்பற்றுகின்றனர். மாலிகி மற்றும் ஹன்பலி பிரிவைப் பின்பற்றுபவர்கள் இந்தியாவில் இல்லை.

2. What are the sources of Mahommedan Law? (இசுலாமியர் சட்டத்தின் மூலங்கள் யாவை?)

(அல்லது)

The sources of Mahommedan Law - Write short notes. (முகம்மதிய சட்டத்தின் மூலங்கள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Sunna - Write short notes. (சுன்னா – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை

இசுலாம் சட்டத்தின் மூலங்கள்

(1) திருக்குர் ஆன் (2) சுன்னா அல்லது வழிமுறைத் தத்துவம்

(3) இஜ்மா (4) கியாஸ் (5) இஸ்திஹாசன் (6) பத்வா (7) வழக்கம்

இந்தியாவில் இசுலாமியர் சட்டம் ஏற்பட்ட விதம்

முன்னுரை:

இசுலாமியர் சட்டத்தின் மூலங்களாக, அதன் வளர்ச்சிக்கு உதவிய ஆதாரங்களாக பின்வரும் நான்கினைக் குறிப்பிடலாம்.

இசுலாம் சட்டத்தின் மூலங்கள் (Sources of Islam Law):

1. திருக்குர் ஆன் (Holy Quran):

இசுலாமியர்களின் வேத நூலாக கருதப்படும் 'திருக்குர் ஆன்' பல நல்ல நீதிக் கருத்துகளையும், அறிவுரைகளையும் கூறுவதுடன், இசுலாமியச் சட்ட வளர்ச்சிக்கு பெரிதும் உதவியுள்ளது. இது அராபிய மொழியில் எழுதப்பட்டதாகும். இது 6350 சொற்றொடர்களைக் கொண்டது. இச்சொற்றொடர்கள், ஆண்டவனால், 'ஜிப்ரில்' என்னும் தூதர் வழியாக முஹம்மது நபி(சல்) அவர்களுக்கு அருளப்பட்டவை. இவை அனைத்தும் ஒரே நேரத்திலோ, ஒரே சந்தர்ப்பத்திலோ அருளப்பட்டவையல்ல; அவ்வப்போது இசுலாமிய சமுதாயத்தில் எழுந்த கேள்விகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வாக, முஹம்மது நபி அவர்களுக்கு அருளப்பட்டதாகும். திருக்குர் ஆன் பல்வேறுபட்ட பொருள்களையும், கருத்துகளையும், இசுலாமியருக்கான சட்ட திட்டத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. குரானில் 40 வரிகளில் வாரிசுரிமை, திருமணம், விவாகரத்து, குழந்தைகளைப் பராமரித்தல், முதலானவை பற்றி கூறப்பட்டுள்ளன. **'திருக்குர் ஆன் கடவுளின் குரல்'** என்பதால், புனிதத்துவம் பெற்றதாகவும் சிறப்பானதாகவும் கருதப்படுகிறது. தமிழிலும் இது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

2. 'சுன்னா' அல்லது வழிமுறைத் தத்துவம் (Sunna or Tradition):

அவ்வப்பொழுது எழும் வினாக்களுக்கும், பிரச்சினைகளுக்கும் திருக்குர் ஆனில் விடை காண முடியாத பொழுது, முகம்மது நபி வாழ்ந்து காட்டிய முறையையோ அல்லது அவர்தம் வாழ்ந்த நாளில் அது பற்றி என்ன சொல்லியுள்ளார் என்பதையோ ஆதாரமாகக் கொண்டு, முகமதியச் சமுதாயத்தில் தோன்றும் வினாக்களுக்கும், பிரச்சனைகளுக்கும் விடை காண முற்படுதலே, **'சுன்னா'** எனப்படும்.

'சுன்னா' என்றால் வழிமுறைத் தத்துவம் என்று பொருள். இது மூன்று பிரிவாகும். அவை **1. சுன்னத்துல் பிஃல்** (நபிகள் நாயகம் தம் வாழ்நாளில் செய்து காட்டியவை), **2. சுன்னத்துல்கால்** (நபிகள் தம் வாழ்நாளில் இதை செய், இதை செய்யாதே என அறிவுறுத்தியதை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டவை.) **3. சுன்னத்துல் தக் ரீரு** (நபிகள் முன் அவர் மறுப்பின்றிச் செய்யப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை). இதனைத் திருக்குர் ஆனுக்கு அடுத்தாற்போலப் புனிதத் தன்மை கொண்டதாக இசுலாமியர் கருதுகின்றனர்.

முகம்மது நபி அவர்கள் திருக்குர் ஆனில் சொல்லப்பட்டவைகளைத் தமது வாழ்நாளில் கடைபிடித்து வாழ்ந்து காட்டி, மற்றவர்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தார்கள். இவ்வாறு அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிமுறைகள், பின்னர்த் தொகுக்கப்பட்டு 'ஹதீது'(Hadith) என்று அழைக்கப்படுகின்றன. திருக்குர் ஆனுக்கு அடுத்தபடியாக இசுலாமியச் சட்டப்பிரச்சனைகளுக்கு விடை காண 'ஹதீது' பெரிதும் பயன்படுகிறது. ஹதீதுகளில் உட்கிடையாக கிடைக்கும் நியதி 'சுன்னா' ஆகும்.

3. இஜ்மா (Ijma) :

திருக்குர் ஆன் ஹதீது இவைகளை நன்கு கற்றுணர்ந்தவர், இஸ்லாமியச் சட்டத்திலும் தத்துவங்களிலும் சிறப்பான அறிவு பெற்ற நுண்ணறிவாளராக கருதப்படுவார். இந்த நுண்ணறிவாளர்களிடையே ஒரு குறிப்பிட்ட கேள்வியிலோ அல்லது பிரச்சனையிலோ ஒருமித்த கருத்து நிலவுமானால் அது 'இஜ்மா' என்று அழைக்கப்படும். ஹனபி பிரிவினர் இதை இசுலாம் சட்ட வளர்ச்சிக்கு நல்லதோர் அடிப்படையெனக் கருதுகின்றனர்.

4. கியாஸ் (Quiyas):

மேற்கூறிய மூன்று ஆதாரங்கள் வழியாகவும் ஒரு பிரச்சனைக்கு வழி தெரியாவிடில், அந்த ஆதாரங்களில் ஒத்த தன்மையுடைய கருத்துக்களை ஊகித்துணர்ந்து பிரச்சனைகளுக்கு முடிவு காணும் தன்மை, 'கியாஸ்' என்று அழைக்கப்படுகிறது.

5. இஸ்திஹாசன் (Istihasan):

ஒரு சமயம் ஏமன் நாட்டிற்குப் புதிய நீதிபதியாக ஒருவர் நியமிக்கப்பட்டார். அந்த நீதிபதியிடம் முகம்மது நபியவர்கள், நீதி வழங்குவதற்கு திருக்குர்ஆனோ அல்லது என்னுடைய சொற்களோ, செயலோ உங்களுக்கு கிடைக்காவிட்டால், தாங்கள் எப்படி நீதி வழங்குவீர்கள்? என்று கேட்டார். அதற்கு நீதிபதி, "என்னுடைய பகுத்தறிவைப் பயன்படுத்தி மனசாட்சிக்கு ஒப்ப நீதி வழங்குவேன்" என்று கூறினார். இந்த பதிலைக் கேட்டு முகம்மது நபி அவர்கள் திருப்தி அடைந்தார். இசுலாமியச் சட்ட அடிப்படையில் நீதி வழங்கும்பொழுது, எந்த முறையில் பொருள் காண வேண்டும் என்பதை மேற்கண்ட குறிப்பு விளக்குகிறது. மேலும், நியாயம், நீதி, மனசாட்சி அடிப்படையில் நீதி வழங்குவது இசுலாமியச் சட்டத்திற்கு அப்பாற்பட்டதன்று என்பதும் இதிலிருந்து புலனாகும்.

6. பத்வா (Fatwas) :

மொகலாய மன்னரான அவுரங்கசீப்–ன் ஆட்சிக் காலத்தில் இசுலாமிய

நீதிபதிகளால், 'குர்ஆன்', 'சுன்னா', 'கியாஸ்' ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட நீதித் தீர்ப்புகள் நூலாகத் தொகுக்கப்பட்டு **'பத்வா ஆலம்கிரி'** என்னும் பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது. இது சட்ட அடிப்படைக்கு மூலாதாரமாகக் கொள்ளப்படாவிட்டாலும், இசுலாமிய சமுதாயத்தில் எழும் கேள்விகளுக்கும், பிரச்சனைகளுக்கும் விடை காணவல்ல ஒரு தொகுப்பாக விளங்குகிறது.

7. வழக்கம் (Custom) :

வழிவழி வந்து கொண்டு இருக்கும் வழக்கம், இசுலாமியச் சட்ட வளர்ச்சிக்கு மூலாதாரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறதா என்பதைப் பார்த்தால் இந்து மதச் சட்டம் எந்த அளவுக்கு வழக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறதோ அந்த அளவுக்கு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். முன்னர் இருந்து வந்த வழக்கங்களே இசுலாமியச் சட்டத்திற்கு மூலாதாரமாக இருக்கின்றனவே தவிர, தற்பொழுதைய சமுதாயத்தில் நடைமுறையில் உள்ள வழக்கங்கள் இசுலாமியச் சட்ட வளர்ச்சிக்கு மூலாதாரமாக இல்லை. ஆயினும் வழக்கம், இசுலாமியச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இசுலாமியர் சட்டம் ஏற்பட்ட விதம் :

மொகலாயர்கள் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இஸ்லாமியச் சட்டம் முதன்முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவர்களின் ஆட்சியில் இந்துக்களுக்கும், இசுலாமியர்களுக்கும் அவரவர் சட்டப்படியே நீதி வழங்கப்பட்டது. அதன் பின் ஏற்பட்ட ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் அந்நிலையே தொடர்ந்தது. 1772–ஆம் ஆண்டில் வாரன் ஹோஸ்டிங்ஸ் ஆட்சிக் காலத்தில் இந்துக்களுக்கு அவர்கள் சாத்திரங்களின்படியும், இசுலாமியர்களுக்கு திருக்குர்ஆனின் அடிப்படையிலும் நீதி வழங்கப்பட்டடு, **தனி இனத்தவர் சட்டம் (Personal Law)** தோன்ற வழி கோலப்பட்டது.

பின்வரும் சட்டங்களின் வாயிலாக இசுலாமியச் சட்டத்தில் அப்போதைக்கப்போது மாற்றங்கள் செய்யப்பட்டன.

1. இசுலாமியக் குற்றவியல் சட்டம், (இந்தியக்) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தால் மாற்றி வைக்கப்பட்டது.

2. இந்திய ஒப்பந்தச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டம் ஆகியவற்றுக்கு முரணான இசுலாமியச் சட்டங்கள் மாற்றப்பட்டன.

3. அடிமைகளைப் பற்றிய இசுலாமியச் சட்டம், 1843–ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அடிமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டது.

4. மத மாற்றத்தால் இசுலாமிய சட்டம் கூறும் உரிமையியல் திருத்த 1850 –ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட வகுப்புத் தகவின்மைச் சட்டத்தால் ஒழிக்கப்பட்டது.

5. 1875–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட உரிமை வயது அடைந்தோர் சட்டத்தின் மூலம் மஹர், திருமணம், திருமண முறிவு ஆகியவை நீங்கலாக மற்ற எல்லாவற்றிற்கும் இசுலாமிய உரிமை வயது வந்தோர் சட்டம் செல்லாததாக்கப் பட்டது.

6. 1929–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பால்ய விவாக தடைச் சட்டம் (The Child Marriage Restraint Act, 1929) அதில் குறிப்பிட்ட வயது வருமுன் திருமணம் செய்து கொள்ளும் இசுலாமியர்களை தண்டனைக்குள்ளாக்குகிறது.

7. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125 முதல்127 வரையிலான சட்டப் பிரிவுகள், இசுலாமியச் சட்டத்தில் வாழ்க்கைப்படி (ஜீவனாம்சம்) அளித்தலில் பெரும் மாற்றம் ஏற்படுத்தி உள்ளன.

3. Explain the scope and significance of the shariat Act 1937 in Mohammedan Law. (முகம்மதிய சட்டத்தில் 1937ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஷரியத் சட்டத்தின் பரவெல்லையையும் முக்கியத்துவத்தையும் விளக்குக.)

(அல்லது)

Explain the significance of shariat Act. (ஷரியத் சட்டத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக)

(அல்லது)

Examine the cirumstance that led to the passing of Shariyat Act and explain its leading provisions and subsequent statutory changes. (ஷரியத் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிவகுத்த சூழ்நிலைகளை ஆராய்ந்து அதன் முக்கிய சட்ட வகை முறைகளையும் அதன்பின் ஏற்பட்ட சட்ட மாறுதல்களையும் விளக்குக.)

(அல்லது)

"The effect to the Shariat Act, is to make all Muslim subject to the Muslim Law by the abolition of customery Law". Explain. ("வழக்கச் சட்டத்தை ஒழிப்பதன் மூலம் இசுலாமியர்கள் அனைவரையும் இசுலாம் சட்டத்திற்குட்படுத்துவதுதான் ஷரியத் சட்டத்தின் விளைவாகும்". விளக்குக.)

(அல்லது)

Shariat Act - Write short notes. (சரீயத் சட்டம் – சிறு குறிப்பு எழுதுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

ஷரியத் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிவகுத்த சூழ்நிலைகள்
ஷரியத் - விளக்கம்
1937-ஆம் ஆண்டு ஷரியத் சட்டத்தின் வகைமுறைகள் (அல்லது)
1937-ஆம் ஆண்டு ஷரியத் சட்டத்தின் முக்கியத்துவம்
இச்சட்டம் குறிப்பாக யார் யாருக்குப் பொருந்தும்?

ஷரியத் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் :

ஷரியத் சட்டம் வருவதற்கு முன்பு இந்திய இசுலாமியர்கள் பலதரப்பட்ட வழக்கங்களைச் சட்டமாகக் கடைபிடித்து வந்தனர். எடுத்துக்காட்டாக பஞ்சாப், குஜராத்தில் உள்ள முஸ்லிம்களும், கட்ச் பகுதியில் உள்ள மேமன்கள் ஆகிய இவர்கள் அனைவரும் இந்துவிலிருந்து இசுலாமியர்களாக மாறியவர்களே. இவர்கள் இசுலாமிய மதக் கோட்டுபாடுகளைத் தாங்கள் வாழும்பொழுது கடைப்பிடித்து வந்தாலும், அவர்கள் இறந்தபின், அவர்களின் சொத்துக்கள் இந்துச் சட்டத்தின் மிதாஷர முறையில் கூறப்பட்டுள்ளபடி பிரிக்கப்பட்டது. **நீதிப் பெருமகனார் ரஸ்ஸல்** அவர்களின் கூற்றுப்படி "கோஜா ஒரு வாழும் முஸ்லீமாகவும், இறந்தபின் ஓர் இந்துவாகவும் இருக்கிறார்", என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விதமாக இந்திய இசுலாமியர்களிடையே நிலவி வந்த பல்வேறு விதமான முரண்பட்ட பழக்க வழக்கங்கள் களையப்பட்டு, ஷியா, சுன்னி போன்ற அனைத்துப் பிரிவினருக்குமே பொருந்தும் விதமாக, இந்த ஷரியத் சட்டம் 6 பிரிவுகளைக் கொண்டு 1937–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாள் அமல்படுத்தப்பட்டது. இது இந்திய இசுலாமியருக்கு மட்டுமே உள்ள இனச் சட்டம் (Personal Law) ஆகும். இது வடமேற்கு எல்லையிலும், ஜம்மு – காஷ்மீரிலும் வாழும் இசுலாமியர்கள் நீங்கலாக, இந்தியாவில் வாழும் அனைத்து இசுலாமியர்களையும் கட்டுப்படுத்தும்.

ஷரியத் – விளக்கம் :

'ஷரியத்' என்னும் சொல்லுக்குப் பூர்ணத்துவத்திற்கு வழி என்று பொருள் கொள்ளலாம். இது இந்துச் சட்டத்தில் உள்ள **'தருமம்'** என்னும் சொல்லின் பொருளுக்குக் கிட்டதட்ட ஒத்து வருகிறது.

1937-ஆம் ஆண்டு ஷரியத் சட்டத்தின் வகைமுறைகள்

(அல்லது) 1937-ஆம் ஆண்டு ஷரியத் சட்டத்தின் முக்கியத்துவம்:

பிரிவு 1-ன்படி, இச்சட்டம் இசுலாமியர்களின் எல்லாச் சொத்துக்களுமே பொருந்தும். ஆனால் விவசாய நிலங்கள், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு வரும் உயில் வழிச் சொத்து, தரும காரியங்களுக்காக வழங்கப்படும் சொத்து (இதில் வக்ஃப் வாரியச் சொத்து அடங்காது) ஆகிய சொத்துக்களைத் தவிர ஏனைய சொத்துக்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

பிரிவு 2-ன்படி, இச்சட்டம் இயற்றப்படும் வரை இந்திய இசுலாமியர்களிடையே அதுவரை பின்பற்றப்பட்டு வந்த வழக்கமும், வழக்காறுகளும் ஒழிக்கப்பட்டன. இச்சட்டத்தால் சில இசுலாம் சமூகத்தினரால் கடைபிடிக்கப்பட்டு வந்த உயில் வழிச் சொத்து பாதிப்படையவில்லை. கணவன் இறந்தபின் மனைவிக்கு வரும் சொத்தில், மனைவிக்கு முழு உரிமை உண்டு. இச்சட்டம் வருமுன் மனைவி பெயரளவிற்குத்தான் இவ்வகையான சொத்திற்கு உரிமையாளராக இருந்தாள். ஆனால் இச்சட்டத்தால் இம்முறை அகற்றப்பட்டது.

பின்வரும் பத்து விஷயங்கள் இச்ஷரியத் சட்டத்தை பின்பற்றி அமைந்திருக்க வேண்டும். அவை :

1. உயில்இல்வழி உரிமை இறக்கம் (Intestate succession)
2. பெண்களுக்கான சிறப்பு சொத்து
3. திருமணம் (Marriage)
4. திருமண இழப்பு
5. வாழ்க்கைப்படி (ஜீவனாம்சம்)
6. மஹர்
7. காப்பாளராதல் (Guardianship)
8. கொடை
9. பொறுப்புரிமை அமைப்பும் அதன் சொத்தும் (Trust)
10. வக்ஃபு (Wakf)

பிரிவு 3-ன்படி, பின்வரும் மூன்று விஷயங்களைப் பொறுத்தவரை அதாவது 1. உயில், 2. தத்தெடுத்தல் 3. வாரிசுரிமை (Legacies) ஆகியவற்றைப் பொறுத்து ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதி படைத்த ஒரு இசுலாமியர், 1937-

க்குப் பின் இச்சட்டத்தை ஏற்பதாக உறுதிமொழி அளித்தால்தான் இச்சட்டம் அவனுக்குப் பொருந்தும். அப்படி உறுதிமொழி கொடுக்காத நிலையில் அவன் இறந்து போனால், அவனுடைய சொத்து வழக்காறுகளின்படி பிரிக்கப்படும். வேறுவிதத்தில் கூறுவதாகயிருந்தால் பிரிவு 3–ல் கூறப்பட்ட மூன்று விஷயங்களைப் பொறுத்தவரையில் ஒரு இசுலாமியர் விரும்பினால் இசுலாமியச் சட்டத்தைப் பின்பற்றி நடக்கவும், விரும்பாவிட்டால் வழக்கங்களையும் வழக்காறுகளையும் பின்பற்றவும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

பிரிவு 4–ஆனது, இச்சட்டத்தின்படி தேவைப்படும் சட்டங்களை இயற்றிக் கொள்ள மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

இச்சட்டம் குறிப்பாக யார் யாருக்கு பொருந்தும் ?

1. சொத்து குறித்த வழக்கில் வாதியும், பிரதிவாதியும் ஒரே பிரிவில் (அதாவது சுன்னி அல்லது ஷியா பிரிவில்) இருந்தால், அப்பொழுது இச்சட்டம் பொருந்தும்.

2. வாதியும், பிரதிவாதியும் வெவ்வேறு பிரிவைச் சார்ந்திருந்தால் பிரதிவாதி உள்ள பிரிவுக்குத்தான் இச்சட்டம் பொருந்தும்.

3. வேறு மதத்தில் இருந்து இசுலாமிய மதத்திற்கு மாறியவர்களுக்கும் இந்த ஷரியத் சட்டம் பொருந்தும்.

4. பிரிவு மாறிய இசுலாமியர்கள், மாறிய பிரிவைத்தான் கடைபிடிக்க வேண்டும்.

இச்சட்டத்தின் பயன்பாடு குறித்து விளக்கிய முக்கிய வழக்கு:

Mohamed Sandhukhan v. Ratnam[1]

1937–ஆம் ஆண்டின் மேற்படி ஷரியத் சட்டத்தின் 2–வது பிரிவில் கூறப் பட்டுள்ள மேற்படி பத்து விஷயங்களைத் தவிர உள்ள மற்ற விஷயங்களுக்குப் இசுலாம் சட்டமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அச்சட்டம் குறிப்பிடுவதாகக் கருதக் கூடாது என்று மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

அதாவது மேற்படி சட்டத்தின் பிரிவுகள் 2 மற்றும் 3–ல் கூறப்பட்டுள்ள விஷயங்களைத் தவிர, மற்ற விஷயங்களில் நடைமுறையில் இருக்கும் வழக்கங்களையும், வழக்காறுகளையும் இச்சட்டம் ஒழித்துவிடவில்லை.

மேலும் இச்ஷரியத் சட்டம் உயில் எழுதாது விட்டுச் சென்றவர்களின்

1. A.I.R. 1958 Mad. 144

சொத்துரிமையையும், அதிகாரத்தையும் மிகுதிப்படுத்தவில்லை. உமில்இழ்வழி சொத்தில் இசுலாமியப் பரம்பரைச் சொத்துரிமைச் சட்டப்படி, வாரிசுகளுக்குச் சொத்துரிமை இறக்கம் இருந்தால், ஷரியத் சட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்க வாரிசுகளுக்குப் பங்கு அளிக்க வேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மட்டும், இச்சட்டத்தின் விதிமுறைகளுக்கு மாறுபட்டுச் செல்லும் வழக்கங்களும், வழக்காறுகளும் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. இவ்வாறு மேற்படி வழக்கில் தீர்ப்புரைக்கப்பட்டது.

-o0o-

2 திருமணம் (அல்லது) நிக்காஹ் [Marriage (or) Nikah]

1.Define " Nikah". What are the legal incidence of a valid Mohammaden Marriage. ("நிக்காஹ்" என்பதை வரையறு. ஒரு முறையான முகம்மதிய திருமணத்தின் சட்ட விளைவுகள் யாவை?)

(அல்லது)

"Marriage among Mohammedan is not a sacrament, but purely a civil contract". Comment. ("முகம்மதியர்களுக்கிடையே திருமணம் புனிதத் தன்மை உடையது அல்ல. ஆனால் முழுவதும் ஒரு உரிமையியல் ஒப்பந்தமே" – மதிப்பிடுக.)

(அல்லது)

"Marriage in Islam is only a contract and not a sacramental function". Critically examine this statement and state the legal effects of valid and irregular Marriage. ("இசுலாமியத் திருமணம் என்பது ஒரு ஒப்பந்தமே அன்றி ஒரு புனிதமான நிகழ்வு அல்ல". இக்கூற்றை கூர்ந்தாராய்ந்து, செல்லத்தக்க மற்றும் தவிர்தகு திருமணத்தின் சட்ட விளைவுகளைக் கூறுக.)

(அல்லது)

"Marriage among Mohammedans is not a sacrament; but purely a civil contract" - Elaborate this statement and point out the various kinds of marriage under Islamic Law". ("முகம்மதியர்களிடையே திருமணம் என்பது ஒரு வாழ்க்கை ஒப்பந்தமே தவிர புனிதச் சட்டங்கல்ல"– இக்கூற்றினை விரிவாக்கி இஸ்லாம் சட்டத்தின் கீழ் நடக்கும் திருமணத்தின் பல்வேறு வகைகளை சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

State the essential requirements of a valid Muslim Marriage. ("நிக்காஹ்" வரையறு. செல்லத்தக்க இஸ்லாமிய திருமணத்திற்கு அவசியமாக தேவையானவைகளைக் கூறுக.)

(அல்லது)

Explain the postion of irregular marriage in Sunni and Shia Law. How an irregular Marriage becomes a valid Marriage?

(சன்னி மற்றும் ஷியாச் சட்டத்தில் ஒழுங்கற்ற திருமணத்தின் நிலையை விளக்குக. ஒழுங்கற்ற திருமணம் எவ்விதம் செல்லத்தக்க திருமணமாகிறது?)

(அல்லது)

Distinguish between valid and void marriages under the Mohammedan Law pointing out the circumstances in which a marriage is considered irregular. (இசுலாமியச் சட்டத்தின் கீழ் ஒரு திருமணம் எப்பொழுது ஒழுங்கற்றதாக கருதப்படும் என்பதை சுட்டிக்காட்டி, செல்லத்தக்க மற்றும் இல்லாநிலை திருமணங்களுக்கிடையிலான வேறுபாடுகளைக் கூறுக.)

(அல்லது)

Define 'Nikah'. Distinguish between valid, irregular and void marriages under the Mohammedan Law. ('நிக்காஹ்' என்பதை வரையறு. முகம்மதியர் சட்டத்தின் கீழ் முறையான, முறையற்ற மற்றும் இல்லா நிலையது திருமணங்களுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளைக் கூறுக.)

(அல்லது)

Distinguish between valid, irregular and void marriages under the Islamic Law. (முகம்மதியர் சட்டத்தின் கீழ் முறையான, முறையற்ற மற்றும் இல்லா நிலையது திருமணங்களுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளை எடுத்துக்காட்டு.)

(அல்லது)

Narrate the restrictions laid down by Mohammedan law as regards Marriage. (இசுலாமியச் சட்டத்தால் திருமணம் குறித்து விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை விவரிக்க.)

(அல்லது)

Option of Puberty - Write short notes. (பருவம் அடைந்தோர் விருப்புரிமை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Fasid Marriage - Write short notes. (பாசித் திருமணம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Batil Marriage - Write short notes. (பேட்டில் திருமணம் – சிறு குறிப்பு எழுதுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

நிக்காஹ் - வரையறை
இசுலாம் சட்டப் பிரிவின் விளக்கம்
இசுலாம் திருமணம் நடைபெறும் விதம்
நிக்காஹ் நடைபெற்றதை மெய்ப்பிக்கும் சான்று
இசுலாம் திருமணம் ஓர் வாழ்க்கை ஒப்பந்தம் - எவ்வாறு?
கியாருல் புலூக் அல்லது பருவமடைந்தோர் விருப்புரிமை
கணவனது கியாருல் புலாக் உரிமை
நீதிமன்ற தீர்ப்பாணையின் முக்கியத்துவம்
இசுலாம் திருமணத்தின் வகைகள்
(1) செல்லும் திருமணம் (ஸஹீஹ்)
செல்லும் திருமணத்தின் சட்ட விளைவுகள்
(2) இல்லாத் திருமணம் (பேட்டில்)
(அ) இரத்த சம்பந்தம் உடையவர்கள்
(ஆ) கொள்ளுறவு
(இ) பாலூட்டி வளர்த்த செவிலித்தாய் முறை
(ஈ) பல கணவரை மணத்தல்
இல்லா நிலைத் திருமணத்தின் விளைவுகள்
(3) ஒழுங்கற்ற திருமணம் (ஃபாஸிட்)
(அ) அய்ந்தாவது மனைவியை மணந்து கொள்ளுதல்
(ஆ) தக்க சாட்சிகள் இல்லாத் திருமணம்
(இ) சட்ட முரணான சேர்க்கை
(ஈ) இத்தா இருத்தல்
(உ) மத வேறுபாடு
(ஊ) இடைப்பட்ட நிகழ்ச்சியால் முறைகேடாதல்
(எ) வேறு காரணங்கள்
ஒழுங்கற்ற திருமணத்தால் ஏற்படும் விளைவுகள்
ஒழுங்கற்ற திருமணம், செல்லத்தக்க திருமணமாகும் விதம்
செல்லும் திருமணம், இல்லாநிலைத் திருமணம், ஒழுங்கற்ற திருமணம் - வேறுபாடுகள்

நிக்காஹ் – வரையறை :

இசுலாம் மொழியில் 'நிக்காஹ்' என்றால், 'திருமணம்' என்று பொருள்படும். பொதுவாக இசுலாமியர்களிடையே திருமணம் என்பது ஒரு வாழ்க்கை ஒப்பந்தமே தவிர இந்துத் திருமணத்தைப் போன்று புனிதத்துவமான

சடங்குகள் நிரம்பியது அல்ல. வேறுவிதத்தில் சுருக்கமாக கூறுவதானால், இசுலாமியர் சட்டப்படி திருமணம் என்பது, காலவரையற்ற ஆண்–பெண் வாழ்க்கை ஒப்பந்தம் ஆகும் (Civil contract). ஆணும் – பெண்ணும் திருமணம் புரிந்து கொண்டு இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளவும், குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவும் உள்ள ஒரே வழி நிக்காஹ் மட்டுமேயாகும். இசுலாம் திருமணம் ஒரு வாழ்க்கை ஒப்பந்தம் என்றாலும் அது ஒப்பந்தம் செய்து கொள்வோருக்கும் அவர்களுடைய வழித் தோன்றல்களுக்கும், சமுதாயத்தில் ஓர் அந்தஸ்தை ஏற்படுத்துகிறது. உரிமைகளையும், கடமைகளையும் உண்டாக்குகிறது.

இசுலாம் சட்டப் பிரிவின் விளக்கம் :

இசுலாம் சட்டத்தின் **250–வது பிரிவு** திருமணம் என்பதை பின்வருமாறு வரையறுக்கிறது. அஃதாவது, "குழந்தைப் பிறப்பு மற்றும் அக்குழந்தைகளுக்கு சட்டத்தகு நிலையளித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு ஒப்பந்தமே, நிக்காஹ் ஆகும்"[1] என்கிறது. இதே கருத்து **Abdul Kadir v. Salima**[2] என்ற வழக்கில், "திருமணம் என்பது சாதாரண வாழ்க்கையை வாழ்ந்து, பிள்ளைகளைப் பெற உள்ள வழியேயாகும்" எனக் கூறப்பட்டது.

இசுலாம் திருமணம் நடைபெறும் விதம் :

இசுலாமியத் திருமணம் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாவதால், அதில் ஒப்பந்தத்தின் கூறுகளும் காணப்படுகின்றன. திருமணம் செய்துகொள்ள சம்மதமா (consent) என புரிவுரை (proposal) விடுப்பது, அதற்கு சம்மதமெனின் புரிவுரையை ஏற்பது (acceptence) போன்று சில சடங்குகள் நடைபெறுகின்றன. இந்தியாவில் இசுலாமியத் திருமணங்கள் எங்ஙனம் நடைபெறுகிறது என்பதை பின்வருமாறு பார்ப்போம்.

இசுலாமியச் சட்டப்படி மணமகளோ, அவளது முகவரோ (Agent), மணமகனோ, அவனது முகவரோ (Agent) இரு சாட்சிகள் முன்னிலையில் இசைவு தெரிவிக்க வேண்டும். இந்தியாவில் 'பர்தா' முறை நடைமுறையில் இருப்பதால் பெண்கள் வெளியே வந்து தம் இசைவினை வெளிப்படுத்துவது இல்லை. எனவே மணவிழாவின்போது, மணமகளின் தந்தையோ, அவரை ஒத்த நெருங்கிய உறவினரோ இரு சாட்சிகளை தம்முடன் அழைத்துக் கொண்டு, மணமகள் இருக்கும் இடம் சென்று **'மணமகன் உன் பொருட்டாக இவ்வளவு மஹர்த் தொகை கொடுத்து உன்னை திருமணம் முடிப்பதாகச் சொல்கிறார். உனக்குச் சம்மதமா?'** என்று உடன் வந்த இரு சாட்சிகளின் காதிலும் விழுமாறு

1. Marriage (nikah) is defined to be a contract which has for its object the procreation and the legalizing of children. - Definition of Marriage. Section 250 of Mahomedan Law.
2. (1886) 8 All. 149

கேட்பார். அவள் சம்மதம் என்று வாயால் சொல்லவோ, அதற்கு அறிகுறியாக சம்மதித்துத் தலையை ஆட்டினாலோ, உள்ளே சென்ற மூவரும் வெளியே வந்து 'முல்லா' முன்பு அமருவார்கள். பின்னர் 'முல்லா' அவர்கள், **'இந்தப் பெண்ணை இவ்வளவு மஹர்த் தொகை தந்து திருமணம் செய்து கொள்ளச் சம்மதமா?'** என்று மாப்பிள்ளையிடம் கேட்பார்கள். சம்மதம் என்று அந்த மாப்பிள்ளை சொன்னால், உள்ளே சென்று வந்த உறவினரிடம் பெண்ணின் விருப்பம் என்ன என்று கேட்பார்கள். இரண்டு சாட்சிகள் முன்னிலையிலும் அவர் பெண்ணின் சம்மத்தை தெரிவிப்பார். மணமகளின் இசைவு பெற்ற முகவர்தானா (Agent) என்று சந்தேகம் ஏற்பட்டால், சாட்சிகள் முன்னிலையில் கேள்விகள் கேட்டு அய்யம் நீங்க உறுதிப்படுத்தி, மணமகள் தரப்பிலும், மணமகன் தரப்பிலும் முழுச் சம்மதம் கிடைத்த பின்னர், முல்லா வாழ்த்துக்கள் கூற, நிக்காஹ் இனிதே நிறைவு பெறுகிறது.

நிக்காஹ் நடைபெற்றதை மெய்ப்பிக்கும் சான்று :

பெரும்பாலான ஊர்களில் 'நிக்காஹ்' பதிவுப் புத்தகம் என்று ஒன்று உள்ளது. அதில் திருமண நாள், மணமக்களின் பெயர், பெற்றோர் பெயர், மஹர் போன்ற விபரங்களை எழுதி, இரண்டு சாட்சிகள் முன்னிலையில் மணமக்களின் கையெழுத்தையும், சாட்சிகளின் கையெழுத்தையும் வாங்கிக் கொள்கின்றனர். இது திருமணம் நடைபெற்றதை மெய்ப்பிக்கும் சான்றாக அமைகிறது.

இசுலாம் திருமணம் ஓர் வாழ்க்கை ஒப்பந்தம் - எவ்வாறு?

இசுலாமிய திருமணம் ஓர் வாழ்க்கை ஒப்பந்தமாவதால் அதில் ஒப்பந்தத்தின் சில கூறுகள் காணப்படுகின்றன. முனைவு (offer), ஏற்பு (acceptance), ஒப்பந்தத் தகுதி போன்ற ஷரத்துக்கள் இசுலாமிய நிக்காஹ்வில் உள்ளன. இசுலாம் திருமணத்தில் மணமக்களில் ஒருவர் திருமணத்திற்கான புரிவுரையை (proposal - offer) முன்வைக்க, மற்றவர் அதை ஏற்றுக் கொண்டால் (acceptance) அக்கணமே திருமணம் நிறைவேறிவிடுகிறது. மணமக்கள் இருவரும் கணவன் மனைவியார் ஆகிவிடுவர். இருவரின் இசைவும் தன்னிச்சையானதாக (voluntary consent) இருக்க வேண்டும். தூண்டுதலோ, வற்புறுத்தலோ, மிரட்டலோ சிறிதளவுகூட இருக்கக் கூடாது. மணமக்கள் 15 வயது நிரம்பியவர்களாகவும் தெளிந்த சித்தம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு இல்லையெனில் அவர்களின் சார்பாக திருமணக் காப்பாளர்கள் (ஐபர்) இசைவு தெரிவிக்க வேண்டும். **('ஐபர்' பற்றி பின்னர் வரும் அத்தியாத்தில் விரிவாகக் காண்க).** திருமணத்திற்கான முனைவு (offer) ஒரு சமயத்திலும், ஏற்பு (acceptance) மற்றொரு சமயத்திலும் நடந்தால் அது செல்லத்தக்கதல்ல. பெண் பருவம் எய்தியிருந்தால் (15 வயது நிரம்பியிருந்தால்) பெற்றோரின் சம்மதமின்றி திருமணம் நடைபெறுவது செல்லும். இங்கு 'கியாருல்

புலூக்' என்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளல் அவசியம்.

கியாருல் புலூக் அல்லது பருவமடைந்தோர் விருப்புரிமை (Khyar-ul-bulugh or Option of Puberty):

பருவம் அடையும் முன் (15 வயதிற்கு முன்) ஒரு பெண்ணைத் திருமணக் காப்பாளர்கள் (அப்பெண்ணின் தந்தையோ அல்லது தந்தையின் தந்தையோ அல்லது சகோதரனோ அல்லது தாயோ அல்லது தாயின் உடன் பிறந்தவர்களோ அல்லது அரசாங்கமோ) இசைவு தந்து, திருமணம் செய்து கொடுத்தால் அவள் பருவம் அடைந்தபின், அத்திருமணத்தை ஏற்றுக் கொள்வதாகச் சம்மதம் அளிக்கலாம். அல்லது ஒருவேளை அத்திருமணத்தை அவள் விரும்பாவிட்டால், தனது திருமண உறவை முறித்துக் கொள்ளலாம். இதுபற்றி 1939–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இசுலாம் திருமண இழப்புச் சட்டத்திலும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இசுலாம் பெண்ணொருத்தி தனது திருமண உறவை முறித்துக் கொள்ள வேண்டுமெனில், அவள் பின்வருவனவற்றை மெய்ப்பிக்கவேண்டும். அஃதாவது,

1. தந்தை அல்லது காப்பாளரால்தான் அவளது திருமணம் நடத்தி வைக்கப்பட்டது என்பதை மெய்ப்பிக்கவேண்டும்.

2. தனக்கு 15 வயது முடிவுறு முன்னரே திருமணம் நடந்துவிட்டது என்பதை அப்பெண் நிரூபித்தல் அவசியம்.

3. அப்படிப்பட்ட திருமணம் உடலுறவால் பூர்த்தியாக்கப்படாதிருக்க வேண்டும்.

4. பருவம் அடையாமுன் நடத்தப்பட்ட திருமணத்தை அப்பெண் விரும்பாவிட்டால் தனது 18 வயதிற்குள், தனக்கு நடைபெற்ற திருமணத்தை முறித்துக் கொள்ள அவள் முயல வேண்டும்.

மேற்படி நிகழ்வில் அப்பெண்ணின் காப்பாளர், 1. தீங்கிழைக்கும் கவனக் குறைவுடனோ (Negligently); அல்லது 2. மோசடியான கருத்துடனோ (Fraudulently); அல்லது 3. பாதகமான செயலைச் செய்யும் எண்ணத்துடனோ செயல்பட்டிருந்தால், அதைக் காரணம் காட்டி, பருவம் எய்தியோர் விருப்புரிமையை (Option of puberty) பயன்படுத்தி நடத்திவைக்கப்பட்ட திருமணத்தை முறித்துக் கொள்ளலாம்.

இசைவு தெரிவித்தவர்கள், திருமணக் காப்பாளர்களாக அதாவது தந்தை, தந்தையின் தந்தை சகோதரன் போன்றவர்களாக இல்லாது போனால், உரிமை வயது எய்தப் பெற்றவர், காரணம் எதுவும் காட்டாமல் நடத்தி வைக்கப்பட்ட திருமணத்தை இல்லாத் திருமணம் என்று முறித்துக் கொள்ள முடியும். ஆனால் தந்தையோ, தந்தையின் தந்தையோ இசைவு தந்திருந்தால் திருமணத்தை முறித்துக் கொள்ள, தக்க காரணம் காட்டப்படவேண்டும்.

Hassan Kutti v. Jainabha[1] – இவ்வழக்கில் ஒரு கன்னிப் பெண்ணின் திருமண ஒப்பந்தத்திற்கு பெற்றோரின் இசைவு தேவையெனில் பெண்ணின் இசைவு தேவையற்றதா, எனும் வினா எழுந்தது. காப்பாளர் தெரிவிக்கும் இசைவு பெண்ணின் இசைவினை உறுதிப்படுத்துவதற்கே அன்றி, வேறுபட்டு முரண்பாடாக செல்வதற்கன்று. எவ்விஷயத்திற்கும் பெண்ணின் இசைவே முக்கியம். அதை உறுதிப்படுத்தலே காப்பாளரின் இசைவு துணை நிற்கிறது. இதன் நோக்கம் யாதெனில் பெண்கள் பலபேர் முன்னிலையில் திருமணத்திற்கு தங்கள் இசைவினைத் தெரிவிக்க கூச்சப்படுவார்கள். ஆகவே காப்பாளர் அல்லது பெற்றோர் அவளுடைய இசைவைப் பெற்று, அவள் சார்பாகத் தாமே இசைவே வெளிப்படுத்தி நிற்கிறார். அவ்வளவுதான். எனவே, கன்னிப் பெண்ணின் இசைவு அவசியம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

Beharam Khan v. Akhtar Begam[2] – இவ்வழக்கில் பருவம் அடையா முன்பே திருமணம் செய்து வைக்கப்பட்ட பெண் தன் கணவனுடன் குடும்ப வாழ்க்கையை (உடலுறவு) நடத்தியிருந்தாலும், அவள் விரும்பினால் பருவம் அடைந்தபின் தனது 18 வயதிற்குள் அத்திருமணத்தை முறித்துக் கொள்ளலாம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

கணவனது கியாருல் புலாக் உரிமை:

இசுலாமியக் கணவனும் மேற்படி பருவமடைந்தோர் விருப்புரிமையை (கியாருல் புலூக்) பயன்படுத்தி, திருமண முறிவு பெறலாம். ஆனால், கணவன் தனது பருவ வயதிற்கு முன் நடந்த திருமணத்தை விலக்கிக் கொள்ள அவனுக்கு எவ்வித காலவரம்போ, வயதோ நிர்ணயிக்கப்படவில்லை. அவன் விரும்பிய பொழுது அத்திருமணத்தை விலக்கிக் கொள்ளலாம். கணவன் தன் அதிகாரத்தைச் செயல்படுத்த, அவன் பருவமடைந்திருக்க வேண்டும். கணவன் மஹர்ப் பணத்தைச் செலுத்திவிட்டால் திருமணத்தை முறித்துக் கொள்ளலாம்.

நீதிமன்ற தீர்ப்பாணையின் முக்கியத்துவம் :

இறுதியாக பருவமடைந்தோர் விருப்புரிமை குறித்த ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் ஆணோ, பெண்ணோ பருவம் அடையவில்லை என்று நினைப்பதால் மட்டுமோ அல்லது தாங்களே எடுக்கும் முடிவால் மட்டுமோ தகுந்த காரணங்களைக் காட்டி, நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் தீர்ப்புாணை பெற்ற பிறகுதான், அத்திருமண உறவிலிருந்து விலகிக் கொள்ளமுடியும்.

இசுலாம் திருமணத்தின் வகைகள் (Classification of Islamic Marriage):

1. 1929, 52 Mad.39
2. (1951) Lah. 656.

சுன்னிச் சட்டப்படி, இஸ்லாமியர்களிடையே நடைபெறும் திருமணம் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது என **பிரிவு 253** கூறுகிறது. அவை வருமாறு,–

1. செல்லும் திருமணம் (Valid Marriage) – ஸஹீஹ் (Shih)

2. இல்லாத் திருமணம் (Void Marriage) – பேட்டில் (Batil)

3. ஒழுங்கற்ற திருமணம் (Irregualr Marriage) – ஃபாஸிட் (Fasid)

1. செல்லும் திருமணம் (ஸஹீஹ்) :

இசுலாம் திருமணம் என்பது இருபாலரின் வாழ்க்கை ஒப்பந்தம் என்று முன்னர்க் கண்டோம். இதனால் எந்த ஆணும், எந்தப் பெண்ணையும் மணந்து கொள்ளலாம் என்பதல்ல. அதற்கு சில கட்டுப்பாடுகளும், நிபந்தனைகளும், விதிக்கப்பட்டுள்ளன. எந்த தனிச் சட்டத்தை (Personal Laws) எடுத்துக் கொண்டாலும், மனிதாபிமான அடிப்படையில் ஒழுக்கத்தைப் பேணுவதற்குத் திருமணம் செய்து கொள்வோரிடையே சில கட்டுப்பாடுகளும், தடைகளும், விதிகளும் இருப்பதைக் காணலாம். இசுலாமியச் சட்டமும் யார், யாரை மணந்து கொள்ளலாம், மணந்து கொள்ளக்கூடாது என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுகிறது. ஒரு செல்லத்தக்க இசுலாமியத் திருமணத்திற்கு தேவையான கூறுகளைப் பற்றிக் குறிப்பிட வேண்டுமெனில், இத்தகு தடைகளும் விதிகளும் கட்டுப்பாடுகளுமேயாகும். இதற்கு உட்பட்டு ஒரு இசுலாம் திருமணம் நடைபெற்றால், அது செல்லும் திருமணம் (Valid Marriage) என்றழைக்கப் படுகிறது. இதனை மீறி நடந்தால் அது இல்லாநிலைத் (அதாவது செல்லாத்) திருமணமாகவும் (Void Marriage), ஒழுங்கற்ற திருமணமாகவும் (Irregular Marriage) ஆகிவிடுகிறது.

செல்லும் திருமணத்தின் சட்ட விளைவுகள் (Legal incidence of a valid marriage):

இசுலாம் சட்டத்தின் **265–வது பிரிவின்படி**, ஒரு செல்லும் இசுலாமியத் திருமணத்தால் சில சட்ட விளைவுகள் ஏற்படுகின்றன. அதாவது அவை கணவன்–மனைவிக்கிடையே சில உரிமைகளையும், கடமைகளையும் ஏற்படுத்துகின்றன. அவ்விளைவுகள் வருமாறு.

(a) மனைவி மஹரைப் பெற உரிமை படைத்தவராகிறாள்;

(b) மனைவி வாழ்க்கைப் படித் தொகை (ஜீவனாம்சம்) பெற உரிமை பெறுகிறாள்;

(c) மனைவி, கணவனின் வீட்டில் தங்கி வாழும் உரிமை உடையவளா கிறாள்.

(d) மனைவி கணவனுக்கு கீழ்ப்படிந்தும், நம்பிக்கைக்கு பாத்திரமாகவும் நடக்க வேண்டிய பொறுப்புடையவளாகிறாள்.

(e) கணவனுடன் உடலுறவில் ஈடுபட மனைவி அனுமதி தர வேண்டும்.

(f) மனைவி இத்தா இருக்க கடமைப்பட்டவளராகிறாள்.

(g) கணவன்–மனைவி இருவருக்கும் சம்பந்தப்பட்டவர்களிடையே தடுக்கப்பட்ட உறவுமுறையைத் தோற்றுவிக்கிறது.

(h) இறங்குரிமையைப் (inheritance) பொறுத்து கணவன் மனைவி இருவருக்கும் பரஸ்பர உரிமைகள் ஏற்படுகின்றன.

2. இல்லா நிலைத் திருமணம் (பேட்டில்) :

ஒரு இசுலாமியத் திருமணம் பின்வரும் நிலைகளில் இல்லா நிலைத் திருமணமாகும். அவை வருமாறு.

(அ) இரத்த சம்பந்தம் உடையவர்கள் (Consanguinity):

கீழ்க் குறிப்பிடப்படுபவர்கள் இரத்தத் தொடர்புடையவர்கள் ஆவார்கள். இவர்களை ஒரு இசுலாம் ஆண் மணந்து கொள்ளக்கூடாது. அவ்வாறு மணந்தால் அது இல்லாநிலைத் திருமணமாகிவிடும் (Void) என பிரிவு 260 கூறுகிறது. அத்தகு இரத்த சம்பந்தமுடைய வர்கள் வருமாறு:

1. தனது தாய் அல்லது பாட்டி (Mother or grand mother)
   (எத்தனை தலைமுறைக்கு முன் சென்றாலும்) (how high soever)
2. தனது மகள் அல்லது பேத்தி (Daughter or grand-daughter)
   (எத்தனை தலைமுறைக்கு பின் சென்றாலும்) (how low soever)
3. (அ) உடன் பிறந்த சகோதரிகள் (Full sisters)
   (ஆ) தந்தை வழிச் சகோதரிகள் (Consanguine sisters)
   (இ) தாய்வழிச் சகோதரிகள் (Uterine sisters)
4. தனது சகோதரியின் மகள் அல்லது சகோதரியின் மகளின் மகள் (Niece or great niece)
   (எத்தனை தலைமுறைக்கு பின் சென்றாலும்) (how low soever)
5. (அ) தனது தந்தையுடன் பிறந்த சகோதரி (Paternal aunt)
   (எத்தனை தலைமுறைக்கு முன் சென்றாலும்)
   (ஆ) தாயுடன் பிறந்த சகோதரி (Maternal aunt)
   (எத்தனை தலைமுறைக்கு முன் சென்றாலும்)

(ஆ) கொள்ளுறவு (Affinty):

பிறப்பால் ஏற்படுவது இரத்த சம்பந்தம் ஆகும். அதுவே திருமணத்தின் மூலம் ஏற்பட்டால் அது கொள்ளுறவு ஆகும். ஒரு இசுலாம் ஆண் கீழ்க் குறிப் பிடப்பட்டுள்ள கொள்ளுறவு முறையினரைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. மீறிய திருமணம் இல்லா நிலைத் திருமணமாகும் (void marriage), என பிரிவு 261 கூறுகிறது.

(1) தனது மனைவியின் தாய் அல்லது பாட்டி (his wife's mother or grandmother) (எ.த.மு.செ.)

(2) தனது மனைவியின் மகள் அல்லது பேத்தி (his wife's daughter or grand-daughter) (எ.த.பி.செ.)

(3) தனது தந்தையின் அல்லது தந்தைவழிப் பாட்டனின் மனைவி (Wife of his father or paternal grandfather) (எ.த.மு.செ.)

(4) தனது மகனின், அல்லது மகனின் மகனின் அல்லது மகளின் மகனின் மனைவி (Wife of his son, or his son's son or daughter's son) (எ.த.பி.செ)

(இ) பாலூட்டி வளர்த்த செவிலித்தாய் முறை (Fosterage):

இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தை தன் பெற்ற தாயிடம் அல்லாமல் வேறொருத்தியுடம் பாலுண்டு வளர்ந்திருந்தால், அத்தாய் பாலூட்டி வளர்த்த செவிலித்தாய் ஆவாள். செவிலித்தாயிடம் பாலுண்ட காரணத்தால் அவள் அக் குழந்தையைப் பெற்ற தாய்க்கே ஒப்பாவாள்.

எனவே, ஒரு இசுலாம் ஆண், பெற்ற தாயின் உறவினரில் யார் யாரை மணக்கக் கூடாதோ, அதேபோல செவிலித் தாயின் அந்த உறவினர்களையும் மணக்கக்கூடாது என பிரிவு 262 கூறுகிறது. ஆனால் இப்பொழுது இந்த விதிக்கு, விதிவிலக்காக (exception) பின்வருபவர்களை மணக்கத் தடையில்லை.

(1) சகோதரியின் செவிலித்தாய் (Sister's foster-mother)

(2) வளர்ப்புச் சகோதரியின் தாய் (Foster-sister's mother)

(3) வளர்ப்பு மகனின் சகோதரி (Foster-son's sister)

(3) வளர்ப்புச் சகோதரனின் சகோதரி (Foster-brother's sister)

(ஈ) பல கணவரை மணத்தல் (Plurality of Husbands):

திருமணமான ஒரு இசுலாம் பெண் தனது முதல் திருமணம் நீடித்திருக்கும்

பொழுது அதாவது, முதல் கணவன் தலாக் சொல்லாமல் (அதாவது மணமுறிவு செய்யாமல்) உயிரோடு இருக்க, வேறொருவரை மணந்துகொள்ள தடை செய்யப்பட்டிருக்கிறாள். இத்தடையை மீறி மணந்தால், பிறக்கும் குழந்தைக்கு தந்தை யார் என்று உறுதி செய்ய முடியாமல் போகும். இப்படிப்பட்ட திருமணம் இல்லா நிலைத் திருமணமாகும் என்று இசுலாம் சட்டத்தின் பிரிவு 256 கூறுகிறது.

மேற்கூறப்பட்ட நான்கு காரணங்களை (தடைகளை) மீறி, ஒரு இசுலாமியத் திருமணம் நடைபெற்றால், அது செல்லாதது மட்டுமின்றி, இல்லாநிலை திருமணமாகவும் (Void) ஆகிவிடுகிறது.

இல்லாநிலை திருமணத்தின் விளைவுகள் :

இவ்வகைத் திருமணம், கணவன் மனைவியரிடையே எவ்விதமான சட்ட உரிமையையும், கடமையையும் ஏற்படுத்தாது என்றும், இத்திருமணத்தின் வழியாக பிறக்கும் குழந்தைகள், முறையற்ற மணப் பிறப்பு குழந்தைகளாவர் (illegitimate children) என்றும் பிரிவு 266 கூறுகிறது.

3. ஒழுங்கற்ற திருமணம் (ஃபாஸிட்):

பின்வரும் வரம்புகளை மீறி ஒரு இசுலாமியர் திருமணம் செய்து கொண்டால், அது ஒழுங்கற்ற திருமணமாகக் கருதப்படும். இவை தற்காலிகத் தடைகளாகக் கருதப்படுகின்றன.

(அ) அய்ந்தாவது மனைவியை மணந்து கொள்ளுதல் : ஒரு இசுலாமியர் நான்கு மனைவியர்களை ஏக காலத்தில் மணந்து கொள்ள இசுலாமியச் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் அதற்குபின் அய்ந்தாவதாக ஒரு மனைவியை மணந்து கொள்ள அனுமதி கிடையாது. அப்படி மீறி மணந்தால், அது ஒழுங்கற்ற திருமணமாகும். (பிரிவு 255).

(ஆ) தக்க சாட்சிகள் இல்லாத் திருமணம் (Absence of witnesses): திருமணம் தக்க சாட்சிகளின் முன்னிலையில் நடைபெறவில்லை யெனில், அது ஒழுங்கற்ற திருமணமாக கருதப்படும். (பிரிவு 254).

(இ) சட்ட முரணான சேர்க்கை (Unlawful conjection) : ஒரு இசுலாமியர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணக்கும் பொழுது, அவர்கள் ஒருவருக்கொருவர் இரத்தத் தொடர்புடையவராகவோ, கொள்ளுறவு கொண்டவராகவோ, பாலூட்டி வளர்த்த முறையினராகவோ இருத்தல் கூடாது. எடுத்துக்காட்டாக, ஒரு இசுலாமியர், தன்னுடைய மனைவி உயிருடனிருக்க, அவளுடைய சகோதரியையோ, அவளுடைய சகோதரி மகளையோ திருமணம் செய்து கொண்டால், அஃது ஒழுங்கற்ற திருமணமாகும். மேற்கூறிய உறவு முறைகள், இல்லா நிலைத் திருமணமாக்கும் தடைகள். இத்தகு சட்ட முரணான சேர்க்கை ஒழுங்கற்ற திருமணத்திற்கு வழி வகுக்கிறது. (பிரிவு 263).

பொழுது அதாவது, முதல் கணவன் தலாக் சொல்லாமல் (அதாவது மணமுறிவு செய்யாமல்) உயிரோடு இருக்க, வேறொருவரை மணந்துகொள்ள தடை செய்யப்பட்டிருக்கிறாள். இத்தடையை மீறி மணந்தால், பிறக்கும் குழந்தைக்கு தந்தை யார் என்று உறுதி செய்ய முடியாமல் போகும். இப்படிப்பட்ட திருமணம் இல்லா நிலைத் திருமணமாகும் என்று இசுலாம் சட்டத்தின் பிரிவு 256 கூறுகிறது.

மேற்கூறப்பட்ட நான்கு காரணங்களை (தடைகளை) மீறி, ஒரு இசுலாமியத் திருமணம் நடைபெற்றால், அது செல்லாதது மட்டுமின்றி, இல்லாநிலை திருமணமாகவும் (Void) ஆகிவிடுகிறது.

இல்லாநிலை திருமணத்தின் விளைவுகள் :

இவ்வகைத் திருமணம், கணவன் மனைவியரிடையே எவ்விதமான சட்ட உரிமையையும், கடமையையும் ஏற்படுத்தாது என்றும், இத்திருமணத்தின் வழியாக பிறக்கும் குழந்தைகள், முறையற்ற மணப் பிறப்பு குழந்தைகளாவர் (illegitimate children) என்றும் பிரிவு 266 கூறுகிறது.

3. ஒழுங்கற்ற திருமணம் (ஃபாஸிட்):

பின்வரும் வரம்புகளை மீறி ஒரு இசுலாமியர் திருமணம் செய்து கொண்டால், அது ஒழுங்கற்ற திருமணமாகக் கருதப்படும். இவை தற்காலிகத் தடைகளாகக் கருதப்படுகின்றன.

(அ) அய்ந்தாவது மனைவியை மணந்து கொள்ளுதல் : ஒரு இசுலாமியர் நான்கு மனைவியர்களை ஏக காலத்தில் மணந்து கொள்ள இசுலாமியச் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் அதற்குபின் அய்ந்தாவதாக ஒரு மனைவியை மணந்து கொள்ள அனுமதி கிடையாது. அப்படி மீறி மணந்தால், அது ஒழுங்கற்ற திருமணமாகும். (பிரிவு 255).

(ஆ) தக்க சாட்சிகள் இல்லாத் திருமணம் (Absence of witnesses): திருமணம் தக்க சாட்சிகளின் முன்னிலையில் நடைபெறவில்லை யெனில், அது ஒழுங்கற்ற திருமணமாக கருதப்படும். (பிரிவு 254).

(இ) சட்ட முரணான சேர்க்கை (Unlawful conjection) : ஒரு இசுலாமியர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணக்கும் பொழுது, அவர்கள் ஒருவருக்கொருவர் இரத்தத் தொடர்புடையவராகவோ, கொள்ளுறவு கொண்டவராகவோ, பாலூட்டி வளர்த்த முறையினராகவோ இருத்தல் கூடாது. எடுத்துக்காட்டாக, ஒரு இசுலாமியர், தன்னுடைய மனைவி உயிருடனிருக்க, அவளுடைய சகோதரியையோ, அவளுடைய சகோதரி மகளையோ திருமணம் செய்து கொண்டால், அஃது ஒழுங்கற்ற திருமணமாகும். மேற்கூறிய உறவு முறைகள், இல்லா நிலைத் திருமணமாக்கும் தடைகள். இத்தகு சட்ட முரணான சேர்க்கை ஒழுங்கற்ற திருமணத்திற்கு வழி வகுக்கிறது. (பிரிவு 263).

(ஈ) இத்தா இருக்கும் பெண்ணுடன் திருமணம் (Marriage with a woman undergoing iddat): இஸ்லாமிய சட்டப்படி மனைவி விதவையானவுடனேயே மற்றொருவரைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. குறிப்பிட்ட காலம் வரை பொறுத்திருக்க வேண்டும். அதாவது மூன்று மாதவிடாய்த் தீட்டு வெளியாகி நிற்கும் வரை அல்லது நான்கு மாதம் 10 நாள் அல்லது அவள் கருவுற்றிருந்தால் குழந்தை பிறக்கின்றவரை காத்திருத்தல் வேண்டும். இந்தக் குறிப்பிட்ட நாட்களில் விதவை தனிமையில் ஒதுங்கியிருப்பதே 'இத்தா இருத்தல்' என்று சொல்லப்படுகிறது. மேற்படி இத்தா காலம் முடியும் முன்பே ஒரு பெண்ணை, ஒரு இஸ்லாம் ஆண் திருமணம் செய்து கொண்டால், அது ஒழுங்கற்ற திருமணமாகும். (பிரிவு 257).

(உ) மத வேறுபாடு (Difference of Relgion): மதம் விட்டு மதம் மாறி திருமணம் செய்து கொண்டிருந்தால், அஃது ஒழுங்கற்ற திருமணமாக கருதப்படும் (பிரிவு 259).

(ஊ) இடைப்பட்ட நிகழ்ச்சியில் முறைகேடாதல் (Supervening Illegality): திருமணம் செல்லுடையதாக (valid) இருக்கும்பொழுது, திடீரென எதிர்பாராது ஏற்படும் நிகழ்ச்சிகளால், நடைபெற்ற திருமணம் முறைகெட்ட திருமணமாக கருதப்படும். எடுத்துக்காட்டாக, இருவரில் ஒருவர் மதம் மாறினால், தானாகவே அத்திருமணம் தனது செல்லும் தன்மையை இழந்துவிடுகிறது.

(எ) வேறு காரணங்கள் : 1. மெக்காவிற்கு புனித யாத்திரையை மேற் கொண்டிருக்கும் ஒரு இஸ்லாமியர் பயணம் முடிவது வரையில், திருமணம் செய்து கொள்ளக்கூடாது. 2. திருமண முறிவு செய்து கொண்ட தம்பதிகள் மீண்டும் தங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், இஸ்லாமிய சட்ட விதிகளைப் பூர்த்தி செய்த பின்னரே இருவரும் செல்லத்தக்க திருமணம் செய்து கொள்ளமுடியும்.

ஒழுங்கற்ற திருமணத்தால் ஏற்படும் விளைவுகள் :

இப்படி நடைபெறும் திருமணங்களில் பெண்களுக்குக் குறைந்த உரிமையே உண்டு. ஆனால் அத்திருமணத்தில் பிறந்த குழந்தைகளுக்கு முழு உரிமை உண்டு. இவ்வகையான ஒழுங்கற்ற திருமணத்தை, கணவன் – மனைவி இருவரில் ஒருவர் விரும்பினால் விலக்கிக் கொள்ளலாம். இத்திருமணத்தைச் செய்து கொண்டவர்கள் குடும்ப வாழ்வில் ஈடுபட்டிருந்தாலும், ஈடுபடாவிட்டாலும், இருவரும் விரும்பினால் விவாகரத்துச் செய்து கொள்ளலாம். இந்நிலையில் கணவன் அம்மனைவிக்கு மஹர் பணத்தை அளிக்க வேண்டும். மனைவி இத்தா அனுசரிக்க வேண்டும் (பிரிவு 267).

ஒழுங்கற்ற திருமணம், செல்லத்தக்க திருமணமாகும் விதம்:

சில தற்காலிக தடைகளினால் ஒரு திருமணம் ஒழுங்கற்ற திருமணமா

கிறது. அத்தடைகள் நீங்கியதும், அத்திருமணம் செல்லத்தக்க திருமணமாகிறது என இசுலாம் சட்டத்தின் பிரிவு 264(3) கூறுகிறது.

செல்லும் திருமணம், இல்லாநிலைத் திருமணம், ஒழுங்கற்ற திருமணம் - வேறுபாடுகள்:

செல்லும் திருமணம் [Valid Marriage]	இல்லாநிலைத் திருமணம் [Void Marriage]	ஒழுங்கற்ற திருமணம் [Irregular Marriage]
1. இது 'ஸஹீஹ்' எனப் படுகிறது.	1. இது 'பேட்டில்' எனப் படுகிறது.	1. இது 'ஃபாஸிட்' எனப் படுகிறது.
2. இசுலாம் சட்டத்தின் பிரிவு 252–ல் கூறப்பட்ட முறைப்படி நடக்கும் திருமணமே, செல்லும் திருமணமாகும்.	2. திருமணத் தரப்பினர்கள், இரத்த சம்பந்தம் உடையவர் களாக அல்லது கொள்ளுறவு உடையவர்களாக அல்லது பாலூட்டி வளர்த்த செவிலித் தாய் உறவு முறை உடையவர் களாக இருப்பின் அத்திரு மணம் இல்லாநிலைத் திருமண மாகும். மேலும் ஒரு மனைவி பல கணவர்களை மணந்து கொண்டால், அத்திருமணமும் இல்லாநிலைத் திருமணம்.	2. ஒருவர் அய்ந்தாவதாக ஒரு மனைவியை, அல்லது சாட்சி கள் இன்றி, அல்லது இத்தா இருக்கும் பெண்ணை மணந்து கொண்டால், அது ஒழுங்கற்ற திருமணமாகும்., மேலும் சட்ட முரணாக சேர்ந்து கொண் டால், அல்லது மதம்மாறி மணம் செய்து கொண்டால், அல்லது இடைப்பட்ட நிகழ்ச்சி களால் ஒரு திருமணம் முறை கேடானால், அது ஒழுங்கற்ற திருமணம்.
3. இத்திருமணம் கணவன்–மனைவிக்கு சில உரிமைகளை வழங்குகிறது. அது போல் கடமைகளையும் விதிக்கிறது.	3. இத்திருமணம் அவ்வாறு எந்த உரிமைகளையும், கடமை களையும் ஏற்படுத்துவதில்லை.	3. இத்திருமணத்தால் மனைவிக்கு மிகக் குறைவான உரிமையே ஏற்படுகிறது.
4. இத்திருமணம் ஆரம்பத் திலிருந்தே செல்லும் தன்மை யுடையது.	4. இத்திருமணம் ஆரம்பத் திலிருந்தே இல்லாநிலையது. அதாவது செல்லாதது.	4. இத்திருமணத்தில் ஒழுங் கற்றதாக உள்ள சூழ்நிலை கள், ஒழுங்குபடுத்தப்பட்டால், செல்லத்தக்கதாக ஆகும்.
5. இத்திருமணத்தின் விளை வாக பிறக்கும் குழந்தைகள் முறை மணப் பிறப்பு குழந்தைகள்.	5. இங்கு பிறக்கும் குழந்தை கள் முறையற்ற மணப் பிறப்பு குழந்தைகள்.	5. இங்கு பிறக்கும் குழந்தைகள் முறை மணப் பிறப்பு குழந்தைகள்.

முக்கியக் குறிப்பு : தேர்வில் கேட்கப்படும் வினாக்களுக்கு தக்கவாறு தகுந்த விடையை மேற்படி விடையிலிருந்து எடுத்து எழுதவும்.

2. Explain "Iddat" in relation to a muslim marriage. Show har far it is applicable in case of death of husband and in case of divorce. (ஒரு முகமதிய திருமணம் தொடர்பாக 'இத்தா' என்பதை விளக்குக. கணவனின் மரணத்தைப் பொறுத்தும், மணமுறிவினைப் பொறுத்தும் இது எந்த அளவில் பொருந்துகிறது என்பதைச் சுட்டிக்காட்டவும்.)

(அல்லது)

Iddat - Write short notes. (இத்தா – சிறு குறிப்பு எழுதுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

இத்தா - விளக்கம்
இசுலாமிய சட்டப் பிரிவு கூறும் விளக்கம்
கணவன் இறந்த பின்னர் விதவையானால்
கணவன் 'தலாக்' எனும் மணமுறிவு செய்வதன் மூலம் விதவையானால்
இத்தாவின் முக்கியத்துவம்

இத்தா – விளக்கம்:

இசுலாமியச் சட்டத்தில் 'இத்தா' (Iddat) என்னும் சொல்லுக்கு 'நாள் எண்ணுதல்' அல்லது 'காத்திருத்தல்' அல்லது 'தனிமையில் துயர் எண்ணிக் கழித்தல்' என்று பொருள்படும். இசுலாமியச் சட்ட முறைப்படி மனைவி விதவையானவுடன் (கணவன் இறப்பதன் மூலமும், திருமணமுறிவு செய்வதன் மூலமும் விதவையாகலாம்), மறுகணமே வேறொருவரைத் திருமணம் செய்து கொள்ளவியலாது. அவள் குறிப்பிட்ட காலம்வரை பொறுத்திருந்த பின்னரே, வேறொருவரைத் திருமணம் செய்து கொள்ள சட்டம் இடந்தருகிறது. குறிப்பிட்ட காலம் என்பது மூன்று மாதவிடாய்த் தீட்டு வெளியாகி நிற்கும்வரை, அல்லது நான்கு மாதம் 10நாள், அல்லது அவள் கருவுற்றிருந்தால், குழந்தை பிறக்கின்ற வரை காத்திருப்பது ஆகும். இந்தக் குறிப்பிட்ட நாள்களில் விதவை தனிமையில் ஒதுங்கியிருப்பதே 'இத்தா இருத்தல்' என்று சொல்லப்படுகிறது. உடலுறவு பூர்த்தியாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், கணவன் மீது வைத்திருக்கும் அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்த அந்தக் குறிப்பிட்ட காலம் வரை விதவைக்குத் துயர் எண்ணிக் கழித்தல் கடமையாக்கப்பட்டுள்ளது.

இசுலாமியச் சட்டப்பிரிவு கூறும் விளக்கம்:

ஒரு பெண் தன் பழைய கணவன் மூலம் கருவுற்றிருக்கிறாளா அல்லது இல்லையா என்பதைக் கண்டுபிடிக்கத்தான் 'இத்தா'–வை இசுலாமியப் பெண்கள் அனுசரிக்க வேண்டுமென்று இசுலாமியச் சட்டத்தின் **257(2)–வது பிரிவு** கூறுகிறது.

கணவன் இறந்த பின்னர் விதவையானால் :

1. விதவை கணவன் இறந்த நாளிலிருந்து 4 மாதம் 10 நாள் முடிய 'இத்தா' இருக்க வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட நாள்களுக்குள்ளாக அவள் கருவுற்றிருப்பது தெரிந்தால் குழந்தை பிறக்கின்றவரை தொடர்ந்து 'இத்தா' இருக்க வேண்டும்.

கணவன் 'தலாக்' என்னும் திருமண முறிவு செய்வதன் மூலம் விதவையானால் :

1. மாதவிடாய் ஏற்படுகிறவர்கள், கணவன் திருமணம் முறித்த நாளில் இருந்து மூன்று மாதவிடாய்க் காலம் முடியும் வரை 'இத்தா' இருக்கவேண்டும்.

2. மாதவிடாய் நின்றுவிட்டவர்கள் மூன்று மாதம் முடிய 'இத்தா' இருக்க வேண்டும்.

கணவன் வெளியூரில் இருக்கும்பொழுது இறந்துபோகவோ, திருமண முறிக்கவோ நேர்ந்தால், இறந்த நாளிலிருந்தோ, திருமணம் முறித்த நாளிலிருந்தோ 'இத்தா' இருக்க வேண்டிய நாளைக் கணக்கிட வேண்டுமேயன்றி இறந்ததாகவோ, திருமணம் முறித்ததாகவோ செய்தி கிடைத்த நாளிலிருந்து நாட்களைக் கணக்கிடக் கூடாது.

இத்தாவின் முக்கியத்துவம் :

இசுலாமியத் திருமணத்தின் நோக்கம் தந்தைவழியை நிலை நிறுத்துவதாகையால், முந்திய திருமணத்தின் மூலம் அவள் கருவுற்றிருக்கிறாளா, இல்லையா என்பதை 'இத்தா' இருத்தல் மூலம் தெரிந்துகொள்ள முடியும் என இசுலாம் சட்டப்பிரிவு கூறுவதை நாம் முன்னர் கண்டோம். ஆகவே இத்தா இருக்கும் நாளில் பெண்ணைத் திருமணம் செய்தால், அஃது ஒழுங்கற்ற திருமணமாகும். ஒழுங்கற்ற திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகள், முறைமணப் பிறப்பினடியாகப் பிறந்த குழந்தைகளாகக் (legitimate children) கருதப்படும். ஆனால் மனைவி, மறுபடி தாம்பத்திய உறவு கோரும் கணவனின் உரிமையை (restitution of conjugal rights), ஒழுங்கற்ற திருமணத்தை காட்டி எதிர்த்து வெற்றி பெற முடியும்.

3. Muta Marriage - Write short notes. (முத்தா திருமணம் சிறு குறிப்பு வரைக.)

முத்தா திருமணம் – விளக்கம்:

இசுலாம் சட்டத்தின் 269–வது பிரிவின்படி 'முத்தா திருமணம்' என்பது,

தற்காலிகமான திருமணம் (Temporary Marriage) அல்லது மகிழ்ச்சிக்காகச் செய்யப்படும் திருமணம் (Marriage for pleasure) எனப்படும். வெளிப் படையாகச் சொல்லப்போனால் வெறும் சிற்றின்பம் நுகர்தற்பொருட்டே, முத்தா திருமணம் நடைபெறுகின்றது. இதை ஹனபி கொள்கையைப் பின்பற்றுபவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஷியா பிரிவிலுள்ள பன்னிரு கூட்டத்தவர் மட்டும்தான் இதை ஏற்றுக்கொள்கின்றனர்.

செல்லுடைமையாக்கும் முத்தா திருமணத்திற்கான நிபந்தனைகள் (Essential conditions of a valid Muta Marriage):

(1) இவ்வகைத் திருமணம் ஒரு காலவரையறைக்குட்பட்டதாகும். இதுவும் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே எழுவதால், இதிலும் ஒப்பந்தத்தின் கூறுகளாகிய முனைவு (Offer) மற்றும் ஏற்பு (acceptance) இருக்க வேண்டும்.

(2) இதில் ஒரு இசுலாம் ஆண், ஒரு இசுலாம் பெண்ணையோ அல்லது கிறுத்தவ, யூத, பார்ஸிய தீக்கடவுளை வழிபாடு செய்யும் பெண்களையோ திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் ஒரு ஷியாப் பெண் முத்தா மணத்தில் இசுலாம் அல்லாத வேறு மத ஆளை மணக்கக் கூடாது.

(3) முத்தா மணத்திற்கு உட்படும் பெண்ணிற்கு மஹர் அல்லது அன்பளிப்புத் தொகை அவசியம் கொடுக்கப்படவேண்டும்.

(4) இத்திருமணம் ஒரு நாளோ, ஒரு மாதமோ, ஒரு ஆண்டோ அல்லது பல ஆண்டுகளோ கூட நீடிக்கலாம். இது அத்திருமணத்தில் பங்கு பெறுபவர்கள் தங்களுக்குள் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தின்படி அமையும். காலவரையறை குறிப்பிடப்படாவிட்டால், இத்திருமணம் தொடர்ந்து நீடித்து வரும் என்பதாகக் கொள்ளலாம்.

Shaharat singh v. Jafri Bibi[1] - இவ்வழக்கில் காலவரையறை முதலிலேயே நிர்ணயிக்கப்படாவிட்டாலும், கணவன் மனைவியாக இருவரும் சேர்ந்து வாழும் காலமே வரையறுக்கப்பட்ட காலமாகும். அப்பெண்ணுடன் ஆண் கொண்ட ஒப்பந்தக் காலம் முடிந்தபின், அவளுக்கு மணமுறிவு அளிக்கத் தேவையில்லை எனப் பிரிவி கவுன்சில் தீர்ப்புரைத்தது.

(5) இம்மணத்தில் கொடுக்கப்படும் மஹர் தொகை எவ்வளவு எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிடாது செய்து கொள்ளப்பட்ட திருமணம் செல்லாததாகிவிடும் (void marriage).

(6) மேற்கூறப்பட்ட எல்லா வகை நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டும்,

1. 17 Bom.L.R. 13

கணவன் மனைவியரிடையே உடலுறவு ஏற்படாமல் இருந்து, குறிப்பிட்ட காலம் முடிந்துவிட்டால் நிர்ணயிக்கப்பட்ட மஹர் பணத்தில் பாதியை மட்டுமே பெற மனைவிக்கு உரிமை உண்டு.

(7) இத்திருமணம் நடந்தபின் மனைவி கணவனை விட்டுச் சென்றிருந்தால், அவள் எவ்வளவு நாட்கள் அவ்வாறு கணவனை விட்டுப் பிரிந்திருந்தாளோ அதைக் கணக்கிட்டு, அதற்குத் தகுந்தாற்போல் மஹர்ப்பணம் அளிக்கப்படும்.

முத்தா திருமணத்தின் விளைவுகள்:

(1) முத்தாத் திருமணம் குறித்து கணவன் மனைவியரிடையே ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் மட்டுமே, அது சொத்துரிமையை வழங்கும்.

(2) இம்மணத்தில் பிறந்த குழந்தைகள், முறைமணப் பிறப்புக் குழந்தைகளாவர் (Legitmate children). அவர்கள் தங்கள் தாய், தந்தையர் இருவரின் சொத்திலும் உரிமை பெறத் தகுதி உடையவர்கள் என்று **Shaharat Singh v. Jafri Bibi**[1] - என்ற வழக்கில் தீர்ப்புரைக்கப்பட்டது.

-o0o-

1. 17 Bom.L.R. 13

3 மணக் கொடை (அல்லது) மஹர் [Dower (or) Mahar]

What is the importance of Dower? Explain the various kinds of dower. (மணக் கொடை என்பதன் முக்கியத்துவம் யாது? வெவ்வேறு வகையான மணக் கொடைகளை விளக்குக.)

(அல்லது)

What is a 'dower'? What are the different kinds of dower? What are the remedies open to a wife to enforce her dower debt? (மணக் கொடை என்றால் என்ன? மணக் கொடையின் பல்வேறு வகைகள் யாவை? மனைவி ஒருத்திக்கு அவளுடைய மணக் கொடை கடன் பெறுவதற்கான தீர்வழிகள் யாவை?)

(அல்லது)

What is dower? What are the remedies open to a wife to enforce her dower debt (a) during her husband's life time (b) after his death? (மணக் கொடை என்றால் என்ன? ஒரு மனைவிக்கு அவளுடைய மணக் கொடை கடன் பணத்தை (அ) அவள் கணவன் உயிருடன் இருக்கும் பொழுதும் (ஆ) அவள் இறந்த பிறகும் பெறுவதற்கு இடமளிக்கிற தீர்வழிகள் யாவை?)

(அல்லது)

Discuss the law relating to dower. Explain prompt dower and deferred dower. How will the dower to be fixed in the absence of a stipulation as to dower in a muslim marriage. (மஹர் சம்பந்தமான சட்டத்தை விவாதிக்க. உரிமை மஹரையும் தாமத மஹரையும் விளக்கவும். ஒரு இஸ்லாமிய திருமணத்தில் மஹர் நிர்ணயிக்கும் நிபந்தனை இல்லாத போது எப்படி மஹர் நிர்ணயிக்கப்படுகிறது?)

(அல்லது)

Define dower. Distinguish prompt dower from deferred dower. What are the remedies open to a woman to enforce dower debt. (மஹரை வரையறு. தாமத மஹரிலிருந்து உரிமை மஹரை வேறுபடுத்துக. மஹர்கடனை வலியுறுத்திப் பெற பெண்களுக்கு கிடைக்கும் தீர்வழிகள் யாவை?)

(அல்லது)

Distinquish between prompt dower and deferred dower. (உரிமை மணக் கொடை மற்றும் காலம் கடத்தும் மணக் கொடையினை வேறுபடுத்துக.)

(அல்லது)

Explain the importance of dower in Muslim Law. (முசுலீம் சட்டத்தில் திருமணக் கொடைக்கு உள்ள முக்கியத்துவத்தை விளக்குக.)

(அல்லது)

Specified dower - Write short notes. (குறிப்பிடப்பட்ட மணக் கொடை – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Prompt dower - Write short notes. (உடனடி மணக் கொடை – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

மணக்கொடை (அல்லது) மஹர் - வரையறை

மஹர் - இசுலாம் சட்டம் கூறும் வரையறை

மஹர் கொடுப்பதன் நோக்கம்

மஹராக எதைக் கொடுக்கலாம்?

மஹரின் வகைகள்

(1) சிறப்பு மஹர் (மஹர்-இ-முஸம்மா) **(Specified Dower)**

சிறப்பு மஹர் - இரு வகை

(i) உரிமை மஹர் (அல்லது) உடனடி மணக் கொடை (மு அஜ்ஜல்) (Prompt dower)

உரிமை மஹரைக் கோருவதில் காலவரையறை

(ii) தாமத மஹர் (முவஜ்ஜல்) (Deferred dower)

உரிமை மஹர், தாமத மஹர் - வேறுபாடுகள்

(2) தகுதி மஹர் (மஹர்-இ-மிஸ்ல்) (Proper Mahr) (அல்லது) வழக்கப்படியான மஹர் (Customery Mahr)

மஹர்க் கடனை பெற ஒரு பெண்ணுக்கு உள்ள தீர்வழிகள்

(1) கணவன் உயிருடன் உள்ள பொழுதே கிடைக்கும் தீர்வழிகள்

(2) கணவன் இறந்த பிறகு மனைவிக்கு கிடைக்கும் தீர்வழிகள்

முடிவுரை

மணக் கொடை (அல்லது) மஹர் - வரையறை :

இசுலாம் திருமணம் என்பது ஒரு ஒப்பந்தம். திருமணத்திற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளும் பொழுது, மணமகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அளிப்பதாக மணமகன் உறுதியுரைக்கிறார். இத்தொகை 'மஹர்' எனப்படுகிறது. மஹர்த் தொகையை திருமணத்தின் பொழுது, அல்லது திருமணம் நடந்த பின்னர், அல்லது கணவன் இறந்த பிறகு அவனது சொத்திலிருந்தும் மனைவிக்கு கொடுக்கப்படலாம். இசுலாம் சட்டவியல் கோட்பாடுகள், 'மஹரை திருமண ஒப்பந்தத்திற்கான ஒரு மறுபயன்' (Dower as consideration for the contract of marriage) என்று கூறுகிறது. இது சட்டத் தமிழில் 'மணக் கொடை' எனப்படுகிறது. மேலும், 'மஹர்' நிர்ணயிக்கப்படாமல் ஒரு இசுலாமியத் திருமணம் நடைபெற முடியாது.

மஹர் - இசுலாம் சட்டம் கூறும் வரையறை :

இசுலாமியச் சட்டத்தின் 285–வது பிரிவின்படி, "மஹர் அல்லது டௌர் என்பது, திருமணத்திற்கு மறுபயனாக கணவனிடமிருந்து மனைவி பெற உரிமை படைத்த ஒரு தொகை அல்லது பிற சொத்தாகும்"[1].

மஹர் கொடுப்பதின் நோக்கம் :

(1) கணவன் தனது மனைவிக்கு தனக்கு நிகரான அந்தஸ்த்தையும், மதிப்பையும் அளிக்க வேண்டும் என்பதற்காக கணவனால் கொடுக்கப்படுவதே மஹர் ஆகும். இது சட்டத்தால் கணவனுக்கு விதிக்கப்பட்டுள்ள கடப்பாடு ஆகும்.

(2) மஹர் அளிப்பது மணமுறிவைத் தடுக்கிறது. ஒரு இசுலாம் கணவன் தனது மனைவியை மணமுறிவு செய்ய வேண்டுமெனில், அவளுக்கு அவன் மஹர்த் தொகை முழுவதையும் செலுத்த வேண்டும். பொதுவாக, மஹர்த் தொகை கணவனின் பொருளாதார சக்தியை விட அதிகமானதாக இருக்கும். எனவே அவன் தனது மனைவியை மணமுறிவு செய்வதற்கு முன், மஹர் கொடுக்க தனக்குள்ள பொருளாதார சக்தியை ஒன்றிற்கு இருமுறை சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளான். இது மணமுறிவை தடுக்கிறது அல்லது தள்ளிப் போடுகிறது.

(3) மேற்கண்ட நிலைப்பாட்டையும் மீறி, ஒரு இசுலாம் கணவன் தனது மனைவியை மணமுறிவு செய்துவிட்டால், அவன் கொடுக்கும் மஹர்த் தொகை அவளது எதிர்கால பராமரிப்பிற்கு போதுமான ஆதரவாக உள்ளது.

(4) மஹர்த் தொகை முழுக்க முழுக்க மனைவிக்கு மட்டுமே சேர்ந்ததாகும். எனவே அதை எவரும் பங்கு போட முடியாது.

---

1. Mahr or dower is a sum of money or other property which the wife is entitled to receive from the husband in consideration of the Marriage - **Section 285 of the Mahomedan Law.**

மஹராக எதைக் கொடுக்கலாம்?

'மஹர்' பணமாகவோ, பொருளாகவோ, சொத்தாகவோ தரப்படலாம். கடையில் கையிருப்பாக வைத்திருக்கும் சரக்கையும் (Stock) மஹராகக் கொடுக்கலாம். சொத்திலிருந்து வரும் வருமானத்தை மஹராக கொடுக்கலாம். மேலும் மஹருக்கு ஈடாகக் கணவன், தன்னுடைய உடலுழைப்பின் மூலம் சில வேலையை முடித்துத் தருவதாக வாக்குறுதி கொடுக்கலாம். 'மஹர்' என்ன வகையில், எந்த அளவில் மனைவியிடம் வழங்கப்பட வேண்டும் என்பது, திருமணம் நடைபெறும் பொழுதோ, அல்லது அதற்கு முன்னரோ பின்னரோ உறுதி செய்யப்படுகிறது. 'மஹர்' திருமணத்தின் போது கொடுக்கப்படவில்லையென்றால் பின்னர்க் கொடுக்கப்பட வேண்டும்.

மஹரின் வகைகள் [Kinds of Mahr (or) Dower]:



(1) சிறப்பு மஹர் (மஹர்-இ-முஸம்மா) (Specified Dower):

திருமணத்தின் போது, அத்திருமணத்தை நடத்தி வைக்கும் காஜியாரிடம் 'மஹர்ப் பணம்' இவ்வளவு என்று கூறி, அதைத் திருமணப் பதிவேட்டில் (Marriage Register) பதித்து வைப்பது, **'சிறப்பு மஹர்'** (அல்லது) **'குறிப்பிடப்பட்ட மஹர்'** எனப்படுகிறது. இதைத் திருமணத்திற்கு பின் கூட கொடுக்கலாம்.

எடுத்துக்காட்டு: ஒரு இசுலாம் ஆணும் பெண்ணும் மணமுடித்துக் கொள்ள ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். அச்சமயத்தில், அந்த ஆண்,

அப்பெண்ணுக்கு ரூ.50,000/–த்தை மஹராக வழங்க ஒத்துக் கொள்கிறார். இத்தொகை ஒரு சிறப்பு மஹர் ஆகும். ஏனெனில், இங்கு தொகை அறுதியானது. மேலும், அவர்களது திருமண ஒப்பந்தந்தில் குறிப்பிடப்பட்டுவிட்டது.

Sabir Hussain v. Forzand Khan[1] – இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இளவராக உள்ள இசுலாம் மணமகனுக்கு, காப்பாளராக அவனது தந்தை இருந்து அவனது திருமணம் நடத்தி வைத்திருந்து, அங்கு அந்த இளவருக்கென்று சொந்த வருமானம் ஏதுமில்லையானால், திருமணத்தை நடத்தி வைத்த அவனது தகப்பனாரே மஹர்த் தொகையை கொடுக்க தனிப்பட்ட விதத்தில் பொறுப்பாவார் (personally liable) என்று பிரிவி கவுன்சில் தீர்ப்புரைத்தது. இது ஷியாப் பிரிவினருக்கு மட்டுமே பொருந்தும் நிலைப்பாடாகும்; சுன்னிப் பிரிவினருக்கு பொருந்துவதில்லை. சுன்னிப் பிரிவில் மஹர்த் தொகையைத் தானே தருவதாக மணமகனின் தகப்பனார் தனிப்பட்ட விதத்தில் பொறுப்புறுதி (guarantee) அளித்திருந்தால்தான், அவர் மஹர்த் தொகை அளிக்க பொறுப்புடையவர் ஆவர். மாறாக, திருமணத்தை நடத்தி வைத்ததனால் மட்டுமே அத்தகப்பனார் மஹர்த் தொகைக்கு பொறுப்புடையவர் ஆகிவிட மாட்டார்.

சிறப்பு மஹர் - இரு வகை:

சிறப்பு மஹர், இரு வகைப்படும். அவை (i) உரிமை மஹர் (அல்லது) உடனடி மஹர் (மு அஜ்ஜல்) (Prompt dower) (ii) தாமத மஹர் (முவஜ்ஜல்) (Deferred dower). சற்று விரிவாக பின்வருமாறு.

(i) உரிமை மஹர் (அல்லது) உடனடி மணக் கொடை (மு அஜ்ஜல்) (Prompt dower):

உரிமை மஹர் (அல்லது) உடனடி மஹர் என்பது, திருமணம் ஆன உடனேயே கணவனால் தாமதமின்றி கொடுக்கப்படுவதாகும். அவ்விதம் உடனடியாக அவன் கொடுக்கத் தவறினால், அது உடனே கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்கும் உரிமை மனைவிக்கு உண்டு. இம்மஹர் குறித்த சில முக்கிய கூறுகள் வருமாறு.

(1) திருமணம் முடிந்தவுடனே, மனைவி கோருவதன் பேரில் மேற்படி உரிமை மஹரை கணவன் கொடுத்தே ஆக வேண்டும்.

(2) உரிமை மஹர் கொடுக்கும் வரை மனைவி உடலுறவிற்கு இணங்க மறுக்கலாம்.

(3) உரிமை மஹரைப் பெறுவதற்காக மனைவி, கணவன் மீது வழக்கிடலாம்.

(4) திருமணம் முடிந்து, தொடர்ச்சியாக உடலுறவும் முடிந்துவிட்டதனால்,

1. 1933 P.C. 80.

உரிமை மஹர், தாமத மஹராகிவிடாது. அப்பொழுதும், மனைவி அதைக் கோரிப் பெற கணவன் மீது வழக்கிடலாம்.

(5) மனைவி ஒரு இளவராக இருக்கும்பட்சத்தில், அவளுக்கு உரிமை மஹர் கொடுக்கப்படும் வரையில், அவளது காப்பாளர் அவளை அவளது கணவனுடனான உடலுறவிற்கு அனுப்ப மறுக்கலாம்.

Mastan Sahib v. Asan Bibi[1] – இம்முக்கிய வழக்கில் உரிமை மஹர் கொடுக்கப்படும் வரை, மனைவி கணவனுடன் உடலுறவிற்கு இணங்க மறுக்கலாம். ஒருவேளை உடலுறவு நடந்த பின்னர், மனைவி உரிமை மஹரைக் கோரி, அதைக் கணவன் கொடுக்கவில்லையென்றால், மனைவி கணவனுடன் தொடர்ந்து உடலுறவு வைத்துக் கொள்ள மறுக்கலாம். இம்மாதிரியான சூழலில் கணவன் தனது தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கக் கோரி நீதிமன்றத்தில் வழக்கிட்டால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கணவன் உரிமை மஹரை கொடுக்க வேண்டும் எனும் நிபந்தனையின் அடிப்படையில்தான் கணவனுக்குச் சார்பாக தீர்ப்பாணை வழங்கப்படும். அந்த காலத்திற்குள் கணவன் உரிமை மஹரை கொடுக்க வில்லையானால், மனைவி மீண்டும் உடலுறவிற்கு மறுக்கலாம், எனப்பட்டது.

உரிமை மஹரைக் கோருவதில் காலவரையறை (Limitation in demanding Prompt dower): உரிமை மஹரை கொடுக்கும்படி மனைவி கணவனைக் கோரியவுடன், அது அவன் மனைவிக்கு பட்ட கடனாகிவிடுகிறது. எனவே அவ்வாறு கோரிய தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள், மனைவி கணவன் மீது வழக்கிட்டு அதனைப் பெற முயல வேண்டும். இல்லாதுபோனால், அக்கோரிக்கை காலம் கடந்த ஒன்றாகிவிடும். மேலும் திருமணம் அமலில் உள்ள பொழுது, மனைவி உரிமை மஹரைக் கோரவில்லையானால், கணவன் இறந்த தேதியிலிருந்து அல்லது மணமுறிவு ஏற்பட்ட தினத்திலிருந்து 3 ஆண்டுகளுக்குள் மனைவி அம்மஹரைப் பெற முயல வேண்டும். பின்னர் கோர முடியாது.

(ii) தாமத மஹர் (முவஜ்ஜல்) (Deferred dower):

தாமத மஹரை உடனடியாக கொடுக்கவேண்டும் என்று கட்டாயம் இல்லை. காலந்தாழ்த்தியும் அதைக் கொடுக்கலாம். இல்லையென்றால் சில சம்பவம் நிகழ்ந்த பின்னர் தருவதாகவும் உறுதி அளிக்கலாம். எடுத்துக்காட்டாக, மஹர்ப் பணத்தை திருமணத்தின் போது முழுமையாகக் கொடுக்காமல், மீதமுள்ளதை விவாகரத்து ஆகும் சமயத்தில் கொடுப்பதாக உறுதி அளிப்பது, தாமத மஹர் எனப்படும். இம்மஹர் குறித்த சில முக்கியக் கூறுகள் வருமாறு.

(1) ஒரு இசுலாம் மனைவி இறந்த பின்னர், அவளது வாரிசுகள் கூட மேற்படி தாமத மஹரை அவளது கணவனிடமிருந்து பெற உரிமை உடையவர்கள்.

(2) தாமத மஹரை, உரிமை மஹராக மாற்ற மனைவிக்கு உரிமை இல்லை.

1. (1900) 25 Mad.71

ஆனால், கணவன் விரும்பினால், அவ்வாறு மாற்றலாம். அதன் பேரில் உடனடியாக மனைவிக்கு தொகை கொடுக்கலாம் அல்லது அதற்கு ஈடாக சொத்து எதையும் மாற்றியளிக்கலாம்.

(3) பொதுவாக தாமத மஹ்ரானது கணவனின் அல்லது மனைவியின் இறப்பிற்கு பின்னரோ, மணமுறிவிற்குப் பின்னரோ கொடுக்கப்படுகிறது. எனினும் தாமத மஹரை எச்சமயத்திலும் கொடுக்கலாம் என்று கணவன்–மனைவிக் கிடையே உடன்படிக்கை ஏதும் இருந்தால், அது செல்லத்தக்கதே.

உரிமை மஹர், தாமத மஹர் - வேறுபாடுகள்:

உரிமை மஹர் [Prompt Dower]	தாமத மஹர் [Deferred Dower]
1. உரிமை மஹர் 'மூஅஜ்ஜல் மஹர்' என அழைக்கப்படுகிறது.	தாமத மஹர் 'மூவஜ்ஜல் மஹர்' என அழைக்கப்படுகிறது.
2. உரிமை மஹர், மனைவி கோருவதின் பேரில் திருமணம் முடிந்த உடனேயே கணவன் கொடுக்க வேண்டியதாகும்.	தாமத மஹர் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்த பின் கொடுக்கப்படுவதாகும். அதாவது மணமுறிவு ஏற்பட்ட பின் அல்லது கணவன் அல்லது மனைவியின் இறப்பிற்கு கொடுக்கப்படுவதாகும்.
3. உரிமை மஹரை மனைவி மட்டுமே கோர உரிமை படைத்தவள்.	இங்கு, மனைவி இறந்து விட்டால், மனைவியின் வாரிசுகள் தாமத மஹரைக் கோரலாம்.
4. இங்கு திருமணம் முடிந்து, மஹர் கோரப் படாத நிலையில், உடலுறவும் முடிந்து விட்டால், உரிமை மஹர் தாமத மஹராகிவிடாது. அப்பொழுதும், இம் மஹரை உடன் அளிக்கக் கோரி மனைவி கணவன் மீது வழக்கிடலாம்.	இங்கு கணவன் விரும்பினால், தாமத மஹரை, உரிமை மஹராக மாற்றி அவன் உடனடியாக மனைவிக்கு மஹர்த் தொகையை பணமாகவோ அல்லது சொத்தாகவோ அளிக்கலாம்.
5. இம்மஹர் கொடுக்கப்படும் வரையிலும் மனைவி உடலுறவிற்கு இணங்க மறுக்க உரிமை படைத்தவள்.	இங்கு அப்படிப்பட்ட உரிமை ஏதும் மனைவிக்கு இல்லை.
6. பொதுவாக இங்கு மஹர்த் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுவிட்டால், பின்னர் அதைக் குறைக்கவியலாது.	இங்கு மஹர்த் தொகையை மனைவி தன்னிச்சையான விருப்பத்துடன் குறைத்துக் கொள்ளலாம்.

(2) தகுதி மஹர் (மஹர்-இ-மிஸ்ல்) (Proper Mahr) (அல்லது) வழக்கப்படியான மஹர் (Customery Mahr):

இசுலாம் திருமணமொன்றில் மஹர்த் தொகையை நிர்ணயிக்க நிபந்தனை ஏதும் இல்லாத பொழுது, அதனை எவ்வாறு நிர்ணயிப்பது என்பதற்குண்டான வழிமுறையை, மேற்படி மஹர் கூறுகிறது.

சில சமயங்களில் மஹர்த் தொகை ஏதும் நிர்ணயிக்கப்படாமல், ஒரு இசுலாம் திருமணம் நடைபெறுவதுண்டு. மணமகள் மஹர் எதையும் பெறாமல், தனது திருமணத்தை ஏற்றுக் கொள்வதுண்டு. இம்மாதிரியான சூழ்நிலையில், அத்தொகையானது அப்பகுதியில் நிலவும் வழக்கம், வழக்காறுகளின் அடிப்படையிலும், அப்பெண் வீட்டாரின் மதிப்பு சமுதாயத்தில் எப்படி உள்ளது என்பதை பொருத்தும், அம்மணப்பெண் தன்மையைப் பொருத்தும், அப் பெண்ணின் சகோதரிகள் அல்லது அப்பெண்ணின் தந்தையின் சகோதரிகள் தங்கள் திருமணத்தின் பொழுது எவ்வளவு மஹர் பெற்றனர் என்பதைக் கொண்டும் அம்மஹர்ப் பணம் நிச்சயிக்கப்படுகிறது. **ஹிதாயா (Hedaya)** என்னும் புனித நூல், அம்மணமகளின் வயது, அழகு, அவளின் யோகம், புத்திசாலித்தனம், மணமகனின் வயது, அழகு, புத்திசாலித்தனம், ஒழுக்கம் முதலியவற்றை கவனத்தில் கொண்டு மஹர்ப் பணமானது நிர்ணயிக்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது. அதாவது இங்கு மணமகள் மற்றும் மணமகனின் தகுதியைக் கொண்டு மஹர் நிர்ணயிக்கப்படுவதால், இது தகுதி மஹர் எனப் படுகிறது. அதே சமயத்தில் இங்கு மஹர்த் தொகை வழக்கம் மற்றும் வழக்காறுகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதால், இது **'வழக்கப்படியான மஹர்'** என்றும் அழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு இசுலாம் திருமணம் நடைபெற்றது. அதில் அத்திருமணத்திற்கு முன்னரோ, பின்னரோ மஹர்த் தொகை நிர்ணயம் செய்யப்படவில்லை. சில ஆண்டுகள் கழித்து, அத்திருமணத் தம்பதிகளுக்கிடையே மணவாழ்க்கைப் பிரச்சனைகள் தோன்றின. இதனால் கணவன் தனது மனைவியை மணமுறிவு செய்கிறான். தற்பொழுது இங்கு எழும் பிரச்சனை யாதெனில், எவ்வளவு மஹர்த் தொகையை மனைவிக்கு, கணவன் செலுத்த வேண்டும் என்பதாகும். இங்கு மனைவியின் சகோதரிக்கு மஹர்த் தொகையாக ரூ.20,000/– அளிக்கப்பட்டிருந்தது. அது கருத்தில் கொள்ளப்பட்டு, அம் மனைவிக்கும் அதே ரூ.20,000/– மஹர்த் தொகையாக அளிக்கப்பட்டது. இதுவே தகுதி அல்லது வழக்கப்படியான மஹர் ஆகும்.

மஹர்க் கடனை வலியுறுத்திப் பெற ஒரு பெண்ணுக்கு உள்ள தீர்வழிகள் (Remedies open to a woman to enforce her dower debt):

(1) கணவன் உயிருடன் உள்ள பொழுதே கிடைக்கும் தீர்வழிகள் (During Husband's life-time):

(1) திருமணம் முடிந்தவுடன் மனைவி கேட்ட மாத்திரத்தில், கொடுக்கப் பட வேண்டியது, உரிமை மஹராகும். அதுபோல் மணமுறிவு ஏற்பட்டால் கொடுக்கப் பட வேண்டியது தாமத மஹராகும். மேற்கண்டவாறு கொடுக்கப்பட வேண்டிய மஹர், கணவன் மனைவிக்குப் பட்ட கடனாகவே கருதப்படும். எனினும் இது ஒரு பிணையிலாக் கடனேயாகும் (unsecured debt). மனைவி ஒரு சாதாரணக் கடனீந்தவராகவே (ordinary creditor) கருதப்படுவார். எனவே கேட்டவுடன் கொடுக்கப்படாத உரிமை மஹரை அவ்வாறு கேட்ட தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள், மனைவி நீதிமன்றத்தில் கணவன் மீது வழக்கிட்டு தீர்ப்பாணை பெறலாம். அதுபோல் மணமுறிவு ஏற்பட்ட பின்னர் (அல்லது கணவனின் இறப்பிற்குப் பின்னர்) கொடுக்கப்பட வேண்டிய தாமத மஹரை, மணமுறிவு (அல்லது கணவனின் இறப்பு) ஏற்பட்ட தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் நீதிமன்றத்தில் வழக்கிட்டு தீர்வழி பெறலாம்.

(2) சில சமயங்களில் மஹர்க் கடனைப் பூர்த்தி செய்ய, கணவன் தனது சொத்தில் உடைமையில் மனைவியை அமர்த்தலாம். அம்மனைவி அச் சொத்திலிருந்து வரும் வருமானங்களை தனது மஹர்க் கடனுக்காக பெற்றுக் கொள்ளலாம். ஆனால் தனது மஹர்க் கடனுக்காக அவள் அச்சொத்தை விற்க முடியாது.

(3) வழக்கு மூலமாக அன்றி, கணவனுடன் உடலுறவிற்கு இணங்க மறுப்பதன் மூலமும் மனைவி மஹர்த் தொகையை கேட்டுப் பெறமுடியும்.

(4) உரிமை மஹர், கேட்டும் கொடுக்கப்படவில்லை என்றால், கணவனோடு உடலுறவு கொள்ள மனைவி மறுப்பதற்கு உரிமை உண்டு.

Mastan Sahib v. Asan Bibi [1] – சிறப்பு மஹரில் உரிமை மஹர் எவ்வளவு, தாமத மஹர் எவ்வளவு என்று பிரித்துக் காட்டப்படாதிருந்தால், அம்மஹர் முழுவதும் உரிமை மஹராகக் கருதப்பட வேண்டும். அதை மனைவி உடனடியாக கேட்டுப் பெறுவதற்கு உரிமை உடையவர் ஆவார். 'கன்னி' பிரிவினருக்கு இது பொருந்தும் என்று மேற்படி வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(5) கணவன், தன் மனைவியுடைய நடவடிக்கைகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தும் உரிமையை இழந்தவன் ஆவான்.

(6) மனைவி உரிமை வயது எய்தப் பெறாதிருந்தால், உரிமை மஹர் கொடுக்கப்படுவது வரையில் காப்பாளர் (Guardian) அவளைக் கணவனிடத்

1. (1900) 25 Mad.71

திலிருந்து பிரித்து வைக்க உரிமை பெற்றவராவார். இது போன்ற சந்தர்ப்பத்தில் கணவன் மீண்டும் தாம்பத்ய உறவு உரிமை கோரி வழக்குத் தொடர்ந்தால் 'உரிமை மஹர்' கொடுக்கப்படவில்லை என்பதை ஒரு நல்ல எதிர்வாதமாக காட்டலாம். ஆயினும், வேறு காரணம் இல்லையென்றால், உரிமை மஹர் கொடுத்த பிறகே, மீண்டும் தாம்பத்ய உறவு கொள்ள வேண்டும் எனும் நிபந்தனைகளுடன் கூடிய தீர்ப்பாணையை நீதிமன்றம் பிறப்பிக்கலாம்.

Abdul Kadir v. Salima[1] – இவ்வழக்கில் 'சுன்னி' பிரிவைச் சார்ந்த அப்துல் காதிர் என்பவர், சலிமாவை மணந்தார். சலிமா, தன் கணவன் அப்துல் காதிரை விட்டுப் பிரிந்து வாழ்ந்து வந்தார். கணவன் மீண்டும் சேர்ந்து வாழும் தாம்பத்ய உரிமை கோரி வழக்கு தொடர்ந்தார். ஆனால் தனக்கு தன் கணவன் உரிமை மஹர் தரவில்லை என்பது சலிமா–வின் எதிர்வாதமாகும். கணவன் தரப்பு வாதம் என்னவென்றால் அவள் மஹரைக் கேட்கவில்லை; ஆதலால் அது கொடுக்கப்படவில்லை என்பதாகும். ஆனால் கீழ் நீதிமன்றமோ கணவன் மஹரை முன்னரே கொடுத்திருக்க வேண்டும்; இப்பொழுது நீதிமன்றத்தில் அத்தொகை கட்டப்பட்டிருந்த பொழுதிலும், அது முதலிலேயே கொடுக்கப்படாததால் கணவர் மீண்டும் தாம்பத்ய உறவு கோரும் உரிமையை இழந்துவிட்டார் என்று கூறி வழக்கினை தள்ளுபடி செய்துவிட்டது. கீழ் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பினை எதிர்த்து கணவன் மேல் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். மனைவி கேட்ட பின்னர் 'உரிமை மஹர்' கொடுக்கப்பட வேண்டுமா, அல்லது அது கேட்கப் படாமலேயே கொடுக்கப்படவேண்டுமா, என்ற கேள்விக்கு அங்கு பதில் கிடைத்தது. மனைவி கேட்ட பின்னர் கொடுத்திருந்தால், கொடுக்கத் தவறிய நிலை கணவனைச் சாரும். கேட்கப்படவில்லையானால், கணவன் கொடுக்கத் தவறிய தாகச் சொல்ல முடியாது என்று கணவனின் சார்பாக மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(2) கணவன் இறந்த பிறகு மனைவிக்கு கிடைக்கும் தீர்வழிகள் (After her husband's death):

(1) மணமுறிவு ஏதும் ஏற்படவில்லையானால், கணவன் இறந்த பிறகு தாமத மஹரைப் பெற மனைவி உரிமை படைத்தவள் ஆவாள்.

(2) கணவன் உயிருடன் இருக்கும் காலத்தில் கேட்டுப் பெறப்படாத உரிமை மஹர், கணவன் இறந்த பின், மனைவிக்கு கொடுக்கப்பட வேண்டியதாகிறது.

(3) மனைவி தனது மஹர்க் கடனுக்கு பற்றுரிமையாக (lien) கணவனின் சொத்து எதனின் உடைடையிலும் இருந்தால், அவள் தனக்கு வர வேண்டிய மஹர்க் கடன் அடைபடும் வரை அச்சொத்தின் உடைமையில் அவளே தொடர்ந்து

1. (1886) 8 All. 149.

இருக்கலாம். இது குறித்து இறந்து போன அவளது கணவனின் பிற வாரிசுகளோ, அல்லது கடனீந்தவர்களோ கேள்வி ஏதும் கேட்கவியலாது. இது மனைவியின் (இங்கு விதவையின்) சொத்தின் உடைமையை தக்க வைத்துக் கொள்ளும் உரிமை (Widow's Right of Retention of husband's property) எனப்படுகிறது. மஹர் தொகை கிடைத்த பின் அம்மனைவி, கணவனின் சொத்தை உரிய வாரிசுகளிடம் கொடுத்து விட வேண்டும்.

(3) தனது மஹர்க் கடன் முற்றிலும் அடைபடும் வரை, மேற்கண்டவாறு அம்மனைவி சொத்தை தன் உடைமையிலேயே வைத்திருக்கலாம். மேலும் தனது மஹர்க் கடனுக்காக கணவனின் வாரிசுகள் மீதும் வழக்கிடலாம்.

(4) மேற்கண்டவாறு மனைவி கணவனது சொத்தின் உடைமையில் இல்லாது போனால், தனக்கு சேர வேண்டிய மஹர்க் கடனை கணவனின் சொத்துக்களிலிருந்து வசூலிக்க, அவனது வாரிசுகள் மீது வழக்கிடலாம். சொத்துக்கள் ஏதும் அக்கணவனுக்கு இல்லையென்றால், அவனது வாரிசுகள் அம்மஹர்க் கடனைச் செலுத்த வேண்டும்.

(5) மேற்கண்ட நிலைப்பாட்டில் சம்பந்தப்பட்ட மனைவியும் இறந்து போனால், அவளது வாரிசுகள் மேற்படி மஹர்க் கடனைப் பெற கணவனின் வாரிசுகள் மீது வழக்கிடலாம்.

Maina Bibi v. Choudri Vakil[1] - இவ்வழக்கில் கணவன் இறக்கும் பொழுது மனைவி கணவனின் சொத்தில் சமாதானமான முறையிலும் சட்டப்படியும் உடைமை பெற்றிருந்தால்தான், அவர் அச்சொத்தைத் தன் வசம் வைத்திருக்க முடியும் என்றும், அப்படி அவர் பெற்றுள்ள கணவனின் சொத்தை அடைமானம், பொருட்பிணைப் பொறுப்பு, பற்றுரிமை போன்ற பராதீனங்களை செய்ய இயலாது என்றும் பிரிவி கவுன்சில் தனது தீர்ப்பில் கூறியது

முடிவுரை:

இசுலாம் சட்டத்தில் ஒரு மனைவியை மணமுறிவு (தலாக்) செய்ய, கணவனுக்கு பரந்த உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமையின் மீது வேறு விதத்தில் வரம்பிடுவதற்காக ஏற்படுத்தப்பட்டதே, 'மஹர்' எனும் கருத்துப்படிவம் (concept) என்று கூறலாம். மணமுறிவு செய்யத் துணியும் கணவன், மஹர் கொடுக்க வேண்டியதை சற்றே நினைத்துப் பார்ப்பானேயாயின், மணமுறிவு மறந்து போகும்; மனமொத்து வாழும் எண்ணம் தளிர்க்கும். மேலும் மஹர்த் தொகையின் மூலமாக, மணமுறிவிற்குப் பின்னர், அல்லது கணவனின் இறப்பிற்கு பின்னர், மனைவியின் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு நிச்சயமான ஆதரவு ஏற்படுகிறது.

-o0o-

1. (1925) 52 I.A. 145

4 திருமண முறிவு (அல்லது) தலாக் [Divorce (or) Talak]

1. What are the different ways in which a marriage may be dissolved under Mohammedan Law? (முகம்மதிய சட்டப்படி நடை பெற்ற திருமணத்தை விலக்கிக் கொள்ள உள்ள பல்வேறு வழிகள் யாவை?)

(அல்லது)

What are the different modes of "Talak"? When does "Talak" become irrevocable? ("தலக்"கின் பல்வேறு முறைகள் யாவை? "தலக்" எப்போது இரத்து செய்ய முடியாததாகிறது?)

(அல்லது)

Explain "Talak" as a form of divorce and state the different modes of "Talak" and the consequences of such. ("தலாக்" மனமுறிவின் ஒருவகை என்பதை விவரிக்கவும். வெவ்வேறு வகையான "தலாக்" பற்றியும் அவை ஒவ்வொன்றின் விளைவையும் குறிப்பிடுக.)

(அல்லது)

Talak - Write short notes. (தலாக் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Talak hasan - Write short notes. (தலக் ஹாசன் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Khula- Write short notes. (குலா – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Distinquish between Khula and Mubarat. (குலா மற்றும் முபாரத் வேறுபடுத்துக.)

(அல்லது)

Zihar - Write short notes. (சிஹார் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Effect of Apostacy under Islamic law- Write short notes. (இஸ்லாமிய சட்டத்தில் மதமாற்றத்தின் விளைவுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

திருக்குர் ஆனின் வாசகங்கள்

மூன்று முறைகளில் திருமண முறிவு

திருமண முறிவு (அல்லது) தலாக் - விளக்கம்

சில முக்கிய வழக்குகள்

Moonshe Buzloor Raheem v. Shumsoonnissa Begam

Ma-Mi v. Kallander Ammal

Sarabai v. Rabiabai

தலாக்கின் பல்வேறு முறைகள்

(1) தலாக்-அஸ்-சுன்னத் (Taluk-us-sunnat)

(அ) தலாக் அஹ்ஸன் அல்லது ஒருமுறை தலாக் (Talak Ahsan)

இத்தலாக்கை திரும்ப பெறுதல்

இத்தலாக்கை திரும்ப பெற முடியாத சந்தர்ப்பம்

(ஆ) தலாக் ஹஸன் அல்லது மும்முறை தலாக் (Talak Hasan)

(2) தலாக் -அல் - பிட்டட் அல்லது முத்தலாக் (Talak - ul - biddat)

(3) தலாக்-அல்- பாயின் (Talak - ul - bain)

(4) தலாக் தஃப்வீஸ் (Talak by Tafweez) அல்லது தலாக் அதிகார ஒப்படைப்பு அல்லது முகவர் வழி திருமண முறிவு (Delegated Divorce)

வேறு வகையான திருமண முறிவுகள்

(அ) உடன்படிக்கையின் பேரிலான திருமண முறிவு

1. குலா (Khula)
2. முபாராத் (Mubara'at)

குலா மற்றும் முபாராத் - வேறுபாடுகள்

(ஆ) திருமண முறிவு செய்ய கணவனுக்குள்ள உரிமை

1. ஈலா (Ila)
2. சிஹார் (Zihar)

(இ) திருமண முறிவு கோர பெண்ணுக்குள்ள உரிமை

(ஈ) லியான் அல்லது சாபம் (Li'an or Imprecation)

(உ) மதமாற்றத்தால் திருமண முறிவு (Apostasy)

திருமண முறிவால் ஏற்படும் விளைவுகள்

பிரிவுற்ற தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கு நடைமுறை

முடிவுரை

திருக்குர் ஆனின் வாசகங்கள்:

இசுலாமியத் திருமணம் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகும். எனவே அதனை மற்ற ஒப்பந்தங்களைப் போன்று முறிக்க முடியும். இசுலாமியரிடையே திருமண முறிவுக்கு அங்கீகாரம் அளிப்பது 'திருக்குர் ஆனின்' வாசகங்களாகும். அதன்படி, **'தம்பதிகளிடையே மன மாற்றமும் பிளவும் ஏற்பட்டால், தம்மில் ஒருவரை நடுவராகத் தேர்ந்தெடுத்து, அவர் முன்னிலையில், இருவரும் பிரிந்து செல்ல ஒப்புக்கொண்டு அதை ஏற்றுச் செயல்புரியுங்கள்'** என்பது திருக்குர் ஆனின் வாசகங்கள் ஆகும்.

மூன்று பெரும் முறைகளில் திருமண முறிவு:

இசுலாமிய சட்டத்தின்படி பின்வரும் காரணங்களால் திருமண இழப்பும், திருமண ஒப்பந்த முறிவும் ஏற்படுகிறது. அவை,–

(1) தம்பதிகளில் ஒருவர் இறந்து போனாலும், அவ்விருவரிடையே இருந்த திருமண ஒப்பந்தம் முறிந்து போகிறது (By the death of spouse).

(2) தம்பதிகளில் இருவரில் ஒருவர் திருமண ஒப்பந்தத்தை முறிப்பதன் மூலம், திருமண ஒப்பந்தம் முறிந்து போகிறது (By the act of either spouse).

(3) நீதிமன்ற நடவடிக்கைகளின் மூலம் திருமண முறிவு (By judicial process).

திருமண முறிவு (அல்லது) தலாக் – விளக்கம் :

இசுலாம் மொழியில் 'தலாக்' என்பது 'திருமண முறிவு' எனப்படும். அதாவது, 'தலாக்' என்ற சொல்லிற்குத் திருமண பந்தத்திலிருந்து மனைவியை விடுவித்தல் என்னும் பொருளாகும். கணவன் திருமண முறிவிற்கு தன்னிச்சையாக மேற்கொள்ளும் நடவடிக்கையே தலாக்காகும்.

இப்படித் 'தலாக்' சொல்லும் கணவன், இசுலாம் சட்டத்தின் 308–வது பிரிவின்படி பின்வரும் இரு தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அவன் பருவம் எய்தப் பெற்றவனாகவும் (has attained puberty), சித்தம் தெளிந்தவனாகவும் (Sound mind) இருக்க வேண்டும். மேலும் அவன் காரணம் எதுவும் காட்டாமல், நினைத்த மாத்திரத்தில், தனது மனைவி நிற்கும் இடத்தில் வைத்தே அவளை 'தலாக்' (அதாவது திருமண முறிவு) செய்ய உரிமை பெற்றவன். மனைவியைப் பார்த்து, **'நான் உன்னைத் தலாக் சொல்லிவிட்டேன்'** என்று அதன் பொருள் தெரிந்து மூன்று முறை மனதாரச் சொன்னால், அந்த நேரத்திலிருந்தே அவ்விருவரிடையேயும் திருமணம் முறிந்துவிடுகிறது. 'தலாக்' என்ற சொல்லைப் பயன்படுத்தித்தான் திருமணத்தை முறிக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

மனைவியிடமிருந்து பிரிய வேண்டும் என்ற எண்ணத்தை கணவன் மனைவிக்கு தெளிவுபடுத்தினாலே போதும்.

இது வாய் மொழியானதாகவோ அல்லது **'தலாக்நாமா'** என்றழைக்கப் படும் எழுத்து மூலமான திருமண முறிவு ஆவணத்தின் வழியாகவோ இருக்கலாம் என இசுலாம் சட்டத்தின் **310(1)–வது** பிரிவு கூறுகிறது.

சில முக்கிய வழக்குகள்:

Moonshe Buzloor Raheem v. Shumsoonnissa Begam[1] - இவ்வழக்கில் 'தலாக்' என்பது இசுலாம் கணவனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு உரிமை. அவன் அதை எந்த நேரத்திலும் பயன்படுத்தலாம். அதற்கு காரணம் சொல்லவேண்டிய அவசியமோ அல்லது மனைவி உடன் இருக்கவேண்டிய அவசியமோ கிடையாது எனத் தீர்ப்பு கூறப்பட்டது.

ஹனபி சட்டப்படி கணவன் மனைவியை திருமணமுறிவு செய்ய **"நான் உன்னை தலாக் செய்கிறேன்"** எனக் கூற வேண்டும். ஷியா முறைப்படி, கணவன் தலாக் என்ற வார்த்தையைக் கூறும்பொழுது இரு இசுலாம் ஆண்கள் உடன் இருந்தால் போதுமானதாகும்.

Ma-Mi v. Kallander Ammal[2] - இவ்வழக்கில் 'தலாக்' மனைவி முன்னிலையில் சொல்லப்பட்ட வேண்டுமென்றோ, மனைவிக்கு நேரடியாக தெரியப்படுத்தப்பட்ட வேண்டும் என்றோ அவசியம் இல்லை என்று தீர்ப்புரைக்கப்பட்டது.

Sarabai v. Rabiabai[3] – இதில், கணவன் காஜியாரிடம் (Kazhi) சென்று, அவர் முன்னிலையில் தன்னுடைய மனைவிக்கு 'தலாக்' சொல்லி, அதற்குரிய ஆவணம் (தலாக் நாமா) ஒன்று எழுதி, அதில் கையெழுத்துப் போட்டான். கணவன் 'தலாக்' சொன்ன சமயத்தில் மனைவி அங்கே இல்லாதிருந் தாலும், எவரும் அவளுக்கு அதைத் தெரிவிக்காமலிருந்தாலும், ஆவணம் எழுதப்பட்ட நாளிலிருந்து திருமண முறிவு செயல்பட ஆரம்பித்து விடுகிறது என்று மேற்படி வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தலாக்கின் பல்வேறு முறைகள் (Different modes of Talak):

இசுலாம் சட்டத்தின் **311–வது** பிரிவு தலாக்கின் பல்வேறு முறைகளை விளக்குகிறது. அம்முறைகள் அடுத்த பக்கத்தில் வருமாறு.

1. (1867) II M.I.A. 551
2. (1927) 54 I.A. 61
3. (1905) 30 Bom. 536



1. தலாக்-அஸ்-சுன்னத் (Taluk-us-sunnat):

இம்முறையிலான தலாக், இசுலாம் கொள்கைகளால் அங்கீகரிக்கப்பட்ட தாகும். இது (அ) **தலாக் அஹ்ஸன்** எனவும், (ஆ) **தலாக் ஹஸன்** எனவும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

(அ) தலாக் அஹ்ஸன் அல்லது ஒருமுறை தலாக் (Talak Ahsan):

ஒரேமுறை 'தலாக்' என்று சொல்லித் திருமண முறிவு செய்வதைத் 'தலாக் அஹ்ஸன்' அல்லது 'ஒருமுறை தலாக்' என்றழைக்கிறார்கள். இம்முறை யான தலாக்தான் மிக அதிகமாக நடைமுறையில் உள்ளது. மனைவியின் ஒரு மாதவிடாய்த் தீட்டுக்கும் மறு மாதவிடாய்த் தீட்டுக்கும் இடையே உள்ள நாட்களில் ஒருமுறை தலாக் சொல்லி, அடுத்தடுத்து வருகின்ற இரண்டு மாதவிடாய் கழிவது வரையில் கணவன் அவளுடன் உடலுறவு கொள்ளாமல் பிரிந்திருந்து, அவளும் 'இத்தா' இருந்து முடியும் நாளன்று தலாக் முற்றுப் பெறுகிறது. இரண்டு மாதவிடாய்க் காலங்களுக்கு இடையேயுள்ள (தீட்டு அல்லாத) துப்புரவான நாட்களில்தாம் கணவன் 'தலாக்' சொல்லவேண்டுமென்பது, மாதவிடாய் அறவே நின்றுவிட்ட பெண்களுக்கும், எழுத்து மூலம் 'தலாக்' வழங்கும் பொழுதும் பொருந்தாது.

இத்தலாக்கை திரும்ப பெறுதல் : மேற்படி மணமுறிவுக் காலத்தில்

இத்தா முடிவதற்குள், கணவன் தனது தலாக்கை விலக்கிக் கொண்டு வார்த்தை களால் "தலாக்கை பின்வலித்து (வாபஸ் பெற்றுக்) கொள்கிறேன்" என்று கூறினாலோ அல்லது மேற்படி காலக்கெடு முடியுமுன்னர் தம்பதிகள் மீண்டும் உடலுறவு கொண்டாலோ இத்தலாக் முறிவடைந்துவிடும்.

இத்தலாக்கை திரும்ப பெற (இரத்து செய்ய) முடியாத சந்தர்ப்பம் (Irrevokable): கணவன் தலாக் கூறி, மனைவி இத்தா இருந்து, அக்காலமும் முடிந்துவிட்டால், கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வாழ விருப்பப்பட்டாலும், அது இயலாது. தலாக்கை திரும்ப பெற முடியாது.

மேலும் 'தலாக்' சொல்வதை ஒரு இசுலாம் ஆண் அவனுடைய வாழ் நாளில் மூன்று முறைதான் சொல்ல முடியும். ஒருத்தியை முதல் தடவையாக ஒருமுறை 'தலாக்' சொல்லிய பின்னர், அதை பின்வலித்துக் கொள்ளவோ, சேர்ந்து வாழவோ செய்தால் மீதியிருப்பது இரண்டு முறைதான். அவ்விதம் இரண்டாம் முறையும் 'தலாக்' சொல்லி மறுபடியும் பின்வலிக்கவோ, கூடிவாழவோ செய்தால் மீதி இருப்பது ஒரே ஒரு முறைதான். அவ்விதம் மூன்றாம் முறையாகவும் 'தலாக்' சொல்ல நேர்ந்தால், அவ்வாறு சொல்லிய மாத்திரத்திலேயே 'தலாக்' உடனடியாக நிறைவேறிவிடும். எனவே 'தலாக்' சொல்வதை விளையாட்டாக கொள்ளாமல், விவேகமாக பயன்படுத்துவது மிக முக்கியமாகும். ஒரு இசுலாம் ஆண் தன்னுடைய ஒரு மனைவியைப் பொறுத்தவரை, அவனுடைய வாழ்நாளில் மூன்றாம் முறையாக 'தலாக்' எப்பொழுதும் சொன்னாலும், அது பின்வலிக்க முடியாதபடி உடனடியாக அமலுக்கு வந்துவிடும். எக்காரணம் கொண்டு அதனை இரத்து செய்ய முடியாது (cannnot be reovked).

(ஆ) தலாக் ஹஸன் அல்லது மும்முறை தலாக் (Talak Hasan) :

மனைவியின் மூன்று மதாவிடாய்க் காலத்திற்குட்பட்ட நாட்களில் மூன்று முறை கணவன் தலாக் சொல்லுதல் 'தலாக் ஹஸன்' ஆகும். அதாவது முதல் மாதவிடாய்க் காலத்திற்கும், இரண்டாவது மாதவிடாய்க் காலத்திற்கும் இடைப்பட்ட நாட்களில் முதல் முறையாக 'தலாக்' சொல்லி, இரண்டாவது மாதவிடாக் காலத்திற்கும் மூன்றாவது மாதவிடாய்க் காலத்திற்கும் இடைப்பட்ட நாட்களில் இரண்டாம் முறையாக 'தலாக்' சொல்லி, மூன்றாவது மாதவிடாய் காலத்திற்கும் நான்காவது மாதவிடாய் காலத்திற்கும் இடைப்பட்ட நாட்களில் மூன்றாவது முறையாகவும் இறுதியாகவும் 'தலாக்' சொல்லி, திருமண முறிவைக் கணவன் நிலைப்படுத்துவதாகும்.

மேற்கண்ட காலவரம்பிற்குள், தம்பதிகள் உடலுறவு கொள்ளாதிருந்தால், திருமண முறிவு நிலைத்துவிடுகிறது. இதுவும் கணவனுக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது. அதாவது அவன் இருமுறை அவசரப்பட்டு 'தலாக்' சொல்லியிருந்தாலும், மூன்றாவது முறையாகத் 'தலாக்' சொல்லுவதற்கு முன்னர்,

தான் சொல்லிய தலாக்கை பின்வலித்துக் கொள்ளலாம். இதுவும் 'தலாக் அஹ்ஸன்' முறையைப் போன்று சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஷியா பிரிவினரின் கொள்கைப்படி, இவ்விரண்டு முறைகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட திருமண முறிவு முறைகளாகும்.

2. தலாக் -அல் - பிட்டட் அல்லது முத்தலாக் (Talak - ul - biddat):

கணவன் மனைவியை நோக்கி **"நான் உன்னைத் தலாக் செய்து விட்டேன்"** என்று மூன்று முறை **("I divorce thee, I divorce thee, I divorce thee")** தொடர்ந்து உச்சரிக்கவோ , அல்லது சுருக்கமாக **"உன்னை 'முத்தலாக்' செய்துவிட்டேன்" ("I divorce thee thrice")** என்று சொல்லவோ நேரிட்டால், அக்கணமே கணவன் மனைவியரிடையே நிரந்தரத் திருமண முறிவு ஏற்பட்டு விடுகிறது. மேலும் ஒரே ஒரு 'மாதவிடாய்' காலத்தில் இவ்வாறு சொன்னால் போதும். இந்த முறையானது மிகவும் கொடுமையானதாக கருதப்படுவதால், இசுலாமியரின் கொள்கைகள் இதை ஆதரிக்கவில்லை. எனினும், இசுலாமிய சட்டத்தின் **311(3)–வது பிரிவானது** இதை அங்கீகரிக்கின்றது. 'தலாக்' சொன்னதை திரும்பப் பெறவோ அல்லது பின்வலித்துக் கொள்ளவவோ அல்லது இரத்து செய்யவோ இதில் இடமில்லை.

3. தலாக்-அல்- பாயின் (Talak - ul - bain):

'ஒரே முறை நான் தலாக் செய்கிறேன்; இதுவே இறுதி முறையும் கூட; இதை இரத்து செய்வதிற்கில்லை' என்று பொருள் தரும் 'தலாக்–அல்–பாயின்' என்னும் சொல்லைப் பயன்படுத்தி **"நான் உன்னை 'தலாக்–அல்–பாயின்' செய்து விட்டேன்"** என்று கணவன் சொன்னாலும், அதுவும் தலாக் –அல்–பிட்டட் ஆகும். இதனாலும் உடனடியாகத் திருமண முறிவு ஏற்படும்.

4. தலாக் தஃப்வீஸ் (Talak by Tafweez) அல்லது தலாக் அதிகார ஒப்படைப்பு அல்லது முகவர் வழி திருமண முறிவு (Delegated Divorce) :

இது குறித்து இசுலாமிய சட்டத்தின் பிரிவுகள் **314 (1) மற்றும் (2)** கூறுகிறது. தலாக் சொல்லும் அதிகாரம் முதற்கண் கணவனுக்கே உரியது. எனினும், தனது இந்த அதிகாரத்தை, அவர் மற்றவரிடம் ஒப்படைத்து அவர் மூலம் நிறைவேற்றலாம். இவ்வாறு அதிகாரம் பெற்றவர், கணவனின் முகவராக (Agent) நின்று, கணவனின் சார்பாக அவனது மனைவிக்கு தலாக் சொல்லலாம். இதனால் திருமண முறிவு ஏற்படுகிறது. இவ்வாறு கணவனின் முகவராக மற்றொருவர் நின்று, திருமணத்தை 'தலாக்' சொல்லி முறிப்பது 'தலாக் தஃப்வீஸ்' எனப்படும்.

இந்த அதிகாரத்தை அக்கணவன் தனது மனைவியிடம் கூட ஒப்படைக்கலாம். அவள் கணவனின் முகவராக நின்று 'தலாக்' சொல்வதாகக் கொள்ள வேண்டும். **[பிரிவு 314(1)]**.

சில குறிப்பிட்ட சூழ்நிலைகள் ஏற்படும் பொழுது, மனைவியே தலாக் சொல்ல உரிமை படைத்தவள் எனும் அடிப்படையில் திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் அல்லது நடைபெற்ற பின்னர் கணவனும் மனைவியும் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்று **பிரிவு 314(2)** குறிப்பிடுகிறது. ஆனால் அவ்வுடன் படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் நியாயமானதாக இருக்க வேண்டும். மேலும், இசுலாம் சட்டக் கொள்கைக்கு எதிரானதாக இருக்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, 'உரிமை மஹரை' நீ கேட்டவுடன், அதை நான் உனக்குக் கொடுக்கத் தவறினால், எனது மனைவியாகிய நீ 'தலாக்' சொல்லும் உரிமையை பெற்றவளாவாய், என்று திருமணத்தின் பொழுது, கணவன் தனது மனைவிக்கு அதிகாரம் கொடுத்திருந்தால், அவ்வாறு மனைவி உரிமை மஹரை அவனிடம் கோரி அவன் கொடுக்கத் தவறினால், அவள் அவனைத் தலாக் செய்துவிட உரிமை பெற்றவளாவாள். அப்படி தலாக் சொல்லும் உரிமையைத் சட்டம் அவளுக்கு அளிக்கவில்லையென்றாலும், கணவன் அளித்த அதிகாரத்தைக் கொண்டு அவள் செயல்படுவதாகக் கருத வேண்டும்.

வேறுவகையான திருமண முறிவுகள் :

(அ) உடன்படிக்கையின் பேரிலான திருமண முறிவு (Divorce by Agreement):

1. குலா (Khula):

ஒரு இசுலாம் திருமணம், கணவன் தன்னிச்சையாக 'தலாக்' சொல்லி முறிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், கணவனும் மனைவியும் சேர்ந்து செய்து கொள்ளும் உடன்படிக்கையின் வாயிலாகவும் முறிக்கப்படலாம். இவ்வாறு உடன்படிக்கையின் வாயிலாக செய்து கொள்ளப்படும் திருமண முறிவு 'குலா' மற்றும் 'முபாராத்' எனும் இருவகைப்படும் என்று இசுலாம் சட்டத்தின் **பிரிவு 319(1)** குறிப்பிடுகிறது.

பிரிவு 319(2)–ன்படி, கணவனின் இசைவு பெற்று மனைவி திருமண ஒப்பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது 'குலா' எனப்படும். கணவன் இத்திருமண முறிவிற்கு இசைவு தரும்பொழுது, மனைவியிடமிருந்து மறுபயன் **(consideration)** பெறவோ, நிபந்தனை விதிக்கவோ செய்யலாம். எடுத்துக் காட்டாக, 'மனைவி தனக்குச் சேர வேண்டிய மஹர்க் கடனை விட்டுவிட்டால், அவள் திருமண முறிவு பெற்றுக் கொள்ளட்டும்' என்று, அவள் மஹர்க் கடனை விட்டுக் கொடுப்பதைக் கணவன் மறுபயனாகக் கேட்கலாம்.

கணவன் விதித்த நிபந்தனையை அல்லது மறுபயனை நிறைவேற்றாமல், மனைவி திருமண முறிவு செய்தாலும் அது செல்லுடைமையாகும். ஆனால் உடன்படிக்கைப்படி கணவன் மறுபயனைப் பெற உரிமை உடையவன். எனவே, நீதிமன்றத்தின் மூலம் அவன் அதைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கணவன் கோரியவாறு மனைவி மறுபயன் அளிப்பதாக மனைவி முனைவு (offer) செய்து, அவளை திருமண பந்தத்திலிருந்து விடுவிக்க கணவன் இசைந்தால், அது மனைவி செய்த மேற்படி முனைவை கணவன் ஏற்றுக் (acceptance) கொண்டதாக பொருளாகும். எனவே அங்கு 'குலா' முறையிலான திருமண முறிவு நிறைவேறிவிடுகிறது. இவ்வாறு முனைவு ஏற்றுக் கொள்ளப் பட்டவுடன், அது ஒரு முறை சொல்லப்பட்ட, இரத்து செய்யப்பட முடியாத தலாக் (single irrevocable divorce) ஆகிவிடுகிறது. மேலும் இது உடனடியாக செயலுக்கு வந்துவிடுகிறது. இங்கு 'குலாநாமா' **(Khulanama)** எனும் திருமண முறிவு ஆவணம் எழுதப்படும் வரை, மேற்படி மணமுறிவின் செயல்பாடு தள்ளிப் போடப்படுவதில்லை.

2. முபாராத் (Mubara'at) :

இது குறித்து பிரிவு **319(3)** விளக்குகிறது. மேற்கண்ட 'குலா' என்ற திருமண முறிவில், மனைவி முனைந்து நின்று கணவனின் இசைவு பெற்று திருமண முறிவை ஏற்படுத்துகிறாள். ஆனால் 'முபாராத்' என்னும் திருமண முறிவில், இருவருமே ஒருவரை விட்டொருவர் வாழ்க்கைப் பந்தத்திலிருந்து பிரிந்து செல்ல முனைந்து, அதற்காக உடன்படிக்கை செய்து கொள்கிறார்கள். இதில் இருவர் விருப்பமும் கருத்தும் ஒன்றே. இங்கு இருவருமே, தாங்கள் பிரிந்து விட்டால் போதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதால், மறுபயன் அல்லது வேறு நிபந்தனைகள் எனும் கேள்விகளுக்கே இடமில்லாது போய்விடுகிறது.

குலா மற்றும் முபாராத் – வேறுபாடுகள் (Distinctions between Kula and Mubara'at): குலா, முபாராத் ஆகிய இரண்டு முறையிலான திருமண முறிவுகளும், உடன்படிக்கையின் வாயிலாக எழுவதாக இருந்தாலும், இவை இரண்டிற்குமிடையே பின்வரும் வேறுபாடுகள் உள்ளன. அவை,–

(1) குலா எனும் திருமண முறிவு முதலில் மனைவியிடமிருந்து ஆரம்பிக்கிறது. அவளே முதலில் மணமுறிவு கோரி முனைவு செய்கிறாள்; ஆனால் முபாராத் எனும் திருமண மறிவில், திருமண முறிவிற்கு கணவன், மனைவி ஆகிய இருவருமே பரஸ்பரம் இசைகிறார்கள்.

(2) குலா–வில் திருமண முறிவிற்கு முனைவு செய்யும் முதல் உரிமை மனைவிக்கே உண்டு. ஆனால் முபாராத்–தில் கணவன் அல்லது மனைவி இருவரில் எவர் வேண்டுமானாலும் திருமண முறிவிற்கு முதலில் முனைவு செய்யலாம். ஆனால் அம்முனைவை மறுதரப்பினர் ஏற்றுக் கொண்டுவிட்டால்,

அங்கு இரத்து செய்யப்பட முடியாத திருமண முறிவு உடனடியாக ஏற்பட்டு விடுகிறது.

(3) குலா–வில் மனைவி திருமண முறிவு கோரி செய்யும் முனைவை கணவன் ஏற்றுக் கொண்டு இசைவளிக்க, அவன் மனைவியிடமிருந்து மறுபயன் கோரலாம். சில நிபந்தனைகளைக் கூட விதிக்கலாம். இவற்றை மனைவி பூர்த்தி செய்தால்தான், அங்கு திருமண முறிவு ஏற்படும். ஆனால் முபாராத் வகை திருமண முறிவு, கணவன், மனைவியின் பரஸ்பர இசைவினால் ஏற்படுவதால், மேற்கண்ட மறுபயன் அளித்தல், நிபந்தனைகள் விதித்தல் போன்றவை இதில் கிடையாது.

(ஆ) திருமண முறிவு செய்ய கணவனுக்குள்ள உரிமை:

நாம் தொடக்கத்தில் கண்ட நான்கு வகையான 'தலாக்கும்' கணவன் தன்னிச்சையாக சொல்வதாகும். இது தவிர பின்வரும் முறைகளில் திருமண முறிவு செய்து கொள்வதற்கும் கணவனுக்கு உரிமை உண்டு.

1. ஈலா (Ila) :

'நான் உன்னைத் தொடுவதில்லை' என்று கணவன் உறுதியெடுத்து (vow), அதன்படி அவன் தன் மனைவியுடன் தொடர்ந்து 4 மாதங்களுக்குக் குறைவில்லாமல் உடலுறவு கொள்ள மறுப்பதன் மூலம், அவன் தன் மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்பதை மறைமுகமாக உணர்த்தித் திருமண உறவை முறித்துக் கொள்வது 'ஈலா' எனப்படும் எனப் **பிரிவு 317** கூறுகின்றது. ஆனால் ஷாபிச் சட்டப்படி (Shafei law), கணவன் இவ்வாறு உறுதியெடுத்துக் கொண்டது மட்டுமே, தானாக திருமண முறிவிற்கு வழிவகுக்காது. எனினும் மனைவி இதைக் காரணமாகக் காண்பித்து நீதிமுறையில் திருமண முறிவு கோர உரிமை படைத்தவள்.

2. சிஹார் (Zihar) :

தன் மனைவியைக் கணவன் உடலுறவு கொள்ளத்தகாத தடுக்கப்பட்ட உறவினரோடு (இரத்த சம்பந்த உறவு, கொள்ளுறவு, பாலூட்டி வளர்த்த செவிலித்தாய் உறவு) ஒப்பிட்டுக் கூறி, அத்தகைய உறவினரில் ஒருத்தியாகத் தன் மனைவியைக் கருதுவதன் மூலம், அக்கணவன் திருமண உறவை முறித்துக் கொள்ளலாம் என இசுலாம் சட்டத்தின் **318–வது பிரிவு** கூறுகின்றது.

அப்படித் திருமண முறிவு ஏற்பட்ட பின்னர், கணவன் அவளையே தன் மனைவியாக ஏற்றுக் கொள்ள விரும்பினால், மனைவி அவனைக் கழுவாய் (expiation) தேடுமாறு கோருவதோடு, சிற்சில நிபந்தனைகளையும் விதிக்க உரிமை பெற்றவளாவாள். அந்நிபந்தனைகளுக்கு இரு எடுத்துக்காட்டுகள் வருமாறு.

(1) இரண்டு மாதம் தொடர்ந்து நோன்பிருக்கப் பணித்தல்;

(2) அறுபதுக்கும் மேற்பட்ட ஏழைகளுக்கு உணவளிக்கக் கேட்டல்.

இம்மாதிரியான நிபந்தனைகள் கணவனால் பூர்த்தி செய்யப்பட்டால், மனைவி அவனுடன் குடும்பம் நடத்த இசையலாம். இப்படிப்பட்ட நிபந்தனைகளில் ஒன்று நிறைவேற்றப்படாமற் போனாலும், மனைவி நீதிமன்றத்தில் வழக்கிட்டு நீதிமுறையில் திருமண முறிவு கோர உரிமை படைத்தவள் ஆவாள்.

மேற்கண்ட 'சிஹார்' முறையிலான திருமண முறிவு இந்தியாவில் இருப்பதாகக் தெரியவில்லை. சட்ட நூல் எழுத்தாளர்கள் பலரும், சிஹாரின் அடிப்படையில் மனைவி திருமண முறிவு கோரும் உரிமையை இந்திய நீதிமன்றங்கள் வலியுறுத்திச் செயல்படுத்துமா என்பதில் அய்யம் எழுப்பினர். எனினும் 1937–ஆம் ஆண்டின் ஷரியத் சட்டத்தின் 2–வது பிரிவின் வாயிலாக, மேற்படி 'சிஹார்' சட்ட அங்கீகாரம் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்படத்தக்கது.

(இ) திருமண முறிவு கோர பெண்ணுக்குள்ள உரிமை:

(1) கணவன் எங்கிருக்கிறான் என்பது நான்கு ஆண்டுகளுக்கு அறிய முடியவில்லையென்றால் (பிரிவு 324);

(2) கணவன் இரண்டு ஆண்டுகளுக்கு மனைவியை பாரமரிக்கவில்லை யென்றால் (பிரிவு 325);

(3) கணவனுக்கு ஏழாண்டு காலம் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டிருந்தால் (பிரிவு 326);

(4) கணவன் எவ்வித நியாயமான காரணமுமின்றி மணவாழ்க்கைக் கடப் பாடுகளை (marital obligations) நிறைவேற்றவில்லையானால் (பிரிவு 327);

(5) கணவன் ஆண்மையற்றவனாக (impotent) இருந்தால் (பிரிவு 328);

(6) கணவன் பித்துநிலையரானால் (insane) (பிரிவு 329);

(7) மனைவி திருமணத்தை ஏற்றுக் கொள்ளவில்லையானால் (பிரிவுகள் 330 மற்றும 273);

(8) கணவன் மனைவியைக் கொடுமைப்படுத்தினால் (பிரிவு 331);

(9) இசுலாம் சட்டம் அங்கீகரிக்கும் வேறு காரணங்கள் எதனாலும் (பிரிவு 332)

ஒரு மனைவி திருமண முறிவு கோரி நீதிமன்றத்தில் கணவனுக்கெதிராக வழக்கிட்டு தீர்ப்பாணை பெறலாம் என்று இசுலாம் சட்டத்தின் **323–வது பிரிவு** கூறுகிறது.

திருமண முறிவு பெற இசுலாம் சட்டம் மேற்கண்டவாறு இசுலாமியப் பெண்களுக்கு உரிமை இருந்தாலும், 1939–ஆம் ஆண்டில் இந்தியாவில் இயற்றப் பட்ட இசுலாம் திருமண இழப்புச் சட்டமானது (The Dissolution of Muslim Marriages Act, 1939), ஒரு இசுலாமிய மனைவி திருமண முறிவு பெறுவதற் குண்டான அடிப்படைகளை தொகுத்து பட்டியலிட்டுக் காட்டியுள்ளது. அதாவது இசுலாம் சட்டம், மணமான ஒரு இசுலாம் மனைவி திருமண முறிவு பெற கூறும் அடிப்படைகளையே, மேற்படி 1939–ஆம் சட்டம் தனியாகத் தொகுத்து வழங்கியுள்ளது. அவற்றின் அடிப்படையில், நீதிமன்ற தீர்ப்பாணை பெற்று திருமண முறிவு பெற அவளுக்கு முழு உரிமையுண்டு. (விரிவாக அடுத்த வினாவின் விடையில் காணலாம்.)

(ஈ) லியான் அல்லது சாபம் (Li'an or Imprecation):

பிறன்மனை புணர்தலை (Adultary) இகலாம் சட்டம், ஒரு கொடிய குற்றமாக கருதுகிறது. தன் மனைவி இக்குற்றம் புரிந்தவள் என்று கணவன் மனப்பூர்வமாக நம்பினாலும், அதை மெய்ப்பிப்பது மிகவும் கடினமாகும். இவ்வாறு சட்டப்படி நிரூபிக்க முடியாது போகும்போது, கணவன் தனது குற்றச்சாட்டை நீதிபதியின் முன்னிலையில் கூற வேண்டும். அதையும் அவன் நான்கு முறை தொடர்ந்து சொல்ல வேண்டும். அய்ந்தாவது முறையாகச் சொல்லும்பொழுது, **'நான் சொல்வது பொய்யாக இருந்தால், ஆண்டவனின் சாபக்கேடு என்மீது விழுவதாக'** என்று அவன் ஆணையிட்டுக் கூறவேண்டும்.

பின்னர், மனைவி கணவன் கூறும் குற்றச்சாட்டை பொய் என்று நான்கு முறை கூறி, அய்ந்தாவது முறையாக, 'ஆண்டவன் மீது ஆணையாக, என் மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் பொய்யானது' என்று ஆணையிட்டுக் கூற வேண்டும். இதை நீதிபதி ஏற்றுக்கொண்டு, இருவரையும் பிரிந்து வாழ தீர்ப்பாணை பிறப்பிப்பார். இவ்விதம் திருமண முறிவு ஏற்படுத்திக் கொள்வது 'லியான்' எனப்படும்.

இசுலாம் சட்டத்தின் 333–வது பிரிவின்படி, பிறன்மனை புணர்ந்த பழியைக் கணவன் அபாண்டமாகச் சுமத்தினால், மனைவி அதைக் காரணமாகக் காட்டி, நீதிமன்றம் வாயிலாக திருமண முறிவிற்கான தீர்ப்பாணையைக் கோர உரிமை பெற்றவளாவாள். ஆனால் குற்றச்சாட்டு உண்மையென நிரூபிக்கப் பட்டால், இவ்வுரிமையை அவள் இழந்தவளாகக் கருத வேண்டும்.

(உ) மதமாற்றத்தால் திருமணமுறிவு (Apostasy):

(1) 1939–ஆம் ஆண்டில் இசுலாம் திருமண இழப்புச் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்னர், இசுலாம் திருமணமொன்றின் தரப்பினர்களில் எவரேனும் ஒருவர் இசுலாம் மதத்தை விட்டு வேறு மதத்திற்கு மாறினால், அங்கு உடனடியாக

மற்றும் முழுமையாக திருமண முறிவு ஏற்பட்டுவிடுகிறது எனப்பட்டது **[பிரிவு 321 (1)]**.

(2) எனினும் 1939–ல் இசுலாம் திருமண இழப்புச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, அதன் 4–வது பிரிவின்படி, திருமணமான ஒரு இசுலாம் பெண் இசுலாம் மதத்தை துறந்துவிடுவது அல்லது வேறு மதத்திற்கு மாறிவிடுவது மட்டுமே, தானாக அவளது திருமணத்தை ஒரு முடிவிற்கு கொண்டு வந்துவிடாது. எனவே, அவள் மேற்படி சட்டத்தின் 2–வது பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படைகளின் கீழ் திருமண முறிவு வேண்டி நீதிமன்றத்தில் வழக்கிட வேண்டும் **[பிரிவு 321 (2)]**.

(3) மேற்படி சட்டத்தின் 4–வது பிரிவு திருமணமான ஒரு இசுலாம் பெண்ணின் மதமாற்றத்திற்கு மட்டுமே பொருந்துவதாகும். எனவே ஒரு இசுலாம் கணவன் இசுலாம் மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறினால், அங்கு உடனடியாகவும், முழுமையாகவும் திருமண முறிவு ஏற்பட்டுவிடுகிறது **[பிரிவு 321 (3)]**.

(4) மேற்படி சட்டத்தின் 4–வது பிரிவின் வகைமுறைகள், தனது முந்தய மத நம்பிக்கையை மீண்டும் தழுவியுள்ள, வேறொரு மத நம்பிக்கையிலிருந்து இசுலாம் மதத்திற்கு மாறிய பெண்ணிற்குப் பொருந்தாது. இம்மாதிரியான சூழலில், 1939–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இசுலாம் திருமண இழப்புச் சட்டத்திற்கு முன்பிருந்த சட்டமே அவளுக்குப் பொருந்தும். அப்படிப்பட்ட மாற்றம், திருமண இழப்பாகச் செயற்படும் **[பிரிவு 321 (4)]**.

(5) ஒரு இசுலாம் கணவன் இசுலாம் மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறிவிட்டால், அங்கு உடனடியாகவும் முழுமையாகவும் திருமண முறிவு ஏற்பட்டு விடுகிறது **[பிரிவு 321 (5)]**.

(மேற்படி 1939–ஆம் ஆண்டு இசுலாம் திருமண இழப்புச் சட்டத்தின் வகைமுறைகளை அடுத்த வினாவின் விடையில் காண்போம்.)

திருமண முறிவால் ஏற்படும் விளைவுகள்:

(வினா எண். 3–ன் விடையில் காண்க.)

பிரிவுற்ற தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கு நடைமுறை :

திருமணத்தை முறித்த பின்னர்ப் பழைய தம்பதிகள் மீண்டும் திருமணம் செய்துகொள்ள வேண்டுமெனில், பின்வரும் விதிகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

1. முதலில் மனைவி 'இத்தா' இருக்க வேண்டும்.

2. 'இத்தா' இருந்து முடித்த பின்னர், வேறு ஒருவரை அவள் மணந்து கொள்ள வேண்டும்.

3. அப்படி மணந்து கொண்டவனோடு உடலுறவு கொண்டு, அது பூர்த்தியாக வேண்டும்.

4. பின்னர், அவன் அவளுக்குத் 'தலாக்' சொல்லி, அவ்விருவரிடையேயும் திருமண முறிவு ஏற்பட வேண்டும். அல்லது அவன் மாண்டு அவள் விதவையாக வேண்டும்.

5. திரும்பவும் அவள் 'இத்தா' இருக்க வேண்டும்.

இந்த அய்ந்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்னரே, பழைய தம்பதிகளிடையே செல்லத்தக்க மறுதிருமணம் நடைபெற முடியும். இதில் ஏதேனும் பூர்த்தியாகவில்லையென்றால், அத்திருமணம் ஒழுங்கற்ற திருமணமாகிவிடும்.

முடிவுரை :

எனவே, 'தலாக்' சொல்வதை மேலெழுந்த வாரியாக பார்க்கும் பொழுது, அது மிகச் சுலபமாக தெரிந்தாலும், ஒருமுறை ஒருவன் அதை முன் யோசனையின்றி பயன்படுத்திவிட்டால், பிறகு அவன் என்னதான் வருந்தினாலும், அவளோடு மீண்டும் வாழ்க்கை நடத்துவது என்பது கடினமான ஒன்றாகிவிடும்.

2. State the grounds available to a Muslim wife for securing a divorce under the provisions of the Muslim Marriage Dissolution Act,1939 (1939–ஆம் ஆண்டின் முகம்மதிய திருமண இழப்புச் சட்டத்தின் வகை முறைகளின் கீழ் ஒரு முகம்மதிய மனைவி திருமண முறிவு செய்து கொள்வதற்கு கிடைக்கும் காரணங்களைக் குறிப்பிடுக.)

(அல்லது)

What are the grounds for effecting a divorce of a Muslim Marriage under the Dissolution of Muslim Marriages Act, 1939? (முகமதிய திருமண இழப்புச் சட்டம், 1939ன் கீழ் எக்காரணங்களின் அடிப்படையில் ஒரு முகமதியர் திருமண முறிவு செய்து கொள்ளலாம் ?)

(அல்லது)

State the grounds for decree for dissolution of marriage by a woman married under Muslim law as laid down in the Dissolution of Muslim Marriage Act. (இசுலாம் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொண்ட ஒரு பெண் திருமண முறிவிற்கான தீர்ப்பாணை பெற இசுலாம் திருமண இழப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளபடியான அடிப்படைகளைக் குறிப்பிடுக.)

1939-ஆம் ஆண்டின் இசுலாம் திருமண இழப்புச் சட்டத்தின் முக்கியத்துவம்

திருமண முறிவைப் பொறுத்தவரையில், ஆணுக்கு வரம்பற்ற அதிகாரத்தை வழங்கிய இசுலாம் சட்டம், பெண்களுக்கு எந்த அதிகாரத்தையும் கொடுக்கவில்லை. **'மனைவியைக் கனிவுடன் நடத்த முடியாத அளவிற்கு பிணக்கு ஏற்படும் பொழுது அன்போடு அவளைப் பிரித்துவிடு'**, என்று திருக்குர் ஆன் கட்டளையிட்டுள்ளது. எனவே பிணக்கு காரணமாக நீதிமன்றத்திற்குப் பெண்கள் இழுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே, வரம்பற்ற அதிகாரத்தை ஆணிடம் கொடுத்து, பிணக்கை வளர்த்துக் கொள்ளாமல் பிரிந்து செல்லுமாறு, திருக்குர் ஆன் கூறுகிறது. ஆயினும், இசுலாமியர் ஒருவர் தனக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த மறுத்து, பிணக்கின் காரணமாக மனைவியை துன்புறுத்திக் கொண்டிருந்தால் அவளுக்கு எவ்வழியும் இல்லாது போகிறது. ஆகவே, இந்தியாவிலுள்ள இசுலாமியப் பெண்களின் வேண்டுகோளின் பேரில், **"இசுலாம் திருமண இழப்புச் சட்டமானது"**, 1939–ஆம் ஆண்டில் இயற்றப் பட்டது. 1937–ஆம் ஆண்டு இசுலாமிய ஷரியத் சட்டத்திற்கு உட்பட்டுத் திருமணம் நடைபெற்ற பெண்ணுக்குத்தான், இந்தச் சட்டத்தின் 2–வது பிரிவில் கூறப் பட்டுள்ள பின்வரும் காரணங்களைக் காட்டி நீதிமன்றத்தில் திருமண முறிவு கோர உரிமையுண்டு. அதாவது அத்திருமணம் இசுலாம் சட்டப்படி செல்லத் தகுந்ததாக இருக்க வேண்டும்.

1939-ஆம் ஆண்டின் இசுலாம் திருமண இழப்புச் சட்டப்படி, மனைவி திருமண முறிவு கோருவதற்குரிய காரணங்கள் (அல்லது) அடிப்படைகள் (Grounds):

1. கணவனின் போனவிடம் நான்காண்டுகளாக தெரியவில்லை என்றால்:

கணவன் போன இடம் நான்கு ஆண்டுகளாக தெரியவில்லை என்றால், அவனுடைய நெருங்கிய உறவினரிடமும், சொத்துரிமை பெற்றோரிடமும் மனைவி தீர விசாரித்து, பின்னர் நீதிமன்றத்தில் திருமண முறிவுத் தீர்ப்பாணை கோரி வழக்கிடலாம். கணவன் நான்கு ஆண்டுகள் காணாமற் போய்விட்டதாக மெய்ப்பிக்கப்பட்டால், நீதிமன்றம் திருமணமுறிவுக்கு தீர்ப்பாணை பிறப்பிக்கும். இத்தீர்ப்பாணையின் மூலம், திருமண முறிவுக்கு ஆறுமாதம் காலக்கெடு கொடுக்கப்படும். அதற்குள்ளாகக் காணாமற்போன கணவன் திரும்பிவந்து, தான் மனைவியோடு இல்லறம் தொடர விரும்புவதாக அறிவித்தால், முன்பு பிறப்பிக்கப் பட்ட தீர்ப்பாணை இரத்து செய்யப்படும். இல்லையென்றால், அத்தீர்ப்பாணையே நிலைத்துவிடும். **[பிரிவு 2 (i)]**.

2. கணவன் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் மனைவிக்கு பராமரிப்புச்

செலவுத் தொகை கொடுக்கத் தவறினால்:

கணவன் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள், மனைவிக்கு பராமரிப்பு செலவுத் தொகை (Maintenance) கொடுக்கத் தவறினால் அல்லது வேண்டுமென்றே கொடுக்காதிருந்தால், மனைவி அதைக் காரணமாகக் காட்டி திருமண முறிவு கோரலாம். [பிரிவு 2 (ii)].

3. கணவனுக்கு ஏழாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால்:

கணவனுக்கு ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கும் அதிகமாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்து, அந்த தண்டனைத் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாக இருந்தால், அதைக் காரணமாக காண்பித்து இகலாம் மனைவி திருமண முறிவு கோரலாம் [பிரிவு 2 (iii)]. (இம்மாதிரியான சட்டக்கூறு இந்துச் சட்டத்தில் கிடையாது.)

4. கணவன் மூன்றாண்டுகளுக்கு மணவாழ்க்கைக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறினால்:

நியாயமான காரணங்கள் ஏதுமின்றி, திருமணத்தின் வாயிலாக ஏற்பட்ட மணவாழ்க்கைக் கடப்பாடுகளை (marital obligations) ஒரு கணவன் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை மனைவிக்கு செய்யத் தவறும்பொழுது, அம்மனைவி திருமண முறிவு கோரலாம் [பிரிவு 2 (iv)]. 'மணவாழ்க்கைக் கடப்பாடுகள்' என்பன, கணவன் தன் மனைவியை நன்கு கவனித்துக் கொள்ளுதல், மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுதல், குழந்தைகளை பராமரித்தல் போன்றவையாகும். (இம்மாதிரியான சட்டக்கூறு இந்துச் சட்டத்தில் கிடையாது.)

5. கணவன் திருமணத்தின் பொழுதும், அதனைத் தொடர்ந்தும் ஆண்மையற்றவனாக இருந்தால்:

திருமணத்தின் போதும், அதைத் தொடர்ந்தும் கணவன் ஆண்மையற்ற வனாக இருந்தால், அதைக் காரணங்காட்டி மனைவி திருமண முறிவுத் தீர்ப்பாணை கோரலாம். ஆனால் இத்தீர்ப்பாணையைப் பிறப்பிப்பதற்கு முன்னர் கணவன் செய்யும் விண்ணப்பத்தின் பேரில், நீதிமன்றம் அவனுக்கு ஓராண்டு காலத்திற்கு அவகாசம் அளித்து, அதற்குள் அவன், தனது ஆண்மையின்மையை சரிசெய்து கொள்ள வாய்ப்பளித்து உத்தரவிடல் வேண்டும். இந்த ஓராண்டு காலத்திற்குள் அக்கணவன் தனது ஆண்மையின்மையை சரி செய்து கொண்டு விட்டதாக நீதிமன்றம் மனநிறைவு கொள்ளுமளவிற்கு மெய்ப்பித்தால், திருமண முறிவிற்கான தீர்ப்பாணை நீதிமன்றம் பிறப்பித்தால் ஆகாது [பிரிவு 2 (v)].

6. கணவனுக்குள்ள வேறு குறைபாடுகள் :

(அ) கணவனுக்கு புத்தி சுவாதீனமற்று இருந்து, அது தொடர்ச்சியாக

இரண்டாண்டுகள் நீடித்தாலோ அல்லது (ஆ) தொழுநோய் அல்லது கொடிய பால்வினை நோய் (Virulent venereal disease) ஆகியவற்றால் பாதிக்கப் பட்டிருந்தாலோ, மனைவி திருமண முறிவு கோரலாம் [பிரிவு 2 (vi)].

7. பதினைந்து வயது பூர்த்தியடைவற்கு முன் திருமணம்:

பதினைந்து வயது பூர்த்தியடைவதற்கு முன் ஒரு இசுலாம் பெண்ணின் திருமணத்தை, அவளது தந்தை அல்லது காப்பாளர் எவரேனும் நடத்தி வைத்திருந்தால், அவள் பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்யும் முன்னர், அத்திருமணத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அறிவித்து திருமண முறிவு கோரலாம் [பிரிவு 2 (vii)].

8. கணவனின் கொடுமைகள் :

கணவன், மனைவியை கொடுமைப்படுத்தி துன்பத்திற்குட்படுத்தினால், மேற்படி மனைவி அக்கொடுமைகளை காரணமாக காண்பித்து திருமண முறிவு கோரலாம் [பிரிவு 2 (viii)]. பின்வருவன கணவன் செய்யும் கொடுமைகளாகும்.

(a) மனைவியைத் தாக்குதல் அல்லது தனது நடத்தையால் அவளின் வாழ்க்கையை துன்பத்திற்குள்ளாக்குதல்; அல்லது

(b) தீய நெறியில் வாழும் பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு, களங்கமுடைய வாழ்வை நடத்துதல்; அல்லது

(c) ஒழுக்கநெறி தவறிய வாழ்வில் ஈடுபட மனைவியைக் கட்டாயப்படுத்துதல்; அல்லது

(d) மனைவியினுடைய சொத்தை அழித்து விரயம் செய்தல் அல்லது அச்சொத்தின் மீது மனைவி தனது சட்ட உரிமைகளைச் செலுத்துவதை தடுத்தல்; அல்லது

(e) மனைவி தனது மத நம்பிக்கைகளை அல்லது மதப் பழக்கத்தை கடைப்பிடித்தலை தடை செய்தல்; அல்லது

(f) அக்கணவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால், திருக்குர் ஆன் விதிக்கும் கட்டளைக்கிணங்க அவர்கள் அனைவரையும் நடுநிலையுடன் நடத்தாதிருத்தல்.

9. வேறு காரணங்கள் :

இசுலாமியச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட திருமண முறிவிற்கான வேறு காரணங்களைக் காட்டியும் மனைவி திருமண முறிவு கோரலாம் [பிரிவு 2 (ix)]. (உ.ம்.) லியான் (Li'an).

மேற்கூறிய காரணங்களில் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட

வற்றையோ காரணமாக காண்பித்து மனைவி திருமண முறிவு கோரலாம். நீதிமன்றத்தில் அது நிரூபிக்கப்பட்டால், நீதிமன்றம் திருமண முறிவிற்கான தீர்ப்பாணையைப் பிறப்பிக்கும். தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து, இருவரிடையேயும் இருந்த திருமண உறவு முறிவடைகிறது.

மதமாற்றத்தால் ஏற்படும் விளைவு (Effect of conversion to other faith):

மேற்படி சட்டத்தின் 4–வது பிரிவு மதமாற்றத்தால் ஏற்படும் விளைவு குறித்து கூறுகிறது. அதன்படி, திருமணமான ஒரு இசுலாம் பெண் இசுலாம் மதத்தை துறந்துவிடுவது அல்லது வேறு மதத்திற்கு மாறிவிடுவது மட்டுமே, தானாக அவளது திருமணத்தை ஒரு முடிவிற்கு கொண்டு வந்துவிடாது.

இருப்பினும், அத்தகு துறப்பிற்கு, அல்லது மதமாற்றத்திற்குப் பிறகு, அப்பெண் மேற்படி சட்டத்தின் 2–வது பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படைகளின் கீழ் திருமண முறிவுத் தீர்ப்பாணை வேண்டி நீதிமன்றத்தில் வழக்கிட உரிமை படைத்தவள்.

மேலும், இப்பிரிவின் வகைமுறைகள் தனது முந்தய மத நம்பிக்கையை மீண்டும் தழுவியுள்ள, வேறு மத நம்பிக்கையிலிருந்து இசுலாம் மதத்திற்கு மாறிய ஒரு பெண்ணிற்குப் பொருந்தாது.

3. What are the consequences of dissolution of marriage under the Dissolution of Muslim Marriage Act, 1939? (இஸ்லாமிய திருமண முறிவினால் ஏற்படும் சட்ட விளைவுகளை விளக்குக.)

திருமண முறிவினால் ஏற்படும் சட்ட விளைவுகள் வருமாறு:

இசுலாம் சட்டத்தின் **336–வது பிரிவின்படி**, திருமண முறிவினால் பின்வரும் விளைவுகள் ஏற்படுகிறது. அவை,–

1. திருமண முறிவு பெற்ற பின், தரப்பினர்கள் மறுமணம் செய்து கொள்ள உரிமை படைத்தவர்கள் (Right to contract another marriage).

2. திருமண முறிவு ஏற்பட்ட பின்னர், தரப்பினர்கள் இருவரிடையேயும் ஏற்படும் உடலுறவு முறைகேடானதும் சட்டப்புறம்பானதுமாகும் (Cohabitation becomes unlawful).

3. உடலுறவு நிகழ்ந்த பின் திருமண முறிவு ஏற்பட்டிருந்தால், மனைவி திருமணம் முறிந்த நாளிலிருந்து 'இத்தா' இருக்க வேண்டும். உடலுறவு பூர்த்தியாகாமல் இருந்தால் 'இத்தா' இருக்க வேண்டிய அவசியமில்லை.

4. மஹர்க் கடன் உடனடியாக மனைவிக்குத் திருப்பித் தரப்பட வேண்டும்.

(Dower becomes immediately payable). தாம்பத்திய உறவு நிகழ்ந்தபின் திருமண முறிவு ஏற்பட்டிருந்தால், அம்மனைவி தனக்குச் சேரவேண்டிய மஹர்க் கடன் முழுவதையும் உடனே பெற உரிமை பெற்றுள்ளாள். ஆனால் தாம்பத்திய உறவு நிகழாத நிலையில் மணமுறிவு ஏற்பட்டிருந்தால், திருமண ஒப்பந்தத்தில் மஹர் தொகை எவ்வளவு எனக் குறிக்கப்பட்டுள்ளதோ அதில் பாதித் தொகையைப் பெற அவளுக்கு உரிமை உண்டு. தாம்பத்திய வாழ்க்கை நடத்தியபின் ஒரு இசுலாம் பெண் மதம் மாறியிருந்து, அதன் அடிப்படையில் திருமண முறிவு ஏற்பட்டிருந்தால், அந்நிலையிலும் அப்பெண் தனது மஹர் தொகையைப் பெற உரிமை பெற்றுள்ளாள்.

5. திருமண முறிவால் சொத்துரிமை பெறும் தகுதியை கணவன், மனைவி ஆகிய இருவரும் இழந்து விடுகின்றனர் (Mutual rights of inheritance cease). அதாவது அத்திருமண முறிவு திரும்பப் பெற முடியாத அளவு உடனடியாக முற்றுப்பெறும் 'தலாக்காக' (Irrevocable Talak) இருக்க வேண்டும்.

6. திருமண முறிவு, உடனடியாக முற்றுப்பெறாத, திரும்பப் பெறமுடிகின்ற தலாக்கின் (Revocable) வாயிலாக ஏற்பட்டிருந்தால், இத்தா காலத்தில் கணவன், மனைவி இருவரில் ஒருவர் இறந்துவிட்டால், அவ்விதம் இறந்தவரின் சொத்து, உயிரோடு உள்ள மற்றவருக்குப் போய்ச் சேரும்.

7. திருமண முறிவிற்கு பிறகு இத்தா இருக்கும் மனைவிக்கு, கணவன் பராமரிப்பு செலவுத் தொகை கொடுக்க கடமைப்பட்டவன் ஆவான். கணவனது இறப்பால் இத்தா அனுசரிக்கும் மனைவி பராமரிப்பு செலவுத் தொகை பெற முடியாது. ஏனெனில் கணவன் இறந்தபின் அவள் மேற்படி பராமரிப்புத் செலவுத் தொகையை பிறரிடம் கோர முடியாது.

8. திருமண முறிவு ஏற்பட்ட பின்னர் பழைய தம்பதிகள் மறுபடியும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமானால் (Remarriage of divorced couple), பின்வரும் விதிகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். (1) முதலில் மனைவி 'இத்தா' இருக்க வேண்டும். (2) 'இத்தா' இருந்து முடித்த பின்னர், வேறு ஒருவனை அவள் மணந்து கொள்ள வேண்டும். (3) அப்படி மணந்தவனோடு உடலுறவு பூர்த்தியாக வேண்டும். (4) பின்னர், இவன் அவளுக்குத் 'தலாக்' கொடுத்து அவ்விருவரிடையே திருமண முறிவு ஏற்பட வேண்டும். அல்லது இவன் மாண்டு, அவள் கைம்பெண்ணாக வேண்டும். (5) திரும்பவும் அவள் இத்தா இருக்க வேண்டும். மேற்கண்ட அய்ந்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்னரே, பழைய தம்பதிகளிடையே செல்லத்தக்க மறுமணம் நடைபெற முடியும். இந்த நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று பூர்த்தி செய்யப்படவில்லையானாலும், அஃது ஒழுங்கற்ற திருமணமாகும்.

-o0o-

5 பெற்றோராதல் [Acknowledgment of Paternity]

1. Explain the establishment of parentage under Islamic Law (பெற்றோராதல் பற்றி இஸ்லாமிய சட்டத்தில் கூறப்பட்டுள்ளவைகளை விளக்குக.)

பெற்றோராதல் எவ்வாறு நிலைநிறுத்தப்படுகிறது? (Parentage how established): – குழந்தையின் பெற்றோர் யார் என்று நிருணயிப்பதற்கு இசுலாமியச் சட்டம் சில நெறிமுறைகளை வகுத்துள்ளது. தாய், தந்தையர் சட்டமுறைப்படி திருமணம் செய்து கொண்டு, இல்லறம் நடத்தி, அதன் மூலம் பெற்றெடுக்கும் குழந்தைகள் **'முறைமணப் பிறப்புக் குழந்தைகள்' (legitimate children)** எனக் கருதப்படுகின்றனர். அதாவது குழந்தைகளை முறைப்படி பெற்றெடுத்தவர்களே, அதன் பெற்றோர்களாகின்றனர்.

குழந்தை பிறந்ததும் அதற்கு 'தாய்' எவள் என்ற கேள்வி எழாது. ஏனென்றால் ஈன்றெடுத்தவள் 'தாய்' என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அத்தாய் ஈன்ற, அக்குழந்தைக்கு தந்தை எவர், என்ற வினா எழும். இவ்வினாவிற்கு விடை தெரியாவிடில், அக்குழந்தை **'முறையிலா மணப்பிறப்புக் குழந்தை' (illegitimate child)** எனக் கருதப்படுகிறது.

சுருங்கக் கூறின், இஸ்லாமிய சட்ட முறைப்படி மணம் புரிந்து கொண்டு, மனைவியோடு வாழ்க்கை நடத்தி குழந்தையை பெற்றெடுக்கக் காரணமாயிருக்கும் கணவன், அக்குழந்தையின் தந்தை என்றும், அப்படிப் பெற்றெடுக்கப்பட்ட குழந்தைகள் 'முறை மணப் பிறப்புக் குழந்தைகள்' (legitimate children) என்றும் சட்டம் வரையறுத்துள்ளது. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட முறைப்படி திருமணம் நடக்காமல், ஆண்–பெண் இருவரிடையே உடலுறவு மட்டும் ஏற்பட்டு, அதனால் குழந்தைகள் பிறந்தால், அவர்கள் 'முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகள்' (Illegitimate children) என்று சட்டம் கூறுகிறது.

எனவே, குழந்தையின் பிறப்பு முறைமணப் பிறப்பா, இல்லையா என்பதைக் கண்டு கொள்ளத் தந்தையின் தொடர்பு அத்தாயுடன் எப்படி ஏற்பட்டது என்று அறிதல் அவசியம். அஃது அங்கீகரிக்கப்பட்ட திருமணம் மூலம் ஏற்பட்ட பட்ட தொடர்பாகயிருந்தால், அங்கு பிறந்த குழந்தை, முறைமணப் பிறப்புக் குழந்தை என்றும், அதன் பெற்றோர்கள் கணவன், மனைவியராக வாழ்க்கை நடத்திய தாயும், தந்தையும் ஆவர் என்றும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

இசுலாமியச் சட்டத்தின்படி, திருமணம் செய்து கொள்வதன் நோக்கம், **'தந்தையின் வழிமுறையை நிலைநிறுத்துவதற்கே'** ஆகும். எனவே, இசுலாமியச்

சட்டம், குழந்தையின் பிறப்பை நிருணயிக்க, தாய்–தந்தை உறவு சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட திருமணம் மூலம் ஏற்பட்ட கணவன், மனைவி உறவாய் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

தாய்வழிமுறை (Maternity): குழந்தையின் பிறப்பு, முறைமணப் பிறப்பாயினும், அல்லது அவ்வாறு இல்லாவிட்டாலும், ஈன்றெடுத்தவளே 'தாய்' என்றும், குழந்தை முறையிலா மணப்பிறப்பினதாக இருந்தாலும் தாய் – சேய் இடையே சொத்துரிமை ஏற்பட எவ்வித தடையுமில்லையென்றும் 'சுன்னி' சட்டம் கூறுகிறது. ஆனால் 'ஷியாச் சட்டம்' முறைமணப் பிறப்புக் குழந்தைக்கு மட்டுமே சொத்துரிமை உண்டு என்று கூறுகின்றது.

தந்தைவழிமுறை (Paternity): அங்கீகரிக்கப்பட்ட திருமணத்தின் மூலம் கணவன், மனைவி உடலுறவு கொண்டு, அதன்மூலம் அம்மனைவி குழந்தையைப் பெற்றெடுத்தால், 'தந்தை வழிமுறை' அக்கணவனுக்குச் சேருகிறது.

குழந்தையின் பிறப்பு முறைமணப் பிறப்பா, இல்லையா என்று நிருணயிக்க திருமணமான நாள், திருமணம் முறிக்கப்பட்டிருந்தால் அது முறிக்கப்பட்ட நாள், அல்லது கணவன் இறந்து போயிருந்தால் அவன் இறந்த நாள், குழந்தை தாய் வயிற்றில் வளர்ந்த நாள்கள் இவற்றை அடிப்படை ஆதாரங்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர், குழந்தை முறைமணப் பிறப்புடையதாய் இருந்தால், தந்தை முறையை நிலைநாட்ட வேண்டும். இது குறித்து பின்வரும் அட்டவணை தெளிவாக விளக்குகிறது.

எண்.	பிறக்கும் குழந்தை	எத்தகைய பிறப்பு?
1.	திருமணமாகி 6 மாதத்திற்குள் பிறக்கும் குழந்தை.	முறையிலா மணப்பிறப்பு
2.	திருமணமாகி 6 மாதத்திற்குப் பிறகு பிறக்கும் குழந்தை	முறைமணப் பிறப்பு
3.	திருமணம் முறிந்து 280 நாள்களுக்கு உள்ளாகப் பிறக்கும் குழந்தை.	முறைமணப் பிறப்பு
4.	திருமணம் முறிந்து 280 நாட்களுக்குப் பின்னர், ஆனால் 2 ஆண்டுகளுக்கு உள்ளாகப் பிறக்கும் குழந்தை. (ஹனபி பிரிவின்படி)	முறைமணப் பிறப்பு

2. What is meant by acknowledgement of paternity under the Islamic law ? What are the conditions to be fulfiled to render the acknowledgement valid ? (இஸ்லாமிய சட்டத்தின் கீழ் தந்தைமை ஒப்புதல் என்றால் என்ன ? இவ்வொப்புதலை செல்லத்தக்கதாக செய்வதற்கு நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் யாவை?)

(அல்லது)

Acknowledgement of paternity - Write short notes. (தந்தையாக ஒப்புக் கொளல் – சிறு குறிப்பு எழுதுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

தந்தை நிலை ஒப்புதல் - விளக்கம்
ஒப்புதல் முறையானதாவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகள்
Muhammad Allahabad v. Muhammad Ismail
தந்தை நிலை ஒப்புதலின் முக்கியத்துவம்
தந்தை நிலை ஒப்புதலால் ஏற்படும் விளைவுகள்
முடிவுரை

தந்தை நிலை ஒப்புதல் - விளக்கம் :

இசுலாமியத் திருமணம் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாதலால், அது சம்பிரதாயச் சடங்குகள் ஏதுமின்றியே கூட நடைபெறலாம். எனவே சில சமயங்களில் தாய்–தந்தையர் செல்லத்தக்க திருமணம் செய்து கொண்டவர்கள்தானா, என்ற வினா எழுகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், நேரடிச் சாட்சியங்கள் இருந்தால், அவர்களால் தங்களது திருமணத்தை மெய்ப்பிக்க முடியும். அப்படி நேரடிச் சாட்சியங்கள் இல்லாமல் போனால், மறைமுகச் சாட்சியங்கள் மூலம் இருவரிடையேயும் திருமணம் நடைபெற்றதாக **துணிபு** (Presumption) கொள்ளலாம்.

இங்குதான் 'தந்தை நிலை ஒப்புதலின்' முக்கியத்துவம் வெளிப்படுகிறது. அதாவது, **'இது என்னுடைய குழந்தை'** என்று ஒரு தந்தை, குழந்தையொன்றை தன்னுடையதாக ஏற்றுக் கொள்வதன் மூலம், அவருக்கும் அக்குழந்தையின் தாய்க்கும் செல்லத்தக்க திருமணம் நடைபெற்றுள்ளதாக ஊகித்து உணர முடிகிறது. இப்படி ஏற்றுக் கொள்வதன் மூலம், குழந்தையின் பிறப்பு 'முறை மணப் பிறப்பாக' துணிபு கொள்ள முடிகிறது. மேலும் இங்ஙனம் அக்குழந்தையை தனதென ஏற்றுக் கொண்டவர், அக்குழந்தைக்கு சட்டப்படியான தந்தையாகவும்,

குழந்தையின் தாய்க்குக் கணவனாகவும் ஆகிவிடுகிறார். எனவே அத்தாய் தந்தையரிடையே செல்லத்தக்க திருமணம் நடைபெற்றதாக ஊகிக்க முடிகிறது. ஆனால் தந்தையின் ஒப்புதல் முறையான ஒன்றாவதற்கு பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஒப்புதல் முறையானதாவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் :

(1) தந்தை நிலை ஒப்புதலின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும் குழந்தைக்கு, தந்தை என்று மற்றொருவர் யாரும் இருக்கக் கூடாது. அதாவது அக்குழந்தைக்கு, அறியப்படாத தந்தையின் உறவு இருத்தல் கூடாது. இதற்கு உதாரணமாக பின்வரும் வழக்கொன்றை காண்போம்.

Muhammad Allahabad v. Muhammad Ismail[1] – இவ்வழக்கில் 'அ' என்பவன் 'ஆ' என்பவளை மணந்து கொள்கிறான். ஆனால் இவர்களுக்கு திருமணம் நடக்குமுன்பே 'இ' என்ற ஒரு குழந்தை பிறந்துவிட்டது. அக்குழந்தை தனக்குத் தகப்பன் 'அ' தான் என்கிறான். 'அ' என்பவனும், 'இ' என்ற குழந்தை, தனக்கும் 'ஆ' என்பவளுக்கும் பிறந்த குழந்தைதான் என்று கூறிவிடுகிறான். இங்கு 'இ' என்ற அக்குழந்தைக்கு தந்தை என்று மற்றொரு நபர் யாரும் இல்லாததாலும், மேலும் 'இ' தனக்கு பிறந்த குழந்தைதான் என்று 'அ' ஒப்புக்கொண்டு, அதனை ஏற்றுக் கொள்வதாலும், 'இ' க்கு 'அ' என்பவனே சட்டப்படியான தந்தையாகிறான்.

(2) குழந்தையை ஏற்றுக்கொண்ட தந்தையும், அதனை ஈன்றெடுத்த தாயும் இசுலாமியச் சட்ட முறைப்படி திருமண உறவுக்குத் தடை விதிக்கப்பட்டவர்களாக இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட உறவில் பிறக்கும் குழந்தைகள் 'முறையிலா மணப் பிறப்புக் குழந்தைகள்' ஆகும். இக்குழந்தைகளை சட்டம் அங்கீகரிப்பதில்லை.

(3) குழந்தையின் பிறப்பு, முறையிலா மணப்பிறப்பாக இருக்கக் கூடாது.

(4) அது மற்றொரு நபரின் குழந்தையாக இருத்தல் கூடாது.

(5) அக்குழந்தையின் தாய் வேறு ஒருவரோடு திருமணம் செய்து கொண்டிருந்து, சட்டப்படி திருமண முறிவு பெறாமல் இருக்கக் கூடாது.

(6) அக்குழந்தையின் தாய் விபச்சாரியாக இருக்கக்கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு முரணாக யாரேனும் ஒரு குழந்தையை தன் குழந்தையாக ஏற்றுக் கொண்டால், அக் குழந்தை முறைமணப் பிறப்புக் குழந்தையாகவோ அல்லது அதனை ஏற்றுக் கொண்ட நபரை சட்டப்படி அங்கீகாரம் பெற்ற தந்தையாகவோ, இசுலாம் சட்டம் அனுமதிப்பதில்லை.

1. (1880) 10 All. 289, 339

தந்தைநிலை ஒப்புதலின் முக்கியத்துவம் :

மேற்படி கூற்றுகளைக் காணும் பொழுது, முறைமிலா மணப்பிறப்பு குழந்தையை முறைமணப் பிறப்பாக்க முடியாதெனினும், மதில் மேல் பூனையாக, இலைமறை காயாக இருக்கும் முறைமணப் பிறப்புக் குழந்தையை முறைமிலா மணப் பிறப்பாவதினின்றும் தடுக்கக் கூடிய அளவிற்கு, தந்தை நிலை ஒப்புதல் முக்கியத் துவம் பெற்றுள்ளது. இதன் மூலம் மேற்படி குழந்தை, சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தைப் பெறுகிறது. அத்துடன், தாய் தந்தையர் இடையேயும், தனக்காகவும் சிற்சில உரிமைகளைப் பெற அக்குழந்தையால் முடிகிறது.

தந்தை நிலை ஒப்புதலால் ஏற்படும் விளைவுகள் :

1. குழந்தை தன்னுடையது என்று ஏற்றுக் கொள்ளப்படுவதன் மூலம், ஏற்றுக் கொண்டவனுக்கிடையேயும், ஏற்றுக் கொள்ளப்பட்ட குழந்தையின் தாய்க்கிடையேயும் சட்டப்படி செல்லத்தக்க திருமணம் நடைபெற்றதாகத் துணிபு கொள்ளப்படுகிறது.

2. ஏற்றுக் கொள்ளப்பட்ட குழந்தை, பெற்றோரின் சொத்துரிமையைப் பெறவும், அவனுடைய தாய், ஏற்றுக் கொண்டோரின் சொத்துரிமையைப் பெறவும் உரிமை கிடைக்கிறது.

3. ஒரு முறை ஒருவன் ஏற்றுக்கொண்டால், அவன் அதைப் பின்வலித்துக் கொள்ள முடியாது.

4. ஏற்றுக் கொள்ளுதல் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ இருக்கலாம்.

5. ஏற்றுக் கொள்ளப்பட்ட குழந்தையை, தந்தை நிலை ஒப்புதலின் மூலம், முறைமணப் பிறப்புக் குழந்தையென்று தந்தை மட்டுமல்லாது, உலகமே ஏற்றுக் கொள்கிறது.

முடிவுரை :

இந்துமதச் சட்டத்திலும், உரோம் நாட்டுச் சட்டத்திலும் அங்கீகாரம் பெற்றுள்ள 'தத்தெடுப்பு' (Adoption) இசுலாமியச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட வில்லை. ஆனால் தந்தைநிலை ஒப்புதல், 'தத்தெடுப்பை' போன்று இருந்தாலும், இது 'தத்தெடுப்பு' அல்ல. காரணம், ஒருவரின் முறைமணப் பிறப்புக் குழந்தையாக இருந்தாலும், வேறு ஒருவரால் அக்குழந்தையை தத்தெடுத்து வளர்க்க முடியும். இசுலாமிய 'தந்தை நிலை ஒப்புதல்' கோட்பாடு இதற்கு அனுமதி அளிக்கவில்லை.

-oOo-

6 காப்பாளர் நிலை [Guardianship]

Explain the kinds of guardianship and the powers of guardian under Mohammadan Law. (முகம்மதிய சட்டத்தின் கீழ் காப்பாளர் நிலையின் வகைகளையும், காப்பாளர்களின் அதிகாரங்களையும் விளக்குக.)

(அல்லது)

What are the powers of a de facto guardian of a muslim minor over the movable and immovable property ? (ஒரு நிகழ்வு நிலைக் காப்பாளருக்கு, ஒரு முசுலிம் இளவரின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் மீதுள்ள அதிகாரங்கள் யாவை ?)

(அல்லது)

State the provisions of Mohammadan law relating to guardianship in marriage. (திருமணக் காப்பாளர் நிலை சம்பந்தமாக முசுலிம் சட்டத்தின் வகைமுறைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Discuss who are entitled to the custody and guardianship of the person of a minor under Mohammedan law. (முகம்மதிய சட்டத்தின்படி வயதுரிமை அமையாத நபரை தன்னுடைய பொறுப்பில் வைத்திருப்பதற்கு யாருக்கு உரிமை இருக்கிறது என்பதை விவாதி.)

(அல்லது)

Compare the powers of a dejure guardian with those of a de facto guardian in regard to the management of the property of a muslim minor. (உரிமை வயது நிரம்பாத முகமதியர் ஒருவருடைய சொத்துக்களை, சட்ட நிலைக்காப்பாளர் ஒருவர் நிருவாகம் செய்யும் அதிகாரங்களை நிகழ்வு நிலை காப்பாளர் ஒருவரின் அத்தகைய அதிகாரங்களோடு ஒப்பிடுக.)

(அல்லது)

De facto guardian under Islamic law - Write short notes. (இஸ்லாமிய சட்டத்தில் நிகழ்வு நிலை காப்பாளர் – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை :

பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்யாத ஒருவர் 'உரிமை வயதடையாதவர்' (இளவர்– Minor) எனப்படுகிறார் என்று, இசுலாம் சட்டத்தின் 348–வது பிரிவு கூறுகிறது. இசுலாம் சட்டப்படி இவர்களுக்கு காப்பாளர்களாக செயல்பட வேண்டியவர்களை, பின்வரும் மூன்று வகையினராகப் பிரிக்கலாம். அவர்கள்,–

(அ) திருமணக் காப்பாளர்கள் (ஜபர்) (ஆ) உரிமை வயதடையா தோர்களின் காப்பாளர்கள் (ஹிஸானத்) (இ) உரிமை வயதடையாதோரின் சொத்துக் காப்பாளர்கள்.

மேற்கண்ட காப்பாளர்களில், திருமணக் காப்பாளர்களைப் பொறுத்த பிரச்சனைகளுக்கு, இசுலாமியச் சட்ட அடிப்படையிலேயே நீதி வழங்கப்பட வேண்டும். உரிமை வயது அடையப் பெறாதோர்க்கான காப்பாளர்களையும், அவர்களின் சொத்துக் காப்பாளர்களையும் பற்றி எழும் பிரச்சனைகளுக்கு, இசுலாமியச் சட்டத்தோடு, உரிமை வயது எய்தப் பெறாதோர் நலன் பேண 1890 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டமும் (Guardians and Wards Act, 1980) பயன்படுத்தப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும். இவ்விரண்டையும் பொறுத்தமட்டில், மேற்கூறிய இரண்டு சட்டங்களின் அடிப்படையிலும் காப்பாளர் நியமனம், அவரது உரிமை, கடமை, அதிகாரம் முதலியன தீர்மானிக்கப்படும்.

காப்பாளர்களுக்குண்டான தகுதிகள் (Fit persons for Guardianship) :

(1) உரிமை வயது எய்தப் பெற்றவராக இருக்க வேண்டும்.

(2) சித்தம் தெளிந்தவராக இருக்க வேண்டும்.

(3) காப்பாளர் ஒரு இசுலாமியராக இருக்க வேண்டும்.

இவற்றில் மூன்றாவது தகுதி மட்டும் சாதித் தகவின்மை ஒழிப்புச் சட்டம் (Caste Disabilities Removal Act, 1850) இயற்றப்பட்ட பின் அவசியமற்ற தாக கருதப்படுகிறது. ஆனால் இதில் மாறுபட்ட கருத்தும் நிலவுகிறது. இனி மேற்கண்ட காப்பாளர்களை ஒன்றன் பின் ஒன்றாக பின்வருமாறு காண்போமா?

(அ) திருமணக் காப்பாளர்கள் (ஜபர்) :

இசுலாமியச் சட்டப்படி, பின்வருபவர்கள் வரிசைக் கிரமமாக, உரிமை வயது எய்தப் பெறாதவர்களுக்கும், சித்தம் கலங்கியவர்களுக்கும் திருமணக் காப்பாளராகச் செயல்படத் தகுதி படைத்தவர்கள் ஆவர். இவர்கள் **'ஜபர்' (Jabar)** என்று அழைக்கப்படுகின்றனர்.

(1) தந்தை (Father)

(2) தந்தையின் தந்தை (எத்தனை தலைமுறை முன் சென்றாலும்) (Father's Father) (how high soever)

(3) சகோதரனும், தந்தையின் உறவினரான எச்சதாரர்களும் ஒருவர் பின் ஒருவராக (Brother and other paternal relations in the order in which they come in as residuary heirs)

(4) தாய் (Mother)

(5) தாயின் உடன் பிறந்தவர்கள் (Maternal uncle or aunt)

(6) அரசாங்கம் (Government)

மேற்குறிப்பிட்ட பட்டியலில், தந்தைக்கும் தந்தைவழித் தொடர்புடையோருக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. காரணம் இசுலாமியரின் கொள்கைப்படி, திருமணம் தந்தைவழியை நிலை நிறுத்துவதாகும். பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்கள் ஒருவர்பின் ஒருவராய், காப்பாளர் பொறுப்பை ஏற்க உரிமை பெற்றவராவர். முதல் இடம் தந்தைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் இல்லாவிட்டால் தந்தையின் மூதாதையர்களுக்கும், அவர்களும் இல்லாவிட்டால் கிளைவழித் தோன்றல்களும் காப்பாளராய்ச் செயல்பட உரிமை வழங்கப் பட்டிருக்கிறது. தந்தை வழியினர் இல்லாத நிலையில் தாய்க்கும், தாய் வழியினருக்கும் காப்பாளராய் இயங்குகின்ற உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட பட்டியலில் உள்ளவர்கள், வரிசைக் கிரமமாக இயங்கவே உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தந்தை உயிருடன் இருந்தால், தந்தையே முன்னின்று இளவரின் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும். தந்தை இருக்கும்பொழுது அவரது இசைவுபெறாது, தந்தையின் தந்தையோ, பட்டியலில் கூறப்பட்ட மற்ற அடுத்தவர்களோ காப்பாளராக இயங்க உரிமை அற்றவராவார். தந்தையின் இசைவு பெற்று வேறொருவர் காப்பாளராகச் செயல்படலாம். அதைத் தந்தை அங்கீகரிக்க வேண்டும். தந்தை தொடர்பு கொள்ள முடியாத அளவு தூர தேசங்களில் வாழ்ந்து வந்தால், பட்டியலில் உள்ள அடுத்தவர் காப்பளராய்ச் செயல்பட உரிமை பெறுகிறார். பட்டியலில் கூறப்பட்டவர்களில், முன்னவர் இருக்கப் பின்னவர் காப்பாளராகச் செயல்பட்டால், அதற்கு முன்னவரின் அங்கீகாரம் இருந்தாலன்றி அது செல்லாது. பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் இருக்க, இல்லாதவர் காப்பாளராய் நின்று திருமணம் நடத்தி வைத்தால், அது இல்லாநிலைத் (Void) திருமணமாகக் கருதப்படும். அதுபோல், பட்டியலில் கூறப் பட்டவரில், முன்னவரின் அங்கீகாரமும் இசைவும் பெறாமல், பின்னவர் நடத்தி வைக்கும் திருமணங்களும் இல்லாத் திருமணங்களாகக் கருதப்படும்.

Abdul Kasem v. Jamila Khatun Bibi[1] – இவ்வழக்கில் உரிமை வயது எய்தப் பெறாத சிறுமியின் தாய்மாமன், அவளுக்குத் திருமணம் முடித்து

1. (1940) Cal. 401.

வைத்தார். அவளுடைய தந்தையின் சகோதரனும், அவளுடைய தாயும் இதற்கு இசைவு தெரிவிக்கவில்லை. இதில் முறைப்படி காப்பாளராய் இருக்க வேண்டியவர்களில் முதலில் தந்தையின் சகோதரனும் (சிற்றப்பாவும்) இரண்டாவது தாயும். மூன்றாவதாகத்தான் தாய்மாமனும் செயல்பட முடியும். முன்னிருவரும் இசையும் அங்கீகாரமும் அளிக்காததால், தாய்மாமன் காப்பாளராய் இருந்து நடத்தி வைத்த திருமணம் செல்லாத் திருமணமோ (invalid marriage) தவிர்தகு திருமணமோ (voidable Marriage) ஆகாது. அஃது இல்லாநிலைத் திருமணம் (void Marriage) ஆகிவிடுகிறது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

(ஆ) உரிமை வயதடையாதோர்க்கான காப்பாளர்கள் (ஹிஸானத்):

இளவர் ஒருவர் உரிமை வயதை அடையும் வரை அவருக்கு, காப்பாளர் தேவைப்படுகிறார். இசுலாமியச் சட்டத்தில் ஒருவன் அல்லது ஒருத்தி பருவம் அடையும் வரை, அவன் அல்லது அவள் 'உரிமை வயதடையாதவர்' (இளவர்) எனப்படுகிறார். இங்கு ஒருவன் அல்லது ஒருத்தி தனது 15 வயதைப் பூர்த்தி செய்யும் பொழுது, பருவம் அடைவதாக இசுலாம் சட்டம் அனுமானிக்கிறது. ஆனால் திருமணம், திருமண முறிவு, மஹர் இம்மூன்று விஷயங்களைத் தவிர, மற்ற அனைத்து விஷயங்களிலும் இந்திய உரிமை வயதடைதல் சட்டம் (Indian Majority Act), உரிமை வயதை 18 எனக் கூறுகிறது. அதுபோல் இசுலாம் சட்டத்தின் 348-வது பிரிவானது உரிமை வயதை 18 எனக் குறிப்பிடுகிறது. எனினும் உரிமை வயதடையாதவர், நீதிமன்றக் காப்பில் இருந்தால், அவருக்கு உரிமை வயது 21 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திருமணம், மணமுறிவு, மஹர் ஆகிய மூன்று விஷயங்களைத் தவிர மற்ற அனைத்து விஷயங்களிலும், இசுலாம் சட்டத்தின் 350, 351 ஆகிய பிரிவுகளின்படி, இளவரின் நலனையும், அவரது சொத்தை நன்முறையில் பேணுபவராகவும் உள்ள தகுதி வாய்ந்த நபர் ஒருவரையே, அவருக்கு காப்பாளராக நீதிமன்றம் நியமித்தல் வேண்டும். பிரிவு 352-ஆனது ஆண் பிள்ளையாக இருந்தால் 7 வயது வரை தாயின் பராமரிப்பிலும், பெண்ணாக இருந்தால் அவள் பருவம் அடையும் வரையிலும் (15 வயது வரை) தாயின் பராமரிப்பிலும்தான் இருக்க வேண்டும் எனக் கூறுகிறது. ஏழு வயதைப் பூர்த்தி செய்த ஆணுக்கும், பருவம் எய்தப் பெற்ற பெண்ணுக்கும் தந்தை காப்பாளராக செயல்பட வேண்டும்.

குழந்தையை பாதுகாத்து வளர்ப்பதில், முதன்மையான பொறுப்பு, அக்குழந்தையை ஈன்றெடுத்த தாயையே சாரும். இந்த அடிப்படையில், குழந்தையை பாதுகாத்து வளர்க்கும் தாயின் பொறுப்பு, தந்தைக்குள்ளதிலும் முந்தியதாகக் கருதப்படுகிறது. தாய்-தந்தையரிடையே திருமண முறிவு ஏற்பட்டாலும்கூட, குழந்தையிருப்பின், அதைப் பாதுகாத்து வளர்க்கும் பொறுப்பு என்ற தாய்க்கே தரப்படும். ஒரு இசுலாம் தந்தைக்கும், இசுலாம் அல்லாத தாய்க்கும்

பிறந்த குழந்தையை வளர்க்கும் பொறுப்புங்கூட தாய்க்கே தரப்பட வேண்டும். தாய் மறுமணம் செய்து கொண்டாலும், குழந்தையை வளர்க்கும் பொறுப்பு அவளுக்கே தரப்பட வேண்டும். குழந்தைக்கு தாய் இல்லாதிருந்தால், தாய்வழிச் சார்ந்த உறவினர்களில் யாருக்காவது (பெண் உறவினர்கள் மட்டுமே) காப்பாளர் பொறுப்பு அளிக்கப்படும். இப்படிப்பட்ட பெண் உறவினர்கள் யாருமே இல்லாதிருப்பின், தந்தைத் தும் அவரை அடுத்து, தந்தையின் தந்தைக்கும், அவரை அடுத்து, தந்தையின் உறவினருக்கும் காப்பாளர்ப் பொறுப்பு தரப்பட வேண்டும்.

Nur Kadir v. Zuleikha Bibi[1] - பருவமடையாத பெண் ஒருத்திக்குத் திருமணம் முடிந்துவிட்டாலும், அவள் பருவம் அடையும் வரை அவளது காப்பாளராக செயல்படும் உரிமை பெற்றவர், அவளது தாயே தவிர, அவளது கணவனல்ல என்று இசுலாம் சட்டத்தின் 356-வது பிரிவு கூறுகிறது. இதையொட்டி எழுந்த மேற்படி வழக்கில், தம்பதிகளில், மனைவி பருவம் எய்தப் பெறாதவளாகயிருப்பின், காப்பாளராகச் செயல்பட வேண்டிய பொறுப்பு மனைவியின் தாயைச் சாருமே தவிர, திருமணம் முடிந்து விட்டதால், கணவனைச் சேராது என்று மேற்படி பிரிவின்படி தீர்ப்பு கூறப்பட்டது.

மேற்படி வழக்கின் பொருண்மைகள்: இதில், உரிமை வயது வராத (பருவமடையாத) பெண்ணொருத்திக்குத் திருமணம் முடித்து வைத்தனர். கணவன் வெளிநாடு சென்றதால், தன்னுடைய தாயின் (மாமியார்) பொறுப்பில், மனைவியை விட்டுச் சென்றான். மாமியார்-மருமகள் உறவு சரியில்லாததால், மனைவியின் தாய் அவளைத் தன்னுடைய வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டாள். மாமியாரின் பராமரிப்பில் இருந்து வந்த மருமகளை, அவளுடைய தாய் கடத்திச் சென்று விட்டாள் எனமாமியார் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 363-ன் கீழ், மனைவியின் தாய்மீது குற்ற வழக்குத் தொடர்ந்தாள். மனைவி, பருவம் எய்தப் பெறாதவள். ஆதலால், காப்பாளராய்ச் செயல்படும் பொறுப்பு, அவளுடைய தாய்க்கே சேரும் என்று கூறி வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

(இ) உரிமை வயதடையாதோரின் சொத்துக் காப்பாளர்கள் (Guardianship of Property):

உரிமை வயதடையாதோரின் சொத்துக்குக் காப்பாளராயிருந்து, அதைக் கண்காணித்துப் பராமரித்து வருவோரை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

(1) சட்டநிலைக் காப்பாளர் (De jure Guardian)

(2) நிகழ்வுநிலைக் காப்பாளர் (De facto Guardian)

(3) நீதிமன்றத்தால் நியமனம் பெற்ற காப்பாளர்கள் (Guardian appointed by the Court). இவர்களைப் பின்வருமாறு காண்போம்:

1. (1885) 11 Cal 649.

1. சட்டநிலைக் காப்பாளர் (Dejure Guardian):

(1) தந்தை (2) தந்தையால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளர் (3) தந்தையின் தந்தை (4) தந்தையின் தந்தையால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளர் ஆகிய நால்வரும் முறையே உரிமை வயது அடையாதவரின் சொத்துக்குச் சட்ட நிலைக் காப்பாளராய்ச் செயலாற்ற உரிமை பெற்றவர்கள் என்று இசுலாம் சட்டத்தின் **359–வது பிரிவு** கூறுகிறது. மேற்கண்ட நான்கு நபர்களைத் தவிர, வேறு உறவினர் எவரும் சட்டநிலைக் காப்பாளராகச் செயலாற்ற தகுதியோ, உரிமையோ பெற்றவரல்லர். ஏனெனில் தந்தையும், தந்தையின் தந்தையும் **இயற்கை நிலைக் காப்பாளர்கள் (Natural Guardians).** ஆனால் தந்தையோ அல்லது தந்தையின் தந்தையோ வேறு உறவினர் யாரையாவது காப்பாளராக நியமித்தால் அவர்கள் சட்டநிலைக் காப்பாளராகச் செயல்பட முடியும். உதாரணமாக, உரிமை வயது அடையாத சிறுவனின் தாயோ, சகோதரரோ, சித்தப்பாவோ அல்லது இதர நெருங்கிய உறவினரோ, மேற்படி சிறுவனின் தந்தையால் அல்லது அத்தந்தையின் தந்தையால் காப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தால், அவர் உரிமை வயதடையாத அச்சிறுவனின் சட்டநிலைக் காப்பாளராக, அவனது சொத்துக்களை கண்காணித்து பராமரித்து வர உரிமை பெற்றவர் ஆவார்.

சட்டநிலைக் காப்பாளர்களின் அதிகாரங்கள் (Powers):

(i) உரிமை வயதடையாதவரின் அசையும் சொத்துக்களைப் (Movable Properties) பொறுத்தவரை : சட்டநிலைக் காப்பாளர்கள் உரிமை வயது எய்தப் பெறாதவரின் அசையும் சொத்துக்களை விற்கவோ, அடகு வைக்கவோ, பராதீனம் செய்யவோ உரிமை பெற்றவர்களாவர். இவ்வாறு உரிமை பெற்றிருந்தாலும், உரிமை வயதடையாதவரின் உணவு, உடை, வளர்ப்புப் போன்ற இன்றியமையாத் தேவைகளுக்காகப் அப்பராதீனம் செய்திருக்க வேண்டும். குறித்த சமயத்தில் பராதீனம் செய்யாவிடில், உரிமை வயதடையாதவரின் வாழ்க்கை சீர்கெடும் என்ற நிலையில் அல்லது அசையும் பொருள்கள் அழிந்து நஷ்டம் ஏற்படும் என்ற நிலையில்தாம், சட்ட நிலைக் காப்பாளர்கள் அவற்றை பராதீனம் செய்ய உரிமை பெற்றவராவர்.

(ii) உரிமை வயதடையாதோரின் அசையாச் சொத்துக்களைப் (Immovable Properties) பொறுத்தவரை : உரிமை வயதடையாதவர்களின் அசையா சொத்தைப் பொறுத்தவரை, சட்டநிலைக் காப்பாளர்கள் கீழ்க் குறிப்பிட்ட காரியங்களுக்காக மட்டுமே, அவற்றை பராதீனம் செய்ய உரிமை பெற்றவராவர்.

1. உரிமை வயதடையாதவர்களுக்குச் சொத்தைவிட்டுச் சென்றவர் பட்ட கடனை அடைப்பதற்கோ, அவரால் உயில் வழியில் கட்டளையிடப்பட்ட காரியங்களை நிறைவேற்றற் பொருட்டோ சட்டநிலைக் காப்பாளர் பராதீனம் செய்யலாம்.

2. உரிமை வயதடையாதவரின் பராமரிப்பு மற்றும் இன்றியமையாத தேவைகளுக்கு அவசியமாக உள்ள பொழுது, சட்டநிலைக் காப்பாளர் பராதீனம் செய்யலாம்.

3. பராதீனம் செய்யவில்லையானால், சொத்து அழிந்துவிடும் என்ற நிலையில் அல்லது சொத்துக்குச் சேதம் ஏற்பட்டுப் பெருத்த நஷ்டம் ஏற்படும் என்ற நிலையில் சட்டநிலைக் காப்பாளர் பராதீனம் செய்யலாம்.

4. அசையாச் சொத்துப் பிறர் கைக்குப் பறி போகுந்தறுவாயில், அதை மீட்பிக்கும் பொருட்டு, சட்ட நிலைக் காப்பாளர் பராதீனம் செய்யலாம்.

5. உரிமை வயதடையாதவரின் சொத்துக்கு இரட்டிப்பு விலைக் கிடைக்கும் பொழுது, சட்டநிலைக் காப்பாளர் பராதீனம் செய்யலாம்.

இவ்வனைத்து காரணங்களின் பொருட்டும், சட்டநிலைப் பொறுப்பாளர்கள் காப்பிலுள்ளவர்களின் அசையா சொத்தைப் பராதீனம் செய்ய உரிமை பெற்றவராவர். இவை தவிர, வேறு காரணங்களின் பொருட்டு, சட்டநிலைக் காப்பாளரே பராதீனம் செய்தாலும், அப்பராதீனம் செல்லத்தகாததோடு மட்டுமல்லாமல் இல்லாத நிலையைப் பெற்றதாகவும் ஆகிவிடும்.

2. நிகழ்வு நிலைக் காப்பாளர் (Defacto Guardian):

பிரிவு 361–ன் படி, சட்டநிலைக் காப்பாளர் தவிர, யாராவது ஒருவர் தாமே முன்வந்து அக்குடும்பத்தில் சொத்துக்களையும், குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாப்பதாய் பொறுப்பேற்றுக் கொண்டால், அவரே 'நிகழ்வு நிலைக்காப்பாளர்' ஆவார். இவர்கள் சட்டம் அளிக்காத உரிமையைத் தம் வயப்படுத்தி செயல்பட முன்வருவதால், இவர்கள் உரிமை வயது அடையாதவருக்காகச் செய்யும் ஒவ்வொரு செயலும், உன்னிப்பாக கவனிக்கப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டும்.

நிகழ்வு நிலைக் காப்பாளரின் அதிகாரங்கள் :

(i) உரிமை வயதடையாதவரின் அசையும் சொத்தைப் (Movable Property) பொறுத்தமட்டில் : உரிமை வயதடையாதவரின் அசையும் சொத்தைப் பொறுத்தமட்டில், நிகழ்வு நிலைக் காப்பளர்களின் அதிகாரம், சட்ட நிலைக் காப்பாளர்களின் அதிகாரங்களை ஒத்துள்ளது. இதில் வேற்றுமை ஏதும் இல்லை.

(ii) அசையாச் சொத்தைப் (Immovable Property) பொறுத்தரை: நிகழ்வு நிலைக் காப்பாளர்கள், நீதிமன்ற ஆணை பெறாது, உரிமை வயதடையாத வரின் அசையாச் சொத்துக்களை எவ்வித உரிமை மாற்றம் செய்தாலும், அது செல்லத்தகாதது மட்டுமின்றி, இல்லா நிலையதாகவும் (Void) கருதப்படும். இத்தகு செயல்கள் ஆரம்பம் முதலே இல்லா நிலையதாகையால், உரிமை வயதடையாதவர்கள் உரிமை வயது எய்தப் பெற்ற பின்னர், அவற்றை அங்கீகரித்து ஏற்புறுதி (Ratification) செய்தாலும் செல்லாது.

நிகழ்வு நிலைக் காப்பாளருக்கு உரிமை வயதடையாதவரின் சொத்தை நடுவர் தீர்ப்புக்கு விடச் சொல்வதற்கு அதிகாரமில்லை.

தந்தை உயிருடன் உள்ள பொழுது நடந்து வந்த பங்குத் தொழிலிலோ அல்லது வேறு தொழிலின் பங்குதாரராகவோ உரிமை வயதடையாதவருக்குப் பதிலாக செயல்பட, நிகழ்வு நிலைக் காப்பாளருக்கு அதிகாரம் இல்லை. மேலும் நிகழ்வு நிலைக் காப்பாளர், உரிமை வயதடையாதவருக்காக நடக்கும் பாகப் பிரிவினையில் பங்கு கொள்ளக்கூடாது. இவை தவிர, அவர் உரிமை வயதடையாத வரின் சார்பாக எக்கொடையும் (bequest) வழங்கக் கூடாது.

இந்துச் சட்டம், இசுலாமியர் சட்டமும்:

இந்து மதச் சட்டப்படி, உரிமை வயதடையாதவரின் இன்றியமையாத் தேவையின் (உணவு, உடை, இருப்பிடம் முதலியவற்றுக்குண்டான செலவுகள்) பொருட்டு, அவரது சொத்துக்களை பராதீனம் செய்ய காப்பாளருக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, அச்சமயத்தில் உரிமை வயதடையாதவரின் இன்றியமையாத் தேவை, அப்பொழுதைய சூழ்நிலை, அவர் அடைந்த பயன் இவற்றை ஒரு புறத்திலும், மறுபுறத்தில் காப்பாளரின் அந்தஸ்து, உறவு ஆகியவற்றையும் வைத்து சீர் தூக்கிப்பார்த்து, மேற்படி பராதீனம் செல்லத்தக்கதா, தகாததா என்ற முடிவு செய்யப்பட வேண்டும். ஆனால், இசுலாமியச் சட்டப்படி, அசையா சொத்துக்களைப் பராதீனம் செய்தது செல்லத்தக்கதா, இல்லையா என்பதை, உரிமை வயதடையாதவருக்கும், அவரது காப்பாளருக்கும் உள்ள உறவினையும், அந்தஸ்தையும் கொண்டு கணக்கிட வேண்டுமே, தவிர வேறெந்த சூழ்நிலையை வைத்தும் முடிவு செய்யக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

3. நீதிமன்றத்தால் நியமனம் பெற்ற காப்பாளர்கள் (Court Guardian):

சட்டநிலைக் காப்பாளர்களாகிய தந்தையோ, அல்லது தந்தையின் தந்தையோ, எவரையும் சட்டநிலைக் காப்பாளராக நியமிக்கவில்லையென்றால், நீதிமன்றம் சட்டநிலைக் காப்பாளர்களை நியமிக்கும். அப்படி நீதிமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற காப்பாளர்கள், சாதாரண காரியங்களை நீக்கி, மற்ற காரியங்களுக்கு அவ்வப்போது நீதிமன்ற ஆணை பெற்றுச் செயல்பட வேண்டும். நீதிமன்ற ஆணை பெற்றுச் செயல்பட்டிருந்தால், அதை உரிமை வயதை அடையப்பெற்ற பின்னர் தவறென்றோ, தகாதது என்றோ மறுத்துரைக்க உரிமை வயதடையாதவருக்கு உரிமை கிடையாது. ஆனால் வஞ்சித்தோ, ஏமாற்றியோ, நீதிமன்ற ஆணையைப் பெற்றிருந்தால், உரிமை வயதடையாதவர் உரிமை வயது அடைந்தவுடன் அது குறித்து கேள்வி கேட்க முடியும், கணக்கும் கேட்க முடியும்.

-oOOo-

வாழ்க்கைப் பொருளுதவி (அல்லது) பராமரிப்பு [Maintenance]

Explain the claim of maintenance of wife, grand children and parents under the muslim law. (முகம்மதிய சட்டத்தின் கீழ் மனைவி, பேரக் குழந்தைகள் மற்றும் பெற்றோர் ஆகியவரின் வாழ்க்கைப் பொருளுதவி உரிமைகளை ஆராய்க.)

(அல்லது)

What do you mean by 'Nafaqa' under Muslim Law? (முகம்மதிய சட்டத்தின் கீழ் "நபாகா" என்றால் என்ன ?)

(அல்லது)

Nafaqa - Write short notes. (நபாகா – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Comment on the Muslim law relating to maintenance. What is the latest development and what is your view regarding this? (முகமதிய சட்டத்தில் பராமரிப்பு குறித்துக் கூறுக. சமீபத்திய மாற்றங்கள் யாவை ? அவை குறித்து உம் கருத்து யாது ?)

வாழ்க்கைப் பொருளுதவி (அல்லது) பராமரிப்பு (அல்லது) நபாகா – விளக்கம்:

இசுலாம் சட்டத்தில் 'நபாகா' என்றால் 'வாழ்க்கைப் பொருளுதவி' அல்லது 'பராமரிப்பு' (Maintenance) என்று பொருளாகும். இசுலாம் சட்டத்தின் 369–வது பிரிவானது, 'பராமரிப்பு' என்பதில் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவை அடங்கும் என்று கூறுகிறது. அந்த வகையில் பராமரிப்பு என்பது, தகப்பன் தனது மகன் மற்றும் மகளுக்கு, கணவன் தனது மனைவிக்கு, மகன் தனது பெற்றோர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் ஆகியவற்றை அளித்து பேணிக் காப்பதே பராமரிப்பு என்று பொருள் கொள்ளலாம்.

குழந்தைகளையும், பேரக் குழந்தைகளையும் பராமரித்தல் (Maintenance of children and grand children):

இசுலாம் சட்டத்தின் பிரிவு 370(1)–ன்படி, (அ) தகப்பன் தனது மகனைப்

பருவம் அடையும் வரை (puberty) (அதாவது 15 வயது வரை) பராமரிக்க வேண்டும்.

ஆ) மகளை, அவள் திருமணமாகிச் செல்லும் வரை பராமரிக்க வேண்டும்.

இ) வயது வந்த மகனை தந்தை பராமரிக்க வேண்டியதில்லை. எனினும், அம்மகன் ஆரோக்கியமின்மை அல்லது நோயின் காரணமாக ஊனமாக இருப்பின் (disabled by infirmity or disease), அவனை தந்தை பராமரிக்க வேண்டும்.

ஈ) பெண் மகவு தாயின் பாதுகாப்பில் இருந்தாலும், அவளைத் தந்தை தான் பராமரிக்க வேண்டும். ஆணாக இருந்தால் அவன் 7 வயதடையும் வரை தாயின் பராமரிப்பில்தான் இருக்க வேண்டும். அந்நிலையிலும் தந்தைதான் அவனை பராமரிக்க வேண்டும்.

உ) குழந்தைகளுக்கென்று சொத்து இருந்து அதனால் அவர்கள் தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள இயலுமானால், தந்தை அவர்களைப் பராமரிக்கக் கடமைப்பட்டவரல்ல.

பிரிவு 370 (2)–ன்படி, தந்தை ஏழையாயிருந்து, வேலை எதுவும் செய்ய இயலாநிலையில் இருந்தால், தாய் தனது வருமானத்திலிருந்து (அவளுக்கு வருமானம் ஏதும் உள்ளபட்சத்தில்) குழந்தைகளைப் பராமரிக்க வேண்டும்.

பிரிவு 370 (3)–ன்படி, தந்தை ஏழையாகவும், இயலாத நிலையிலும் இருந்து, தாயும் வருமானமேதுமற்ற ஏழையாக இருந்தால், அக்குழந்தையை பராமரிக்கும் பொறுப்பு, அதன் பாட்டனையே சாரும். ஆனால் இதற்கு பாட்டன் வசதியான சூழ்நிலையில் இருக்க வேண்டும்.

இது தவிர, பெண்ணிற்குத் திருமணம் நடைபெற்றுவிட்டால் அவள் கணவன்தான் அவளைப் பராமரிக்க வேண்டும். திருமணம் ஆகாத பெண் தவிர்க்க இயலாக் காரணங்களால் பெற்றோரை விட்டுப் பிரிந்தாலும் அவளையும் தந்தைதான் பராமரிக்க வேண்டும். இசுலாம் சட்டத்தால் அங்கீகரிக்கப்படாத (முறையிலா மணப்பிறப்பு – illegitimate) குழந்தைகளைத் தந்தை பராமரிக்கத் தேவையில்லை. ஆனால் 374–ன்படி, தந்தை முறையற்ற மணப் பிறப்புக் குழந்தைகளைப் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி பராமரிக்கக் கடமைப் பட்டவர்.

பெற்றோரை பராமரித்தல் (Maintenance of parents):

பரிவு 371–ன்படி (1) ஏழைப் பெற்றோர், தங்களுக்காக சம்பாதிக்கும் திறனைப் பெற்றிருந்தாலும், வசதியான சூழ்நிலையில் உள்ள அவர்கள் குழந்தைகள் அவர்களைப் பராமரிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவர்.

(2) ஒரு மகன், கஷ்டமான சூழ்நிலையில் இருந்தாலும், அவன் தனது

ஏழைத் தாயை, அவள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தாலும், பராமரிக்கக் கடமைப்பட்டவன்.

(3) ஒரு மகன் ஏழையாக இருந்தாலும், அவன் சிறிதளவு சம்பாதித்துக் கொண்டிருந்தாலும், அவன் தனது சம்பாதிக்க இயலாத ஏழைத் தந்தையை பராமரிக்கக் கடமைப்பட்டவன்.

தாய்வழி மற்றும் தந்தைவழி மூதாதையரைப் பராமரித்தல் (Maintenance of grandparents):

தாய்வழி மற்றும் தந்தைவழியில் உள்ள தனது பாட்டன் பாட்டியரை, அவர்கள் ஏழ்மை நிலையில் இருந்தால் மட்டுமே, ஒரு இசுலாம் ஆண் பராமரிக்க வேண்டும். அவன் தனது ஏழைத் தந்தையை எந்த அளவில் பராமரிக்கக் கடமைப்பட்டவனோ, அந்த அளவில் அவர்களையும் பராமரிக்கக் கடமைப்பட்டவன் என்று பிரிவு 372 கூறுகின்றது.

ஏனைய உறவினர்களைப் பராமரித்தல் (Maintenance of other relations):

பிரிவு 373–ன்படி, நல்ல வசதி வாய்ப்புடன் உள்ள இசுலாமியர்கள், தடுக்கப்பட்ட உறவுமுறையில் உள்ள ஏழை உறவினர்களைப் பராமரிக்க வேண்டும். எனினும் இவ்வாறு பராமரிப்பது, அந்த உறவினர்கள் இறந்து போனால், அவர்களிடமிருந்து இறங்குரிமையில் கிடைக்கவுள்ள சொத்தின் பாகத்திற்கு விகிதாச்சரமான அளவில் பராமரித்தால் போதுமானது.

விதவை மருமகளைப் பராமரித்தல் (Maintenance of son's widow):

இந்துச் சட்டத்தின்படி, ஒரு மாமனார் தனது விதவை மருமகளை பராமரிக்க வேண்டும். ஆனால் இசுலாம் சட்டத்தின் பிரிவு 373–ன் இறுதி வாக்கியப்படி, விதவை மருமகளை மாமனார் பராமரிக்கக் கடமைப்பட்டவரல்ல.

ஏழைகளைப் பராமரித்தல் (Maintenance of poor):

வசதியுள்ள ஒவ்வொரு இசுலாமியரும் தன்னுடைய வருமானத்தில், ஒரு பங்கை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். இது 'ஜகாத்' என்று கூறப்படுகிறது. இதனை அவரவரே விரும்பிக் கொடுக்க வேண்டுமேயன்றி, இது கேட்டு வாங்குதற்குரியதன்று. அவரவர் வருமானத்திலிருந்து 2 ½ % இதற்கென ஒதுக்கிவிட வேண்டுவது ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

மனைவியைப் பராமரித்தல் (Maintenance of wives):

இசுலாம் சட்டத்தின் 277–வது பிரிவின்படி, பருவம் அடையாத

பெண்ணைத் திருமணம் செய்திருந்து அவளுடன் தாம்பத்திய உறவு கொள்ள வில்லையென்றால், அவளைப் பராமரிக்கத் தேவையில்லை. கீழ்ப்படியாத மனைவியாக இருந்தாலும், வாழ்க்கைக்கு ஒத்துவராத மனைவியாய் இருந்தாலும், அவளைக் கணவன் பராமரிக்கத் தேவையில்லை. ஆனால் கணவனின் கொடுமை யான நடவடிக்கையாலும், சரியான மஹர்ப் பணம் கொடுக்காததாலும் மனைவி அவனை விட்டு பிரிந்திருந்தால், கணவன் அம்மனைவிக்குப் பராமரிப்புத் தொகை கொடுக்க வேண்டும்.

கணவன் பராமரிப்புத் தொகை அளிக்காத நிலையில் மனைவி அத்தொகையை நீதிமன்றத்தில் வழக்கிட்டுப் பெறலாம். விட்டுப்போன பராமரிப்புத் தொகையை மீண்டும் வசூலிக்க முடியாது. ஆனால் கணவன், மனைவி இருவரிடையேயும் முன்பே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால், அதன்படி பராமரிப்பு பெற முடியும் எனப் பிரிவு 278 கூறுகின்றது.

பிரிவு 279–ன்படி, திருமண முறிவிற்கு பின்னர் 'இத்தா' அனுசரிக்கும் மனைவி ஒருத்தி, கணவனிடமிருந்து பராமரிப்புத் தொகை பெறலாம். ஆனால் கணவன் இறந்துவிட்டதால் இத்தா அனுசரிக்கும் மனைவி, அச்சமயத்தில் பராமரிப்புத் தொகை கோர இயலாது.

பராமரிப்பு – சமீபத்திய சட்ட மாற்றங்கள்:

பராமரிக்கக் கடமைப்பட்டவர்களை இசுலாம் சட்டம் மேற்கண்டவாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது. இத்துடன் ஒருவர் எம்மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125–வது பிரிவின்படி (Criminal Procedure Code), பராமரிப்புத் தொகை பெற உரிமை படைத்தவர்கள் ஆவர். எனவே அப்பிரிவின்படி, ஒரு இசுலாம் மனைவி, குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் முறையே தங்கள் கணவனிடமிருந்து, தந்தையிடமிருந்து, மற்றும் மகனிடமிருந்து பராமரிப்புத் தொகை பெற நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யலாம்.

முன்னதாக பழைய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 488–வது பிரிவின்படி, கணவனால் திருமண முறிவு செய்யப்பட்ட ஒரு மனைவி கணவனிட மிருந்து பராமரிப்புத் தொகை கோர முடியாது என்ற நிலை இருந்தது. ஆனால் இப்பிரிவு, 1973–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டத்தால், மேற்கண்டவாறு பிரிவு 125 என மாற்றி வைக்கப்பட்டது. அதன்படி இன்று, திருமண முறிவு பெற்ற ஒரு பெண், அவள் மறுமணம் செய்து கொள்ளும் வரை, கணவனிடமிருந்து பராமரிப்புத் தொகை பெறலாம் என்ற நிலை தோன்றியது.

அது போல முன்பு திருமண முறிவிற்குப் பின் 'இத்தா' இருக்கும் காலம் வரை மட்டுமே, ஒரு இசுலாம் மனைவி பராமரிப்புத் தொகை பெற முடியும்; அதற்குப் பின் அவளை, அவளது கணவன் பராமரிக்கக் கடமைப்பட்டவனல்ல எனும் நிலை முன்பு இருந்தது. ஆனால் பின்னிட்டு **Mohammed Ahmed Khan v.**

Shahbano Begam (Shahbano's Case)[1] எனும் பிரபலமான வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, திருமணம் முறிந்த ஒரு இசுலாம் மனைவி, தன்னைத் தானே பராமரித்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்தால், அவள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் மேற்படி பிரிவு 125–ன்படி தனது கணவனிடமிருந்து, அவன் மறுமணம் செய்து கொள்ளும் வரை பராமரிப்புத் தொகை பெறலாம் என்ற நிலை ஏற்பட்டது. மேலும் பராமரிப்பு குறித்து மனைவிக்கு மிகக் குறைந்த அளவிலேயே உரிமைகளை வழங்கும் இசுலாம் சட்டத்தின் மீது மேலோங்கி செயல்படும் அதிகாரம் (overriding effect) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125–வது பிரிவிற்கு உண்டு; எனவே அப்பிரிவைத்தான் ஒரு இசுலாம் மனைவியின் பராமரிப்பிற்கு வகை செய்யும் பொருட்டு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் விளக்கமளித்தது. இங்கு திருமண முறிவிற்கு பின்னர், மனைவிக்கு கணவன் மஹர்த் தொகை வழங்குவதை ஒரு பெரிய விஷயமாக உச்ச நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. மறுமணம் செய்து கொள்ளும்வரை அல்லது உயிருடன் உள்ள வரை, ஒரு இசுலாம் மனைவி வாழ அவளுக்கு பணம் வேண்டும் என்பதைத்தான் உச்ச நீதிமன்றம் பெரிதும் கருத்தில் கொண்டது.

மேற்படி வழக்கின் தீர்ப்பு, நாடு முழுவதிலும் பல முரண்பட்ட கருத்துக்களைத் தோற்றுவித்தது. எனவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க, நமது பாராளுமன்றம் இறுதியாக 1986–ஆம் ஆண்டில் **இசுலாம் பெண் (உரிமைகள் பாதுகாப்பு) மற்றும் திருமண முறிவுச் சட்டத்தை [The Muslim (Protection of Rights) and Divorce Act of 1986]** இயற்றியது. அதன்படி,

(1) திருமண முறிவான ஒரு இசுலாம் மனைவி, அவள் 'இத்தா' இருக்கும் காலத்திற்குள், அவளது முன்னாள் கணவனிடமிருந்து ஒரு நியாயமான மற்றும் உரிய பராமரிப்புத் தொகையைப் பெற உரிமை படைத்தவள்;

(2) திருமண முறிவிற்கு பின்னர் அல்லது முன்னர் தனக்கு பிறந்த குழந்தைகளை அம்மனைவியே பராமரித்துக் கொள்ளுமிடத்து, அக்குழந்தைகள் பிறந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு தனது முன்னாள் கணவனிடமிருந்து ஒரு நியாயமான மற்றும் உரிய பராமரிப்புத் தொகையைப் பெற உரிமை படைத்தவள்;

(3) அவள் தனது கணவனிடமிருந்து பராமரிப்புத் தொகையைப் பெற இயலவில்லையென்றால், அவளது இறப்பிற்குப்பின் அவளது சொத்தை இறந்தவரிடமையில் அடைய உரிமை படைத்த உறவினர்களிடமிருந்து தனக்குரிய பராமரிப்புத் தொகையைக் கோரலாம்.

(4) அவளுக்கு அத்தகு உறவினர்கள் எவரும் இல்லையென்றால், அவள் 1954–ஆம் ஆண்டின் வக்ஃப் சட்டத்தின் 9–வது பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட வக்ஃப் வாரியத்திடமிருந்து தனக்குரிய பராமரிப்புத் தொகையைக் கோரலாம்.

1. AIR 1985 SC 945

(5) திருமண முறிவான பெண்ணும், அவளது முன்னாள் கணவனும் சேர்ந்தோ, தனித்தனியாக தாங்கள் இந்தச் சட்டத்தின் (மேற்படி 1986–ஆம் ஆண்டின் சட்டம்) வகைமுறைகளுக்குப் பதிலாக, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 121 முதல் 125 வரையுள்ள பிரிவுகளுக்கு உட்பட்டுச் செல்வதாக விளம்புகை செய்யலாம். இவ்வாறு செய்வதை அப்பெண் விரும்பினால், தேர்தெடுத்துக் கொள்ளலாம் (optional).

(6) 'இத்தா' இருக்கும் காலத்திற்குள், மனைவிக்கு ஒரு நியாயமான மற்றும் உரிய பராமரிப்புத் தொகை வழங்கப்பட வேண்டும் என்று இச்சட்டத்தில் கூறப்பட்டிருப்பது, 'இத்தா' இருக்கும் காலத்தில் அத்தொகை எவ்வளவு என்பதை அக்கணவன் நிருணயிப்பதற்காக கூறப்பட்டுள்ளதேயொழிய, 'இத்தா' இருக்கும் காலம் முடிவடைந்த பின்பும் கணவன் அவளுக்கு பராமரிப்புத் தொகை வழங்க வேண்டுமென்றே பொருள் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட நிலைப்பாடு தவிர மற்றொரு முக்கியமான சட்டத் திருத்தமும் ஏற்பட்டுள்ளது. அதாவது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125–வது பிரிவின்படி **'முழுவதுமாக அய்ந்நூறு ரூபாய்களுக்கு மிகாத ஒரு தொகையை மாதமொன்றுக்கு பராமரிப்புத் தொகையாக வழங்க'** நீதிமன்றம் உத்தரவிடலாம் என்று வகை செய்யப்பட்டிருந்தது. எடுத்துக்காட்டாக, தன்னைப் பராமரித்துக் கொள்ளவியலாத ஒரு இசுலாம் மனைவி தனது கணவனிடமிருந்து பராமரிப்புத் தொகை கோரி குற்றவியல் நீதித்துறை நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தால், குற்றவியல் நீதித்துறை நடுவர் தான் பொருத்தமெனக் கருதும் வகையில் மாதமொன்றுக்கு அய்ந்நூறு ரூபாய்களுக்கு மிகாத ஒரு தொகையை பராமரிப்புத் தொகையாக வழங்க உத்தரவிடலாம். ஆனால் மேற்படி சட்டப்பிரிவில் **2001–ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் (Act 50 of 2001)** வாயிலாக **'முழுவதுமாக அய்ந்நூறு ரூபாய்களுக்கு மிகாத ஒரு தொகையை'** எனும் சொற்றொடர் நீக்கப்பட்டு விட்டது. எனவே இன்று வழக்கின் சூழலுக்கேற்ற வகையில், குற்றவியல் நீதித்துறை நடுவர் தான் பொருத்தமெனக் கருதும் **எத்தொகையையும் பராமரிப்புத் தொகையாக வழங்க வேண்டுமென கணவனுக்கு உத்தரவிடலாம்.** இது மிகவும் வரவேற்கத்தக்கதொரு நிலையாகும். இந்நிலைப்பாடு மனைவிக்கு மட்டுமல்லாது, தங்கள் தந்தையிடமிருந்து பராமரிப்புத் தொகை கோரும் குழந்தைகளுக்கும், தாங்கள் பெற்ற குழந்தைகளிடமிருந்து (மகன் அல்லது மகள்) பராமரிப்புக் கோரும் பெற்றோர்களுக்கும் பொருந்தக் கூடியதாகும். இவ்வாறு பராமரிப்பு குறித்து இசுலாம் சட்டத்தில் இருந்த இறுக்கமான உரிமைகள், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தாலும், 1986–ஆம் ஆண்டில் இசுலாம் பெண் (உரிமைகள் பாதுகாப்பு) மற்றும் திருமண முறிவுச் சட்டத்தாலும் வெகுவாகத் தளர்த்தப்பட்டு, குறிப்பாக இசுலாம் பெண்கள் பராமரிப்புத் தொகை பெற பெருமளவில் உரிமை ஏற்பட்டன என்றே கூற வேண்டும்.

-oOo-

பகுதி - IV
பிற சட்டங்கள் [Other Laws]

☞ சிறப்புத் திருமணச் சட்டம், 1954. [The Special Marriage Act, 1954]

- அறிமுகம்
- சிறப்புத் திருமணத்திற்கான நிபந்தனைகள்
- திருமண அதிகாரங்களின் கடமைகளும் அதிகாரங்களும்
- வேறு முறையில் நடத்தப்படும் திருமணத்தை பதிவு செய்தல்
- இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணங்கள்
- தாம்பாத்திய உரிமைகளை மீட்டளித்தல்
- நீதிமுறையில் பிரிந்து போதல்
- மணமுறிவு

☞ இந்தியக் கிறுத்தவ திருமணச் சட்டம், 1872. [The Indian Christian Marriage Act, 1872]

- அறிமுகம்
- யாரால் திருமணம் நடத்தி வைக்கப்படலாம்?
- மத அமைச்சரால் நடத்தி வைக்கப்படும் திருமணங்கள்
- திருமணப் பதிவாளரால் அல்லது அவர் முன்னிலையில் நடத்தி வைக்கப்படும் திருமணங்கள்
- இந்திய கிறுத்தவர்களுக்கிடையில் திருமணங்கள் நடத்தப் பெறுவதற்கான நிபந்தனைகள்

☞ மணமுறிவுச் சட்டம், 1869. [The Divorce Act, 1869]

- அறிமுகம்
- திருமணத்தைக் கலைப்பதற்கான (அல்லது) மணமுறிவு கோருவதற்கான காரணங்கள்
  - கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள காரணங்கள்
  - மனைவிக்கு உள்ள கூடுதல் காரணங்கள்
- மணவாழ்க்கைப் பிரச்சனைகளுக்குரிய பிற தீர்வழிகள்

1 சிறப்புத் திருமணச் சட்டம், 1954 [The Special Marriage Act, 1954]

அறிமுகம்

இச்சட்டம் 1954–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. பின்னிட்டு 1976–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட திருமணச் சட்டங்கள் (திருத்தச்) சட்டத்தால் [The Marriage Laws (Amendment) Act of 1976] பெரிதும் திருத்தப்பட்டது. இச்சட்டத்தில் மொத்தம் 51 சட்டப்பிரிவுகள் உள்ளன.

இச்சட்டம் வெவ்வேறு சாதி மற்றும் மதத்தைச் சார்ந்த ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வதை அனுமதிக்கிறது. அதற்குண்டான சட்டவகைமுறைகளை விளக்குகிறது. அதாவது இச்சட்டம் ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ள, சாதியும் மதமும் தடையல்ல என்று கூறுகிறது. இச்சட்டம் கலப்புத் திருமணத்தை அங்கீகரிக்கிறது என்றும் கூட சொல்லலாம். ஒரு இந்துத் திருமணமாகவோ அல்லது ஒரு இசுலாமியத் திருமணமாக இல்லாமல், வேறு முறையில் இங்கு சிறப்பாக திருமணம் செய்து கொள்ளப்படுவதால், இதனை **'சிறப்புத் திருமணம்' (Special Marriage)** என்று குறிப்பிடுகிறோம். இதற்குண்டான வழிவகைகளை கூறும் சட்டத்தைத்தான் நாம் மேற்கண்டவாறு **'சிறப்புத் திருமணச் சட்டம்'** என்று அழைக்கிறோம்.

மேற்கண்டவற்றைத்தான் இச்சட்டத்தின் முகப்புரை **(Preamble)**, "சில நேர்வுகளில் திருமணத்தின் சிறப்பான தொரு முறைக்கும், அத்தகு திருமணத்தையும் மற்றும் வேறு சில திருமணங்களையும் பதிவு செய்வதற்கும் மற்றும் திருமண முறிவிற்கும் வகை செய்வதற்காக இயற்றப்பட்ட ஒரு சட்டம்" என்று கூறுகிறது.

இச்சட்டம் சம்மு – காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கிறது. இச்சட்டம் இந்தியாவில் உள்ள எந்நபருக்கும் மற்றும் வெளிநாட்டில் உள்ள அனைத்து இந்தியக் குடிகளுக்கும் பொருந்தும். மேலும் இச்சட்டம் அளாவுகிற நிலப்பரப்புகளை வாழ்விடமாகக் (domiciled) கொண்டு, சம்மு–காஷ்மீரில் இருக்கும் இந்தியக் குடி மக்களுக்கும் பொருந்தும்.

1.Explain the conditions relating to solemnisation of marriages under the Special Marriage Act of 1954. (1954ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் முறைப்படி திருமணங்களை நடத்துவதற்கான நிபந்தனைகளை விளக்குக.)

(அல்லது)

State the conditions for solemninsing marriages in Special Marriages Act. What are the effects of such marriage of members of undivided family? (சிறப்புத் திருமணச் சட்டத்தில் திருமணம் நடைபெறுவதற்கான நிபந்தனைகளைக் கூறு. பிரிக்கப்படாத குடும்ப அங்கத்தினரில் அத்திருமணத்தின் விளைவுகள் என்ன?)

(அல்லது)

Summarise the provisions of the Special Marriage Act relating to solemnisation of marriage. (சிறப்புத் திருமண சட்டத்தில் திருமணங்கள் நடத்தப்படுவது குறித்த வகைமுறைகளை சுருக்கிக் கூறுக.)

(அல்லது)

Explain the conditions relating to solemnisation of marriages under the Special Marriages Act. (சிறப்புத் திருமண சட்டத்தில் திருமணங்கள் நடத்தப்படுவதற்குரிய நிபந்தனைகள் யாவை என்பதை விளக்குக.)

முன்னுரை :

1954–ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் 4–வது பிரிவு, சிறப்புத் திருமணங்களை நிறைவேற்றி வைப்பது தொடர்பான நிபந்தனைகளை கூறுகிறது.

பிரிவு 4 கூறும் நிபந்தனைகள் :

திருமணங்களை நிறைவேற்றி வைப்பது தொடர்பாக தற்போது அமலிலுள்ள வேறு எந்தச் சட்டத்திலும் எவ்வாறு கூறப்பட்டிருப்பினும், திருமணத்தின் பொழுது, பின்வரும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தால், இந்தச் சட்டத்தின் கீழ் எந்த இரண்டு நபர்களுக்கு இடையேயும் திருமணம் செய்விக்கப்படலாம். அந்நிபந்தனைகளாவன,–

(a) திருமணம் செய்து கொள்ளும் நபருக்கு திருமணம் நடைபெறும் காலத்தில் வேறு மனைவியோ அல்லது கணவனோ உயிருடன் இருக்கக் கூடாது;

(b) திருமணமாகும் சமயத்தில் மணமக்களில் எவரேனும் ஒருவர்,

(i) அத்திருமணத்திற்கு செல்லத்தக்க ஒப்புதல் (valid consent) கொடுக்க முடியாத அளவிற்கு பித்து நிலையராக (unsound of mind) இருக்கக் கூடாது; அல்லது

(ii) அத்திருமணத்திற்கு செல்லத்தக்க ஒப்புதல் கொடுக்க முடிந்த போதிலும், மூளைக் கோளாறு (mental disorder) காரணமாக அவர் திருமணம் செய்து கொள்ளத் தகுதியற்றவராகவும், குழந்தை பெற்றெடுக்கத் தகுதியற்றவராக வும் இருத்தல் கூடாது; அல்லது

(iii) விட்டு விட்டு தாக்கக்கூடிய புத்தி பேதலிப்பு (insanity) நோய்குட் பட்டவராக இருத்தல் கூடாது.

(c) திருமணம் ஆகும்போது, மணமகனுக்கு 21 வயதும் மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியாகியிருக்க வேண்டும்.

(d) மணமக்கள் தடுக்கப்பட்ட உறவுமுறையில் இருக்கக் கூடாது (within the degrees of prohibited relationship). மணமக்களில் எவரேனும் ஒருவரின் வழக்கமானது, இத்தகு தடுக்கப்பட்ட உறவு முறைத் திருமணத்தை அனுமதித்தால், அந்தத் திருமணம் வழக்கப்படி செய்யப்பட்டதாகவே கொள்ளப்படும்; மற்றும்

(e) திருமணம், சம்மு–காஷ்மீர் மாநிலத்தில் நடக்குமிடத்து, மணமக்கள் இருவரும் இச்சட்டம் அளாகிற நிலப்பரப்புகளை வாழ்விடமாகக் கொண்ட இந்தியக் குடிமக்களாக இருத்தல் வேண்டும்.

பிரிவினையாகாத (கூட்டுக்) குடும்ப உறுப்பினருக்கு, இத்திருமணத்தால் ஏற்படும் விளைவுகள்:

இச்சட்டத்தின் 19–வது பிரிவானது, இந்து மதம், பௌத்த மதம், சீக்கிய மதம் அல்லது ஜைன மதத்தை பின்பற்றும் பிரிவினையாகாத குடும்பம் ஒன்றைச் சேர்ந்த உறுப்பினர் எவரும், இச்சட்டத்தின் கீழ் செய்து கொள்ளும் திருமணத்தால், அவர் அக்குடும்பத்திலிருந்து துண்டிக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும், என்று கூறுகிறது.

2. What are the duties and powers of the marriage officers performable and exercisable by him before solemnisation of marriages under the Special Marriage Act, 1954. (1954ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணங்கள் நிறைவேற்றப் படுவதற்கு முன் திருமண அதிகாரிகளால் செய்யப்படத்தக்கதும், கையாளத் தக்கதுமான கடமைகளும் அதிகாரங்களும் யாவை?)

திருமணம் செய்து கொள்ளப்போவது பற்றிய அறிவிப்பு:

ஒரு திருமணம், இச்சட்டத்தின் கீழ் நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள போது, மணமக்கள் இருவரும் அது பற்றிய அறிவிப்பு ஒன்றை, மணமக்களில் யாராவது ஒருவர் அவ்வறிவிப்பு கொடுக்கப்படுகிற தேதிக்கு உடன் முன்னால் முப்பது தினங்களுக்கு குறையாத ஒரு காலத்துக்கு குடியிருந்து வந்துள்ள மாவட்டத்தின் திருமண அதிகாரிக்கு, எழுத்து மூலமாக அனுப்ப வேண்டும். **(பிரிவு 5).**

திருமண அறிவிப்புப் புத்தகமும், வெளியிடும்:

1. அத்திருமண அதிகாரி 5-வது பிரிவின் கீழ் கொடுக்கப்படுகிற அறிவிப்புகள் அனைத்தையும் அவருடைய அலுவலகத்தின் ஆவணங்களுடன் வைத்திருக்க வேண்டும். மேலும், அத்தகைய ஒவ்வொரு அறிவிப்பின் உண்மை நகலொன்றை, அந்நோக்கத்திற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள புத்தகம் ஒன்றில் உடனடியாக பதிவுசெய்து விட வேண்டும். அப்பதிவேடு **திருமண அறிவிப்பு புத்தகம் (Marriage Notice Book)** எனப்படும். அப்பதிவேட்டை கட்டணமேதுமின்றி எவரும் பார்வையிடலாம்.

2. அத்திருமண அதிகாரி அத்தகைய அறிவிப்பு ஒவ்வொன்றின் பிரதியையும், அவருடைய அலுவலகத்தில் அனைவருக்கும் தெரியக் கூடிய ஏதேனுமொரு இடத்தில் ஒட்டி வைப்பதன் மூலம், வெளிப்படுத்துகை செய்ய வேண்டும்.

3. பிரிவு 5-ன் கீழ் அறிவிப்பு கொடுக்கப்பட்ட திருமண அதிகாரி பொறுப்பு வகிக்கும் மாவட்டத்தின் வட்டார எல்லைக்குள், உத்தேசிக்கப்பட்ட திருமணத்தின் தரப்பினர்களில் எவரேனும் ஒருவர் நிலையாக வசித்து வராமல் இருக்குமிடத்து, அந்த திருமண அதிகாரி அந்த அறிவிப்பின் நகல் ஒன்றை அத்தரப்பினர் நிலையாக வசித்து வரும் மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட திருமண அதிகாரிக்கு அனுப்பி வைக்கச் செய்தல் வேண்டும். அந்தத் திருமண அதிகாரி அதன் பேரில், அந்த அறிவிப்பின் நகலொன்றை அவருடைய அலுவலகத்தில் எல்லோருக்கும் தெரியக் கூடிய ஏதேனுமொரு இடத்தில் ஒட்டி வைக்கச் செய்ய வேண்டும். **(பிரிவு 6)**

திருமணத்திற்கு ஆட்சேபணை (Objection to marriage):

1. மேற்படி பிரிவு 6(2)-ன் கீழ் அறிவிப்பு வெளிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்கள் முடிவடைவதற்கு முன்பாக, எவரொருவரும் அத்திருமணம் பிரிவு 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதை மீறுவதாக உள்ளது எனும் அடிப்படையில் ஆட்சேபிக்கலாம்.

2. மேற்கண்டவாறு ஆட்சேபணை ஏதுமில்லையானால், மேற்கண்ட முப்பது தினங்கள் முடிந்த பின்னர் அத்திருமணம் நடத்தி வைக்கப்பட வேண்டும்.

3. அந்த ஆட்சேபணையின் தன்மையை அந்தத் திருமண அதிகாரி திருமண அறிவிப்புப் புத்தகத்தில், எழுத்து மூலமாகப் பதிவு செய்ய வேண்டும். அந்த ஆட்சேபணையைச் செய்த நபருக்கு அது படித்துக் காட்டப்பட்டு, தேவைப்படுமானால் விளக்கிக் கூறப்பட்டு அந்த நபரால் அல்லது அந்நபரின் சார்பில் கையொப்பமிடப்பட வேண்டும். **(பிரிவு 7)**.

ஆட்சேபணை கிடைக்கப் பெற்றவுடன் பின்பற்ற வேண்டிய நடைமுறை:

(1) உத்தேசிக்கப்பட்டுள்ள திருமணம் ஒன்றைப்பற்றி, 7-வது பிரிவின் கீழ் ஆட்சேபணை செய்யப்படுமானால், ஆட்சேபணைக்குரிய விஷயத்தை திருமண அதிகாரி விசாரித்தறிந்து, அது திருமணம் நடத்தி வைக்கப்படுவதை தடுக்கக் கூடியதல்ல என்று மனநிறைவையும் வரை அல்லது ஆட்சேபணை செய்தவரால் அது திரும்பப் பெறப்படும் வரை, அத்திருமணத்தை நடத்தி வைத்தல் கூடாது; ஆனால் ஆட்சேபணைக்குரிய விஷயத்தை விசாரித்தறிந்து, ஒரு முடிவிற்கு வரும் நோக்கத்திற்காக, ஆட்சேபணைத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மேலான காலத்தை திருமண அதிகாரி எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

(2) திருமண அதிகாரி மேற்படி ஆட்சேபணையை ஏற்றுக் கொண்டு, திருமணத்தை நடத்தி வைக்க மறுத்தால், உத்தேசிக்கப்பட்ட திருமணத்தின் தரப்பினர்களில் எவரேனும் ஒருவர், அவ்வாறு மறுக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மாவட்ட நீதிமன்றத்திற்கு (District Court) மேல்முறையீடு செய்ய லாம். இங்கு அத்திருமண அதிகாரியின் அலுவலகம், அம்மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்குட்பட்ட வட்டார எல்லைகளுக்குள் வருவதாக இருக்க வேண்டும். இந்த மேல்முறையீட்டில் மாவட்ட நீதிமன்றம் வழங்கும் முடிவே இறுதியானதாகும். அம்முடிவிற்கேற்ப திருமண அதிகாரி செயல்படுதல் வேண்டும். (பிரிவு 8).

விசாரணைகள் தொடர்பாக திருமண அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள்:

(1) மேற்படி 8-வது பிரிவின் கீழ், திருமண அதிகாரி விசாரணை செய்யும் பொழுது, அவர், பின்வரும் விஷயங்களைப் பொறுத்து, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் உரிமையியல் நீதிமன்றம் ஒன்று உரிமையியல் வழக்கொன்றை விசாரணை செய்கையில் கொண்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் கொண்டவராக இருப்பார். அவை,–

(a) சாட்சிகளை அழைப்பது, அவர்கள் நீதிமன்றத்திற்கு நேரியையாக வந்திருக்கும்படி செய்வது, அவர்களை பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்வது;

(b) கண்பிறித்தல் மற்றும் பார்வையிடுதல்;

(c) ஆவணங்களை ஆஜர்படுத்துப்படி கட்டாயப்படுத்துதல்;

(d) ஆணையுறுதியாவணத்தின் மீது சாட்சியங்களைப் பெறுதல்;

(e) சாட்சிகளை விசாரிக்க ஆணையங்களைப் பிறப்பித்தல்;

மற்றும் திருமண அதிகாரி முன் நடக்கும் நடவடிக்கை எதுவும், இந்திய தண்டனைச் சட்டத்தின் 193-வது பிரிவின்படி ஒரு நீதிமுறை நடவடிக்கையாக கருதப்படுதல் வேண்டும்.

(2) உத்தேசிக்கப்பட்ட திருமணம் ஒன்றைப் பற்றி செய்யப்பட்ட ஆட்சேபணையானது நியாயமற்றதென்றும், நல்லெண்ணத்துடன் செய்யப்பட வில்லையென்றும் திருமண அதிகாரிக்குத் தோன்றினால், அவர் ஆட்சேபித்தி நபர் மீது, செலவுத் தொகையாக ஓராயிரம் ரூபாய்க்கு மிகாத ஒரு தொகையை நஷ்டஈடாக விதித்து, அந்தத் தொகை முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அந்தத் திருமண தரப்பினர்களுக்கு அளிக்கலாம். (பிரிவு 9)

மேற்படி ஆட்சேபணை, வெளிநாட்டில் உள்ள திருமண அதிகாரியால் பெறப்பட்டதன் பேரிலான நடைமுறை குறித்து பிரிவு 10 விளக்குகிறது.

மணமக்கள் மற்றும் சாட்சிகளின் விளம்புகை:

திருமணம் நடத்தி வைக்கப்படுமுன், மணமக்களும், மூன்று சாட்சிகளும் திருமண அதிகாரியின் முன்னிலையில், இச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின்படியிலான ஒரு விளம்புகையில் கையெழுத்திட வேண்டும். அந்த விளம்புகை, அந்தத் திருமண அதிகாரியால் ஒப்புகைக் கையெழுத் திடப்பட வேண்டும். (பிரிவு 11).

திருமணம் நடத்தி வைக்கப்படும் இடமும், முறையும்:

(1) திருமண அதிகாரியின் அலுவலகத்தில் திருமணம் நடத்தி வைக்கப்படலாம், அல்லது அந்த இடத்திலிருந்து ஒரு நியாயமான தூரத்திற்குள் உள்ளதும், அத்திருமணத் தரப்பினர்கள் விரும்பும் அத்தகு வேறு இடத்திலும் அத் திருமணம் நடத்தி வைக்கப்படலாம். ஆனால் இவ்வாறு வேறு இடத்தில் திருமணம் நடத்தி வைக்கப்பட கூடுதல் கட்டணத்தை தரப்பினர்கள் செலுத்த வேண்டும்.

(2) திருமணத் தரப்பினர் ஏற்றுக் கொள்ளத் தேர்ந்தெடுக்கும் எந்த முறையிலும், அவர்கள் திருமணம் நடத்தி வைக்கப்படலாம்.

எனினும், திருமணத் தரப்பினர்கள் ஒவ்வொருவரும் திருமண அதிகாரி மற்றும் மூன்று சாட்சிகளின் முன்னிலையில், தரப்பினர்கள் அறியும் எந்த மொழியிலும், **'நான், உங்களை எனது சட்டப்பூர்வமான மனைவியாக (அல்லது கணவனாக ஏற்றுக் கொள்கிறேன்'** என்று சொல்லும் வரை, அத்திருமணம் முழுமையடையாது மற்றும் அத்தரப்பினர்களை கட்டுப்படுத்துவதாகவும் ஆகாது. (பிரிவு 12).

திருமணச் சான்றிதழ் (Certificate of Marriage):

(1) திருமணம் நடத்தி வைக்கப்படுகையில், அதன் சான்றிதழ் ஒன்றை திருமண அதிகாரி, அதற்கென பராமரிக்கப்பட்டு வரும் திருமண சான்றிதழ் புத்தகத்தில் (Marriage Certificate Book) பதிவு செய்தல் வேண்டும் மற்றும் அச்சான்றிதழ் திருமணத் தரப்பினர்களாலும், மூன்று சாட்சிகளாலும் கையொப்பமிடப்பட வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ், சாட்சிகளின் கையொப்பம் குறித்த அனைத்து சம்பிரதாயங்களும் பின்பற்றப்பட்டு திருமணம் நடந்துள்ளது எனும் சங்கதிக்கு, மேற்படி சான்றிதழே, அறுதியான சாட்சியமாக கருதப்படுதல் வேண்டும். (பிரிவு 13)

3. Mention the provisions of the Special Marriage Act for registration of marriages in other form. (மற்ற முறைகளில் நடத்தப் பட்ட திருமணங்களைப் பதிவு செய்ய சிறப்புத் திருமணச் சட்டத்திலுள்ள வாசகங்களைக் குறிப்பிடுக.)

(அல்லது)

What are the conditions to be satisfied for the registration of marriage under the Special Marriage Act, 1954? Describe the significance of such registration under that Act. (1954–ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டப்படி திருமணங்களை செல்லத்தக்க வாறு பதிவு செய்வதற்கான நிபந்தனைகள் யாவை? அச்சட்டத்தின் கீழ் திருமணங்களை அவ்வாறு பதிவு செய்வதன் முக்கியத்துவத்தை விளக்குக.)

முன்னுரை:

1954–ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் மூன்றாவது அத்தியாயம் வேறு முறைகளில் நடத்தப்பட்ட திருமணங்களைப் (அதாவது இச் சட்டத்தின்படி நடத்தி வைக்கப்படாத திருமணங்களைப்) பதிவு செய்தல் குறித்த வகைமுறைகள் குறித்து கூறுகிறது. அவற்றைப் பின்வருமாறு காண்போமா?

மற்ற முறைகளில் நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களைப் பதிவு செய்தல் - பிரிவு 15:

பிரிவு 15–ன்படி, 1872–ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் கீழ் நடத்தி வைக்கப்பட்ட திருமணமொன்றைத் தவிர, இச்சட்டம் தொடங்கியதற்கு முன்னர் அல்லது பின்னர் நடந்த திருமணம் எதுவும், இச்சட்டம் அளாவுகிற நிலப்பரப்புகளில் உள்ள திருமண அதிகாரி ஒருவரால் பதிவு செய்து கொள்ளப்படலாம். ஆனால் அதற்குப் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். அவை,–

(a) அத்தரப்பினர்களிடையே திருமணச் சடங்கு ஒன்று நடைபெற்று, அதிலிருந்து அவர்கள் கணவன், மனைவியாக சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்;

(b) பதிவு செய்யப்படும் காலத்தில் அவர்களில் எவருக்கும் உயிரோடுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட கணவன் அல்லது மனைவி இருத்தல் கூடாது,

(c) பதிவு செய்யப்படும் காலத்தில் அவர்களில் எவரும் மூடராகவோ அல்லது மனநோயாளியாகவோ இருக்கக் கூடாது,

(d) பதிவு செய்யப்படும் காலத்தில் அவர்கள் இருபத்தொரு வயது நிறைவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

(e) அவர்கள் தடுக்கப்பட்ட உறவு முறைக்குட்பட்டவர்களாக இருக்கக் கூடாது.

எனினும், இச்சட்டம் தொடங்கியதற்கு முன்னர் நடந்த திருமணம் ஒன்றைக் குறித்த நேர்வில், மேற்படி (e) உட்கூறில் கண்ட நிபந்தனையானது, அவ்விரு தரப்பினர்களுக்கிடையிலான திருமணத்தை அனுமதிப்பதும், மற்றும் அத் தரப்பினர்களில் ஒவ்வொருவரையும் வழி நடத்திச் செல்வதுமான சட்டம், வழக்கம் அல்லது சட்டத்தின் வலிவுள்ள வழக்காறு எதற்கும் உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(f) அவர்கள் திருமணத்தைப் பதிவு செய்து கொள்வதற்காக ஒரு திருமண அலுவலரிடம் விண்ணப்பம் செய்து கொள்ளும் தேதிக்கு உடன் முன்னால் முப்பது நாட்களுக்கு குறையாததொரு காலத்துக்கு அந்தத் திருமண அலுவலரின் மாவட்டத்துக்குள் வசித்து வருபவர்களாக இருக்க வேண்டும்.

பதிவு செய்வதற்கான நடைமுறை (Procedure for Registration) - பிரிவு 16:

பிரிவு 16-ன்படி, தங்கள் திருமணத்தை மேற்கண்டவாறு பதிவு செய்ய வேண்டுமென திருமணத் தரப்பினர்கள் இருவரும் கையொப்பமிட்டு கொடுக்கும் விண்ணப்பத்தைப் பெற்றதன் பேரில், அது குறித்து பொது அறிவிப்பு கொடுக்க வேண்டும். மேலும் ஆட்சேபணைகளுக்கென முப்பது தினங்களுக்கான ஒரு காலகட்டத்தை அனுமதித்த பிறகும், அந்தக் காலகட்டத்திற்குள் பெறப்பட்ட ஆட்சேபணை எதனையும் கேட்டறிந்த பிறகும், பிரிவு 15-ல் கூறப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று திருமண அதிகாரி மனநிறைவடைந்தால், அவர் அத்திருமணத்தின் சான்றிதழ் ஒன்றை இச்சட்டத்தின் அய்ந்தாவது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி, திருமண சான்றிதழ் புத்தகத்தில் பதிவு செய்தல் வேண்டும். மேலும் அத்தகு சான்றிதழில் அத்திருமணத் தரப்பினர்களும், மூன்று சாட்சிகளும் கையொப்பமிட வேண்டும்.

பிரிவு 16-ன் கீழான உத்தரவுகளிலிருந்து மேல்முறையீடுகள் (Appeals from orders under Section 16) - பிரிவு 17:

பிரிவு 17-ன்படி, ஒரு திருமணத்தை மேற்கண்டவாறு பதிவு செய்ய மறுத்து திருமண அதிகாரி எவரும் பிறப்பித்த உத்தரவினால் பாதிக்கப்பட்ட எவரொருவரும், அந்த உத்தரவுத் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் மாவட்ட நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம். இங்கு அத்திருமண அதிகாரியின் அலுவலகம், அம்மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்குப்பட்ட வட்டார எல்லைகளுக்குள் வருவதாக இருக்க வேண்டும். இந்த மேல்முறையீட்டில்

மாவட்ட நீதிமன்றம் வழங்கும் முடிவே இறுதியானதாகும். அம்முடிவிற்கேற்ப மேற்படி விண்ணப்பத்தைப் பெற்ற திருமண அதிகாரி செயல்படுதல் வேண்டும்.

பதிவு செய்தலினால் ஏற்படும் விளைவு (அல்லது) பதிவு செய்தலின் முக்கியத்துவம் - பிரிவு 18:

பிரிவு 18–ன்படி, பிரிவு 24(2)–ல் அடங்கியுள்ள வகைமுறைகளுக்குட்பட்டு, திருமணச் சான்றிதழ் ஒன்று மேற்கண்ட பதிவு நடைமுறையின்படி, இறுதியாக திருமண சான்றிதழ் புத்தகத்தில் பதிவு செய்யப்படுமிடத்து, அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து, அத்திருமணம் இச்சட்டத்தின் கீழ் நடத்தி வைக்கப்பட்ட ஒரு திருமணமாக கருதப்படுதல் வேண்டும்; மேலும் அத்தரப்பினர்கள் செய்து கொண்ட திருமணச் சடங்கிற்குப் பிறகு பிறந்த அனைத்துக் குழந்தைகளும் (அவர்களது பெயர்களும் திருமணச் சான்றிதழ் புத்தகத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்), அனைத்து விதத்திலும் அவர்களது பெற்றோர்களுக்கு முறைமணத்தின் வாயிலாகப் பிறந்த குழந்தைகளாக மற்றும் அவ்வாறு எப்பொழுதும் இருந்திருக்கும் குழந்தைகளாக கருதப்படுதல் வேண்டும்.

4. Explain and distinguish between void and voidable marriages under the Special Marriage Act. What are the matrimonial reliefs available under this Act ? (சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணங்களை விளக்கி, வேறுபடுத்திக் காட்டுக. இச்சட்டத்தின் கீழ் என்ன திருமணத் தீர்வுகள் கிடைக்கின்றன?)

(அல்லது)

(a) Discuss the provisions of the Special Marriage Act relating to legitimacy of a child of void and voidable marriage.

(b) Enumerate the different kinds of matrimonial reliefs available under this Special Marriage Act.

(அ) இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணங்கள் மூலம் பிறந்த குழந்தையின் முறைமணப் பிறப்பு குறித்து சிறப்புத் திருமணச் சட்டத்தின் வகைமுறைகளை ஆராய்க.

(ஆ) சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய பல்வேறு வகையான திருமணத் தீர்வுகளை பற்றி விவரிக்க.

இல்லாநிலைத் திருமணங்கள் (Void Marriages):

1954–ன் சிறப்பு திருமணச் சட்டத்தின் 24–வது பிரிவு இல்லாநிலைத் திருமணங்களை (Void Marriages) பற்றி விளக்குகிறது. அதன்படி,

(1) இச்சட்டத்தின் கீழ் நடத்தி வைக்கப்பட்ட திருமணம் எதுவும்,

(i) 4–வது பிரிவின் (a), (b), (c), (d) ஆகிய உட்கூறுகளில் குறிப்பிடப் பட்ட நிபந்தனைகளில் எதையாவது பூர்த்தி செய்யவில்லையென்றால்; அல்லது

(ii) திருமணத்தின் பொழுதும், வழக்கு தொடரும் பொழுதும் எதிர் மனுதாரர் ஆண்மையற்றவராக (impotent) இருந்தால்,

செல்லா மற்றும் இல்லா நிலையதாகிவிடும் (null and void); திருமணத் தரப்பினர்களில் ஒருவர் மற்றொருவருக்கு எதிராகக் கொடுக்கும் மனுவொன்றின் பேரில் அத்திருமணமானது செல்லாநிலை தீர்ப்பாணை (decree of nullity) ஒன்றினால் அவ்வாறு விளம்பப்படலாம்.

(2) இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும், பிரிவு 18–ன் பொருளுக்குட் பட்டு, இச்சட்டத்தின் கீழ் நடத்தி வைக்கப்பட்டதாகக் கருதப்படும் எத்திருமணத் திற்கும் பொருந்தாது. ஆனால் அத்தகு திருமணத்தின் பதிவு எதுவும், 15–வது பிரிவின் (a) முதல் (e) வரையிலான உட்கூறுகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளில் ஏதேனுமொன்றை மீறியதாக இருப்பின், செயல் விளைவற்றதாக விளம்பப்படலாம் (may be declared to of no effect).

எனினும், 17–வது பிரிவின் கீழ் மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கு மிடத்து, எந்த நேர்விலும் அத்தகு விளம்புகை எதுவும் செய்யப்படுதல் ஆகாது மற்றும் மாவட்ட நீதிமன்றத்தின் முடிவே இறுதியானதாகும்.

தவிர்தகு திருமணங்கள் (Voidable Marriages):

1954–ன் சிறப்பு திருமணச் சட்டத்தின் **25–வது பிரிவு** தவிர்தகு திருமணங்களை (Voidable Marriages) பற்றி விளக்குகிறது. அதன்படி,

இச்சட்டத்தின் கீழ் நடத்தி வைக்கப்பட்ட திருமணம் எதுவும்,–

(i) திருமண பந்தத்தை முழுமையாக்குவதற்கு எதிர்மனுதாரர் வேண்டு மென்றே மறுப்பதன் காரணமாக அத்திருமண பந்தம் முழுமையடையவில்லை என்றால்; அல்லது

(ii) எதிர்மனுதாரர் திருமணக் காலத்தில் மனுதாரர் அல்லாத வேறு ஒரு நபரால் கருவுற்றிருந்தால், அல்லது

(iii) திருமணத் தரப்பினர்களில் ஒருவரின் இசைவானது, 1872–ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வலுக்கட்டாயம் அல்லது மோசடியால் பெறப்பட்டிருப்பின், அத்திருமணம்

தவிர்தகு திருமணமாகும்; அது செல்லாநிலைத் தீர்ப்பாணை ஒன்றினால் இரத்து செய்யப்படலாம் (may be annulled by a decree of nullity).

வரம்புரையாக **(ii)–வது உட்கூறில்** குறிப்பிடப்பட்ட நேர்வில், பின்வரும் நிகழ்வுகள் **நிலவுவதாக நீதிமன்றம் மனநிறைவடைந்தாலொழிய, அது மேற்படி தீர்ப்பாணையை பிறப்பித்தல் கூடாது.** அவை,–

(a) மனுதாரர், தான் கூறிய சங்கதிகளை திருமணத்தின் பொழுது அறிந்திருக்கவில்லை என்று;

(b) திருமணம் நடைபெற்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளது என்று; மற்றும்

(c) தீர்ப்பாணையொன்றை பிறப்பிப்பதற்காக காரணங்கள் நிலவுவதாக மனுதாரர் கண்டறிந்ததிலிருந்து, மனுதாரரின் இசைவுடன் மணவாழ்க்கை உடலுறவு நடைபெறவில்லையென்று:

மேலும் வரம்புரையாக **(iii)–வது உட்கூறில்** குறிப்பிடப்பட்ட நேர்வில், பின்வருவன இருந்தால், **நீதிமன்றம் தீர்ப்பாணையொன்றை பிறப்பித்தல் கூடாது.**

(a) அந்த வலுக்கட்டாயம் அற்றுப்போன பிறகு அல்லது அந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, ஓராண்டு காலத்திற்குள் வழக்கு நடவடிக்கை தொடரப்படவில்லையானால்; அல்லது

(b) அந்த வலுக்கட்டாயம் அற்றுப்போன பிறகு அல்லது அந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, மனுதாரர் தனது அல்லது அவளது முழு இசைவுடன், கணவன், மனைவியாக வாழ்ந்திருந்தால்.

இல்லாநிலை மற்றும் தவிர்தகு திருமணம் - வேறுபாடு:

இச்சட்டத்தின்படி நடத்தப்பட்ட திருமணமொன்று, **பிரிவு 24–ல்** கூறப் பட்டுள்ள நிபந்தனைகளின்படி இல்லையெனில், அது தொடக்க முதலே இல்லா நிலையதாகிவிடும். எனவே, அது, அத்திருமணத் தரப்பினர்களிடையே எவ்விதமான விளைவையும் ஏற்படுத்தாது.

இச்சட்டத்தின்படி நடத்தப்பட்ட திருமணமொன்று, **பிரிவு 25–ல்** கூறப் பட்டுள்ள வகைமுறைகளின்படி அமைந்திருந்து, அது மனுதாரருக்கு தெரிய வந்தால், அவர் தனக்கு நடந்த திருமணத்தை, அவர் விரும்பினால், உடனடியாக நீதிமன்றத் தீர்ப்பாணையின் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். அல்லது அவ்வாறு விரும்பாவிட்டால், தனது துணையுடன் தொடர்ந்து வாழ்க்கை நடத்தலாம்.

இல்லாநிலைத் திருமணத்தில் வழக்கு நடவடிக்கை தொடரப்பட எக்கால வரையறையும் இல்லை. ஆனால் தவிர்தகு திருமணத்தில், மனுதாரர் திருமணத்தை தவிர்த்துக் கொள்ள, அப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் எதிர் மனுதாரர் மீது வழக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குழந்தையின் பிறப்பு நிலை (Legitimacy of a Child):

இல்லாநிலைத் திருமணத்தின் **(பிரிவு 24)** மூலமாகவும், தவிர்தகு திருமணத்தின் **(பிரிவு 25)** மூலமாகவும் பிறந்த குழந்தைகள் முறையான திருமணத்தின் அடிப்படையில் பிறந்த, முறைமணப் பிறப்பு குழந்தைகளாகவே (legitimate children) கருதப்படுவார்கள். சட்டப்படி அவர்களுக்கு என்ன உரிமைகள் உள்ளதோ, அவையனைத்தையும் அவர்கள் பெறுவார்கள், என்று **பிரிவு 26** கூறுகிறது.

இச்சட்டத்தின் கீழ்க் கிடைக்கும் திருமணத் தீர்வுகள் (Matrimonial Reliefs available under this Act):

இச்சட்டத்தின் கீழ் கிடைக்கும் திருமணத் தீர்வுகள் வருமாறு. அவை. 1. தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுத்தல் (Restitution of Conjugal Rights) 2. நீதிமுறையில் பிரிந்து போதல் (Judicial Separation) 3. மணமுறிவு (Divorce). சற்று விரிவாக வருமாறு.

1. தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுத்தல் :

தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி **பிரிவு 22** கூறுகிறது. அதன்படி கணவனோ, மனைவியோ நியாயமான காரணமின்றி ஒருவர் மற்றொருவருடைய சேர்க்கையினின்றும் விலகிவிட்டிருந்தால், பாதிக்கப்பட்ட நபர் தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்கும்படி, மாவட்ட நீதிமன்றத்துக்கு மனு மூலமாக விண்ணப்பம் செய்து கொள்ளலாம். அந்த மனுவில் கூறப்பட்டுள்ள செய்திகள் உண்மையானவை என்றும், அந்த விண்ணப்பத்தை ஏன் அனுமதிக்கக் கூடாதென்பதற்குச் சட்டப் படியான காரணம் எதுவுமில்லையென்றும் சந்தேகமறத் தெரிந்து கொண்ட பிறகு, அந்நீதிமன்றம், தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்ப்பாணை பிறப்பிக்கலாம்.

விளக்கம்: திருமணத் தரப்பினர்களில் ஒருவர் மற்றொருவரை விட்டுப் பிரிந்து தனித்து வாழ்வதற்குரிய நியாயமான காரணம் ஏதுமிருப்பின், அதனை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு அவ்வாறு பிரிந்து வாழும் அவரையேச் சார்ந்ததாகும்.

2. நீதிமுறையில் பிரிந்து போதல் :

நீதிமுறையில் பிரிந்து போவது பற்றி **பிரிவு 23** கூறுகிறது. அதன்படி

1. கணவனோ, மனைவியோ பின்வரும் காரணங்களில் ஏதேனுமொன்றின் அடிப்படையில் நீதிமுறையில் பிரிந்து போவதற்கு மாவட்ட நீதிமன்றத்திற்கு மனுச் செய்யலாம். அக்காரணங்கள்,–

(a) மணமுறிவிற்கான மனு ஒன்றை சமர்ப்பித்திருக்கக் கூடிய **27–வது பிரிவின் (1)** மற்றும் **(1–A)** உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் ஏதேனுமொன்றின் பேரில்; அல்லது

(b) தாம்பாத்திய உறவு உரிமை மீண்டும் ஏற்படுத்திக் கொடுத்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி நடக்கத் தவறியதன் காரணமாக.

அத்தகைய மனுவில் கண்டுள்ள வாக்குமூலங்கள் உண்மையானவை யென்றும், அந்த விண்ணப்பத்தை ஏன் அனுமதிக்கக் கூடாதென்பதற்குச் சட்டரீதியான காரணம் எதுவுமில்லையென்றும் நீதிமன்றம் மனநிறைவடைதன் பேரில், நீதிமுறையில் பிரிந்து போவதற்கான தீர்ப்பாணையைப் பிறப்பிக்கலாம்.

2. நீதிமுறையில் பிரிந்து போவதற்கான தீர்ப்பாணையொன்றை நீதிமன்றம் பிறப்பிக்குமிடத்து, மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டுமென்ற கடப்பாடு ஏதும் கிடையாது. ஆனால் அத்திருமணத் தரப்பினர்களில் எவரேனும் ஒருவர் செய்யும் மனுவின் பேரிலும், அம்மனுவில் கூறப்பட்டுள்ள வாக்குமூலங்களின் உண்மை குறித்து நீதிமன்றம் மனநிறைவடை தலின் பேரிலும், அவ்வாறு செய்வது நேர்மையென்றும், நியாயமென்றும் நீதிமன்றம் கருதினால், அது அத்தீர்ப்பாணையை இரத்து செய்யலாம்.

3. மணமுறிவு :

மணமுறிவு குறித்து பிரிவு **27** கூறுகிறது. அதன்படி,

1. இச்சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டும், இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டும், கணவனோ, மனைவியோ பின்வரும் காரணங்களில் ஏதேனும் ஒன்றை ஆதாரம் காட்டித் மணமுறிவு கோரும் மனு ஒன்றினை மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம். அவையாவன :

(a) எதிர்மனுதாரர் திருமணம் நடந்த பிறகு, அவனது அல்லது அவளது வாழ்க்கைத் துணையல்லாத வேறொருவருடன் தன்னிச்சையாக உடலுறவு கொண்டுள்ளார்; அல்லது

(b) எதிர்மனுதாரர், அம்மனு கொடுக்கப்படுவதற்கு உடன் முன்னால் தொடர்ச்சியாக குறைந்தது இரண்டு ஆண்களுக்கு மனுதாரரைத் கைவிட்டுச் சென்றுவிட்டார்; அல்லது

(c) எதிர்மனுதாரர் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் விவரிக்கப் பட்டுள்ள குற்றம் ஒன்றிற்காக ஏழு ஆண்டுகளுக்கோ, அதற்கு அதிகமான ஒரு காலத்துக்கோ சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்; அல்லது

(d) எதிர்மனுதாரர், அத்திருமணம் நடந்ததிலிருந்து, மனுதாரரைக் கொடுமைப்படுத்தி வருகிறார், அல்லது

(e) எதிர்மனுதாரர் தீர்க்க முடியாத புத்தி சுவாதீமனற்றவராக (has been incurably of unsound mind) அல்லது தொடர்ந்து அல்லது விட்டுவிட்டு புத்தி பேதலிப்பு (has been suffering continuously or intermittenly from mental disorder) நோய்குட்பட்டவராக இருப்பதால் அவருடன் சேர்ந்து மனுதாரர் குடும்ப வாழ்க்கை நடத்த முடியாத நிலை இருப்பின்; அல்லது

(f) எளிதில் தொற்றிக் கொள்ளத்தக்கப் பால்வினை நோயினால், எதிர்மனுதாரர் பீடிக்கப்பட்டிருக்கிறார்; அல்லது

(g) மனுதாரரின் தொடர்பினால் ஏற்பட்டிருக்காத தொழுநோயினால் எதிர்மனுதாரர் பீடிக்கப்பட்டிருக்கிறார்; அல்லது

(h) எதிர்மனுதாரர் உயிரோடிருந்தால் அதைப்பற்றி, எந்த நபர்கள் இயற்கையாகவே கேள்விப்பட்டிருப்பார்களோ அந்த நபர்கள், அவர் உயிரோடிருப்ப தாக ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரையில் கேள்விப் படவில்லை.

பிரிவு 27 (1–A)–ன்படி ஒரு மனைவியும், தனது கணவனிடமிருந்து பின்வரும் காரணங்களின் அடிப்படையில் மணமுறிவு கோரி மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். அவை,–

(i) திருமணம் நடந்ததிலிருந்து, தனது கணவர் வன்புணர்ச்சி, ஓரினப் புணர்ச்சி அல்லது விலங்குடன் புணர்ச்சி ஆகிய குற்றத்தை செய்து வருகிறார்;

(ii) இந்துத் தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் 18–வது பிரிவின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125–வது பிரிவின் கீழ் தொடரப்பட்ட நடவடிக்கையொன்றில், மனைவிக்கு வாழ்க்கைப்படித் தொகையினை வழங்க வேண்டுமென்று அவளுடைய கணவனுக்கு எதிராக அந்தந்த நேர்விற்கேற்ப தீர்ப்பாணை அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்து, அவள் கணவனைப் பிரிந்து தனித்து வாழ்ந்து வந்திருந்தாலும் மற்றும் அதற்குப் பின் ஓராண்டும் அதற்கு மேலும் தரப்பினர்கள் சேர்ந்து வாழத் தொடங்கிவில்லையென்றால்.

2. இச்சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, 1970–ஆம் ஆண்டின் சிறப்புத் திருமண (திருத்தச்) சட்டம் தொடங்குவதற்கு முன்னர் அல்லது பின்னர் நடந்த திருமணத்தின் தரப்பினர் களில் எவரேனும் ஒருவர், பின்வரும் காரணங்களின் அடிப்படையில் மணமுறிவு கோரி மாவட்ட நீதிமன்றத்திடம் மனுச் செய்யலாம். அவை,–

(i) நீதிமுறையில் பிரிந்து போவதற்கு தீர்ப்பாணை வழங்கப்பட்டிருந்து (Decree for judicial separation), அத்தீர்ப்பாணைக்குப் பின்னர் ஓராண்டு அல்லது அதற்கும் மேலான காலகட்டத்திற்கு அத்திருமணத் தரப்பினர்கள் மீண்டும் சேர்ந்து வாழத் தொடங்கவில்லையானால், அல்லது

(ii) தாம்பத்திய உறவு உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான தீர்ப்பாணை வழங்கப்பட்டிருந்து (Decree for restitution of conjugal rights), அத்தீர்ப்பாணைக்கு பின்னர் ஓராண்டு அல்லது அதற்கும் மேலான காலகட்டத்திற்கு அத்திருமணத் தரப்பினர்களுக்கிடையே (தம்பதிகள்) தாம்பத்திய உறவு உரிமைகள் மீண்டும் ஏற்படவில்லையானால், மணமுறிவு கோரலாம்.

4. தரப்பினர்களின் இசைவின் பேரில் மணமுறிவு (Mutual Consent):

இது குறித்து **பிரிவு 28** கூறுகிறது. அதன்படி இச்சட்டத்தின் வகை முறைகளுக்கும், அதன் கீழான விதிகளுக்கும் உட்பட்டு கணவனும் மனைவியும் ஒன்றாக இணைந்து, தாங்கள் ஓராண்டு காலத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்டுத் தனியாகப் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், தாங்கள் இருவரும் கூடி வாழ முடியவில்லையென்றும், திருமணம் கலைக்கப்பட்டு விட வேண்டுமென்று தாங்கள் இருவரும் இசைந்திருப்பதாகவும் காரணம் காட்டி, திருமண முறிவுக்கான மனு ஒன்றினை மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம்.

5. State the grounds for divorce available under the Special Marriage Act. (சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி மணமுறிவிற்கான காரணங்களை எடுத்துக் கூறுக.)

(முந்தய வினாவின் விடையில் 'மணமுறிவு' எனும் தலைப்பின் கீழ் உள்ளவற்றை படித்தறிக.)

6. Discuss the important changes brought about by the Special Act,1954 regarding solemnisation of marriage and their dissolution. (திருமணம் செய்தல், திருமண முறிவு சம்பந்தமாக சிறப்பு திருமணச் சட்டம், 1954 கொண்டு வந்த முக்கியமான மாற்றங்களை விவாதிக்க.)

(முந்தய வினாக்களின் விடைகளில் பொருத்தமான பகுதிகளில் காண்க.)

-o0o-

2 இந்தியக் கிறுத்தவ திருமணச் சட்டம், 1872 [The Indian Christian Marriage Act, 1872]

அறிமுகம்

இச்சட்டம் 1872–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பழமையான சட்டமாகும். இச்சட்டத்தில் மொத்தம் 88 சட்டப் பிரிவுகளும், அய்ந்து அட்டவணைகளும், பின்னிணைப்பு ஒன்றும் உள்ளன. மேற்கண்ட 88 சட்டப்பிரிவுகள் மொத்தம் எட்டு பகுதிகளின் கீழ் தொகுக்கப் பெற்றுள்ளன.

இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு, கிறுத்தவ மதத்தைப் பின்பற்றும் நபர்களின் திருமணத்தை இந்தியாவில் நடத்தி வைப்பது தொடர்பான சட்டமானது, ஆங்கிலப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட இரண்டு சட்டங்களின் வழியாகவும், இந்தியப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட மூன்று சட்டங்களின் வழியாகவும் நெறிமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையைக் களைந்து, அச்சட்டங்களைத் திருத்தி, அவற்றை ஒரே சட்டத்தின் கீழ் தொகுக்கும் பொருட்டு, 1872–ஆம் ஆண்டில் இயற்றப் பட்டதே மேற்படி கிறுத்தவ திருமணச் சட்டமாகும்.

இதைத்தான் இச்சட்டத்தின் முகப்புரையும் (Preamble) பின்வருமாறு எடுத்துரைக் கிறது. அதாவது, "கிறுத்தவர்களின் திருமணங்களை இந்தியாவில் நடத்தி வைப்பது தொடர்பான சட்டத்தைத் தொகுக்கவும் திருத்தவும் இயற்றப்பட்ட ஒரு சட்டம்" என்று கூறுகிறது.

இச்சட்டம், 1956–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் முதல் நாளுக்கு உடன் முன்னதாக திருவிதாங்கூர்–கொச்சின், மணிப்பூர் மற்றும் சம்மு–காஷ்மீர் மாநிலங்களில் உள்ளடங்கிவிட்ட நிலப்பரப்புகள் தவிர, இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கிறது.

1. Explain the essential requirements and formalities of a christian marriage. (ஒரு கிறுத்தவ திருமணத்தின் இன்றியமையாத் தேவைகள் மற்றும் நடைமுறைகளை விளக்குக.)

கிறுத்தவ திருமணம்:

திருமணத் தரப்பினர்களில் ஒருவர் அல்லது அந்த இருவரும் கிறுத்தவர்களாக இருக்கும்பட்சத்தில், அவர்களுக்கிடையிலான திருமணம் இச்சட்டத்தில் கண்டுள்ள வகைமுறைகளின்படி நடத்தி வைக்கப்படுதல் வேண்டும். அவ்வகைமுறைகளின்படியல்லாமல், வேறுவிதமாக நடத்தி வைக்கப்பட்ட அத்தகு திருமணம் எதுவும், இல்லாநிலையதாகும். **(பிரிவு 4)**

யாரால் திருமணம் நடத்தி வைக்கப்படலாம் ?

இந்தியாவில் நடத்தப்படும் திருமணம், **பிரிவு 5–ன்படி** பின்வருபவர் களால் நடத்தி வைக்கப்படலாம். அவர்கள்,–

(1) திருச்சபை ஆட்சிக்குரிய ஆணையைப் (episcopal ordination) பெற்ற எவராலும், அவர் அமைச்சராக உள்ள கிறுத்தவ தேவாலயத்தின் விதிகள், சம்பிரதாயங்கள், சடங்குகள் மற்றும் வழக்கங்களின்படி திருமணம் நடத்தி வைக்கப்படலாம்;

(2) ஸ்காட்லாந்து தேவாலயத்தின் சமயகுரு (Clergyman of the Church of Scotland) எவராலும், அத்தேவாலயத்தின் விதிகள், சம்பிரதாயங்கள், சடங்குகள் மற்றும் வழக்கங்களின்படி திருமணம் நடத்தி வைக்கப்படலாம்;

(3) இச்சட்டத்தின் கீழ் திருமணங்களை நடத்தி வைப்பதற்குரிய உரிமம் வழங்கப்பட்டுள்ள மத அமைச்சர் (Minister of Religion) எவராலும், திருமணம் நடத்தி வைக்கப்படலாம்.

(4) இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள திருமணப் பதிவாளரால் (Marriage Registrar) அல்லது அவரது முன்னிலையில் திருமணம் நடத்தி வைக்கப்படலாம்.

(5) இந்தியக் கிறுத்தவர்களுக்கிடையிலான திருமணத்திற்கு சான்றிதழ் வழங்க உரிமம் அளிக்கப்பட்டுள்ள எந்நபராலும், திருமணம் நடத்தி வைக்கப்படலாம்.

திருமணத்தை நடத்தி வைப்பதற்கான நேரம்:

இச்சட்டத்தின் கீழான திருமணம் ஒவ்வொன்றும், காலை ஆறு மணிக்கும் மாலை ஏழு மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடத்தி வைக்கப்படுதல் வேண்டும். **(பிரிவு 10).** (மேற்கண்டதைத் தொடர்ந்து, வினா எண்கள். 2, 3 மற்றும் 4–ன் விடைகளை சுருக்கமாகச் சுட்டிக்காட்டுக)

2. How are the Marriages solemnized by Ministers of Religion under Christian Marriage Act? (கிறுத்துவ திருமணச் சட்டத்தின் கீழ், மத அமைச்சரால் திருமணங்கள் எவ்வாறு நடத்தப்படுகிறது?)

(அல்லது)

State the condition for a valid Christian Marriage. How are the marriages solemnised by Minister of Religion under Christian Marriage Act. (செல்லத்தக்க ஒரு கிறுத்தவ திருமணத்தின் ஆக்கக் கூறுகளை எடுத்துக் கூறுக. கிறுத்தவ திருமணச் சட்டத்தின் கீழ் மத அமைச்சரால் திருமணங்கள் எவ்வாறு நடத்தப்படுகிறது?)

முன்னுரை:

இந்தியக் கிறுத்தவ திருமணச் சட்டத்தின்படி எவ்வாறு மத அமைச்சர்களால் திருமணம் நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து மேற்படி சட்டத்தின் மூன்றாவது பகுதியின் கீழ் வரும் 12 முதல் 26 வரையுள்ள சட்டப் பிரிவுகள் விளக்குகின்றன. அவற்றைப் பின்வருமாறு காண்போமா?

உத்தேசிக்கப்பட்ட திருமணத்தின் அறிவிப்பு - பிரிவு 12:

இச்சட்டத்தின் கீழ் திருமணங்களை நடத்தி வைக்க உரிமம் வழங்கப் பெற்ற மத அமைச்சர் ஒருவரினால், திருமணமொன்று நடத்தி வைக்கப்பட வேண்டுமென உத்தேசிக்கப்படும் பொழுது,

உத்தேசிக்கப்பட்ட திருமணத்தின் தரப்பினர்களில் ஒரு நபர், தான் திருமணம் செய்து கொள்ள விழைவதாக, மத அமைச்சருக்கு பின்வரும் விவரங்கள் அடங்கிய எழுத்து மூலமான அறிவிப்பினை, தகுந்த படிவத்தின் மூலம் கொடுக்க வேண்டும்.

(a) திருமணம் செய்து கொள்ள உத்தேசிக்கும் நபர்கள் ஒவ்வொருவரின் பெயர் மற்றும் குடும்பப் பெயர் (surname) மற்றும் தொழில் அல்லது நிலை;

(b) அவர்கள் ஒவ்வொருவரின் வசிப்பிடம்;

(c) அவ்வசிப்பிடத்தில் அவர்கள் வசித்த காலம்;

(d) திருமணம் நடத்தி வைக்கப்படவுள்ள கிறுத்தவ தேவாலயம் அல்லது தனி வசிப்பிடம் (private dwelling). **(பிரிவு 12).**

அத்தகு அறிவிப்பின் வெளியிடுகை - பிரிவு 13:

முன்கண்ட விபரங்கள் அடங்கிய அறிவிப்பினை மத அமைச்சர் பெற்றவுடன், அதனை திருமணம் நடத்தி வைக்கப்படவிருக்கும் கிறுத்தவ தேவாலயத்தில் அனைவரும் பார்க்கும்படியான இடத்தில் ஒட்டி வைக்க வேண்டும். **(பிரிவு 13).**

தனி வசிப்பிடத்தில் நடக்கவிருக்கும் திருமணத்தின் அறிவிப்பு :

தனி வசிப்பிடமொன்றில் திருமணம் நடத்தப்பட உத்தேசிக்கப்படுகிறது என்றால், பிரிவு 12–ன் கீழான அறிவிப்பை மத அமைச்சர் பெற்றவுடன், அதனை மாவட்ட திருமணப் பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவர் அதை தன் அலுவலகத்தில் அனைவரும் பார்க்கும்படியான இடத்தில் ஒட்டி வைக்க வேண்டும் **(பிரிவு 14).**

இதர வகைமுறைகள்:

திருமணத் தரப்பினர்களில் ஒருவர் உரிமை வயது அடையாதவராக இருந்தால், மத அமைச்சர் அவ்வறிவிப்பின் ஒரு நகலை அம்மாவட்ட திருமணப் பதிவாளருக்கு தபாலிலோ அல்லது வேறு வகையிலோ அனுப்பவேண்டும். அம்மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணப் பதிவாளர்கள் இருப்பின் அவர்களில் மூத்த திருமணப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். **(பிரிவு 15).**

திருமணப் பதிவாளர் அல்லது மூத்த திருமணப் பதிவாளர், அவ்வாறு கிடைக்கப் பெற்ற அறிவிப்பினை தமது அலுவலகத்தில் அனைவரும் பார்க்கக் கூடிய இடத்தில் ஒட்டி வைக்க வேண்டும் **(பிரிவு 16).**

அத்தகு திருமணத்தை நடத்த இசைவளிக்கும் அல்லது நடத்தி வைக்க உத்தேசிக்கும் மத அமைச்சர் எவரும், அறிவிப்பு கிடைக்கப் பெற்ற நான்கு நாட்களுக்குப் பின்னர், விண்ணப்பம் செய்தவரின் வேண்டுகோளின்படி, ஒரு சான்றிதழை (certificate) தம் கைப்பட வழங்குதல் வேண்டும்

அத்தகைய சான்றிதழ் ஏன் வழங்கப்படக் கூடாது என்பதற்கு சட்ட முறையான தடை எதுவும் இருப்பதாக மத அமைச்சர் மனநிறைவடையும் வகையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கக் கூடாது. **(பிரிவு 17)**

சான்றிதழ் கொடுக்கப்படும் முன்னர், திருமணத் தரப்பினர்களில் ஒருவர் மத அமைச்சரின் முன் ஆஜராகி, தங்களுக்குள் திருமணம் செய்து கொள்ள எந்த சட்டபூர்வமான தடையும் இல்லையென்றும், அத்திருமணத்திற்கு சட்டமுறைப் படியான தங்கள் இசைவு பெறப்பட்டுள்ளது என்றும் விளம்புதல் (declaration) வேண்டும். **(பிரிவு 18)**

உரிமை வயதை அடையாமல் இருக்கும் ஒரு நபர் திருமணம் செய்து கொள்வதற்குரிய இசைவினை, அவருடைய தந்தை அல்லது தந்தை இறந்து விட்டிருப்பின் அவரது சட்டப்படியான காப்பாளர், அல்லது அவ்வாறு பாதுகாவலர் எவரும் இல்லாவிட்டால், அவரது தாய் அளிக்கலாம். அத்தகைய இசைவினைக் கொடுக்கக் கூடிய நபர் எவரும் இந்தியாவில் குடியிருக்கவில்லை எனும் நிலை

தவிர, மற்ற நிலைகளில் அந்தத் திருமணத்துக்கு அத்தகைய இசைவு பெறப்பட வேண்டும் (பிரிவு 19).

மேற்கண்ட பிரிவின்படி திருமணத்திற்கு இசைவு அளிக்கக்கூடிய நபர்கள், மத அமைச்சர் எவராலும் சான்றிதழ் அளிக்கப்படுவதை, அச்சான்றிதழ் அளிக்கப்படுவதற்கு முன்னர் எந்த நேரத்திலும், அந்த மத அமைச்சருக்கு எழுத்து மூலமாக அறிவிப்பு செய்வதன் வாயிலாக, அவ்வாறு சான்றிதழ் அளிப்பதை நிறுத்தி வைக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர் (பிரிவு 20)

இத்தகு அறிவிப்பினை கிடைக்கப்பெற்ற மத அமைச்சர், அவ்வாறு சான்றிதழ் அளிப்பதை நிறுத்தி வைக்க வேண்டும். திருமணத் தரப்பினர்களுக்கு சான்றிதழ் அளிப்பதை தடை செய்வது குறித்து அவர் விசாரிக்க வேண்டும். மற்றும் அத்திருமணத்தை தடை செய்வதற்கு, அறிவிப்பு அனுப்பிய அந்நபருக்கு எந்த சட்டப்படியான அதிகாரமும் இல்லை எனத் திருப்தி அடைய வேண்டும் அல்லது அவ்வறிவிப்பு கொடுத்தவர் அதனைப் பின்வலித்துக் கொள்ள வேண்டும். அதுவரையில் அத்திருமணத்தை நடத்தி வைத்தல் கூடாது. (பிரிவு 21).

திருமணம் செய்து கொள்ள உத்தேசிக்கும் தரப்பினர்களில் ஒருவர், உரிமை வயது அடையாதவராக இருக்கும் பட்சத்தில், பிரிவு 19–ன்படி இசைவு பெறப்பட்டிருக்கிறது என்பது குறித்து மத அமைச்சர் மனநிறைவடையவில்லை என்றால், அறிவிப்பு கிடைக்கப் பெற்ற பிறகு 14 நாட்கள் முடிவடையும் வரை, அத்தகு சான்றிதழை மத அமைச்சர் அளித்தல் கூடாது. (பிரிவு 22)

இந்தியக் கிறுத்தவர்களுக்கு சான்றிதழ் அளிப்பதைப் பற்றி பிரிவு 23 விளக்குகிறது.

மத அமைச்சரால் அளிக்கப்படும் சான்றிதழ், இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் உள்ளடங்கியுள்ள படிவத்தின்படி அல்லது அதையொத்தபடி உள்ள படிவத்தின்படி இருத்தல் வேண்டும். (பிரிவு 24).

திருமணத்தினை நடத்தி வைத்தல் (Solemnization of Marriage):

மத அமைச்சரால் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், அவர், தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு முறை அல்லது சடங்கின்படி, அத்திருமணத் தரப்பினர்களிடையிலான திருமணத்தை நடத்தி வைக்கலாம். அத்திருமணம் மத அமைச்சர் தவிர, குறைந்தபட்சம் இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் நடத்தி வைக்கப்பட வேண்டும். (பிரிவு 25)

மத அமைச்சரால் மேற்படி சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், அச்சான்றிதழ் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் திருமணம் நடத்தப்பட வில்லையானால், அச்சான்றிதழும், அதன் பேரிலான நடவடிக்கைகள் ஏதும் இருப்பின் அதுவும், இல்லாநிலையாதாகும். மீண்டும் புதிதாக அறிவிப்புக்

கொடுத்து, அதன் பேரில் சான்றிதழ் வழங்கப்படும் வரை எவரும் அத்திருமணத்தை நடத்தி வைத்தல் கூடாது. (பிரிவு 26).

3. How are the marriage solemnised by or before the Registrar of Marriages as per Christian Marriage Act? (திருமணப் பதிவாளரால் அல்லது அவர் முன்னிலையில் கிறிஸ்துவ திருமணச் சட்டத்தின் படி திருமணங்கள் எவ்வாறு நடத்தப்படுகிறது?)

முன்னுரை:

இந்தியக் கிறுத்தவ திருமணச் சட்டத்தின்படி எவ்வாறு திருமணப் பதிவாளரால் அல்லது அவரது முன்னிலையில் திருமணம் நடத்தி வைக்கப்பட வேண்டும் என்பது குறித்து மேற்படி சட்டத்தின் அய்ந்தாவது பகுதியின் கீழ் வரும் 38 முதல் 59 வரையுள்ள சட்டப் பிரிவுகள் விளக்குகின்றன. அவற்றைப் பின்வருமாறு காண்போமா?

திருமணப் பதிவாளர் முன்னிலையில் செய்ய உத்தேசிக் கப்படும் திருமணத்தின் அறிவிப்பு - பிரிவு 38:

ஒரு திருமணம் திருமணப் பதிவாளரால் அல்லது அவரது முன்னிலையில் நடத்தப்பட வேண்டும் என்று உத்தேசிக்கப்படும் பொழுது, அத்திருமணத் தரப்பினர்களில் ஒருவர், அத்தகு திருமணம் குறித்த எழுத்து மூலமான அறிவிப்பு ஒன்றை அத்தரப்பினர்கள் வசிக்கும் மாவட்டத்தின் திருமணப் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும், அல்லது அத்தரப்பினர்கள் வெவ்வேறு மாவட்டங்களில் வசித்து வந்தால், அந்த அறிவிப்பை அந்த மாவட்டம் ஒவ்வொன்றிலும் உள்ள திருமணப் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும்.

அவ்வறிவிப்பில் திருமணம் செய்து கொள்ள உத்தேசிக்கும் தரப்பினர் களின் பெயர் மற்றும் குடும்பப் பெயர், மற்றும் தொழில் அல்லது நிலை, அவர்களின் வசிப்பிடம், அவர்கள் அங்கு வசித்து வரும் காலம், திருமணம் நடத்தப்படவேண்டிய இடம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட இடத்தில், திருமணத் தரப்பாளர்களில் எவரேனும் ஒருவர், ஒரு மாதம் அல்லது அதற்கு மேலும் வசித்திருந்தால், அவன் அல்லது அவள் அங்கு ஒரு மாதமும், அதற்கு மேலும் வசித்திருப்பதாக, அறிவிப்பில் குறிப்பிடப்பட வேண்டும். (பிரிவு 38).

அறிவிப்பின் வெளியிடுகை - பிரிவு 39:

அத்தகு அறிவிப்பு கிடைக்கப் பெற்ற திருமணப் பதிவாளர் ஒவ்வொருவரும் அதன் நகலை தன்னுடைய அலுவலகத்தில் அனைவரும் பார்க்கும்படியான இடத்தில் ஒட்டி வைக்க வேண்டும்.

திருமணத் தரப்பினரில் யாரேனும் ஒருவர் உரிமை வயது அடையாதவராக இருப்பின், அத்தகு அறிவிப்பு கிடைக்கப் பெற்ற 24 மணி நேரத்திற்குள் திருமணப் பதிவாளர் ஒவ்வொருவரும், அதன் நகலினை அதே மாவட்டத்தில் உள்ள மற்ற திருமணப் பதிவாளர்களுக்கும் அனுப்ப வேண்டும். அவர்கள் அவ்வறிவிப்பின் நகலினை தங்கள் அலுவலகத்தில் அனைவரும் பார்க்கும் படியான இடத்தில் அதேபோல் ஒட்டி வைக்க வேண்டும் **(பிரிவு 39).**

திருமணப் பதிவாளர் அத்தகு அறிவிப்புகளைத் தொகுத்து தன் அலுவலக பதிவேடுகளுடன் வைத்திருக்கவேண்டும். மற்றும் மாநில அரசாங்கத்தினால் தமக்கு வழங்கப்பட்ட **"திருமண அறிவிப்பு புத்தகம்" (Marriage Notice Book)** எனும் புத்தகத்தில் அந்த அறிவிப்புகளின் உண்மை நகலினை திருமணப் பதிவாளர் பதிக்க வேண்டும். இந்த திருமண அறிவிப்பு புத்தகம் நியாயமான எல்லா காலத்திலும் எவ்வித கட்டணமுமின்றி, விருப்பப்படும் யாராலும் பார்க்கப்பட திறந்திருக்கப்பட வேண்டும் **(பிரிவு 40).**

அறிவிப்பின் சான்றிதழை அளித்தல் மற்றும் உறுதி மொழி செய்தல் - பிரிவு 41 :

அறிவிப்பு யாரால் கொடுக்கப்பட்டதோ, அத்தரப்பினர், இதற்குப் பின்வரும் பிரிவுகளில் கண்டவாறான சான்றிதழை வழங்கும்படி திருமணப் பதிவாளரைக் கோரினால், மற்றும் உத்தேசிக்கப்பட்ட திருமணத்தின் தரப்பினர்களில் ஒருவர் இதற்குப் பின்வரும் பிரிவுகளின்படி கோரப்பட்ட உறுதி மொழியைச் செய்தால், அத்தகு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அத்தகு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது என்றும் திருமணப் பதிவாளர் தம் கைப்பட சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும். **(பிரிவு 41).**

சான்றிதழ் வழங்கப்படும் முன் உறுதிமொழி - பிரிவு 42:

உத்தேசிக்கப்படும் திருமணத்தின் தரப்பினர்களில் ஒருவர், திருமணப் பதிவாளர் முன் நேர்முகமாக ஆஜராகி உறுதிமொழி அளிக்கும் வரை **பிரிவு 41-ன்படி** சான்றிதழ் வழங்கப்படுதல் கூடாது. அவ்வுறுதிமொழி பின்வருமாறு செய்யப்பட வேண்டும்.

(a) திருமணம் செய்து கொள்ள குருதித் தொடர்பு அல்லது கொள்ளுறவு அல்லது எவ்விதமான சட்டபூர்வமான தடைகளும் இல்லையென்று அவன் அல்லது அவள் நம்புகிறதாக உறுதிமொழி அளிக்க வேண்டும், மற்றும்

(b) இருவரும் அல்லது அவர்களில் உறுதிமொழி கூறுபவர், அவனுடைய அல்லது அவளுடைய வழக்கமான வசிப்பிடம் அந்த திருமணப் பதிவாளரின் மாவட்டத்தில் இருப்பதாக உறுதிமொழி அளிக்க வேண்டும்.

மற்றும் அவர்களில் ஒருவர் அல்லது இருவரும் உரிமை வயதை

அடையாதவராக இருக்கும் பட்சத்தில்.

(c) சட்டப்படி இசைவு பெறப்பட்டுள்ளது என்றும் அல்லது இந்தியாவில் வசிக்கும் எந்நபரும் அத்தகு இசைவினைக் கொடுக்க அதிகாரம் வழங்கப் படவில்லை என்றும் உறுதிமொழி அளிக்க வேண்டும்.

பதினான்கு தினத்திற்குள் சான்றிதழ் வழங்க உத்திரவிடுமாறு உயர் நீதிமன்றத்திற்கு மனுச் செய்தல் குறித்து பிரிவு 43 விளக்குகிறது.

தந்தை அல்லது காப்பாளரின் இசைவு - பிரிவு 44:

திருமணத் தரப்பினரில் எவரேனும் ஒருவர் உரிமை வயதினை அடையாதவராக இருக்கும்பொழுது, இச்சட்டத்தின் 19–வது பிரிவு பொருந்தும்.

அத்தகு திருமணத்திற்கு இசைவு அளிக்கத் தேவைப்படும் எவரும், சான்றிதழ் வழங்கப்படும் முன்னர், எழுத்து மூலமாகத் தமது மறுப்பினைத் தெரிவித்தால், அம்மறுப்பு திருமண அறிவிப்பு புத்தகத்தில் பதிக்கப்படும். அவ்வாறான மறுப்பு பதிவு செய்யப்பட்ட பிறகு, அதைப் பற்றி அந்தத் திருமணப் பதிவாளர் ஆராய்ந்து, அத்தகைய மறுப்பு அத்திருமணத்திற்கான சான்றிதழினை வழங்குவதற்கு தடையாக இல்லை என்று மனநிறைவடையும் வரையில் அல்லது அத்தகைய மறுப்பைத் தெரிவித்தவர் தாமாகவே அதனைத் திரும்ப பெற்றுக் கொள்ளும் வரையில், சான்றிதழ் ஏதும் வழங்குதல் கூடாது. (பிரிவு 44)

மேற்படி திருமணத்திற்கு இசைவு அளிக்க வேண்டிய நபர் பித்து நிலை அடைந்தவராக இருப்பின் அல்லது தமது இசைவை நியாயமற்ற முறையில் நிறுத்தி வைத்திருப்பின், கொல்கத்தா, சென்னை மற்றும் மும்பை ஆகிய நகரங்களில் வசிக்கும் திருமணத் தரப்பினர்கள் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதியிடமும், மேற்படி நகரங்களில் வசிக்காத தரப்பினர்கள் மாவட்ட நீதிபதியிடமும் இது குறித்து மனுச் செய்யலாம். (பிரிவு 45)

திருமணப் பதிவாளர் மேற்கண்ட சான்றிதழை அளிக்க மறுக்கும் பொழுது, திருமணத் தரப்பினர்களில் எவரும், இது குறித்து உயர் நீதிமன்றத்திற்கு மேற்கண்டவாறு மனுச் செய்யலாம். (பிரிவு 46)

பிரிவு 41–ன் கீழ் திருமணப் பதிவாளரால் அளிக்கப்படும் சான்றிதழ், இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் உள்ளடங்கியுள்ள படிவத்தின்படி அல்லது அதையொத்தபடி உள்ள படிவத்தின்படி இருத்தல் வேண்டும். (பிரிவு 50).

சான்றிதழ் அளிக்கப்பட்ட பிறகு, திருமணம் நடத்தி வைக்கப்படல் - பிரிவு 51:

திருமணப் பதிவாளர் சான்றிதழ் அளித்த பிறகு,

அந்தச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட தரப்பினர்களுக்கிடையிலான

திருமணத்தை நடத்தி வைக்க சட்டப்படியான தடை ஏதுமில்லை என்றால், அத்திருமணத்தை, பின்பற்றுவதற்கு பொருத்தமானது என்று அத்தரப்பினர்கள் கருதும் முறை மற்றும் சடங்கின்படி நடத்தி வைத்தல் வேண்டும்.

ஆனால் அத்தகு திருமணம் ஒவ்வொன்றும் திருமணப் பதிவாளர் எவரேனும் ஒருவர் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும். மற்றும் அத்திருமணம் திருமணப் பதிவாளரைத் தவிர இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நம்பத்தக்க சாட்சிகள் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும்.

திருமண சடங்கின் (ceremony) ஒரு பகுதியாக பின்வருமாறு அல்லது அத்தகு விளைவினை ஏற்படுத்தக் கூடியவாறு உள்ள விளம்புகையை திருமணத் தரப்பினர்களில் ஒவ்வொருவரும் செய்தல் வேண்டும்:–

"A.B., ஆகிய நான் ஏன் C.D., யுடன் மணவாழ்வில் சேரக் கூடாது என்பதற்கு சட்டப்படியான தடை ஏதும் இருப்பதாக நான் அறிந்திலேன் என்று உளமார விளம்புகிறேன்."

மேலும் பின்வருமாறு அல்லது அத்தகு விளைவினை ஏற்படுத்தக் கூடியவாறு உள்ள சொற்களை திருமணத் தரப்பினர்களில் ஒவ்வொருவரும் மற்றொருவரிடம் கூற வேண்டும்:–

"A.B., ஆகிய நான் C.D., ஆகிய உன்னை என் சட்டப்பூர்வமான திருமணமான மனைவியாக (அல்லது கணவனாக) ஏற்றுக் கொள்கிறேன் என்பதைக் காண இங்கு முன்னிலையாகி உள்ள இந்நபர்களுக்கு நான் கோரிக்கை விடுக்கிறேன்." (பிரிவு 51).

பிரிவு 40–ல் கோரப்பட்டபடி திருமணப் பதிவாளரால் அறிவிப்பின் நகல் பதிக்கப்பட்ட பின்னர், இரண்டு மாதங்களுக்குள், திருமணம் நடத்தப்பட வில்லையானால், அந்த அறிவிப்பும், அதன் பேரில் சான்றிதழ் ஏதும் வழங்கப்பட்டிருப்பின் அதுவும் மற்றும் அதன் பேரிலான அனைத்து பிற நடவடிக்கைகளும் இல்லாநிலையாதாகும். மீண்டும் புதிதாக அறிவிப்புக் கொடுத்து, அதன் பேரில் சான்றிதழ் வழங்கப்படும் வரை திருமணப் பதிவாளர் உள்ளிட்ட எவரும் அத்திருமணத்தை நடத்தி வைத்தல் கூடாது. (பிரிவு 52).

4. What are the conditions for solemnizing the marriages among Indian Christians under the Christian Marriages Act, 1872? (1872 ஆம் ஆண்டு கிறித்தவத் திருமணச் சட்டத்தின் கீழ் இந்திய கிறித்தவர்களுக்கிடையில் திருமணங்கள் நடத்தப் பெறுவதற்கான நிபந்தனைகள் யாவை?)

(அல்லது)

What are the requisites of a christian marriage? (ஒரு கிறித்துவ திருமணத்தின் இன்றியமையாத தேவைகள் யாவை?)

முன்னுரை:

இந்தியக் கிறுத்தவ திருமணச் சட்டத்தின் ஆறாவது பகுதியின் கீழ் வரும் 60 முதல் 65 வரையிலான சட்டப் பிரிவுகள், இந்தியக் கிறுத்தவர்களின் திருமணம் பற்றிக் கூறுகிறது. சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

எந்நிபந்தனைகளின் அடிப்படையில் இந்தியக் கிறுத்தவர்களின் திருமணங்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்? - பிரிவு 60:

பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், இந்தியக் கிறிஸ்தவர்கள் தங்கள் திருமணத்திற்கு, இச்சட்டத்தின் மூன்றாவது பகுதியில் கோரப்பட்டுள்ள முதல்நிலை அறிவிப்பைக் கொடுக்காமலேயே (without the preliminary notice required under Part III), சான்றிதழைப் பெற விண்ணப்பிக்கலாம். அந்நிபந்தனைகளாவன,–

(1) திருமணம் செய்து கொள்ள உத்தேசித்துள்ள ஆணின் வயது 21 ஆண்டுகளுக்குள்ளாகவும், பெண்ணின் வயது 18 ஆண்டுகளுக்குள்ளாகவும் இருத்தல் கூடாது;

(2) திருமணம் செய்து கொள்ள உத்தேசித்துள்ள நபர்களுக்கு திருமணத்தின் பொழுது, கணவனோ அல்லது மனைவியோ உயிருடன் இருக்கக் கூடாது.

(3) இந்தியக் கிறுத்தவர்களுக்கிடையே நடைபெறும் திருமணத்திற்கு சான்றிதழ் வழங்க பிரிவு 9–ன் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ளவர் முன்னிலையிலும் மற்றும் அவரைத் தவிர இரண்டு நம்பத்தக்க சாட்சிகளின் முன்னிலையிலும், திருமணத் தரப்பினர்களில் ஒவ்வொருவரும் மற்றொருவரிடன் பின்வருமாறு கூறுதல் வேண்டும்–

"A.B., ஆகிய நான் எல்லாம் வல்ல கடவுளின் முன்னிலையிலும் மற்றும் நமது கடவுள் இயேசுபிரான் பெயரிலும் C.D., ஆகிய உன்னை என்னுடைய சட்டப்பூர்வ திருமண மனைவியாக அல்லது கணவனாக ஏற்றுக் கொள்கிறேன் என்பதைக் காண இங்கு முன்னிலையாகி உள்ள இந்நபர்களுக்கு நான் கோரிக்கை விடுக்கிறேன்" அல்லது இம்மாதியான பொருள் தரக் கூடிய வேறு வாசகங்களாகவும் இருக்கலாம். **(பிரிவு 60).**

மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்தால், இந்தியக் கிறுத்தவர்கள் தாங்கள் திருமணம் செய்து கொள்ள உத்தேசிதிருப்பது குறித்து யாருக்கும் அறிவிப்பு கொடுக்க வேண்டியதில்லை; நேரடியாக சான்றிதழைப் பெறலாம்.

சான்றிதழ் வழங்கல் - பிரிவு 61 :

பிரிவு 60–ல் கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு, சான்றிதழ்

வழங்க உரிமம் பெற்றுள்ள நபரின் முன் மேற்கொள்ள விளம்பலை திருமணத் தரப்பினர்கள் செய்து முடித்தவுடன், அவர்களின் ஒருவரின் விண்ணப்பத்தின் பேரில், நான்கு அணாக்களை கட்டணமாக பெற்றுக்கொண்டு அத்திருமணத்திற் குண்டான சான்றிதழினை அவர் வழங்குதல் வேண்டும்.

இச்சான்றிதழானது அத்தகு உரிமம் பெற்றுள்ள நபரால் கையொப்பமிடப் பெற்றிருக்க வேண்டும். மேலும் அத்தகு திருமணத்தின் செல்லுதன்மை சம்பந்தப்பட்ட உரிமையியல் வழக்கு எதிலும், அத்திருமணம் நடந்தேறியுள்ளது என்பதற்கு ஒரு அறுதியான நிரூபணமாக (conclusive proof) அச்சான்றிதழை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். **(பிரிவு 61)**

இந்தியக் கிறுத்தவர்களுக்கிடையிலான திருமணத்தை நடத்தி வைக்க மேற்கண்டவாறு உரிமம் வழங்கப் பெற்றுள்ள நபர் ஒவ்வொருவரும், தன் முன்னிலையில் நடந்த திருமணங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட பதிவேட்டுப் புத்தகமொன்றை வைத்துப் பராமரித்தல் வேண்டும். மற்றும் அதன் உண்மையான எடுகுறிப்புகளை தகுந்த கால இடைவெளிகளுக்குள் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் குறித்த தலைமைப் பதிவாளரின் அலுவலத்தில் வைப்பீடு செய்தல் வேண்டும். **(பிரிவு 62).**

அப்பதிவேட்டுப் புத்தகத்தில் தேடுகை செய்து, அதிலுள்ள பதிவுகளின் நகல்களை அவர் தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதன் பேரில் எவரும், தம் கைப்பட சான்றளித்து வழங்கலாம். **(பிரிவு 63).**

இச்சட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் பகுதிகளின் கீழான இந்தியக் கிறுத்தவர்களின் திருமணங்கள் பதிவு செய்யப்பட்ட புத்தகங்கள் குறித்து **பிரிவு 64–ம்,** இந்தியக் கிறுத்தவர்களுக்கான திருமணம் குறித்துக் கூறும் இந்த ஆறாவது பகுதி உரோம கத்தோலிக்கர்களுக்கு பொருந்தாது என்று **பிரிவு 65–ம்** கூறுகின்றன.

5. Cermonies incidental to Christian Marriage - Write short notes. (கிறுத்தவ திருமணத்தினையொட்டி செய்யப்படுகின்ற சடங்குகள் – சிறு குறிப்பு வரைக.)

(1) பிரிவு 5(1)–ன்படி கிறுத்தவ தேவாலயத்தின் அமைச்சர் ஒருவரால் நடத்தப்படும் திருமணமானால், அந்த தேவாலயத்தின் சடங்குகள் திருமணத்தின் பொழுது பின்பற்றப்பட வேண்டும்.

(2) பிரிவு 5(2)–ன்படி ஸ்காட்லாந்து தேவாலயத்தின் சமயகுருவால் நடத்தப்படும் திருமணமானால், அந்த தேவலாயத்தின் சடங்குகள் திருமணத்தின் பொழுது பின்பற்றப்பட வேண்டும்.

(3) பிரிவுகள் 25, 51, 60(3)– ஆகியவற்றின்படியிலான சடங்குகள் பின்பற்றப்பட வேண்டும். அவற்றில் மணமக்கள் செய்யும் விளம்புகை முக்கியமாகும்.

3 மணமுறிவுச் சட்டம், 1869 [The Divorce Act, 1869]

அறிமுகம்

இச்சட்டம் 1869–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அப்பொழுது, இச்சட்டத்தின் தலைப்பு 'இந்திய மணமுறிவுச் சட்டம்' (The Indian Divorce Act) என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது, 2001–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மத்தியச் சட்டத்தால் (Central Act 51 of 2001), இச்சட்டத்தின் தலைப்பு 'மணமுறிவுச் சட்டம்' (The Divorce Act) என்று திருத்தப்பட்டுள்ளது. அதாவது மேற்படி பழைய தலைப்பில் இருந்து 'இந்திய' (Indian) எனும் சொல் நீக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் மொத்தம் 62 சட்டப் பிரிவுகளும், இச்சட்டத்தின் கீழ் பயன் படுத்தத்தக்க 14 மாதிரிப் படிவங்களும் (Forms) உள்ளன.

இச்சட்டத்தின் முகப்புரை (Preamble), "கிறுத்தவ மதத்தைப் பின்பற்றும் நபர்களின் மணமுறிவு தொடர்பான சட்டத்தைத் திருத்த வேண்டியது உகந்ததாக உள்ளதாலும், மற்றும் மணவாழ்க்கை விஷயங்களில் சில நீதிமன்றங்களுக்கு அதிகாரவரம்பு வழங்குவதற்கும் இதன் மூலம் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது" என்று கூறுகிறது.

2001–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட மேற்படி மத்தியச் சட்டமான இந்திய மணமுறிவு (திருத்தச்) சட்டம் [The Indian Divorce (Amendment) Act, 2001], 1869–ஆம் ஆண்டின் இந்திய மணமுறிவுச் சட்டத்தின் பல வகைமுறைகளில் பெரும் திருத்தங்களைச் செய்துள்ளது. சில சட்டப் பிரிவுகளை நீக்கியும் உள்ளது. அத்திருத்தங்களும், நீக்கங்களும் 3–10–2001–ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வந்துள்ளன.

கிறுத்தவர்களின் திருமணம் குறித்து 1872–ஆம் ஆண்டின் இந்தியக் கிறுத்தவ திருமணச் சட்டம் கூறுகிறதென்றால், அவர்களது மணமுறிவு குறித்த சட்டத்தை, மேற்கண்டவாறு திருத்தப்பட்ட 1869–ஆம் ஆண்டின் மணமுறிவுச் சட்டம் விளக்குகிறது. இச்சட்டம் சம்மு–காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கிறது.

Discuss the law of divorce as applicable to Christians. (கிறுத்துவர்களுக்கு பொருந்தக்கூடிய மணமுறிவு சட்டத்தினை விவாதிக்க.)

(அல்லது)

State the grounds for divorce available under the Indian Divorce Act. (1869–ஆம் ஆண்டு இந்திய மணமுறிவுச் சட்டத்தின் கீழ் மணமுறிவு நாடுவதற்கான காரணங்களைக் கூறுக.)

(அல்லது)

Explain the grounds of divorce provided to a wife under the Indian Divorce Act. (இந்திய திருமண முறிவுச் சட்டத்தில் ஒரு மனைவிக்கு தரப்பட்டுள்ள மணமுறிவிற்கான காரணங்களை விளக்கவும்.)

முன்னுரை :

1869–ஆம் ஆண்டின் மணமுறிவுச் சட்டத்தில் முன்பு மணமுறிவு பெறுவதற்கான காரணங்கள் கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் தனித்தனியாக 10–வது பிரிவில் வகை செய்யப்பட்டிருந்தன. தற்பொழுது, 2001–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய மணமுறிவு (திருத்தச்) சட்டத்தால் மேற்படி 10–வது பிரிவு முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, மணமுறிவு கோருவதற்கு கணவன், மனைவிக்கென தனித்தனியாக வகை செய்யப்பட்டிருந்த காரணங்கள் நீக்கப்பட்டு, அவை கணவனுக்கும் மனைவிக்கும் பொதுவாகப் பொருந்தும்படியாக 10(1)–வது பிரிவில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மேலும் மணமுறிவு கோர மனைவிக்கு சில கூடுதல் காரணங்களை பிரிவு 10(2) விளக்குகிறது. எனவே திருத்தப்பட்ட புதிய மணமுறிவுச் சட்டத்தின்படி, கிறுத்தவர்களுக்கு பொருந்தக் கூடிய மணமுறிவுச் சட்டத்தைப் பின்வருமாறு காண்போமா?

திருமணத்தைக் கலைப்பதற்கான (அல்லது) மணமுறிவு கோருவதற்கான காரணங்கள் (Grounds for Dissolution of Marriage) - பிரிவு 10:

மணமுறிவு கோர கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள காரணங்கள்:

(1) 2001–ஆம் ஆண்டின் இந்திய மணமுறிவு (திருத்தச்) சட்டம் தொடங்குவதற்கு முன்னர் அல்லது பின்னர் நடைபெற்ற திருமணம் எதுவும், கணவன் அல்லது மனைவி பின்வரும் காரணங்களின் அடிப்படையில் மாவட்ட நீதிமன்றத்தில் கொடுக்கும் மனுவின் பேரில் கலைக்கப்படலாம். அத்தகு காரணங்களாவன,–

மேற்படி திருமணம் நடைபெற்ற பிறகு, எதிர்மனுதாரர்–

(i) பிறன்மனை புணர்ச்சி (committed adultery) செய்துள்ளார்; அல்லது

(ii) வேறொரு மதத்திற்கு மாறிவிட்டதால், கிறுத்தவராக இல்லாமல் போய்விட்டார்; அல்லது

(iii) மனுக் கொடுப்பற்கு உடன் முன்னால் தொடர்ச்சியாக குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு குணப்படுத்த முடியாத அளவிற்கு புத்தி சுவாதீனமற்ற வராக உள்ளார்; அல்லது

(iv) மனுக் கொடுப்பதற்கு உடன் முன்னால் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு கொடிய மற்றும் குணப்படுத்த முடியாத தொழுநோயால் பாதிக்கப் பட்டுள்ளார்; அல்லது

(v) மனுக் கொடுப்பதற்கு உடன் முன்னால் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு எளிதில் தொற்றிக் கொள்ளத்தக்கப் பால்வினை நோயினால், பீடிக்கப்பட்டிருக்கிறார்; அல்லது

(vi) எதிர்மனுதாரர் உயிரோடிருந்தால் அதைப்பற்றி, எந்த நபர்கள் இயற்கையாகவே கேள்விப்பட்டிருப்பார்களோ அந்த நபர்கள், அவர் உயிரோடிருப்ப தாக ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரையில் கேள்விப் படவில்லை என்றால்; அல்லது

(vii) திருமண பந்தத்தை முழுமையாக்குவதற்கு எதிர்மனுதாரர் வேண்டு மென்றே மறுப்பதன் காரணமாக அத்திருமண பந்தம் முழுமையடையவில்லை என்றால்; அல்லது

(viii) எதிர்மனுதாரருக்கு எதிராக தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு, இரண்டு ஆண்டுகளும், அதற்கு மேலும் அவர் அத்தீர்ப்பாணைக்கு கட்டுப்படவில்லையென்றால்; அல்லது

(ix) மனுக் கொடுப்பதற்கு உடன் முன்னால் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு மனுதாரரை கைவிட்டுச் சென்றுவிட்டார் என்றால்; அல்லது

(x) எதிர்மனுதாரருடன் வாழ்வது மனுதாரருக்கு தீங்கு அல்லது அபாயம் விளைவிக்கத்தக்கது என்று மனுதாரரின் மனதில் ஒரு நியாயமான அச்சத்தை ஏற்படுத்தும் அத்தகு கொடுமையை மனுதாரருக்கு எதிர்மனுதாரர் செய்து வந்தால்.

மணமுறிவு கோர மனைவிக்கு உள்ள கூடுதல் காரணங்கள்:

(2) திருமணம் நடந்த பிறகு, தனது கணவன் வன்புணர்ச்சி (rape),

ஓரினப் புணர்ச்சி (முட்டிமை) (sodomy), விலங்குப் புணர்ச்சி (bestiality) ஆகிய குற்றங்களைப் செய்து வருகிறார் எனும் காரணத்தின் அடிப்படையில் ஒரு மனைவியும் தனது திருமணத்தைக் கலைத்துக் கொள்ளும் பொருட்டு மனுச் செய்யலாம்.

பரஸ்பர இசைவின் பேரில் திருமணத்தைக் கலைத்தல் (Dissolution of Marriage by mutual consent) - பிரிவு 10-A:

(1) இச்சட்டத்தின் வகை முறைகளுக்கும், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, கணவனும் மனைவியும் ஒன்றாக இணைந்து, தாங்கள் இரண்டு ஆண்டுகள் காலத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்டுத் தனியாகப் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், தாங்கள் இருவரும் கூடி வாழ முடியவில்லையென்றும், திருமணம் கலைக்கப்பட்டு விட வேண்டுமென்று தாங்கள் இருவரும் இசைந்திருப்பதாகவும் காரணம் காட்டி, திருமண முறிவுக்கான மனு ஒன்றினை, அத்தகு திருமணம் 2001–ஆம் ஆண்டின் இந்திய மணமுறிவு (திருத்தச்) சட்டம் தொடங்கியதற்கு முன்னர் நடந்திருந்தாலும் சரி அல்லது பின்னர் நடந்திருந்தாலும் சரி, மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம்.

(2) மேற்கண்டவாறு மனுவைத் தாக்கல் செய்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஆனால் 18 மாதங்களுக்கு முன்னர் அந்த மனுவினை இருவரும் திரும்பிப் பெற்றுக் கொள்ளவில்லையெனில், நீதிமன்றம் அவர்களது வாதங்களைக் கேட்ட பிறகும், அது பொருத்தமெனக் கருதும் அத்தகு விசாரணையை நடத்திய பிறகும், அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றதும் மற்றும் மனுவில் கண்டுள்ள கூற்றுகள் உண்மையென்றும் அறிந்து மனநிறைவடைந்தால், அந்நீதிமன்றம், அத்திருமணத்தை அந்த நாளிலிருந்து அமலுக்கு வரத்தக்க வகையில் கலைத்துவிட்டதாக விளம்பி தீர்ப்பாணையொன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

திருமணத்தைக் கலைத்து தீர்ப்பாணை பிறப்பிக்க நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் (Power to court to pronounce decree for dissolving marriage) - பிரிவு 14:

சாட்சியங்களின் அடிப்படையில் தனது வழக்கை மெய்ப்பித்துள்ளார் என்று நீதிமன்றம் மனநிறைவடைந்தால்,

மற்றும் மனுதாரர் எம்முறையிலும் திருமணத்தின் மேற்படி முறைக்கு அல்லது திருமணத்தின் மற்றொரு தரப்பினரின் பிறன்மனைப் புணர்ச்சிக்கு இயைந்து செல்வதாக, வஞ்சகக் கூட்டு கொண்டதாக அல்லது துணை புரிவதாக இல்லையென்றும் அல்லது குற்றங்கூறப்பட்ட அப்பிறன்மனைப் புணர்ச்சியை மன்னித்து ஏற்றுக் கொள்ளவில்லையென்றும் நீதிமன்றம் கண்டறிந்தால்,

அல்லது அம்மனு எதிர்மனுதாரர்களில் எவரொருவரின் வஞ்சகக் கூட்டுடன் கொடுக்கப்படவில்லை அல்லது தொடுக்கப்படவில்லை என்று நீதிமன்றம் கண்டறிந்தால்,

அது அத்திருமணம் கலைக்கப்பட்டு விட்டதாக விளம்பி, தீர்ப்பாணை ஒன்றை பகருதல் வேண்டும்.

எனினும், மனுதாரர் திருமணத்தின் பொழுது, பிறன்மனை புணர்ந்து குற்றத்தை செய்துவருகிறார் என்றோ,

அல்லது நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் மனுதாரர் அத்தகு மனுக் கொடுப்பதற்கு அல்லது தொடுப்பதற்கு நியாயமற்ற தாமதம் செய்துள்ளார் என்றோ,

அல்லது திருமணத்தின் மற்றொரு தரப்பினரை கொடுமைப்படுத்தி உள்ளார் என்றோ,

அல்லது குற்றங்கூறப்பட்ட பிறன்மனை புணர்ச்சிக்கு முன் அல்லது நியாயமான காரணமில்லாமல் திருமணத்தின் மற்றொரு தரப்பினரை கைவிட்டுச் சென்றுவிட்டார் அல்லது அத்தரப்பினரிடமிருந்து தன்னை தன்னிச்சையாகப் பிரித்துக் கொண்டுள்ளார் என்றோ,

அல்லது அத்தகு தன்னிச்சையான புறக்கணித்தல் அல்லது மற்றொரு தரப்பினரின் அல்லது அவரை நோக்கிய துர்நடத்தை, பிறன்மனைப் புணர்ச்சிக்கு துணை நின்றுள்ளது என்றோ,

நீதிமன்றம் கண்டறிந்தால், அது திருமணத்தை கலைப்பதற்கான அத்தகு தீர்ப்பாணையை பிறப்பித்தலாகாது.

மன்னித்தல் (Condonation) : தாம்பத்திய உறவு (conjugal cohabitation) மீண்டும் தொடங்கினால் அல்லது தொடர்ந்தால் தவிர, இச்சட்டத்தின் பொருளுக்குள் பிறன்மனை புணர்ச்சி எதுவும் மன்னிக்கப்பட்டு விட்டதாக கருதப்படுதலாகாது.

மணவாழ்க்கைப் பிரச்சனைகளுக்குரிய பிற தீர்வழிகள் (Other Matrimonial Reliefs):

மணவாழ்க்கைப் பிரச்சனைக்கு மணமுறிவு கோருதல், இறுதித் தீர்வழியாகும். இதற்கு முன்னதாக சம்பந்தப்பட்ட திருமணத் தரப்பினர்கள் விரும்பினால், நீதிமுறையில் பிரிந்து போவதற்கான அல்லது தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கான தீர்ப்பாணையைக் கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். அதற்குண்டான காரணங்களைப் பின்வருமாறு காண்போமா?

(a) நீதிமுறையில் பிரிந்து போதல் (Judicial Separation):

முந்தைய காலகட்டங்களில் இருந்த மணமுறிவுச் சட்டங்களின்படி 'பகுதியளவு மணமுறிவுத் தீர்ப்பாணை' வழங்கப்பட்டது. இது இலத்தீன் மொழியில் **'mensa et toro' (Formerly a kind of partial divorce)** என அழைக்கப் படுகிறது. ஆனால் பின்னிட்டு இயற்றப்பட்ட சட்டங்களின் வாயிலாக மேற்கண்ட நிலை நீக்கப்பட்டு, பகுதியளவு மணமுறிவு என்பது, 'நீதிமுறையில் பிரிந்து போதல்' **(now known as judicial separation)** எனும் தீர்வழியாக மாற்றப்பட்டது.

இதைத்தான் 1869–ஆம் ஆண்டின் மணமுறிவுச் சட்டத்தின் **22–வது பிரிவானது,** 'இனி பகுதியளவு மணமுறிவிற்காக தீர்ப்பாணை பிறப்பித்தல் ஆகாது' (No decree shall hereafter be made for a divorce a mensa et toro) என்று கூறுகிறது. ஆனால் அதே பிரிவில் இத்தீர்ப்பாணைக்குப் பதிலாக கணவன் அல்லது மனைவி, பிறன்மனைப் புணர்ச்சி, அல்லது கொடுமை, அல்லது இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலும் கைவிட்டுச் செல்லுகை ஆகிய காரணங்களின் அடிப்படையில் நீதிமுறையில் பிரிந்து போக தீர்ப்பாணை கோரலாம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறு பெறப்படும் தீர்ப்பாணை, தற்பொழுது உள்ள சட்டத்தின்படி, பகுதியளவு மணமுறிவுத் தீர்ப்பாணையின் விளைவை ஒத்ததாக இருக்கும் என்றும் குறிப்பிடுகிறது.

பிரிவு 23–ன்படி, மேற்சொன்ன காரணங்களில் ஏதேனுமொன்றின் அடிப்படையில் கணவன் அல்லது மனைவி நீதிமுறைப் பிரிவிற்காக மாவட்ட நீதிமன்றத்திடம் மனு மூலம் விண்ணப்பிக்கலாம். அம்மனுவில் கண்டுள்ள வாக்குமூலங்களின் உண்மை குறித்தும், மற்றும் அவ்விண்ணப்பம் ஏன் அனுமதிக்கப்படக் கூடாது என்பதற்கு சட்டப்படியான காரணம் ஏதுமில்லை என்றும் நீதிமன்றம் மனநிறைவடைவதன் பேரில், அது நீதிமுறை பிரிவிற்கான தீர்ப்பாணையைப் பிறப்பிக்கலாம்.

தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளித்தல் (Restitution of Conjugal Rights):

1869–ஆம் ஆண்டின் மணமுறிவுச் சட்டத்தின் 32–வது பிரிவின்படி, கணவன் அல்லது மனைவி, நியாயமான காரணமில்லாமல், ஒருவர் மற்றொருவரின் உறவுச் சேர்க்கையிலிருந்து பிரிந்து சென்றிருந்தால், அக்கணவன் அல்லது மனைவி, தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கக் கோரி, மவாட்ட நீதிமன்றத்திடம் மனு மூலம் விண்ணப்பிக்கலாம். அம்மனுவில் கண்டுள்ள வாக்குமூலங்களின் உண்மை குறித்தும், மற்றும் அவ்விண்ணப்பம் ஏன் அனுமதிக்கப்படக் கூடாது என்பதற்கு சட்டப்படியான காரணம் ஏதுமில்லை என்றும் நீதிமன்றம் மனநிறைவடைவதன் பேரில், அது தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கான தீர்ப்பாணையைப் பிறப்பிக்கலாம்.

2. State the for getting a decree as the marriage is null and void under the Indian Divorce Act. (இந்திய திருமண முறிவுச் சட்டத்தின்படி திருமணத்தை செல்லத்தக்கது அல்ல என்ற தீர்ப்பாணையைப் பெற உள்ள காரணங்கள் யாவை என்பதை விளக்குக.)

முன்னுரை:

1869–ஆம் ஆண்டின் மணமுறிவுச் சட்டத்தின் 18–வது பிரிவின்படி, கணவன் அல்லது மனைவி எவரும், தங்கள் திருமணத்தை செல்லா மற்றும் இல்லா நிலையது (null and void) என்று விளம்பக் கோரி மாவட்ட நீதிமன்றத்திடம் மனுக் கொடுக்கலாம். அம்மனுவின் பேரில், அத்திருமணத்தை செல்லாநிலையது என்று விளம்பி நீதிமன்றம் தீர்ப்பாணையொன்றைப் பிறப்பிக்கலாம். ஆனால் அதற்கு பின்வரும் காரணங்களில் ஏதேனுமொன்று காட்டப்பட வேண்டும்.

இத்தீர்ப்பாணையைப் பெறுவதற்கான காரணங்கள் (Grounds):

பிரிவு 19–ன்படி, பின்வரும் காரணங்களில் ஏதேனுமொன்றின் அடிப்படையில் நீதிமன்றம் அத்தகு தீர்ப்பாணையைப் பிறப்பிக்கலாம். அவை,–

(1) எதிர்மனுதாரர் திருமணத்தின் போதும், வழக்கு தொடரும் போதும் ஆண்மையற்றவராக இருத்தல்;

(2) இரு தரப்பினரும் திருமணம் செய்து கொள்ளத் தடை செய்யப்பட்ட இரத்த சம்பந்த உறவு முறையில் (consanguinity) (இயற்கையான அல்லது சட்டப்படியான) அல்லது கொள்ளுறவு முறையில் (affinity) இருத்தல்:

(3) திருமணத்தின் போது, திருமணத் தரப்பினர்களில் ஒருவர் புத்தி சுவாதீனம் அற்றவராக அல்லது மூடராக இருத்தல்;

(4) திருமணத்தின்போது, திருமணத் தரப்பினர்களில் எவரேனும் ஒருவரின் முந்தய கணவனோ அல்லது மனைவியோ உயிருடன் இருத்தல் மற்றும் அத்தகைய கணவன் அல்லது மனைவியுடன் உள்ள திருமண உறவு முடிவுக்கு வராமல் இருத்தல்.

இப்பிரிவில் உள்ள எதுவும், திருமணத் தரப்பினர்களில் ஒருவரின் இசைவு, கட்டாயத்தினால் அல்லது மோசடியால் பெறப்பட்டுள்ளது எனும் காரணத்தின் அடிப்படையில், அத்திருமணத்தை செல்லாநிலையாக்குவதற்கான தீர்ப்பாணையைப் பிறப்பிக்க, மாவட்ட நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரவரம்பை பாதிக்காது.

-o0o-

பகுதி - V

பிரச்சனைகளும் தீர்வுகளும்
[Problems and Solutions]

இந்துச் சட்டம் [Hindu Law]

இந்து திருமணச் சட்டம், 1955

1. The bride is five years older than the bridegroom. Is this marriage valid?

மணமகனைவிட மணமகள் அய்ந்து வயது முத்தவளாக இருத்தல். இத்திருமணம் செல்லுமா?

(அல்லது)

A Hindu male is aged 20 and a Hindu female is aged 25. Can they marry each other?

ஒரு இந்து ஆணுக்கு வயது 20. ஒரு இந்து பெண்ணுக்கு வயது 25. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் திருமணம் செய்து கொள்ளலாமா?

தீர்வு:

யஞ்ஞனவல்கிய ஸ்மிருதியானது மணமகள், மணமகனை விட குறைந்த வயதுடைய வளாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் இது கட்டாயம் கிடையாது. மேலும் 1955–ஆம் ஆண்டின் இந்துத் திருமணச் சட்டமானது, மணமகள், மணமகனை விட குறைந்த வயதுடையவளாக இருக்க வேண்டும் என்று எங்கும் கூறவில்லை. எனவே மேற்கண்ட திருமணம் செல்லத்தக்கதே.

2. Bride was prostitute prior to the Marriage. Is this marriage valid?

திருமணத்திற்கு முன்பு மணமகள் விபச்சாரியாக இருத்தல். இத்திருமணம் செல்லுமா?

தீர்வு:

மணமகள் திருமணத்தின் பொழுது கன்னி கழியாத ஒரு பெண்ணாக இருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. ஆனால் தன்னால் அல்லாமல் மற்றொருவனால்

மணமகள் கர்ப்பமுற்று இருப்பின், அவள், நடைபெற்ற திருமணத்தை செல்லாது என விளம்பி தீர்ப்பாணையொன்றை (Decree of nullity) வழங்குப்படி நீதிமன்றத்தைக் கோரலாம். அதாவது அத்திருமணத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம் (voidable marrige). என்று 1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 12 (1) (d) கூறுகிறது. ஆனால் (i) திருமணத்தின் பொழுது அவனுக்கு மணமகள் கர்ப்பமுற்றிருக்கும் சங்கதி தெரியாமல் இருக்க வேண்டும். (ii) திருமணமான தேதியிலிருந்து ஓராண்டிற்குள் அவன் அத்திருமணத்தை செல்லாது என்று விளம்ப வேண்டி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய வேண்டும். (iii) அச்சங்கதி தெரிந்த பிறகு மணமகளுடன் அவன் விரும்பி உடலுறவு கொண்டிருக்கக் கூடாது. எனவே, திருமணத்திற்கு முன்பு மணமகள் விபச்சாரியாக இருப்பது ஒன்று மட்டுமே, நடைபெற்ற திருமணத்தை செல்லாததாக்கி விடாது. மேற்கண்ட பிரச்சனையின்படியிலான திருமணம் செல்லத்தக்கதே.

3. Bride is bridegroom's son's widow. Is this marriage valid?

மணமகனுடைய மகனின் விதவை மணமகளாக இருத்தல். இத் திருமணம் செல்லுமா?

தீர்வு:

ஒருவனுக்கு தனது மகனின் விதவை என்பவள், 1955–ன் இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 3 (g) (ii)–ன்படி தடுக்கப்பட்ட உறவு முறைக்குள் (prohibited relationship) வருபவளாவாள். ஆகவே, அவன், அவளை தனது மணமகளாக அடைய முடியாது [பிரிவு 5 (iv)]. அதாவது, ஒரு மாமனார் தனது மருமகளை, மனைவியாக அடைய முடியாது. அவர்கள் இருவரும் தடுக்கப்பட்ட உறவு முறையினர் ஆவர். எனவே, பிரிவு 11–ன் கீழ் அத்திருமணம் இல்லாநிலையது. எனவே செல்லாதது.

Jagannath v. Sadhu Ram[1] – எனும் வழக்கில் அம்மாதிரியான திருமணம் வழக்கத்தால் (custom) அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், அது செல்லத்தக்கதே என வாதிடப் பட்டது. ஆனால் அவ்வாதம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

4. Bride is pre-deceased brother's widow. Is this marriage valid?

முன்னதாக இறந்து விட்ட சகோதரரின் விதவை மணமகளாக இருத்தல். இத்திருமணம் செல்லுமா?

தீர்வு:

சகோதரரின் விதவை தடுக்கப்பட்ட உறவு முறைக்குள் 1955–ன் இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 3 (g) (iii)–ன்படி தடுக்கப்பட்ட உறவு முறைக்குள் (prohibited relationship) வருபவளாவாள். எனவே இத்திருமணம் செல்லாது.

5. A marriage was solemnised between a Hindu male aged 20 years and a Hindu female aged 22 years without the consent of their parents. Decide the legality of the marriage.

1. A.I.R. 1934 Lah. 283

தங்கள் பெற்றோர்களின் சம்மதம் பெறாமல் 20 வயதுள்ள ஒரு இந்து ஆணுக்கும், 22 வயதுள்ள ஒரு இந்து பெண்ணுக்கும் திருமணம் நடைபெற்றது. அத்திருமணத்தின் சட்டத் தன்மையை தீர்மானிக்க.

தீர்வு:

1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 5 (iii)–ன்படி, திருமணமாகும் பொழுது, மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியடைந்திருக்க வேண்டும். இந்த வயதை அடையாதவர்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. இங்கு பெற்றோர்களின் சம்மதம் முக்கியமல்ல. வயதே முக்கியம்.

மேற்படி பிரச்சனையில் மணமகளுக்கு 22 வயது. எனவே மேற்படி பிரிவு 5 (iii) கூறும் நிபந்தனையின்படி அவளுக்கு 18 வயது பூர்த்தியடைந்துவிட்டது. ஆனால் மணமகனின் வயது 20 மட்டுமே. அதாவது அவனுக்கு 21 வயது பூர்த்தியாகவில்லை. எனவே மேற்கண்ட நிபந்தனையை மீறியவனாகிறான். பிரிவு 5 (iii)–ல் கூறப்பட்ட நிபந்தனையை மீறினால், அதற்குண்டான தண்டனையை மேற்படி இந்து திருமணச் சட்டத்தின் 18–வது பிரிவு விளம்புகிறது. அதன்படி, அவனுக்கு 15 நாட்கள் வரையிலான சிறைவாசம் அல்லது ரூ.1000/– வரையிலான அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படுதல் வேண்டும்.

எனினும், மேற்கண்ட நிபந்தனையை மீறிவிட்டதால், நடைபெற்ற திருமணம் செல்லாத, இல்லாத ஒன்றாகிவிடாது. அது சட்டப்படி செல்லத்தக்கதே என்பதுதான் தீர்வு.

அதுபோல் மணமகள், மணமகனைவிட குறைந்த வயதுடையவளாக இருக்க வேண்டும் என்று பண்டைய கால இந்து தரும சாத்திரங்களில் (யஞ்ஞனவல்கிய ஸ்மிருதி) கூறப்பட்டிருந்தது. ஆனால் மேற்படி 1955–ஆம் ஆண்டில் இந்து திருமணச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, மேற்படி சாத்திரம் மறைந்துவிட்டது. அச்சட்டத்தின் மேற்படி பிரிவு 5 (iii)–ல் கூறப்பட்ட நிபந்தனையின்படியிலான வயதை முறையே மணமகளும் மணமகனும் பூர்த்தி செய்திருந்தால் போதும். மணமகள், மணமகனைவிட குறைந்த வயதுடையவளாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை ஏதுமில்லை. இன்றெல்லாம் பெருநகரங்களில் 33 வயதுடைய இந்துப் பெண்ணை 27 வயதுடைய இந்து ஆணுக்கு மணமுடித்து வைப்பது இயல்பான ஒன்றாகிவிட்டது.

6. A Hindu male is aged 17 married a Hindu female is aged 14. Is their marriage valid?

17 வயதுடைய ஒரு இந்து ஆண், 14 வயதுடைய ஒரு பெண்ணை மணக்கிறார். அவர்கள் திருமணம் செல்லுமா?

தீர்வு:

நாம் சென்ற பிரச்சனையில் கண்டவாறே, இப்பிரச்சனைக்கும் தீர்வளிக்கலாம். அதன்படி மேற்படி பிரச்சனையில் கண்ட திருமணம் 1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 5 (iii)–ல் கூறப்பட்ட நிபந்தனைக்கு முரணானதாக இருந்தாலும், அத்திருமணம் செல்லத்தக்கதே. ஆனால் இந்நிபந்தனையை மீறியதன் காரணமாக, இருவருக்கும் பிரிவு 18–ன்படியிலான தண்டனை காத்திருக்கிறது.

7. Kasi married Sati on 10-7-1997. At that time of marriage Sati

was pregnant by Karim. Kasi filed a petition for decree of nullity of marriage on 10-8-1998. Can he succeed?

10-7-1997ல் காசி என்பவர், சதி என்பவரை திருமணம் செய்து கொண்டார். திருமணத்தின் போது, சதி, கரிம் என்பவரால் கருவுற்றிருந்தாள். 10-8-1998ல் காசி, திருமணம் இல்லாநிலை தீர்ப்பாணை பெற மனுச் செய்தார். அவர் வெற்றி பெற முடியுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனைக்குத் தீர்வு காண, நாம் 1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் 12–வது பிரிவின் சில வகைமுறைகளைக் காணுதல் அவசியமாகும்.

பிரிவு 12 (1) (d) –ன்படி, எதிர்மனுதாரர், திருமணத்தின் பொழுது மனுதாரர் அல்லாத வேறொரு நபரால் கருவுற்றிருக்கிறார் என்றால், மனுதாரர் அதனடிப்படையில் அத்திருமணத்தை செல்லாநிலையது (null) என்று விளம்பக் கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். அதாவது திருமணத்தைத் தவிர்த்துக் (voidable) கொள்ளலாம். ஆனால் அவ்வாறு மனுச் செய்ய, பிரிவு 12 (2) (i) –ன்படி எதிர்மனுதாரர் வேறொரு நபரால் கர்ப்படைந்திருக்கும் சங்கதி, மனுதாருக்கு திருமணத்தின் பொழுது தெரியாமல் இருந்திருக்க வேண்டும்; மேலும், பிரிவு 12 (2) (ii) –ன்படி மேற்கண்ட மனு நடவடிக்கைகளை, திருமணத்திலிருந்து ஓராண்டிற்குள் மனுதாரர் தொடுத்திருக்க வேண்டும்; பிரிவு 12 (2) (iii) - ன்படி, எதிர்மனுதாரர் அவ்வாறு கர்ப்பமாக உள்ளார் எனும் சங்கதியை மனுதாரர் கண்டறிந்த பின், மனுதாரர், எதிர்மனுதாரருடன் விரும்பி உடலுறவு கொண்டிருத்தல் கூடாது.

மேற்கண்ட சட்ட வகைமுறைகளை மேற்படி பிரச்சனைக்கு பொருத்திப் பார்க்கும் பொழுது, முதற்கண், காசி என்பவர், சதி என்பரை 10–7–1997–ல் திருமணம் செய்து கொள்கிறார். திருமணத்தின் பொழுது, சதி, கரீம் என்பரால் கருவுற்றிருந்தாள். அதாவது பிரிவு 12 (1) (d) –ன்படி, எதிர்மனுதாரர் (சதி), திருமணத்தின் பொழுது மனுதாரர் (காசி) அல்லாத வேறொரு நபரால் (கரீம்) கருவுற்றிருக்கிறார். எனவே இங்கு காசி 10–8–1997–ல் தனது மேற்படி திருமணத்தை இரத்து செய்வதற்காக செல்லாநிலை தீர்ப்பாணை (Decree of Nullity) பெற வேண்டி மனுச் செய்கிறார். ஆனால் காசி அம்மனுவில் வெற்றி பெறவியலாது. ஏனெனில், மேற்படி பிரிவு 12 (2) (ii) –ன்படி மேற்கண்ட மனு நடவடிக்கைகளை, திருமணத்திலிருந்து ஓராண்டிற்குள் காசி (மனுதாரர்) தொடுத்திருக்க வேண்டும். இங்கு காசியின் திருமணம் நடைபெற்ற தேதி, 10–7–1997 ஆகும். ஆனால் அவர் மனுச் செய்யும் தேதியோ, 10–8–1997 ஆகும். அதாவது, திருமணம் நடைபெற்று ஓராண்டு முடிந்த பிறகே, காசி மனுச் செய்துள்ளார். எனவே அவர் தனது திருமணத்தை செல்லாநிலைத் தீர்ப்பாணை யின் வாயிலாக இரத்து (annulment of marriage) செய்து கொள்ள முடியாது. சுருங்கக் கூறின் காசி வெற்றி பெறவியலாது என்பதே தீர்வு.

8. A is married to B who at that time was already having a wife. So A's marriage was void. A third party C brings a suit for declaration that A's marriage with B is void. Decide.

A என்பவர் B என்பரை திருமணம் செய்து கொண்டார். A-க்கு திருமணத்தின் பொழுது, ஏற்கனவே ஒரு மனைவி உள்ளாள். எனவே A–

வின் திருமணம் இல்லாநிலையது. C எனும் ஒரு முன்றாவது நபர், B-யுடன் ஆன A-யின் திருமணம் இல்லாநிலையது என்று விளம்பக் கோரி வழக்கிடுகிறார். தீர்மானிக்க.

தீர்வு:

ஒரு திருமணத்தை இல்லாநிலைத் திருமணம் என்று விளம்ப, அத்திருமணத் தரப்பினர்களில் **எவரேனும் ஒருவர்** (either party to the marriage) மனுச் செய்யலாம் என்று 1955-ன் இந்து திருமணச் சட்டத்தின் 11-வது பிரிவு குறிப்பிடுகிறது. எனவே இப்பிரிவின் கீழ் பாதிக்கப்பட்ட கணவன் அல்லது மனைவிதான், அத்திருமணத்தை இல்லாநிலைத் திருமணமென விளம்பக் கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்ய முடியும் (வழக்கிட முடியும்). இவர்களைத் தவிர வேறு எவருக்கும் அத்தகு உரிமை இல்லை. எனவே அத்திருமணத்தை இல்லாநிலையதென விளம்பக் கோரி மேற்படி பிரச்சனையில் கூறப்பட்டுள்ள C எனும் ஒரு மூன்றாவது நபர் வழக்கிட இயலாது என்பதே தீர்வு.

9. A Hindu husband after his marriage in the year 1957 had voluntary sexual intercourse with a girl other than his spouse. Advice his wife.

ஒரு இந்து கணவன், 1957-இல் நடந்த தனது திருமணத்திற்குப் பிறகு அவரது மனைவி அல்லாத வேறு ஒரு பெண்ணுடன் தன்விருப்பார்வத்தில் உடலுறவு கொள்கிறார். அவரது மனைவிக்கு ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

1955-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13 (1) (i)-இன்படி, திருமணத்திற்குப் பிறகு தம்பதியினரில் ஒருவர் அவரது வாழ்க்கைத் துணை அல்லாத வேறொருவருடன் தானே விரும்பி உடலுறவு கொண்டிருந்தால், மண முறிவு கோரி அத்தம்பதியினரில் மற்றொருவர் மனுச் செய்யலாம்.

மேற்படி பிரச்சனையில் ஒரு இந்துக் கணவன் தனது திருமணத்திற்குப் பிறகு அவரது மனைவி அல்லாத வேறு ஒரு பெண்ணுடன் தானே விரும்பி உடலுறவு கொள்கிறார். எனவே மேற்படி பிரிவு 13(1)(i)-இன்படி அந்த மனைவி மண முறிவு கோரி மனுச் செய்ய முடியும். இதுவே அவருக்கு நாம் வழங்கும் சட்ட ஆலோசனை ஆகும்.

10. A Hindu husband filed a petition for a decree of divorce on the ground of mental cruelty alleging that his wife removed mangalsutra. Can he succeed?

தன் மனைவி தாலியை கழற்றியதால் மனக்கொடுமை ஏற்பட்டதாகக் கூறி இந்து கணவன் தனக்கு மணமுறிவு வேண்டுமென மனு தாக்கல் செய்தார். அவர் வெற்றி பெறுவரா?

தீர்வு:

இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13 (1) (i-a)-இன்படி திருமணத்திற்குப் பிறகு

கணவன் மனைவியை அல்லது மனைவி கணவனை கொடுமைப்படுத்தியிருந்தால், அதன் அடிப்படையில் ஒருவர் மற்றொருவரிடமிருந்து மணமுறிவு கோரலாம். 'கொடுமை' என்பதில் உடல்ரீதியான கொடுமை மட்டுமல்லாது உளரீதியான (மனக்) கொடுமையும் அடங்கும்.

தற்போது மேற்படி பிரச்சனையின்படி மனைவி தனது தாலியை கழற்றியது கணவனுக்கு இழைத்த மனக் கொடுமையாகுமா என்பதேயாகும். இதன் அடிப்படையில் மணமுறிவு வழங்குவதற்கு முன்பு பல்வேறு விடயங்கள் ஆராய வேண்டியுள்ளது. அதாவது அவள் எந்தச் சூழ்நிலையில் அவ்வாறு தாலியை கழற்றினாள்? அவளே கழற்றினாளா அல்லது கணவன் சொல்லக் கேட்டு கழற்றினாளா? என்பதற்கு விடை காண வேண்டும். (ஆனால் அதற்கான குறிப்புகள் ஏதும் மேற்படி பிரச்சனையில் கொடுக்கப்படவில்லை என்பது கவனத்திற்குரியது).

S.Hanumantha Rao Vs. Ramani[1] எனும் வழக்கு மேற்கண்ட பிரச்சனையை ஒத்ததுதான் என்றாலும், அடிப்படை சற்றே மாறுபட்டது. அதாவது இவ்வழக்கில் கணவனும், மனைவியும் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். அவ்விருவரும் தனியறையில் அந்தரங்கமாக இருக்கும்போது கணவனானவன், மனைவியின் தாலி மற்றும் வளையல்களை கழற்றச் சொல்வானாம். கணவனை திருப்தி செய்ய மனைவியும் அவ்வாறு செய்வாளாம். அவளது தாயும், அத்தையும் குளிக்கச் செல்கையில் அவ்வாறு தாலியை கழற்றி வைத்துவிட்டு குளிப்பதை அவள் பார்த்துள்ளதால், அவ்வாறு கழற்றுவதில் தவறு இல்லை என்று அவள் கருதினாளாம். தாலியை கழற்றுவது என்பது மண வாழ்க்கையை முடிவிற்கு கொண்டு வந்ததாகப் பொருளாகும் என்பது அவளுக்குத் தெரியாதாம். பின்னிட்டு இதற்காக மன்னிப்பும் கேட்டுள்ளாள். ஆனால் கணவன் சில உள்நோக்கம் கருதி இதைப் பெரிதாக்கியும், காரணமாகக் காட்டியும் மண முறிவு கோரினான். ஆனால் இதனை மேல்முறையீட்டின் போது ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கருத்துரைத்தது. அதாவது ஒரு பெண், மணமானவள் அல்லது அவளது திருமணம் நீடித்திருக்கிறது, கணவன் உயிரோடுதான் இருக்கிறான் என்பதையெல்லாம் உணர்த்தும் அடையாளமே தாலியாகும். கணவன் இறந்த பிறகுதான் மனைவி தனது தாலியை கழற்றுகிறாள். ஆனால் இந்த வழக்கில் கணவனை திருப்தி செய்ய அவனது சொல்படி கேட்டுதான் மனைவி தாலியை கழற்றி உள்ளாள் என்பதற்கு சாட்சியங்கள் உள்ளன. இதுவே மனைவி தனது தாலியை அவளே விருப்பப்பட்டு கழற்றி கணவனின் முகத்தில் வீசியெறிந்து விட்டு, கணவனின் வீட்டை விட்டு வெளியேறி தனது தாய் வீட்டிற்கு நடையைக் கட்டியிருந்தால், அதனை ஒருவேளை மனக் கொடுமை என்று கூறலாம். இந்த வழக்கில் அவ்வாறு சங்கதிகள் இல்லை. எனவே கணவன் கோரியபடி மண முறிவு அளிப்பதற்கு வழியில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த வழக்கின் அடிப்படையில் மேற்படி பிரச்சனையை ஆராய்ந்தால் கணவன் தனக்கு வேண்டியதில்லை அல்லது அவனுடன் வாழப் பிடிக்கவில்லை என்று சுட்டிக்காட்டும் முகமாக அவன் கட்டிய தாலியை கழற்றியெறிந்திருந்தால், அது மனக் கொடுமையாக கருதப்படலாம். கணவனுக்கு மணமுறிவிற்கான தீர்ப்பாணையும் கொடுக்கலாம். ஒருவேளை தாலியை கழற்றுமாறு கணவன் சொன்னதற்குக் கட்டுப்பட்டு மனைவி அவ்வாறு செய்திருந்து அது மெய்ப்பிக்கப்பட்டால், கணவன் மணமுறிவு கோர முடியாது. அவர் வெற்றி பெற வாய்ப்பில்லை.

11. A Hindu male was married to a Hindu female according to the Hindu form of marriage. The Hindu becomes a convert to Christian-

1. A.I.R. 1999 SC 1318

ity and the wife becomes a convert to Mohammadenism. They now want to have a dissolution of mariage. Advise parties.

ஓர் இந்து ஆண் ஒரு இந்து பெண்ணை இந்து திருமண வழிப்படி மணந்து கொள்கிறார். அவர் கிருத்துவராக மதம் மாறுகிறார். மனைவி முகமதிய மதத்திற்கு மாறுகிறார். இருவரும் இப்பொழுது திருமணத்தை கலைக்க விரும்புகின்றார்கள். - வழி கூறுக.

தீர்வு:

ஒரு இந்து கணவன் வேறொரு மதத்திற்கு (பிரச்சனையின்படி கிறுத்தவ மதம்) மாறிவிட்டால், அவனது மனைவி 1955–ன் இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13(1) (ii)–ன்படி மணமுறிவு கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். ஆனால் ஒரு இந்து மனைவி இவ்வாறு செய்வதற்குப் பதிலாக, மேற்படி பிரச்சனையின்படி அவளும் வேறொரு மதத்திற்கு, அதாவது இசுலாம் மதத்திற்கு மாறிவிட்டால், அது ஒன்றே அவளது திருமணத்தை இசுலாம் சட்டப்படி ஒரு முடிவிற்கு கொண்டு வந்து விடாது (does not automatically terminate her marriage as per Islam Law). இங்கு ஒருவேளை அத்திருமணம் இசுலாம் சட்டத்தின்படி நடந்திருந்தால், அவள் 1939–ஆம் ஆண்டின் இசுலாம் திருமண இழப்புச் சட்டத்தின் 2–வது பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படைகளில் ஏதேனுமொன்றின்படி, மணமுறிவு கோரி வழக்கிடலாம். ஆனால் மேற்படி திருமணம் இந்து முறைப்படி நடந்தேறியுள்ளது. எனவே அவள் எத்தீர்வழியையும் பெற வழியில்லை. இதனால், கிறுத்தவ மதத்திற்கு மாறிய இந்து கணவனுடனான அவளது திருமணம் செல்லத்தக்க நிலையிலேயே தொடருகிறது.

அதுபோல் அக்கணவன் இந்து மதத்திலிருந்து கிறுத்தவ மதத்திற்கு மாறிவிட்டதால், அவனுக்கு கிறுத்தவ சட்டம்தான் பொருந்தும். கிறுத்தவர்களின் மணமுறிவிற்குப் பொருந்தும் 1869–ஆம் ஆண்டின் மணமுறிவுச் சட்டத்தில் (The Divorce Act, 1869) 2001–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இந்திய மணமுறிவு (திருத்தச்) சட்டத்தினால் [The Indian Divorce (Amendment) Act, 2001] மாற்றியமைக்கப்பட்ட பிரிவு 10 (1) (ii)–ன்படி, கணவன் அல்லது மனைவி வேறொரு மதத்திற்கு மாறிவிட்டதால், கிறுத்தவராக இல்லாமல் போனால்தான் அவர்களுக்கிடையிலான திருமணம் கலைக்கப்படும். ஆனால் இங்கு மனைவி இந்து மதத்திருந்து இசுலாம் மதத்திற்கு மாறியவர். எனவே மனைவியின் மதமாற்றத்தைக் காண்பித்தும், கணவன் மேற்படி மணமுறிவுச் சட்டத்தின்படி, மணமுறிவு கோரவியலாது. எனவே எச்சட்டத்தின்படி சென்றாலும், அவர்கள் இருவரும் தங்கள் திருமணத்தைக் கலைத்துக் கொள்ள வழியில்லை. அவர்களுக்கிடையிலாக திருமணம் செல்லத்தக்கதாகவே இருக்கும்; அவ்வாறே தொடர்ந்து நீடிக்கும் என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை.

12. A, a Hindu male is married to B in 1957. In 1958, A becomes a convert to Christianity. In 1959, B sues A for Divorce. Decide.

A என்ற இந்த ஆண் B என்பரை 1957-ல் மணக்கிறார். 1958-ல் A கிருத்துவராக மதம் மாறுகிறார். 1959-ல் B, A மீது விவாகரத்து வழக்கு தொடுக்கிறார். தீர்க்க.

தீர்வு:

1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13 (1) (ii)–ன் கீழ், மேற்படி B தனது கணவர் கிறுத்தவ மதத்திற்கு மாறிதைக் காரணமாகக் காண்பித்து, அவரிடமிருந்து மணமுறிவு கோரலாம் என்பதே தீர்வு. (தேர்வில் மேற்படி பிரிவை விவரித்து எழுதுக.)

13. A Hindu male was married to a Hindu female in 1960. In 1961 the husband becomes a Muslim. The wife wants to divorce her husband. Advise her.

1960 ஆம் ஆண்டு ஒரு இந்து பெண்ணை மணந்து கொள்கிறார். 1961 ஆம் ஆண்டு அவர் ஒரு முகமதியராக மதம் மாறுகிறார். மனைவி தன் கணவனை விவாகரத்து செய்ய விரும்புகிறார். தீர்வழி கூறுக.

தீர்வு:

1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13 (1) (ii)–ன் கீழ், மேற்படி இந்து மனைவி, தனது கணவர் ஒரு முகமதியராக மதம் மாறியதைக் காரணமாக காண்பித்து, அவரிடமிருந்து மணமுறிவு கோரலாம் என்பதே தீர்வு. (தேர்வில் மேற்படி பிரிவை விவரித்து எழுதுக.)

14. 'A' a male Hindu married 'B' a female Hindu in 1954. In 1958 'A' married 'C' a Hindu female under Hindu Marriage Act 1955. 'B' filed a petition before district court for divorce under section 13(2) of Hindu Marriage Act 1955. Decide.

1954 ஆம் ஆண்டு 'அ' என்ற இந்து ஆண் 'ஆ' என்ற இந்து பெண்ணை மணம் புரிகிறார். 1958 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் 1955ன்படி 'அ' என்பவர் 'இ' என்ற இந்து பெண்ணை மணம் புரிகிறார். 1955ம் ஆண்டின் இந்து திருமணச் சட்டப் பிரிவு 13(2)ன்படி 'ஆ' என்பவர் மணமுறிவுக்கு மாவட்ட நீதிமன்றத்திற்கு மனு செய்கிறார். தீர்மானிக்க.

தீர்வு:

1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13(2)–ஆனது மணமுறிவு கோர மனைவிக்கென தனியாக சில கூடுதல் அடிப்படைகளை வழங்கியுள்ளது. அதாவது பிரிவு 13(2)–இன் கீழான அடிப்படைகள் மனைவிக்கு மட்டுமே பொருந்தக்கூடியதாகும். அவற்றின்படி ஒரு மனைவி மணமுறிவு கோரி மனுச் செய்யலாம். அவற்றில் முதல் அடிப்படையை நாம் மேற்படி பிரச்சனைக்காக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

அதாவது பிரிவு 13(2)(i)–இன்படி, இந்து திருமணச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு நடைபெற்ற ஒரு திருமண விடயத்தில் கணவன், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்பே மீண்டும் ஒரு திருமணம் செய்து கொண்டிருந்தாலோ அல்லது இச்சட்டம் தொடங்குவதற்கு முன்பு மணம் செய்து கொள்ளப்பட்ட வேறு மனைவி எவரும், மனுதாரரின் திருமணத்தின் போது உயிரோடு இருந்தார் என்றாலோ, அம்மனுதாரர் (மனைவி) மணமுறிவு கோரலாம். மேற்கூறப்பட்ட இரு சூழல்களிலும், மனுதாரர் மனுச் செய்யும் காலத்தில் அந்த வேற்று மனைவி உயிரோடிருக்க வேண்டும்.

இந்து திருமணச் சட்டமானது 1955–ஆம் ஆண்டில் தொடங்கியது. மேற்படி பிரச்சனையில் வரும் 'ஆ' என்ற பெண்ணை 'அ' என்பவர் 1954–ஆம் ஆண்டு மணம் புரிகிறார். அதாவது இந்து திருமணச் சட்டம் தொடங்குவதற்கு முன்பே மணம் புரிந்து கொண்டார். இதற்குப் பின்னிட்டு 1958–ஆம் ஆண்டில் 'அ' என்பவர் 'இ' எனும் மற்றொரு பெண்ணை மணம் புரிகிறார். மேற்படி பிரிவு 13(2)(i)–ஆனது இந்த இரண்டாம் திருமணமும் இந்து திருமணச் சட்டம் தொடங்குவதற்கு முன்பே செய்து கொள்ளப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும், அப்போதுதான் மணமுறிவு கோர வழியுண்டு என்றும் கூறுகிறது. எனவே இதற்கு பிரிவு 13(2)–இன்படி மனுச் செய்வது நிலைக்கத்தகாதது.

மாறாக 'இ' என்ற மற்றொரு பெண்ணுடன் தானே விரும்பி உடலுறவு கொண்டு வாழ்ந்து வருவதாகக் கூறி பிரிவு 13(1)(i)–இன்படி 'ஆ' என்ற பெண் மணமுறிவு கோரி மனுச் செய்யலாம். மேலும் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 18(2)(e)–இன்படி கணவன் மற்றொரு பெண்ணுடன் வாழ்ந்து வருகிறார் என்பதைக் காரணமாகக் காண்பித்து தனி வீடும், பராமரிப்புத் தொகையும் கோரியும் வழக்கிடலாம்.

15. A was married before she attained 15 years of age. She repudiated the marriage before she attained 18 years of age. She filed the petition for divorce after attaining 19 years of age. Will A succeed?

A என்பவர் 15 வயது அடையும் முன்பாக திருமணம் செய்து வைக்கப்பட்டாள். அவள் 18 வயது அடையும் முன்பாக அத்திருமணத்தை மறுதலித்துவிட்டாள். அவள் 19 வயது அடைந்த பிறகு, மணமுறிவிற் காக மனுச் செய்தாள். அவ ள் வெற்றி பெறுவாளா?

தீர்வு:

1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தில் 1976–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி, பிரிவு 13 (2) (iv)–ன் கீழ் தீர்வழி பெற A-க்கு உரிமை உண்டு. அப்பிரிவின்படி, ஒரு மனைவி தனக்கு 15 வயது பூர்த்தியாகும் முன்னரே திருமணம் நடைபெற்றது என்றும், தான் அத்திருமணத்தை 15 வயது பூர்த்தியான பின்னரும் ஆனால் 18 வயது பூர்த்தியாவதற்கு முன்னரும் மறுதலித்துவிட்டேன் (repudiated) என்றும் கூறினால், அவள் மணமுறிவு கோரலாம். ஆனால் மேற்படி பிரச்சனையில் அவள் 19 வயதடைந்த பிறகு, மணமுறிவிற்காக மனுச் செய்கிறாள். இதுதான் இங்கு ஆராயத்தக்கது.

B.Iylaiah v. Devamma[1] எனும் வழக்கில், மேற்கண்டதையொத்த ஒரு நிகழ்வில், சம்பந்தப்பட்ட மனைவி 18 வயதடையும் முன்னரே, மணமுறிவு கோரி மனுச் செய்கிறாள். இந்த மனு மேற்படி பிரிவு 13 (2) (iv)–ன் கீழ் நிலைக்கத்தக்கதல்ல என்று வாதம் புரியப்பட்டது. ஆனால் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் இவ்வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. 18 வயது அடைவதற்கு முன்பாக அத்திருமணத்தை சம்பந்தப்பட்ட மனைவி மறுதலித்திருப்பின் (அதாவது ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருப்பின்), அதுவே மணமுறிவு கோரப் போதுமானது என்றும், இங்கு அவ்வாறு அம்மனைவி மறுதலித்துள்ளாள் என்றும், எனவே அவள் மணமுறிவு கோர அருகதை உடையவள் என்றும் தீர்ப்பளித்தது.

1. A.I.R. 1981 A.P. 74.

எனவே, பிரிவு 13 (2) (iv)–ன் கீழ் தேவைப்படுவதெல்லாம் யாதெனில், பிரச்சனைக் குரிய அத்திருமணத்தை 18 வயது அடையும் முன்பாக அம்மனைவி மறுதலித்திருக்க வேண்டும் என்பதே தவிர, மணமுறிவு கோரும் மனுவை 18 வயது அடைவதற்கு முன்பாகத் தாக்கல் செய்யலாம் அல்லது அதற்குப் பின்னிட்டும் தாக்கல் செய்யலாம். எனவே 19 வயது அடைந்த பிறகு மணமுறிவு கோரி A தாக்கல் செய்த மனுவில், அவள் நிச்சயம் வெற்றி பெறுவாள்; அவளுக்கு மணமுறிவிற்கான தீர்ப்பாணை கிடைக்கும் என்பதே தீர்வு.

16. 'A' a Hindu male married 'B' a Hindu female in 1965. In January 1968, both the parties filed a joint petition to district court for divorce by mutual consent. In March 1968, on the motion of both the parties, the district court passed decree of divorce by mutual consent. Is the divorce valid?

'அ' என்ற இந்து ஆண் மகன் 1965 ஆம் ஆண்டு 'ஆ' என்ற இந்து பெண்ணை மணம் புரிகிறார். 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருவரும் சேர்ந்து ஒன்றாக மனு ஒன்றை மாவட்ட நீதிமன்றத்தில் ஒத்திசைந்த மணமுறிவிற்கு சமர்ப்பித்தனர். பிறகு இரு தரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க 1968 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மாவட்ட நீதிமன்றம் மணமுறிவு கட்டளை பிறப்பித்தது. இந்த மணமுறிவு செல்லுமா?

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க நாம் இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13B-ஐ காண வேண்டும். இது பரஸ்பரமான ஒப்புதலின் பேரில் மண முறிவு (Divorce by Mutual Consent) கேட்பதைப் பற்றி கூறுகிறது.

அப்பிரிவின்படி, இந்து திருமணச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளவற்றுக்குட்பட்டு ஒரு திருமணத்தை இரத்து செய்ய வேண்டும் என்ற ஒரு மனுவினை கணவன், மனைவி ஆகிய இருவரும் பரஸ்பரம் ஒத்திசைந்து ஒன்றாகச் சேர்ந்து மாவட்ட (குடும்ப) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். தாங்கள் இருவரும் ஓராண்டு அல்லது அதற்கும் மேலாக பிரிந்து தனித்தனியே வாழ்ந்து வருவதாகவும், தங்களால் ஒன்று சேர்ந்து வாழ இயலவில்லை என்றும், தங்களது திருமணம் கலைக்கப்பட வேண்டும் என்பதற்கு பரஸ்பரம் உடன்பட்டுள்ளதாகவும் காரணம் காட்டி, மணமுறிவு கோரலாம். [பிரிவு 13-B)(1)].

மேற்கண்டவாறு மனுவைத் தாக்கல் செய்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஆனால் 18 மாதங்களுக்கு முன்னர் அந்த மனுவினை இருவரும் திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை யெனில், நீதிமன்றம் அவர்களது வாதங்களைக் கேட்ட பிறகும், அது பொருத்தமெனக் கருதும் அத்தகு விசாரணையை நடத்திய பிறகும், அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றதும் மற்றும் மனுவில் கண்டுள்ள கூற்றுகள் உண்மையென்றும் அறிந்து திருப்தியுற்றால், அந்நீதிமன்றம், அத்திருமணத்தை அந்த நாளிலிருந்து அமலுக்கு வரத்தக்க வகையில் கலைத்துவிட்டதாக விளம்பி தீர்ப்பாணையொன்றை பிறப்பித்தல் வேண்டும். [பிரிவு 13-B)(2)].

மேற்படி பிரச்சனையில் 'அ' என்ற இந்து ஆணும், 'ஆ' என்ற இந்து பெண்ணும்

தங்களுக்கிடையான திருமணத்தை முறித்துக் கொள்ள ஒன்றாகச் சேர்ந்து பாஸ்யாம் ஒத்திசைந்து 1968–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்கின்றனர். மேற்படி பிரிவு13-B)(2)–இன்படி இந்த மனுவை நீதிமன்றம் தனது ஆய்விற்கு ஆறு மாதங்களுக்குப் பிறகு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் மேற்படி பிரச்சனையில் மாவட்ட நீதிமன்றம் 1968–ஆம் ஆண்டு மார்ச் மாதமே மணமுறிவுக்கான தீர்ப்பாணை வழங்கி விடுகிறது. அதாவது மனுச் செய்து மூன்றே மாதங்களுக்குள் மணமுறிவு வழங்குகிறது. எனவே இந்த மணமுறிவு செல்லாது என்பதே மேற்படி பிரச்சனைக்கு தீர்வாகும்.

17. 'S' married 'M' on 7.7.55 in the forenoon and in the afternoon of the same day 'S' came to know that 'M' had already married a woman and had child by her. 'S' wants to get divorce immediately. Advise her.

7.7.55 அன்று காலை S என்பவர் M என்பவரை திருமணம் செய்து கொண்டார். M என்பவர் முன்பே திருமணம் ஆனவர் என்றும் அவருக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்ற விஷயமும் S என்பருக்கு திருமணம் ஆன அன்றே பிற்பகல் தெரிய வருகிறது. S என்பவர் உடனடியாக விவாகரத்து பெற விரும்புகிறார். அறிவுரை வழங்குக.

தீர்வு:

1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் 18–5–1955–ஆம் தேதியில் அமலுக்கு வந்தது. மேற்கண்ட பிரச்சனைக்குட்பட்ட திருமணம் 7–7–55–ஆம் தேதியில் நடந்துள்ளது. எனவே, இத்திருமணம் இந்து திருமணச் சட்டம் அமலுக்கு வந்த பின் நடந்துள்ளது என்பது தெளிவு.

மேற்கண்ட பிரச்சனையின்படி M என்பவர் முன்பே திருமணம் ஆனவர் எனும் சங்கதி உண்மையென்றால், மேற்படி இந்து திருமணச் சட்டத்தின் 17–வது பிரிவின்படி, அவர் இந்திய தண்டனைச் சட்டத்தால் இருதார மணத்திற்காக தண்டிக்கப்படக் கூடியவர். மேலும், 1955–பிரிவு 5 (i)–ஆனது, ஒரு செல்லத்தக்க திருமணத்திற்குண்டான நிபந்தனைகளில் (conditions for a valid marriage) ஒன்றாக, திருமணம் செய்து கொள்ளும் நபருக்கு திருமணம் நடைபெறும் காலத்தில் வேறு மனைவியோ, கணவனோ உயிருடன் இருக்கக் கூடாது, என்று கூறுகிறது. எனவே அப்படி இருந்தால், அத்திருமணம், பிரிவு 11–ன்படி இல்லாநிலைத் திருமண மாகும். எனவே அதனை செல்லாத திருமணமென்று விளம்பி தீர்ப்பாணை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தில் மேற்படி S மனுச் செய்யலாம். மாறாக மணமுறிவு கோரி மனுச் செய்யவியலாது. ஏனெனில், மணமுறிவு கோரி மனுச் செய்வற்கு, ஒரு செல்லத்தக்க திருமணம் நடந்திருக்க வேண்டும். ஆனால் இங்கு பிரச்சனையில் கண்டுள்ள சூழல்களின்படி M-க்கும் S-க்கும் நடந்த திருமணம், ஆரம்பம் முதலே செல்லத்தக்கதல்ல; அதாவது ஆரம்பம் முதலே இல்லாநிலையது (void abinitio).

எனவே, S எனும் மனைவி மணமுறிவு கோரி மனுச் செய்வதற்குப் பதிலாக, தனது திருமணத்தை இந்து திருமணச் சட்டத்தின் மேற்படி 11–வது பிரிவின் கீழ் இல்லா நிலையதென விளம்பும்படி கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்தால், அதில் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார்.

மேற்படி பிரச்சனையில் 'உடனடியாக மணமுறிவு பெற விரும்புகிறார்' எனும்

சொற்றொடர் உள்ளது. அதாவது, காலையில் நடந்த திருமணம் பிடிக்கவில்லை என்று கூறி, மாலையில் அல்லது அதற்கடுத்த நாள் மணமுறிவு கோர முடியுமா, என்பதற்கு விடையளிக்க வேண்டும் எனும் கண்ணோட்டத்தில் 'உடனடியாக' எனும் சொல்லிற்கு அழுத்தம் கொடுத்து, மேற்படி பிரச்சனையில் கொடுக்கப்பட்டுள்ளது. 1955–ன் இந்து திருமணச் சட்டத்தின் 14–வது பிரிவின்படி, திருமணம் முடிந்து ஓராண்டு முடிவுற்ற பிறகுதான், மணமுறிவிற்காக நீதிமன்றத்திடம் மனுச் செய்ய முடியும்; மணமுறிவு கோரி ஓராண்டிற்குள் மணமுறிவுத் தீர்ப்பாணை கோரி செய்யப்படும் மனுவை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளது. எனினும் அப்பிரிவின் அடுத்த பத்தியில் கூறப்பட்டுள்ளபடி, திருமணத் தரப்பினர்களில் ஒருவர் மற்றொருவருக்கும் செய்யும் விதிவிலக்கான கடுந்தொல்லை அல்லது விதிவிலக்கான கொடுஞ்செயல் (exceptional hardship or exceptional depravity) காரணமாக, திருமணம் நடந்ததிலிருந்து ஓராண்டு காலம் முடிவடைவதற்கு முன்பே, மணமுறிவு கோரி மனுச்செய்யலாம்.

தற்பொழுது, மேற்படி பிரச்சனையில், M-க்கும் S-க்கும் இடையே ஒரு செல்லத்தக்க திருமணம் நடைபெற்றுள்ளது என்று வைத்துக் கொள்வோம். ஆனால் M என்பவர் தனது மனைவியான S-க்குச் செய்யும் விதிவிலக்கான கடுந்தொல்லை அல்லது விதிவிலக்கான கொடுஞ்செயலின் காரணமாக, S என்பவர் திருமணம் முடிந்து ஓராண்டு முடிவடையாமல் இருக்கும் பொழுதும், உடனடியாக மணமுறிவு கோரி மனுச் செய்யலாம்.

ஆனால் நாம் ஏற்கனவே கண்டபடி, M-க்கும், S-க்கும் இடையே நடைபெற்ற திருமணம், ஆரம்பம் முதலே ஒரு செல்லத்தக்க திருமணம் அல்ல என்பதால், S உடனடியாகவோ அல்லது காத்திருந்தோ மணமுறிவு ஏதும் கோர முடியாது. மாறாக, திருமணத்தை இல்லா நிலையது என்று விளம்பக் கோரி மட்டுமே நீதிமன்றத்திடம் மனுச் செய்யவியலும். இதுவே S-க்கு நாம் கூறும் அறிவுரை ஆகும்.

இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956

தத்தெடுப்பு [Adoption]

18. A Hindu adopts an Orphan. Is this valid?

ஒரு இந்து ஓர் அனாதையை தத்தெடுக்கிறார். இது செல்லுமா?

(அல்லது)

Can a guardian of a child whose parentage is not known, adopt the child to himself ?

பெற்றோர்கள் யார் என்று தெரியாத குழந்தையின் காப்பாளர் மேற்படி குழந்தையை தானே மகவேற்பு செய்துகொள்ள முடியுமா ?

தீர்வு :

பண்டைய இந்துச் சட்டத்தின்படி, ஒரு இந்து ஒரு அனாதையை தத்தெடுத்துக்

கொள்ள முடியாது. ஆனால் 1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தில் 1962 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தத்தின்படி, பிரிவு 9(4)–ன் கீழ், பெற்றோர் கைவிட்டு சென்ற குழந்தையையோ அல்லது தாய் தந்தையர் யார் என்று தெரியாத குழந்தையையோ தத்தெடுத்துக் கொள்ளலாம். அக்குழந்தைக்கு காப்பாளர் எவரேனும் இருப்பின் அவரே கூட தத்தெடுத்துக் கொள்ளலாம். எனவே ஓர் அனாதையை தத்தெடுத்தல் செல்லத்தக்கதே.

19. A Hindu female of 30 years adopts a minor boy of 12 years. Is it valid?

30 வயதுடைய ஒரு இந்துப் பெண் 12 வயதுடைய ஒரு பையனை தத்தெடுக்கிறாள். இது செல்லுமா?

தீர்வு:

1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 11 (iv)–ன்படி, தத்தெடுக்கும் தாயானவள், தத்தெடுக்கப்படும் பையனை விட குறைந்த பட்சம் 21 வயது அதிகமாக இருத்தல் வேண்டும். ஆனால் மேற்படி பிரச்சனையில் இந்நிபந்தனை பூர்த்தியாகவில்லை. அதாவது அந்த இந்துப் பெண், தான் தத்தெடுக்கும் பையனை விட 18 வயதுதான் அதிகமாக இருக்கிறாள். ஆகவே மேற்படி தத்தெடுப்பு இல்லாநிலையது (void). எனவே செல்லாது (invalid).

20. A adopts a son B. A has a son of a pre-deceased son during the time when he adopts B. Is this adoption valid?

A என்பவர் B என்ற மகனைத் தத்தெடுத்துக் கொள்கிறார் அப்படித் தத்தெடுத்துக் கொள்ளும் காலத்தில், A–க்கு முன்னரே இறந்து போன மகனின் மகன் உயிருடன் உள்ளார். இத்தத்தெடுப்பு செல்லுமா?

தீர்வு:

1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 11 (i)–ன்படி, தத்தெடுப்பவருக்கு, தத்தெடுக்கும் சமயத்தில் முறைமணப் பிறப்பு (legitimate) மகனோ, மகனுடைய மகனோ அல்லது மகனுடைய மகனுடைய மகனோ (மகன், பேரன், கொள்ளுப் பேரன்) யாரும் உயிருடன் இருக்கக் கூடாது. ஆனால் மேற்படி பிரச்சனையில் தத்தெடுக்கும் காலத்தில் Aக்கு முன்னதாக இறந்த மகனின் மகன் (பேரன்) இருக்கிறார். எனவே அத்தத்தெடுப்பு செல்லாது.

21. A Hindu female having an illegitimate son adopts B. Is it valid?

முறையற்ற மணப் பிறப்பு மகன் உள்ள A எனும் இந்துப் பெண், B என்பவனை தத்தெடுக்கிறாள். இது செல்லுமா?

தீர்வு:

தத்தெடுக்கும் சமயத்தில் தத்தெடுப்பவருக்கு முறைமணப் பிறப்பின் வாயிலாகப்

பிறந்த மகன் அல்லது மகனுடைய மகன் அல்லது மகனுடைய மகனுடைய மகன் எவரும் உயிருடன் இருத்தல் கூடாது, என்று 1956–ன் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 11 (i) கூறுகிறது. எனவே முறையற்ற மணப்பிறப்பின் வாயிலாக பிறந்த மகன் இருக்கும் பொழுது, தத்தெடுத்தால் அது செல்லும். எனவே மேற்படி பிரச்சனையில் கண்ட முறையற்ற மணப் பிறப்பு மகன் உள்ள A எனும் இந்துப் பெண், B என்பவனை தத்தெடுத்துக் கொள்ளுதல் செல்லத்தக்கதே.

22. 'A' a Hindu has a lunatic child and he adopts 'B'. Is it valid?

'அ' எனும் ஒரு இந்து-வுக்கு பித்துப்பிடித்த குழந்தையொன்று உள்ளது. அவர் 'ஆ' என்பவனை தத்தெடுத்துக் கொள்கிறார். இது செல்லுமா?

தீர்வு:

1956–ன் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 11 (i) மற்றும் (ii)–ஆனது, தத்தெடுக்கும் சமயத்தில் தத்தெடுப்பவருக்கு குழந்தை எதுவும் இருத்தல் கூடாது என்று தடை விதிக்கிறது. இத்தடை இந்து ஒருவனின் குழந்தையின் பித்துநிலை காரணமாக மறைந்துவிடாது. அக்குழந்தையையும், ஒரு குழந்தையாகவே சட்டம் பார்க்கிறது. எனவே, மேற்படி பிரச்சனையின்படி 'அ' எனும் இந்து–வுக்கு பித்துபிடித்த குழந்தையொன்று இருக்கும் பொழுது, அவர் 'ஆ' என்பரைத் தத்தெடுத்துக் கொள்ளுதல் செல்லாது.

23. A Hindu male aged 40 years adopts a daughter aged 20 years, while he has a daughter's daughter living at the time of adoption. Decide.

தத்தெடுக்கும் சமயத்தில் மகளின் மகள் ஒருத்தி உயிருடன் உள்ள பொழுது, 40 வயதுடைய இந்து ஆண் ஒருவர், 20 வயதுடைய மகள் ஒருத்தியை தத்தெடுக்கிறார். தீர்க்க.

தீர்வு:

ஒரு இந்து ஆண், ஒரு பெண் குழந்தையை தத்தெடுக்க வேண்டுமெனில், அவனுக்கு அச்சமயத்தில் மகள் அல்லது மகனின் மகள் எவரும் உயிருடன் இருத்தல் கூடாது என்று 1956–ன் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 11 (ii) கூறுகிறது. ஆனால் மேற்படி பிரச்சனையின்படி, அவனுக்கு மகளின் மகள் ஒருத்தி உயிருடன் உள்ளாள். இது அவன் ஒரு பெண்ணை தத்தெடுத்துக் கொள்வதை எந்த விதத்திலும் பாதிக்காது. அந்த வகையில் அத்தெடுப்பு செல்லத்தக்கதே.

ஆனால் நாம் இங்கு மற்றொரு அம்சத்தைக் கவனிக்க வேண்டியுள்ளது. அஃதாவது, மேற்படி பிரச்சனையில் உள்ள இந்து ஆணுக்கு 40 வயதாகிறது; அவன் தத்தெடுக்க விழையும் பெண்ணுக்கு 20 வயதாகிறது. ஆனால் பிரிவு 11 (iii)–ன்படி, ஒரு பெண்ணை தத்தெடுக்கும் இந்து ஆண், அப்பெண்ணை விட குறைந்தபட்சம் 21 வயது அதிகமாக இருக்க வேண்டும். மேற்படி பிரச்சனையில், அந்த இந்து ஆண், அப்பெண்ணை விட 20 வயதுதான் மூத்தவராக உள்ளார். எனவே இந்த வகையில் அத்தத்தெடுப்பு செல்லாது.

24. 'A' a Hindu male aged about 40 years adopted a daughter aged about 17 in 1980. Decide its validity.

'அ' என்ற 40 வயதுள்ள இந்து ஆண் 1980 ஆம் ஆண்டு 17 வயதுள்ள மகளை தத்து எடுக்கிறார். இதன் செல்லும் தன்மையை தீர்மானிக்க.

தீர்வு:

இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு பிரிவு 11 (iii)–ன்படி ஒரு பெண்ணை தத்தெடுக்கும் இந்து ஆண், அப்பெண்ணை விட குறைந்தபட்சம் 21 வயது அதிகமாக இருக்க வேண்டும். மேற்படி பிரச்சனையில் உள்ள இந்து ஆணுக்கு 40 வயதாகிறது; அவர் தத்தெடுத்த மகளுக்கு 17 வயதாகிறது. அதாவது அந்த ஆண், தான் தத்தெடுத்த பெண்ணை விட 23 வயது மூத்தவராக உள்ளார். இங்கு மேற்படி பிரிவின் நிபந்தனை நிறைவு செய்யப்பட்டுவிட்டதால், இத்தத்தெடுப்பு செல்லத்தக்கதே.

25. A left two widows and after his death both widows adopt and orphan boy. Decide the validity of this adoption before and after the enactment of the Hindu Adoptions and Maintenance Act, 1956.

'அ' என்பவர் தனது இரு விதவைகளை விட்டுவிட்டு இறக்கிறார். அவர்கள் இருவரும் ஒரு அனாதைச் சிறுவனைத் தத்தெடுத்துக் கொள்கின்றனர். இந்த தத்தெடுப்பின் செல்லுதன்மை குறித்து 1956-ஆம் ஆண்டில் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பும், பின்பும் தீர்மானிக்க.

தீர்வு:

1956–ன் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டதிற்கு முன்னர், மேற்கண்ட தத்தெடுப்பு நடந்திருந்தால், அது செல்லாது. ஏனெனில் அப்பொழுதைய சட்டத்தின்படி, ஒருவர் ஒரு அனாதையை தத்தெடுத்துக் கொள்ள முடியாது. ஆனால் மேற்படி சட்டத்திற்குப் பின்னர், அதில் 1962–ஆம் செய்யப்பட்ட திருத்தத்தின்படி பிரிவு 9(4)–ன் கீழ், ஒருவர் ஒரு அனாதையை தத்தெடுத்துக் கொள்ளலாம். எனவே, அத்தத்தெடுப்பு செல்லும்.

இங்கு எழும் மற்றொரு சிக்கல் யாதெனில், இரண்டு விதவைகள் சேர்ந்து ஒரு அனாதையை தத்தெடுத்துக் கொள்கின்றனர். மேற்படி 1956–ஆம் ஆண்டு சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பு, ஒரு அனாதையை மேற்கண்டவாறு எவரும் தத்தெடுத்துக் கொள்ள முடியாது. எனினும், அந்த பகுதியின் வழக்கம் அனுமதித்தால், அவ்வாறு ஒரு அனாதையை தத்தெடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு தத்தெடுத்துக் கொள்ளும்பொழுது, அவ்விரு விதவை களில், மூத்தவள், தத்தெடுத்த தாயாவாள் (adoptive mother); இளையவள், மாற்றாந் தாயாவாள் (step mother). ஆனால் மேற்படி சட்டத்திற்கு பிறகு, இத்தத்தெடுப்பு நடந்திருந் தால், அது செல்லாது. ஏனெனில், மேற்படி சட்டத்தின் பிரிவு 11(v)–ன்படி, ஒரு குழந்தையை ஒரே நேரத்தில் இருவர் தத்தெடுத்துக் கொள்ள முடியாது.

எனவே அத்தத்தெடுப்பு செல்லாது.

26. A is a coparcener in a joint family. He is given in adoption. Does he lose his coparcenary interest in the genitive family?

A என்பவர் கூட்டுக் குடும்பத்தில் ஒரு பங்குரிமையர். அவர் தத்து கொடுக்கப்படுகிறார். இதனால் தான் பிறந்த குடும்பத்தில் உள்ள பங்குரிமை நலனை அவர் இழந்துவிடுவாரா?

தீர்வு:

1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பிருந்த நிலைப்படி, தத்து கொடுக்கப்பட்ட பின், அவ்வாறு தத்து கொடுக்கப்பட்டவர், தான் பிறந்த குடும்பத்தில் உள்ள அனைத்து உரிமைகளையும், நலன் களையும் இழந்துவிடுவார். ஆனால் மேற்படி சட்டம் இயற்றப்பட்ட பின், அதன் பிரிவு 12–ன் கீழ் உள்ள நிபந்தனை வாசகத்தின்படி (proviso) தத்து கொடுக்கப்பட்ட ஒருவருக்கு, அவர் தத்து கொடுக்கப்படுவதற்கு முன்பு, அவர் பிறந்த குடும்பத்திலிருந்து அவருக்கு என்னென்ன உரிமைகள் சேர்ந்தடைந்துள்ளதோ, அவை எவற்றையும் இழக்கமாட்டார். இங்கு கூட்டுக் குடும்ப பங்குரிமை என்பது, அவரது பிறப்பால் அவருக்கு சேர்ந்தடைந்த உரிமையாகும் (நலனா கும்) (vested interest). எனவே, அவர் அதை தத்தெடுப்பிற்குப் பின்னரும், பெற உரிமை யுடையவர். அவர் அதை விற்கலாம்; மற்றொருவருக்கு உயில் மூலம் கொடுக்கலாம்; விரும்பிய பாராதீனங்களைச் செய்யலாம். எனவே மேற்படி பிரச்சனையில் கண்ட A–யின் கூட்டுக் குடும்ப பங்குரிமை நலன்கள், அவர் தத்து கொடுக்கப்பட்டதனால் பாதிக்கப்படாது என்பதே தீர்வாகும்.

27. X has two sons A and B. A is given in adoption to Y. Y has a daughter D. Can A marry D ?

X என்பவருக்கு A மற்றும் B என்ற இரு மகன்கள் உள்ளனர். A-வை Y என்பவருக்கு தத்து கொடுக்கிறார். Y-க்கு D என்றொரு மகள் இருக்கிறாள். மேற்படி A, D-யை மணந்து கொள்ளலாமா?

தீர்வு:

1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 12–ன்படி ஒருவன் தத்தெடுக்கப்பட்டவுடன் அவன் தான் தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தில் புதிதாகப் பிறந்த ஒருவனாகவே அனைத்து செயல்களுக்கும் கருதப்படுவான். எனவே A தன்னைத் தத்தெடுத்துக் கொண்ட Y–ன் 'கோத்ரத்தை' (gotra) சேர்ந்தவனா கிறான். இதனால் A-யும் D-யும் ஒருவருக்கொருவர் 'சபிண்டா உறவு முறையினர்' (sapinda relationship) ஆகின்றனர். மேலும் A, தன்னைத் தத்தெடுத்துக் கொண்ட Y–ன் மகளான D–க்கு சகோதரன் ஆகிறான். இது திருமணம் செய்து கொள்வதற்கு தடுக்கப்பட்ட உறவு முறையாகும் (prohibited degrees of relationship). எனவே A, D-யைத் திருமணம் செய்து கொள்ள முடியாது.

28. A Hindu widow inherits property from her husband in 1953. She adopted a boy in 1957. Can the adopted son claim any right over the property inherited by the widow.

26. A is a coparcener in a joint family. He is given in adoption. Does he lose his coparcenary interest in the genitive family?

A என்பவர் கூட்டுக் குடும்பத்தில் ஒரு பங்குரிமையர். அவர் தத்து கொடுக்கப்படுகிறார். இதனால் தான் பிறந்த குடும்பத்தில் உள்ள பங்குரிமை நலனை அவர் இழந்துவிடுவாரா?

தீர்வு:

1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பிருந்த நிலைப்படி, தத்து கொடுக்கப்பட்ட பின், அவ்வாறு தத்து கொடுக்கப்பட்டவர், தான் பிறந்த குடும்பத்தில் உள்ள அனைத்து உரிமைகளையும், நலன் களையும் இழந்துவிடுவார். ஆனால் மேற்படி சட்டம் இயற்றப்பட்ட பின், அதன் பிரிவு 12–ன் கீழ் உள்ள நிபந்தனை வாசகத்தின்படி (proviso) தத்து கொடுக்கப்பட்ட ஒருவருக்கு, அவர் தத்து கொடுக்கப்படுவதற்கு முன்பு, அவர் பிறந்த குடும்பத்திலிருந்து அவருக்கு என்னென்ன உரிமைகள் சேர்ந்தடைந்துள்ளதோ, அவை எவற்றையும் இழக்கமாட்டார். இங்கு கூட்டுக் குடும்ப பங்குரிமை என்பது, அவரது பிறப்பால் அவருக்கு சேர்ந்தடைந்த உரிமையாகும் (நலனா கும்) (vested interest). எனவே, அவர் அதை தத்தெடுப்பிற்குப் பின்னரும், பெற உரிமை யுடையவர். அவர் அதை விற்கலாம்; மற்றொருவருக்கு உயில் மூலம் கொடுக்கலாம்; விரும்பிய பாராதீனங்களைச் செய்யலாம். எனவே மேற்படி பிரச்சனையில் கண்ட A–யின் கூட்டுக் குடும்ப பங்குரிமை நலன்கள், அவர் தத்து கொடுக்கப்பட்டதனால் பாதிக்கப்படாது என்பதே தீர்வாகும்.

27. X has two sons A and B. A is given in adoption to Y. Y has a daughter D. Can A marry D ?

X என்பவருக்கு A மற்றும் B என்ற இரு மகன்கள் உள்ளனர். A-வை Y என்பவருக்கு தத்து கொடுக்கிறார். Y-க்கு D என்றொரு மகள் இருக்கிறாள். மேற்படி A, D-யை மணந்து கொள்ளலாமா?

தீர்வு:

1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 12–ன்படி ஒருவன் தத்தெடுக்கப்பட்டவுடன் அவன் தான் தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தில் புதிதாகப் பிறந்த ஒருவனாகவே அனைத்து செயல்களுக்கும் கருதப்படுவான். எனவே A தன்னைத் தத்தெடுத்துக் கொண்ட Y–ன் 'கோத்ரத்தை' (gotra) சேர்ந்தவனா கிறான். இதனால் A-யும் D-யும் ஒருவருக்கொருவர் 'சபிண்டா உறவு முறையினர்' (sapinda relationship) ஆகின்றனர். மேலும் A, தன்னைத் தத்தெடுத்துக் கொண்ட Y–ன் மகளான D–க்கு சகோதரன் ஆகிறான். இது திருமணம் செய்து கொள்வதற்கு தடுக்கப்பட்ட உறவு முறையாகும் (prohibited degrees of relationship). எனவே A, D-யைத் திருமணம் செய்து கொள்ள முடியாது.

28. A Hindu widow inherits property from her husband in 1953. She adopted a boy in 1957. Can the adopted son claim any right over the property inherited by the widow.

ஒரு இந்து விதவை தனது கணவரது சொத்தை 1953 ஆம் ஆண்டு அடைகிறாள். 1957 ஆம் ஆண்டு ஒரு மகனை மகவேற்பு செய்கிறாள். மகவேற்ற மகன் அந்த சொத்தில் உரிமை கொள்ள முடியுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் தத்தெடுப்பு நடந்த ஆண்டு 1957 ஆகும். எனவே, அத்தத்தெடுப்பிற்கு 1956–ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் பொருந்தும். அச்சட்டத்தின் 12–வது பிரிவு தத்தெடுப்பின் விளைவுகளைக் கூறுகிறது. பிரிவு 12(c)–ன்படி, தத்தெடுப்பிற்கு முன் ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்கு வந்தடைந்த சொத்துரிமை எதையும், தத்தெடுக்கப்பட்ட குழந்தை ஒன்று பறிக்க இயலாது. எனவே மேற்படி பிரச்சனையின்படி, 1953–ஆம் ஆண்டில் ஒரு இந்து விதவை தனது கணவனின் சொத்தை இறங்குரிமையில் அடைகிறாள். இச்சொத்தில், 1957–ஆம் ஆண்டு மேற்படி விதவையால் தத்தெடுக்கப்பட்ட மகன் உரிமை எதையும் கொண்டாட முடியாது என்பதே தீர்வு.

ஆனால் 1956–ஆம் ஆண்டில் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்பு சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பு, தத்தெடுக்கப்பட்ட மகனுக்கு மேற்கண்ட சொத்தில் உரிமை இருந்தது. இது முன்மரபை பாதிக்கும் கோட்பாடு **(Doctrine of relation back)** எனப்படுகிறது. ஆனால் அது தற்பொழுது, மேற்படி சட்டத்தால் பிரிவு 12 (c)–யின் வாயிலாக ஒழிக்கப்பட்டு விட்டது.

29. A Hindu male after adopting a son marries. His wife sends back the adopted son to his genetic family. Is the action valid?

ஒரு இந்து ஆண் ஒரு மகனை தத்தெடுத்த பிறகு திருமணம் செய்து கொள்கிறார். அவருடைய மனைவி தத்தெடுக்கப்பட்ட மகனை அவனுடைய பிறந்த வீட்டிற்கே திருப்பி அனுப்பிவிடுகிறாள். இந்த செயல் செல்லுபடியாகுமா?

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க நாம், 1956–ஆம் ஆண்டு இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் (The Hindu Adoptions and Maintenance Act, 1956) மூன்று சட்டப்பிரிவுகளை ஆராய்தல் அவசியமாகும்.

முதற்கண், மேற்படி சட்டத்தின் பிரிவு 14(3)–ன்படி, "மனைவியை இழந்த அல்லது திருமணமாகாத ஒருவர் (a widower or bachelor), குழந்தை ஒன்றை தத்தெடுத்துக் கொண்டு, பின்னர் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டால், அப்பெண் அக்குழந் தையின் மாற்றாந்தாய் (step mother) ஆவாள்." எனவே, ஒரு இந்து ஆண் தத்தெடுத்துக் கொண்ட பிறகும், திருமணம் செய்து கொள்ளலாம் என்பதும், அது செல்லும் என்பதும் தெளிவு.

இரண்டாவதாக, பிரிவு 12–ன்படி, "தத்தெடுக்கப்பட்ட குழந்தை, தத்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து அனைத்து நோக்கங்களுக்காகவும் தன்னை தத்தெடுத்த தந்தையின் அல்லது தத்தெடுத்த தாயின் குழந்தையாகவே கருதப்படுவார் மற்றும் அத்தகு நாளிலிருந்து தான்

பிறந்த குடும்பத்தில் அக்குழந்தைக்கு இருந்த அனைத்து பந்தங்களும் அறுந்துவிட்டதாக கருதப்படும் மற்றும் தத்தெடுப்பால் தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தில் உருவான அத்தகு பந்தங்களால் இடம் மாற்றி வைக்கப்படும்." எனவே தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்கு, தத்தெடுக்கப்பட்ட பின்னர், தான் பிறந்த குடும்பத்தின் பந்தங்கள் அறுந்துவிடும் என்பது தெளிவு.

மூன்றாவதாக, பிரிவு 15–ன்படி, செல்லத்தக்க முறையில் செய்யப்பட்ட தத்தெடுப்பு எதுவும், தத்தெடுத்த தந்தை அல்லது தாய் அல்லது வேறு நபர் எவராலும் இரத்து செய்யப்பட முடியாது. மேலும் அக்குழந்தை தனது தத்தெடுப்பு அந்தஸ்தை துறந்து, மீண்டும் தான் பிறந்த குடும்பத்திற்கு திரும்ப முடியாது. இப்பிரிவில்தான் மேற்படி பிரச்சனையின் தீர்வு அடங்கியுள்ளது.

அதாவது, மேற்படி பிரச்சனையின்படி, செல்லத்தக்க தத்தெடுப்பிற்குப் பின்னர், செய்து கொண்ட திருமணத்தால், மனைவியாக வந்தவள், தன் கணவனால் தத்தெடுக்கப்பட்ட மகனை மீண்டும் அவன் பிறந்த குடும்பத்திற்கே அனுப்புகிறாள். பிரிவு 15–ன்படி அவள் இவ்வாறு அனுப்ப முடியாது. அப்படி அனுப்பினால், அது செல்லுபடியாகாது. இதுவே தீர்வு.

30. A Hindu father adopts a male child after his only son had married under the Special Marriage Act. Is the adoption valid?

தன் ஒரே மகன் சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொண்ட பின், இந்து தந்தை ஒருவர் ஒரு ஆண் குழந்தையை மகவேற்பு செய்கிறார். மகவேற்பு செல்லுமா?

தீர்வு:

ஒரு இந்து 1877–ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொண்டால், அவர், தாம் இந்து மதத்தை பின்பற்றவில்லை என்று விளம்புகை செய்தல் வேண்டும். எனவே மேற்படி சட்டத்தின்படி, சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொண்ட ஒரு இந்து, அத்திருமணத்திற்குப் பின் இந்துவாக இருக்கமாட்டார். எனவே அவரைத் தவிர வேறொரு மகன் இல்லாத, அவரது தந்தை இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 11(i)–ன்படி, ஒரு ஆண் குழந்தையை தனது மகனாக தத்தெடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் பின்னிட்டு 1954–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி திருமணம் செய்து கொள்ளும் ஒரு இந்து, மேற்கண்டவாறு தாம் இந்து மதத்தைப் பின்பற்றவில்லை என்று விளம்புகை ஏதும் செய்யத் தேவையில்லை. எனவே அவர் மேற்படி 1954–ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழான தனது திருமணத்திற்குப் பிறகும், ஒரு 'இந்து'வாகவே நிலைத்திருக்கிறார். எனவே அவரது தந்தை மற்றொரு மகனை தத்தெடுக்க முடியாது. ஏனெனில், மேற்படி பிரிவு 11(i)–ன்படி தந்தை ஒரு மகனைத் தத்தெடுக்க, அவருக்கு தத்தெடுப்பிற்கு முன்பாக இந்து மகன் எவரும் இருத்தல் கூடாது. ஆனால் மேற்படி பிரச்சனையில், அவரது ஒரே மகன் சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி திருமணம் செய்து கொண்டாலும், ஒரு 'இந்து'–வாகவே தொடர்ந்து இருப்பதால், அவர் மற்றொரு மகனைத் தத்தெடுக்க முடியாது என்பதே தீர்வு.

பராமரிப்பு [Maintenance]

31. A, a Hindu widow, sued her father and father-in-law for maintenance separately. Will she succeed?

'அ' எனும் இந்து விதவை, பராமரிப்பு கோரி தனது தந்தை மீதும், மாமனார் மீதும் தனித்தனியாக வழக்கிடுகிறாள். அவள் வெற்றி பெறுவாளா?

தீர்வு:

1956–ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் கீழ், விதவையான ஒரு மகளை பராமரிக்க வேண்டிய சட்டப்படியான தனிப் பொறுப்பு (personal legal liability) தந்தைக்கு கிடையாது. அவருக்கு அறக் கடப்பாடு மட்டுமே உண்டு (moral obligation). ஆனால் இந்த அறக்கடப்பாடு, அவரது இறப்பிற்குப் பிறகு, அவரது சொத்துக்களை இறங்குரிமையில் அடையும் அவரது வாரிசுகளுக்குரிய சட்டப் பொறுப்பாக மாறுகிறது. எனினும் தந்தை உயிருடன் உள்ள வரை, அவர் விதவையான தனது மகளை பராமரிக்க சட்டப்படி கடமைப்பட்டவரல்ல. எனவே, பராமரிப்பு கோரி, தந்தை மீது அவள் தொடுக்கும் வழக்கு தோற்றுப் போகும்.

மாமனாருக்கு எதிராக அவள் தொடுக்கும் வழக்கைப் பொறுத்தவரை, மாமனார் வசம் பங்குரிமைச் சொத்திருந்து (coparcenary property), அதில் அவ்விதவை (மருமகள்) எந்தப் பங்கையும் பெறாமல் இருந்தால், மாமனார் அவளை பராமரிக்க சட்டப்படி கடமைப்பட்டவர் ஆவார். அவள் அவ்வழக்கில் வெற்றி பெறுவாள். ஆனால் அவ்வாறு பங்குரிமைச் சொத்து ஏதும் இல்லாத பொழுது, மாமனார், தனது விதவை மருமகளைப் பராமரிக்க அறக் கடப்பாடு மட்டுமே கொண்டுள்ளார். எனினும் இது அவரது இறப்பிற்குப் பின், அவரது சொத்துக்களை இறங்குரிமையில் அடையும் அவரது வாரிசுகளின் சட்டக் கடமையாக மாறுகிறது. (இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் பிரிவு 19–இன்படி).

32. Raman's son, Mohan married Rathi in 2002. Mohan died in 2004. Rathi claimed maintenance from Raman. Can she succeed?

இராமனின் மகன் மோகன் என்பவர் 2002-ஆம் ஆண்டு ரதியை மணந்தார். 2004-ல் மோகன் இறந்துவிட்டார். ரதி இராமனிடமிருந்து வாழ்க்கைப் பொருளுதவி கோரினார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

ரதி தனது மாமனார் இராமனிடமிருந்து பராமரிப்புத் தொகை (வாழ்க்கைப் பொருளுதவி) கோர உரிமையுண்டு. ரதி வெற்றி பெறுவார். முன்சென்ற பிரச்சனையின் இரண்டாம் பத்தியிலும், மேலும் இந்த நூலின் பக்கம் எண். 113–லும் விரிவாகக் காண்க).

33. A's property is inherited by his brother B. The illegitimate daughter of A claims maintenance from B. Can she claim so?

'அ'-வின் சொத்தை 'ஆ' எனும் அவரது சகோதரர் இறங்குரிமையில் அடைகிறார். 'அ'-வின் முறையற்ற மணப்பிறப்பு மகள் 'ஆ'-விடமிருந்து பராமரிப்பு கோருகிறாள். அவள் அவ்வாறு கோர முடியுமா?

தீர்வு:

பண்டைய இந்து சட்டத்தின்படி, முறையற்ற மணப்பிறப்பு மகள் ஒருத்தி, பராமரிப்பு கோர முடியாது.

எனினும் தற்பொழுதைய 1956–ஆம் ஆண்டின் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் கீழ், அவள் தான் உரிமை வயதை அடையாத இளவர் நிலையில் (minority) உள்ள பொழுது, தனது தாயார் மற்றும் தந்தையாக கருதப்படும் நபரிடமிருந்து (putative father) பராமரிப்பு கோரலாம். அவர்களின் ஒருவரின் அல்லது அவர்கள் இருவரின் இறப்பிற் குப் பின்னிட்டு, அவர்களின் சொத்தை இறங்குரிமையில் அடைந்த அல்லது உயில்வழியில் அடைந்த நபர்களிடமிருந்து, பராமரிப்பு கோரலாம்.

இவ்வுரிமை அவள் திருமணமாகும் வரை தொடர்கிறது. எனவே அவள் தற்பொழுதைய இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் கீழ், 'அ'–வின் இறப்பிற்குப் பிறகு, அவரது சொத்துக்களை அடைந்த அவரது சகோரர் 'ஆ'–விடமிருந்து பராமரிப்பு கோரலாம்.

இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம், 1956

34. The immovable property of a Hindu minor is sold by the father for the benefit of the minor without the permission of the Court? Is the sale valid?

ஒரு இந்து இளவரின் அசையாச் சொத்தை, அவரது நலனுக்காக அவரது தந்தை, நீதிமன்றத்தின் அனுமதி பெறாமல் விற்றுவிடுகிறார். இந்த விற்பனை செல்லுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் விற்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ள அசையாச் சொத்து, அந்த இளவரின் தனிச் சொத்தாக (separate property) இருக்கும்பட்சத்தில், அவரது காப்பாளர், அவர் அவ்விளவரின் தந்தையாக இருந்தாலுமே கூட, அவ்வாறு விற்பதற்கு நீதிமன்றத்தின் முன்னனுமதி பெற வேண்டும். [இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டத்தின் பிரிவு 8 (2) (a)].

இல்லாது போனால், அவ்விற்பனை இரத்து செய்யத்தக்கதாகும். ஆனால் அச்சொத்து, பங்குரிமைச் சொத்தின் ஒரு பாகமாக (a share in coparcenary property) இருந்தால், தந்தை அதை அவ்விளவரின் நலனுக்காக விற்பதற்கு நீதிமன்றத்தின் முன்னனுமதி பெற வேண்டிய அவசியமில்லை (பிரிவு 12).

இசுலாமியர் சட்டம் [Muslim Law]

திருமணம் [அல்லது] நிக்காஹ் [Marriage (or) Nikah]

35. A male and a female, both are Mohammedans announce in the newspapers that they propose to live as husband and wife from a specified date and accordingly live together. Is it a valid marriage?

முகமதியர்களான ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தாங்கள் இருவரும் குறிப்பிட்ட நாள் ஒன்றிலிருந்து கணவன் மனைவியாக வாழவிழைவதாக செய்தித்தாள்களில் தெரிவித்துவிட்டு, அவ்வாறே வாழ்கின்றனர். அது செல்லும் தன்மை கொண்ட திருமணமா?

தீர்வு:

இசுலாமியர்களிடையே நடக்கும் திருமணம் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமே தவிர, அதில் இந்து திருமணத்தைப் போன்று புனிதத்துவமான சடங்குகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுவதில்லை. வேறு விதத்தில் சுருக்கமாகக் கூறுவதென்றால், இசுலாமியர் திருமணம் என்பது கால வரையற்ற ஆண்–பெண் வாழ்க்கை ஒப்பந்தம் (civil contract) ஆகும். எனவே இதில் ஒப்பந்தம் ஒன்றிற்குத் தேவையான கூறுகளும் உள்ளன. அதாவது முனைவு (proposal or offer), ஏற்பு (acceptance), ஒப்பந்தத் தகுதி (competency to contract) போன்ற சரத்துக்கள் இசுலாம் திருமணத்தில் உள்ளன. எனினும் இது எழுத்துவடிவில் எழுதிக் கொள்ளப்பட வேண்டும் என்ற கட்டாய நிபந்தனை ஏதும் இல்லை.

மேற்படி பிரச்சனையில் இசுலாமியர்களான ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒரு குறிப்பிட்ட தினத்திலிருந்து கணவன் மனைவியாக வாழவிழைவதாக செய்தித்தாள்களில் தெரிவித் திருப்பது, அவர்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தில் மனமொத்து ஈடுபட உள்ளதைக் காட்டுகிறது. இங்கு இருவரும் சேர்ந்து அவ்வாறு தெரிவித்துள்ளதால், ஒருவரது முனைவு மற்றொருவரால் ஏற்கப்பட்டதாகிறது. செய்தித்தாள் படித்த அனைவரும் அவர்கள் இருவருக்குமிடையே நடைபெறவிருக்கும் திருமணத்தை அறிந்தவர்கள் (சாட்சிகள்) ஆகின்றனர். அவ்வாறு அவர்கள் வாழத் தொடங்கியதும், அவர்களது வாழ்க்கை ஒப்பந்தம் சட்டப்படி அமலுக்கு வந்துவிட்டது; திருமணம் நடந்துவிட்டதாகியது. எனவே இது செல்லும் தன்மை கொண்ட திருமணமே.

எனினும் அடிப்படையாக அந்த ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் இரத்த சம்மந்தம் உடையவர்களாக (Consanguinity), கொள்ளுறவு கொண்டவர்களாக (Affinty), பாலூட்டி வளர்த்த செவிலித்தாய் வழி உறவுடையவர்களாக (Fosterage) இருத்தல் ஆகாது. அவ்வாறு இருந்தால், அது இல்லா நிலைத் திருமணமாகும்.

36. A Muslim youth marries his wife's niece. Is it valid?

ஒரு இசுலாம் இளைஞர், தனது மனைவியின் சகோதரி மகளை மணக்கிறார். இது செல்லுமா?

தீர்வு:

இசுலாமியர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணக்கும் பொழுது, அவர்கள் ஒருவருக்கொருவர் இரத்த தொடர்புடையவர்களாகவோ, கொள்ளுறவு கொண்டவர் களாகவோ, பாலூட்டி வளர்த்த முறையினராகவோ இருத்தல் கூடாது என்றும், அப்படி மணந்து கொண்டால், அது சட்ட முரணான சேர்க்கை (unlawful conjunction) என்றும், எனவே அது ஒழுங்கற்ற திருமணமாகிவிடும் (irregular marriage) என்றும் இசுலாம் சட்டத்தின் 263–வது பிரிவு கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில், மனைவியும், அவளது சகோதரி மகளும் ஒருவருக்கொருவர் இரத்த தொடர்புடையவர்கள். எனவே, அந்த இசுலாம் இளைஞர், தனது மனைவியின் சகோதரி மகளைத் (niece) திருமணம் செய்து கொள்ள முடியாது. அது ஒழுங்கற்ற திருமணமாகும். எனவே செல்லுபடியாகாது என்பதே தீர்வு.

37. A Muslim marries his wife's widowed step-mother. Is this marrige valid?

ஒரு இசுலாமியர் தனது மனைவியின் விதவை மாற்றாந்தாயை மணக்கிறார். இத்திருமணம் செல்லுமா?

தீர்வு:

பிறப்பால் ஏற்படுவது இரத்த சம்பந்தம். அதுவே திருமணத்தின் மூலம் ஏற்பட்டால், அது கொள்ளுறவு ஆகும். இங்கு மனைவியின் விதவை மாற்றாந்தாய் என்பவள், அந்த இசுலாமியருக்கு திருமணத்தின் மூலம் ஏற்பட்ட கொள்ளுறவு ஆகும். எனவே, இசுலாம் சட்டத்தின் பிரிவு 261–ன்படி, இத்திருமணம் இல்லாநிலையதாகும் (void). எனவே செல்லாது.

38. 'A' a mohammedan married his wife's sister. Is the marriage valid? Will it make any difference if 'A' happens to be a Hindu?

'அ' என்னும் ஒரு முகம்மதியர் அவருடைய மனைவியின் சகோதரியை திருமணம் செய்து கொண்டார். அந்த திருமணம் செல்லு படியாகுமா? 'அ' என்பவர் ஒரு இந்துவாக இருந்தால் இதில் ஏதாவது வேறுபாடு இருக்குமா?

தீர்வு:

இசுலாமியர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணக்கும் பொழுது, அவர்கள் ஒருவருக்கொருவர் இரத்த தொடர்புடையவர்களாகவோ, கொள்ளுறவு கொண்டவர் களாகவோ, பாலூட்டி வளர்த்த முறையினராகவோ இருத்தல் கூடாது என்றும், அப்படி மணந்து கொண்டால், அது சட்ட முரணான சேர்க்கை (unlawful conjunction) என்றும், எனவே அது ஒழுங்கற்ற திருமணமாகிவிடும் (irregular marriage) என்றும் இசுலாம் சட்டத்தின் 263–வது பிரிவு கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில், மனைவியும், அவளது சகோதரியும் ஒருவருக்கொருவர் இரத்த

தொடர்புடையவர்கள். எனவே, 'அ' எனும் இசுலாமியர், தனது மனைவியின் சகோதரியை திருமணம் செய்து கொள்ள முடியாது. அது ஒழுங்கற்ற திருமணமாகும். எனவே செல்லுபடியாகாது என்பதே தீர்வு.

மேற்படி பிரச்சனையில் 'அ' என்பவர் இந்துவாக இருந்தால், மேற்கண்ட நிலைப்பாட்டில் நிச்சயமாக வேறுபாடு உண்டு. 1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 5 (i)–ஆனது, ஒரு செல்லத்தக்க திருமணத்திற்குண்டான நிபந்தனைகளில் ஒன்றாக, திருமணம் செய்து கொள்ளும் நபருக்கு திருமணம் நடைபெறும் காலத்தில் வேறு மனைவியோ, கணவனோ உயிருடன் இருக்கக் கூடாது, என்று கூறுகிறது. எனவே அப்படி இருந்தால், அத்திருமணம், பிரிவு 11–ன்படி இல்லாநிலைத் திருமணமாகும். மேலும் இருதார மணம் (Bigamy) புரிந்த குற்றத்திற்காக 'அ' என்பரை இந்திய தண்டனைச் சட்டத்தின் 494 மற்றும் 495–ஆவது பிரிவுகளின் கீழ் தண்டிக்கலாம் என்று இந்து திருமணச் சட்டத்தின் 17–வது பிரிவு கூறுகிறது. எனவே, மேற்படி 'அ' என்பவர் இந்துவாக இருந்து, அவர் தனது மனைவி உயிருடன் உள்ள பொழுது, அவளது சகோதரியை திருமணம் செய்து கொண்டால், அத்திருமணம் இல்லா நிலைத் திருமணமாகும். மேலும் 'அ' இருதார மணம் புரிந்த குற்றத்திற்கும் ஆளாவார். ஆனால் 'அ'–வின் மனைவி இறந்து போயிருந்தால், அல்லது நீதிமன்றத் தீர்ப்பாணை மூலம் முறைப்படி 'அ'–விற்கும் அவரது மனைவிக்கும் இடையே மணமுறிவு ஏற்பட்டிருந்தால், அங்கு 'அ' என்பவர் தனது முன்னாள் மனைவியின் சகோதரியை திருமணம் செய்து கொள்வதில் தடையில்லை.

39. 'A' a Shia male muslim married 'B', a shia female in 1980. Then in 1982, 'A' married 'C' who is 'B's sister. Decide its validity.

'அ' என்ற ஷியா ஆண் முஸ்லீம் 'ஆ' என்ற ஷியா பெண்ணை 1980 ஆம் ஆண்டு திருமணம் புரிகிறார். பிறகு 1982 ஆம் ஆண்டு 'அ', 'இ' என்ற 'ஆ'யின் சகோதரியையும் திருமணம் புரிகிறார். இதன் செல்லும் தன்மையை தீர்மானிக்க.

தீர்வு:

இப்பிரச்சனைக்கும் முன்சென்ற பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட தீர்வே பொருந்தக் கூடியதாக இருக்கும். அதாவது இசுலாமியர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணக்கும் பொழுது, அவர்கள் ஒருவருக்கொருவர் இரத்த தொடர்புடையவர்களாகவோ, கொள்ளுறவு கொண்டவர்களாகவோ, பாலூட்டி வளர்த்த முறையினராகவோ இருத்தல் கூடாது என்றும், அப்படி மணந்து கொண்டால், அது சட்ட முரணான சேர்க்கை (unlawful conjunction) என்றும், எனவே அது ஒழுங்கற்ற திருமணமாகிவிடும் (irregular marriage) என்றும் இசுலாம் சட்டம் கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில், மனைவியும், அவளது சகோதரியும் ஒருவருக்கொருவர் இரத்த தொடர்புடையவர்கள். எனவே, 'அ' எனும் இசுலாமியர், தனது மனைவியின் சகோதரியை திருமணம் செய்து கொள்ள முடியாது. அது ஒழுங்கற்ற திருமணமாகும். எனவே செல்லுபடியாகாது என்பதே தீர்வு.

இங்கு கவனிக்கத்தக்கது என்னவென்றால் ஷியா பிரிவைச் சேர்ந்த ஆண் ஒருவர் இத்தகு திருமணத்தைச் செய்து கொள்கிறார். ஷியா பிரிவினரைப் பொறுத்தவரை, 'அ' என்ற ஷியா ஆண், 'ஆ' என்ற தனது மனைவியின் சகோதரியான 'இ' என்பவரை செய்து கொள்ளும்

திருமணம் மேற்கண்ட அதே காரணங்களால் இல்லாநிலையதாகும் (void).

ஆசிரியர் **ஜி.சி.வி.சுப்பாராவ்** தனது 'Family Law in India' எனும் நூலில் ஷியா பிரிவைச் சேர்ந்த ஆண் ஒருவர், தனது மனைவியின் சகோதரர் அல்லது சகோதரியின் மகளை அம்மனைவியின் சம்மதமின்றி திருமணம் செய்து கொள்ள முடியாது என்று கூறுகிறார். (மனைவின் சகோதரர் அல்லது சகோதரியின் மகளும் மனைவிக்கு சகோதரியே ஆகிறது). இங்கு ஆசிரியர், மனைவி சம்மதம் அளித்தால் செல்லும், இல்லாது போனால் இல்லாநிலைத் திருமணம் எனும் பொருளில் விளக்கியுள்ளளார். (அந்நூலின் 'Mahommeden Law' எனும் அத்தியாயத்தில் 'Lecture 5' எனும் தலைப்பில் உட்தலைப்பு 5.3(b)–யில் காண்க.)

40. 'A' a Shia woman marries a Christian male. Is the marriage valid? Will it make any difference if 'A' is a Sunni woman?

ஷியா பிரிவைச் சார்ந்த 'அ' என்ற பெண் ஒரு கிருத்துவரை திருமணம் செய்கிறார். இத்திருமணம் செல்லும் நிலையதா? 'அ' சுன்னி பிரிவைச் சார்ந்தவராக இருந்தால் வேறுபாடு ஏதேனும் ஏற்படுமா?

தீர்வு:

இசுலாம் மதத்தின் ஷியாப் பிரிவின்படி, ஒரு இசுலாம் பெண், இசுலாமியர் அல்லாத ஒருவரை மணந்து கொண்டால், அது இல்லாநிலைத் திருமணமாகும் **(void marriage)**. மேற்படி பிரச்சனையில், 'அ' எனும் ஷியாப் பிரிவைச் சார்ந்த இசுலாம் பெண், கிறுத்தவர் ஒருவரை மணந்து கொள்கிறார். இத்திருமணம் இல்லாநிலைத் திருமணமாகும். எனவே செல்லாதது. ஆனால் அப்பெண், சுன்னிப் பிரிவைச் சார்ந்தவளாக இருப்பின், அவளது மேற்படி திருமணம், ஒழுங்கற்ற திருமணமாகும் **(irregular marriage)**.

41. A Shia male marries a Christian woman for 10 years. Is it valid?

ஷியா பிரிவைச் சார்ந்த ஒரு ஆண், 10 ஆண்டுகளுக்கு ஒரு கிறுத்தவ பெண்ணை திருமணம் செய்து கொள்கிறார். இத்திருமணம் செல்லுமா?

தீர்வு:

மேற்கண்ட திருமணம், ஒரு செல்லத்தகு முத்தா திருமணம் (Mutta Marriage) ஆகும். ஷியாப் பிரிவைச் சார்ந்த ஒரு இசுலாமியர், இசுலாம் அல்லாத ஒரு 'கிதாபியா' பெண்ணை (non-muslim Kitabia) திருமணம் செய்து கொள்ளலாம். ('கிதாபியா' என்பது, மத நூல் உடையவர் என்று பொருள். மேற்கண்ட பிரச்சனையில் சம்பந்தப்பட்ட கிறுத்தவ பெண்மணி, மத நூல் உடையவர். அவரது மத நூல் 'பைபிள்' ஆகும்.)

42. A sunni Mohammedan married a Christian lady as per Mohammedan law. Is this marriage valid? Will it make any difference if they register the marriage under Special Marriage Act?

ஒரு சுன்னி முகம்மதியர், ஒரு கிறித்துவ பெண்மணியை முகம்மதிய சட்டப்படி திருமணம் செய்கிறார். இத்திருமணம் செல்லு நிலையதா?

இத்திருமணம் சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருந்தால் வேறுபாடு ஏதேனும் ஏற்படுமா?

தீர்வு:

ஒரு சுன்னி இசுலாமிய ஆண், இசுலாமியர் அல்லாத ஒரு 'கிதாபியா' (non-Mohammedan Kitabia)பெண்ணை திருமணம் செய்து கொள்ளலாம். அதாவது 'கிதாபியா' என்பது மேற்சென்ற பிரச்சனையின் தீர்வில் குறிப்பிட்டவாறு 'மத நூல் உடையவர்' என்ற பொருளாகும். இங்கு அவர் ஒரு கிறித்துவ பெண்மணியை இசுலாம் சட்டப்படி மணந்து கொள்கிறார். கிறித்தவர்களுக்கு மத நூலாக 'பைபிள்' உண்டு. இத்திருமணம் செல்லத் தக்கதா என்று கேட்டால், இதனை 'ஒழுங்கற்ற திருமணம்' (irregular) என்றே கூற வேண்டும். அதாவது, அப்பெண்மணி எப்போதும் வேண்டுமானாலும் கிறுத்துவ மதத்தை விட்டு இசுலாம் மதத்தைத் தழுவுவதன் மூலம் மேற்படி திருமணத்தை ஒழுங்கான செல்லும் திருமணமாக்கலாம். (The Sunnies take a more lenient view and regard it is an irregular marriage. The woman may at any time embrace Islam and cure the irregularity. Till then the marriage would be irregular among Sunnies).

மேற்கண்டவர்கள் இருவரும் சிறப்புத் திருமணத்தின்படி திருமணம் செய்து கொண்டிருந்தால், அது செல்லும் திருமணமாகிவிடும்.

43. 'A' marries 'B' a woman undergoing Iddat at that time. Subsequently 'A' dies. 'B' claims A's property as his wife. Is her claim tenable?

'ஆ' என்ற பெண் இத்தா இருக்கும் சமயம் 'அ' என்பவர் அவரை திருமணம் செய்து கொண்டார். பிறகு 'அ' இறந்து விடுகிறார். 'அ'வின் மனைவி என்று கூறி 'ஆ' அவரின் சொத்துக்களின் மீது உரிமை கோருகிறார் - முடிவு செய்க.

தீர்வு:

ஒரு பெண் இத்தா இருப்பது இரண்டு சூழல்களில் 'இத்தா' இருக்க வேண்டும் என்று இசுலாம் சட்டம் கூறுகிறது. அச்சூழ்நிலைகள், (1) கணவனது இறப்பினால், (அல்லது) (2) கணவன் தலாக் (மணமுறிவு) செய்ததினால். 'இத்தா' என்பதை 'தனிமையில் துயர் எண்ணிக் கழித்தல்' என்பார்கள். இவ்வாறு இத்தா இருக்கும் காலம், 4 மாதம் 10 நாட்கள் ஆகும். எனவே மணமான ஒரு இசுலாம் பெண், தனது கணவன் இறந்த தேதியிலிருந்து அல்லது தனது கணவன் தன்னை தலாக் செய்ததிலிருந்து 4 மாதம் 10 நாட்கள் இத்தா இருக்க வேண்டும் (அதாவது தனிமையில் துயர் எண்ணிக் கழிக்க வேண்டும்). இவ்வாறு ஒரு பெண் இத்தா இருக்கும் சமயத்தில், அவளைத் திருமணம் செய்து கொண்டால், அஃது ஒழுங்கற்ற திருமணமாகும் (irregular marriage) என்று இசுலாம் சட்டம் கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் 'ஆ' எனும் பெண் இத்தா இருக்கும் சமயத்தில் அவளை 'அ' என்பவர் திருமணம் செய்து கொள்கிறார். இது மேற்சொன்னவாறு ஒழுங்கற்ற திருமணமாகும். இந்நிலையில் மேற்படி 'அ' இறந்து விடுகிறார். ஒரு ஒழுங்கற்ற திருமணத்தால், கணவன்,

மனைவிக்கிடையே எவ்விதமான பரஸ்பர வாரிசுரிமையும் எழுவதில்லை. எனவே, 'ஆ' எனும் மனைவி, தனது 'அ' எனும் இறந்து போன கணவனின் சொத்தில் எவ்வித வாரிசுரிமையும் கொண்டாட இயலாது. அவளுக்கு தனது கணவனின் சொத்தில் வாரிசுரிமை ஏதுமில்லை.

44. 'X' a Mohammedan divorced his wife 'Y' pronouncing irrevocable talak. After one month 'Y' married 'A'. Is the marriage valid?

'X' என்கிற முகம்மதியர் இரத்து செய்ய முடியாத தலாக் சொல்லி அவருடைய மனைவி 'Y' என்பவரிடமிருந்து மணமுறிவு பெறுகிறார். ஒரு மாதத்திற்குப் பிறகு 'Y' 'A' என்பவரை திருமணம் செய்கிறார். இத்திருமணம் செல்லும் நிலையதா?

தீர்வு:

இத்திருமணம் செல்லாது. ஏனெனில் இசுலாம் சட்டப்படி ஒரு இசுலாம் பெண்ணின் கணவன் இறந்த பிறகு அல்லது அவனிடமிருந்து மணமுறிவு (தலாக்) பெற்ற பிறகு, அவள் 'இத்தா' இருக்க வேண்டும். இவ்வாறு இத்தா இருக்கும் காலம், 4 மாதம் 10 நாட்கள் ஆகும். இந்த காலம் முடிவதற்குள் அவள் மற்றொரு திருமணம் செய்து கொண்டால், அஃது ஒழுங்கற்ற திருமணமாகும் (irregular marriage) என்று இசுலாம் சட்டம் கூறுகிறது. மேற்படி பிரச்சனையில் அப்பெண் 'X'–யிடமிருந்து தலாக் பெற்ற பிறகு ஒரு மாதத்தில் 'Y' என்பவரை திருமணம் செய்து கொள்கிறாள். எனவே செல்லும் நிலையதல்ல என்பதே தீர்வு.

மணமுறிவு (அல்லது) தலாக் [Divorce (or) Talak]

45. A Muslim divorces his wife by pronouncing Talak in a state of voluntary intoxication. Examine its validity.

ஒரு முகமதியர் தானே மது அருந்தி போதை நிலையில் தன் மனைவியை தலாக் கூறி மணமுறிவு செய்கிறார். இது செல்லுமா?

தீர்வு:

இசுலாம் சட்டமானது,"திட சித்தமுடைய (sound mind), பருவமடைந்த இசுலாம் ஆண் எவரும், தான் விரும்பிய பொழுது, காரணம் எதுவும் குறிப்பிடாமல், தனது மனைவியை தலாக் கூறி மணமுறிவு செய்யலாம்" என்று கூறுகிறது.

மேற்கண்ட பிரச்சனையில் இசுலாமியர் தானே வலிய மதுவருந்திய போதை நிலையில் தன் மனைவியை தலாக் கூறி மணமுறிவு செய்கிறார். இது மேற்படி பிரிவின்படி திட சித்தத்துடன் தலாக் செய்ததாகாது. மதுவருந்திய போதை நிலை இருக்கும் பொழுது, அங்கு தெளிவான மனநிலை (திட சித்தம்) இருக்காது. எனவே இவ்வாறு கூறிய தலாக் செல்லாது என்பதே தீர்வு.

46. 'A' a sunni muslim male married 'B' a shia female who was 13 years at the time of her marriage in 1987. In the year 2002 she filed a petition before the court for the revocation of marriage. Decide.

'அ' என்ற சன்னி முஸ்லீம் ஆண் 'ஆ' என்ற ஷியா முஸ்லீம் பெண்ணை 1987 ஆம் ஆண்டு அவளுக்கு 13 வயதாக இருக்கும்போது திருமணம் செய்கிறார். 2002 ஆம் ஆண்டு அவள் திருமணத்தை இரத்து செய்ய மனு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார். தீர்மானிக்கவும்.

தீர்வு:

1939–ஆம் ஆண்டின் இசுலாம் திருமண இழப்புச் சட்டத்தின் (Dissolution of Muslim Marriage Act) பிரிவு 2(vii)–இன்படி, 15 வயது பூர்த்தியடைவதற்கு முன் ஒரு இசுலாம் பெண்ணின் திருமணத்தை, அவளது தந்தை அல்லது காப்பாளர் எவரேனும் நடத்தி வைத்திருந்தால், அவள் 18 வயதைப் பூர்த்தி செய்யும் முன்னர், அத்திருமணத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அறிவித்து திருமண முறிவு கோரலாம். இது 'கியாருல் புலூக்' அல்லது 'பருவமடைந்தோர் விருப்புரிமை' (Khyar-ul-bulugh or Option of Puberty) எனப்படுகிறது.

இனி நமது மேற்படி பிரச்சனைக்கு வருவோம். அதன்படி அ என்பவர் ஆ என்பவளை 1987-ஆம் ஆண்டில் மணந்து கொள்கிறார். அப்போது அவளுக்கு வயது 13. அதாவது மேற்படி பிரிவின்படி 15 வயதிற்குள் திருமணம் நடந்துள்ளது. இந்நிலையில் அவள் 2002–ஆம் ஆண்டில் அத்திருமணத்தை இரத்து செய்ய விரும்புகிறாள். அப்போது அவளது வயது 25–ஆக இருக்கும். மேற்படி பிரிவின்படி அவள் தனது திருமணத்தை 18 வயதைப் பூர்த்தி செய்வதற்கு முன் இரத்து செய்து கொள்ள மனுச் செய்திருக்க வேண்டும். ஆனால் இங்கு அந்த 18 வயது கடந்து விட்டது. எனவே இந்த அடிப்படையில் அவள் தனது திருமணத்தை இரத்து செய்து கொள்ள தாக்கல் செய்த மனுவில் அவள் வெற்றி பெற வழியில்லை என்பதே தீர்வு.

47. A Hindu female converted to Islamic religion and then married a Muslim male in 1965. In 1968, she reconverted to Hindu religion. Examine the legal effect of such reconversion under Section 4 of the Dissolution of Muslim Marriage Act 1939.

ஒரு இந்து பெண் இஸ்லாமிய மதத்திற்கு மதம் மாறிய பிறகு ஒரு முஸ்லீம் ஆண் மகனை 1965-இல் மணம் செய்து கொள்கிறாள். பிறகு 1969-இல் அவள் மீண்டும் இந்து மதத்திற்கு மதம் மாறினாள். முகமதிய திருமணக் கலைப்புச் சட்டம் 1939 பிரிவு 4ன்படி அத்தகைய மதம் மாறுதலின் சட்ட விளைவுகளை விளக்குக.

தீர்வு:

1939–ஆம் ஆண்டின் இசுலாம் திருமண இழப்புச் (கலைப்புச்) சட்டத்தின் 4–ஆவது பிரிவு மதமாற்றத்தால் ஏற்படும் விளைவு குறித்து கூறுகிறது. அதன்படி, திருமணமான ஒரு இசுலாம் பெண் இசுலாம் மதத்தை துறந்துவிடுவது அல்லது வேறு மதத்திற்கு மாறி விடுவது மட்டுமே, தானாக அவளது திருமணத்தை ஒரு முடிவிற்கு கொண்டு வந்துவிடாது.

இருப்பினும், அத்தகு துறப்பிற்கு அல்லது மத மாற்றத்திற்குப் பிறகு, அப்பெண் மேற்படி சட்டத்தின் 2–ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படைகளின் கீழ் திருமண முறிவுத் தீர்ப்பாணை வேண்டி நீதிமன்றத்தில் வழக்கிட உரிமை படைத்தவள்.

மேலும், இப்பிரிவின் வகைமுறைகள் தனது முந்தைய மத நம்பிக்கையை மீண்டும் தழுவியுள்ள, வேறு மத நம்பிக்கையிலிருந்து இசுலாம் மதத்திற்கு மாறிய ஒரு பெண்ணிற்குப் பொருந்தாது. (The provisions of section 4 shall not apply to a woman converted to Islam some faith who re-embraces her former faith) (இந்தப் பத்திதான் மேற்படி பிரச்சனைக்கு விளக்கம் பகர்கிறது).

மேற்படி பிரச்சனையில் ஒரு இந்து பெண் இசுலாமிய மதத்திற்கு மதம் மாறுகிறாள். பிறகு ஒரு இசுலாமிய ஆண் மகனை 1965–இல் மணம் செய்து கொள்கிறாள். பிறகு 1969–இல் அவள் மீண்டும் இந்து மதத்திற்கு மதம் மாறுகிறாள். இங்கு என்ன நடந்துள்ளது என்றால், இந்து மதத்தைச் சார்ந்த பெண் இசுலாம் மதத்திற்கு மாறிய பிறகு மீண்டும் இந்து மதத்திற்கே மாறி விடுகிறாள். அதாவது அவள் தனது முந்தைய மத நம்பிக்கையை (இந்து மதம்) மீண்டும் தழுவிக் கொள்கிறாள். எனவே மேற்படி பிரிவு 4–இன் கீழ் கண்ட இறுதிப்பத்தியின்படி, பிரிவு 4–இன் வகைமுறைகள் அவளுக்குப் பொருந்தாது. எனவே அவளது திருமணம் தானாக ஒரு முடிவிற்கு வந்து விடுகிறது. ஒருவேளை அவள் தொடர்ந்து அந்த இசுலாமிய ஆணுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தால், அவள் மேற்படி சட்டத்தின் 2–ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படைகள் எதன் கீழும் திருமண முறிவிற்காக நீதிமன்றத்தில் வழக்கிட முடியாது. அதற்கு உரிமையில்லை.

48. 'A' a Muslim female married 'B' a Muslim male under the Special Marriage Act 1954, in 1979. In 1984 'B' converted from Muslim to Hindu religion. In 1985 'A' sues for divorce - Decide.

'அ' என்ற முகமதிய பெண் 'ஆ' என்ற முகமதிய ஆணை சிறப்புத் திருமணச் சட்டம் 1954-இன்படி 1979-ஆம் ஆண்டு மணம் புரிகிறார். 1984ம் ஆண்டு 'ஆ' என்பவர் முகமதிய மதத்தை விட்டு இந்து மதத்திற்கு மதம் மாறுகிறார். 1985 ஆம் ஆண்டு 'அ' என்பவர் மணமுறிவிற்கு வழக்கிடுகிறார். முடிவு செய்க.

தீர்வு:

இதற்கு முந்தைய பிரச்சனைக்கு கண்ட தீர்வின் அடிப்படையில் இப்பிரச்சனையையும் முடிவு செய்யலாம். 1939–ஆம் ஆண்டின் இசுலாம் திருமண இழப்புச் சட்டத்தின் 4–ஆவது பிரிவின்படி, திருமணமான ஒரு இசுலாம் பெண் இசுலாம் மதத்தை துறந்துவிடுவது அல்லது வேறு மதத்திற்கு மாறி விடுவது மட்டுமே, தானாக அவளது திருமணத்தை ஒரு முடிவிற்கு கொண்டு வந்துவிடாது. இருப்பினும், அத்தகு துறப்பிற்கு அல்லது மத மாற்றத்திற்குப் பிறகு, அப்பெண் மேற்படி சட்டத்தின் 2–ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படைகளின் கீழ் திருமண முறிவுத் தீர்ப்பாணை வேண்டி நீதிமன்றத்தில் வழக்கிட உரிமை படைத்தவள்.

நமது மேற்படி பிரச்சனையில் 'அ' என்ற இசுலாம் பெண் 'ஆ' என்ற இசுலாமிய ஆணை மணந்த பிறகு இசுலாம் மதத்தை விட்டு இந்து மதத்திற்கு மதம் மாறிவிடுகிறாள். இந்த மத மாற்றமே அவளது திருமணத்தை தானாக முடிவிற்கு கொண்டு வந்துவிடாது. அதுபோல் அவளுக்கு மேற்படி 1939–ஆம் ஆண்டு சட்டத்தின் 2–ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படைகளின் கீழ் தனது கணவனான 'ஆ' என்பவரிடமிருந்து மணமுறிவுத் தீர்ப்பாணை வேண்டி நீதிமன்றத்தில் வழக்கிடும் உரிமையும் பறிபோய்விடாது. எனவே அவள் மண முறிவு கோரி தொடர்ந்துள்ள வழக்கில் அவள் வெற்றி பெற வாய்ப்புண்டு.

சிறப்புத் திருமணச் சட்டம், 1954
[The Special Marriage Act, 1954]

49. 'A' Hindu woman wants to marry a Christian male. Provide legal adivse.

ஒரு இந்து பெண்மணி ஒரு கிறுஸ்தவ ஆணை மணக்க விரும்புகிறார். அவருக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

வெவ்வேறு சாதி மற்றும் மதத்தைச் சார்ந்த ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ள, 1954–ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டம் வகை செய்கிறது. எனவே, மேற்படி பிரச்சனையில் உள்ள ஒரு இந்துப் பெண்மணி, ஒரு கிறுத்தவ ஆணை மணக்க விரும்பினால், அப்பெண்மணி, மேற்படி சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி திருமணம் செய்து கொள்வது, சட்டப்படியானதாகும். இதுவே அவருக்கு நாம் கூறும் சட்ட ஆலோசனை ஆகும்.

ஆனால் இவ்வாறு திருமணம் செய்து கொள்ள, மேற்படி சட்டத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் 4 முதல் 14 வரையிலான சட்டப் பிரிவுகளின் வாயிலாக சில நிபந்தனைகளும் நடைமுறைகளும் கூறப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.

(அப்பிரிவுகளை இந்நூலில் '1954–ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டம்' எனும் பகுதியில் காண்க. அவற்றை தேர்வில் சுருக்கமாகக் குறிப்பிடுதல் நன்று.)

50. A Muslim woman wants to marry a Christian man. How will you advise them for getting a legally valid marriage?

ஒரு முகமதிய பெண் ஒரு கிறித்துவ ஆடவனை மணக்க விரும்பு கிறாள். அவர்கள் சட்டப்படி செல்லும் தன்மையில் திருமணம் புரிந்து கொள்ள நீங்கள் எப்படி ஆலோசனை சொல்வீர்கள்?

தீர்வு:

இதற்கு முன் சென்ற பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட தீர்வையே, இப்பிரச்சனைக்கும் தீர்வாக்கலாம். அங்கு வழங்கப்பட்ட ஆலோசனையே இங்கும் பொருந்தும். எனவே அங்கு காண்க.

51. A Hindu girl aged 22 years marries her maternal uncle's son aged 21 under the Special Marriage Act. Decide its validity.

22 வயதான இந்துப் பெண் ஒருவர் தன் தாய் மாமனின் 21 வயதான மகனை சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் புரிகிறார். இதன் செல்லும் தன்மையை முடிவு செய்க.

தீர்வு:

சிறப்புத் திருமணச் சட்டத்தின் 4–ஆவது பிரிவு சிறப்புத் திருமணங்களை நிறைவேற்றி வைப்பது தொடர்பான நிபந்தனைகளைக் கூறுகிறது. அவற்றில் மேற்படி பிரச்சனைக்குத் தொடர்புடைய இரண்டு நிபந்தனைகளை நாம் காண வேண்டும். அதாவது,

(1) திருமணம் ஆகும் போது, மணமகனுக்கு 21 வயதும் மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியாகியிருக்க வேண்டும்;

(2) மணக்கள் தடுக்கப்பட்ட உறவு முறையில் (within the degrees of prohibited relationship) இருக்கக் கூடாது. எனினும் மணமக்களில் எவரேனும் ஒருவரின் வழக்க மானது, இத்தகு தடுக்கப்பட்ட உறவு முறைத் திருமணத்தை அனுமதித்தால், அந்தத் திருமணம் வழக்கப்படி செய்யப்பட்டதாகவே கொள்ளப்படும்.

இவற்றில் முதல் நிபந்தனை இங்கு நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதாவது இந்துப் பெண்ணின் வயது 22. மணமகனின் வயது 21. எனவே திருமணத்திற்குரிய வயது இருவருக் கும் சட்டப்படி உள்ளது. (இங்கு மணமகனின் வயதைக் காட்டிலும் மணமகளின் வயது அதிகமாக இருப்பது ஒரு பொருட்டல்ல.)

ஆனால் இரண்டாவது நிபந்தனை நிறைவு செய்யப்படவில்லை. அதாவது அந்த இந்துப் பெண் தனது தாய்மாமனின் மகனை திருமணம் புரிகிறார். அந்தப் பெண்ணுக்கு தாய் மாமனின் மகன் தடுக்கப்பட்ட உறவு முறையினர் ஆவார். எனவே இத்திருமணம் செல்லாது.

எனினும் அவர்களில் எவரேனும் ஒருவரின் வழக்கம் அவ்வாறு திருமணம் செய்து கொள்ள அனுமதித்தால் செல்லும்.

பகுதி - VI

அண்மைக்கால வழக்குகளில் வழங்கப்பட்ட முக்கிய தீர்ப்பு நெறிகள்

– ஒரு பார்வை

[Recent Case Laws

- An Overview]

அண்ணைமக்காவ வழக்குகளில் வழங்கப்பட்ட முக்கிய தீர்ப்பு நெறிகள் - ஒரு பார்வை

[Recent Case Laws - *An Overview*]

வழக்கு எண். 1

Nalini Nagnath Uphalkar Vs. Nagnath Mahadev Uphalkar

அடிப்படை ஏதுமின்றி கணவனை 'குடிகாரன்' என்றும், 'பெண் பித்தன்' என்றும் மனைவி முத்திரை குத்துவது, இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(ia)–இன் கீழ் கணவருக்கு மனைவி இழைக்கும் 'கொடுமை'–யாகும்; கணவர் மணமுறிவு பெற உரிமையுடையவர்.

– பம்பாய் உயர் நீதிமன்றம்

இந்த வழக்கில் ஒரு இந்து மனைவி தனது மணவாழ்க்கை உரிமைகளை மீட்டளிக்கக் கோரி குடும்ப நீதிமன்றத்தில் மனு (Petition for restitution of conjugal rights) தாக்கல் செய்கிறார். இதற்கு அவரது கணவர் பதிலுரை தாக்கல் செய்கிறார். அத்துடன் அவரிடமிருந்து தனக்கு மணமறிவு வேண்டும் என்று கோரி எதிர்க் கோரிக்கை (Counter Claim) ஒன்றையும் முன் வைக்கிறார். அதில் தன்னைப் பற்றி தனது மனைவி அவதூறான கருத்துகளை ஊரெங்கும் பொய்யாகப் பரப்பி, தான் ஒரு ஒழுக்கங்கெட்டவன் என்று முத்திரை குத்தி வருகிறார் என்றும், அது தனக்கு கடும் மன வருத்தத்தை ஏற்படுத்தி வருகிறது என்றும், எனவே அவருடன் சேர்ந்து வாழ தான் விரும்பவில்லை என்றும், தனக்கு மணமுறிவு வேண்டும் என்றும் கோரியிருந் தார். இந்த எதிர்க்கோரிக்கைக்கு பதிலளிக்கும் முகமாக மனைவி பதிலுரை ஒன்றை தாக்கல் செய்தார். அதில் தனது கணவர் ஒரு குடிகாரர் என்றும், பெண் பித்தன் என்றும், தன்னை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் துன்புறுத்தினார் என்றும், குடிபோதையை சாக்காக வைத்து இரவு நேரங்களில் தனது சகோதரி படுத்திருக்கும் அறைக்கு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றும் சில குற்றச்சாட்டு களை அவர் முன் வைத்திருந்தார். இவ்வழக்கை பரிசீலனை செய்த குடும்ப நீதிமன்றம் மனைவியின் மனுவை தள்ளுபடி செய்துவிட்டு, கணவர் கோரியபடி அவருக்கு மண முறிவுக்கான தீர்ப்பாணையை வழங்கியது.

இத்தீர்ப்பை எதிர்த்து பம்பாய் உயர் நீதிமன்றத்தில் மனைவி மேல்முறையீடு செய்தார்.

குடும்ப நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்களை மேல்

முறையீட்டில் தீர ஆராய்ந்த பம்பாய் உயர் நீதிமன்றம், தனது கணவர் ஒரு குடிகாரர் என்றும், பெண் பித்தன் என்றும் குடும்ப நீதிமன்றத்தில் மனைவி முன் வைத்த குற்றச் சாட்டுகளை அவர் மெய்ப்பிக்கவில்லை என்றும், மேலும் மனைவியின் தரப்பில் ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்ட அவரது சகோதரியோ, முக்கிய குற்றச்சாட்டான "குடி போதையில் தனது கணவர் தனது சகோதரி படுத்திருக்கும் அறைக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டவர்" என்பதை மெய்ப்பிக்குமாறு சாட்சியமேதும் அளிக்க வில்லை என்றும், இவ்வாறு ஆதாரமேதுமின்றி கணவனுக்கு எதிராக குற்றச் சாட்டுகளை அடுக்குவது, அவரை அவமானப்படுத்தும் விதமாக அவரைப்பற்றி சமுதாயத்தில் அவதூறு பரப்புவது ஆகியன இந்து திருமணச்சட்டம் பிரிவு 13(1)(i-a)-இன்படி கணவனுக்கு மனைவி இழைக்கும் கொடுமையாகும் என்றும், எனவே இதன் அடிப்படையில் கணவருக்கு மணமுறிவு வழங்கி குடும்ப நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப் பாணை சரியானதே என்றும் உறுதிபடுத்தி, மனைவியின் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

[Labelling husband as alcoholic and womanizer without any basis amounts to 'cruelty' u/S 13(1)(ia) HMA, 1955]

Nalini Nagnath Uphalkar v. Nagnath Mahadev Uphalkar; Family Court Appeal No. 45 of 2006 - **Citation : 2022 SCC OnLine Bom 4075, decided on 12-10-2022; 2022 LiveLaw (Bom) 409**

வழக்கு எண்- 2

Surinder Mohan Chopra Vs. Smt. Nirmala Chopra

கணவனுக்கு எதிராக மனைவி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை கூறுவதும் அவள் செய்யும் கொடுமையே !

– பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம்

நாம் ஏற்கனவே கண்ட வழக்கு எண். 1-க்கு இவ்வழக்கு அடிப்படையாக விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையன்று.

மனைவி தன்னைக் கொடுமைப்படுத்துகிறாள், எனவே தனக்கு மணமுறிவு வேண்டும் என்று கணவன் வழக்கிடுகிறார். அதற்கு மனைவி தாக்கல் செய்த பதிலுரையில், தனது கணவன் மற்றொரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்துள் ளார் என்று மனைவி கடுமையானதொரு குற்றச்சாட்டை கூறுகிறார்; ஆனால் இதை மெய்ப்பிக்க அவர் எவ்வித ஆதாரத்தையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வில்லை. மனைவியின் இந்தச் செயல் ஒன்றே அவள் தனது கணவனை கொடுமைப் படுத்தி வந்ததை சுட்டிக்காட்டுகிறது என்றும், ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களை கணவனுக்கு எதிராகக் கூறுவதும் ஒரு கொடுமையே என்றும் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் ஈராயம் தீர்ப்புரைத்தது.

Surinder Mohan Chopra Vs. Smt. Nirmala Chopra - L.P.A. No. 484 of 2002 - H.S.Bedi & Viney Mittal, JJ. - Punjab & Haryana High Court - **Citation : AIR 2007 (DOC) 183 (P. & H.) (DB)**

வழக்கு எண். 3

Yogesh Kumar Vs. Priya

திருமண வயதடையாத ஓர் இளவர் பெண்ணுடன் செய்து கொண்ட திருமணம் செல்லத்தக்கதே ! எப்போது?

அந்த இளவர் உரிமை வயதடைந்த பிறகு அத்திருமணத்தை செல்லாநிலைத்திருமணமாக விளம்பக் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய முயற்சியேதும் செய்யவில்லையெனில், அத்திருமணம் செல்லத்தக்கதே.

Marriage with a minor is valid if no attempt is made to declare it invalid once the child turns major

– பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம்
தீர ஆராய்ந்து வழங்கிய சுடப்பொருள் விளக்கம்

இவ்வழக்கில் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் மாண்பமை நீதியரசர்கள் ரிது பிஹாரி மற்றும் அருண் மோங்கா அடங்கிய ஈராயம் இந்து திருமண சட்டத்தில் பிரிவு 5 (iii) –க்கு சட்டப்பொருள் விளக்கமளித்து முக்கியத்தீர்ப்பொன்றை நல்கியது.

வழக்கின் சங்கதிகள்படி கணவன்–மனைவிக்கிடையே 2009–ல் திருமணம் நடந்தது. அச்சமயத்தில் மனைவியின் வயது 17 ஆண்டுகள், 6 மாதங்கள் மற்றும் 8 நாட்கள். அதன் பின்னிட்டு இருவரும் கணவன்–மனைவியாக 31–08–2017–ஆம் தேதி வரை சேர்ந்து வாழ்ந்தனர். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. இந்நிலையில் கருத்து வேறுபாடுகள் காரணமாக தங்களுக்கு பரஸ்பர இசைவின் பேரில் மணமுறிவு வேண்டும் என்று கோரி இருவரும் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13B–இன் கீழ் குடும்ப நீதிமன்றத்தில் மனு (Petition for Divorce by Mutual Consent) தாக்கல் செய்தனர். ஆனால் திருமணம் நடக்கும் சமயத்தில் மனைவி 18 வயதை பூர்த்தியடையாதவராக இருந்த காரணத்தால், அத்திருமணம் இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 5(iii) கூறும் நிபந்தனையை மீறியதாகும் என்றும், எனவே செல்லாத ஒன்றாகும் என்றும் கூறி பரஸ்பர மணமுறிவு கோரும் மனுவை குடும்ப நீதிமன்றம் தள்ளுபடிசெய்துவிட்டது. அது தனது ஆணையில் **Prema Kumari v. M.Palani,**

2011 SCC Online Mad. 1815 என்ற முந்தைய வழக்கைச் சுட்டிக்காட்டி, அதில் வழங்கப்பட்ட தீர்ப்பு நெறியின்படி, திருமண சமயத்தில் உரிய திருமண வயதை அடையாத மனைவி (18 வயது நிரம்பாதவர்), தனது திருமணத்தை இரத்து செய்து கொள்ள இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(2)(iv)–இன்படிதான் மனுச் செய்ய வேண்டும் என்று நிலை நிறுத்தியது.

குடும்ப நீதிமன்றத்தின் மேற்கண்ட நிலைப்பாட்டை மேல்முறையீட்டில் ஆராய்ந்த பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம், முதற்கட்டமாக குடும்ப நீதிமன்றம் குறிப்பிட்ட மேற்படி பிரிவு 13(2)(iv)–ஐ தனது ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. அதன்படி, ஒரு மனைவி, தனக்கு 15 வயது பூர்த்தியாகும் முன்னரே திருமணம் நடைபெற்றது என்றும், தான் அத்திருமணத்தை தனக்கு 15 வயது பூர்த்தியான பின்னரும் ஆனால் 18 வயது பூர்த்தியாவதற்கு முன்னரும் மறுதலித்துள்ளேன் (ஏற்றுக் கொள்ளவில்லை) என்றும் கூறி, அதனடிப்படையில் அவள் மணமுறிவு கோரலாம்.

குடும்ப நீதிமன்றம் தனது தீர்ப்பில் மேற்கோளாக சுட்டிக்காட்டிய **Prema Kumari v. M.Palani** என்ற வழக்கின் தீர்ப்பு நெறியிலிருந்து இந்த வழக்கு எவ்வாறு வேறுபடுகிறது என்பதை பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் விளக்குகையில், இவ்வழக்கில் திருமணம் நடக்கும் போது மனைவி தனது 17–வது வயதில் இருந்தார் என்றும், எனவே அவர் மேற்படி பிரிவு 13(2)(iv)–ஐ தனது உதவிக்கு நாட இயலாது என்றும், அவருக்கு அச்சமயத்தில் 15 வயது பூர்த்தியாகாமல் இருந்திருந்து, அவர் தனக்கு நடந்த திருமணத்தை தனது 18–வது வயது பூர்த்தியாவதற்குள் மறுதலித்திருந்தால் மட்டுமே, அவர் மணமுறிவு கோர பிரிவு 13(2)(iv)–ஐ தனது துணைக்கு அழைக்க முடியும் என்றும், எனவே பரஸ்பர மணமுறிவு கோரி பிரிவு 13B–இன் கீழ் தரப்பினர்கள் தாக்கல் செய்த மனுவை குடும்ப நீதிமன்றம் தள்ளுபடி செய்தது தவறு என்றும், அது சுட்டிக்காட்டிய மேற்கோள் வழக்கு இவ்வழக்கின் சங்கதிகளுக்குப் பொருந்தாது என்றும், பிரிவு 13B–இன் கீழ் மணமுறிவு கோர மனைவிக்கு சட்ட உரிமை உண்டு என்றும் தெளிவுபடுத்தியது.

இதற்கு ஆதரவாக **Lajja Devi v. State, 2012 SCC Online Del. 3937** என்ற வழக்கில் தில்லி உயர் நீதிமன்றம் கூறிய சட்ட நெறி ஒன்றை பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. அதில் கூறப்பட்ட சட்ட நெறிகளின்படி, 18 வயதிற்கு குறைவாக உள்ள பெண்ணுடன் அல்லது 21 வயதிற்கு குறைவாக உள்ள ஆணுடன் செய்து கொள்ளும் திருமணம் ஓர் இல்லாநிலைத் திருமணமாகாது, மாறாக அது ஓர் தவிர்தகுநிலைத் திருமணமாகும். எனவே திருமண வயதெட்டாத திருமணத் தரப்பினர் தனது விருப்பத்தின் பேரில் அத்திருமணத்தை செல்லாநிலையதாக இரத்து செய்து கொள்ள குழந்தைத் திருமணம் தடைச்சட்டம், 2006 (Prohibition of Child Marriage Act, 2006)–இன் பிரிவு 2(a) மற்றும் 3(1)–இன்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு நடவடிக்கை எடுத்துக் கொள்ளாதபட்சத்தில் அது செல்லும் திருமணமாகவே நிலை பெறும். (In **Lajja Devi v. State, 2012 SCC OnLine Del 3937,** the Delhi High Court had observed that a marriage contracted with a female of less than 18 years or a male of less

than 21 years, **would not be a void marriage but voidable one**, which would become valid if no steps are taken by such "child" within the meaning of Section 2(a) of the Prohibition of Child Marriage Act, 2006 seeking declaration of this marriage as nullity.)

வேறு வகையில் சொன்னால் ஒரு செல்லத்தக்க இந்து திருமணத்திற்கான நிபந்தனைகளை இந்து திருமணச்சட்டத்தின் பிரிவு 5 பட்டியலிட்டுக்காட்டுகிறது. அவற்றில் பிரிவு 5 (iii)–ஆனது, திருமணமாகும் போது ஆணுக்கு 21 வயதும், பெண்ணுக்கு 18 வயதும் பூர்த்தியாகியிருக்க வேண்டும் என்று கூறுகிறது. இதற்கும் குறைவான வயதுடையவருடன் ஒருவர் செய்து கொள்ளும் திருமணம் பிரிவு 11–இன் படி இல்லாநிலையாவதில்லை. காரணம் பிரிவு 11–இன்படி இல்லாநிலையாகும் திருமணத்தில் வயதுத் தகுதி பற்றி கூறும் பிரிவு 5 (iii) சேர்க்கப்படாமல் இருப்பதை நாம் அப்பிரிவை வாசிக்கும் போது கவனிக்கலாம். வயது குறைவானவருடன் செய்து கொள்ளும் திருமணம், சம்பந்தப்பட்டவரின் விருப்பத்தின் பேரில் தவிர்த்துக்கொள்ளக் கூடியதாகும் (Voidable marriage). ஆனால் இந்து திருமணச்சட்டத்தில் இவ்வாறு எங்கும் சொல்லப்படவில்லை. பின் அத்தகு திருமணத்தை முறித்துக் கொள்ள எத்தகு நடவடிக்கை எடுப்பது என்ற தேடலில் நமக்கு விடை தருவது 2006–ஆம் ஆண்டின் குழந்தைத் திருமணம் தடைச்சட்டத்தின் (Prohibition of Child Marriage Act, 2006) பிரிவுகள் 2(a) மற்றும் 3 ஆகும்.

இச்சட்டத்தின் பிரிவு 2(a)–ஆனது ஒரு திருமணத்தைப் பொறுத்தவரை "குழந்தை" என்பவரின் வயது யாது என்று நிர்ணயித்துக் கூறுகிறது. அதன்படி, ஆணாக இருந்தால் 21 வயதும், பெண்ணாக இருந்தால் 18 வயதும் நிரம்பாத ஒருவரை மேற்படி சட்டம் "குழந்தை" ["child" means a person who, if a male, has not completed twenty-one years of age, and if a female, has not completed eighteen years of age - **Section 2 (a)**] என்று கூறுகிறது.

அடுத்து, பிரிவு 3(1)–இன்படி, திருமணத்தின் போது குழந்தையாக இருந்தவரின் விருப்பத்தின் பேரில் அக்குழந்தைத்திருமணம் தவிர்த்துக்கொள்ளப்படலாம். எனினும் அத்திருமணத்தை செல்லாநிலையதாக்கும் தீர்ப்பாணை ஒன்றால் இரத்து செய்வதற்காக, அத்திருமணத்தின் போது குழந்தையாக இருந்தவரால் மாவட்ட நீதி மன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட வேண்டும். [Every child marriage, whether solemnised before or after the commencement of this Act, shall be voidable at the option of the contracting party who was a child at the time of the marriage: Provided that a petition for annulling a child marriage by a decree of nullity may be filed in the district court only by a contracting party to the marriage who was a child at the time of the marriage - **Section 3(1)**]

இம்மனு எப்போது வேண்டுமானாலும் தாக்கல் செய்யப்படலாம். ஆனால் அக்குழந்தை உரிமை வயதடைந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று பிரிவு 3(3) கூறுகிறது. [The petition under this section may be filed at any time but before the child filing the petition completes two years of attaining majority - **Section 3(3)**]

திருமணத்தின் போது குழந்தையாக இருந்தவர் மேற்கண்டாறு மனு தாக்கல் செய்து தனது திருமணத்தை தவிர்த்துக் கொள்ளாத நேர்வில், அவரது திருமணம் ஓர் செல்லத்தக்க திருமணமாக ஆகிவிடும். அதை பிரிவு 13–இன் கீழ் முறையான மணமுறிவுத் தீர்ப்பாணை மூலம் அவர் இரத்து செய்து கொள்ளலாம்.

மேற்சென்ற சட்ட நிலைப்பாடுகள் யாவற்றையும் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் இவ்வழக்கில் பொருத்திப்பார்த்து தீர்ப்புரைக்கையில், திருமணம் நடந்த 27–02–2009–ஆம் தேதியில் மனைவி 18 வயது நிரம்பாத ஒரு "குழந்தையாக" இருந்துள்ளார். இத்திருமணத்தை தவிர்த்துக் கொள்ள அவர் குழந்தைத்திருமண தடைச்சட்டத்தின் பிரிவு 3(1)–இன்படி நீதிமன்ற நடவடிக்கை எதையும் பிரிவு 3(3) கூறும் கால வரையறைக்குள் எடுக்கவில்லை. மாறாக அவர் தனது கணவருடன் சுமார் 8 ஆண்டு காலம் அதாவது 31–08–2017–ஆம் தேதி வரை சேர்ந்து வாழ்ந்து குழந்தை ஒன்றையும் பெற்றெடுத்துள்ளார். எனவே அவரது திருமணம் செல்லத்தக்க ஒன்றாகவே நிலைபெற்றுவிட்டது. ஆதலால் செல்லத்தக்க திருமணத்தை பரஸ்பர இசைவின் பேரில் முறித்துக் கொள்ள இந்து திருமணச்சட்டம் பிரிவு 13B–இன்படி அவரும் அவரது கணவரும் இணைந்து குடும்ப நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிலைக்கத்தக்கதே என்றும் கூறியது.

முடிவாக மேல்முறையீட்டை அனுமதித்தும், குடும்ப நீதிமன்றம் பிறப்பித்த குறைபாடான ஆணையை இரத்து செய்தும், தரப்பினர்கள் கோரியபடி பரஸ்பர இசைவின் பேரிலான மணமுறிவு தீர்ப்பாணையை அவர்களுக்கு வழங்கியும் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் ஆணையிட்டது.

[Marriage Of Minor becomes valid If not declared as nullity till the age of 18, Dissolution U/S 13B Of Hindu Marriage Act allowed]

Yogesh Kumar Vs. Priya, FAO 855 of 2021, High Court of Punjab and Haryana at Chandigarh, **decided on 26-08-2021**

வழக்கு எண்- 4

Suresh Babu Vs. V.P.Leela

மதம் மாற மனைவி சம்மதித்திருந்தாலும், அவள் மண முறிவு கோரலாம்

– கேரளா உயர் நீதிமன்றம்

இந்து மதத்தைச் சார்ந்த கணவன் இசுலாத்திற்கு மதம் மாறிவிட்டார். இதனைக் காரணமாகக் காண்பித்து மனைவி இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13(1)(ii)–இன்படி மணமுறிவு கோருகிறார். மனைவி சம்மதம் தெரிவித்ததன் பேரில்தான் தான் மதம் மாறியதாக கணவன் வாதிடுகிறார். ஆனால் இதை கேரளா உயர் நீதிமன்றத்தின் ஈராயம் ஏற்கவில்லை. மனைவியின் சம்மதம் பற்றி சட்டம் எதையும் குறிப்பிட

வில்லை என்றும், மனைவி அவ்வாறு சம்மதித்திருந்தாலும் அவள் மணமுறிவு கோரலாம் என்றும் ஈராயம் தீர்ப்புரைத்தது.

Suresh Babu Vs. V.P.Leela - Mat. Appeal No. 118 of 2006 - Kurian Joseph and K.T.Sankaran, JJ. - Kerala High Court - **Citation : AIR 2007 (NOC) 285 (Ker.)(D.B)**

வழக்கு எண். 5

Gulabala *alias* Surjee Devi & Ors Vs. Sitabiya *alias* Jagpatia & Ors.

இரண்டாவது மனைவிக்கு கணவனின் சொத்தில் பங்கு கோர உரிமையில்லை

– அலகாபாத் உயர் நீதிமன்றம்

இவ்வழக்கில் இந்து மதத்தைச் சார்ந்த கணவரின் முதல் மனைவி உயிருடன் உள்ள போதே, அவரை மற்றொரு பெண் (மனுதாரர்) திருமணம் செய்து கொள்கிறார். கணவன் இறந்து விட்டார். அந்த இரண்டாவது மனைவி கணவரின் சொத்தில் பங்கு கேட்கிறாள். அதை அடைய இறங்குரிமைச் சான்றிதழ் (Succession Certificate) பெற வேண்டியிருந்தது. அப்போது அதைப் பெறுவதற்கு இரண்டாம் மனைவிக்கு உரிமை யுள்ளதா என்ற வினா எழுந்தது. இந்நிலைப்பாட்டை ஆராய்ந்த அலகாபாத் உயர் நீதிமன்றமானது, கணவனின் முதல் திருமணம் அமலில் உள்ள போது மனுதாரர் அவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டுள்ளார்; எனவே இது இல்லா நிலைத் திருமணம் (void marriage) என்றும், இதனால் கணவனின் சொத்தில் பங்கு கேட்க அவளுக்கு உரிமை ஏதுமில்லை என்றும், ஆனால் அவளது மகன்கள் இறந்து போன கணவனின் சொத்தில் பங்கு கேட்க முடியும் என்றும் தீர்ப் புரைத் தது.

Gulabala alias Surjee Devi & Ors Vs. Sitabiya alias Jagpatia & Ors. - **Citation : AIR 2006 (NOC) 1379 (All.)**

வழக்கு எண். 6

Smt. Hina Singh Vs. Satya Kumar Singh

பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் பிறப்பிக்கப்படும் மணமுறிவுத் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய முடியும்.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 23 விதி 3–இன்படி

பிறப்பிக்கப்படும் 'சம்மதத் தீர்ப்பாணையை" எதிர்த்து மேல்முறையீடு செய்யவியலாது. இதற்கு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 96(3) தடை விதிக்கிறது. ஆனால் இது மண வாழ்க்கைப் பிரச்சனை வழக்கில் பிறப்பிக்கப்படும் அத்தகு தீர்ப்பாணைக்கு குறிப்பாக பரஸ்பர சம்மதத்தின் பேரிலான தீர்ப்பாணைக்குப் பொருந்தாது. எனவே பாதிப்பிற்குள்ளாகும் தரப்பினர் மேல்முறையீடு செய்ய முடியும்

– ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம்

இவ்வழக்கில் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13பி–யின்படி பரஸ்பர சம்மதத் தின் அடிப்படையில் மணமுறிவு (Divorce by Mutual Consent) வழங்கப்படுகிறது. எனினும் பின்னிட்டு இதை எதிர்த்து மனைவி மேல்முறையீடு செய்கிறார்.

ஆனால் பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட மணமுறிவுத் தீர்ப்பாணை என்பது "சம்மதத் தீர்ப்பாணை" (Consent Decree) என்றும், எனவே உரிமையி யல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 23 விதி 3–இன்படி இதை எதிர்த்து மேல்முறையீடு செய்யவியலாது என்றும் கணவனின் தரப்பில் வாதிடப்படுகிறது. ஆனால் இதை ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம் ஏற்கவில்லை. அது தனது ஆணையில் மணவாழ்க்கை வழக்குகளில் பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் வழங்கப்படும் மண முறிவுக்கு உரிமை யியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 23 விதி 3 பொருந்தாது என்றும், அதுபோல் "சம்மதத் தீர்ப்பாணைக்கு" உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 96(3)–இன்படி விதிக்கப்பட்டுள்ள தடை இத்தகு மண வாழ்க்கை வழக்குகளுக் குப் பொருந்தாது என்றும் கூறி, மனைவியின் மேல்முறையீட்டை அனுமதித்தது.

இவ்வழக்கில் கீழமை குடும்ப நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் ஓர் மிகப் பெரும் சட்டத் தவறு நடைபெற்றுள்ளது. அதாவது தனது மணவாழ்க்கை உரிமைகளை மீட்டளிக்கக் கோரி கணவன் குடும்ப நீதிமன்றத்தில் மனுச் செய்கிறார். இதில் மனைவி முன்னிலையாகி தனது பதிலுரையை தாக்கல் செய்ய கால அவகாசம் கோரு கின்றார். எனவே வழக்கு 18–03–2005–ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. ஆனால் அதே தேதியில் கணவனின் மேற்படி மனுவை பரஸ்பர சம்மதத்தின் அடிப் படையில் மணமுறிவு கோரும் மனுவாக மேற்படி குடும்ப நீதிமன்றத்தின் முதன்மை நீதிபதி மாற்றியமைத்து, அன்றே பரஸ்பர சம்மத மணமுறிவிற்கான தீர்ப்பாணையை யும் பிறப்பித்து விடுகிறார். இங்கு அப்படிப்பட்ட சம்மதம் எதையும் தரப்பினர்கள் இருவரும் கொடுத்திருக்கவில்லை என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி ஒருவரின் பதவி நிலையில் உள்ள குடும்ப நீதிமன்ற முதன்மை நீதிபதி இப்படி ஒரு மணமுறிவு ஆணையைப் பிறப்பித்துள்ளதைக் கண்டு ஜார்க்கண்ட உயர் நீதிமன்றம் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்து, அந்நீதிபதி அடிப்படை சட்ட அறிவைக்கூட பெற்றிருக்கவில்லை என்று தனது தீர்ப்பில்

கண்டன மும் தெரிவித்தது.

Smt. Hina Singh Vs. Satya Kumar Singh - F.A.No. 67 of2005 - M.J.Eqbal and D.K.Sinha, JJ.. - Jharkhand High Court - **Citation : AIR 2007 Jhar. 34**

வழக்கு எண். 7

S.Venkatesan Vs. J.Indumathi

இடைக்கால பொருளுதவிக்கான ஆணை

– சென்னை உயர் நீதிமன்றம்

இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி (interim maintenance) கோரும் வழக்கில் மாதமொன்றுக்கு மனைவிக்கு ரூ.1500/–ம், அவரது குழந்தைக்கு ரூ.1500/–ம் இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவியாக வழங்கும்படி கணவனுக்கு சென்னை குடும்ப நீதிமன்றம் ஆணையிட்டது. குடும்ப நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின் போது கணவன், தனக்கு ஆண்டு வருமானம் ரூ. 50,000/– என்று தனது எதிருரையில் ஒத்தேற்றுள்ளார். இந்நிலையில் மேற்படி ஆணையை எதிர்த்து கணவன் தாக்கல் செய்த சீராய்வை மனுவை ஆய்ந்த சென்னை உயர் நீதிமன்றம், விலைவாசியையும் மனைவி வேலைக்கு ஏதும் செல்லவில்லை எனும் சங்கதியையும் கருத்தில் கொண்டு பார்த்தால் குடும்ப நீதிமன்றம் மேற்கண்ட தொகைகளை நிருணயம் செய்து பிறப்பித்த ஆணையில் தலையிடுவதற்கு காரணங்கள் ஏதுமில்லை என்று தீர்ப்புரைத்து சீராய்வு மனுவைத் தள்ளுபடி செய்தும், குடும்ப நீதிமன்றத்தின் ஆணையை உறுதி செய்தும் ஆணையிட்டது.

S.Venkatesan Vs. J.Indumathi - C.R.P. No. 229 of 2006 - A.C.Arumugaperumal Adityan, J. - Madras High Court - **Citation : 2006 (5) CTC 474**

வழக்கு எண். 8

Mukesh Mittal Vs. Seema Mittal

மனைவி வருமான வரி செலுத்துகிறார்; எனவே அவருக்கு வாழ்க்கைப் பொருளுதவி அளிக்க வேண்டியதில்லை என்கிறார் கணவர். தீர்ப்பு என்ன?

– தில்லி உயர் நீதிமன்றம்

வாழ்வதற்குத் தேவையான தனிப்பட்ட வருமானம் ஏதும் தனக்கில்லை

என்று கூறி மனைவி ஒருத்தி, இந்து திருமணச் சட்டத்தின் 24–ஆம் பிரிவின்படி இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி (interim maintenance) கோரி, அவரது கணவனுக்கு எதிராக வழக்கிடுகிறாள். ஆனால் கணவனோ, தனது மனைவி வருமான வரி கட்டுபவர் என்று கூறி, வருமான வரி செலுத்திய படிவங்களைத் தாக்கல் செய்கிறார். எனவே வருமான வரி கட்டுமளவிற்கு உள்ள மனைவிக்கு, தான் வாழ்க்கைப் பொருளுதவி கொடுக்க வேண்டியதில்லை என்று வாதிடுகிறார். ஆனால் வழக்கு விசாரணையின் போது உண்மை வெளியே வருகிறது. உண்மையில் மனைவி வருமான வரி ஏதும் கட்டவில்லை. மனைவிக்காக கணவன் வருமான வரி படிவங்களை தாக்கல் செய்துள்ளார். எனவே இதைக் காரணமாக காண்பித்து வாழ்க்கைப் பொருளுதவி அளிக்கத் தேவையில்லை என்று கணவன் வாதிடுவதை ஏற்க முடியாது என்று கூறி, மனைவிக்கு வாழ்க்கைப் பொருளுதவி அளிக்க வேண்டுமென கீழமை நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை தில்லி உயர் நீதிமன்றம் உறுதி செய்தது. இதில் மனைவியின் வருமான வரி விவரத்தை கூறும் கணவன் தனது வருமான வரி பற்றி எதையும் நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை.

Mukesh Mittal Vs. Seema Mittal - C.M. No. 62 of2005 - Mukul Mudgal, J. - Delhi High Court - **Citation : AIR 2006 Del. 145**

வழக்கு எண். 5

Suseelarani Vs. Marimuthu

மனைவி வேலைக்குச்செல்வதால் வாழ்க்கைப் பொருளுதவி இல்லை

– சென்னை உயர் நீதிமன்றம்

மனைவி தனக்காகவும் தன்னிரு குழந்தைகளுக்காகவும் தனது கணவனிடமிருந்து வாழ்க்கைப் பொருளுதவி கோரி குடும்ப நீதிமன்றத்தில் மனு செய்கிறார். இங்கு ஏற்கனவே அவ்விரு குழந்தைகளுக்கும் தலா ரூ.500/– வாழ்க்கைப் பொருளுதவியாக அளிக்க வேண்டும் என்று கணவனுக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை கருத்தில் கொண்டு மனைவியின் மனுவை குடும்ப நீதிமன்றம் தள்ளுபடி செய்து விடுகிறது. எனவே அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்கிறார். அதில் அவர் (மனைவி) வேலைக்கு சென்று பொருளீட்டி வருவதால் அவருக்கு வாழ்க்கைப் பொருளுதவி அளிக்க மறுத்த உயர் நீதிமன்றம், அவரது இரு குழந்தைகளும் பள்ளிக் கல்வி பயின்று வருவதைக் கருத்தில் கொண்டு அவர்கள் ஒவ்வொரு வருக்கும் வாழ்க்கைப் பொருளுதவியாக மேலும் ரூ.500/– கொடுக்க வேண்டுமென கணவனுக்கு ஆணையிட்டது.

Suseelarani Vs. Marimuthu - C.R.P. No. 584 of2006 - P.Sathasivam, J. - Madras High Court - **Citation : 2006 (5) CTC 537**

வழக்கு எண். 10

Gnanasabesan Vs. Revathi and anr.

வாழ்க்கைப் பொருளுதவி கோரும் வழக்கில் தான் மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்புவதாகக் கூறி கணவன் தப்பித்துக் கொள்ள முடியாது. அதற்கான நடவடிக்கைகளை அவர் எடுக்காதபட்சத்தில் மனைவிக்கு வாழ்க்கைப் பொருளுதவி கொடுத்தாக வேண்டும்.

- சென்னை உயர் நீதிமன்றம்

ஒரு மனைவி தனக்கும் தனது குழந்தைக்கும் வாழ்க்கைப் பொருளுதவி (ஜீவனாம்சம்) அளிக்கக் கோரி கணவனுக்கு எதிராக உரிமை வழக்கு தாக்கல் செய்கிறாள். கணவனோ தான் மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும், எனவே பொருளுதவி அளிப்பதற்கு தனக்கு எந்தப் பொறுப்பும் இல்லை என்றும் எதிர் வாதிடுகிறார். ஆனால் இதை மெய்ப்பிக்கும் முகமாக அவர் தனது மனைவி மற்றும் குழந்தையை அவரது தாய் வீட்டிலிருந்து அழைத்து வந்து வாழ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே மனைவியும் குழந்தையும் வாழ்க்கைப் பொருளுதவி கோர உரிமை படைத்தவர்கள் என்று இவ்வழக்கின் மேல்முறையீட்டு நிலையில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(Husband contending that he was willing to live with wife and therefore he was not liable to pay maintenance - No steps taken to bring back wife and children from her parents home - Wife and children are entitled for maintenance)

Gnanasabesan Vs. Revathi and anr. - A.S. No. 660 of 1996 - Madras High Court - V.Periya Karuppiah, J. - Decided on 9.1.2009 - **Citation : 2009(2)CTC 603**

வழக்கு எண். 11

Vijaybhai Mohandas Narang Vs. Janaki Vijaybhai Narang & Anr.

இடைக்கால ஆணையின்படி கணவனிடமிருந்து மனைவி இடைக்கால பொருளுதவி பெற்று வந்தாள். இந்நிலையில் மனைவியின் நிரந்தர பொருளுதவி கோரிய வழக்கு தோற்று விடுகிறது. எனவே கணவன் வழங்கிய இடைக்கால பொருளுதவித்

தொகையை அவர் தனது மனைவியிடமிருந்து திரும்பக்கோர முடியுமா?

– குஜராத் உயர் நீதிமன்றம்

மனைவி வாழ்க்கைப் பொருளுதவி கோரி தனது கணவனின் மீது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 125–இன்படி மனுச் செய்கிறாள். இது நிலுவையில் இருக்கும் நேரத்தில் அவள் தனக்கு இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி வழங்க வேண்டும் என்று கோரி இடைநிலை மனு ஒன்றை கணவனுக்கு எதிராக தாக்கல் செய்கிறாள். இதில் அவ்வாறு பொருளுதவி அளிக்க நீதிமன்றம் கணவனுக்கு இடைக்கால ஆணையிடுகிறது (interim order). இதன்படி கணவனும் தனது மனைவிக்கு இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி வழங்கி வந்தான். இந்நிலையில் மனைவியின் நிரந்தர வாழ்க்கைப் பொருளுதவிக்கான முதன்மை வழக்கு விசாரணைக்கு வருகின்றது. இதை விசாரித்த நீதிமன்றம் கணவனிடமிருந்து மனைவி வாழ்க்கைப் பொருளுதவி எதையும் பெற அருகதையற்றவள் என்று தீர்ப்புரைக்கிறது.

இந்நிலையில் இடைக்கால ஆணைக்கு இணங்கிய வகையில் தான் மனைவிக்கு கொடுத்த வாழ்க்கைப் பொருளுதவியை மனைவி திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கணவன் கோருகின்றான்.

இதனை சீராய்வு நிலையில் ஆராய்ந்த குஜராத் உயர் நீதிமன்றம், கணவன் கோருகின்றவாறு இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவித்தொகை முழுவதையும் திருப்பிக் கொடுக்க மனைவி பொறுப்புடையவள் அல்ல என்று ஆணையிட்டது.

Vijaybhai Mohandas Narang Vs. Janaki Vijaybhai Narang & Anr. - Cri. Revn. Appln. No. 638 of 2006 - Ravi R. Tripathi, J. - Gujarat High Court - **Citation : AIR 2007 (NOC) 397 (Guj.)**

வழக்கு எண்.12

Smt. P. Archana *alias* Atchamamba Vs. Varada Siva Rama Krishna

கணவனிடமிருந்து ஏற்கனவே நிரந்தரப் பிரிமனைப்பணம் பெற்றுக் கொண்டு, இனி கணவனுக்கு எதிராக எவ்வித கோரிக்கையும் செய்வதில்லை என்று எழுதிக் கொடுத்த மனைவி, நிரந்தரப் பிரிமனைப் பணத்தை உயர்த்திக் கொடுக்கக் கோரியோ, வாழ்க்கைப் பொருளுதவித் தொகை கோரியோ மனுச் செய்ய முடியுமா?

– ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம்

மணமுறிவு மற்றும் வாழ்க்கைப் பொருளுதவி தொடர்பான இவ்வழக்கின் சங்கதிகள்படி, கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையில் மனைவிக்கு கணவன் நிரந்தர பிரிமனைப்பணமாக (Permanent alimony) ரூ.30000/– கொடுத்து விட வேண்டியது என்றும், இருவரும் பரஸ்பர சம்மதத்தின் பேரில் நீதிமன்றத்தில் மனுச் செய்து மண முறிவு பெற்றுக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. இவ்வுடன்படிக்கை எழுத்துப்பூர்மாக எழுதிக் கொள்ளப்பட்டது. இதை யடுத்து ஏற்பட்ட வழக்கு நடவடிக்கையின் போது கணவன் மேற்படி பிரிமனைப் பணத்தை கேட்பு வரைவோலை வாயிலாக மனைவிக்கு கொடுத்துவிட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அம்மனைவி ஹைதராபாத் குடும்ப நீதிமன்றத்தில் கணவன் மீது இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 25–இன்படி ஒரு மனு தாக்கல் செய்தார். அதில் தனது தந்தை பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்றும், தாய்க்கு பக்கவாதம் ஏற்பட்டுள்ளது என்றும், தந்தை பெற்று வரும் சொற்ப மாத ஓய்வூதியம் கைக்கும் வாய்க்குமே போதவில்லை என்றும், எனவே முன்பிருந்த சூழ்நிலைகள் தற்போது நிலவ வில்லை என்றும், அவை மாறிவிட்டதால் தனக்கு நிரந் தரப் பிரிமனைப் பணத்தை ரூபாய் 5 இலட்சமாக உயர்த்திக் கொடுக்கவோ அல்லது அதற்குப் பதிலாக வாழ்க்கைப் பொருளுதவித் தொகையாக மாதாமாதம் ரூ.4000/– அளிக்கவோ கணவனுக்கு ஆணையிடும்படியும் கோரியிருந்தார்.

இதை வன்மையாக எதிர்த்து வாதாடிய கணவன், ஆரம்பத்தில் எழுதிக் கொள்ளப்பட்ட தீர்வு உடன்படிக்கையை ஒரு சான்றாவணமாக தாக்கல் செய்து, அதில் ஒத்துக் கொள்ளப்பட்ட நிரந்தரப் பிரிமனைப் பணத்தை தான் ஏற்கனவே மனைவிக்கு கொடுத்து விட்டதாகவும், எனவே இனி அந்த வகையில் அல்லது வாழ்க்கைப் பொருளுதவியாக எந்தத் தொகையும் தான் மனைவிக்கு தர வேண்டியதில்லை என்றும் திட்டவட்டமாகக் கூறினார். மேலும் அந்த உடன்படிக்கையில், "இனி எதிர் காலத்தில் ஒருவர் மற்றொருவருக்கெதிராக எவ்விதக் கோரிக்கையையும் எழுப்புவ தில்லை" என்று பரஸ்பரம் ஒப்புக் கொண்டுள்ளதையும் கணவன் சுட்டிக்காட்டினார். இதனடிப்படையில் மனைவியின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் அவர் கோரினார்.

ஏற்கனவே நிரந்தர பிரிமனைப் பணத்தைப் பெற்றுக் கொண்ட மனைவி, இனி எதிர்காலத்தில் கணவனுக்கெதிராக எவ்விதக் கோரிக்கையும் செய்வதில்லை என்று எழுத்துப்பூர்வமான தீர்வு உடன்படிக்கையில் ஒப்புக் கொண்டுவிட்டு தற்போது, நிரந்தரப் பிரிமனைப் பணத்தை உயர்த்தித் தரும்படி அல்லது வாழ்க்கைப் பொருளுத வித் தொகையை அளிக்கும்படி கணவனிடம் கோருவது ஏற்புடையதல்ல என்றும், இதற்கு இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 25 பொருந்தாது என்றும் குடும்ப நீதிமன் றம் தீர்ப்புரைத்து முடிவில் மனைவியின் மனுவை தள்ளுபடி செய்து ஆணையிட்டது.

இதை எதிர்த்து மனைவி ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தில் மேல்முறை யீடு செய்தார். அங்கு மனைவிக்கு ஆதரவாகக் கொடுக்கப்பட்ட அதிரடித் தீர்ப்பில், "வாழ்க்கைப் பொருளுதவித் தொகைக்காக மேற்கொண்டு எவ்விதக் கோரிக்கையும் செய்வதில்லை" என்று கணவனிடம் மனைவி உடன்படிக்கை செய்து கொண்டுள்ளார்

என்ற ஒரு காரணத்தால் அவர் வாழ்க்கைப் பொருளுதவித் தொகையை உயர்த்தித் தரும்படி செய்த கோரிக்கையை நிராகரித்தல் ஆகாது என்றும், அப்படிப்பட்ட ஒரு உடன்படிக்கையே பொதுக் கொள்கைக்கு முரணானதாகும் என்றும், எனவே அது ஓர் செல்லத்தக்க ஒப்பந்தம் ஆகாது என்றும் மாண்பமை நீதியரசர் டி.எஸ்.ஆர். வர்மா, திருமதி. ஜி.ரோஹிணி ஆகியோர் அடங்கிய ஆயம் நிலைநிறுத் தியது.

முடிவில் மனைவியின் மேல்முறையீட்டை அனுமதித்தும், குடும்ப நீதிமன்றத் தின் ஆணையை இரத்து செய்தும், மேற்கண்ட கருத்துரைகளின்படி மனுவை மீண்டும் புதிதாக பரிசீலித்து ஆணையிடும்படி அதற்கு ஏவுரைத்தும் ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம் ஆணையிட்டது.

(Claim for enhanced maintenance by wife - Cannot be rejected merely on ground that there was settlement between parties under which wife agreed not to make any further claim for maintenance - Such an agreement being contrary to public policy would not be a valid contract)

Smt. P. Archana alias Atchamamba Vs. Varada Siva Rama Krishna - F.C.A. No. 11 of2008 -D.S.R. Varma and Ms. G..Rohini, JJ. - Andhra Pradesh High Court - **Citation : AIR 2008 A.P. 216**

வழக்கு எண். 13

D.Suriyakumari Vs. R.Srikanth

குழந்தை பிறந்ததால்
மண வாழ்வில் நாட்டமுண்டு; எனவே மணமுறிவு இல்லை!
– சென்னை உயர் நீதிமன்றம்

மனைவிக்கு மண வாழ்வில் நாட்டமில்லை. அவள் மன தளவில் தன்னைக் கொடுமைப்படுத்துகிறாள் என்று கூறி, கணவன் மணமுறிவு கோருகிறார்.

கீழமை குடும்ப நீதிமன்றம் அவர் கோரியபடி மணமுறிவுக்கான தீர்ப்பாணை வழங்கி விடு கிறது. எனவே மனைவி சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்கிறார். கணவனுக்கும் மனைவிக்கும் பிறந்துள்ள குழந்தை ஒன்றே மனைவி மண வாழ்வில் நாட்டமில்லாதவள் என்ற கணவனின் குற்றசாட்டை பொய்யாக்குகிறது என்று கூறி, குடும்ப நீதிமன்றத்தின் தீர்ப்பாணையை சென்னை உயர் நீதிமன்றம் இரத்து செய்தது.

D.Suriyakumari Vs. R.Srikanth - C.M.A. No. 1283 of 2004 - P.D.Dinakaran and P.P.S.Janarthana Raja,JJ.. - Madras High Court - **Citation : 2007 (2) CTC 26**

வழக்கு எண். 14

Smt. Varsha Rani Nag Vs. Herald Vinay Nandan

வழக்கை நடத்துவதில் மனைவியின் வசதியே முக்கியம் என்பதால் மனுவை அவர் வசிக்கும் இடத்தில் உள்ள நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும்

– சட்டீஸ்கர் உயர் நீதிமன்றம் ஆணை

மணவாழ்க்கைப் பந்தத்தில் இருந்து நீதிமுறையில் பிரிந்து போவதற்காக கணவன் மனுச் செய்தார். ஆனால் மனைவியோ தான் வேறொரு மாவட்டத்தில் பணிபுரிவதாகவும், இதனால் தன்னால் வழக்குக் கேட்பு தேதி ஒவ்வொன்றின் போதும் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு சிரமமாக உள்ளது என்றும், தனக்குத் துணையாக நீதிமன்றத்திற்கு வர தனது தந்தையால் இயலவில்லை என்றும் கூறி அந்த மனுவை தான் வசிக்கும் இடத்திற்கு மாற்றக் கோரினார். மனைவியின் வசதியே முக்கியமானது என்பதைக் கருத்தில் கொண்டு அம்மனுவை அவ்வாறே மாற்ற சட்டீஸ்கர் உயர் நீதிமன்றம் ஆணையிட்டது.

Smt. Varsha Rani Nag Vs. Herald Vinay Nandan - M.C.C. No. 347 of 2006 - D.R.Deshmukh, J. - Chhattisgarh High Court **- Citation : AIR 2007 (NOC) 210 (Chhat.)**

வழக்கு எண். 15

Aurn Chettri Vs. Smt. Madhu Chettri

கணவனின் சகோதரி மற்றும் தாயாருடன் மனைவி சேர்ந்து வாழ வேண்டும் என்பது ஒரு கொடுமையா? இல்லை; இது மணவாழ்வின் சாதாரணப் பிரச்சனை!

– மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம்

வழக்கொன்றில் தன்னால் தனது கணவனின் சகோதரி மற்றும் தாயாருடன் சேர்ந்து வாழ இயலாது என்றும், அவர்களுடன் சேர்ந்து வாழ்வது கொடுமையாக உள்ளது என்றும், தான் தனியாக வாழ விழைவதாகவும், தனக்கு மணமுறிவு வேண்டும் என்றும் மனைவி கோருகிறாள். இந்நிலைப்பாட்டை முதல் மேல்முறையீட்டு நிலையில் ஆய்ந்த மத்திய பிரதேச உயர் நீதிமன்றம், கணவனின் சகோதரி மற்றும் தாயாருடன் சேர்ந்து வாழ்வதை "கொடுமை" என்று கொள்ளவியலாது என்றும், இது

திருமண வாழ்வின் சாதாரண பிரச்சனை என்றும் பொருள் விளக்கமளித்தது.

Aurn Chettri Vs. Smt. Madhu Chettri - First Appeal No. 196 of 2006 - Deepak Verma and Smt. Sushma Shrivastava, JJ. - Madhya Pradesh High Court - **Citation : AIR 2007 (NOC) 563 (M.P.)**

வழக்கு எண்- 16

Dr. Kollam Padma Latha Vs. Dr. Kollam Chandra Sekhar

மூளை முரண் நோயைக் (Schizophrenia) காரணமாகக் காட்டி மணமுறிவு கோரலாமா?

– ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம்

ஒருவர் சம்மந்தம் இல்லாமல் எதையாவது சொல்கிறார் அல்லது செய்கிறார் என்றால் அவர் மூளைமுரண்நோயால் பாதிக்கப் பட்டுள்ளார் என்று பொருள். ஆனால் இந்த நோயை குணப்படுத்தி விடலாம். எனவே மனைவிக்கு இந்நோய் உள்ளது என்ற காரணத்தால் அவளிடமிருந்து கணவன் மணமுறிவு கோர முடியாது. இது மனைவி யுடன் வாழவே முடியாது எனுமளவிற்கு கடுமையான நோய் அல்ல. எனவே மணமுறிவு கிடையாது என்று வழக்கொன்றில் ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம் வழக்கொன்றில் கூறியது.

Dr. Kollam Padma Latha Vs. Dr. Kollam Chandra Sekhar - Civil Misc. Appeal Nos. 2858 and 2859 of 2002 - D.S.R. Varma and P.Swaroop Reddy, JJ. - Andhra Pradesh High Court - **Citation : AIR 2007 (NOC) 482 (A.P.) (DB)**

வழக்கு எண்- 17

P.Devraj Vs. V.Geetha

மனைவிக்கு கர்ப்பப்பை இல்லை என்பதைக் காரணமாகக் காட்டி திருமணத்தை செல்லாது என்று கணவன் விளம்பக் கோர முடியாது !

– சென்னை உயர் நீதிமன்றம்

மனைவியின் கர்ப்பப்பை அறுவையின் வாயிலாக நீக்கப்பட்டுவிட்டது. இதனால் அவள் பாலுறவு கொள்ள அருகதையற்றவள், எனவே அவளுடனான திருமணத்தை செல்லாது என்று விளம்ப கணவன் வழக்கிடுகிறார். ஆனால் கர்ப்பப் பை நீக்கப்பட்டு விட்டதால் ஒரு பெண் பாலுறவிற்கு அருகதையற்றவள் ஆகி விட

மாட்டாள் என்றும், பாலுறவு ஆற்றலின்மை (Impotency) என்பது பாலுறவு கொள்ள முடியாமை, புணர்ச்சி யில் இடர்ப்பாடு அல்லது வலி ஆகும் என்றும், எனவே கர்ப்பப்பை உள்ளது அல்லது இல்லை என்பது பாலுறவிற்கு முக்கியமானதல்ல என்றும், இதனால் திருமணத்தை செல்லாது என்று விளம்ப முடியாது என்றும் சென்னை உயர் நீதிமன்றம் கூறியது.

[Impotency of wife - woman without uterus is quite fit for sexual intercourse - Merely because uterus of woman is removed, she could not be held to be impotent and that could not be ground to declare marriage void]

P.Devraj Vs. V.Geetha - C.M.A. No. 1905 of 2002 - P.D.Dinakaran & P.P.S. Janarthana Raja, JJ. - Madras High Court - **Citation : AIR 2007 (DOC) 145 (Mad.)**

வழக்கு எண். 18

Smt. Paraskunwar Vs. Bhanwarsingh

பல ஆண்டுகளாக கணவனும் மனைவியும் பிரிந்து வாழும் போது மனைவி வாழ்க்கைப் பொருளுதவி கோர முடியாது !

– மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம்

வழக்கின் சங்கதிகள்படி மனுதாரர் எதிர்மனுதாரரை சட்டப்படியாக திரு மணம் செய்து கொண்ட மனைவி. ஆனால் அவர்கள் இருவரும் பரஸ்பர இசைவின் அடிப்படையில் 32 ஆண்டுகளாக பிரிந்து வாழ்கிறார்கள். இந்நிலையில் மனைவி வாழ்க்கைப் பொருளுதவி எதையும் தனது கணவனிடமிருந்து கோர முடியாது என்று மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் அவ்வழக்கில் தீர்ப்புரைத்தது.

Smt. Paraskunwar Vs. Bhanwarsingh - Cri.Revision No. 498 of 2006 - S.S.Dwivedi, J. - Madhya Pradesh High Court (Indore Bench) - **Citation : AIR 2007 (DOC) 160 (MP)**

வழக்கு எண். 19

Ruchirkumar Gajanandbhai Suthar & Ors.Vs.Amitaben Hasmukhlal Nanchandas Mewada

குழந்தை யாரிடம் வளர்வது?
நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கூறுகள்

- குஜராத் உயர் நீதிமன்றம்

1 1/2 வயதுடைய பெண் குழந்தை தந்தையிடம் வளர்ந்து வந்தது. இந்தப் பொறுப்பை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தாய் கோருகிறாள். எனவே அக்குழந்தை தந்தையிடம் வளர்வதா? தாயிடம் வளர்வதா? என்ற பிரச்சனை இவ்வழக்கில் எழுந்தது. இதில் குஜராத் உயர் நீதிமன்றம் பின்வரும் கூறுகளை ஆராய்ந்தது. அதாவது (1) தாயை, தந்தை வீட்டை விட்டு துரத்தி விட்டார். (2) தாய் மெத்தப் படித்த குடும்பத்தைச் சேர்ந்தவள். (3) அவளது குடும்பத்தினர் பண வசதி படைத்தவர்கள். (4) வழக்கின் போது அக்குழந்தை தந்தையின் தாயிடம் அதாவது பாட்டியிடம் வளர்ந்து வருகிறது. (5) தந்தை குழந்தை வளரும் இடத்தை விட்டு வேறொரு நகரத்தில் பணியாற்றுகிறார். எனவே இந்தச் சூழ்நிலைகளில் குழந்தை அதன் தாயிடம் வளர்ந்தால்தான் அதற்குத் தக்க பாதுகாப்பும், கவனமும், சத்தான உணவும் கிடைக்கும் என்று குஜராத் உயர் நீதிமன்றம் கூறி, அக்குழந்தையை தாயிடம் ஒப்படைக்க ஆணையிட்டது.

Ruchirkumar Gajanandbhai Suthar & Ors. Vs. Amitaben Hasmukhlal Nanchandas Mewada - Civil R.A. No. 265 of 2006 - K.M. Mehta, J. - Gujarat High Court **- Citation : AIR 2007 (NOC) 682 (Guj.)**

வழக்கு எண். 20

P. Rajeshkumar Bagmar Vs. Swathi Rajeshkumar Bagmar

மணவாழ்க்கை உரிமைகளை மீட்டளிக்கக் கோரும் வழக்கில் மெய்ப்பிக்கும் சுமை

- சென்னை உயர் நீதிமன்றம்

நியாயமான காரணம் ஏதுமின்றி தன் மனைவி தன்னை விட்டு பிரிந்து சென்று வாழ்கிறாள் என்றும், எனவே அவளை தன்னுடன் மீண்டும் சேர்த்து வைத்து தனது மண வாழ்க்கை உரிமைகளை மீட்டுக் கொடுக்க வேண்டும் (Restitution of conjugal rights) என்றும் கோரி கணவன் தன் மனைவியின் மீது வழக்கிடுகிறார். இது நிலுவையில் இருக்கும் போது அந்த மனைவி தனது கணவனிடமிருந்து மண முறிவு கோரி தனியாக மற்றொரு வழக்கிடுகிறாள். இந்நிலையில் யார் முதலில் வழக்கை துவக்கி நடத்துவது? மெய்ப்பிக்கும் சுமை யாரிடம் உள்ளது? (Right to begin and burden of proof) என்ற வினாக்கள் குடும்ப நீதிமன்றத்தின் முன் எழுந்தன. இங்கு தன்னை கைவிட்டுப் போன மனைவி தான் வழக்கை முதலில் துவக்க வேண்டும் என்று தனியாக ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்து கணவன் வாதிட்டார். ஆனால் கணவன்தான் வழக்கை முதலில் துவக்க வேண்டும் என்று

குடும்ப நீதி மன்றம் ஆணையிட்டது.

எனவே இதை எதிர்த்து கணவன் சென்னை உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தார். அதில் ஆணையிடும் போது, "மனைவி தன்னை நியாயமான காரணம் ஏதுமின்றி பிரிந்து சென்று விட்டாள் என்று சாட்டுரைக்கும் கணவன் தான் முதலில் வழக்கை துவக்கி நடத்த வேண்டும் என்றும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தனது வாதுரைகளை சாட்சியம் கொண்டு மெய்ப்பிக்க வேண்டும் என்றும், அவரிடம் தான் மெய்ப்பிக்கும் சுமை உள்ளது என்றும், இதன் பிறகே, தான் பிரிந்து சென்றதற்கு நியாயமான காரணம் உள்ளது என்பதை மெய்ப்பிக்கும் சுமை மனைவிக்கு மாறுகிறது என்றும் சென்னை உயர் நீதிமன்றம் கூறியது. மேலும் மணமுறிவு கோரி மனைவி தனியாக மனு தாக்கல் செய்துள்ளாள் என்ற சங்கதி இங்கு ஒரு பொருட்டல்ல என்றும் சென்னை உயர் நீதிமன்றம் கூறியது. முடிவில் சீராய்வு மனுவை தள்ளுபடி செய்தது.

P.Rajeshkumar Bagmar Vs. Swathi Rajeshkumar Bagmar - C.R.P. No. 3006 of 2007 - A.Kulasekaran, J. - Madras High Court - **Citation : AIR 2008 Mad. 36**

வழக்கு எண். 21

Samar Ghosh Vs. Jaya Ghosh

கணவன் இருதய அறுவை செய்து கொண்ட போது மனைவி உடனிருந்து கவனிக்கவில்லை என்பது மனைவி கணவனுக்கு செய்யும் மனரீதியான கொடுமை. எனவே மணமுறிவு

– இந்திய உச்ச நீதிமன்றம்

கணவனும் மனைவியும் 16 1/2 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிந்து வாழ் கின்றனர். கணவன் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட போதும் மனைவி வந்து பார்க்கவில்லை. கவனிக்கவும் இல்லை. இதனால் கணவனுக்கு பெரிதும் மன வருத்தம் ஏற்பட்டது. இது மனரீதியான கொடுமை விளைவிப்பது என்பதன் அடிப்படையில் கணவன் தனது மனைவியிடமிருந்து மணமுறிவு கோரினார். இதை ஏற்றுக் கொண்ட கீழமை விசாரணை நீதிமன்றம் அவர் கோரியபடி மணமுறிவிற்கான தீர்ப்பாணை வழங்கியது. ஆனால் இதை எதிர்த்து மனைவி உயர் நீதிமன்றத்தில் செய்த மேல்முறையீட்டில், கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு இரத்து செய்யப்பட்டது.

இதனால் குறையுற்ற கணவன் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய் தார். அங்கு மேற்கண்ட நிலைப்பாட்டை ஆராய்ந்த உச்ச நீதிமன்றத்தின் மாண்பமை நீதியரசர்கள் பி.என்.அகர்வால், பி.பி.நியோல்கர், தல்வீர் பண்டாரி ஆகியோர் தங்கள் ஆணையில், மண வாழ்க்கைத் தரப்பினர்கள் இருவரும் ஒருவர் மற்றொருவர் மீது எவ்வித உணர்வுகளையும் கொண்டிராமல் வாழ்ந்து வந்து கொண்டிருப்பதையே

அவர்களது வாழ்க்கை முறை காட்டுகிறது என்றும், இது அவர்களை வாழ்வில் திரும்ப இணைக்க முடியாத அளவிற்கு முறிந்து போனதொரு வழக்கு என்றும், அவர்களது திருமண பந்தத்தை அப்படியே வைத்திருக்கவோ, காப்பாற்றவோ இயலாது என்றும், இதற்கு மாறாக அவர்களை சேர்த்து வைக்க முயன்றால் அது முற்றிலும் முரண்பட்ட தொரு விளைவை ஏற்படுத்தி விடும் என்றும், எனவே கீழமை விசாரணை நீதிமன்றம் கணவன் கோரியபடி அவருக்கு மணமுறிவு வழங்கி தீர்ப்புரைத்தது சரியே என்றும் கூறியது. முடிவாக கணவனது மேல்முறையீட்டை அனுமதித்தது.

மிக முக்கியமான இவ்வழக்கில் மனரீதியான கொடுமை யாது என்பதற்கான 15 எடுத்துக்காட்டுகளை உச்ச நீதிமன்றம் எடுத்துரைத்தது.

Samar Ghosh Vs.Jaya Ghosh - Civil Appeal No. 151 of 2004 - B.N.Agrawal, P.P.Naolekar and Dalveer Bhandari, JJ. - Supreme Court of India - **Citation : 2007 (3) CTC 464**

வழக்கு எண். 22

K.Thiruvengadam and another Vs. Nil.

பரஸ்பர சம்மதத்தின் பேரிலான மணமுறிவுக்கு ஆறு மாத காலம் காத்திருக்க வேண்டியது கட்டாயமா?

– சென்னை உயர் நீதிமன்றம்

இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13–பி–இன்படி பரஸ்பர சம்மதத்தின் பேரில் மணமுறிவு கோர சம்பந்தப்பட்ட தரப்பினர்களாகிய கணவனும் மனைவியும் மனுச் செய்து ஆறு மாத காலம் முடிவுற்ற பிறகே அம்மனுவை நீதிமன்றம் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளும். இந்த ஆறு மாத காலத்தை தளர்த்த நீதிமன்றம் ஆணையிட முடியுமா? இந்த நிபந்தனை கட்டாயமானதா (கட்டளையிடுவதா) அல்லது அறிவுறுத்துவதா (Mandatory or Directory) என்ற பிரச்சனைகள் ஒரு வழக்கில் எழுந்தது. அப்போது சென்னை உயர் நீதிமன்றம் கூறிய கருத்துக்கள் வருமாறு.

திருமண பந்தம் முறிந்துவிடாமல் இருக்க கடைசி நிமிடம் வரை முயற்சிக்க வேண்டியது நீதிமன்றத்திற்கு ஒரு கடப்பாடாக (Obligatory) இருந்தாலும், தம்பதிகள் சேர்ந்து வாழ சாத்தியமே இல்லை எனுமிடத்தும், பரஸ்பர சம்மதத்தின் பேரில் மணமுறிவு கோருவதற்கான செயல்முறைகள் பின்பற்றப்படும் போதும், ஆறு மாத காலம் காத்திருத்தல் எனும் நிபந்தனையை தளர்த்த நீதிமன்றத்தால் இயலும். மேற்படி சட்டப்பிரிவு அறிவுறுத்தக் கூடியது மட்டுமேயாகும். இதைக் கட்டாயமான ஒன்று என நிலை நிறுத்தினால், அது பரஸ்பர சம்மதத்தின் பேரில் மணமுறிவு எனும் மிகத் தாராளமான கோட்பாட்டை நிலைகுலையச் செய்யும், என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியது.

முடிவில் ஆறு மாதம் கழித்து மனுவை ஒத்தி வைத்து கீழமை நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை இரத்து செய்து, அதனை உடனடியாக கோப்பிற்கு எடுத்து உகந்த ஆணைகளைப் பிறப்பிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் ஆணையிட்டது.

K.Thiruvengadam and another Vs. Nil.- C.R.P. No. 3159 of 2007 - P.Jyothimani,J. - Madras High Court - **Citation : 2007 (5) CTC 870**

வழக்கு எண். 23

Parmanand and Anr. Vs. Jagrani

முதல் கணவன் உயிருடன் உள்ள போது அவரது மனைவி மற்றொரு ஆணுடன் தங்கி வாழ்கிறாள். இதனால் அவள் அந்த ஆணின் சட்டப்படியான மனைவி என்ற தகுநிலையை அடைந்து விடுகிறாளா?

– மத்தியப் பிரதேச நீதிமன்றம்

இவ்வழக்கில் முதல் கணவன் உயிருடன் உள்ள பொழுதே ஒரு பெண் மற்றொரு ஆணுடன் சேர்ந்து வாழத் தொடங்குகிறாள். இவ்வாறு முதல் கணவன் உயிருடன் உள்ள போது அவரது மனைவி மற்றொரு ஆணுடன் சேர்ந்து வாழ்வதை அனுமதிக்கும் வகையில் அவர்கள் சமுதாயத்தில் பழக்க–வழக்கம் ஏதுமில்லை. மேலும் இவர்களிடையே திருமணச் சடங்கு நடந்தது என்பதைக் காட்டுவதற்கான ஆதாரமும் இல்லை. இங்கு ஒருவரின் மனைவி மற்றொரு ஆணுடன் தங்கியிருந்தாள் என்பதாலேயே அவள் அந்த ஆணின் மனைவி என்ற தகு நிலையை அடைந்து விட்டதாகக் கூற முடியாது என்றும், எனவே அவள் அந்த ஆணைச் சட்டப்பூர்வமாகத் திருமணம் செய்து கொண்ட மனைவியாக மாட்டாள் (not a legally wedded wife) என்றும் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் கூறியது.

மேலும் இந்து வாரிசுரிமைச் சட்டப்படி, முறைமணப் பிறப்பின் வழியாகப் பிறக்காத குழந்தைகளும் (illegitimate children) முறைமணப்பிறப்புக் குழந்தை களாகவே பாவிக்கப்பட வேண்டும் என்றும், அவர்கள் தங்கள் பெற்றோர் சொத்தி லிருந்து இறங்குரிமையின் அடிப்படையில் பாகம் பெற முடியும் என்றும் மத்தியப்பிரதேச உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

Parmanand and Anr. Vs. Jagrani & Ors. - F.A.No. 123 of 1990 - Dipak Misra, J. - Madhya Pradesh High Court - ***Citation : AIR 2007 M.P. 242***

வழக்கு எண். 24

Himanshu Mahajan Vs. Rashu Mahajan & Ors.

குழந்தையின் பாதுகாப்பு (கஸ்டடி) பொறுப்பு கோரும் தாய், தந்தையர் எந்த இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் மனுச் செய்வது?

– இமாச்சல பிரதேச உயர் நீதிமன்றம்

தனது குழந்தையின் பாதுகாப்பு பொறுப்பை (கஸ்டடி) தன்னிடம் தர வேண்டி கணவனை விட்டு பிரிந்து வாழும் மனைவி அவள் வசிக்கும் இடத்தின் மீது அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்கிறாள். அவள் இமாச் சல பிரதேசத்தில் உள்ள மண்டி மாவட்டத்திற்குட்பட்ட சுந்தர்நகர் வட்டத்தில் அவளது பெற்றோருடன் வசிக்கிறாள். எனவே அங்குள்ள நீதிமன்றத்தில் மேற்படி மனு தாக்கல் செய்தாள். ஆனால் அக்குழந்தையோ அவளது கணவன் (குழந்தையின் தந்தை) வசிக்கும் இடமான தில்லியில் தந்தையின் பாதுகாப்பு பொறுப்பில் வாழ்ந்து வருகிறது. எனவே குழந்தை எங்கு வழக்கமாக வசித்து வருகின்றதோ, அந்த இடத்தின் மீது அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றத்தில் தான் இத்தகு பாதுகாப்பு பொறுப்பு கோரும் மனுவை தாக்கல் செய்ய முடியும் என்று கணவன் எதிர்த்து வழக்காடுகிறார். இதனை ஆராய்ந்த கீழமை நீதிமன்றம், தனக்கு அம்மனுவை விசாரிக்கும் அதிகாரவரம்பு உள்ளது என்று கூறி கணவனின் எதிர்வாதத்தை நிராகரித்தது.

எனவே இதை எதிர்த்து அக்கணவன் இமாச்சல பிரதேச உயர் நீதிமன்றத் தில் சீராய்வு மனு தாக்கல் செய்தார். அதில் தீர்ப்புரைக்கும் போது "காப்பாளர்கள் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டத்தின்" (Guardians and Wards Act) 9–ஆம் பிரிவின் படி, குழந்தை எந்த இடத்தில் வழக்கமாக வசித்து வருகிறதோ அந்த இடத்தின் மீது அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றத்தில் தான் இப்படிப்பட்ட மனுவை தாக்கல் செய்ய முடியுமே தவிர, அக்குழந்தையின் தாய், தந்தையர் வசிக்கும் இடம் இங்கு ஒரு பொருட்டல்ல என்று உயர் நீதிமன்றம் கூறியது. இதன் அடிப்படையில் கணவனின் சீராய்வு மனுவை அனுமதித்தது. எனினும் குழந்தை வசிக்கும் இடமான தில்லியில் உள்ள நீதிமன்றத்தில் புதிய மனுவை தாக்கல் செய்ய மனைவிக்கு உரிமை அளித்தது.

Himanshu Maha jan Vs. Rashu Maha jan & Ors.- Civil Revn. No. 144 of2006 - V.K. Gupta, C.J. - Himachal Pradesh High Court - **Citation : AIR 2008 H.P. 38**

வழக்கு எண். 25

Smt. Rayala M.Bhuvaneswari v. Nagaphanender Rayala

மனைவி தொலைப்பேசி வாயிலாக மற்றவர்களுடன் பேசிய உரையாடல்களை கணவன் அவளுக்குத் தெரியாமல் ஒலிப்பதிவு

சாதனத்தில் பதிவு செய்கிறார். இதை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள முடியுமா?

– ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம்

கணவனும் மனைவியும் திருமணத்திற்குப் பின்னிட்டு அய்க்கிய அமெரிக்க நாடுகளில் வசித்து வந்தனர். இடையில் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து விட்டனர். இதைத் தொடர்ந்து கணவன், தனது மனைவியிடமிருந்து மணமுறிவு கோரி குடும்ப நீதிமன்றத்தில் வழக்கிட்டுள்ளார். அதன் விசாரணையின் போது, சற்றே நூதனமான ஒரு சான்றாவணத்தை கணவன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

அதாவது அவர் தனது மனைவி அமெரிக்க நாடுகளிலிருந்து இந்தியாவில் உள்ள தனது பெற்றோர்களிடமும், நண்பர்களிடமும் பேசிய தொலைபேசி உரையாடல் கள் அடங்கிய கணினி வன் வட்டு (hard disc) ஒன்றை தன் தரப்பு சான்றாவணமாக முன்னிலைப்படுத்துகிறார். அது கணவன் தரப்பு சான்றாவணம் எண். 18 (ம.சா.ஆ. 18) ஆக குறியிடப்படுகிறது.

இங்கு கவனிக்கத்தக்கது யாதெனில் அந்த உரையாடல்களை மனைவிக் குத் தெரியாமல் கணவன் இரகசியமாக பதிவு செய்தவையாகும். இது பற்றி கணவனது தரப்பில் மனையிடம் குறுக்கு விசாரணை செய்கின்ற போது, அந்த வட்டில் உள்ள குரல் தன்னுடையதுதான் என்று மனைவி ஒத்தேற்கிறாள். ஆனால் அதே நேரத்தில் உரையாடல்களின் சில பகுதிகள் தன்னுடைய குரல் அல்ல என்று அவள் மறுத்துரைக்கிறார்.

எனவே அவ்வுரையாடல்களில் உள்ள குரல் தன்னுடைய மனைவியுடையது தான் என்பதை மெய்ப்பிக்க அவ்வன் வட்டை வல்லுநர் ஆய்வுக்கும் கருத்துரைக்கும் அனுப்ப வேண்டும் என்று அக்கணவன் இந்திய சாட்சியச் சட்டத்தின் 45–ஆம் பிரிவின்படி மனு தாக்கல் செய்கிறார். இம்மனுவை குடும்ப நீதிமன்றம் ஏற்று பின் வருமாறு ஆணை பிறப்பிக்கிறது. அதாவது, "கணவன்–மனைவி ஆகிய இரு தரப் பினர்களின் முன்னிலையில் மனைவியின் ஒத்தேற்கப்பட்ட குரலை முதலில் வல்லுநர் தனது ஒலிப்பதிவு சாதனத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும், பின்னிட்டு மனைவி யின் அந்த ஒத்தேற்கப்பட்ட குரலை வன் வட்டில் உள்ளதும் மனைவி மறுத்துரைப்பது மான உரையாடல்களின் பகுதியோடு ஒப்பிட்டு பார்த்து அறிக்கை அளிக்க வேண்டும் என்றும்" குடும்ப நீதிமன்றம் ஆணையிட்டது. இதனால் குறையுற்ற மனைவி, இதை எதிர்த்து ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்கிறார்.

சற்று சிக்கலான இவ்வழக்கில் தீர்ப்புரைக்க ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன் றம் பல்வேறு முன் தீர்ப்பு நெறிகளை ஆராய்ந்தது. அவற்றின்படி, மனைவி மற்றவர் களுடன் தொலைபேசி வாயிலாக செய்த உரையாடல்களை அவளுக்குத் தெரியாமல் கணவன் இரகசியமாக பதிவு செய்த செயல் சட்ட விரோதமானது என்றும், அது அவளது அந்தரங்க உரிமையில் (right to privacy) தலையிட்டதாகும் என்றும், மேலும்

இந்திய அரசமைப்புச் சட்டம் உறுபு 21-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள தனிப்பட்ட சுதந்திர உரிமையை பறிப்பதாகும் என்றும் உயர் நீதிமன்றம் கணவனுக்கு எதிராக கூறியது.

மேலும் "கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சிறிதளவாவது நம்பிக்கை இருக்க வேண்டும்" என்று கூறிய ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம், "மனைவி மற்ற வர்களுடன் தொலைப்பேசியில் பேசிய உரையாடல்களை கணவன் பதிவு செய்திருப் பது என்பது அவளது அந்தரங்க உரிமையை மீறுவதாகும் என்றும், அடிப்படையான இந்த உரிமையே மீறப்பட்டுவிட்ட பிறகு, சட்டமுரணான, அரசமைப்பிற்கு விரோத மான, ஒழுங்கீனமான வழிகளை கையாண்டு கணவனால் சேகரிக்கப்பட்ட அத்தகு சாட்சியத்தை அவரே ஆதாரமாகக் கொள்ள முடியுமா?" என்றொரு வினா எழுப்பி, "இது நிச்சயம் அனுமதிக்கப்படக் கூடாது" என்றொரு பதிலையும் தனது தீர்ப்புரையில் தந்தது.

முடிவில், "வன் வட்டில் உள்ள குரல் ஒலிப்பதிவுகள் உண்மையாகவே இருந் தாலும் கூட, அதை ஒரு சாட்சியமாக அனுமதிக்க இயலாது என்றும், எனவே மனுதாரர் தரப்பு சான்றாவணம் எண். 18 சாட்சியமாக அனுமதிக்கப்படத்தக்கதல்ல என்றும், இதனால் குரல் சோதனைக்கு உட்பட வேண்டும் என்று மனைவியை கட்டாயப்படுத் துவதற்கோ, அவள் ஒத்தேற்றுக் கொண்ட குரலுடன் அவளால் மறுத்துரைக்கப்பட்ட குரல் பதிவை ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்லி வல்லுநரைக் கேட்டுக் கொள்வதற்கோ இங்கு இடமில்லை" என்றும் கூறியது.

மேற்சென்ற காரணங்களின் அடிப்படையில் மனைவியின் சீராய்வு மனுவை அனுமதித்து ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. குடும்ப நீதிமன்றத்தின் ஆணை இரத்து செய்யப்பட்டது.

Smt. Rayala M.Bhuvaneswari v. Nagaphanender Rayala - Bilal Nazki, Actg. C.J. - C.R.P. No. 6456 of 2006 - Dt. 20-12-2007 - Andhra Pradesh High Court - **Citation : AIR 2008 A.P. 98**

வழக்கு எண். 26

Ganavva & Ors. Vs. Ningavva & Ors.

இந்து தத்தெடுப்பை மெய்ப்பிக்க எது போதும்?

– கர்நாடக உயர் நீதிமன்றம்

இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின்படி ஒரு குழந்தை தத்தெடுக்கப்பட்டதை மெய்ப்பிக்க, "பதிவு செய்யப்பட்ட தத்தெடுப்புப் பத்திரத்தை" (registered adoption deed) முன்னிலைப்படுத்தினால் அதுவே போதும். தத்தெடுப் புப் பத்திரத்தில் குழந்தையை தத்துக் கொடுப்பவரும், அதை தத்து எடுப்பவரும் கையொப்பம் செய்திருக்க வேண்டும். அப்பத்திரத்தில் தத்தெடுத்துக் கொள்பவர் மட்டும் கையொப்பம் செய்து, தத்துக் கொடுப்பவர் கையொப்பம் செய்யவில்லை

பானால், தத்தெடுப்பு நிகழ்வு மெய்ப்பிக்கப்பட்டதாகாது. இச்சட்டத்தின் பிரிவு 7–இன்படி, தத்தெடுத்துக் கொள்ள விழையும் ஓர் இந்து ஆணுக்கு மனைவி உயிருடன் இருந்தால், தத்தெடுப்பிற்கு அம்மனைவியின் சம்மதமும் அவசியம் வேண்டும். அப்போதுதான் அது சட்டப்படி செல்லத்தக்க தத்தெடுப்பாகும்.

Ganavva & Ors. Vs. Ningavva & Ors. - *R.S. A. No. 1613 of 2005* - *N.Kumar, J.* - Karnataka High Court - **Citation : AIR 2008 (NOC) 2214 (Kar.)**

வழக்கு எண். 27

Seniammal (died) Vs. Mahamuni

இளவரின் சொத்தை நீதிமன்றத்தின் அனுமதியின்றி அவரது காப்பாளர் விற்றால் அவ்விற்பனை செல்லாது – இந்து உரிமை வயதடையாமை மற்றும் காப்பாளர் நிலைச்சட்டத்தின் பிரிவு 8

இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்பாளர்நிலைச் சட்டத்தின் அடிப்படையில் எழுந்த இவ்வழக்கில் ஒரு இயற்கைக்காப்பாளரின் அதிகாரங்களைப் பற்றிக் கூறும் பிரிவு 8 ஆராயப்பட்டது. ஒரு சொத்தில் வாரிசுரிமையின் அடிப்படையில் இளவர்கள் பாதி பாகத்திற்கு உரிமையுடையவர்களாக உள்ளனர். இந்நிலையில் அச் சொத்தை விற்பனை செய்வதற்காக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. ஆனால் அவ்விற்பனை மேற்படி இளவர்களின் நன்மைக்காக செய்து கொள்ளப்பட்டதல்ல. இதற்கு நீதிமன்றத்தின் அனுமதியும் பெறப்படவில்லை. எனவே மேற்படி சட்டத்தின் பிரிவு 8–இன்படி நீதிமன்றத்தின் அனுமதியின்றி இளவர்களின் பாகத்தை விற்பனை செய்வதற்காக செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை செல்லாது என்று இவ்வழக்கில் நிலைநிறுத்தப்பட்டது.

(Section 8 of the Hindu Minority and Guardianship Act 1956 - Minors holding half share of original owner, party to Agreement. Agreement is not entered for the benefit of Minors - Court permission not obtained for sale - Held, Agreement for Sale of Minor's share without Court permission is not maintaninable.)

Seniammal (died) Vs. Mahamuni - **Citation : (2021) 2 CTC 556**

வழக்கு எண். 28

Shamsudeen M. Illias Vs. Mohammed Salim M.Idris & Ors.

இசுலாம் ஆண் இந்துப் பெண்ணை திருமணம் செய்து கொண்டால் அது செல்லத்தக்கதல்ல. எனினும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை முறைமணப்பிறப்பினதே !

– கேரளா உயர் நீதிமன்றம்

இசுலாம் மதத்தைச் சார்ந்த ஆண் ஒருவர் இந்து மதத்தைச் சார்ந்த பெண் ஒருவரைத் திருமணம் செய்து கொள்கிறார். இசுலாம் சட்டப்படி இசுலாம் ஒருவர் சிலை அல்லது தீ வழிபாடு (idolatress or fire worshipper) செய்யும் பெண்ணை மணம் முடித்துக் கொள்ள முடியாது. இந்துப் பெண்மணியானவள், சிலை அல்லது தீ வழிபாடு செய்யும் வகையினர் ஆவார். இத்திருமணம் "ஃபாஸிட்" எனப்படும். இசுலாம் சட்டப் படி இத்திருமணம் செல்லத்தக்கதல்ல. எனினும் இல்லா நிலையதல்ல (Not void but invalid). இல்லா நிலை அல்லாத இத்திருமணத்தின் விளைபலனாக அவர்களுக்குப் பிறந்த குழந்தை முறைமணப்பிறப்புக் குழந்தையே (legitimate child) ஆகும்.

எனவே அக்குழந்தை தனது தந்தையின் சொத்தை இறங்குரிமையில் பெற உரிமையுடையதாகும் என்று கேரளா உயர் நீதிமன்றம் இரண்டாம் மேல்முறையீடு ஒன்றில் தீர்ப்புரைத்தது.

Shamsudeen M. Illias Vs. Mohammed Salim M.Idris & Ors.- S.A.. No. 693 of 1994 - M.Sasidharan Nambiar, J. - Kerala High Court - ***Citation : AIR 2008 Ker. 59***

வழக்கு எண்- 28

Settu Vs. Reshma Sulthana

ஒரு இசுலாம் கணவர் தனது திருமணத்தை கலைத்துக்கொள்ள இசுலாம் திருமணக்கலைப்புச்சட்டம், 1939–இன் வகைமுறைகளை பயன்படுத்த இயலாது; எனினும் அவர் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம், 1984–இன் பிரிவு 7(1)(b)–க்கான விளக்கம் (a)–இன்படி திருமணக்கலைப்புக்கு மனு தாக்கல் செய்யலாம்

– சென்னை உயர் நீதிமன்றம்

A Muslim Husband cannot invoke the provisions of the Dissolution of Muslim Marriage Act, 1939, to dissolve his marriage; But he can invoke explanation (a) to Section 7(1)(b) of the Family Courts Act, 1984, being a

Special Act to seek dissolution of his marriage

இசுலாம் கணவர் ஒருவர் தனது திருமணத்தைக் கலைத்துக் கொள்ள வேண்டி இசுலாம் திருமணக்கலைப்புச் சட்டம், 1939–இன் (Dissolution of Muslim Marriage Act) பிரிவு 2(8)–இன் கீழ் குடும்ப நீதிமன்றத்தில் மனுச்செய்கிறார். ஆனால் இசுலாம் திருமணக்கலைப்புச்சட்ட வகைமுறைகளை ஒரு இசுலாம் கணவர் பயன் படுத்த இயலாது அதாவது துணைக்கு அழைக்க இயலாது என்று கூறி, அவரது மனுவை தர்மபுரி குடும்ப நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. எனவே இத்தீர்ப்பை எதிர்த்து அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்கிறார்.

அதில் தீர்ப்புரைத்த உயர் நீதிமன்றம், இசுலாம் திருமணக் கலைப்புச் சட்டத்தின் வகைமுறைகளை ஒரு இசுலாம் கணவர் தனது தீர்வழிக்காக செயற்படுத்த இயலாது என்பது உண்மையே என்றும், எனினும் வழக்கின் சங்கதிகள்படி அக்கணவர் தனக்கு நடந்த திருமணத்தைக் கலைத்துக் கொள்வதற்காக எடுத்த பல்வேறு முயற்சி களும், அதற்கான வகைமுறைகள் எவையும் சட்டத்தில் இல்லாத காரணத்தால், தோல்வியில் முடிவுற்றிருப்பது கண்கூடாகத் தெரிகிறது என்றும், குடும்ப நீதிமன்றம் அவரது மனுவை தள்ளுபடி செய்திருக்கக்கூடாது என்றும், அது குடும்ப நீதி மன்றங்கள் சட்டம் பிரிவு 7(1)(b)–யைப் பயன்படுத்தி அவரது வழக்கைத் தீர்மானித்து அவருக்கு மணமுறிவுக்கான தீர்ப்பாணையை வழங்கியிருக்க வேண்டும் என்றும், அப் பிரிவின் கீழ் அத்தகு அதிகாரவரம்பை செயற்படுத்தும் போது குடும்ப நீதிமன்றங் களானவை, ஓர் மாவட்ட நீதிமன்றமாக அல்லது ஓர் உரிமையியல் சார்பு நீதிமன்றமாக கருதப்படுகிறது என்றும் கூறியது.

உயர் நீதிமன்றம் மேலும் கூறுகையில், குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தின் பிரிவு 7(1)(b)–க்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் (a)–இன்படி ஒரு திருமணத்தைக் கலைத்துக் கொள்வது தொடர்பான எல்லாவிதமான வழக்குகளையும் குடும்ப நீதி மன்றம் தீர்மானிக்கலாம் என்றும், எனவே தருமபுரி குடும்ப நீதிமன்றம், மனுதாரரின் மனுவை குடும்ப நீதிமன்றங்கள் சட்டம், 1984–இன் கீழ் குறிப்பாக மேற்படி விளக்கம் (a)–இன்படி தீர்மானித்திருக்க வேண்டும் என்றும், இசுலாம் திருமணங்கள் கலைப்புச் சட்டம், 1939–இல் ஒரு இசுலாம் கணவன் திருமணக்கலைப்பு கோருவதற்கென சட்டப் பிரிவுகள் ஏதுமில்லை என்பதால், அவர் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம், 1984 என்ற சிறப்புச்சட்டத்தின் கீழ் திருமணக்கலைப்பு கோர அருகதையற்றவராகி விட மாட்டார் என்றும் நிலைநிறுத்தியது.

முடிவில் அந்த இசுலாம் கணவரின் மேல்முறையீட்டை அனுமதித்து, அவர் குடும்ப நீதிமன்றத்தில் கோரியபடி தனது திருமணக் கலைப்பிற்கான தீர்ப்பாணை பெற அருகதையுடையவர் என்று சென்னை உயர் நீதிமன்றம் ஆணையிட்டது. மேலும் பின்வரும் சில முக்கிய சட்டக்கருத்துரைகளை தனது தீர்ப்புரையின் 18 மற்றும் 19–வது பத்திகளில் முன் வைத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

"18. Due to the change in circumstances, the Government has

come out with an Act called **"The Muslim Women (Protection of Rights on Marriage) Ordinance, 2018"**. By the said Act, the pronouncement of triple talaq at a time has been prohibited and made criminal offence. The pronouncement of triple talaq should be as per the religious practices by giving notice and thereafter by arbitration by two persons in the presence of Khazi and on failure only, the talaq would take effect as per the muslim religious practices. **The Dissolution of Muslim Marriages Act, 1939 was enacted by the British India regime as colonial legislation to safeguard the interest of the women.** The perception of understanding of life and religious practices on personal laws got changed and many muslim men are approaching the Court for dissolution of marriage as in the present case on hand. Therefore, apart from religious practices, people should have additional forum through Court.

19. If any muslim man wants to get a decree of divorce or dissolution of marriage by coming to the Court, he should have the support of the statute. **The Government should encourage people coming to the Court for dissolution of marriage especially Muslim men.** It should not be mistaken that the Courts are interfering with personal laws. Options should be available to the people to get relief either to follow religious practices or through Courts. Getting relief through Court is in addition to the procedure laid down as per religious practices. The traditional barriers can be broken only by allowing the muslim men to approach the Court In fine, the Civil Miscellaneous Appeal stands allowed. No costs."

Settu Vs. Reshma Sulthana - C.M.A.No.2192 of2017 -N.Kiruba karan and Abdul Quddhose, JJ. - Madras High Court - Decided on 30-03-2021 - **Citation : (2021) 4 MLJ 51**

வழக்கு எண். 30

S.Sarath Kumar
Vs.
The District Collector and The Sub-Registrar

சிறப்புத்திருமணச்சட்டப்படி திருமணம் செய்து கொள்ள பிரிவு 5–இன்படி மாவட்ட திருமண அலுவலருக்குத் (சார் பதிவாளர்) தர வேண்டிய அறிவிப்பை திருமணத்திற்கு முன்பு தர வேண்டும்; திருமணம் முடிந்த பிறகு தந்தால் திருமணம் செல்லாததாகும்.

Notice Of Intended Marriage U/S 5 Of Special Marriage Act Must Be Given "Prior" To Solemnisation Of Marriage

சுய மரியாதைத்திருமணங்களை இரண்டு இந்துக்களிடையே மட்டுந்தான் நடத்த முடியும் Self-respect marriages can be performed only between two Hindus

இந்திய கிறுஸ்தவ திருமணச்சட்டப்படி திருமணத்தரப்பினர்களில் இருவரும் கிறுஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்பதில்லை. அவர்களில் ஒருவர் வேற்று மதத்தினராகக் கூட இருக்கலாம்; ஆனால் கிறுஸ்தவ மத சடங்குகள் மற்றும் சட்ட நடைமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

– சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வாயம் வழங்கிய விரிவான மற்றும் முக்கியமான சுட வினக்கம்

தனித்திருமணச்சட்டம் எனப்படும் 1954–ம் ஆண்டு சிறப்புத்திருமணச் சட்டத்தில் உள்ள 8 அத்தியாயங்களில் அத்தியாயம் 2 மற்றும் 3 அடிப்படையானதாகும். அதாவது இச்சட்டத்தின் 2–வது அத்தியாயத்தின் கீழான 4 முதல் 14 வரையுள்ள சட்டப்பிரிவுகள், சிறப்புத்திருமணங்களை நிறைவேற்றி வைத்தல் (Solemnization of Special Marriages) பற்றிய சட்ட நடைமுறைகளை பகர்கிறது. 3–வது அத்தியாயத்தின் கீழான 15 முதல் 18 வரையுள்ள சட்டப்பிரிவுகள், இச்சட்டத்தின் கீழ் நிறைவேற்றி வைக்கப்பட்ட திருமணத்தைத் தவிர்த்து வேறு முறைகளில் செய்து கொள்ளப்பட்ட திருமணங்களைப் பதிவு செய்தல் (Registration of Marriages Celebrated in Other Forms) தொடர்பான நடைமுறைகளை கூறுகிறது. அதாவது சாதி, மதம் என்ற எந்த வகைப்பாட்டிற்கும் உட்படாமல் கலப்பு மணமாக செய்து கொள்ள உத்தேசிக்கப் படுகின்ற திருமணத்தை நிறைவேற்றி வைக்க அத்தியாயம் 2 வழி காட்டுகிறது. அதே நேரம் சிறப்புத்திருமணச் சட்டத்தின் கீழ் அல்லாமல் வேறு முறைகளில் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட திருமணத்தைப் பதிவு செய்து கொள்ள அத்தியாயம் 3 வகை செய்கிறது.

சிறப்புத்திருமணச்சட்டம் பற்றி மேற்படி ஒரு சிறு அறிமுகம், நாம் இந்த வழக்கின் சங்கதிகளையும், அதில் மாண்பமை நீதியரசர் திரு. ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் ஆழ்ந்து ஆராய்ந்து நல்கிய தீர்ப்புரையையும் எளிதாக புரிந்து கொள்ள வழி செய்யும். இனி வழக்கின் சங்கதிகளுக்குப் போவோம்.

இவ்வழக்கின் மனுதாரர் பட்டியல் சாதியைச் சார்ந்தவர். இவர் கிறுஸ்தவ

மதத்தைச் சேர்ந்த லிடியா என்பவரை காதலித்து வந்தார். இவர்களது காதலுக்கு இரண்டு குடும்பத்தினரும் பச்சைக்கொடி காட்டவே இவர்கள் இருவரும் 10–06–2022–ஆம் தேதியன்று உள்ளூர் பஞ்சாயத்து தலைவர் மற்றும் அரசியல்வாதி ஒருவரின் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டனர். பின்னிட்டு இத்திருமண ஜோடி இருவரும் சேர்ந்து 17–06–2022–ஆம் தேதியன்று கூட்டாக விண்ணப்பம் ஒன்றை திருமணப்பதிவாளரிடம் (இவ்வழக்கில் இரண்டாம் எதிர்மனுதாரர்) சமர்ப் பித்தனர். அது சிறப்புத்திருமணச்சட்டம் பிரிவு 5–இன் கீழான அறிவிப்பு ஆகும். இதை யடுத்து அவர்கள் இருவரும் தங்களுக்கு திருமணச்சான்றிதழ் கிடைத்துவிடும் என்று நம்பிக்கையுடன் காத்திருந்தனர். ஆனால் அவர்களது விண்ணப்பத்தை இரண்டாம் எதிர்மனுதாரரான திருமணப்பதிவாளர், மணமகள் லிடியாவிற்கு இன்னும் 21 வயது பூர்த்தியாகவில்லை என்று கூறி, நிராகரித்துவிட்டார். எனவே இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வாயத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய் யப்பட்டது.

மனுதாரருக்காக தோன்றிய வழக்குரைஞர் வாதிடுகையில், திருமணத்தின் போது பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியாகி இருந்தால் அதுவே போதுமானது என்று சிறப்புத் திருமணச் சட்டத்தின் பிரிவு 4(c) கூறுவதை இரண்டாம் எதிர்மனுதாரரான திருமணப்பதிவாளர் கவனிக்கத்தவறிவிட்டார் என்று குறிப்பிட்டார். எனவே மனுதார ரின் திருமணத்தை பதிந்து கொள்ள பதிவாளருக்கு ஏவுரைக்கும்படி வேண்டினார்.

இவ்வாறு ஒரு ஏவுரையை பிறப்பிக்க இயலுமா என்று ஆராய்ந்த மாண்பமை நீதியரசர்ஜி.ஆர்.சுவாமிநாதன், சிறப்புத்திருமணச்சட்டத்தின் வகைமுறைகளை நமது ஆரம்ப அறிமுக பத்தியில் கண்டவாறு பரிசீலனை செய்தார். தங்கள் திருமணத்தை சிறப்புத்திருமணமாக செய்து கொள்ளப்போவது பற்றிய அறிவிப்பை திருமணத் தரப்பினர்கள் அதற்குரிய படிவத்தில் பதிவாளரிடம் (திருமண அலுவலர்) தருதல் வேண்டும் என்று பிரிவு 5 கட்டாயமாகக் கூறுகிறது. இந்த அறிவிப்பின் பேரில் பதிவாளர் (திருமண அலுவலர்) என்ன செய்ய வேண்டும், அவர்கள் திருமணத்திற்கு யாரேனும் ஆட்சேபணை தெரிவிக்கின்றார்களா, ஆட்சேபணை கிடைக்கப்பெற்றால் என்ன செய்வது, திருமணச்சான்றிதழ் எவ்வாறு தருவது என்பன பற்றிய நடை முறைகளையெல்லாம் பிரிவு 5–க்குப் பிறகு வரும் அடுத்தடுத்த பிரிவுகள் கூறு கின்றன. இந்த நடைமுறைகளைப் பின்பற்றி நிறைவேற்றிக் கொள்ளப்படும் சிறப்புத் திருமணத்தில் மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியாகி யிருக்க வேண்டும். அதுபோல் சிறப்புத்திருமணமாக செய்து கொள்ள உத்தேசிக்கப் படும் திருமணத்திற்கான பிரிவு 5–இன்படியான அறிவிப்பை தரப்பினர்கள் தங்கள் திருமணத்திற்கு முன்னதாக தர வேண்டும். ஆனால் இங்கு மனுதாரரும், மணப்பெண் லிடியாவும் தங்கள் திருமணம் முடிந்த பிறகு தருகின்றனர். எனவே இவர்கள் திருமணம் சிறப்புத்திருமணச் சட்டத்தின் கீழ் வராது; செல்லாது.

ஆகவே சிறப்புத்திருமணமாக அல்லாமல் வேறு முறைகளில் செய்து கொள் ளப்படும் திருமணங்களைப் பதிவு செய்தல் பற்றி கூறும் சிறப்புத் திருமணச்சட்டத்தின் அத்தியாயம் 3 மதுரை அமர்வாயத்தின் கவனத்தை ஈர்த்தது. அதாவது, வழக்குத்தரப்

பினர்களின் திருமணம் 'வேறு முறைகள்' எதனின் கீழாவது ஓர் செல்லத்தக்க திருமணமாக ஆக வாய்ப்புள்ளதா என்று மாண்பமை நீதியரசர் பல கோணங்களில் தனது தீர்ப்புரையில் ஆராய்ந்தார்.

சிறப்புத்திருமணச்சட்டத்தின்படி அல்லாமல் வேறு முறைகளில் செய்து கொள்ளப்படுகின்ற திருமணத்தைப் பதிவு செய்தல் பற்றி கூறும் அத்தியாயம் 3–இன் கீழான பிரிவு 15(d)–இன்படி திருமணப்பதிவின்போது திருமணத்தரப்பினர்கள் இருவரும் 21 வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும். இங்கு திருமணப்பதிவிற்காக இரண்டாம் எதிர்மனுதாரரிடம் இருவரும் கூட்டாக விண்ணப்பிக்கும் 17–06–2022–ஆம் தேதியன்று லிடியா 21 வயதை பூர்த்தி செய்திருக்கவில்லை. எனவே அவர்களது திருமணத்தை வேறு முறைகளில் செய்து கொள்ளப்பட்ட ஓர் திருமணமாகவும் கருத இயலாது.

அடுத்து இவ்வழக்குத்தரப்பினர்களின் திருமணம் ஓர் சுயமரியாதைத் திருமணமாக ஆகுமா என்பதை மாண்பமை நீதியரசர் பரிசீலனை செய்தார். இந்த வழக்கில் மனுதாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவர். மணப்பெண் லிடியா கிறுஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். அவர்கள் இருவரும் மத சம்பிரதாய சடங்குகள் ஏதுமின்றி தங்கள் திருமணத்தை ஓர் சுயமரியாதைத் திருமணமாக இரண்டு முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் செய்து கொண்டுள்ளனர் (They underwent what is apparently a self respect marriage). எனவே, இவர்களது திருமணத்திற்கு, சடங்குகள் ஏதுமின்றி மாலைமாற்றிக் கொண்டு நடத்தப்படும் சுய மரியாதைத்திருமணம் பற்றிக் கூறும் இந்து திருமணச்சட்டத்தின் பிரிவு 7A பொருந்துமா என்று மாண்பமை நீதியரசர் சுவாமிநாதன் ஆராய்கையில், அப்பிரிவு இந்து மத திருமணச்சடங்குகள் ஏதுமின்றி, இந்து மதத்தை மட்டும் சார்ந்த ஆண் மற்றும் பெண்ணுக்கிடையே நடைபெறும் சுய மரியாதை அல்லது சீர்திருத்த திருமணத்திற்குத்தான் பொருந்துமே தவிர, வேறு வேறு மதங்களைச்சார்ந்த இவ்வழக்கின் தரப்பினர்களுக்குப் பொருந்தாது (However, Suyamariyathai and Seerthiruththa marriages (reformist/self respect marriages) can be performed only between two Hindus. The reformist zeal of the legislature stopped with tinkering the institution of Hindu marriage. It did not venture beyond. Therefore, what was performed on 10.06.2022 between the petitioner and Ms.Lediya cannot be considered as one solemnized under the Hindu Marriage Act, 1955) என்று தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து மனுதாரர் மற்றும் லிடியாவின் திருமணம் இந்திய கிறுஸ்தவ திருமணச்சட்டம் 1872 (The Indian Christian Marriage Act, 1872) கூறும் முறையில் நடந்துள்ளதா என்பதையும் மாண்பமை நீதியரசர் ஆராய்ந்தார். சட்டத்தின் தலைப்பு கிறுஸ்தவ திருமணம் பற்றியதாக இருந்தாலும், திருமணத்தரப்பினர்களில் இருவரும் கட்டாயம் கிறுஸ்தவ மதத்தைச்சார்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்று அச்சட்டம் வலியுறுத்தவில்லை. இது இங்கு கவனத்திற்குரியது. அதாவது திருமணத் தரப்பினர் களில் எவரேனும் ஒருவர் கிறுஸ்தவ மதத்தைச்சார்ந்தவராக இருந்தால் அதுவே போதும். ஆனால் அவர்கள் திருமணம், இச்சட்டம் கூறுகின்ற நடைமுறைகளின்படி

நிறைவேற வேண்டும். அப்போதுதான் செல்லத்தக்க திருமணமாகும். எடுத்துக்காட்டாக, இந்திய கிறுஸ்தவ திருமணச்சட்டம் பிரிவு 10–இன்படி திருமணம் காலை 6 மணிக்கு மேல் மாலை 7 மணிக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்; பிரிவு 11–இன்படி திருணம் நடைபெறும் இடம் ஓர் கிறுஸ்தவ தேவாலயமாக இருக்க வேண்டும். ஆனால் இந்த வழக்கில் இவ்வாறெல்லாம் நடைபெறவில்லை. மேலும் தங்கள் திருமணம் கிறுஸ்தவ திருமணச்சட்டத்தின்படி நடந்தது என்பதும் மனுதாரர் மற்றும் லிடியாவின் வாதமும் அல்ல. (Let me turn my attention to The Indian Christian Marriage Act, 1872. Interestingly, this Act does not stipulate that both the parties must be Christians. Section 4 of the said Act indicates that it is sufficient if either the bride or the bridegroom is Christian. However, the marriage must be solemnized by following the procedure set out therein. For instance, Section 10 of the Act states that every marriage shall be solemnized between 6.00 a.m. and 7.00 p.m. Section 11 of the Act stipulates that the venue of the marriage must be invariably a church. It is not the case of the petitioner that his marriage was solemnized under the Indian Christian Marriage Act, 1872.)

எனவே மனுதாரர் மற்றும் லிடியாவுக்கும் இடையே 10–06–2022–ஆம் தேதியன்று நடந்த திருமணத்திற்கு சான்றிதழ் வேண்டுமெனில், அவர்கள் தங்கள் திருமணம் சிறப்புத்திருமணச் சட்டத்தின்படி நடந்தது என்பதைக் காட்ட வேண்டும். அதற்கு முதற்கட்டப்பணியாக, தாங்கள் செய்து கொள்ள கருதியிருக்கும் தங்களது திருமணம் பற்றிய அறிவிப்பை பிரிவு 5–இன்படி திருமண அலுவலரிடம் அவர்கள் வழங்கியிருக்க வேண்டும். இது கட்டாயமாகும். ஆனால் இங்கு தங்கள் திருமணம் முடிந்த பிறகு அந்த அறிவிப்பை அவர்கள் இரண்டாம் எதிர்மனுதாரரான திருமண அலுவலரிடம் வழங்குகின்றனர். இது சட்டப்படி செல்லாது. இங்கு திருமணமே செல்லாது என்றாகிவிட்ட நிலையில் திருமண வயது பற்றி பிரிவு 4(c) கூறும் பலனை மனுதாரர் மற்றும் லிடியா பெற முடியாது. மேலும் வேறு முறையில் நடந்த திருமணமா என்பதை ஆராய்ந்தால் பிரிவு 15(d)–இன்படி திருமணத்தரப்பினர்கள் இருவருக்கும் திருமணப்பதிவின்போது 21 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும். ஆனால் அச்சமயத்தில் லிடியா 21 வயதை பூர்த்தி செய்திருக்கவில்லை.

எனவே சிறப்புத்திருமணச்சட்டம், 1954–இன்படி லிடியாவை மனுதாரர் செய்யவில்லை என்றும், திருமணத்தைப் பதிவு செய்யக் கோரி மனுதாரர் அளித்த விண்ணப்பத்தை இரண்டாம் எதிர்மனுதாரர் நிராகரித்தது சரியே என்றும், சட்டத்திற்கு முரணாக நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை பிறப்பிக்க இயலாது என்றும் கூறி, முடிவில் மனுதாரரின் மனுவை மாண்பமை நீதியரசர் சுவாமிநாதன் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தார். (The petitioner can hope to succeed only if he can show that his marriage was solemnized under the Special Marriage Act. Even according to the petitioner, the marriage was performed on 10.06.2022. Only thereafter, notice was given under Section 5 of the Act. Giving notice under Section 5 is the first step. The petitioner and his wife have been quite fast so far. But law does not always believe in speed. Things have to move only in a

sequential order. The couple in question have put the cart before the horse. The parties after performing their so-called marriage had given notice under Section 5 of the Act. The language of Section 5 of the Act is clear. The petitioner did not marry Ms.Lediya under The Special Marriage Act, 1954. He cannot avail the benefit set out in Section 4 of the Act. The second respondent rightly declined the petitioner's request. No mandamus can be issued contrary to law. The writ petition stands dismissed.)

"மனுதாரர் தாக்கல் செய்த நீதிப்போராணை மனுவைத்தான் நீதியரசர் மேற் கண்டவாறு தள்ளுபடி செய்துவிட்டாரே...!. இனி என்ன? அடுத்த வழக்கிற்குப்போக வேண்டியதுதான்" என்று நாம் எண்ணிக் கொண்டிருந்த வேளையில், மாண்பமை நீதியரசர் சுவாமிநாதன் தனது தீர்ப்புரையின் இறுதிப்பத்தியில் (பத்தி எண். 9) ஒரு நீதிபதியின் நிலையிலிருந்து ஒரு சட்ட ஆலோசகராக மாறி, திருமணம் செய்து கொண்டும் அதைச் சட்டப்படியானதாக்க முடியாமல் போன மனுதாரர் மற்றும் லிடியா இளஞ்சோடிக்கு வழங்கிய ஆலோசனை இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

அதாவது, 10–06–2022–ஆம் தேதியன்று மனுதாரரும் லிடியாவும் செய்து கொண்ட திருமணம் சட்டப்படியானதல்ல. எனினும் அவர்கள் தங்கள் திருமணத்தை சிறப்புத்திருமணச்சட்டப்படி நிறைவேற்றிக்கொள்ள தடை ஒன்றும் இல்லை. தங்கள் திருமணத்திற்கான பிரிவு 5–இன்படியான அறிவிப்பை மனுதாரர் 17–06–2022–ஆம் தேதியன்று வழங்கியுள்ளார். இந்த அறிவிப்பு மூன்று மாத காலஅளவிற்கு செல்லத் தக்கதாக இருக்கும். எனவே இதையடுத்து சிறப்புத்திருமணச்சட்டத்தில் என்ன னென்ன நடைமுறைகள் கூறப்பட்டுள்ளதோ அவற்றை மனுதாரர் பின்பற்றி, அவர் தனது திருமணத்தை லிடியாவுடன் செய்து (நிறைவேற்றிக்) கொள்ளலாம். அப்படிப் பட்ட நிகழ்வில், லிடியாவிற்கு 21 வயது ஆகவில்லை என்ற காரணத்தால், திருமணச் சான்றிதழ் வழங்க இரண்டாம் எதிர் மனுதாரர் மறுக்கக்கூடாது என்று மாண்பமை நீதியரசர் திரு. ஜி.ஆர்.சுவாமிநாதன் அந்த இளஞ்சோடிக்கு நல்லாலோசனை வழங்கி னார்.

(9. But my heart goes out to the young couple. Marriage is a fundamental institution. Sage Thiruvalluvar has devoted an entire Chapter on marital life in his immortal Thirukkural. Socrates would call marriage a win-win proposition for men. If the wife is good, the male is happy. If she turns out to be misfit, he can become a philosopher. My role now metamorphoses from that of an adjudicator to an adviser. The petitioner and Ms.Lediya did not undergo any marriage in the legal sense of the term on 10.06.2022. Nothing stops them from solemnizing their marriage under the Special Marriage Act. The petitioner has given notice under Section 5 of the Act only on 17.06.2022. The said notice will be valid for a period of three months. He can very well follow the procedure set out in the said Act. In that event, the second respondent cannot refuse to issue marriage certificate on the ground that Ms.Lediya has not yet turned 21. No costs.)

இவ்வழக்கின் தீர்ப்புரையில் மாண்பமை நீதியரசர் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள், திருமணம், கணவன்–மனைவி வாழ்க்கை, குடும்பம் ஆகியன பற்றி பல்வேறு தகவல்களை நயம்பட மேற்கோள் காட்டியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

S. Sarath Kumar v. The District Collector, W.P. (MD) No. 13304 of 2022, High Court of Madras Madurai Bench, **decided on 30-06-2022**